நெல்லை-தஞ்சை சுவிசேடக் கவிராயர்

வேதநாயக சாஸ்திரியார்

பாடியருளிய

ஜெபமாலை

மூலமும்

'தமிழ் மாமணி' தஞ்சை

மறைத்திருவாளர் சி. வி. சவரிமுத்து அடிகளாரின்

விரிவுரையும் திறனாய்வும்



கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

Published by
THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN
MADRAS-600 003

JEBAMĀLAI
in Tamil
By Vedanayaka Sastriar

© *S. W. Savarimuthu*
First Printed in 1987

விலை ரூ. 26.00

Printed at The Diocesan Press, Madras 600 007—B7210

அணிந்துரை

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ.,எம்.லிட்., பிஎச்.டி.
பேராசிரியர் தலைவர் தமிழ்மொழித்துறை

சென்னைப் பல்கலைக் கழகம்
பல்கலைக் கழக இணைவகம்
சென்னை 600 005

'எல்லையும் கடந்து இங்கு ஏகமாய் நின்ற ஏசுநாயகனை' ஆராதிக்க வேதநாயக சாஸ்திரியாரால் இயற்றப்பட்ட அருள்நூல் 'செபமாலை.' செபம் செய்யத்துணையாகும் அருட்பாடல்களின் தொகுப்பு என்பது இதன பொருள்.

திருநெல்வேலியிலே பிறந்து, தஞ்சையில் தனது 92 வயது வரை வாழ்ந்த பெரும்புலவர், மன்னர் சரபோசியின் அரசவைக் கவிஞர் அருளிச்செயல்களுள் ஒன்று இந்நூல். நாள்தோறும் காலை, மாலை செபத்திற்கு உதவுவதாகவின் இதற்குச் செப மாலை எனப்பெயரிட்டதாக ஆசிரியர் கூறுகின்றார். இதுபோன்று இந்து மதத்திலும் தினசரி வழிபாட்டுக்கான பலநூல்கள் இருப்பது இங்கு எண்ணத்தக்கது.

'ஐரோப்பியருடைய தேவாராதனைத் திட்டங்களைக் காட்டுஞ் ஜெபப்பிரமாணத்துக்கு ஒப்பாக உங்களுக்கும் உங்கள் தேசாசாரத்தின்படி யாதொரு தேவாராதனைத்திட்டம் இருக்க வேண்டுமென்று சிந்தித்து வேதநாயக வேத சாஸ்திரி மிகுந்த கருத் தோடும் பிரயாசத்தோடும் இந்த ஜெபமாலையை உருவாக்கிய தாகக்' கூறும் ஆசிரியர் கூற்றால் அவர் இறைப்பற்றும், தமிழ்ப் பற்றும், நாட்டுப்பற்றும் நன்கு விளங்கும். எனவே ஐரோப்பியரு டைய தேவாராதனைத்திட்டத்திற்கு ஒப்பான நூலைத் தமிழ் மக்களுக்கு அறிவிப்பது இந்நூலாசிரியரின் தலையாய நோக்க மெனலாம்.

இரண்டு பகுதிகளாக அமைந்துள்ள இந்நூல் நாற்பத்தைந்து வருடகாலம் சிந்தித்து எழுதப்பட்டது என்ற ஆசிரியர் கூற்று இந் நூலின் சிறப்பினைப் புலப்படுத்தும்.

சாஸ்திரியார் அறுவகை இலக்கண, இலக்கிய, இசைப்புலமை யுடையவரென்பது அவர்தம் திருப்பாடல்களால் இனிதின் விளங்குகின்றது. சைவ அடியார்களின், குறிப்பாக மணிவாசகப் பெருமான், தாயுமான சுவாமிகள் ஆகியோர் பாடல்களில் அவருக்கிருந்த புலமையும், ஈடுபாடும் உரையாசிரியரால் நன்கு வெளிக்கொணரப்பட்டுள்ளன.

'கிருபாசனத்தின் நினைப்புக்கென்றும் இதைச் செய்தவன் இன்னானென்று விரும்பினோர் அறிந்துகொள்ளவுமே' செபமாலையில் தன் பெயரை நாட்டியதாகவும், பெருமைக்காக அல்ல என்றும் சாஸ்திரியார் கூறும் விளக்கம் அவர்தம் அவையடக்கத்தை நன்கு வெளிப்படுத்துகின்றது.

செபமாலைக்குத் 'தமிழ் மாமணி' தஞ்சை மறைத்திருவாளர் சி. வி. சவரிமுத்து அடிகளார் செய்துள்ள விரிவுரையும் திறனாய்வும் மூல நூலாசிரியரின் கருத்தைச் செவ்வனே விளக்கி, எளிமைப்படுத்தியுள்ளன. அனைவரும் ஆழ்ந்து, பாடற்பொருளுணர்ந்து கற்றுய்ய இவ்வுரை துணை செய்யும் என நம்புகின்றோம். செபமாலையைக் கற்று மக்கள் பேரின்பநிலையடைய வேண்டும் என்னும் மூலநூலாசிரியரின் நோக்கத்தை இவ்வுரை மிகுதியும் நிறைவேற்றும் பாங்குடையது.

அருஞ்சொற்பொருள் விளக்கல், சொல் விளக்கம், தொகுத்து கூறல், பொருள் சுட்டல், ஒப்புநோக்கு, ஆங்கில விளக்கம் ஆகிய இன்னோரன்ன முறைகளில் உரையமைந்திருக்கிறது. பாடல்களில் வரும் வடசொற்களைச் சுட்டி, அதன் தமிழ்ப் பொருளையும் விளக்கியுள்ளமை மேலும் நூற்பொருளைத் தெளிவாக்குகின்றது. மேலும் சொற்களை ஒலிக்கவேண்டிய முறையையும் விளக்கியுள்ளார். சான்றாக, 'ஸ்தோத்திரம்' என்ற வடசொல்லை 'தோஸ்திரம்' என உச்சரிப்பது தவறு என்று சுட்டுகின்றார். மூல நூலாசிரியரின் காலச்சூழல் வடசொற் கலப்புக்குக் காரணமாக அமைந்துள்ளது எனலாம்.

'சமய வளர்ச்சிக்காகத் தோற்றுவிக்கப்பட்ட சைவ மடங்கள் சைவத்தையும் தமிழையும் தமதிரு கண்களாகப் போற்றி வருகின்றன' எனப் பெருமையுடன் பெருந்தகை டாக்டர் மு.வ. அவர்கள் குறிப்பிட்டது இன்று கிறித்துவ இலக்கியச் சங்கத்துக்கும் பொருந்துமாறு அதன் பணிகள் அமைந்துள்ளன. சமய வளர்ச்சியோடன்றித் தமிழ்மொழி வளர்ச்சியிலும் சமய நிறுவனங்கள் ஆற்றும்தொண்டு போற்றி வரவேற்கத்தக்கது.

மனித சமுதாயத்திற்கு அறிவு கிடைக்கப் பல நூல்கள் அமைந்துள்ளன. அவ்வறிவு தீய, அழிவு வழிகளில் செல்லாமல் இருக்க அவனுடைய மனத்தைச் செம்மை செய்து, மன அமைதி அளித்து வருபவை சமய நூல்களாகும். அவ்வகையில் மனநல மேன்மைக்கும், அமைதிக்கும் இந்நூலும், உரையும் வழிகோலுமுகமாக அமைந்துள்ளமை வாழ்த்தற்குரியது. இப்பணி இக்காலத்துக்குத் தேவையான அருட்பணியாகும்.

இந்நூலுரை சமயப்பொறையோடு அமைந்துள்ளமை போற்றுதற்குரியது. இலக்கிய உரையாசிரியராக நன்முறையில் உரை செய்து, திறனாய்வு செய்துள்ள சவரிமுத்து அடிகளார் இன்னும் பல நல்லுரைகள் செய்து அளிக்க வேண்டுகின்றேன்.

வளர்க அவர்தம் உரைப்பணி!

வெல்க கிறித்துவ இலக்கியச் சங்கத்தின் தமிழ்த்தொண்டு!

—சி. பாலசுப்பிரமணியன்

பதிப்பாளர் உரை

அரும்பெரும் கிறிஸ்தவ இலக்கியச் செல்வங்களைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துவதையும், மீண்டும் மீண்டும் அவற்றின் புதிய பதிப்புக்களைக் கொணர்வதையும் பெரும் பேறுகக் கருதிப் பணியாற்றிவரும் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் வேதநாயக சாஸ்திரியாரின் ஜெபமாலையைத் தமிழ்மாமணி அருள்திரு. எஸ். டபிள்யூ. சவரிமுத்து அவர்களின் விரிவுரையோடு உங்கள் முன் படைக்கிறது.

இறவாப் புகழ்வாய்ந்த இலக்கியங்களைக் கிறிஸ்தவப் பங்களிப்பாகத் தமிழுலகிற்கு வழங்கி இருப்பவர் 'மறைமுதற் கலைஞர்' எனத்தகும் வேதநாயக சாஸ்திரியார் ஆவார். அவருடைய பெத்தலேம் குறவஞ்சி, ஆரணதிந்தம் மற்றும் தேவ தோத்திரக் கீர்த்தனைகள் ஆகிய நூல்கள் முன்னர் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் பல சுவடிகள் அறிமுகப்படுத்த வேண்டிய நிலையிலும், புதுப்பதிப்புக்களாக வெளியிடப்படவேண்டிய நிலையிலும் உள்ளன. கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் பதிப்பித்து வெளியிடவிருக்கும் கிறிஸ்தவச் சிற்றிலக்கியத் திரட்டு என்னும் நூலில் சாஸ்திரியாரின் சில படைப்புக்கள் இடம் பெறுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதே நேரத்தில் அவருடைய நூல்களை இந்தத் தலைமுறையினருக்காக வெளியிட்டு அறிமுகப்படுத்தும் பணியைக் கிறிஸ்தவப் பதிப்பாளர்கள் செய்திட முன்வரவேண்டும் என்றும் பெரிதும் விரும்புகிறோம்.

ஜெபமாலையை சாஸ்திரியார் நீண்ட காலக்கட்டத்தில் எழுதி முடித்துத் தம்முடைய இயல்–இசைத் திருப்பணியில் பயன்படுத்தியுள்ளார். அவரைப் பின்பற்றி அவர் வழிவரும் சான்றோர்களாக —சென்னை வேதநாயக சாஸ்திரியார் ஆகியோர் உட்பட—பல சான்றோர்கள் ஜெபமாலைப் பாசுரங்களை ஓதும் பணியைச் செய்து வருகின்றார்கள். இப்போது வெளிவரும் இப்பதிப்பில் தமிழ்க் கிறிஸ்தவர்கள் பலர் பயில்வதோடு பாசுரங்களை ஓதி பயன்பெறுவார்கள் என்று நம்புகிறோம். அருள்திரு. சவரிமுத்து அவர்களின் இறையியல் ஆழமுடைய விரிவுரை படித்து இன்புறத் தகுந்ததாகும். அவர்களுக்கு தமிழ்க் கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாமல் தமிழ் மக்கள் யாவருமே பெரிதும் கடமைப்பட்டவர்கள் ஆகிறார்கள்.

சென்னை-3
13-11-1987

தி. தயானந்தன் பிரான்சிஸ்
பொதுச் செயலாளர்
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

'ஜெப மாலை' மூலத்திற்கு
வே. சேம்வேதநாயக சாஸ்திரியார் முன்னுரை

வேதநாயக சாஸ்திரியார் Fabricius ஐயர் மொழிபெயர்த்த German ஞானப்பாட்டுக்களிலிருந்து கருத்துக்களை எடுத்து எழுதியிருக்கிறார். ஆங்கில பாடல்கள் இசைக்கு ஏற்ப கீர்த்தனைகளை இயற்றி இருக்கிறார். தியாகராஜர் முதலியவர்களின் கீர்த்தனை இராகங்களையும் உபயோகித்துப் பாடல்களை எழுதி இருக்கிறார். பொதுப்பட கிறிஸ்து சபையின் பிரயோஜனத்திற்கென்று ஒவ்வொரு விசுவாசியின் பக்தி அப்பியாசத்திற்கும், வளர்ச்சிக்கும் தமிழ் மொழியில் மாணிக்கவாசகர் முதலியவர்கள் எழுதிய திருப்புகழ், விருத்தம், கழிநெடில் முதலிய இலக்கிய முறையில் தம் முடைய ஆழ்ந்த, உயர்ந்த ஆவிக்குரிய அனுபவங்களை தம்முடைய ஜீவிய காலத்தின் நீண்ட பகுதியை உபயோகித்துத் திருச்சபையின் பக்தி விருத்தியினால் தேவ நாமம் மகிமைப்பட இந்நூலை இயற்றி பிரதிஷ்டை செய்திருக்கிறார். பூர்வ பக்திப் பாடல்களைப் படிப்பது புது இலக்கிய விருத்திக்கு அத்தியாவசியமாயிருக்கிறது. இதற்கு ஜெபமாலை மிகவும் பிரயோஜனமானது.

மெய்யான கடவுளை ஆராதித்து, எல்லாவற்றிற்கும் மேலான சத்தியத்தைத் தம்முடைய காவியங்களில் எழுதுவதே தமக்கு அமைந்த சிறப்பு என்று அறிவிக்கிறார். Dr. தேவநேசன் வே. சா.-வின் சரித்திரத்தில், மாணிக்கவாசகரின் 'திருவாசகம்' முதலிய செய்யுட்களிலிருந்து சிலவற்றை எடுத்து அவற்றோடு 'ஜெப மாலை' No. 13-8 முதலியவைகளையும் No. 6-3 முதலியவைகளையும் ஒப்பிட்டுக்காட்டியுள்ளார். ஜெபமாலையில் கருத்தும், இசைச் சுவையும், செய்யுட் சுவையும் மிகுந்துள்ளன. Internal rhyme உள் எதுகை நிறையப் பெற்று ஆத்துமாவைக் கவர்ந்து கொள்ளை கொண்டுபோகிறது என்று எடுத்துக் காட்டுகிறார்.

சில பாகங்கள் (உ-ம்) No. 21 முதலியவை வேத நூல் ஜெபங்கள் என்று சொல்லப்படும். இவைகளிலும் சொற்சுவை, தெளிவாக வளருவதைக் காணலாம். (உ-ம்)

'கருத்தனே நீரென் உதட்டினைத் திறவும்
கனதுதி என்றனைப் புரியும்'...

No. 2. 'கும்பிடுகிறேன் நான்' No. 3. 'கொண்டாட்டு'

'சுந்தரசிவக்காவே–திரு மந்தர தேவக்கோவே' இவை கும்மி இராகங்களோடு சேர்ந்தவை.

No. 23. ஜெபமாலை பிறப்பின் பேரிலே பாடினது. பக்தி விதயமாகவும் பாடலாம். (உ-ம்) No. 10,13 கவிகள் உரக்க, அழுத்தமாக, கெம்பீரமாக கட்டியம், முழக்கமாகவும் வழங்கலாம். No. 10,11. அகப்பற்று மன்றாட்டு, உருக்கமாகப் பாடத்தக்கது.

No. 5, No. 18 திருப்புகழ் சந்தம்.

No. 6. தேவ இலட்சணம் ஆசிரிய விருத்தங்களாக எழுதப் பட்டுள்ளது. ஆண்டவருக்குத் தகுந்த சிறப்பு மொழிகளால் தொடுக்கப்பட்டது. (உ-ம்) 8-ஆம் கவி.

'துக்கத்தில் என் ஆறுதல்
வாழ்வில் என் களிப்பு
துன்பத்தில் எனதின்பம் நீ...'

No. 7. தேவ சுபாவ மகிமையின் பேரிலே உபயார்த்தமாக, அதாவது, ஒரேவிதமான தொனியில் மற்றொரு அர்த்தங்கொண்ட தாக எழுதப்பட்டது. இது ஒரு சிறந்த கவித் திறம். ஒவ்வொரு கவிக்கும் கீழே அர்த்தமும் கொடுத்திருக்கிறார்.

பொன்னுட்டவர்கள் வணங்கானே
பொன்னுட்டவர்கள் வணங்கானே

பொன் (பொருள் நாட்டமுள்ளவர்களால் ஆராதிக்கப்படாதவர்) வானுட்டார் வணங்கப் பெற்றவனே என்றவாறு அர்த்தங் கொள்ளவேண்டும். அர்த்தமும் நெடுகிலும் கொடுத்திருக்கிறார். No. 14 பாவசங்கீர்த்தனம் ஆகும். துணையில்லையே எனக்காதி யாம் திருப்பாலா என்ற கீர்த்தனையைப் பார்க்கிலும் இசையிலும் கருத்திலும் உருக்கமானது.

•

(உ-ம்) No. 10 கவி

மறுதலித்து லோகவாழ்வு முழுதையும் வெறுக்கவும்

வானகத்தினுசையால் மூவாசையை யொறுக்கவும்...

No. 4. எளிதாகப் பாடக்கூடியது. சொற்சுவையும் கருத்தும் நிறைந்தது.

'திருவானெளிவே தெருளே பொருளே
தேவேகா வாவே
திரமேயுரமே வரமே பரமே
சிவாயே யோவா.

No. 25. நிந்தாஸ்துதி. 'கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து வெட்கப்படேன். அவரையே அன்றி வேறொன்றையும் அறியேன்' என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறபடி கிறிஸ்துவின் தாழ்மையினாலே அவருடைய மகத்துவத்தையும், சிறுமையினாலே அவருடைய சிறப்பையும் விசுவாசி காணவேண்டும் என்று இவ்விதமான கவியையும் இயற்றி இருக்கிறார்.

இரண்டாங் காண்டம் 10-ஆம் ஜெபமாலை திருச்சபை ஊஞ்சல். இதில் கவிராயருடைய மனப்பான்மை, வேத அறிவு, தேவ துதி இவை பொங்கி வழிவதைக் காணலாம். உள்ளான அர்த்தத்தையும் அறிவது பிரயோஜனமாகும். கடைசி மூன்று கவிகளில் கிறிஸ்துவினால் அனுபவிக்கும் சந்தோஷங்களையும் சிறப்புகளையும் பாடியுள்ளார். 8-ஆம் கவி.

உண்டான நன்மை யெல்லாம் நமக்குண்டாச்சு
உம்பரமும் அம்பரமும் நமக்கென்னாச்சு
யேசுவினால் மேன்மை பெற்றோம் கிருபை பெற்றோம்
இன்பமுறப் பரிசுத்தாவியையும் பெற்றோம்...

கிறிஸ்துவினால் மீட்கப்பட்டவர்கள் ஜெபமாலையை இசையோடும் ஆவியோடும் பாடி, பரவசமாகி ஆவியில் வளர்ந்து தேவனை மகிமைப்படுத்தவேண்டும் என்பதே எமது நம்பிக்கையும் விண்ணப்பமுமாகும்.

ஜெபமாலை, 1974ஆம் ஆண்டில் பதிக்கப்பட்டது எழுதப் பட்டது.

தஞ்சாவூர்
ஜனவரி, 1974

இப்படிக்கு
வே. சேம்வேதநாயகம் சாஸ்திரியார்

VEDANAYAKA SHASTRIAR'S PREFACE TO THE FIRST EDITION

These Hymns are drawn up like the excellent Hymns of Europeans for puplic worship.

They are entitled Jepamalai or Rosary of Prayers because they are intended to accompany daily prayer both morning and evening.

Part I consists of 31 Jepamalai in number, adapted for 31 days of the month, setting forth the glories of the Triune God, the Father, Son and the Holy Ghost. the Divine attributes, the work of salvation and meeting the prejudices of Heathenism. It also contains Praises to be used on occasions of joy, of affliction, of death. Fifteen Prayers for congregational use, the Litany and other admonitions appertaining to Piety.

Part II contains Hymns in the Viruttam Metre numerically from one to twelve, on the facts of Scripture narrative. If Priests, Catechists, and Schoolmasters could get it by heart they would be able to give proper answers to the questions proposed to them from the Old and New Testaments.

In ancient times, David, Asaph, &c., inscribed their names to the Psalms they composed. In like manner Vedanayagam has thought fit to inscribe his name at the end of each Jepamalai not from motives of pride or vain glory, but from a desire of being remembered at the Throne of Grace, as also that the readers may know the Author. *Vide* Exodus, Ch. 28 verses 9 to 12 and 29.

O Brethren, the members of Christ's church who use this Book of prayer! Vedanayaga Veda Shastri observing that a guide for maintaining decency and order in the Prayer meeting was wanted for you agreeably to the mode of your worship, i.e. after the manner of Common Prayer now in use among the Europeans,

has composed this work with great labour and attention; he was engaged in this matter for the space of 45 years, that is, from 1810 to 1855, and presents it to you now as a monument of his love with a request that you and your children and your children's children may remember him and love him and his descendants for the sake of the Lord.

Vedanayaka Shastry.

ஜெபமாலை முதற்பதிப்புக்கு வேதநாயக சாஸ்திரியார் எழுதிய முகவுரை

இப்புஸ்தகம் ஐரோப்பியருடைய உன்னதமான பாடல்களாகிய பிரார்த்தனைப் புஸ்தகத்துக்கொப்பாய்ச் செய்யப்பட்டது.

இம்மாதாடோறும் காலை மாலை ஜெபத்தில் ஜெபப்பிரமாணத்தைப்போல வழங்கப்பட்டு வருவதினால் இதற்கு 'ஜெபமாலை' யென்று பெயராயிற்று.

முதற்பாகத்திலே பிதா சுதன் பரிசுத்தாவியென்ற திரியேக பராபரனுடைய தேவசுபாவமகிமைகளையும், தேவலட்சணங்களையும், இரட்சிப்பின் கிரியைகளையும், விக்கிரகதேவர்களின் துன்மார்க்கங்களையும் மகிழ்ச்சியின் காலத்துக்கும் உபத்திரவ காலத்துக்கும், மரண காலத்துக்கும், நித்தியத்துக்கும் அடுத்த சில தோத்திரங்களையும் சபையில் வழக்கமான பதினைந்து ஜெபங்களையும், இவித்தானியாகிய சமுதாய விண்ணப்பங்களையும் தேவபக்திக்கடுத்த சில உபதேசங்களையும் பற்பல பாவினங்களாய்ப் பாடி அங்கங்கே ஸ்தாபித்து நிதமொன்றுக மாதத்தின் முப்பத்தொரு தேதிக்குச் சரியான முப்பத்தொரு ஜெபமாலைகள் உண்டு.

இரண்டாம் பகுதியிலே பன்னிரண்டு விருத்தமாய்ப் பாடப்பட்ட பன்னிரண்டு இலக்க தோத்திரத்தில் வேதத்தின் பிரதான சங்கதிகளெல்லாம் அடங்கியிருக்கும்.

குருக்கள் உபதேசிகள் முதல் வாத்திமார்மட்டும் மனப்பாடம் செய்திருந்தால் வேதாகமங்களிற் கேட்ட கேள்விக்கெல்லாம் ஏற்ற மறுமொழி கொடுக்கச் சமர்த்தராயிருப்பார்கள்.

பூர்வத்தில் தாவீது, ஆசாப்பு முதலானவர்கள் பாடின சங்கீதங்களில் தங்கள் பெயரை நாட்டினதுபோல் இங்கேயும் ஜெபமாலைக்கு ஜெபமாலை அதின் அந்தத்தில் வேதநாயகன் தன் பெயரை நாட்டினேன். அது பெருமையினால் அல்ல, கிருபாசனத்தின் நினைப்புக்கென்றும் இதைச் செய்தவன் இன்னானென்று விரும்பினோர் அறிந்துகொள்ளவுந்தானே. யாத். 28:9–12, 29.

இச்செபப்பிரமாணத்தை வாசிக்கிற கிறிஸ்துவின் அவயவங்களாகிய திருக்கூட்டங்களே! ஐரோப்பியருடைய தேவாராதனைத்

திட்டங்களைக் காட்டுஞ் ஜெபப்பிரமாணத்துக்கு ஒப்பாக உங்களுக்கும் உங்கள் தேசாசாரத்தின்படி யாதொரு தேவாராதனைத் திட்டம் இருக்க வேண்டுமென்று சிந்தித்து வேதநாயக வேதசாஸ்திரி மிகுந்த கருத்தோடும் பிரயாசத்தோடும் 1810–ஞ் முதல், 1855–ஞ் மட்டுஞ் சென்ற 45-வருடக்காலத்தில் வருடாந் திரங் கொஞ்சம் இந்த ஜெபமாலையை உண்டு பண்ணி இப்போது உங்களுக்குக் காணிக்கையாக அனுப்பி, நீங்களும் உங்கள் பிள்ளைகளும் பிள்ளைகளின் பிள்ளைகளும் தன்னையுந் தன் பின்னடியாரையும் கர்த்தர் நிமித்தியமாக நினைக்கவும் சிநேகிக்கவும் மன்றாடிக் கொள்கிறன்.

சுவிசேடக் கவிராய
வேதநாயக சாஸ்திரி.



Venerable VEDANAYAGA SHASTRIYAR

Evangelical Poet of Tanjore.

Born the 7th September, 1772, in Tinnevelly,
Promoted to glory the 25th January, 1864, at Tanjore.

ஜெபமாலை — ஓர் அறிமுகம்

வேதாகம சிரோன்மணி, 1. மகாஞான கவிச்சக்கரவர்த்தி என்றும், 2. சுவிசேடக் கவிராயர், 3 ஞான தீபக் கவிராயர் என்றும், தமது காலத்திலேயே போற்றப்பட்டுப் பெரும் புகழ் பெற்றவர் அல்லவா தஞ்சை வேதநாயக சாஸ்திரியார்.[5]

இவர் காலத்திலே கி.பி. 1772-1864 தமிழகத்தின் கிறிஸ்த்தவ சீர்திருத்த சபைகள், செர்மானிய மிஷனெரிமார்களின் பொறுப்பிலே மார்டின் லூதர் சம்பிரதாயத்தைச் சார்ந்து இயங்கின. லூதரது போதகத்தை அடிப்படையாகக்கொண்டு பெப்ரீசியஸ் ஐயர், செர்மானிய மொழியிலிருந்து தமிழிலே பெயர்த்து எழுதிய வேதாகமமும் ஞானப்பாட்டுகளுமே வழக்கில் இருந்தன. இந்திய இறை இயலில் அறிமுகமான பரன்–பராபரன் என்ற பெயரையே கடவுளைக் குறிக்க வேதாகமம் வழங்கியது. இப்பெயரையே தமது ஜெபமாலை நெடுகிலும் வே.சா. வழங்குவர்.

நீ இருக்க, வேதநெறி
தான் இருக்க, நெஞ்சமும் உற–
வாய் இருக்க, நின் பதத்தில்
வந்திருக்க என் மனமும்
போய் இருக்க, நின் புதல்வன்
புண்ணியனுர் அன்பிருக்க,
தாய் இருக்கச்சேய்க்குத்
தாபம் ஏன் பராபரமே.

பெப்ரீசியசின் ஞானப்பாட்டுகள் பலவும் பொருட்சிறப்பு வாய்ந்தவை; என்றாலும், அவை, செர்மானிய செய்யுள் நடையிலேயே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு ஐரோப்பிய சங்கீத மரபிலே பாடப்பட்டு வந்தன. தமிழ் மக்களின் காதுக்கோ

1,2.–தமது 34வது வயதுக்குள்ளாகவே 50-க்கு மேற்பட்ட பிரபந்தங்கள் இயற்றியதைப் பாராட்டி, 1808-ல் தஞ்சை சபையார் வழங்கியது. 3. ஞான நொண்டி நாடக அரங்கேற்றத்தில் தரங்கம்பாடி சபையார், வழங்கியது. 4. பெத்தலேம் குறவஞ்சி அரங்கேற்றத்தில் 1809 சென்னை சபையார் வழங்கியது. 5. பேரின்பக் காதல் அரங்கேற்றத்தில் திருச்சிராப்பள்ளி சபையார் வழங்கியது, சாஸ்திரியார் என்ற விருது.

பெப்ரீசியசின் வேதாகம மொழிபெயர்ப்புக்குப் பதிலாக வேறு ஒரு மொழி பெயர்ப்புக்கு டாக்டர் எச். எ. பவர் ஐயர் ஒழுங்கு செய்தபோது, வே. சா. அதற்கு இணங்காமல் 'புதுத்திருத்தலின் கூக்குரல்' என்ற மறுப்பை வெளியிட்டார்.

கருத்துக்கோ, சுகமாகவோ சுவை பயப்பதாகவோ அவை அமைய வில்லை என்பதால் அப்பாடல்கள் சிலவற்றைத் தமிழ்நடைக்குத்தக மாற்றியிருப்பதை ஜெபமாலையிலே காணலாம். பெப்ரீசியசின் ஞானப்பாடல் 138 பின்வருவது:

நீர் துக்கத்தில் என் ஆறுதல்
நீர் வாழ்வில் என் களிப்பு
நீர் வேலையில் என் அலுவல்
நீர் பகலில் என் சந்திப்பு
நீர் ராவில் என் அடைக்கலம்
நீர் தூக்கத்தில் என் சொப்பனம்
நீர் இரவில் என் தேவர்த்தி.

இது ஜெபமாலை 6 தேவலட்சணம் செ. 8 என்ற பகுதியில் பின் வருமாறு அமைந்திருக்கிறது.

துக்கத்தில் என் ஆறுதல், என் வாழ்வில் களிப்பு நீ,
துன்பத்தில் எனது இன்பம் நீ,
தொறுவும் வேலையில் அலுவல், பகலில் என் சிந்தனை,
தூக்கத்தில் சொப்பனம்,
பக்கத்து இரவினில் என் அடைக்கலம், இருளதில்
பகவர்த்தி, எனது சத்தி,
படுகுறையில் ஐசுவரியம் கசப்பினில் அமுது
பலதாழ்வில் எனது வாழ்வு.

இப்படித் தொடர்கிற பன்னிருசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம், கவிநயத்தோடு இசைகூட்டிப் பாடக் கூடியதாயும் இருக்கிறது அல்லவா?

ஞானப்பாட்டு 100 - பின்வருவது:

ஆ கிறிஸ்துவே....எங்களைக் கேட்டருளும்
சுவாமியே....கிருபையாய் இரும்
கிறிஸ்துவே....கிருபையாய் இரும்
சுவாமி....கிருபையாய் இரும்

ஜெபமாலையிலே இது புது மெருகுடன் எப்படி இடம் பெறுகிறது தெரியுமா?

ஆ கிறிஸ்துவே எங்களைக் கேட்டருளும்
அன்பாய்த் திருமுகத்தை ஏறெடுத்துப் பாரும்

ஒ கிறிஸ்துவே உமக்கு அபயம், சதா நித்ய
ஊழியோடு ஊழி உமக்கு ஓலோலம்
கிருபையாய் இரும் சுவாமி கிறிஸ்துவே
கிருபையாய் இரும் சுவாமி கிருபையாய் இரும்.

மொழிபெயர்ப்பான ஞானப்பாட்டுகள் இருக்க, இந்துமத ஆழ்வாராதியரது பக்திப் பண்பாட்டின் இயல்புக்கு இசைவாக, கிறிஸ்தவச் சிந்தனைக்கும் பாராயணத்துக்கும் உரிய பாசுரங்களை, வேதாகம அனுபூதி நிலையிலே நின்று முதன் முதல்பாடியது வே.சா.தான். ஆயிரத்துக்கு மேலான இப்பாசுரங்களை 31 பிரபந்தங்களாக ஜெபமாலை என்ற பெயரிலே உரையுடன் தற்போது பிரசுரிக்கப்படுவது பாராட்டுக்கு உரியது.

வே. சா. வெறும் புலவர் மட்டும் அல்லர், பக்தர், கவிஞரும் கூட. பக்தராயும் கவிஞராயும் இருந்ததால் வேதாகமத்தைப் பக்தி சிரத்தையோடு கற்று, அனுபவித்த அவரது அனுபவம், யாப்பமைதியோடு கூடிய இசைப்பாடல்களாகப் பரிணமித்தது தான் ஜெபமாலை. இதன் பாடல்களின் அமைப்பு எதுகை மோனைகள் சொற்கட்டுகள் எல்லாமுமே அவரது உணர்ச்சி பாவத்தோடு ஒட்டிய நேர் அனுபவத்தினின்றும் பிறந்தவைதான். கீழ்வரும் பாடலை வாய் விட்டுப் பாடிப் பாருங்கள்.

ஒரு கா சதேனும் அடியார்களை நாடி
உதா வா உலுத்தன், உனது
திருவா சகங்கள் படியாத பாவி
ஜெபம் ஓதவும் தெரிகிலேன்
பரிவாய் உன் அன்பை உணராது கெட்ட
படு பாதகன் வினை அற
மரிபால் உதித்த குரு ஏசுநாதர்
வரவேணும் என்றன் அகமே.

(10 அகப்பற்று செ. 10)

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து பாடக்கூடிய சந்தம்–இத்தகைய பாடல்களை ஆயிரக்கணக்கிலே இயற்றி, கிறிஸ்தவ சமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் வளம் கூட்டினார், வே. சா. இவருடைய பாடல்கள், யாப்பின் அங்கங்களான அசை, சீர், தளை, அடி தொடைகளின் மாத்திரைக் கணக்கு களுடன் ஒலித்தத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டதால் சந்தத்தையும் இசைநலத்தையும் பயந்து நம்மைப் பரவசப் படுத்துகின்றன. பாடல்களின் ஆழ்ந்த தத்துவப்பொருண்மை நம் அறிவுக்கு விருந்தாகிறது.

இவர் பாடல்களுக்குப் போதிய வரவேற்பு அப்போது இருக்கவில்லை. அதற்கு ஒரு நூறுண்டு காத்திருக்க வேண்டி யிருந்தது. மொழிபெயர்ப்பான ஞானப்பாட்டுகள் தமிழ் நாட்டுக் கிறிஸ்தவர்க்கு உகந்தது அல்ல என்ற அறிவுபூர்வமான உணர்வு சமீபகாலத்திலேதான் தோன்றியது. டாக்டர் எஸ். ஏசுதாசன் அவர்கள், தமது ஆசிரமப் பாமாலையிலே பின்வருமாறு எழுதுகிறார்.

'கிறிஸ்தவக் கோயில்களிலே மேல்நாட்டுப் பாடல்களை, இந்திய ராகங்கள் யாப்பிலக்கியப் போக்குகள் முதலியவற்றை அசட்டை செய்து விகார முறையால் மொழிபெயர்த்துப் பாடும் ஞானப் பாட்டுகள் சுவிசேஷ கீதங்கள் என்னும் பலவகைப் பாடல்கள், பால்யப் பிராயம் முதல் அவைகளிலே பழக்கப்பட்ட கிறிஸ்தவர் களுக்கு இன்பமாய்ப் போய்விட்டாலும், நமது தேசத்தினர்க்குக் கோர சப்தமாகவே தொனிக்கும். நமது தேசத்திலே மெய்யாகவே கிறிஸ்தவ பகவான் அந்நியர் அல்லர். சொந்த மானவரே என்று சாட்சி பகர்வது, கிறிஸ்தவரது பிரதான வாஞ்சை என்றால், இப்படிச் செய்வது தகுதியோ? நமக்கு எழுப்புதலாய் இருந்துவிட்டாலும்கூட, மற்றவர்க்கும் இருக்கும் முறைப்படி செய்வது, ஆன்மீகத்தின் நலம் ஆகும் அல்லவோ? நமது ஆராதனைப் போக்குகள் நமது தேசத்தினர்க்கு அந்நியமான பாஷைபோல் ஆகிவிட்டதே' என்று அங்கலாய்க்கிறார் டாக்டர் ஏசுதாசன் அவர்கள்.

கிறிஸ்தவ வழிபாட்டைத் தமிழ்ப் பக்திப் பண்பாட்டுக்கு இசைவாக மாற்றவேண்டும் என்று தற்பொது தோன்றியுள்ள புதிய போக்கைப் பழமை விரும்பிகள் சிலர் ஒப்பவில்லை. இவர் களுடைய வாதம் பின்வருவது: கிறிஸ்தவ ஆராதனைக்குரிய சாதனங்கள், ஜெபப் புத்தகம், ஞானப்பாட்டு, குழாய் வாத்தியம் முதலிய இவை, விக்கிரக வழிபாட்டுக்கும் கடவுள் ஆராதனைக் கும் உள்ள வேற்றுமையைச் சுட்டிக்காட்டுவன. கிறிஸ்தவ ஆராதனையை விக்கிரக பூசையுடன் ஒத்திணங்கச் செய்வது உசிதம் அல்ல. இந்த வாதப் பிரதிவாதங்களின் வன்மை மென்மைகள் ஒருபுறம் கிடக்க, ஆழ்வாராதிகளின் அருளிச் செயலான தேவாரம் திருவாய்மொழிகளைப்போல, இறைவணக்கத்துக்கு ஏற்றவை, பொருட்பொலிவு உணர்ச்சி வேகமும் அமைந்த இசைத்தமிழ்ப் பாடல்களும் கீர்த்தனைகளுமே என்பது வே.சா.வின் முடிந்த முடிவு. அதனால் ஆயிரத்துக்கு அதிகமான பாடல்கொண்ட ஜெபமாலையையும் ஐந்நூற்றுக்கு மேலான ஞானபதக் கீர்த்தனை களையும் அவர் இயற்றினார். அவருடைய பாடல்கள் யாவும் கற்பனைப் பாங்குடன் இசைநலமும் கொண்டு தெய்வ பக்தியை ஊட்டி உள்ளத்தைக் கிளர்ந்தெழச் செய்வன. அவருடைய இறை அனுபவத்தை எடுத்து இயம்பும் பரமானுபூதி, அருணகிரி நாதரின் கந்தர் அனுபூதி போன்றதுதான். அதிலே ஒரு பாட்டு:

ஆ ஆ உனை அண்டியும், என் கலிகள்
போகா விதம் ஏது? புகன்றருள்வாய்;
ஏகா, இனி ஆயினும் அன்பு செய், என்
மேகா சனனே வினை மோ சனனே. (செ. 12)

இத்தகைய பக்திப் பாடல்களை அவர் இயற்றியதன் நோக்கத்தைத் தமது ஜெபமாலையிலே அவரே கூறியிருப்பது நமது சிந்தனைக்கு உரியது. அது வருமாறு:

'ஐரோப்பியருடை (Book of Common Prayer) தேவாராதனைத் திட்டங்களைக் காட்டும் ஜெபப் பிரமாணத்துக்கு ஒப்பாக, இதை வாசிக்கிற கிறிஸ்துவின் அவயவங்கள் ஆகிய உங்கள் தேச ஆசாரத்தின்படி, ஒரு தேவாராதனைத் திட்டம் இருக்க வேண்டும் என்று சிந்தித்து, வேதநாயக சாஸ்திரி ஆகிய நான் மிகுந்த கருத்தோடும் பிரயாசத்தோடும் 1810 முதல் 1855 மட்டும் சென்ற 45 வருட காலத்திலே வருடாந்தரம் கொஞ்சம் இந்த ஜெபமாலையை உண்டு பண்ணினேன்!'

ஜெபத்தால் படிப்படியாக நமது லௌகிக கஷ்டங்களைப் போக்கிக்கொள்ளலாம் அல்லது கஷ்டத்தைப் பொருட்படுத்தாத நிலைக்கு நம் மனோபாவத்தை உயர்த்திக்கொள்ளலாம். அலைகிற மனசை ஒருமுகப்படுத்தலாம். நம்முடைய பாவங்கள் இன்ப துன்பங்கள் பயங்கரங்கள் எல்லாம் ஓயாமல் மாறிமாறி வந்து நம் மனசை அலைக்கழித்துக் கொண்டேதான் இருக்கின்றன. அப்படி இன்றி, நம் மனசானது இறைவனிடமே ஒன்றி, அவனிடமே கலந்துகொள்வதுதான் பேரானந்தம், இந்த நிலையை ஜெபத்தால்தான் அடையலாம். இதற்கு இறைவனுடைய குணநலன்களை விதந்தோதும் அவன் நாமங்களை ஜெபித்து அவனையே தியானித்துக்கொண்டிருக்க வேண்டும். இதற்கு உதவுவதுதான் ஜெபமாலை.

'எவன் இறைவன் பெயரைச் சொல்லவில்லையோ அவன் வாயிலே மண்ணைப்போடு' என்றார் கபீர்தாசர். இதைக் கேட்டு நின்ற நாமதேவர், 'மண்ணைப் போடவேண்டாம். பக்தர்கள் நடந்தபோது அவர்களது பாதம் பட்டதாக அந்த மண் இருக்கலாம். அதை வாயிலே போடுவதனால் அந்தப் பாவி கடைத்தேறி விடுவான். அவன் நாக்கு புழுத்துப் போகட்டும்' என்றாராம். நாம் உய்வதற்கு எளிய வழி, இறைவன் பெயர்களைச் சொல்லுவதே. அது அல்லது வேறு என்ன நாம் செய்யக்கூடும்–'பேரைச் சொல்லுவது–அல்லது பிறிதும் ஒன்று உளதோ' என்பார் கம்பர். 'ஒரு நாமம் ஒருருவம் இல்லாதார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி' இறைவனை அர்ச்சிப்பது தமிழ் மரபு. இதை சகஸ்ரநாம அர்ச்சனை என்பர். சகஸ்ரம்–ஆயிரம் என்பது வெறும் உபலட்சணமே. அதாவது, சொல்லவேண்டிய பெயர்கள் எத்தனை எத்தனையோ, அதிலே ஒரு சிறு பகுதிதான் ஆயிரம் என்பது. இறைவனுடைய இந்த நாமங்கள் அவனுடைய குணவிசேடங்களைப் புகழ்ந்து ஓதுவன. அவனுடைய குணங்களோ எண்ணில் அடங்கா; அவை

களைக் குறிக்கும் ஆயிரக்கணக்கான அவன் பெயர்களில் ஒரு சிலவற்றை ஒருமுறையோ பலமுறையோ மானசீகமாகச் சொல்வதைத்தான் ஜெபம் என்பர். அவைகளை ஜெபிப்பவர்க்கு அவைகளே–அப்பெயர்களே 'குலம் தரும் செல்வம் தந்திடும் நலம் தரும். இதை நான் கண்டுகொண்டேன்' என்று குதூகலிக்கிறார் திருமங்கை மன்னன்.

இந்தத் தமிழ் மரபு, கிறிஸ்தவ சமயத்துக்கும் அடுக்கும் என்பதால் வே.சா. இயேசுநாதரது குணசிறப்பைக் குறிக்கும் பற்பல திருநாமங்களைச் சொல்லிச் சொல்லி மகிழ்கிறார். இறைவனது குணங்களோ சொல்லுக்கு அடங்கா, அறிவுக்கு அடங்கா அல்லவா?

சொல்லால் உரையினுல்
அறிவினுல் உணரொணுத
சுதா, சிதா, சதாசிவ, பிதா,
சுவாபித, குணுதீத, சினேகித, மனேலய,
சொருபித, லிநோத, உன்னதா.

இப்படித் தொடர்கிறார் வே.சா. (பக். 240, செ. 11 பார்க்க.)

(சுதா-குமாரக் கடவுளே; சிதா–ஞானியே; சதாசிவ–என்றும் நன்மையானவனே; பிதா–தந்தையே; சுவாபித–இயல்பானவனே; சொருபித–பரம வடிவானவனே.)

இப்பாடற்பகுதியிலே சைவ சமயத்தின் சிவம், சதாசிவம் என்ற பெயர்களால் இயேசுநாதரை வே.சா. குறிப்பிடுவது சிந்தனைக்குரியது. இவையே அன்றி, சிதம்பரநாதன் என்ற பெயரையும் வழங்குவர்.

அந்தர வானுலகுந்தரு வேதர்க்கு
ஆலே ஆலே லோ
அம்பர தேவ சிதம்பர நாதர்க்கு
ஆலே ஆலே லோ.

(ஆலே ஆலே லோ என்றது தாலே தாலே லோ என்றதன் திரிபாகலாம் அல்லது அல்லேலூயா (Halleluyah) என்ற எபிரேய மொழியின் தமிழ் ஆக்கம் ஆகலாம்.)

இயேசுநாதர் வருகையை,

வெட்டவெளியாய் இருக்கும் விமலன் வந்தார்
வேதாந்த சித்தாந்த விநோதன் வந்தார்

என்ற இந்திய இறைஇயல் சொற்களாலேயே வருணிப்பார் வே.சா. (பக். 15, செ. 8 பார்க்க.)

பொன்னே மணியே என்று இறைவனைப் போற்றுவது தமிழ் மரபு. அதன்படியே ஜெபமாலையின் காப்புச் செய்யுளிலே,

பாருற்ற அருவமணி உருவமணி அரூபரூப மணி
பராபரமணி என்றும்
நீதி மணி...நித்திய சிவத்தின் மணி

என்று இயேசுநாதரைப் போற்றுவர் வே.சா. இங்கே சைவ சமயம் இறைவனுக்குக் கற்பிக்கும்-ரூபம் (உருவம்) அரூபம் (உருவம்) ரூபாரூபம் (அருவுருவம்) மூன்று நிலைகளையும் இயேசு நாதர்க்கும் பொருத்துவார் வே.சா. இப்படி சகஸ்ரநாம அர்ச்சனையை ஏற்பதோடு சாஷ்டாங்க நமஸ்காரத்தையும் வலியுறுத்துவார் வே.சா.

சாஷ்டாங்க நமஸ்காரம் என்றால் என்ன?

'எல்லா தர்மங்களையும் பற்றற விட்டொழித்து என் ஒருவனையே சரண்புகுவாய். உன்னை நான் எல்லாப் பாவங்களி னின்றும் விடுவிப்பேன், வருந்தாதே' என்று கீதையிலே கிருஷ்ணன் கூறுகிறான். அதன்படி, 'இறைவ, என்னால் ஆவது ஒன்றில்லை. எல்லாம் உன் சங்கல்பப்படியே நடக்கட்டும்' என்று இறைவனைப் புகல் அடைந்து, அவனே சரணகதி என்று தரையிலே சாஷ்டாங்க மாய் அதாவது நெடுஞ்சாணாய் விழுந்து வணங்குவதுதான் அது; இதைத் தண்டம் சமர்ப்பித்தல் என்பர். தண்டம் என்றது கம்பு அல்லது கழியை. கையில் பிடித்திருக்கிற கழியைக் கீழே விட்டு விட்டால் அது அப்படியே தடால் என்று விழுந்து விடுகிறது அல்லவா? இதுபோலவே இந்த சரீரத்தை நம்முடையது அல்ல, இறைவனுடையது என்று கீழே போடுவதுதான் தண்டம் சமர்ப் பித்தல். ஒன்றுக்கும் உதவாத இந்த உடம்பைத் தூக்கிப் பிடித்து உள்ளிருந்து ஆட்டுகிற சக்தி இறைவன் கொடுத்ததே. இந்த உடம்பை நாமே தாங்கி நடத்துகிறோம் என்ற எண்ணத்தை ஒழித்துவிட்டு, அதற்கு அடையாளமாக, இறைவன் சந்நிதியிலே கீழே போட்டு வணங்குவதைத்தான் சாஷ்டாங்க நமஸ்காரம் என்பர்.

•

ஜெபமாலையின் கடவுள் வணக்கத்திலே (செபமாலை 1)

ஆதி அந்தம் இல்லாய் சரணம்
சாதி சனங்கள் இல்லாய் சரணம்
மாதர் மைந்தர்கள் இல்லாய் சரணம்
ஏதும் எதுவும் இல்லாய் சரணம்

என்று இப்படிப் பலபடியாகச் சரணகதியை வலியுறுத்தி, தேவ தோத்திரம் என்ற பகுதியிலே

அண்டர் நாயகனைத் தோத்தரிக்கிறேன்
தெண்டனிட்டுத் தெண்டனிட்டுத் தோத்தரிக்கிறேன்
தொண்டன் அடியேன் என்று தோத்தரிக்கிறேன்

என்று பாடுவார் வே.சா. (செபமாலை 2, பக்கம் 43)

கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்
குருஏசுநாதர் பாதம் கும்பிடுகிறேன்
சந்ததமும் சந்ததமும் கும்பிடுகிறேன்
சாஷ்டாங்கத் தெண்டன் பண்ணிக் கும்பிடுகிறேன்

என்பர். இத்துடன் அமையாது, இந்திய இறைஇயலுக்கு உரிய ஓம் என்ற பிரணவ மந்திரம் கிறிஸ்தவ சமயத்துக்கும் உகந்தது தான் என்று, ஓம் பிரணவம் என்ற பகுதியிலே

இசுறவேல் அதிபதி யேசு ஓம் நமோ நமா

என்பர்.

பால் அப்பாசாமி அவர்கள், திருநெல்வேலி சி.எம்.எஸ். நூற்றுண்டு வரலாற்றிலே பின்வருமாறு பேசுவது இங்கே நம் கவனத்துக்கு உரியது. 'சைவ சமயத்திலும் நாம் ஒப்புக்கொண்டு, மாசு நீக்கிப் பெருக்கிப் பயன்படுத்த வல்ல சித்தாந்தங்கள் பல உண்டு. ஒன்று என்று இரு, தெய்வம் உண்டு என்று இரு என்று இயம்புவதோடு, தெய்வம் உட்கலந்தவர் அவர், மானுட வடிவிலே குருவாக எழுந்தருளிக் கிருபையால் நம்மை ரட்சிப்பார் என்றும் அது சாற்றுகிறது. தமிழர்க்கு அறிமுகமான இந்தக் கோட்பாடுகள், காலப்போக்கிலே சடங்குகளாலும் மூட நம்பிக்கைகளாலும் திரையிடப்பெற்று மறைந்தன. இவைகளை வளரவிடாமல் தடுத்து நிற்கும் கலைகளை அகற்றி, அவற்றை மீட்டு, கிறிஸ்தவ சமயத்திலே இணைத்தால் யூத மார்க்கத்தைக் கொழுகொம்பாய்க்கொண்டு கிறிஸ்தவம் வளர்ந்ததுபோல, அது சைவ சமயத்தின் உச்சநிலையாக அல்லது பூரணமாக விளங்கும் என்பது என் கருத்து, என்கிறார். கிறிஸ்துவ சமயமும் அதனால் வனப்பும் வளமும் பெற்றுத் தமிழர்க்கு உகந்ததாய் இருக்கும் என்றும் கருதுவார், அவர். இவர்க்கு ஒரு நூற்றுண்டு முன்னமேயே இந்தியப் பண்பாட்டைப் பற்றுக்கோடாகக்கொண்டு கிறிஸ்தவம் அதன்மீது அமைந்த மாளிகை ஆமாறு பக்திப் பாசுரங்களை அமோகமாக இயற்றி, கிறிஸ்தவத்தைத் தமிழ் மரபிலே வளர்த்தவர்தான் வேதநாயக சாஸ்திரியார்.

சாஸ்திரி வந்த பிறகு அல்லோ ஆகம
சாரங்கள் எல்லாம் பாட்டாச்சு
சாஸ்திரியால் உன் மைந்தர் எல்லாம்
சமர்த்தர் ஆயினர் ஞானப் பெண்ணே

என்று அவரே கூறியிருப்பது முற்றிலும் உண்மையே; வெறும் தற்புகழ்ச்சி அல்ல.

கிறிஸ்தவத் தமிழ் அன்பர்களிடையே தரமான இலக்கியப் படைப்புக்காகவும் சாஸ்திரியாரின் நூற்றுக்கு மேலான பிரபந்தங்களைக் கற்று அனுபவிக்கவும் ஓர் இயக்கம் தோன்றும் காலம் வந்து விட்டது. இதற்காக ஊருக்கு இரண்டொருவர் அங்கங்கே தோன்றினாலே போதும், தோன்றுவார்களாக.

5-5-87
வேங்கடவன் பண்ணை
பங்களாப் புதூர்
638 512.

கு. அருணாசலக் கவுண்டர்

உரையாசிரியர் முன்னுரை

வேதநாயக சாஸ்திரியாரின் வாழ்க்கை வரலாறு

''நெல்லைமா நகரில் பிறந்து தஞ்சையினில்
நீடிய சுவார்ச்சு மாமுனிவன்
சொல்லை ஆய்ந்து ஏகபரன் திருவேதத்
துறையின் உட்புகுந்து எனைப் புரந்தே
எல்லையும் கடந்து இங்கு ஏகமாய் நின்ற
யேசு நாயகனையே பாடும்
முல்லை பெற்றிட மெய்ச்சபையினை அடைந்த
முத்தமிழ் வேதநாயகன் யான்.'' (முல்லை - வெற்றி)

வேதநாயகர் திருநெல்வேலியில் செப்தெம்பர் ஏழு 1772-இல் தோன்றித் தஞ்சாவூரில் திகழ்ந்து 25–1–1864-இல் பரமபதம் எய்தினர். வயது 92.

இந் நீண்ட கால வாழ்க்கை வரலாற்றுக்கு அகச்சான்றும் புறச்சான்றும் பரம்பரை வழக்காறும் கல்வெட்டுக்களும் போதுமான அளவு கிடைத்துள்ளன. அவற்றைச் சுருக்கி ஓரளவு இங்கு வரைவோம்.

பிறப்பும் பால பருவமும்

இந்துமத வைராக்கியமும் தமிழ்மொழி வித்தகமும் நிரம்பிய திருநெல்வேலி அருணாசலம் பிள்ளை என்பவர் கத்தோலிக்க உபதேசியார் ஒருவரிடம்கொண்ட அன்புத் தொடர்பால் கத்தோலிக்கத் திருச்சபையைத் தழுவினர். இவர் மனைவி ஞானப்பூ அம்மாள். இவர்களின் புதல்வர் நம் கவிஞர் வேதநாயகர். இவர் கருவில் திருவாய்ந்தவர் என்பதை இவர் சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்வார் அறிந்துகொள்வார்.

பெயர்க் காரணம்

'வேதநாதர்' என்பது திருவாதவூர் தலத்துச் சிவபெருமான் திருநாமமாதலின் 'வேதநாயகர்' என்னும் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண ஆசிரியர். (27-வது திருவிளையாடல்,

செ. 3-இல்). இது உ. வே. சாமிநாதையர் அவர்களின் அடிக் குறிப்பு. திருவாதவூர் மாணிக்க வாசகரின் திருவாசகத்தை வேதநாயகர் நன்கு பயின்றுள்ளார் என்பதை செபமாலை உரையில் யாம் வெளிக் கொணர்ந்துள்ளோம்.

கவிஞர் அருணாசலம் பிள்ளை சைவராக இருந்த காலத்தில் இப் பெயரைத் தம் மகனுக்குச் சூட்டியிருக்கலாம். செல்வனுக்கு ஐந்து வயதானபோது ஓர் இலக்கண ஆசிரியரைக்கொண்டு கல்விப் பயிற்சி தொடங்கப்பெற்றது.

தஞ்சையில் வேதநாயக இளைஞர்

1784-இல் மாதவர் சுவார்ச்சையர் (Christian Fredric Schwartz) தஞ்சையிலிருந்து திருநெல்வேலிக்கு வந்தபோது பன்னிரண்டு வயதான வேதநாயகனைக் கண்டார். அவனோடு பழகப் பழகப் பையனின் முக அழகும் புத்திசாலித்தனமும் சுவார்ச்சையரைக் கவர்ந்தன. சுவார்ச்சையர் சிறுவனுக்கொரு பரீட்சை வைத்தார் என்று, தங்க வயல் டாக்டர் பிச்சை மனுவேல் எனக்குச் சொல்லியது:

''முற்றின புளியங்காய்கள் சிலவற்றை அவனிடம் கொடுத்து, இவற்றை மென்று தின்று விழுங்கு பார்ப்போம்'' என்றாராம். சிறுவன் அவ்வாறே தின்னத் தொடங்கினன். வாய் புளித்தது, கண்ணீர் வடிந்தது, உடல் சிலிர்த்தது. இத்தகு மெய்ப்பாடுகளை நின்று கவனித்த சுவார்ச்சையருக்கு உடல் புளகித்தது, நெஞ்சு மகிழ்ந்தது. உடனடியாக அவர் இளைஞனைப் புன்முறுவலோடு பார்த்து, 'தம்பீ, உனக்கு என்னோடு தஞ்சாவூருக்கு வர இஷ்டமா?' என்று கேட்டார். மிக மகிழ்ச்சியுடன் பையன், 'ஆம், வருகிறேன்' என்றான். சுவார்ச்சையர் தேவசகாயம் பிள்ளையை அணுகி: ''வேதநாயகத்தை என்னோடு தஞ்சைக்கு அனுப்பும். நான் அவனுக்குக் கல்வி கற்பித்து ஆளாக்குவேன். அவன் ஆடுவான் பாடுவான்'' என்றார். தந்தையார் மனமுவந்து ஐயரின் அழைப்புக்கு இசைந்தார்.

சுவார்ச்சையரின் வாழ்க்கை வரலாறு

கிறிஸ்தியான் பிரெடரிக் சுவார்ட்ஸ், பிரஷியாவில் சோனன் பர்க்கு என்னும் ஊரில் 1726-ஆம் ஆண்டு பிறந்தார். 1750-இல் கடலூரில் வந்து கரை இறங்கினார். சூலை 30, 1750-இல் தரங்கம் பாடி கோட்டைக்குள் புகுந்தார். செர்மனியில் தந்தையிடம் பிரியாவிடை பெற்றபோது: தந்தையார் மகனைப் பார்த்து: ''மகனே, நீ உன் தந்தையின் வீட்டை மறந்து விடு'' என்றாராம்.

அன்று செர்மனியை விட்டவர் தாய் நாடு திரும்பாமல் 50 ஆண்டுகள் தமிழ் நாட்டில் ஜெர்மன் லுத்தரன் மிஷனெரி யாகப் பணியாற்றித் தஞ்சாவூரில் பரமபதம் எய்தினர்.

1763-இல், சுவார்ச்சையர் திருச்சிராப்பள்ளியில் தோற்று வித்த ஆங்கிலப்பள்ளி இன்று பிஷப் ஹீபர் கல்லூரியாக மிளிர் கின்றது. (Bishop Heber College). அக்கல்லூரியில் இவ்வுரை யாசிரியர் இரு ஆண்டுகள் மாணவனாக இருந்தது அவர்தம் வாழ்க்கையிலோர் மடை மாற்றம் செய்தது.

அவர் தஞ்சையிலிருந்தபோது, வேதநாயக இளைஞனையும் அவரோடு சில சுவிசேடகர்களையும் தஞ்சைக்கு மேற்கு, கிழக்கு, வடக்கிலுள்ள கிராமங்களுக்கு அனுப்பி, ஆங்காங்குச் சிறிய, பெரிய சபைகளை உருவாக்கினர். அவற்றில் ஒன்று என் பாட்டனார் சவரிமுத்துப் பிள்ளையின் குடும்பம் என்பதில் எனக்கொரு மகிழ்ச்சி.

வேதநாயகர்க்கு அளிக்கப்பட்ட பட்டங்கள்

தஞ்சையில் அவர் பாடசாலைத் தலைவராக இருந்த காலத்தில் 'அண்ணாவியார்' என்ற சிறப்புப் பெயர் அமைந்திருந்தது. 1808-இல் தஞ்சைச் சபையார் அவருக்கு அளித்த பட்டம் 'வேதாகம சிரோமணி மகா ஞானக் கவிச் சக்கரவர்த்தியார்' என்பதாம். இதில் கையெழுத்திட்ட பிரமுகர் ஐம்பதுபேரும், இப் பட்டத்திற்கு இயைந்தபடி இவருக்குப் பிரதான ஆசனமும் முதல் மரியாதையும் வழங்குவதாகவும் ஏற்றுக்கொண்டனர். அதே ஆண்டில் தரங்கம்பாடிச் சபையார் அவருக்குச் 'சுவிசேடக் கவிராயர்' என்ற பட்டம் அளித்தனர். கவிஞரின் 'பெத்தலேம் குறவஞ்சி' அரங்கேற்றம் கண்டவர்கள், 'ஞானதீபக் கவிராயர்' என்ற பட்டத்துடன் பல்லக்கு வரிசையும் வழங்கினர். 'பேரின்பக் காதல்' என்னும் நூல் திருச்சிராப்பள்ளியில் அரங்கேற்றம் பெற்ற ஞான்று அவர்க்குச் 'சாஸ்திரியார்' பட்டம் சூட்டப் பெற்றது. இப்பட்டமே அவர்க்கு நிலைத்த பட்டமாயிற்று.

வேதநாயகர்க்குச் சுவார்ச்சையர்பாலிருந்த அன்பும் மதிப்பும்

நம் கவிஞர் இயற்றிய 'ஆரணதிந்தம்' என்ற மகத்தான தெய்வீகச் செய்யுள் பிரபந்தம், 1800 - இல் வெளியிடப்பட்டது. அச்செய்யுட்களிலொன்று, 'வேதநாயகன் விக்கினபனம்' என்பது. இதன்கண் உள்ள 17 செய்யுட்கள் ஐந்தில் சுவார்ச்சையரைப் பாராட்டிக் கூறியிருக்கின்றார் நம் கவிஞர். ஆரணதிந்தத்தில்

மேலும் பலவிடங்களில், கம்பர் கம்பராமாயணத்தில் சடையப்ப வள்ளலைப் போற்றியதற்கு மேலாக வேதநாயகர் சுவார்ச்சையரைப் போற்றிப் புகழ்ந்துள்ளார், அவற்றிலொன்று 'வேதநாயகன் விக்கியாபனம்.' இதுவோர் சுயசரிதம். Apologia pro vita sua என்பர் இலத்தீன் மொழியில்.

வேதநாயகர்க்கும் சரபோஜி ராஜாவுக்கும் இருந்த தொடர்பு

திருச்சியில் திருத்தொண்டாற்றிய பின்னர் சுவார்ச்சையர் தஞ்சைக்குச் சென்று (1772-1798) 26 ஆண்டுகள் ஆங்கே திருப்பணி புரிந்தார். அக்காலம் East India Companyயார் நம் நாட்டில் வியாபாரம் செய்ததோடமையாமல் வல்லரசு, சிற்றரசரோடு நட்பும் பகையும் கொண்டிருந்தனர். இவ்வரசர்கள் சுவார்ச்சையரை அவ்வப்போது தத்தம் ராஜ தூதராகச் சந்து செய்யப் பயன்படுத்தினர். அன்னரிலொருவர் தஞ்சை மராத்திய மன்னர் துளசிராஜா. இம்மன்னர்க்கு சுவார்ச்சையர்மேல் மதிப்பும் நட்பும் இருந்தன. கிறிஸ்தவ சமயத்தில் பெருமதிப்பிருந்தது. அவர் சுவார்ச்சையரைப் பார்த்து, ''பாதிரியாரே, உம்மிடத்தில் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. காரணம்: காசு பணம் உம்மிடத்தில் நெருங்க முடியாது'' என்றார்.

மன்னர் மரணத்தறுவாயில் இருந்தபோது அவரது ஒரே மகன், பட்டத்து இளவரசன், சிறு பிள்ளை. சுவார்ச்சையர், சமஸ்தானத்தில் 'ராஜகுரு' எனப்பட்டார். புவியரசர்க்கும் கவியரசர்க்கும் நட்புரிமை உளதாக்கினர் பாதிரியார்.

துளசி மன்னர்க்குப் பிள்ளை பாக்கியம் இன்மையால் சரபோஜியைத் தத்துப்புத்திரனாகக் கொண்டார். மரணத் தறுவாயில் கட்டிலில் கிடந்த அரசர் சரபோஜியைச் சுவார்ச்சையர் கையில் கொடுத்து: ''இவன் உமது மகன். இவனை உமது கையில் ஒப்படைக்கிறேன்'' என்றார். இந்த நிகழ்ச்சியை, Christ Church, அல்லது, சுவார்ச்சையர் கோவிலில் சமைக்கப்பட்ட பளிங்குச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் வெளியிடுகின்றன. இதன் படத்தை இம் முன்னுரையின் இறுதியில் காண்க:

''அவருக்கு நினைவுச் சின்னமாகச் சென்னை கோட்டைக் கோவிலில் ஒரு வெள்ளைச் சலவைக் கல் நாட்டப்பட்டது. சரபோஜி தம் நன்றியறிதலைக் காட்ட வெள்ளைக் கல் சின்ன மொன்றைத் தஞ்சைக் கோட்டைக் கோவிலில் நாட்டினார். இராமநாதபுரத்தில் சுவார்ச்சையர் பெயரால் ஓர் உயர்நிலைப் பள்ளியும் கோயிலும் உள்ளன. தஞ்சையிலும் ஒரு பள்ளி உண்டு.''

சுவார்ச்சையர் வேதநாயக இளைஞனை இளவரசன் சரபோஜியோடு நட்புறவேற்படுத்தியதால் சரபோஜி பட்டத்துக்கு வந்த பின்னர் வேதநாயகரைச் 'சமஸ்தான வித்துவான்' ஆக்கி விருதுகளும் வழங்கினர்.

சங். குரு J. C. கோலேப் ஐயரின் அனுமதிப்படி 'பெத்தல கேங் குறவஞ்சி' தமிழில் இசைக்கப்பட்டு மகா ராசேந்திர சரபோஜி மஹாராஜ சபையில் அரங்கேற்றப்பட்டது.

வேதநாயகரின் புகழ் தமிழ்நாடு கடந்து இங்கிலாந்து, ஜெர்மனி, சுவீடன் நாடுகளிலும் பரவியது.

Dr. Caldwell—திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆசிரியர்—முதன் முறை இந்தியாவுக்கு வந்தபோது, தஞ்சையில் வேதநாயக சாஸ்திரியாருடன் அளவளாவினர். வேதநாயகர் பிற நாட்டவர்க்குத் தமிழ் ஆசானாக விளங்கியுள்ளார்.

அவர் காலத்துப் புலவர்களாகிய பவர், முத்தைய பிள்ளை, டாக்டர் கால்டுவெல், திரேசி ஐயர், டாக்டர் போப்பையர், சார்ஜெண்டு ஐயர், இன்பக் கவிராயர் முதலிய பலரோடு தமிழ் இலக்கியக் கலந்துரையாடல் செய்து வந்தார் வேதநாயகர். என்றி பவர் ஐயர் வேதநாயகரை நேரில் அறிந்து அவரது வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார்.

வேதநாயகரின் புகழ் ஜெர்மனியிலும் பரவி இருந்த விபரத்தை, என நண்பர் Arno Lehmann, 'It Began in Tranquebar' என்ற ஜெர்மன் நூலில் விரித்துக் கூறியுள்ளார்.

தஞ்சை கோட்டைக் கோவிலில் நிறுவப்பட்ட சலவைக் கல்லில் பொறிக்கப்பட்ட வாசகம் ஆங்கிலத்தில் உள்ளது Dr. Grane செர்மன் மொழியில் பெயர்த்துள்ளார்.

Schwartz was called 'the Prince among the Missionaries in India. Bishop Heber called him ''one of the most active and fruitful missionaries since the time of the Apostles.'' His German biographer characterized him as ''The Son of the Lutheran Church, Yea, the Lutheran Church of Deutschland. God be praised that He has given such a leader and fore-runner in the Mission Work.''

வேதநாயகர்: 'முத்தமிழ் வித்தகர்'

'செபமாலை' பாடி முடித்தது 1855-இல். அதற்கு முன், 1800-இல் 'ஆரணதிந்தம்' என்ற முத்தமிழ் நூலைப் பாடி இறைவனைப் புகழ்ந்தார் வேதநாயகர். இவரை 'முத்தமிழ்

வித்தகர்' எனக் குறிப்பிட்டடது நாமன்று. 'ஆரணிந்தம் பக். 46-இல்.

'முத்தமிழ் வேதநாயகன் யான்' என்றார். 'யான்' என்ற சொல்லில் அவர்தம் தன்மதிப்பு வெளிப்படுகிறது. அவருக்குப் பின் வந்த சுப்பிரமணிய பாரதி,

'யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணேம்', என்றார். இத்தகு பெருமிதம் வேதநாயகர்க் கிருந்தது.

அடுத்து' அதே பக்கத்தில் (46),

''...இணையொன்றுமிலாத பரன் குமரன்
எல்லைப் பதி மேவிய வித்தகன் மேல்
விந்தைப் பிரபந்த விதங்கள் தரு
நெல்லைப் பதிவாணன் நிகழ்த்தியதோர்
நீதிப் பிரசங்க விதங்கள்'' என்றார்.

'தனக்குவமையில்லாத கடவுள் மகன் (Son of God) எல்லைப் பதி (பெத்லகேம்)யில் அவதரித்த வித்தகன் மேல் ... 96 வகைப் பிரபந்தங்கள் தருகின்ற, திருநெல்வேலி நகரில் வாழும் வேத நாயகன்' என்றார். இயேசுவின் திரு அவதாரம்—முந்தியது. கவிஞன் பாடல் இறைவன் திருச்செயலுக்குச் செலுத்தும் புகழ் மாலை—பிந்தியது.

''சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பான் யான்''

என்றார் மணிவாசகர் (சிவபுராணம் 17-20).

The praise of the church is the response to God's act of salvation.

"Praise is never the first word, but always occurs in the second place . . . it is never primo actio, but always reactio, reactio to God's saving activity in creation and redemption, to his orderly working in nature and history." This is the conclusion of his study on early Christian Hymns by Reinhard Deichgraber, when discussing the theology of praise and thanksgiving. In the first century BC 'eucharisteaeo' meant 'to give thanks', 'give thanks', 'return thanks', more frequently than "to be thankful", so that in the New Testament the former may be its only

meaning. If so, then, it signifies **"the outward expression in word or deed of the interior sentiment of gratitude for a favour received."** (Peter O'Brien in his article on Thanksgiving within the structure of Pauline Theology, Ch.4).

"The public nature of thanksgiving is accented on several occasions. So the leper after his cleansing returns to Jesus and **exhibits his gratitude** BY GLORIFYING God (Luke 17:11-19) and by publicly thanking Jesus as he falls at his feet (by doing sashtang namaskar). In the resurrection of Lazarus scene John 11 :41 the Fourth Evangelist presents the prayer of Jesus: 'Father, I thank you that you have heard me.' Here the thanksgiving is designed to evoke or increase the faith of those in whose presence it is uttered (cf. Acts 27:35)."

What was the normal experience of the early Christians has become the norm for all later acts of thanksgiving and praise in Christianity and Tamil, especially in the Bhakti poets in Tamilnad. Vedanayahar has inherited both the Biblical and the Saivaite treasures and has given powerful poetic expression in all his 120 works and especially in his JEPAMALAI. This we would see in the commentary on his poems.

மேலே நாம் ஆங்கிலத்தில் காட்டிய மேற்கோள்கள் *1980* - இல் வெளி வந்தவை. ஆனால் நம் கவிராயர் *1800*-லேயே அவற்றின் பொருளை உள்ளுர உணர்ந்து பாடிய பெருமை நம் பாராட்டுக்குரியது. செபமாலைப் பாடல்கள் அனைத்தும், 'பரன் குமரன் எல்லைப்பதி மேவிய வித்தகன்மேல்' பாடப்பெற்றவை என்பதைக் காண்க.

செபமாலை 30. ஆரோக்கிய சந்த வெண்பா

செய்யுள் 10

"ஒன்பது பேர் நன்றியற்றோர்;
ஒரோ ஒருத்தனே உவந்தோன்!
வன்பு அது என்று ஒதுங்கிறிஸ்து வள்ளலே, — என்பால்
கருணைபுரிந்து உன் கண்கொண்டிங்கு என்
கவலையொழிந்து உன் துங்கந் தங்கும்
சரணமிரண்டும் பஞ்சம் பங்குந் தா."

குறிப்பு: பஞ்சம் பங்குந்தா; ''உன் ஐந்து காயத்தின் பங்கும் எனக்கும் தா'' என்று வரையாது கொடுக்கும் வள்ளலை நோக்கி இறைஞ்சுகின்றார் கவிப் பக்தர் வேதநாயகர்.

இசைக்கலை, நாட்டியக்கலை போன்ற அழகுக் கலைகளின் நுட்பத்தை அறிவியல் முறைப்படி வல்லுநர்களிடம் ஆராய்ந்து தம் பாடல்களை நம் கவிஞர் பாடினார். (எ. கா.—ஆரணதிந்தம், பக். 101, செ. 1.)

இராகம்: தனாசரி தாளம்: ரூபகம்

1. சிரத்திற் பொற்கிரீடமும் கரத்தி னட்சத்திரமேழுந்
தேவ வடிவும் யாவர்க்கும் மலைக்குமே
சிங்காரமென்சொல்வே னெங்கோன் மகத்துவம்

தச்செந் தகசெஞ் செந்தரி
தகர்தத் திகிர்தக் குகுதரி
தகணக தகசெணு தகதிமி
தகுகரி கிடதக செகுதரி
தத்தரிகிட செணு தரிகிட
தத்தகிடகிட. தத்தமிதகிட
தச்செணு தத்தமி தக்கிட கிடதக
தத்ததிங்கண தோம்.

இம்முறையில் மூன்று சரணங்களைப் பாடியதை பாடுவோர் இவ் இசைப் பாடலை ரசிப்பர். இதில் இசை: தமிழ் முறையில்; பொருள்: வெளிப்படுத்தின விசேடம்: அதி. 4;5.

தமிழ்ச் சிற்றிலக்கிய வரிசையில் காணப்படுகிற 96 பிரபந்தங்களைப் போன்று 120 பிரபந்தங்களைப் பாடி தமிழ் நாட்டு மக்களுக்களித்தார் வேதநாயகர். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்பதவர் குறிக்கோள். 'கலை கலைக்காகவே' என்பது வரட்டுக் கூச்சல் என்பதை உணர வைத்தாரவர். மறுமலர்ச்சி இலக்கியத்துக்கு அவர் முன்னோடியானார் என்பது எம் துணிபு.

உரையாசிரியரும் வேதநாயகரும்

1914-இல் நான் தஞ்சை, சுவார்ச்சையர் தெரு, 'சாஸ்திரத் தம்மாள் வீடு' என்ற இடத்தில் இருந்த லுத்தரன் மிஷன் பள்ளிக்கூடத்தில் நாலாவது வகுப்பில், என் தந்தையார் திரு. சிம்சோன் பிள்ளை அவர்களால் சேர்க்கப்பட்டேன். அப் பருவத்தில் நான் சாஸ்திரியாரைப் பற்றி யாதொன்றும் அறிந்திலன். பல ஆண்டுகளுக்குப்பின், பரிசுத்த வாரம் பெரிய

வெள்ளிக்கிழமையன்று குருசேறிய நாதர் திருவேழு வார்த்தை களின் பேரில் எழுவர் பேசினர். அவர்களுள் என் தந்தையாரும் ஒருவர். இப்பேச்சு சாஸ்திரியார் வீட்டுக்குமுன் நடைபெற்றது. பின்பு என் தந்தையார் குடியிருந்த ஆலமரத் தெருவில் நான் இருந்த காலங்களில் சாஸ்திரியார் குடும்பத்தினரோடு நட்புறவு கொள்ள வாய்ப்பிருந்தது. திரு.A.N. Schwartz, A.S. Johnson, சேம் சாஸ்திரியார் பெயர்கள் நினைவுக்கு வருகின்றன.

என் துணைவியார் அன்னபூரணம் பாப்பம்மாளுடைய தாயார் சமாதானத்தம்மாள், சாஸ்திரியாருடைய நூல்களில், பெத்லகேம் குறவஞ்சி, ஆரணதிந்தம் முதலிய ஆறு நூல்களை எனக்கென்று கொடுத்தனர்.

பின்னர் துபாய்க்கு வந்த Bishop Sundar Clarke 'ஜெபமாலை', 'தோத்திரப் பாடல்கள்' எனக்குப் புன்முறுவலோடு கொடுத் தார்கள். அவற்றை அவ்வப்போது படிப்பேன். பலரிடம் வேதநாயகரைப் பற்றிக் கேட்பேன். என் பிரசங்கங்களில் எடுத்துரைப்பேன்.

ஆனால், கடந்த நாலாண்டுகளாகச் செபமாலைக்கு உரை எழுதிய காலத்தில் வேதநாயகரோடேயே வாழ்ந்து அவர் நூல்களை ஆராய முற்பட்டேன். எமக்கு முன்னே அவர் நூல்களுக்கு யாரேனும் உரை எழுதியதாக எமக்குத் தெரிய வில்லை. எனினும், கவிஞரது வேத விற்பன்னமும், இசை ஞானமும், சந்தவிருத்தங்களும், பக்திப் புலவர் பாடிய பாடல் களின் பொருளுணர்ந்து, ஏற்பன ஏற்று, அல்லன விலக்கி, பெரு மிதத்தோடு அவர் பாடிய பாக்கள் எம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

நன்றி மறவேல்

இவ்விரிவுரையை யாம் எழுதிய காலத்தும் இதனை அச்சேற்று வதற்கு நிதி உதவி விழைந்தபோதும், பற்பல வகைகளில் வெவ் வேறு நாடுகளில் உள்ள பல நண்பர்கள் எமக்குச் செய்த பேருப காரங்களை நினைந்து நினைந்து, அவர்களை எம்மாண்டவர் ஆசீர் வதிக்க வேண்டுமென்று இறைஞ்சுகிறேன்.

நான் பச்சிளங் குழந்தையாக இருந்தபோழ்தில் என் தாய் தந்தையர் என்னைத் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தது போல், எனது இரண்டாவது குழந்தைப் பருவத்தில் என் மக்கள் எனக்கு உணவு உடை உறையுள் அளித்து, இச் செபமாலை—விரிவுரை எழுதப் பலவகையில் எனக்கு உதவினர் என்று உள்ளூர உணர்ந்து

உவகைக் கடலில் ஆழ்கின்றேன். நம் ஆண்டவர் அவர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் ஆசீர்வதிப்பாராக!

என் ஆயுள் முழுவதும் என்னைக் காத்து இரட்சித்த இயேசு ஆண்டவர்க்கே துதியும் புகழும்!

மெத்த மெத்தக் கிருபை பெற்றோம், தேறிப் போனோம்
வேதநாயகன் பாடல் விரும்பிக் கொண்டோம்
பத்தியுள்ளோர்க் கென்னகுறை! ஆரூரஞ்சல்!
பராபரனின் பிள்ளைகள் நீர்! ஆரூரஞ்சல்!

Rev. S. W. Savarimuthu
748 Allum Avenue
Kingston, ONT, Canada K7M 7A1
January 1986

சி. வி. சவரிமுத்து

I–A தஞ்சை மகர்நோன்புச் சாவடியில் உள்ள மறைத்திரு வேதநாயக சாஸ்திரிகள் கல்லறைக் கல்வெட்டு: ஆங்கிலப் பகுதி

Sacred to the Memory of
VEDANAYAGA SHASTRIAR D.D.
Evangelical Poet of Tanjore

Whose Eminent character as a Christian;
Zeal for the cause of his God and Saviour
and unwearied endeavours to Promote it in
the earth, deserve to be in everlasting
Remembrance
He was a Native of Tinnevelly
But Educated by the Venerable C.F. Swartz
He devoted his time and talents to the cause
of Christ; composed 120 Books
and taught his children to follow his example
He departed this life on Sunday
January 24th 1864
Aged 92 years

''The righteous shall be in everlasting
Remembrance'' his children shall have
A place of Refuge''
Ps. 112:6; Pro. 14:26.

I–B **வேதநாயக சாஸ்திரிகள் சமாதிக் கல்வெட்டு**

தமிழ்ப் பாடல் பகுதி

கழிநெடில்

திருநெலைப் பதியிற் றேவ சகாயன்
சேயெனப் பிறந்து தஞ்சையினில்
சிறந்த மாதவன் சுவார்ச்சையர் சமூகஞ்
செய்ய வேதாகம முணர்ந்து
மருவிய ஞான நூல்க ளூற்றிருபான்
வண்ண சாகர முதலமைத்து
வானவ னேசு கிறிஸ்துவி னன்பு
மகிமையு மெய்ச்சபைக் குணர்த்தி
அருமையின் ஞான தீபமின்ஞான
சிகாமணி நெவை ஞானாதிக்கம்
அருள்மனோன்மணி மின் றெய்வ சிகாமணி
யைவரையளித்தறிவாக்கி
வருசதம் பதினெட் டநுபன்னால் மதிதை
வருடந் தொண்ணூற் றிரண் டுய்து
மறைந்தனன் வேத நாயக சாஸ்திரி
மகா சுவிசேட நாவலனே.

II திருநெல்லை தேவசகாய கவிஞர் மகன்
தஞ்சை தே. வேதநாயக சாஸ்திரியாரின்
மூத்த மகன்

வே. ஞானசிகாமணி சாஸ்திரியார்
பிறப்பு 6·10·1813 இறப்பு 1880.
பெற்ற திருவாக்கு அப். 9:15.

சுவிசேடப் புராண பிரசங்கியாரெனச் சிறப்புற்றாய்
சுவிசேட ஆசிரியனாய் வேதசாஸ்திரப் பள்ளிமுதல்
பலருக்கும் ஊர் ஊராய் பரமன் புகழ் முழங்கிடவே
பலகலையும் தேர்ந்திட்டாய் பரிசுகளும் குவிந்தனவே
தந்தையாரின் சீரெல்லாம் தனயன்நீ பெறல்வியப்போ
விந்தைமகன் பேறென்றோ விண்மண்ணும் மகிழ்ந்திடவே.

சென்னை பாகவதர் வேதநாயக சாஸ்திரியாரின் குடும்பத்தினர் பதித்துவைத்தது.

III

Sacred
To The Memory of
Noah Gnanadickha Shastriar
Son of the Ven. Vedanayaga Shastriār
evangelical Poet, Tanjore
whose zeal, earnestness and sincere
Devotion in serving our Lord was
clearly manifested in his work of
Lyrical Preaching both amongst
Christians and non Christians in
The Tamil and Malayalam Districts and in Ceylon
Born February 13th 1830
Died December 2nd 1902
And to
his mother Varothariam Ammal
who died on March 1st 1873 aged 66
"Thanks unto the Father who Hath called you
to the inheritance of the saints" col. 1:2.

சுவிசேட கவி பிரசங்க
சங். நோவா ஞானாதிக்க சாஸ்திரியார்
கர்த்தருக்குள் நித்திரையடைந்தது 1902–ம் வருடம்
டிசம்பர் மாதம் 2ஆம் தேதி.

வெண்பா

என்று வருவாய்நின் னின்ப மொழிபகர்வாய்
நின்று கவிபாடி நேசிப்பாய் முன்றுணைதான்
பாடி வழியனுப்பும் பாசமுகா நல்வாயை
மூடினா யென்னென்று முன்

(மருமகன் சேதுபதி பிள்ளை)

கலித்துறை

பாக்கிய தேவ சகாயவே தானந்த பாலகனும்
தாக்கி யடிபற்றி சோதரர் மக்கள் தயங்கவுமே
கோக்களி லாநின் கூட்டுற வோர்கள் குருக்களுமே
பாக்கவி சொல்லெலி யாவும் பதைக்கப் பரனிடமே
எழுபத்தி ரண்டி லெழுந்தனை யோகிறிஸ் தேசுவனிற்
றொழுவத்தி லேயும் தெசபிர சங்க சுபசெபமே
முழுவெற்றி தோத்ர ஞானாதிக்க சாஸ்திரி முக்கியனே
பழுதுற்ற தேவ பரனிடம் வாழிப லூழியுமே.

IV தஞ்சாவூர்-சிவகங்கைப் பூங்கா அருகே உள்ள சர்ச்சில்
(1779இல் கட்டப்பெற்றது)

சரபோசி-சுவார்ட்சு-பளிங்குக் கல்லில் உள்ள கல்வெட்டு.

TO THE MEMORY OF THE
REVEREND CHRISTIAN FREDERIC SWARTZ
Born at SONNENBURG OF NEUMARK IN THE
KINGDOM OF PRUSSIA
The 26th of OCTOBER 1726
And died at Tanjore the 13th of FEBRUARY 1798
in the 72d year of his Age.
Devoted from his early Manhood to the Office of
Missionary in the east
The Similarity of his situation to that of
the first Preachers of the Gospel.
Produced in him a peculiar resemblance to
The simple Sanctity of the
Apostolic character.
His Natural Vivacity won the affection as
his unspotted probity and purity of life
alike commended the
reverence of the
Christian, Mohameden and Hindu
For Sovereign princes, Hindu and Mahomeden
Selected this humble Pastor
As the Medium of Political negociation
with the British Government
And the very marble that here record
his virtues
was raised by
the liberal Affection and esteem of the
Raja of Tanjore
Maha Raja Sirfojee.

தஞ்சை மகர்நோம்புச்சாவடி கல்லறைகளின்மூலம் காணும் வேதநாயக சாஸ்திரி பரம்பரைப் பட்டியல்





தஞ்சை சுவார்ட்சு சர்ச்சில் உள்ள பளிங்குக்கல் சிற்பம்

(பக்கம் xxvii)

பொருள் அட்டவணை

முதற் பகுதி

			பக்கம்
	காப்பு	..	1
	முத்தோத்திரம்	..	5
	தேவாரம்	..	7
	கிறிஸ்து வருகைப் பதிகம்	..	11
1.	கடவுள் வணக்கம்	..	25
2.	தேவ தோத்திரம்	..	37
3.	ஓம் பிரணவம்—இருக்கிறேம்	..	47
4.	கிறிஸ்துவின் துதி	..	57
5.	தேவ மகத்துவம்	..	65
6.	தேவ லட்சணம்	..	75
7.	தேவ சுபாவ மகிமை	..	91
8.	கிறிஸ்துவின் சுவாப மகிமை	..	103
9.	பரிசுத்தாவியின் சுவாப மகிமை	..	109
10.	அகப் பற்று	..	115
11.	மன்றாட்டு	..	122
12.	சத்துரு நாசம்	..	130
13.	கிறிஸ்துவின் தாழ்மை	..	137
14.	பாவ சங்கீர்த்தனம்	..	146
15.	பாவ சங்கீர்த்தன கலம்	..	153
16.	கிறிஸ்து பட்ட பாடுகளின் பேரில் தேவாரம்	..	154
17.	உபவாச நாட்களின் தேவாரம்	..	161
18.	மன வாஞ்சை	..	168

19. திரு. பவுலடிகளுக்கும் வேதநாயகர்க்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் .. 182
20. வீண் பத்தி நாசம் .. 188
21. சமுதாய விண்ணப்பம் .. 199
22. பரமானுபூதி .. 203
23. கிறிஸ்து பிறப்பின் பேரிலே சந்த விருத்தம் .. 226
24. கிறிஸ்துவின் சரித்திராதிந்தம் .. 249
25. ஆத்துமப் பெண் நிந்தாஸ்துதி .. 273
26. திருச் செயல் .. 288
27. திருவிளையாட்டுஞ்சல் .. 303
28. சிலுவைத் தியானம் .. 312
29. பாவ விமோசனம் .. 320
30. ஆரோக்கிய சந்த வெண்பா .. 326
31. கொண்டாட்டு .. 333

இரண்டாம் பகுதி

திருச்சபையூஞ்சல் .. 341
பிழையும் பிழை திருத்தமும் .. 358

பிழையும் பிழைதிருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
11	6	தந்தார்	வந்தார்
13	21		சேர்க்க: இம்மானுவேலரசே வந்தார் தாமே
22	8	காவில்	சாவில்
22	28	தொட்டனைத்	தொட்டனைத்
22	31	ஊதினர்	ஊறினர்
23	22	வேத	வேதம்
23	33	மனத்திலிருந்து	மனத்திலிருத்தி
24	5	சமயத்	சமயக்
24	20	logos logos	logos
27	14	(திருவம்மானை செ.11)	17வது லைன் (திருவம்மானை செ. 11)
30	21	தெருவந்	தெவருற்ப
32	3	செய்ததற்காக	செய்வதற்காக
34	31	மரணமதளவுங்	மரணமுளதளவுங்
34	36	கதிப்பதன்	கதிப்பதம்
38	23	Masehiac	Maschiac
40	35	பெற்றவனைத்	பெற்றவனைத்
44	36	பத	பாத
49	12	will be	will not be
49	17	hebrews:	Hebrews;
49	37	hidden	hidden
50	7	Prest's	Priest's
50	16	Pronounciation	Pronunciation
52	31	கடவும்	கடவுள்
57	27	மூவாக	மூவாத
58	6	Halleyah	Halleluyah
70	24	நெடுயினுப	நெறியினுப
74	16	எங்கும் அரசேற	எங்கும் நின் அரசேற
81	34	Hoilsgeschicte	Heilsgeschicte

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
84	9	அணைய	அனைய
84	25	நிறைந்தவ	நிறைந்தவன்
103	29	மீண்டு	மீட்டு
111	9	27	29
111	11	பணைமுய	பணைமுலை
120	32	AW	Omit
121	9	கட்டை	காட்டை
128	16	தூண்டு	துண்டு
129	9	90 ஆண்டுகள்	92 ஆண்டுகள்
130	19	நிறைசங்கிதச் சார்	நிறை சங்கிதச்
130	20	சார்ந்தது	சார்தந்து
138	24	உகம் வனைந்த,	உகம் வனைந்த
144	30	ஆச்சரியம்	ஆச்சரியம்
159-	13	இரங்குவா	இரங்குவாய்
160	20	,,	,,
,,	28	,,	,,
,,	5	,,	,,
,,	11	,,	,,
184	20	Jesut	Jesus
189	5	Moulc	Moule
199	23	11817	1817
215	4	இன்கள்,	இன்பங்கள்
215	20	நேசிகன்-குரு	தேசிகன் - குரு
220	7	சாகன்'	சாகான்'
223	27	பான்உன்	பரன்உன்
226	5	வனைந்த	வனைந்த
226	9	வனைந்த	வனைந்த
227	15	பாக்கியம்	பாக்கியம் சாவாமை
228	5	வனைகல்	வனைதல்
229	24	திருநாம்	திருநாமம்
230	3	கபிரேயல்	கபிரியல்
230	20	அவள்முன்னே	அவன்முன்னே
234	4	யேசுவஸ்து	யேகவஸ்து
235	34	படவேண்டுமென்ற	பாடவேண்டுமென்ற
237	11	ஏசு தந்தையார்'	ஏக தந்தையார்'
238	28	26 திருநாமங்கள	27 திருநாமங்கள
243	34	ஐந்திணைக்குமுரிய	ஐந்திணைக்குமுரிய

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
245	11	This is not fiction	This is not a fiction
247	2	திறனப்பிற	திறமைப்பிர
247	26	சுயுதற்பர	சுயதற்பர
249	29	மூப்பதனில்	முன்பபதனில்
251	30	யிற்கட்டி	யிற்கட்டிய
254	13	ஆடியம்	ஆகடியம்
255	4	மாநிலாதவன்	மாறிலாதவன்
261	29	பாலம்	பாவம்
263	17	சிலுவையில்	சிலுவையில்
274	20	அறிந்தலனே	அறிந்திலனே
283	16	என்றிருந்து	என்றிருந்தும்
302	15	அருள்கூர்ந்த	அருள்கூர்ந்தவர்
303	7	செய்யுளில், போற்ற	செய்யுளில், பாட
315	7	போரிட்டு	போரிடும்
327	5	பூவிதழ்களால்	பாவிதழ்களால்
334	31	அட்சபப்பர	அட்சயப்பர

ஜெபமாலை

முதற்காண்டம்

காப்பு

செபமாலை மொழிந்திடப் புகுந்த கவிஞர் தமிழ் இலக்கிய மரபுக் கொப்பக் காப்புச் செய்யுள் மூன்றைப் பாடினர். ஒவ்வோர் செய்யுளின் முதலடியில், சீருயரும், நேருயரும், போருயரும், ஏருயரும் என்ற நால்வித உயர்ச்சியைச் சொல்லித் தம் செப மாலையைத் தொடுக்கலுற்றார்.

செய்யுள் 1

சீர் உயரும் திரி யேகபரன் திரு நாம வளஞ் சொலியே
தேவர்கள் எண் திசை யோரும் அறிந்திட நாவது கொண்டு
ரமாய்
நேர் உயருந்தவிது ஓதி வணங்கிய நேர்மையதின் படியே
நேயமுடன் செபமாலை மொழிந்திட நீள்நிரயந் தனிலே
போர்உயருங் கனபேய்கள் விழுந்து பொலாத கொடுங்கனியே
பூருவமங்கதம் ஏவையருந்திய தீதறவுந் தயவாய்
ஏர்உயருங் குருசேறி மடிந்து இசரேலை உவந்தருளும்
யேசுவை என் தனி நாவில் அடங்க எந்நாளும் இறைஞ்சுவனே.

பொருள்:

சீர் உயர்ந்து கொண்டே வரும் திரியேக பரனது திருநாம வளத்தைச் சொல்லியே, தேவர்களும் எட்டுத் திசைகளில் உள்ளோரும் அறியுமாறு, எனது நாவைக் கொண்டு, கவியரசன் தாவீது ஓதி வணங்கிய முறைமையின்படியே, அன்புடன் இந்த செபமாலையைப் பாடிமுடிக்க ஒவ்வொரு நாளும் உம்மை இறைஞ்சு கின்றேன்.

நீண்ட நரகத்தில் போர் உயர்ந்தது; வலிய பேய்கள் வீழ்ந்தன; பூர்வ காலத்தில் பாம்பு காட்டிய பழத்தை ஏவாள் அருந்தியதால் உண்டாகிய தீமையை அறவே அகற்ற, கொடிய சிலுவையில் ஏறி மடிந்து இஸ்ரவேலை மீட்டருளும் இயேசுவை என் நாவிலடங்கச் செய்து மாதந்தோறும் ஒவ்வொரு நாளும் இச் செபமாலையைப் பாடி இறைஞ்சுவேனே என்று திட்டமிட்டார் கவி வேதநாயகர்.

திருமண அழைப்பிதழ் அனுப்பிய செய்தி

செய்யுள் 2

வேலைவிடுத்துஇச ரேலை நடத்திய வேலை மகத்துவமாய்
மேகதறிக்கிடை யேறி அமித்திரர் வீழ்க அழித்துடனே

பாலைவிடுத்து அடர்சோலை வனத்திடை பாரமலைக் குவடே
பாதகம் அற்றிட வேதமளித்த பராபரன் மெய்ச்சுதனுர்
ஓலை விடுத்து முன்நூலை முடித்து உலகோரை உயிர்க்கவுமே
ஓகை உடைத்த தவீது படைத்து இரு கோலையடுத்து உரமாய்
மாலை விடுத்து நம் மாலை உதித்து உருமாலை எடுத்ததனுல்
மாலை கொடுத்திட ஞானதிருச்செப மாலை வழுத்துவனே.

அருஞ்சொற்பொருள்:

(1) வேலை - கடலை; *(2)* வேலை - வேளை; மேகதறிக் கிடை - மேகத் தூணிலே; அமித்திரர் - மித்திரரல்லாதவர், பகைவர்; ஓகை - உவகை; மாலை - இருள்; நம்மாலை உதித்து - நமது காரண மாக அவதரித்து; பாரமலைக்குவடு - சீனுய் மலையுச்சி; வேதம் அளித்த - பத்துக் கட்டளை கொடுத்த; முன் நூல் – பழைய ஏற்பாடு.

பொருள்:

கடலை வழிவிடும்படிப் பிரித்து இஸ்ரவேலரை வழி நடத்திய மகத்துவமான வேளை, மேகத்தூணில் ஏறிப் பகைவர் வீழ்ந்து அழியுமாறு செய்து, பாலைவனத்தை விட்டு நீங்கிச் சோலைவனத் திடையில், மலையுச்சியில் பாதகம் நீங்கிட, வேதத்தை வாக்கைக் கொடுத்த பராபரனது மெய்ச்சுதனுர், திருமண அழைப்பிதழ் கொடுத்து, முந்நூலாய நீதிப்பிரமாணத்தை நிறைவேற்றி உலக மக்கள் உய்யுமாறு, தாவீதரசன் கொண்டிருந்த இரண்டு செங் கோலை அடுத்து ஊக்கமாய், இருளை நீக்கி நமது நிமித்தியமாகப் பிறந்து, உருவங் கொண்டதனுல் திருமண மாலை கொடுக்கத் தக்கதாக, இந்த ஞானத்திரு செப மாலையை அணிவித்து வாழ்த்து வேனே என்றார்.

இவ்வாறு செபமாலையின் முதன் மாலையைத் தொடுக்க லுற்றவர் முப்பது சொன்மாலை கட்டி, முப்பத்தோராம் மாலையை யும் கோத்து,

மகிழ்ந்து மகிழ்ந்து மகிழ்ந்து மகிழ்ந்து
மகிழ்ந்திருக்கவும் வாழியே

எனச் சொல்லியே முடித்துள்ளார் தம் செபமாலையை, பிறிதோர் நயங்காண்க:

இறைவனுகிய காதலன் நீராடியபின் அணிந்துகொள்ளுவதற்கு மாலை தொடுப்பற்காகப் பூவல்லி கொய்ய வேண்டுமென்று தாம்

ஒரு காதலியாக நின்று மணிவாசகர் ''பூவல்லி கொய்யாமோ'' எனப் பாடினர்.

வேதநாயகர், தமது திருமணத்துக்குமுன் திருமஞ்சனம் ஆடுவதற்கு பூமாலையல்லாத சொன்மாலையாம் செபமாலையைத் தொடுக்கலுற்றார். இனி, செபமாலை, இரண்டாம் பகுதி, 'திருச்சபை யூஞ்சல்' என்ற தம் இறுதிப் பதிகத்தின் காப்பு விருத்தப் பாவில்,

'குலவிவாகத் தோர் கேட்கத்
திருச்சபை யூஞ்சல் பாடத்
திவ்விய அருபி காப்பாம்'

எனப் பாடி வைத்தார். திருமணச் சடங்கு முடிந்துவிட்டது. கிறிஸ்து என்ற மணமகனும், திருச்சபை என்ற மணமகளும் ஊஞ்சாலாடவருகவென்று அழைத்து இப்பதிகம் பாடினர் வேதநாயகர். இவ்வாறு, செபமாலையின் தொடக்கமும் முடிவும் அழகிய மணவாளனுக் கேற்றதோர் சொன்மாலை, பாமாலை (தேவாராதனை மாலை) ஆயிற்றென்க.

செய்யுள் 3

'மணி' என்ற சொல்லை ஒவ்வோர் பகுதியிலும் ஆறுமுறை கூறி நான்கு பகுதியிலும் 25 மணிகள் அடிக்கிறார் நம் கவிமணி.

சீருற்றமணி பரம எருசலேமணி அர்ச்சய
தேவதேவத் திருமணி
திரித்துவ தத்துவ பகத்துவ ஏகத்துவமணி
சிகாமணி மனுமைய மணி
பாருற்ற அருவமணி உருவமணி அருபரூ
பாமணி பராபர மணி
பரிசுத்த துத்திய உத்தம சத்திய வேதமணி
பரம கிருபாசன மணி
யேறுற்ற வேதநா யகன் மந்திரமணி சுந்தர
யேகாந்தமணி அம்மணி[1]
எந்தைமணி தந்தைமணி விந்தை ஆனந்தமணி
இங்கண் என்றன் கண்மணி
நேருற்ற தேசுமணி மாசிலாமணி அரிய
நேசமணி யேசுநாத
நீதிமணி அடியவரின் பாவவினை தீர்த்தமணி
நித்திய சிவத்தின் மணியே.

இவர் சாத்திரத்தைத் தோத்திரமாகப் பாடி இறைவரைப் போற்றி மகிழ்பவர். இந்த 25 மணிகளிற் சிலவற்றை ஈண்டெடுத்து

1 அழகிய மணி

விரிப்பாம். முதற்பகுதியில், திரித்துவத்தின் தத்துவத்தையும் ஏகத்துவத்தின் மகத்துவத்தையும் குறிப்பிட்டார். 2-வது பகுதியில் இந்திய இறையியல் மரபுப்படி ரூபம், அரூபம், ரூபாரூபம் என்ற மூன்று நிலைகளைக் குறிப்பிட்டவர் கூர்ந்து கவனித்து, இயேசு பெருமானுக்கு இம்மூன்று நிலைகளும் உள்ளன என்று அறிதற்பாலது 3-வது பகுதியில் இறைவனைப் பல்வேறு மணிகளாகக் கூறினும் வேதநாயகர்க்கு அவர் கண்மணி. 4-வது பகுதியில் 'நித்திய சிவத்தின் மணி' என்று இயேசு பக்தர் கூறியதைக் கண்டவர் சற்று மலைத்தே நிற்பர். இத்தகைய கூற்றுக்கள்: 3-இல் 'ஓம் பிரணவம்' 4-இல் 'சிதம்பரநாதர்'; 'பராபரமே, பிரமமே' என்று வேத நாயகர் தம் நூல்கள் பலவற்றில் பயின்றுள்ளார் என்பதறிக. சிவம் என்பதை 'நன்மை' எனப் பொருள்கொண்டு 'சிவத்தின் மணி' என்றார் கவிஞர்.

செய்யுள் 4

'சிருற்றமணி' என்ற பாடலுக்கு ஒ. நோ.

C.L.S. Lyrics எண் 101. 'அருள் சூடாமணியே.'

சுருட்டி சாபுதாளம்

1. விண் மணி, பொன் மணி, வித்தக மணியே,
விட்புலம் பூவிற்கு விழைத்திடுங் கனியே,
சொன்மணி மாலை தொகுத்த நல்மணியே,
சோதியாய் இங்கெழுந் தருள் சூடாமணியே!

2. பன்மணி கோத்தொளிர் பாவலர் மணியே,
பாக்கியம் தருஞ்சீவக் காருண்ய மணியே,
கண்மணி பொன்றினோர் கண்மணி யருளக்
கண்டனர் உரைகேட்டக் கண்ணருள் மணியே!

3. மங்கை சீயோன்மகள் பூண்ட வானணியே,
மாசிலார் உளமதில் ஒளிரும் அம்மணியே,
நங்கைமரி கன்னியீன்ற கண்மணியே,
நரர்சுரர் போற்றிடு நாயக மணியே!

ஆசிரியர்: தா. அருளானந்தம், யாழ்ப்பாணம்

அருஞ்சொற்பொருள்:

வித்தக மணி - ஞான மணி, விட்புலம் பூவிற்கு - வானலோகம் பூவுலகத்திற்கு; சொன்மணி மாலை - சொல் மணிகளால் தொகுத்த புகழ் மாலை; கண்மணி பொன்றினோர் - கண் இழந்தவர்; மங்கை சீயோன் மகள் - இஸ்ரவேலர், இங்கு, கிறிஸ்துவின் அடியார் கூட்டம்; நரர் சுரர் - மண்ணவரும் விண்ணவரும் இயேசு பிறந்தபோது போற்றிய நாயக மணி.

இம் மூன்று செய்யுட்களில் 16 'மணி'கள் கூறப்பட்டுள்ளன.

முத்தோத்திரம்

கட்டளைக் கலிப்பா

பிதாவுக்கு ஸ்தோத்திரம்

செய்யுள் 1

அந்தரம் பரம் அம்பரமும் படைத்து
ஆண்டு காக்கும் அனுதி பிதாவெனும்
தந்தை உம்பர் தொழுங்கிருபாசனன்
சத்தியவேத தயா கருணம்பரன்
மைந்தனைக் கொடுத் தேநமை மீண்டவன்
வல்லபத்தின் மகத்துவ வஸ்து ஒரு
எந்தை யேக திரித்துவ அர்ச்சய
யேயோவா சருவே சர்க்கிஸ் தோத்திரம்.

அருஞ்சொற்பொருள்:

அந்தரம் - பரம்; அம்பரம் - வானம்; ஒரு பொருட் பன்மொழி. இனம் பற்றி, 'வானத்தையும் பூமியையும் படைத்து' எனப் பொருள் கொள்க. பிதா, வடசொல்; தந்தை, தமிழ்ச் சொல்.

மூன்று தோத்திரங்களைச் சொல்லப் புகுந்தவர், பிதா, குமாரன், பரிசுத்தாவி என்ற திரித்துவப் பொருளை, செ. 1–இல் பிதாவுக்கும், செ. 2–இல் சுதனுக்கும், செ. 3–இல் பரிசுத்தாவிக்கும் தோத்திரம் என்றார்.

ஸ்தோத்திரம் வடசொல். துதி எனப் பொருள்படும். இச் சொல்லைத் 'தோஸ்திரம்' என உச்சரிப்பது தவறு.

வேதநாயகர், மூன்று என்ற எண்ணை மனத்தில் கொண்டு ஓர் 'சொல் விளையாடல்' விளையாடுகிறார் போலும்:

அந்தரம் - பரம் - அம்பரம்,
படைத்து - ஆண்டு - காக்கும் - முத்தொழில்கள்.
கிருபாசனன் - கருணம்பரன் - நமை மீண்டவன்
வல்லபம் - மகத்துவம் - ஒரு வஸ்து.

செய்யுள் 2

யேசு சுவாமிக்கி ஸ்தோத்திரம்

ஆதியேவைசெய் தீவினைதீர்ப்பதற்கு
ஆவியால்கன்னி யாஸ்திரிவித்தினில்
நீதியோடுஉதித் துப்பிறந்துஆரணம்
நீடிஅற்புதம் செய்துபிலாத்துமுன்

வாதையாய்அரும் பாடுபட்டுஓர்
சிலுவையில்தொங்கி மரித்துயிர்த்தேபரஞ்
சோதியான்வலப் பாகம்இருந்துதினம்
தோன்றும்ஏசு சுவாமிக்கிஸ்தோத்திரம்.

அருஞ்சொற்பொருள்:

ஆரணம் நீடி - வேதத்தை விளக்கி.

பொருள் — தெளிவு.

செய்யுள் 3

பரிசுத்தஅரூபிக்கி ஸ்தோத்திரம்

முத்தியேக திரித்துவந் தன்னிலே
மூன்றதாள்முது ஞானவரத்தினர்
பக்தியோர்களின் தேற்றரவாளனர்
பார்க்கும் அக்கினிக் காட்சியர், பாவிகள்
சித்தமே உருகக்குணம் செய்பவர்
தேவனர்சுத னுடன்மேவுவர்
சத்தியப் பரிசுத்த அரூபியாஞ்
சாந்தன்ஆதி சயம்புக்கிஸ்தோத்திரம்.

அருஞ்சொற்பொருள்:

முத்தி - முக்தி = வீடுதல்; முதுஞானவரத்தினர் - பழுத்த ஞான வரங்களைக் கொடுக்கிறவர். (1 கொரிந். 12:7-11); அடியவர்களின் தேற்றரவாளன் (யோவான் 16:20–22). பார்க்கும் அக்கினிக் காட்சி: பெந்தெகோஸ்தே நாளில், காற்றாகவும் அக்கினியாகவும் காட்சி கொடுத்தவர். ஒ. நோ. 2 சாமு. 22:16; யோபு 37:10; எசேக். 13:13. அக்கினி - யாத்தி. 19:18; லூக். 3:16. பாவிகள் கடின மனத்தை நெக்குருகச் செய்து பாவ மன்னிப்பருளுபவர். பிதாவோடும் சுதனோடும் உடனுறைந்திருப்பவர். சாந்தன்-சாந்தமானவர்; ஆதிசுயம்பு - ஆதியில் தான்-தோன்றியாக இருப்பவர்.*

இத்தகு கல்யாண குணங்கள் நிறைந்த பரிசுத்தாவிக்குத் தோத்திரம் பாடினர் கவிஞர்.

* ''தாய் வயிற்றிற் பிறவாது தானே முளைத்தவர்'', ராமலிங்கர் அருட்பா (2–ம் திருமுறை).

காப்புச் செய்யுள்—தேவாரம்

''மலரடி தொழுதேன்'' என்ற தேவாரம்

ஏழுமுறை 'ஒளி'யைப் புகழ்ந்துரைத்தது

செய்யுள் 1

அதி நவநிறை ஒளிவே அமரர்கள் தொழும் ஒளிவே
கதி நவம்மிகும் ஒளிவே கதிர்படு திரு ஒளிவே
மதி நவமலி ஒளிவே மறை அதிசய ஒளிவே
ததி நவம் அருள் ஒளிவே சரண் மலரடி தொழுதேன்.

பொருள்:

அதிகப் புதுமை நிறைந்த ஒளியே, மரணமிலாத விண்ணவர் தொழுகின்ற ஒளியே, நற்கதி புதிது புதிதாக வளரும் ஒளியே, கதிர்கள் வீசும் திரு ஒளியே, மதி நவமலியே, வேதத்தின் அற்புத ஒளியே, வலிமையைப் புதிதாக அருளும் ஒளியே, நினது திருப் பாத மலரடி தொழுதேன்.

அருஞ்சொற்பொருள்:

ததி - வலிமை; சரண் - பாதம்

செய்யுள் 2

கனம்மிகு குருவடிவே கனிதரு வினைமுடிவே
மனம்மிகு இருள் விடிவே மறைமுழுவதின் முடிவே
சனம்மிகு தவிது உறவே தவறு அறுகதி நிறைவே
தினம்மிகு பவம் அறவே திருமண அடி தொழுதேன்.

பொருள்:

ஒளி வடிவாயிருந்தவர் மாண்புமிகும் குரு வடிவில் வந்து, ஏவாள் தின்ற கனி தருகின்ற வினைப் பயனை நீக்கினவரே, என் மனத்தில் திணிந்திருந்த இருள் நீக்கிப் பகற்பொழுது விடியச் செய்தாய், திருமறையின் பொருள் முழுவதும் நிறைவு செய்தாய், சாதி சனம் மிகுந்த தாவீதரசனுக்கு உறவினனாக, நண்பனாயிருந்தவரே; என் தவறுகளை அறுத்து நற்கதி நிறைவித்தாய், இதனால் நான் தினந்தோறும் செய்த பாவங்கள் நீங்கின. நினது திருமண அடி தொழுதேன்.

செய்யுள் 3

ஒலிதரு மறைவிதியே உயர்சுரர் தொழுதுதியே
வலிதரு நரபதியே மதுர கருணை நதியே

பலிதரு திருநிதியே படிநரர் பெறுகதியே
கலிதரு துயர் அறவே கடிமலரடி தொழுதேன்.

பொருள்:

ஒலிக்கின்ற திருமறையின் கட்டளையே, வானத்தூதர் தொழுகின்ற துதிகளுக்குள் வாசமாயிருக்கின்றவரே, வலிமையைக் கொடுக்கின்ற மக்களின் தலைவரே, தித்திக்கும் அருள் நதியே, தன்னையே பலியாகக் கொடுக்கின்ற பொக்கிஷமே, உலக மக்கள் பெறுகின்ற நற்கதியே, கலிபுருஷன், பிசாசு கொடுக்கின்ற துயரம் அறுந்துபோகவேண்டுமென்று நின் மண மலரடி தொழுதேன்.

ஒப்புநோக்கு: ''சரண் மலரடி தொழுதேன்; திருமணவடி தொழுதேன்; கடி மலரடி தொழுதேன்.''—

''மலர்ந்த மலரிடை வாசம் வயங்குமா போல்''
—தாயுமானவர், ஆகார புவனம், செ. 1.

''கடிமலரடி தொழுதேன்'', ''கதிர்படுதிரு ஒளிவே'',''இருள் விடிவே''

''அருணன் இந்திரன் திசை அணுகினன், இருள்போய்
அகன்றது, அகன்றது, உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ, நயனக்கடி மலர் மலர...''
—திருவாசகம், திருப்பள்ளியெழுச்சி 2.

''உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு
நாற்றம்போல்.''
ஷை - அதிசயப்பத்து 6.

நம் கவிஞர் வேதநாயகர்க்குத் தேவாரம், திருவாசகம், தாயுமானவர் பாடல்கள் 'தண்ணீபட்ட பாடமாயிருந்தன'வென்பது தேற்றம்.

இத்தகு வாழ்த்து, தோத்திரம், தொழுகையோடு காப்புச் செய்யுட்கள் மூன்றும் முடிந்தன.

வேதநாயக சாஸ்திரியார் இந்த ஜெபமாலையை எழுதிய நோக்கம், காலம், முன்மாதிரி எவை என்பதைத் தாமே எழுதிய முகவுரையில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவுறக் காட்டியுள்ளதைக் காண்போம்.

''ஐரோப்பியருடைய தேவாராதனைத் திட்டங்களைக் காட்டும் ஜெபப்பிரமாணத்துக்கு ஒப்பாக இதை வாசிக்கிற கிறிஸ்துவின் அவயவங்களாகிய உங்கள் தேசாசாரத்தின்படி யாதொரு தேவாராதனைத் திட்டம் இருக்கவேண்டுமென்று சிந்தித்து வேதநாயக சாஸ்திரி மிகுந்த கருத்தோடும் பிரயாசத்தோடும் 1810-ஐ முதல், 1855ஐ மட்டுஞ் சென்ற 45-வருடக் காலத்தில்

வருடாந்தரங் கொஞ்சம் இந்த ஜெப மாலையை உண்டு பண்ணினேன்'' என்று அவரே எழுதியுள்ளார்.

1. 'ஐரோப்பியருடைய ஜெபப் பிரமாணம்' என்றது Book of Common Prayer.

2. காப்புச் செய்யுளில், 'தாவீது ஓதி வணங்கிய நேர்மை யதின்படியே நேயமுடன் செப மாலை மொழிந்திட' என்றார். மேலும் 'பூர்வத்தில் தாவீது ஆசாப்பு முதலானவர் பாடின சங்கீதங்களில் தங்கள் பெயரை நாட்டினதுபோல் இங்கேயும் செப மாலைக்கு ஜெபமாலை அதன் அந்தத்தில் வேதநாயகன் தன் பெயரை நாட்டினேன். அது பெருமையினால் அல்ல, கிருபாசனத் தின் நினைப்புக்கென்றும் இதைச் செய்தவன் இன்னானென்றும் விரும்பினோர் அறிந்துகொள்ளவுந்தானே' என்றார்.

இனி, 'உங்கள் தேசாசாரத்தின்படி' என்றதை ஆராய் வோம். தமிழ் இலக்கண இலக்கிய மரபின்படி எனக்கொள்க. இவ்வாறு கொள்வதற்கு ஆதாரம் அவரது 'ஆரணதிந்தம்' என்ற நூல் பக்கம் 3, செய்யுள் 5-இல் காட்டியுள்ளார்.

''மிக்க திருநெல்வேலி வேதநாயகன் பாடும்
வேதாந்த நாதாந்த சித்தாந்தம்
. . . . . .
வளமை மேசியாவின் வருத்தாந்தம்
முக்கிய இலக்கண இலக்கிய வழுவதன்றித்
தக்கபடி பாடுதற்கு அனுக்கிரகிக்கவேண்டும்''

என்று இறைஞ்சினார்.

''அருளிச் செயல்கள்''

இச் சொற்றொடர்க்கு டாக்டர் சு.ப. அண்ணாமலை (மதுரை) கொடுத்த விளக்கம் வேதநாயக சாஸ்திரியாரின் நூல்களுக்கும் பொருந்தும்.

''இத்தொடருக்கு, இறைவனால் அருள் வழங்கப்பட்டவர் களுடைய செயல்களாக, ஆக்கங்களாக, படைப்புக்களாக வெளி வந்த பாடல்கள் என்பது பொருள். இவ்வாறு தோத்திரப் பாடல் களே வழங்கும் வழக்கு குறிப்பிடத்தக்கது. இறைவனின் அருளைப் பெற்றோர், அவ்வருள் அனுபவத்தைத் தமிழ்ச் சொற்களால் அமைந்த பாட்டாக, பண்ணாக—வெளிப்படுத்திய வெளியீடுதான் திருமுறைகளில் உள்ள ஒவ்வொரு பாட்டும் ஆகும்...இங்கு இச் சூழலில்—பாடுதல் என்பது ஒரு விளையாட்டு அல்ல; ஓர் இலக்கியப் படைப்பு அல்ல; சமய நிலையில் வெளிப்படுகிற பாடல்கள், இறை வனின் அருளைப் பெற்று, அந்த அருள் அனுபவித்தலின் ஒரு பகுதி

யாகப் பாடும் பாடல்கள் ஆகும். ஆதலால், அருணகிரியார், 'பாடும் பணியா பணியா அருள்வாய்' என்று வேண்டு கிறார். இது திருமுறைகளின் மரபிலே வந்த எழுச்சி ஆகும். தேவார திருவாசக ஆசிரியர்கள், தாம் பாடும் பணியை இறை அனுபவத்தின் ஒரு பகுதியாகவே கருதினர்கள். இறை அனு பவத்தை வெளியிடுவது என்பது ஒன்று. ஆனல் பாடுவது ஓர் அனுபவம். அதனல் திருமுறைகள் 'அருளிச் செயல்கள்' என்று அழைக்கப்படுகின்றன'' என்றார் அண்ணுமலையார்.

பின்வரும் பாடல்கள் வேதநாயக சாஸ்திரியார் அறிந்தவை யாகும்:

1. ''பன்மாலத்திரளிருக்கத் தமையுணர்ந்தோர்
பாமாலைக்கேநீதான் பட்சமென்று
நன்மாலையா வெடுத்துச் சொன்னர் நல்லோர்
நலமறிந்த கல்லாத நானுஞ் சொன்னேன்''

என்றார் தாயுமானவர்.

2. ''நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க, அர்சனை
பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றார்.''

(12. தடுத்தாட் 70)

''பந்தமறுத் தாளாக்கிப் பணி கொண்டாங்கே
பன்னிய நூற்றமிழ்மாலை பாடுவித்தென்
சிந்தை மயக்கறுத்த திருவினனை ...''

(6,84–4)

3. ''தண்மலரும்பொழில் தென்கமலேசர்க்குச் சாத்துகின்ற
ஒண்மலர் சொன்மலர்க் கொவ்வாதுபோலும், மற்றோர்
புலவன்
பண்மலர் சாத்திப்பணி கொண்டவா பச்சைமால் சிவந்த
கண்மலர் சாத்தியும் காண்பரிதான கழல்மலரே.''

—குமரகுருபரர், திருவாரூர் நான்மணி 31.

ஒப்புநோக்கு: காப்பு: கொற்றவன் குடி – உமாபதி சிவாச்சாரி யார், சிவப்பிரகாசம் என்ற சித்தாந்த சாத்திரத்துக்குக் காப்புப் பாடல் பாடியதைக் காண்க:

''ஒளி இது காப்பு அருட் கணபதி கழலிணை
தெளிபவர் உளம்வினை—சேராவென்றது.''

''இதன் கருத்து இந்நூலுக்குக் காப்பென அறிக'' என்றும், பாயிரம் செ. 4-க்கு, ''இந்நூல் இடையூறு வராமல் முடியவேண்டி . . . சுப்பிரமணிய பிள்ளையாரை நோக்கித் தோத்திரம் பண்ணும் முறைமையை அறிவித்தது'' என்றார் உரையாசிரியர் மதுரைச் சிவப்பிரகாசர்.

நம் கவி வேதநாயகர்க்குச் சிவப்பிரகாசத்தின் மூலமும் அதன் உரையும் நன்கு தெரியும் என்பதை அவர்தம் செபமாலையின் அமைப்பு வெளிப்படுத்துகின்றது.

கிறிஸ்து வருகைப் பதிகம்

விருத்தம்

உலகம் யாவையும் படைத்தவர் தந்தார்

செய்யுள் 1

அகில புவனங்கள் எல்லாம் அமைத்தார் வந்தார்
ஆதியிலே இருந்த வார்த் தையுமே வந்தார்
சகல சராசரங்களெல்லாம் தந்தார் வந்தார்
தாஞக நின்ற தயா பரனுர் வந்தார்
புகலரியவேத போதகனுர் வந்தார்
பூரண சற்குணமிகு புண்ணியனுர் வந்தார்
உகமுடியும் ஊழிவரை நிற்பார் வந்தார்
உன்னதப் பராபரனே வந்தார் தாமே.

அருஞ்சொற்பொருள்:

அகில - அ + கிலம் = வேறுபட்ட பொருட்கள் எல்லாம்; அகிலாண்டம் - the universe, the multiverse; புவனம் - உலகம்; சராசரம். சர + அசர - சராசர; அசையும் – அசையாப் பொருட்கள்; தாஞக - தானே தம்மை ஆக்கிக்கொண்டவர், self-existent; உன்னதம் - உயரம்.

பொருள்:

வந்தவர் யார்? உலகம் யாவையும் படைப்பதற்கு முன்பு வார்த்தையாக (வாக்காக, சொல்லாக) இருந்தவர், அசையும் பொருள் அசையாப் பொருள் எல்லாந் தந்தவர், தாஞக நின்ற தயாபரர், சொல்லற்கரிய வேதப் பொருளை விளக்கியவர், பூரண சற்குணமும் மிகுந்த புண்ணியமும் உள்ளவர், உலகத்தின் இறுதி வரைக்கும் நிற்பவர்; வந்தார்; இவர் தாமே உயர்வற உயர்ந்த பராபரன்.

ஒப்புநோக்கு:

1. ஆதியில் இருந்த வார்த்தை - யோவான் 1:1-3;
''ஆதியிலேயே திருவாக்கு இருந்தார்; . . .
அவர் மூலமாகவே எல்லாம் உண்டாயின, உண்டானதெதுவும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.''

2. தாயுமானவர், 14. ஆகாரபுவனம்: பக்கம் 261.
''ஆகார புவனம் இன்பாகாரமாக
அங்ஙனே ஒரு மொழியால் அகண்டாகார . . .''

இதன் விளக்கத்தைப் பின்னர்க் காண்க.

செய்யுள் 2

தன்னைப் பலியாகப் படைத்து உலகை மீட்டவர் வந்தார்

அனைத்துலகங் காக்கும் அருளாளர் வந்தார்
அண்டமெல்லாம் படைத்திரட்சித்து ஆள்வார் வந்தார்
கனத்த பரமண்டலத்தின் கர்த்தா வந்தார்
காரணப் பராபரனுர் மைந்தன் வந்தார்
தனைப் பலியாய்ப் படைத்து உலகை மீட்டார் வந்தார்
தம்மையன்றித் தேவனில்லாச் சாமி வந்தார்
எனைக்கிருபையாய் நோக்குங் கண்ணுர் வந்தார்
இம்மானுவேல் அரசே வந்தார் தாமே.

பொருள்:

முதற் செய்யுளில் உலகப் படைப்பைச் சொன்னவர், இச் செய்யுளில் இம்மானுவேல் அரசரின் காத்தல் தொழிலைக் கூறலுற்ருர். காத்தல் என்பதை இரட்சித்து, ஆண்டு, மீட்டு என்ற சொற்களால் வலியுறுத்துகின்ருர். இவ்வாறு செய்வதற்குத் தம்மையே சிலுவையில் பலியாகப் படைத்துக் காத்தார். இது அவரது இரண்டாவது படைப்பு அல்லது புது சிருஷ்டிப்பாகும். என்னைத் தமது திருநோக்கால் நோக்கி அருளியவர் வந்தார். இவரையன்றி மற்றெருரு கடவுள் இல்லை என்ருர். This is Called His Second Creation; or Re-Creation.

செய்யுள் 3

மூத்தொழிலோன் வந்தார்

மூத்திவழி காட்டுவிக்கும் முன்னோன் வந்தார்
மூவுலகும் படைத்தளிக்கும் முதல்வன் வந்தார்
சத்தியவேதத்தை விரித்துரைக்க வந்தார்
சருவ சீவாற்றும தயாலு வந்தார்
பத்தருக்குப்பத நான்கும் பகுப்பார் வந்தார்
பரிசுத்த வேதபரி பாலன் வந்தார்
எத்திசையும் கொள்ளாத இறைவன் வந்தார்
இம்மானுவேல் அரசே வந்தார்

அருஞ்சொற்பொருள்:

சீவாற்றுமா - சீவாத்துமா; பதம் நான்கு - மோட்சப் பதவி: சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம். மூவுலகம் - வானம், பூமி, பாதாளம்.

பொருள்:

மூன்று உலகங்களையும் படைத்துக் காத்து அளிக்கும் இரட்சகன், பரமண்டலத்தின் மகிமையுள்ள கர்த்தர், உலக முதற் காரணரான பரம் பொருள், சத்திய வேதத்தின் உட்பொருளை விரித்துரைத்து முக்திவழி காட்டுவித்து, அன்பர்க்குப் பதம் நான்கும் பகுத்தளிக்கும் பரிசுத்த வேத பரிபாலன் வந்தார்; இவர் எத்திசையும் கொள்ளாத இறைவர், இம்மானுவேலரசர் இவர் தாமே.

செய்யுள் 4

இந்நிலத்துக்கு ஒளியானவர் வந்தார்

பொன்னுலகம் வீற்றிருக்கும் புகழார் வந்தார்
பூரண சற்குண பொறுமையாளர் வந்தார்
தன்னிகரில்லாத சரு வேசன் வந்தார்
சத்திய வேதாந்த சாஸ்திரியார் வந்தார்
முன்னிருந்தார் பின்னிருந்தார் முடியார் வந்தார்
மூன்றுளும் ஒன்றுன மூர்த்தி வந்தார்
இந்நிலத்துக்கு ஒளிவு உதிக்கும் எம்மான் வந்தார்

அருஞ்சொற்பொருள்:

பொன்னுலகம் - பொன்மயமான மேலுலகம்; முடியார் - உலக முடிவிலும் இருப்பவர். மூன்றுளும் ஒன்றுன மூர்த்தி - திரியேகக் கடவுள் மறு உரு எடுத்து இவ்வுலகுக்கு வந்தார். இந்த நில உலகுக்கு ஒளியாக உதிக்கும் எம்பெருமான் வந்தார்.

ஒப்புநோக்கு:

'முன்னிருந்தார் பின்னிருந்தார் முடியார்' - திருவெளிப் பாடு. 1:8.

''அல்பாவும் ஒமெகாவும் நானே'' என்கிறார் (அகரமும் னகரமும் நானே).''இருந்தவர், இருக்கிறவர், இனி வருபவர் அவரே''.

''நானே உலகத்துக்கு ஒளி'' - யோவான் 8:12. ஒளிவு - ஒளி.

செய்யுள் 5

நூதன புராதன நூலாசான் வந்தார்

ஆறிலக்கணச் சொருப ஐயன் வந்தார்
ஆராலும் அளவிடக்கூடாதார் வந்தார்
பேறு தரும் பாக்கியசம் பன்னர் வந்தார்
பிசகாத சத்திய வாசகனர் வந்தார்
நூறு லட்சங் கோடி சங்கத் தலைவர் வந்தார்
நூதன புராதன நூல் ஆசான் வந்தார்
மாறுதல் இல்லாத மகாதேவன் வந்தார்
மானுவேல் கிறிஸ்தரசே வந்தார் தாமே.

அருஞ்சொற்பொருள்:

ஆறு இலக்கணச் சொருபன் - ? நூறு லட்சம் கோடி சங்கத் தலைவர் - வானுலக தேவர்களின் எண்ணிறந்தவர் சங்கத் தலைவர்—கணபதி. நூதன, புராதன நூல் ஆசான் - புதிய பழைய ஏற்பாட்டு ஆகமங்களின் வியாக்கியானர். Old and new testaments. சம்பன்னர் - சம்பன்னனர்.

பொருள் — தெளிவு.

செய்யுள் 6

ஓசையா உயிரையா மேசையா நேசையா வந்தார்

ஓசையா உயிரையா ஒழியார் வந்தார்
உன்னத பத்திராசனத்தில் உயர்ந்தார் வந்தார்
ஆசையா அன்பையா அருளாய் வந்தார்
அனுதி பிதாவின் சுதனுய் ஆண்டார் வந்தார்
மேசையா நேசையா மெய்யாய் வந்தார்
மிக்காரும் ஒப்பாருமில்லார் வந்தார்
யேசையா கிறிஸ்தையா இந்தோ வந்தாரீ
இம்மானுவேல் அரசே வந்தார் தாமே.

பொருள்:

ஓசையாக, உயிராக, ஒழியாதவராக, உயர்ந்த சிங்காசனத்தில் வீற்றிருப்பவர் (ராசாதிராசன், மன்னுதிமன்னன்), நமது பேரில் ஆசை பாசம் அருள் உள்ளவராக, தேவ மைந்தனுக வந்து நம்மை மீட்டவர், நேசமுள்ள மேசியா மெய்யாக வந்தார்.

செய்யுள் 7

மேசியா கிறிஸ்து அரசே வந்தார்

ஒன்றுமில்லா ஊழிக்காலத்தார் வந்தார் வந்தார்
ஒப்பில்லா பரமநாயகனர் வந்தார்

அன்றும் இன்றும் என்றும் இருப்பவரே வந்தார்
அர்ச்சய அர்ச்சய பரிசுத்த ஆவி வந்தார்
நன்றறியார்க் கருள்புரியும் நாதன் வந்தார்
நாசரேத்துக் கலிலேயன் நாட்டார் வந்தார்
வென்றிதரும் ஞானபோதகனர் வந்தார்
மேசியா கிறிஸ்தரசே தந்தார்தாமே.

பொருள்:

பாழும் வெறுமையுமாய் இருளாயிருந்த காலத்தில் இருந்தவர், ஒப்பாருமிக்காருமில்லாத பரம நாதன், முக்காலத்தும் இருப்பவர், பரிசுத்த பரிசுத்த பரிசுத்த ஆவியானவர் (Tris—hagion), கடவுள் செய்த நன்மைகளை அறியாதவர்க்கும் அருள்புரியும் கலிலேயா நாட்டு நாசரேத்தூரார், அடியவர்க்கு வெற்றி தரும் ஞான குரு வந்தார்; இவர் தாம் மேசியா, கிறிஸ்து என்ற அரசர்.

செய்யுள் 8

அழகர் வந்தார்

மட்டளவில்லாத ஒரே வஸ்து வந்தார்
வானவரெல்லாம் வணங்கும் மகத்துவன் வந்தார்
வெட்ட வெளியாயிருக்கும் விமலன் வந்தார்
வேதாந்த சித்தாந்த வினேதன் வந்தார்
கட்டழகர் கண்ணழகர் கதையாய் வந்தார்
கருணை கடாட்சம் வைத்துக் காக்கவந்தார்
எட்டியும் எட்டாத பரப்பொருளே வந்தார்
இம்மானுவேல் அரசே வந்தார்.

பொருள்:

அளவைப் பிரமாணங்களுக்கப்பாற்பட்ட, ஒப்பாருமிக்காருமில்லாதவர், வானவர் வணங்கும் மகிமையுள்ளவர் வெட்டவெளியாயிருக்கும் மாசற்றவர், உடற்கட்டும் கண்ணும் அழகானவர் அவதார புருஷனுகி, உலக வரலாற்றுக்குள் புகுந்தவர், வேதாந்த-சித்தாந்தங்களுக்குப் புதுமையானவர், அருட்கண் வைத்து நம்மை இரட்சிக்க வந்தவர், நாம் எட்ட முயன்றும் எட்டாத உயரத்தில் உள்ள பரம்பொருள் வந்தார் (The Transcendent reality came down).

"For us and for our salvation
he came down from heaven"

—(*The Nicene Gread*)

செய்யுள் 9

எல்லார்க்கும் இரங்க வந்தார்

நல்லவர்க்கும் தீயவர்க்கும் நடுவர் வந்தார்
நாட்டவர்க்கும் காட்டவர்க்கும் நட்பாய் வந்தார்
பல்லவர்க்கும் பாவிகட்டும் பரிவாய் வந்தார்
பத்தருக்கும் சுத்தருக்கும் பரிந்து வந்தார்
புல்லருக்கும் பொடியருக்கும் பொறுக்க வந்தார்
புரவலர்க்கும் இரவலர்க்கும் பொதுவாய் வந்தார்
எல்லார்க்கும் ஏழையர்க்கும் இரங்க வந்தார்
இம்மானுவேலரசர் தாமே வந்தார்.

பொருள் தெளிவு: இந்த அரசருடைய நாட்டில் பலதிற மக்கள் இருந்தனர். அவர்கள் நிலைமைக்கேற்றவாறு நடுவராக, நண்பராக, அன்பராக, பரிந்துரையாளராக, பொறுமையாக - எல்லார்க்கும் இரக்கம் காட்டுகிறவராக இம்மானுவேலரசராகச் செங்கோல் நடாத்தி வந்தார். (புல்லருக்கும் பொடியருக்கும் - புல்லரையும் பொடியரையும்)

செய்யுள் 10

பாட்டர்க்குப் பலனளிக்கும் பத்தா வந்தார்
பாவிகட்கெல்லாம் பாவநாசன் வந்தார்
கேட்டவர்க்கு மோட்சகதி கிடைக்க வந்தார்
கெட்டவர்க்கெல்லாம் கிருபைக் கிறிஸ்து வந்தார்
மாட்டகத்தின் நாட்டகத்தின் வடிவார் வந்தார்
மாறுத பெருங்கருணை வைத்தார் வந்தார்
ஏட்டகத்தில் என்னகத்தை எழுதார் வந்தார்
இம்மானுவேலரசரே வந்தார்.

அருஞ்சொற்பொருள்:

பாட்டர் - பாடுகிறவர்; ஏட்டகத்தில் என்னகத்தை—நித்திய சிவபுத்தகத்தில் – ஏடுகளில்—என் பெயரை எழுதவந்தார். கிருபைக் கிறிஸ்து - கிருபை தரும் கிறிஸ்து.

பொருள் — தெளிவு.

கிறிஸ்து வருகைப்பதிகம் — விருத்தம்

ஒப்புநோக்கு

செய்யுள்	வேதநாயகர்	தாயுமானவர்
	அகில புவனங்களெல்லாம் அமைத்தார்	ஆகாரபுவனம் இன்ப ஆகாரமாக
	ஆதியிலே இருந்த வார்த்தையுமே	அங்ஙனே ஒரு மொழியால்
	சகல சராசரங்களெல்லாம் தந்தார்	தேகாதி உலகமெங்கும் கலந்துதானே திகழ் அனந்த ஆனந்தமயத் தெய்வக்குன்றே
3	பத்தருக்குப் பதநான்கும் பகுப்பார்	யோகானுபூதிபெற்ற அன்பர் ஆவிக்குறு துணையே
5	ஆராலும் அளவிடக் கூடாதார்	அளவைக்கெட்டாத் தனந்தளிச் சின்மாத்திர மாய், மேல் கீழ் காட்டாச் சதசத்தாய்
8	எட்டியும் எட்டாத பரப்பொருள்	ஆதி அந்தம் எனும் எழுவர் ஈறற்று ஓங்கி
8	வெட்ட வெளியாயிருக்கும் விமலன்	வேதக சின்மாத்திரமாய் எம்மனோர்க்கும் வெளியாக வந்த ஒன்றே, விமல வாழ்வே
9&10:9	எல்லார்க்கும்	
8	மட்டளவில்லாத ஒரே வஸ்து	13 காண்டல் . . . பூண்ட அளவைகள் மனவாக்காதியெல்லாம் பொருந்தாமல் அகம் புறமும் புணர்க்கை யாகி
5	நூதன புராதன நூல் ஆசான் வந்தார்	17 மான் காட்டி மானை ஈர்க்கும் கொள்கை யென அருள்மௌன குருவாய் வந்து
	வென்றி தரும் ஞானபோதகனார் வந்தார்	
	வேதாந்த சித்தாந்த வினோதன் வந்தார்	

செய்யுள் 11

ஆபிரகாமைப் பெயரிட்டழைத்தவர் வந்தார்

ஆகநாயகன் திருச்சேயாஞர் வந்தார்
ஆபிரகாமைப் பெயரிட்டு அழைத்தார் வந்தார்
நீத நாயகன் தருமநிலையார் வந்தார்
நித்திய ராசாங்கநன் னிதானர் வந்தார்
போதநாயகன் பொறுமையாளர் வந்தார்
புண்ணிய சொரூபபூ பதியே வந்தார்
வேதநாயகன் பாட்டுக் கேட்டார் வந்தார்
மெய்யான கிறிஸ்தரசே வந்தார்தாமே.

இப்பதிகத்தின் இறுதிச் செய்யுளிலோர் நயம் காண்க. ஆபிராம் என்றவனை 'ஆபிரகாம்' எனப் பெயரிட்டு அழைத்த ஆண்டவன், இக்கவிஞரை 'வேதநாயகன்' எனப் பெயரிட்டழைத் தார். எனவே, ஒவ்வோர் அடியிலும் 'நாயகன்' என்று கடவுளைக் குறிப்பிட்டு, இறுதியடியில் தமது பெயரை - வேதநாயகன் - என்று நாட்டினர் என்பது கவித்திறம்.

பொருள்:

என்றுமிருக்கும் திருத்தந்தையாரின் திருமகனர், ஆபிராமுக்கு மறு பெயரிட்டழைத்தவர், நீதிக்குநாயகன், தருமத்திற்கு நிலை பேருனவர், அழியாத அரசாங்கத்தின் நல்லநிதானர், அறிவுக்கு நாயகன், நீடிய பொறுமைசாலி, புண்ணியமே உருவங்கொண்டு இவ்வுலக அரசனுக வந்தார். வேதநாயகனுகிய என் பாட்டைக் கேட்க வந்தார்.

பொய்யான மேசியாக்கள் போலல்லாது, மெய்யான கிறிஸ்து என்ற அரசர்தாமே வந்தார்.

ஒப்புநோக்கு: தாயுமானவர் பாடல், பக். 413.
வானநாயக, வானவர்நாயக, வளங்கூர்
ஞானநாயக, நான்மறைநாயக, நலஞ்சேர்
மோனநாயக, நின்னடிக் கன்பின்றி முற்றுந்
தீனனுயகம் வாடவோ என்செய்வேன் செப்பாய்.

அருஞ்சொற்பொருள்:

தீனனுயகம் - அறிவில் ஏழையாய் நெஞ்சம் நொந்து நான் வாடவோ?

தேவாரம் 5. 100.1:
வேதநாயகன், வேதியர் நாயகன்,
மாதின் நாயகன், மாதவர் நாயகன்,

ஆதிநாயகன், ஆதிரை நாயகன்,
பூதநாயகன், புண்ணிய மூர்த்தியே.

ஒப்புநோக்கு: 'புண்ணிய மூர்த்தியே' – ''புண்ணிய சொரூப பூபதியே.''

வருகைப் பதிகம்—உரையாசிரியர் குறிப்புகள்

''செபமாலை 31-க்குச் செய்யுள் 445.
காப்பு 9, வருகைப் பதிகம் 11, ஆகத் திரண்ட தொகை 463''

என்று நூலின் முடிவில் ஒரு குறிப்பு வந்துள்ளது.

காப்புச் செய்யுள்களும் 31-மாலைகளும் ஒரு ரகம், வருகைப் பதிகம் இவற்றினின்று பிரிக்கப்பட்ட தனிரகமாகக் கருதப்பட்ட தெனலாம். இத் தனிரகத்தின் காரணமென்னவாயிருக்கும் என யூகிக்கலாம்.

காப்புச் செய்யுட்கள் தமிழ் இலக்கிய மரபில் எழுந்தவை. 31 மாலைகளும், கவிஞர் தம் முகவுரையிற் காட்டி முறைப்படி எழுதி வரிசையாகக் கோக்கப்பட்டன என்பது தேற்றம்.

வருகைப் பதிகம் எழுதப்பட்ட காலம், பொருள், அமைப்பு, செபமாலையில் அமைக்கப்பட்ட இடம், இவற்றை நோக்குங்கால், இதுவோர் தனிரகம் என்றே கருதத் தோன்றுகிறது.

காலம்: காப்பு எழுதிய உடனே, வருகைப் பதிகத்தை எழுதினரா? 31 மாலைகளுக்கு முன்னரே அல்லது பின்னர்தான் எழுதினர் என்று முடிவு செய்வதற்குப் போதிய சான்று இல்லை.

நமக்கு வருகைதந்தவர் யார்?

இப்பதிகத்தின் கட்டுக்கோப்பில் உள்ள பதினெரு செய்யுட்களின் ஈற்றடியில் பல்லவி, பாடலின் கடை மடக்கு வரியாக (Refrain) வந்துள்ளமையைக் காண்போம்:

1. உன்னதப் பராபரனே வந்தார் தாமே.
2. இம்மானுவேலரசே வந்தார் தாமே.
3. இம்மானுவேலரசே இறைவன் வந்தார்.
   இம்மானுவேலரசே வந்தார் தாமே.
4. இம்மானுவேலரசே வந்தார் தாமே.
5. மானுவேல் கிறிஸ்தரசே வந்தார் தாமே.
6. இம்மானுவேலரசே வந்தார் தாமே,

7. மேசியா கிறிஸ்தரசே வந்தார் தாமே.

8. இம்மானுவேலரசே வந்தார் தாமே.

9. இம்மானுவேலரசே வந்தார் தாமே.

10. இம்மானுவேலரசே வந்தார் தாமே.

11. மெய்யான கிறிஸ்தரசே வந்தார் தாமே.

இப்பதினொரு செய்யுட்களில், பத்துமுறை 'அரசே' என்றார். (2–11) 3-இல், இறைவன் அரசே என்றார். இறைவன் – அரசன். 7-இல், மேசியா - கிறிஸ்து - அரசே = ஈபிரு மொழியில் மேசியா என்பது அபிஷேகம் பண்ணப்பட்டவர் - இதே கருத்து கிறிஸ்து - christos என்ற கிரேக்கச் சொல்லுக்குண்டு. இவ்விடங்களில் இவை அரசன் எனப்படும்.

இனி, 'இம்மானுவேலரசே' என்பதைக் காண்போம். Im - manu -el = el என்பது சுவாமி எனப்படும். எ.கா. கந்த - சுவாமி; பழனிச்சுவாமி—இம்மானு—என்பது என்றென்றும் இருப்பவர் எனப்படும்.

எனவே, 'இம்மானுவேல்' என்ற ஈபிரூச் சொல், 'என்றென்றும் நம்மோடு இருப்பவர்' எனப் பொருள்படும். God is with us always or god be with us always.

இத்துணை விரிவும் பொருட்செறிவும் கொண்டதோர் சொல்லைப் பல்லவியாக, பாடலின் கடை மடக்கு வரியாகக் கொண்டு, வருகைப் பதிகத்தின் தொகைப் பொருளாக அமைத்த பெருமை மகா கவி வேதநாயகர்க்குரியது.

அடுத்து, இத்தொகைப் பொருளை பகுத்தும் விரித்தும் கூறுவதைக் காண்போம்:

1. இந்த அரசன் யார்? அவரது இலக்கணம் யாது என்பதை எடுத்த எடுப்பிலேயே, முதற் செய்யுளில் காட்டப்பட்டது.

'உன்னதப் பராபரன் வந்தார் தாமே' - உயர்வற உயர்ந்த பராபரக் கடவுள் தாமே இவ்வுலகத்துக்கு இறங்கி வந்தார். இவர் உலகம் அனைத்தையும் அமைத்தவர். யோவான் 1:1இல் சொல்லிய 'ஆதியிலே இருந்த வார்த்தை', தான்தோன்றியாக நின்ற தயாபரன்; பராபரன் மேலிடத்தைக் குறிப்பிட்டது–(Spatial dimension), தயாபரன், நற்குணத்தைக் காட்டியது (Superior qualitative dimension). பூரண சற்குணமிகு புண்ணியர். புகலரிய வேத போதகர். இவர் யுகம் முடியும் ஊழிமட்டும் நிற்பவர், இருப்பவர்—இம்மானுவேலர்.

2. இறைவனது முத்தொழில்கள்: படைத்துக் காத்து அருளல் (இரட்சித்தல், மீட்டல்), என்னைக் கிருபையாய் நோக்குங் கண்ணுர்—நயன தீட்சை செய்பவர் வந்தார்.

காரணப் பராபரன் மைந்தன் — தேவசுதன்; காரணப் பராபரன்— ஒ. நோ. அருணகிரியார்—சுவாமி மலை திருப்புகழ் செ. 9: 'சிவயநம நமசிவய காரணன் சுரந்து

'அமுதமதை அருளி எமை யாளும் எந்தை தன்
திரு உருவின் மகிழ் எனது தாய் பயந்திடும் புதல்வோனே.'
கிருபானந்த வாரியார் விரிவுரை, பக். 44.

சிவயநம : — சூட்சும பஞ்சாக்ஷரம். ஐந்தெழுத்து.

நமசிவய : — தூல பஞ்சாக்ஷரம். ஐந்தெழுத்து.

காரணன்: — காரண பஞ்சாக்ஷரம். ஐந்தெழுத்து.

இதை ஒப்புக்கொள்ளாதவர் போன்று நம் கவிஞர்: 'தன்னைப் பலியாய்ப் படைத்து, உலகை மீட்டார், வந்தார்' என்றார் (2:5).

செ. 3:4 — எத்திசையும் கொள்ளாத இறைவன்

4:3 — தன்னிகரில்லாத சருவேசன்

6:6 — மிக்காரும் ஒப்பாருமில்லார்

8:1 — மட்டளவில்லா ஒரே வஸ்து
ஒரே — ஒரு தனி

8:7 — எட்டியுமெட்டாத பொருள்.

இவர் யாருக்காக இவ்வுலகில் வந்தார்?

செ. 9-ம் 10-ம் எல்லார்க்கும்:

நல்லவர் தீயவர்; நாட்டவர் காட்டவர்;
பல்லவர் பாவிகள்; கேட்டவர் கெட்டவர்;
மாட்டகத்தினர் நாட்டகத்தினர் வடிவார்;
புல்லருக்கும் பொடியர்க்கும்
புரவலர்க்கும் இரவலர்க்கும் இரங்க வந்தார்.

செய்யுள் 12

இவரே நாயகர்: தேவகுமாரன்; ஆபிரகாமைப் பெயரிட்டழைத்தவர். நித்திய ராசங்கன்—அவர் ராஜாங்கத்துக்கு அழிவேயில்லை. பொறுமை என்ற புண்ணியமே சொரூபமாகப் பூபதியாக வந்தார்.

மெய்யான கிறிஸ்து அரசர்தாமே வந்தார்—இத்தகு இஸ்ரேல் கிறிஸ்தரசரைப் பற்றியவையே இனி வரும் 31 செபமாலைகளும் என்பதை வாசகர்கள் அறிக என்றூர் வேதநாயகர், இவ்வருகைப் பதிகத்தின் மூலமாக—உரையாசிரியர் குறிப்பு.

அகல உரை: வருகைப் பதிகம்.

தமிழ்ப் புலவர், முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் போற்றுபவர். எனினும் அவர் சென்ற வழியே செல்லாமல், முன்னோர் உழுத காலில் ஓட்டாமல், தன் ஏரைப் புதுச் சாலில் ஓட்டுவான் ஓர் உழவன். அது போன்று வேதநாயகரும் பழைமை போற்றியும் புதுமை கண்டும் தன் வழியே சென்றூர் என்பதற்கு வருகைப் பதிகத்தின் முதற் செய்யுள் சான்றாகும்.

வந்தவர் யாவர்?

ஆதியிலே இருந்த வார்த்தையுமே வந்தார்

யோவான் நற்செய்தி நூலின் தொடக்கத்தில் வந்துள்ள இவ் வாசகம் ஆதியாகமத்தின் தொடக்கத்தில் வந்ததாகும். இதன் உட்பொருளை, செபமாலை 1. கடவுள் வணக்கம் தொடக்கத்தில் விரித்துரைத்தார் கவிஞர்:

ஆதியும் அந்தமும் இல்லாய், அது முன் அது முன் அது முன், அல்பா ஓமேகா, அடி, நடு, முடிவு, தானுவானு (தான் தோன்றி—Sui genaris) என்றெல்லாம் சொல்லிப் புகழ்ந்தார்.

2. அகில புவனெங்கள் எல்லாம் அமைத்த சிருட்டிகர் வந்தார் என்று 'ஆதியிலிருந்த வார்த்தை'யைச் சொல்வதற்கு முன் கூறினரே—இது சரியா?

தமிழ் யாப்பிலக்கணக் கூறுகளிலொன்று அகர வரிசை யமைப்பு. 'அ'கரத்தில் தொடங்கியபின் 'ஆ'காரத்திற்கு வந்தார் எனலாம். செ. 2 'அனைத்து' என்றும் 5, 'ஆறிலக்கண' என்றும், 11 'ஆகநாயகன்' என்றும் தொடங்கின.

3. 'தொட்டனைத் தூறும் மணற்கேணி போல மாந்தர்
கற்றனைத்தூறும் அறிவு'

என்றூர் வள்ளுவர். கவி வேதநாயகர் திருவேதம் என்ற கேணியில் பழைய புதிய பொருட்களை எடுத்து அவ்வறிவில் ஊதினர். அதன் பயனாக இந்தப் பத்துப் பாடல்களின் கடை மடக்கு அணியாக,

'இம்மானுவேலரசே வந்தார் தாமே'

என்று கூறி நம்மை மகிழ்விக்கிறார்.

இச் சொல்லுக்கும் பொருளுக்கும் ஊற்றுங் காரணமுமா யிருந்தது மத்தேயுவின் நற்செய்தி நூலில் நாம் காணும் மகா வாக்கியமாகும்.

'இதோ, கன்னிப் பெண் கருவுற்று ஒரு மைந்தனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவார்கள்.' (மத். 1:22)

என்று ஆண்டவர் இறைவாக்குரைப்பவர் மூலமாக உரைத்தது நிறைவேற இவையனைத்தும் நடந்தன. 'இம்மானுவேல்' என்பதற்கு ''நம்முடன் கடவுள் இருக்கிறார்'' என்பது பொருள் என்று மத்தேயு பதவுரையும் விரிவுரையும் எழுதினர்.

இது போன்ற முன்னோர் மொழி பொருளை நம் கவிஞர் பொன்னே போல் போற்றி, 2 முதல் 10 செய்யுட்களில் 'இம்மானுவேல் அரசே' என்று ஈற்றடி மடக்கு வரியாக அமைத்தார்.

இதிலோர் நயம் காண்க. மத்தேயு, 'இம்மானுவேல்' என்று சொன்னதோடு 'அரசே' என்றொரு சொல்லைக் கூட்டினர். இதன் காரணம்: ஏசாயா 7:14இல் முன்னுரைத்ததை, அவர் காலச் சூழ் நிலையில் செப்பிய பொருளை உள்ளவாறு உணர்ந்து, அரசே என்று இயேசுவை விளித்தார் வேதநாயகர்.

4. 'நம்மோடு இருக்கிறார்' என்ற சுலோகத்தில், 'இரு' என்ற சொல்லை, செபமாலை 3. 'ஓம் பிரணவம்—இருக்கிறேம்' என்ற தலைப்பிட்டு, 'நாதன் ஓம் இருக்கிறேம்' என்று பத்துச் செய்யுட்களிலும் பயின்றுள்ளார் கவிஞர்.

வேத என்ற கேணியில் கற்றனைத்தும் ஊறிய அறிவில் இரைத்து மொண்டதின் பயன் இதுவென்க.

5. அடுத்து, 9-ஆம் 10-ஆம் செய்யுட்களில், 18 வகை மக்கள் 'எல்லார்க்கும் ஏழையர்க்கும் இரங்க வந்தார்' என்றதற்கு ஊற்றுக் கண்ணையிருந்ததும் ஏசாயாவின் தீர்க்கதரிசனப் புத்தகமே. ஏசாயா 11:11–14-இல் 'அக்காலத்தில் தமது சனத்தில் மீந்தவர் களைச் சேர்த்துக்கொள்வார்!

அசீரியா, எகிப்து, பத்ரோஸ், எத்தியோப்பியா, ஏலாம், ஷிநியார், ஆமாத் தீவுகள், இஸ்ரவேலில் துரத்துண்ட ஆண்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்ட பெண்களைப் பூமியின் நான்கு திசைகளிலிருந்தும் கூட்டுவார்.

இவ்வசனங்களை மனத்திலிருத்து, 10-ஆம், 11-ஆம் செய்யுட் களைப் படித்தால், இம்மானுவேலரசின் விரிவு எத்துணை விசா லித்தது என்பதைக் காண்போம்.

6. ஆதியிலே எனத் தொடங்கி, இறைவனின் முத்தொழில்களை (செ. 2-இல்)க் கூறி,

'உகம் முடியும் ஊழிவரை நிற்பவர் வந்தார்'

என்றவர் ஓர் காட்சி கண்டு அதை எமக்குக் காட்டினர். அதைச் சமயத் தரிசனம் என்பர் வட நூலார். ஆங்கிலத்தில் Synoptic Vision என்பர்.

What our poet Vedanayagar has seen is a Synoptic Vision of the Acts and Revelation of God in Christ; he is now translation of this vision (Darshan) in this whole Poem on the Coming of Jesus in the world. And the first strophe is a still further brief but compact version, or resume of the whole of the Poem.

According to the 'family word finder—Reader's Digest: It's good to read a synopsis of the opera before going to it: synopsis; outline, summary, precis, epitome, argument, abstract, resume.'

'Word origin: Synopsis comes from Greek syn=together + opsis (view), an over all view, summary.'

6. இவ் 'வருகைப் பதிகம்' யோவானது நற்செய்தி நூலின் 1:1–18-இல் உள்ளவற்றை ஒதி உணர்ந்து பாடிய பாடலாகும். ''வாக்கு'', 'வார்த்தை' என்பன கிரேக்க மொழியில் logos logos என்றும், ஆங்கிலத்தில் word என்றும் வருவன. இவ் 'வாக்கு' என்ற பதம் யோ. 1:1–3-இல் மும்முறை வந்துள்ளன. 'ஆதியிலே' என்பது கிரேக்க மொழியில் arche எனப்பட்டது. 1:14-இல் 'திரு வாக்கு மானிடனாகிவிட்டார்' என்பதில், 'மானுடன்' என்பது flesh என்று ஆங்கிலத்திலும் sarx என்று கிரேக்கிலும் வரும். வாக்கு என்பதையும் மானிடன் என்பதையும் ஒன்று சேர்த்து இணைத்தும் பிணைத்தும் சொன்ன பெருமை யோவானுக்குரியது. அந்த மரபு பிறழாமல் இப்பதிகத்திலும் ஆம், இந்தச் செபமாலை முழுவதிலும், 31 மாலைகளிலும் பாடிய பெருமை மகாகவி வேதநாயகர்க்குரியது.

1. கடவுள் வணக்கம்

வாழ்த்து, வணக்கம், வருபொருள், பொருளியல்புரைத்தல் என்ற தமிழ் இலக்கிய மரபுக்கேற்ப இம் முதல் மாலையைத் தொடுக்கலுற்றார் கவிஞர் பெருமான். காப்புச் செய்யுட்களில் வாழ்த்தி, இப்பதிகத்தில் வணங்கி, ஈற்றுச் செய்யுள் 11-இல் செபமாலையின் நோக்கம், ஆசிரியர் பெயர், தாவீது சங்கீதத் தொடர்பு, பாடவேண்டியவர்கள் யார் என்பனவற்றைக் கூறுகிறார்.

இச்செய்யுட்கள் ஒவ்வொன்றிலும் பல்லவியை ஈற்றடிகளில் வைத்தும், ஒவ்வோரடியின் ஈற்றுச் சொற்கள் 'சரணம்' அல்லது 'போற்றி' என்றும் சொல்லித் துதித்தார். இவ்வமைப்புக்கு முன்னோடியானவர் மாணிக்க வாசகர். அவரது திருவாசகத்தின் முதல் நான்கு பாடல்களிலும், 'வாழ்க, வெல்க, போற்றி, வணங்கி, பணிந்து' என்ற சொற்கள் வந்துள்ளமையைக் காண்க.

சொற்கள் இவ்வாறு அமைய, விவிலியத்தின் திரண்ட பொருளே இப்பதிகப் பொருள் என்பதை எமது உரையிற் காண்க.

சாதாரணமாகக் கீர்த்தனைகளில் பல்லவி தொடக்கத்தில் வரும். ஆனால் கவி வேதநாயகர் தமது 31 பாடல்களிலும் அதைத் தம் பாடலின் ஈற்றடியில் பெய்துள்ளார். இது அவருக்கே உரிய சிறப்பு. அப்பல்லவி வருமாறு:

''எனை மீண்டவனே, எனை ஆண்டவனே,
ஏசுநாதா, சரணஞ் சரணம்.''

எனவே, சுருதி, யுக்தி, அனுபவம் என்ற மூன்று அமிசங்களும் இங்கு இணைந்து ஒன்றின.

செய்யுள் 1

ஆதியும் அந்தமும் இல்லாய் சரணம்
அதுமுன் அதுமுன் அதுமுன் சரணம்
அல்பா ஒமே காவே சரணம்
அடியே நடுவே முடிவே சரணம்
சாதி சனங்கள் இல்லாய் சரணம்
தானு வானு ஞானு சரணம்
சருவவியாபி சருவ வல்லவனே
சரணம், சருவே சுரனே சரணம்

மாதர்கள் மைந்தர்கள் இல்லாய் சரணம்
மனுடவதாரகு மாரா சரணம்
மாசில்லாத மணியே சரணம்
மன்னு பொன்னு மின்னு சரணம்
ஏதம் ஏதும் இல்லாய் சரணம்
இறையே நிறையே பொறையே சரணம்
எனை மீண்டவனே எனை ஆண்டவனே
ஏசுநாதா, சரணஞ் சரணம்.

செய்யுளமைப்பு:

1. முதல் எழுத்துக்கள்: ஆ, அ, சா, ச, மா, ம, மா, ம, ஏச, இ, எ, ஏ.
2. ஈற்றுச் சொல் ஒவ்வோரடியிலும்: (சரணம்.)
3. நடுச்சொல்: 'இல்லாய்.'

அருஞ்சொற்பொருள்:

அல்பா-ஓமேகா; கிரேக்க மொழியில் A-ω; முதல் கடை எழுத்துக்கள்; ஆங்கிலத்தில் A-Z; தமிழில் அ-ன.

குறளில்: ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.''

சருவ-எல்லாம்; சருவ வியாபி, சருவல்லவன்-சருவேசுரன் = எங்கும் உள்ளவன், எல்லாம் வல்லவன், எல்லாம் உடையவன். மன்னு-நிலைபெற்ற மன்னவன்; பொன்னு-பொன்மயமானவன், பொன்னுர் மேனியன்; மின்னு-மின்னுகின்றவன்.

ஆதியும் அந்தமு மில்லாய்,
சாதி சனங்களில்லாய்,
மாதர்கள் மைந்தர்களில்லாய்,
ஏதம் ஏதுமில்லாய்.

'இல்லான்' எதிர்மறையில் கூறியதை Via negation's என்றும், 'உள்ளான்' என்று உடன்பாட்டில் கூறியதை Via affirmation's என்றும் இலத்தீன் மொழியிற் கூறுவர்.

இதிலோர் இறை இயல் தத்துவக் கோட்பாடுண்டு.

எதிர்மறை	×	உடன்பாடு
ஆதி அந்தம் இல்லாய்	×	அடி, நடு, முடி
சாதிசனம் இல்லாய்	×	எனை மீண்டவன், ஆண்டவன், சருவவியாபி, வல்ல ஈசுரன்
ஏதம் ஒன்றும் இல்லாய்	×	இறை, நிறை, பொறை

இத்தகு சொல்லாட்சியை முரண்தொடர்பு-Paradox என்பர்.

2. தொடக்கமும் முடிவுமில்லாதவன்; அதுமுன், அதுமுன் அதுமுன் எல்லாவற்றிற்கும் முந்தியுள்ளவன்: The Infinite, The Beyond of the Beyond, The Beyond of Time-காலங்கடந்தவன்-The Transcendent.

ஒப்புநோக்கு:

திருவாசகம், 7; திருவெம்பாவை.

1. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம் பாடக் கேட்டேயும்

9. முன்னைப் பழம்போருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே.
(திருவம்மானை செ. 11)

ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்.

செய்யுள் 2

சத்தியவேதத்(து) ஒளிவே போற்றி
சயமே நயமே மயமே போற்றி
தன் முன் ஒன்றும் இல்லாய் போற்றி
சற்குரு ஞானச் சாமி போற்றி
பத்துரை வேதப் பொருளே போற்றி
பரனே கிருபா கரனே போற்றி
பரமும் புவியும் பாதளம் யாவும்
பணியப்பெருமை பெற்றாய் போற்றி
சுத்தச்சுவி சேஷா போற்றி
தோன்றும் சபையின் துணைவாபோற்றி
சொல்லும் புகழுக் கேற்றாய் போற்றி
துங்கா புங்கா சங்கா போற்றி
யெத்திசை யோரும் ஈடேறிடவே
யிரட்சகனாக வந்தாய் போற்றி
யெனை மீண்டவனே யெனை யாண்டவனே
யேசுநாதா, போற்றி போற்றி.

பதவுரை:

சயமே-செயமே; நயம்-நன்மை, இனிமை; மயம்-நிறைவு, மகிழ்ச்சி, அழகு; தன் முன் ஒன்றும் இல்லாய். செ. முதலடிகளின் பொருளோடு ஒப்பிடுக;

பத்துரை வேதப் பொருளே-பக்தர்கள் உரைக்கும் வேதத்தின் பொருளே, பரமும் புவியும் பாதளமும் . . . பெருமை பெற்றுய்—மூவுலகத்துள்ளோரும், யாவும் உன்னைப் பணியும் பெருமை பெற்றுய்.

சுத்தச்சுவி சேடாகத் தோன்றும் சபை—சுத்தச் சுவிசேட லுத்தரன் சபையின் துணைவா; சொல்லும் புகழுக்கேற்றுய்—நாங்கள் சொல்லும் திருப்புகழுக்கு நீவிரே தகுதியும் உரிமையும் ஏற்புடையவர். ஒ.நோ. திருவெளிப்பாடு 5:12,13.

துங்கா—பெருமை பெற்றவரே. Dignity, your honour; புங்கா—தூயன்; சங்கா—மாபெருஞ் சேனைத் தலைவர்.

செய்யுள் 3

அடுத்துவரும் செய்யுட்கள் திருவெளிப்பாட்டு நூலின் சொல்லையும் பொருளையும் உட்கொண்டவை.

ஊழியும் முடியா தவனே சரணம்
ஒரு வெண்ணங்கி தரித்தாய் சரணம்
உயர்பொற் கச்சை அணிந்தாய் சரணம்
ஒளி யோன் பார்வைக் குயர்வாய் சரணம்
காழ்எரி வன்னிக் கண்ணை சரணம்
கனசல ஒலியின் தொனியா சரணம்
காயும் உலையின் சொகுசாவொத்த
காலாசீலா ஞாலா சரணம்
சூழ்ந்திருநற் கரமதிலேழு
சுடர் உடு ஏந்திக் கொண்டாய் சரணம்
சுற்றிய இரு புறமும் கூர் உளவாள்
தோன்றிய வாயா தூயா சரணம்
ஏழுவிளக்குத் தண்டா சரணம்
இணை பஞ்சுறை மிஞ்சகனே சரணம்
எனை மீண்டவனே யெனையாண்டவனே
ஏசுநாதா சரணஞ் சரணம்.

திருவெளிப்பாடு 1:12-16: ''என்னோடு பேசின குரல் யாருடையது என்று பார்க்கத் திரும்பினேன்; திரும்பியதும், ஏழு பொன் குத்து விளக்குகளையும், 13. அந்தக் குத்து விளக்குகளின் நடுவில் மனுமைந்தரைப் போன்ற ஒருவரையும் கண்டேன். அவர் நீண்ட அங்கி அணிந்திருந்தார்; மார்பில் பொற்கச்சை கட்டியிருந்தார். 14. அவர் தலைமுடியும் வெண் பஞ்சு போலவும், உறை பனி போலவும் வெண்மையாயிருந்தன. அவர் கண்கள் தீக் கொழுந்து போலிருந்தன. அவர் பாதங்கள் உலைக்களத்தில்

காய்ச்சப்பட்ட வெண்கலம் போலப் பளபளப்பாய் இருந்தன. அவரது குரலொலி பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போலிருந்தது. 16. அவர் தமது வலக்கையில் ஏழு விண்மீன்களை ஏந்திக் கொண்டிருந்தார். இருபுறமும் கூர்மையான வாள் ஒன்று அவர் வாயினின்று புறப்பட்டது. அவர் முகம் முழுப் பொலிவுடன் ஒளி வீசும் கதிரவனைப் போலிருந்தது.''

திருவெளிப்பாட்டாகமம், ஏதோ அவசரக் கோலத்தில் அள்ளிப் போட்டதோர் குவியல் என நினைத்தலாகாது. அதுவோர் (சொற் சிற்பியின்) பொருட்செறிந்த வேலைப்பாடுள்ளது.

உயிர் பெற்றெழுந்த கிறிஸ்துவின் உயர்ந்த நாமங்களைக் கூறுகின்றது. ஆறு சபைகளுக்கு எழுதவிருக்கும் கடிதங்களுக்கும் தோற்றுவாய் செய்கின்றது.

ஒப்புநோக்கு:

2:1; 2:8; 2:12; 2:18; 3:1; 3:7.

மறுபக்கத்தில், ப.ஏ.-இல் ஏகோவாவுக்குள்ள நாமங்கள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு ஏற்றப்பட்டன. *தானி. 7:9; எசே. 43:2;* யோபு *38:31;* ஏசாயா *44:6; 48:12.*

அடுத்து, இச்செய்யுளின் பொருள் காண்போம்.

அருஞ்சொற்பொருள்:

காழ் எரிவன்னிக் கண்ணு - வைரம் பாய்ந்த மரம் எரியும் நெருப்புப் போன்ற கண்களை உடையவரே. கனசல ஒலியின் தொனியா - பலதிறப்பட்ட நீரோட்டங்களின் ஒலிகள் போன்ற தொனிகள். கடவுளின் குரல்கள் யாவும் ஒரே சுரமாயிரா. கடலின் அலையோசை; இனிய மெல்லோசை (*1 இரா. 19:2*). யாழினிது குழலினிது என்ற இன்னோசை, இடியோசை போன்ற 'கனசல ஒலிகள்.' காயும் உலை, உலைக்களத்தில் காய்ச்சப்பட்ட வெண்கலம் போன்ற பளபளப்பு ('சொகுசா - அழகாக') ஆக இருந்தது. 'நற்கரமதில் ஏழு சுடர் உடு ஏந்தி' - வலக் கையில் ஏழு விண்மீன்களை ஏந்தி; 'இரு புறமுங் கூர் உள்ள வாள்' (*எபி. 4:12*). 'இணை பஞ்சுறை மிஞ்சகனே' - 'அவர் தலையும் முடியும் வெண்பஞ்சு' உறைபனிபோல வெண்மையாயிருந்தன.

செய்யுள் 4

முந்திய பிந்திய எந்தாய் போற்றி
முதலுங் கடையும் நீயே போற்றி
மூச்சுடர் ஒன்ரு மூர்த்தி போற்றி
மூன்ரு பின்ரு கொன்ரு போற்றி

சிந்த இறந்தும் எழுந்தாய் போற்றி
திரு நடுவிட இனம் வருவாய் போற்றி
தீ நரகமர ணங்களினுடைய
திறவு கோலைக் கொண்டாய் போற்றி
சுந்தரசீவ விருட்சக் கனியைச்
சுகமாய்த் தின்னத் தருவாய் போற்றி
சுற்றும் இரண்டா மரணம் வராமல்
துரிதாய்க் கிட்டிக் காப்பாய் போற்றி
யென்தை உவந்து உன் மகவாய் எனை நீ
யென்றும் ஏவல் கொள்வாய் போற்றி
யெனை மீண்டவனே யெனை யாண்டவனே
யேசுநாதா, போற்றி போற்றி.

அருஞ்சொற்பொருள்:

முன்னு, பின்னு, கொன்னு - முத்தியவர், பிந்தியவர், வலிமை யுடையவர். சிந்த இறந்தும் எழுந்தாய் - இரத்தம் சிந்த இறந் தாலும் நீ எழுந்துவிட்டாயே! திரு நடுவிட வினம் வருவாய் - நீதி யுள்ள தீர்ப்பைச் செய்ய இனிமேல் வருவாய்.

பொருள்—தெளிவு.

செய்யுள் 5

ஆருந்திறவாது அடைக்குஞ் சரணம்
அடைக்கா தெருவந் திறக்குஞ் சரணம்
அரசன் தவீதின் மைந்தா சரணம்
அன்னுன் திறவு கோலா சரணம்
நேரும் சத்திய நாதா சரணம்
நித்திய பரி சுத்தாவி சரணம்
நீதியின் உத்தம சாட்சி சரணம்
நிமலா விமலா அமலா சரணம்
சேரும் சிஷ்டிக் காதி சரணம்
சனனமனைத்துக்கு ஆமேன் சரணம்
திருவுளமே உன் தாளே சரணம்
தேவே கோவே பாவே சரணம்
ஏரும் திறமும் சயமும் புகழும்
என்று மென்றும் உளனே சரணம்
எனை மீண்டவனே எனை யாண்டவனே
ஏசுநாதா, சரணஞ் சரணம்.

திருவெளிப்பாடு 4:7 - 8—'தூய்மையானவரும் உண்மையான வரும் தாவீதின் திறவுகோலை உடையவரும் பூட்ட இயலாதபடி

திறந்துவிடுகிறவரும் திறக்க இயலாதபடி பூட்டிவிடுகிறவரும் சொல்லுகிறதாவது. . .'

திறவுகோலையுடையவர் அதிகாரமுடையவர் என்பதற்குக் குறியீடு (Symbol).

ஏசாயா 22:22—'தாவீதின் வீட்டின் திறவுகோலை உண்மையுள்ள எலியாக்கீமின் தோளில் வைப்பேன். அவன் பூட்டினதை யாராலும் திறக்க இயலாது; அவன் திறந்ததை யாராலும் பூட்ட இயலாது.'

அருஞ்சொற்பொருள்:

நிமலா - விமலா - அமலா - மலமற்றவன். ஏரும் திறமும் சயமும் புகழும் - அழகு, திறமை, செயம், புகழ்ச்சி.

பொருள்—தெளிவு.

செய்யுள் 6

அருமைக் குருவே திருவே போற்றி
அருவே உருவே தருவே போற்றி
அற்புத ஞானக் கடலே போற்றி
ஐயா மெய்யா துய்யா போற்றி
ஒருமெய்ப் பொருளே அருளே போற்றி
உச்சித உச்சித பட்சா போற்றி
ஓங்கிய வானத் தொருவா போற்றி
உன்னத உன்னத மன்னு போற்றி
பெருமைப் பரனின் மகனே போற்றி
பெரியாய் அரியாய் தெரியாய் போற்றி
பேசிய வேதத் துரையே போற்றி
பெந்தாய் எந்தாய் தந்தாய் போற்றி
இருமைப் போதும் நீயே போற்றி
இங்கும் அங்கும் எங்கும் போற்றி
யெனை மீண்டவனே யெனை யாண்டவனே
ஏசுநாதா, போற்றி போற்றி.

சொல்லமைப்பு:

அருமைக் குருவே திருவே
அருவே உருவே தருவே
ஐயா மெய்யா துய்யா
பெரியாய் அரியாய் தெரியாய்
பெந்தாய் எந்தாய் தந்தாய்
இங்கும் அங்கும் எங்கும்
மீண்டவனே ஆண்டவனே.

கூறியது கூறல்:

உச்சித உச்சித; உன்னத உன்னத; போற்றி போற்றி.
உரம் பெறச் செய்ததற்காக வற்புறுத்திக் கூறல்.

அருஞ்சொற்பொருள்:

உச்சித உச்சித - உன்னத உன்னத - உயர்வற உயர்ந்த - The Highest; ஓங்கிய வானத் தொருவா - ஓங்கி உயர்ந்த வானத்தில் உள்ள ஒரு தனிப் பொருளே; Transcendent and unique. பெந்தாய் - பந்துவின் மருஉ. இருமைப்போது: அம்மை; இம்மை - அவ்வுலகம், இவ்வுலகம்.

பொருள்—தெளிவு.

1. ஜெபமாலை 2. காண்டம் முதல் செபத்தில், பன்னிரண்டு இலக்க தோத்திரம் என்ற தலைப்பு, ஏழாவது செய்யுளில், ஏழு என்பதைச் சத்திய வேதத்தில் உள்ளதைப் பொதுவாகப் பாடிய வர், ஈண்டுத் திருவெளிப்பாட்டில் மட்டும் வந்துள்ளனவற்றைச் சிறப்பாகப் பாடுவதைக் காண்க:

செய்யுள் 7

ஏழ்உடு ஏந்திய கையா சரணம்
ஏழ் ஆவியையும் உடையாய் சரணம்
ஏழுவிளக்கின் இடையே சரணம்
ஏழ்மொழி குருசில் இசைத்தாய் சரணம்
ஏழு முத்திரை யாளா சரணம்
ஏழ் எக்காளத் தொனியா சரண்ம்
ஏழுகுமுறல் எழுதாய் சரணம்
ஏழுகோபக் கலியா சரணம்
ஏழுதூதர்க்கு இறையே சரணம்
ஏழாம் நாளின் தேவா சரணம்
ஏழு அப்பத்து அற்புதனே சரணம்
ஏழ்சாதியை முன்கொன்றாய் சரணம்
ஏழுசபையின் நிருபா சரணம்
ஏழ்மன்றுட்டைத் தருவாய் சரணம்
எனைமீட்டவனே எனையாண்டவனே
ஏசுநாதா, சரணஞ் சரணம்.

திருவெளிப்பாடு 2:1,8,12,18; 3:1,7,14.

ஏழ் உடு - ஏழு விண்மீன்கள். வெளி. 1:20; 2:1. ஏழ் ஆவி - வெளி. 3:1.

ஏழ் மொழி - குருசேறிய கிறிஸ்துவின் திருவேழ் மொழிகள்.

ஏழு அப்பம் - ஐந்து அப்பம் + இரண்டு மீன்கள் = 7 யோ. 6:9.

ஏழு மன்றுட்டு - பரமண்டல செபத்தின் 7 மன்றாட்டுகள்.

செய்யுள் 8

சருவேசுரனின் தேவாலயமாய்ச்
சமைத்தே எனக்குள் இருப்பாய் போற்றி
தயவாய் என்முன் ராப்போசனமே
தான் செய்தருள வருவாய் போற்றி
திறமாய்பரன் ஆலயம் விட்டேகாச்
செல்வித் தூண் என்றுக்கும் போற்றி
திருநகரின் பெயர் கடவுளரின் பெயர்
சேர்த்துன் பெயருந் தீட்டாய் போற்றி
நரன்என என்னைச் செய்தாய் போற்றி
ஞானமனைத்துந் தருவாய் போற்றி
நல்வழிகாட்டி நிற்பாய் போற்றி
நானே நீ யென்றெண்ணும் போற்றி
இருதய மீதில் பரிசுத்தாவியின்
எல்லா வரமும் ஈவாய் போற்றி
எனை மீண்டவனே எனையாண்டவனே
ஏசுநாதா, போற்றி போற்றி.

பொருள்:

என்னைக் கடவுளின் தேவாலயமாய்ப் படைத்து எனக்குள் இருப்பாயாக; என்முன் திருராப்போசனம் செய்தருள தயவாய் வருக;

பராபரனது ஆலயத்தை விட்டு வெளியேருதவாறு என்னைத் திறமான தூணாக்கியருள்க;

திருநகரின் பெயரையும் கடவுளின் பெயரையும் என் பெயரையும் சேர்த்து எழுதிவை;

என்னையோர் மனிதனுக்கினி நீ, எனக்கு ஞானம் அனைத்தையும் தருக; எனக்கு நல் வழிகாட்டியாக நில். நானே நீ என்று எண்ணும் என் இருதயத்தில் பரிசுத்தாவியின் எல்லா வரங்களையும் ஈந்தருள்க.

பல்லவி...

செய்யுள் 9

அளிப்பாய் உன்னோடு உன் ஆசனமே
அடியேன் உளுக்கார்ந்திருக்கச் சரணம்
அழகிய வெண்ணிலை அங்கியதிட்டே
அந்த ஆதிக்கும் சொல்வாய் சரணம்
ஒளிப்பிடம் மன்னுத் தருவாய் சரணம்
உயர்வெண் கல்லொன் றருள்வாய் சரணம்
ஒருவருமறியா நூதனநாமம்
ஒன்றிட்டென்னை அழைப்பாய் சரணம்
களிப்புடன் ஆளச் சாதிகள்மேலே
கனவதிகாரம் ஈவாய் சரணம்
கதிர் ஒளிவீசும் விடிவெள்ளியையுங்
காரணமாய்த் தருவாய் சரணம்
இனிப்பாய்ச் சீவ பொஸ்தகம் விட்டே
என்பெயர் கிறுக்கிப் போடாய் சரணம்
எனை மீண்டவனே எனையாண்டவனே
ஏசுநாதா, சரணஞ் சரணம்.

அருஞ்சொற்பொருள்:

உளுக்கார்ந்திருக்க-வேதநாயகர் காலத்து நாடோடிப் பேச்சு. உட்கார்ந்திருக்க. மலையாளிகள், 'இரு' என்றே சொல்வர்.

இதன் பொருளை அறிய திருவெளி. 2:7,17,26; 3:5,18,21ஐக் காண்க.

பொஸ்தகம் – புஸ்தகம், புத்தகம்.

செய்யுள் 10

விண்ணதின் வாழ்வைத் தருவாய் போற்றி
வினைபல நீக்கி விடுவாய் போற்றி
வேதனை நோயைத் தீர்ப்பாய் போற்றி
வேளையறிந்து வருவாய் போற்றி
மண்ணதின் வாழ்வும் பகுத்தாள் போற்றி
மன்முட்டேழுங் கொடுத்தாள் போற்றி
மரணமதளவுங் காப்பாய் போற்றி
மறுமையிலுன்பால் வைப்பாய் போற்றி
கண்ணறிவு ஒன்றுங் கழலது இரண்டும்
காயமது ஐந்தும் கருதாய் போற்றி
கவலைகள் மூன்றுங் கெடவிடு போற்றி
கதிப்பதன் நான்கும் பெறவருள் போற்றி

எண்ணின எண்ணம் முடிப்பாய் போற்றி
என்பவம் யாவும் பொறுப்பாய் போற்றி
எனை மீண்டவனே எனையாண்டவனே
யேசுநாதா, போற்றி.

பொருள்:

எனது வினைகளை நீக்கி, வேதனைகளையும் நோவுகளையும் போக்கி, சமய சஞ்சீவியாய் வந்து விண்ணுலக வாழ்வை எனக் கருள்க.

மண்ணுலக வாழ்வையும் பகுத்துப் பகிர்ந்து கொடுத்து, நீ கற்பித்த ஏழு மன்றாட்டுக்களையும் கொடுத்து என்னை ஆண்டருள்க. மரணம் வருமட்டும் காத்து, மறுமையில் என்னை உன் பக்கம் வைத்துக்கொள்.

அருஞ்சொற்பொருள்:

1. கண்ணறிவு - ஞானம்; 2. கழல் - கால்கள் இரண்டு; 3. கவலைகள் மூன்று; மண், பெண், பொன் ஆசைகள்; 4. கதிப்பதம் நான்கு: மோட்சப் பதவி: சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்.

எண்ணின எண்ணம் முடிப்பாய் - 11-வது செய்யுளில் குறிப்பிடப்போகிற என் எண்ணங்களை நிறைவுறச் செய்க.

செய்யுள் 11

எண்ணின எண்ணம் முடிப்பாய் போற்றி

திருநெல்வேலித் தேவசகாயன்
சேய்என•என்னைச் செய்தாய் சரணம்
சிறியனை வேத நாயகன் என்றே
சித்தத்தடிமை கொண்டாய் சரணம்
தருசெபமாலை முப்பத்தொன்றுந்
தயவாய் நித்தங் கேட்பாய் சரணம்
தாவீதருளுஞ் சங்கீதத்தைச்
சரியொத்து இதையுங் கொள்வாய் சரணம்
குருமறையோரும் பெரியவராரும்
கோயில்கள் தோறும் சொல்லச் சரணம்
குவலயமெல்லாம் நின்னைப் பாடிக்
கொண்டே வாழ்கப் பண்ணுஞ் சரணம்
எருசலை அதிபா ஒரு சருவேசா
என்று ஊழிக்கும் நின்றுள் சரணம்

என்னை மீண்டவனே யென்னை யாண்டவனே,
யேசுநாதா, சரணஞ் சரணம்,

அருஞ்சொற்பொருள்:

சேய் - மகன்; என்னைச் செய்தாய் - என்னைப் படைத்தாய்; குவலயம் - உலகம்; வாழ்க - வாழ.

பொருள்:

திருநெல்வேலியிலுள்ள தேவசகாயன் என்பாரது மகனுக என்னைப் படைத்தாய்; சிறியவனுகிய என்னை வேதநாயகன் என்று பெயரிட்டு உமது திருச்சித்தத்தின்படி உமக்கு அடிமையாக ஆட் கொண்டாய்.

இச்செபமாலை தருகின்ற முப்பத்தியொரு செபங்களையும் தய வாக நிதம் கேட்டருள்க. தாவீதரசன் பாடிய சங்கீதங்களை நீவீர் ஏற்றுக்கொண்டது போன்றே என் செபமாலையையும் ஏற்றுக் கொள்க.

குருமாரும் வேத நூல் பயில்வோரும் பெரியோரெல்லாரும் இச்செபமாலையைக் கோவில்கள் தோறும் சொல்லவும், உலக மெல்லாம் நின்னைப் பாடிக்கொண்டே வாழவும் அருள் புரியும்.

எருசலேமின் அதிபனே, ஒரு தனிச் சருவேசுரனே, உலக முடி வின் காலமட்டும் நின் திருவடிகளைப் பணிகின்றேன்.

என்னைப் பெயர் சொல்லியழைத்து உமது திருச்சித்தப்படி உமக்கு அடிமையாக்கிக்கொண்டீரே! யேசுநாதா, சரணம் சரணம்.

2. தேவ தோத்திரம்

விருத்தம்

1. அம்புவியனைத்தும் தாங்கி ஆண்டுகாத்து அளிக்கும் வல்ல
உம்பரும் பணிந்து போற்றும் ஒருவனே உவமையில்லா
நம்பரமனே நம்மேசு நாதனைத் திருரட்சிப்பின்
கொம்பினைத் தம்பமென்று கும்பிடுகின்றேன் நானே.

அருஞ்சொற்பொருள்:

அம்புவி - அழகிய உலகு; தாங்கி – சுமந்து, சுமைதாங்கி போன்று; உம்பர் - வானவர்; ஒருவனே - ஒப்பாரு மிக்காரு மில்லாத தனியொருவனே; தம்பம் - தூண், கொடிமரம், பற்றுக் கோடு. புவி - பூமி. இரட்சிப்பின் கொம்பு - புகலிடம்—சங். 18:2.

பொருள்:

அழகிய புவி அனைத்தையும் சுமந்து ஆண்டு காத்து அளிக்கும் வல்லவனே, வானவரும் பணிந்து போற்றும் ஒருவனே, ஒப்பாரு மிக்காரும் தமக்கு உவமை இல்லாத நம் பரமனே, நம்மேசு நாதனே, இரட்சிப்பின் கொம்பு என்று பெயர் பெற்றவனே, எனது பற்றுக் கோடு என்று நான் கும்பிடுகிறேன்.

2. சாத்திரத் திறமை யோனே, சமஸ்த வல்லவனே, யூதர்
கோத்திரத் தரசைத் தேவ குமாரனே, அளவில்லாத
நேத்திரக் கிருபையானே, நித்திய பிதாவை, மேலாஞ்
சூத்திர கிறிஸ்தையாவைத் தோத்திரிக்கிறேன் நானே.

அருஞ்சொற்பொருள்:

சாத்திரம் - சாஸ்திரம்; சமஸ்த வல்லவனே - எல்லாம் வல்ல வனே (Al-mighty, panto-crator). நேத்திரக் கிருபையானே - அருட் கண்ணுடையானே; மேலாஞ் சூத்திர கிறிஸ்து - மேலான தேவ ரகசியத்தை அறிந்து அறிவிக்கவந்த கிறிஸ்து.

நயவுரை:

யூதர் கோத்திரத் தரசைத் தேவகுமாரனே: (1) யூதர் கோத் திரம், (2) அரசு, (3) தேவ குமாரன் என்ற சொற்கள் இறை இயல் பொருட் செறிவு பொதிந்தவை.

1. யூதர் கோத்திரத்து – யூதர் குலத் தாவீதரசன் வழி வந்தவர்—இது அவரது மனித நிலை.

2. அரசன் - எல்லாம் வல்லவன்.

செ. 3-இல்: தவீது சிம்மாசனுதிபன் என்றும்.

செ. 4-இல்: சங்கையின் ராசா சாலேமின் ராசா, இங்கிதத் தவீது வேந்தை, இசரவேலாதிபன்

செ. 3-இல்: கிறிஸ்தேசு நசராதிபன் என்றெல்லாம் சொன்னவர்.

3. தேவகுமாரனே என்றுகொண்டு கூட்டிப் பாடியதிலோர் சாஸ்திர நயமுண்டு.

மாற்கு 12:35; 'மேசியா தாவீதின் மைந்தர்.'

2 தீமோத். 2:8; 'இயேசு கிறிஸ்து . . . இறந்தோரிடமிருந்து உயிரோடெழுப்பப்பட்டவர்; தாவீதின் மரபில் தோன்றினவர்...'

ரோமர் 1:5; 'அந்த மைந்தர், மனிதன் என்ற முறையில் தாவீதின் மரபில் வந்தவர்; அவரது ஆவியின் தூய நிலையைப் பொருத்தவரையில் அவர் கடவுளின் மைந்தர்.'

இவ் இரு நிலைகளையும் ஒன்று சேர்த்து: 'யூதர் கோத்திரத் தரசைத் தேவ குமாரனே' என்று தேவ தோத்திரம் பாடினர் கவிஞர்.

இப்பொருள் பொதிந்த பிறிதோர் நயங் காண்க - இயேசு கிறிஸ்து என்ற பெயரில், இயேசு என்பது காரண இடுகுறிப் பெயர்; கிறிஸ்து என்பது தொழிற் பெயர். Christos என்ற கிரேக்கச் சொல்லும், Masehiac என்ற எபிரேயப் பெயரும் அபிஷேகம் செய்யப்பட்டவர் எனப்படும். A functional Name.

இனி, C.L.S. Christian Lyrics என்ற நூலில், 105 எண் கொண்டது 'கும்பிடுகிறேன் நான்' என்ற கீர்த்தனை, இப்பதிகத்தின் இரு செய்யுட்களை மட்டும் காட்டுகிறது. 9 செய்யுட்களை முழுவதும் விட்டுவிட்டது. 'தோத்திரிக்கிறேன்' என்ற செய்யுட்களை விலக்கிவிட்டது.

நாம் இப்பதிகத்தின் பதினெரு செய்யுட்களையும் எடுத்து உரை கண்டோம்.

தேவ தோத்திரப் பதிகத்தின் அமைப்பும் பொருளும்

சாத்திரத்தைத் தோத்திரமாகப் பாடுவது அவர் மேற் கொண்ட உத்தி.

'சாத்திரத் திறமையோனே' (விருத்தம் 2) 'சாத்திர விதத்துடனே கும்பிடுகிறேன். தாவீது சங்கீர்த்தனங்கள் சொல்லிக் கும்பிடுகிறேன்' என்று தம் இறுதிச் செய்யுள் 11-இல் கூறி முடித்தார் இப்பதிகத்தை.

விருத்தப்பாவில், 'அம்புவி அனைத்தும் தாங்கி ஆண்டு காத்தும் அளிக்கும்' வல்லான் ஒருவனைப் பொதுவாகக் கும்பிட்டு, முதற் செய்யுளில்:

'அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன்—எனை
ஆண்டவனை மீண்டவனைக் கும்பிடுகிறேன்

எனச் சொல்லித் தொடங்குகின்றார். இவ்வாறு ஆறு செய்யுட்களையும், 'தோத்திரிக்கிறேன்' என்று ஐந்து செய்யுட்களையும் பாடி முடித்தார்.

உலகப் படைப்பில் தொடங்கி, 2–5-இல் பிதாவையும், 6–10-இல் பிதா மகனை, பந்தமுறப்பட்டவனைக் கும்பிட்டு, 11-இல் தோத்திரம் தோத்திரமென்று கும்பிடுகிறார்.

பல்லவி

கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன் எங்கள்
குருவேசுநாதர் பதம் கும்பிடுகிறேன்.

இந்த இரண்டடிகளில் 'கும்பிடுகிறேன்' என்று மும்முறை சொன்னார். இனிவரும் பதினெரு சரணங்கள் ஒவ்வொன்றிலும் இச்சொல்லை ஆறு முறை சொல்லி—ஏனைய ஐந்தில் 'தோத்திரிக்கிறேன்' எனச் சொல்லிப் பதிகத்தை முடித்தார்.

'கும்பிடுகிறேன் நான்' என்று தன்மை ஒருமையில் தொடங்கி, 'எங்கள்' குருவேசுநாதர் - என்று பன்மையிற் சொன்னார். ஜெபமாலைப் பாடல்கள் கூட்டு வழிபாடுகளில் பாடவேண்டியவை. அதில் தனி நபர்கள் குழுவினரோடு இணைந்து பிணைந்து பாடுதல் வேண்டும் என்ற வரையறையைக் குறிப்பிட்டார்.

சரணங்கள்

1. அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன்—எனை
ஆண்டவனை மீண்டவனைக் கும்பிடுகிறேன்
நம்பும் அடியார்க்கு அருளைக் கும்பிடுகிறேன்—பவ
நாசனைக் கிருபாசனைக் கும்பிடுகிறேன்
தம்பமெனக் கானவனைக் கும்பிடுகிறேன்—நித்திய
சருவ தயாபரனைக் கும்பிடுகிறேன்
உம்பர் தொழும் வஸ்துவையே கும்பிடுகிறேன்—தொனித்து
ஓசன்ன, ஓசன்ன என்று கும்பிடுகிறேன். —கும்

அருஞ்சொற்பொருள்:

அம்புவி படைத்தவனே - நாம் நல்லது, அழகியது எனச் சொல்லி இப்பூவுலகைப் படைத்தவனே; தம்பம் எனக்கானவனே; தம்பம் - ஸ்தம்பம், தூண், Pillar. தூண்போல எனக்கு உற்ற துணையானவனே; உம்பர் - வானுலகிலுள்ள தேவ தூதர். ஓசன்னா - யூத மக்கள் கடவுளைப் புகழும்போது ஒலித்த ஆரவாரச் சொல்.

குருவேசுநாதர்: தமிழ்ப் பக்தி இலக்கியத்தில் அருள் என்பது திருவருள் என்றும், குருவருள் என்றும் இரண்டு நிலைகளாகக் கூறப்படுகின்றது. திருஅருள் - கடவுள் நேர்முகமாக அருள்வது; குரு அருள் - கடவுள் குரு வடிவில் தோன்றி அருள்வது. இங்கு தம்மைக் குருவடிவில் வந்து ஆண்டவனே மீண்டவனைக் 'குருவேசு நாதர்' என்றார் வேதநாயகர்.

பொருள்:

இவ் அழகிய பூவுலகைப் படைத்தவனே, என்னைத் தடுத்தாட் கொண்டு மீட்டவனே, அவரை நம்பும் அடியவர்க்கு அருள் பாலிப்பவனே, என் பாவ நாசனே, நீதிமன்றத்திலன்று, கிருபை ஆசனத்தில் வீற்றிருப்பவனே, என்னைத் தூண்போல நின்று தாங்கியவனே, நித்தியமும் எல்லாத் தயவுமுடைய பராபரனே, வானவர் வணங்கும் வஸ்துவைக் கும்பிட்டு, 'ஓசன்னா ஓசன்னா' என்று பல்லாண்டு பாடிப் புகழ்ந்து கும்பிடுகிறேன்.

பல்லவி

2. தோத்திரிக்கிறேனுன் நான் தோத்திரிக்கிறேன்—தேவ
சுந்தரக் கிறிஸ்து வேந்தைத் தோத்திரிக்கிறேன்.

பொருள்:

தேவனும், அழகிய கிறிஸ்து என்னும் அரசனுமானவரை தோத்திரிக்கிறேன் என்றார் பக்தர்.

சேத்திரத்து ஒரே யேயாவைத் தோத்திரிக்கிறேன்—கன
திவ்விய திரித்துவத்தைத் தோத்திரிக்கிறேன்
பாத்திரமாக்கிக் கொண்டோனைத் தோத்திரிக்கிறேன்—உயர்
பரமண்டல அதிபனைத் தோத்திரிக்கிறேன்
நேத்திரக் கிருபா நதியைத் தோத்திரிக்கிறேன்
நித்திய மகத்துவத்தைத் தோத்திரிக்கிறேன்
கோத்திரத்து இசுருவேலைத் தோத்திரிக்கிறேன்
கொற்றவனைப் பெற்றவளைத் தோத்திரிக்கிறேன்—தோத்

அருஞ்சொற்பொருள்:

சேத்திரம் - க்ஷேத்திரம், புண்ணிய ஸ்தலம்; யேயோவா - ஏகோவா; பாத்திரம் - தகுதி; நேத்திரம் - கண்; கோத்திரத்து இசுருவேல் - இஸ்ரவேல் கோத்திரத்தானே; கொற்றவனே - அரசனே, இஸ்ரவேலரின் அரசனே.

பொருள் — தெளிவு.

3. ஒரு சருவேசுரனைக் கும்பிடுகிறேன்—ஒன்றும்
ஒப்பதில்லா மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்
திரு உருவானவனைக் கும்பிடுகிறேன்—தவீது
சிம்மாசனுதிபனைக் கும்பிடுகிறேன்
குருவென வந்தவனைக் கும்பிடுகிறேன்—யூதர்
குல குல தேவதையைக் கும்பிடுகிறேன்
அருமை இரட்சகனைக் கும்பிடுகிறேன்—எனது
ஆற்றும நேசர்தனைக் கும்பிடுகிறேன் —கும்பி

அருஞ்சொற்பொருள்:

ஒரு என்ற சொல்லை, 'ஒன்றும் ஒப்பதில்லா. . .' என்று விளக்கினர்; குலதேவதை - குலதெய்வத்தை; ஆற்றும - ஆத்தும.

4. மனு உருவானவனைத் தோத்திரிக்கிறேன்—மோட்ச
வாசலைத் திறந்தவனைத் தோத்திரிக்கிறேன்
கனிவினை தீர்த்தவனைத் தோத்திரிக்கிறேன்—யூதர்
காவலனை ஆவலுடன் தோத்திரிக்கிறேன்
அனைமனு மைந்தனையே தோத்திரிக்கிறேன்—மே
சையாவை மெய்யாகத் தோத்திரிக்கிறேன்
எனை இரட் சித்தவனைத் தோத்திரிக்கிறேன்—கிறிஸ்
தேசு நசராதிபனைத் தோத்திரிக்கிறேன்.

அருஞ்சொற்பொருள்:

மோட்ச வாசலைத் திறந்தவன் - அடைக்கப்பட்ட பரதீசின் வாசலைத் திறந்தவன்; அனை மனுமைந்தன் - அன்னை மரி மகன்.

5. சங்கையின் ராசாவைக் கும்பிடுகிறேன்—உயர்
சாலேமின் ராசாவைக் கும்பிடுகிறேன்
இங்கிதத் தவிது வேந்தைக் கும்பிடுகிறேன்—சொந்த
இசறேலாதிபனைக் கும்பிடுகிறேன்
மங்களங்கள் பாடிப் பாடிக் கும்பிடுகிறேன்—இம்
மானுவேலை வேலையாகக் கும்பிடுகிறேன்
பங்கமறப் பங்கமறக் கும்பிடுகிறேன்—ஞானப்
பத்தாவைக் கத்தாவைக் கும்பிடுகிறேன்.

ராசா ராசா; பாடிப்பாடி; வேலை வேலை; பங்கமற பங்கமற என்று இரட்டித்ததிலோர் கவி நயம் காண்க. இத்தகு நயத்தைப் பதிஞ்ஞெரு செய்யுட்களிலும் காண்க.

6. வித்தகனே உத்தமனைத் தோத்திரிக்கிறேன்—கன
விற்பனனே உற்பனனைத் தோத்திரிக்கிறேன்
நித்தியப் பிதாமகனைத் தோத்திரிக்கிறேன்—யேசு
நிச்சயனே அச்சயனைத் தோத்திரிக்கிறேன்
சத்தியவேதத்து ஒளியைத் தோத்திரிக்கிறேன்—ஏசு
சக்கராதி பதிதனைத் தோத்திரிக்கிறேன்
துத்தியந் துத்தியமென்று தோத்திரிக்கிறேன்—சுப
சோபனங்கள் சொல்லிக்கொண்டு தோத்தி. . . —தோத்

அருஞ்சொற்பொருள்:

சோபனங்கள் – திருமண மங்கலப் பாடல்கள்.

பொருள் — தெளிவு.

7. ஆச்சரியமானவனைக் கும்பிடுகிறேன்—பர
மானந்த மெய்ச் சுடரைக் கும்பிடுகிறேன்
தீட்சை தந்து சேர்த்தவனைக் கும்பிடுகிறேன்—ஞானத்
திரவியம் ஈந்தவனைக் கும்பிடுகிறேன்
காட்சி தரும் பாதனைக் கும்பிடுகிறேன்—இரு
கண்ணிலுங் கண்ணுனவனைக் கும்பிடுகிறேன்
சூட்சவழி காட்டியவனைக் கும்பிடுகிறேன்—குருச்
சொன்னவனே முன்னவனைக் கும்பிடுகிறேன். —கும்பிடு

அருஞ்சொற்பொருள்:

பரமானந்த மெய்ச் சுடர் - மேற்பாட்டில் 'சத்திய வேதத்து ஒளி' என்றார். தீட்சை தந்து - ஞான முழுக்கு; ஞான திரவியம் - 1. திருமுழுக்கு, 2. திருவிருந்து.

பொருள்:

சூட்ச வழிகாட்டியவனே. . . குருச் சொன்னவனே முன்னவனைக் கும்பி. . . - சூட்சவழியைக் காட்டிச் சொன்ன குருவை கும்பிடுகிறேன்.

8. அண்டர்களின் நாயகனைத் தோத்திரிக்கிறேன்—அதற்கு
அப்புறத்தை அப்புறத்தைத் தோத்திரிக்கிறேன்
மண்டலமெலாம் அறியத் தோத்திரிக்கிறேன்—முழு
வானவரும் பார்த்து நிற்கத் தோத்திரிக்கிறேன்
தெண்டனிட்டுத் தெண்டனிட்டுத் தோத்திரிக்கிறேன்

மனச் சிந்தையிஞல் விந்தையிஞல் தோத்திரிக்கிறேன்
தொண்டன் அடியேனென்று தோத்திரிக்கிறேன்—என்றன்
துன்பமெலாந் தீருமென்று தோத்திரிக்கிறேன். —தோத்

அருஞ்சொற்பொருள்:

அண்டர்களின் நாயகன் - வானுலகத் தேவதூதர்களின் தலைவன்; அப்புறத்தை அப்புறத்தை - அப்பாலைக்கப்பாலை - The Beyond of the Beyond, The Transcendent; மண்டலம் - மண் + தலம் - இவ்வுலகம், அப்புறத்துக்கு மறு தலையான இப் புறம்.

'தெண்டனிட்டுத் தெண்டனிட்டுத் தோத்திரிக்கிறேன்
தொண்டன் அடியேன் என்று தோத்திரிக்கிறேன்.'

இப்பாடலில் வந்துள்ள சொற்களை ஏதோ கவிஞரது சொல் விளையாடல் என்று விட்டுவிடலாகாது.

தெண்டன் - (1) வணக்கம் (2) வணங்குகிறவன்.
தண்டி - ஒறுத்தல், தண்டித்தல்.
தண்டனிடுதல் - தரையில் விழுந்து வணங்குதல்.

தோப்புக்கரணம் - கைகளால் காதுகளை மாறிப் பிடித்துக் கொண்டு பலதடவை உட்கார்ந்து எழுந்திருக்கும் தண்டனை.

தொண்டன் அடியேன் என்று தோத்திரிக்கிறேன்.

இத்தகைய சொற்களில், வேதநாயகருடைய சொல்லாட்சி களின் பின்புலத்தில் ஓர் அரிய, தமிழ் நாட்டுக்கே உரியதோர் வழக்காறு உளதென்று காட்டுவோம். 'தொண்டன் அடியேன்' என்றும், 'அண்டர்களின் நாயகன்' என்று கவிஞர் ஒரே செய்யுளில் இணைத்துக் கூறிய தில் 'ஆண்டான்—அடிமைத் தொடர்பு' இருப்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது.

[This is a vivid and concrete painting drawn from the details of the secular social life transformed into a religious worship peculiar to Tamil Nadu. இத்தொடர்பை, I—Thou, நீ—நான் என்ற முறையில் Martin Buber என்ற ஜெர்மன் யூதர் எழுதி யுள்ளார்.]

'தெண்டனிட்டுத் தெண்டனிட்டு' என்று ஒரு சொல்லை இரு முறை சொன்னது ஒரு நடைமுறையை உட்கொண்டது. குற்றம் செய்த பணியாளை ஆண்டவன் தண்டிக்கும் பல முறைகளில் இதுவு மொன்று. 'போடு தோப்புக்கண்டம்' என்றால், 'எண்ணிக்கோ, சாமி' என்று சொல்லிப் பன்முறை போடுவான். ஆண்டான் 'போதும்' என்று சொல்லுமட்டும் போடுவான். 'போதும்'

என்றதைக் கேட்டவன், 'என்றன் துன்பமெல்லாம் தீர்த்தென்று, ஆண்டானைத் தோத்திரிப்பான்.'

இவ்வுலக வாழ்க்கை நடைமுறையை மனத்திற்கொண்டு இறைவனுக்கும் பக்தனுக்கும் உள்ள தொடர்பைத் தனதாகக்கொண்டு இத் தேவ தோத்திரத்தை, ஏசு நாயகனின் அடியான் வேத நாயகன் பாடினன் என்க.

அடுத்தச் செய்யுளில்:

'சந்ததமுஞ் சந்ததமுங் கும்பிடுகிறேன்—நின்று
சாஷ்டாங்கத் தெண்டன் பண்ணிக் கும்பிடுகிறேன்'
என்றார் ஆண்டவரின் அடியார்.

அருஞ்சொற்பொருள்:

சாஷ்டாங்கத் தெண்டன் - சா - அஷ்ட - அங்கத் தெண்டன் - உடலுறுப்புகளில் எட்டும் தரை மண்ணில் படும்படியாக விழுந்து வணங்குதலாகும். நின்று - பண்ணி - கும்பிடுகிறேன் என்றதின் பொருள் இது. This is absolute and abject surrender of the slave to the Lord.

இருபதாம் நூற்றாண்டில் உள்ள கிறிஸ்தவ அடியார் இவ்வாறு பணிந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வார்களோ? அவ்வாறு செய்பவர்களை எள்ளி நகையாடுவார்களோ?

8. வேதநாயகர் சொல் + பொருள், அருணகிரியார் பிள்ளையார் வணக்கம் என்ற பாடலோடு ஒரளவு ஒப்புநோக்குவோம்.

1. வேதநாயகர்: செபமாலை 2:8.

'தெண்டனிட்டுத் தெண்டனிட்டுத் தோத்திரிக்கிறேன்
மனச் சிந்தையினால் விந்தையினால் தோத்திரிக்கிறேன்
தொண்டன் அடியேன் என்று தோத்திரிக்கிறேன்—என்றன்
துன்பமெல்லாந் தீருமென்று தோத்திரிக்கிறேன்.'

அருணகிரியார்—பிள்ளையார் வணக்கம்

'கரிமுக ஒற்றை மருப்பினை வலமாக
மருவு மலர்புனை தோத்திர சொற்கொடு
வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு
வசை பரிபுர பொற்பத அர்ச்சனை மறவேனே.'

அருணகிரியார், யானைமுக ஒற்றைக் கொம்புடைய பிள்ளையாரை வலம் வந்து, வாச மலர் புனைந்து தோத்திரச் சொற்கள் கொண்டு, இலைகளை கையிற் பிடித்து, தோப்புக்கண்டம் போட்டு, தலையிற்குட்டிக்கொண்டு, தாமரை மலர்கொண்டு நின் பொற்பத அர்ச்சனை (தொழுகை) மறவேனே என்றார்.

ஒப்புநோக்கு:

மலர் - செபமாலை; தோத்திர சொற்கொடு - தோத்திரிக்கிறேன் என்ற சொல்லைக்கொண்டு; தொப்பண - தோப்புக்கண்டம் - தெண்டனிட்டு; அர்ச்சனை மறவேனே - தோத்திரிக்கிறேன். வலம் வருதல், குழை பிடித்தல், குட்டிக்கொள்ளுதல் என்பனவற்றை வேதநாயகர் இவண் சுட்டவில்லை.

9. அவ்வாறு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யப்பட்ட ஆண்டவன் யார் என்பதை இச் செய்யுள் பட்டியலிட்டுப் பாடுகிறது.

அவன் 'கனபாடுகள் பட்ட ஆண்டவன்; சிறைப்பட்டுக் கயறுகளால் கட்டப்பட்டு நிந்தையுற்ற கர்த்தன். அவன் திருவடியில் வீழ்ந்து நான் கும்பிடுகிறேன்.

பெரிய வெள்ளிக்கிழமை, அன்று நீடிய குருசேறினவனை, சிலுவையில் ஐந்து திருக்காயங்களைப் பட்டவனைக் கும்பிடுகிறேன்—ஏன்?

இவ்வளவும் அவர் எனக்காக உயிர்விட்டவர். இதன் காரணமாகத்தான் நான் தெண்டன் பண்ணிக் கும்பிடுகிறேன்.

இனிச் செய்யுளைக் காண்போம்:

பந்தமுறப்பட்டவனைக் கும்பிடுகிறேன்—கனப்
பாடுபட்ட ஆண்டவனைக் கும்பிடுகிறேன்
நிந்தையுற்ற கத்தர்பதம் கும்பிடுகிறேன்—அன்று
நெடுங்குருசேறினவனைக் கும்பிடுகிறேன்
ஐந்து திருக் காயனைக் காயனைக் கும்பிடுகிறேன்—எனக்
காக உயிர்விட்டவனைக் கும்பிடுகிறேன்
சந்ததமுஞ் சந்ததமுங் கும்பிடுகிறேன்
சாஷ்டாங்கத் தெண்டன் பண்ணிக் கும்பிடுகிறேன்.

அருஞ்சொற்பொருள்:

கத்தர் பதம் – கர்த்தர் காலில் வீழ்ந்து; குருசேறினனை - குருஸ் - Cross - சிலுவை - சிலுவா குருசேறினவனை; ஐந்து திருக்காயனை - ஐந்து காயங்கள் பட்டவனை.

10. சாவழித்து உயிர்த்தவனைத் தோத்தி—பேயின்
தலையை மிதித்தவனைத் தோத்திரிக்கிறேன்
சிவனெடெழுந்தவனைத் தோத்திரிக்கிறேன்—எங்கள்
தேவாதி தேவனைத் தோத்திரிக்கிறேன்
மேவிய பரப்பொருளைத் தோத்திரிக்கிறேன்—விண்ணின்
மேல் எழுந்திருந்தவனைத் தோத்திரிக்கிறேன்

ஆவலுடன் ஆவலுடன் தோத்திரிக்கிறேன்—நடு
அன்று இடும் ஞாயாதிபனைத் தோத்திரிக்கிறேன்—தோத்.

பொருள்:

பேயின் தலையை மிதித்து, சாவை அழித்து உயிரோடெழுந்த வனே, தேவாதி தேவனே, பரப் பொருளே, விண்ணுலகத்திற்கு ஏறினவனே, கடைசி நீதித் தீர்ப்பிடும் நீதிபதியை, ஆவலுடன், ஆம், ஆவலுடன் தோத்திரிக்கிறேன்.

11. காத்திரப் பராபரனைக் கும்பிடுகிறேன்—என்றன்
கண்மணியை விண்மணியைக் கும்பிடுகிறேன்
தோத்திரந் தோத்திரமென்று கும்பிடுகிறேன்—சுத்த
சுவிசேட போதகனைக் கும்பிடுகிறேன்
நாற்றிசையும் நோக்கிநின்று கும்பிடுகிறேன்—வேத
நாயகனின் பாட்டனைக் கும்பிடுகிறேன்
சாத்திரவிதத்துடனே கும்பிடுகிறேன்—தவிது
சங்கீர்த்தனங்கள் சொல்லிக் கும்பிடுகிறேன்—கும்

அருஞ்சொற்பொருள்:

காத்திரப் பராபரன் – வல்லமையுள்ள பராபரன்; என்றன் கண்மணியை விண்மணியை - கண்மணி, அபரத்தையும் விண்மணி பரத்தையும், ஆகப் பராபரனைக் குறித்ததென்க. தோத்திரந் தோத்திரம் - உணர்ச்சி மிகுதியால் இரட்டிற்று. சுத்த சுவிசேட போதகன் - சுத்த சுவிசேடம் - கலப்பற்ற நற்செய்தி - கலப்பற்ற நல்லெண்ணெய். 'வேத நாயகன் பாட்டனை.' வேதநாயகன் பாட்டுக்கிலக்கானவன். சாத்திர...கும்பிடுகிறேன் - தாவீதரசனின் சங்கீர்த்தனங்களைச் சாத்திர வகைகளிற் சொல்லிக் கும்பிடுகிறேன் என்று இப்பதிகத்தை முடித்தார் கவிபக்தர்.

3. ஓம் பிரணவம் — இருக்கிறேம்

யாத்திராகமம் 3:14; திருவெளிப்பாடு 1:8

செய்யுள் 1

பொன்உலகு உச்சிதப் புகழ்ச்சி ஓம் நமா
பூரண காரணப் புதுமை ஓம் நமா
தன்னிகரொன்றிலாத் தாதை ஓம் நமா
தற்பரமெய்ப்பர சயம்பது ஓம் நமா
இந்நிலம் புரக்கும் இரட்சிப்பு ஓம் நமா
இசறவேலதிபதி யேசு ஓம் நமா
நன்னிலை இருக்கிறேம் ஓகோம் நமோ நமோ
நாயனு ஓசனு நமஸ்தன் ஆதியே.

அருஞ்சொற்பொருள்:

பொன்னுலகு – வானுலகம்; உச்சிதப் புகழ்ச்சி - மிக உயர்ந்த புகழ்ச்சி (In Excelcies Gloria); பூரண காரணப் புதுமை; பூரணப் புதுமை, காரணப் புதுமை - உலகப் படைப்புப்பரிபூரணப் புதுமை = World creation is a perfect miracle. சயம்பது – சுயம். அது= சுவயம்+பு = தான்தோன்றி; நன்னிலை = நல்ல நிலை. இருக்கிறேம். இரு - (க்கி-ற-) ஓம் = இருக்கிறவராக இருக்கிறேம்.

•

I-AM—THAT—I-AM.

நாயனு ஓசனு நமஸ்து அனுதியே: இச்சொற்றொடரில் மூன்று வட சொற்களோடு 'ஓசன்னு' என்ற எபிரேயச் சொல்லைப் புகுத்தி, அதை 'ஓசனு' எனத் திருத்தி, னு, னு, னு என்ற ஒலிக் குறிப்புச் சொற்களைப் பயின்று தம் கவிதைப் பணியால் ஒற்றுமை காட்டினர் கவிஞர்.

(Modern linguists will call this poetic feat a Phonological and laxical Stylisties.)

முழுப்பதிகத்திற்கும் இவ் ஈற்றடிகள் இரண்டும் பல்லவியாக (Refrain) நின்றன.

According to the Reader's Dictionary: "A new world came into Be-ing: existence, reality, actuality, life, subsistence." But in the Bible, 'Being' refers to the Being of God Himself. Be-ing, 'Be' is the divine attribute to God, not so much for the world. The world came into being by the sovereign will of God.

According to W. F. Albright, quoted in the Jerome's Commentary: "The enigmatic formula in Exodus 3:14 which in Biblical Hebrew means:

I AM what I AM
Yahweh asher yihyah
"He causes to be what comes into existence."

Ungar's Commentary on the O. T. says: "Exodus 3:13-14: Revelation of the Name of God, Yahweh: Exodus 3:14. "God revealed his name to the enquiring deliverer as I AM THAT I AM. This was a revelation of the external Creator and consumator of redemption. The Name is derived from the Hebrew haayaa (to be); "He who was, is and shall be. He is; "I was who I was", "I am who I am" and "I shall be who I shall be." All these translations are possible in the original to describe the eternally existing One, "who is, and who was, and who is to come, the Almighty (Rev. 1:8).

That the Poet Vedanayahar who lived in the 19th century and naturally had no access to the latest researches in the 20th century, could combine the two texts in Genesis and the book of Revelation is to be admired for his biblical erudition, spiritual insight and poetic expression.

The syllable OM

Dr. Amiya Chakravarthy, Professor in the Madras University quotes a **mantra** from the Gayatri **mantra**, defining it as "the embodiment of god in sound." The Brahmin celebrates the glory of the deity with a mantra a holy text which is the embodiment of god in sound. "Om, bhur bhuvah svah."

Om bhur bhuva svah
tat savitur varenyam bhargo
devasya dimahi
deo yo nah prachodayat. **Om.**

This Vedic prayer- called Gayatri, the Saviour of the singer, invokes the power of god and is imparted to the initiate during the sacred thread ceremony (Poonool kalyanam). Worshippers chant it many times a day. The syllable Om signifies the rounded wholeness of Brahman."

Quoted from Great Religions of the World, p. 47. National Geographic Society.

Peake's One Volume Commentary: The Name YHWH.

"The name was indicative of character. The Israelite's question is thus a very practical one. It is equivalent to, 'who, of what nature, with what power, is this God?' And unless Moses can explain or answer the question, he will be able to convince his fellow hebrews that an objective reality lay behind the experience given him at the Bush. According to Egyptian ideas, each god had several names. But his real name he kept a secret. Thus it would not be enough for Moses simply to say, 'the God of the Fathers' or 'the god of the hebrews'.

(*a*) The name Yahweh is connected with the Hebrew root **hayah** or **haway**, to be. Also in the Bible there are the contracted Yahu, Yo, Yau, Yah. The conception of God throughout the OT rules out any idea of abstract metaphysical being in the sense of the Greeks . . . b. 'He who causes to be', the Creator. So recently Albright, denies that such a conception is too much advanced for the time of Moses, and adduces parallels from Babylon. Egypt and Canaan. c. He who will be what he will be', the living god, the god who will guide history and who would reveal himself to his people continuously in their ever changing experience. He promises to be with Moses: so he will be with them And, since he is himself changeless, and faithful to his nature, they will find him there in every situation, and adequate to it. 'God sets his signature to it that he will remain true to himself in his disposition, his purposes and his promises.' (Baentsch). d. Buber quotes Duhm: 'possibly the name is in some degree only an extension of the word **hu**, meaning 'He', as God is called by other Arabic tribes at the time of religious revival—the one, the Un-Nameable' . . . The exclamation was its hiddden form; the verb is its revelation.'

Recently R. A. Barclay has asked (The Origin of the Name "YAHW" (Transactions of the Glasgow University Oriental Society XV (1955), 44-47), whether there may be a connection between the original form of the name and the sacred syllable of the Aryans, the om, used in invocation of their deities. 'A Moses at the court of Pahroh may once have heard the mystic syllable, or a Moses at a Midianite priest's may have heard from the Midianite traders of the Mittani word, which was uttered before the gods were mentioned but which was not the name of a god.'

After the exile, for motives of reverence based upon Exod. 20:7 and Lev. 24:16 the jews ceased to pronounce the Tetragrammaton, YHWH. When it occurred they read 'Adhonai, Lord. Later, the Massoretes attached the vowels of this word to the consonants of the unpronounceable Name. This gave rise to the medieval form Jehovah, and the true pronounciation was lost."

செய்யுள் 2

அந்தம் ஆதியுமிலா ஆமேன் ஓம் நமா
அனைத்தையும் தாங்கும் அந்தாதி ஓம் நமா
சிந்தனைக்கடந்தவான் தெருட்சி ஓம் நமா
சேனையின் கர்த்தன் ஓம் திரித்துவம் ஓம் நமா
மைந்தனைத் தந்த ஆசனத்தன் ஓம் நமா
மானிட சொரூபமா சேனன் ஓம் நமா
நந்தன் ஓம் இருக்கிறோம் ஓகோம் நமா நமா
நயனு ஓசனு நமஸ் தனுதியே.

அருஞ்சொற்பொருள்:

ஆமேன் ஓம் நமா: ஆமேன் = எபிரேயச் சொல் - அப்படியே ஆகட்டும் என்பது பொருள். சுப்பிரமணிய பாரதியார், 'ஆம், ஓம்' என்ற சொற்கள் 'ஒருபொருள் உடையவை' என்றார். மாசேனன் - பெரிய சேனையை உடையவர், தேவ சேனுபதி; நந்தன் ஓம் - நாம் தான் ஓம் ஆக இருக்கிறோம்.

செய்யுள் 3

துங்க வானவர் தொழும் சோதி ஓம் நமா
துல்லிய ஞானம் ஓம் தூய்மை ஓம் நமா
மங்கள சோபன மகிழ்ச்சி ஓம் நமா
மாசில்லா உன்னத வஸ்து ஓம் நமா

சங்கையின் அரசன்ஓம் தகமை ஓம் நமா
சத்திய உத்தம சாட்சி ஓம் நமா
நன்கு ஓம் இருக்கிரேம் ஓகோம் நமா
நாயனு ஓசனு நமஸ்தன் ஆதியே.

அருஞ்சொற்பொருள்:

'ஓம்' பத்து முறை ஈண்டு வந்துள்ளது. மங்கள சோபன மகிழ்ச்சி: திருமண மகிழ்ச்சி ஈண்டும் கொண்டாட்டு, திருச்சபை யூஞ்சல் பாடல்களில் வருவதைப் பின்னர்க் காண்போம்.

செய்யுள் 4

அடிமை கொண்டாண்ட அற்புதத்தன் ஓம் நமா
அளவிட முடிவிலா ஆரணத்தன் ஓம் நமா
படும் வினைதவிர்க்கும் மெய்பரத்துவம் ஓம் நமா
பாசமேமிகும் முழுப்பட்சம் ஓம் நமா
கொடுமையதொன்றிலாக் குணபத்திர ஓம் நமா
கூறும் இரட்சிப்பின் கொம்பு அது ஓம் நமா
நடுவன் ஓம் இருக்கிரேம் ஓகோம் நமோ நமோ
நாயனு ஓசனு நமஸ்தனுதியே.

பொருள்:

என்னை அடிமையாகத் தடுத்தாட்கொண்ட அற்புதம் செய்தவன்; அளவும் முடிவுமில்லாத வேதத்தைக் கொடுத்தவன்; நான் படும் வினைகளைத் தவிர்க்கும் மெய்ப்பரத்துவன்; மிகுந்த பாசமும் முழுப்பட்சமும் உடையவன். கொடுமையொன்றுமில்லாத குணவான்; எனக்குப் புகலிடமான இரட்சிப்பின் கொம்பு — சங். 18:12 பப்ரீசியுசின் மொழிபெயர்ப்பு.

செய்யுள் 5

வரமிகும் நன் மண வாளன் ஓம் நமா
வார்த்தையாயிருந்த மத்தியஸ்தன் ஓம் நமா
தீர மிகுந்த தவிது செங்கோலது ஓம் நமா
சேட்டன்யூதா வெனுஞ் சிங்கம் ஓம் நமா
பரம சால்மோன் பகல் வெள்ளி ஓம் நமோ
பராபரன் தன் பரி சுத்தம் ஓம் நமோ
நரபதி இருக்கிரேம் ஓகோம் நமோ நமோ
நாயனு ஓசனு நமஸ்தனுதியே.

பொருள்:

பரிசுத்தாவியின் வரங்கள் மிகுந்த நல்ல மணவாளன் ஆதியில் அதாவது, அவரது பரமார்த்த நிலையில் வார்த்தையாக (logos) இருந்தவர், அவரது அவதார நிலையில் கடவுளுக்கும் மனுக்குலத்திற்கும் இடையில் மத்தியஸ்தனானவர்; தீரமிக்க தாவீதின் செங்கோல்; மூத்தவனுகிய யூதாவின் சிங்கம்; பரம சாலொமோன், பகல் வெள்ளி நட்சத்திரம்; பராபரனின் பரிசுத்தம்.

பல்லவி . . .

செய்யுள் 6

செம்மறிக்குட்டி நற் சேய ஓம் நமா
சீவனின் விருட்சம், மெய்த் தெரிசி ஓம் நமா
தம்மையே பலியிடுந் தனிமை ஓம் நமா
தவீது வங்கிஷத் தனையன் ஓம் நமா
எம்மையாட் கொண்டதோர் இரக்கமே ஓம் நமா
யே யோவாக் கிறிஸ்திம்மா னுவேல் மன் ஓம் நமா
நம் முதல் இருக்கிறேம் ஓகோம் நமோ நமா
நாயனு ஓசனு நமஸ்தனுதியே.

பொருள்:

செம்மறிக் குட்டியின் நல்ல மேய்ப்பன்; சீவ விருட்சம், மெய்த் தீர்க்கதரிசி; தம்மையே பலியிடுவதில் ஒப்பாரு மிக்காரு மில்லாதவர்; தாவீது அரச வம்சாவழித் தோன்றல்; இத்தகையவர் என்னை யாட்கொண்டது அவரது இரக்கத்தாலேதான். இவர் தான் யேகோவா, கிறிஸ்து, இம்மானுவேல், மன்னன்.

பல்லவி . . .

அருஞ்சொற்பொருள்:

வங்கிஷம் – வம்சம்.

செய்யுள் 7

எண்ணியபடி திரும் ஏகன் ஓம் நமா
என்றும் மாறுது ஒளிர் இரவி ஓம் நமா
கண்ணதிற் காண்கொணாக் காட்சி ஓம் நமா
கருணை வாருதியெனுங் கடவும் ஓம் நமா
அண்ணல் ஓம் அரூபி ஓம் ஆதிக்காதி ஓம்
அட்சய உச்சித அருமைத் தேவன் ஓம்
நண்ணல் ஓம் இருக்கிறேம் ஓகோம் நமோ நமோ
நாயனு ஓசனு நமஸ்தனுதியே.

அருஞ்சொற்பொருள்:

ஏகன் – தனியொருவன்; இரவி – சூரியன்; கருணை வாருதி – அருட் கடல்; அண்ணல் – பெரியார்; அட்சய – அருச்சனைக் குரிய வர்; உச்சித - உச்சியில் உள்ளவர்.

செய்யுள் 8

ஆதி ஓம், நடுவது ஓம், அந்தத்தந்தம் ஓம்
ஐயன் ஓம், மெய்யன் ஓம், அனந்தஞானி ஓம்
நீதி ஓம், நித்திய நிலைமைக் குன்றது ஓம்
நேற்றும் இன்றும் என்றுமாய் நின்ற ஒன்றது ஓம்
ஒதி ஓம் மகத்துவத் துயர்ந்த ஒல்லி ஓம்
உண்மையிலுண்மை ஓம் உடன்படிக்கை ஓம்
நாதன் ஓம் இருக்கிறேம் ஓகோம் நமோ நமோ
நாயனு ஓசனு நமஸ்தனுதியே.

அருஞ்சொற்பொருள்:

ஒல்லி - மென்மை; உண்மையிலுண்மையான உடன்படிக்கை. இச் செய்யுளில் 'ஓம்' 16 முறை பயிலப்பட்டது காண்க.

செய்யுள் 9

தொன்மை ஓம், பன்மை ஓம், சூட்சியாட்சி ஓம்
சோதி ஓம், நீதி ஓம், சொரூப அரூபி ஓம்
வன்மை ஓம், தன்மை ஓம் அய சுராரி ஓம்
மானி ஓம், தானி ஓம், மகா நிதானி ஓம்
புன்மையது இன்மை ஓம், பொறுமைச்சாதி ஓம்,
புண்ணிய தன்மி ஓம், பூரிமூரி ஓம்,
நன்மை ஓம், இருக்கிறேம், ஓகோம் நமோ நமோ
நாயனு ஓசனு நமஸ்தனுதியே.

அருஞ்சொற்பொருள்:

தொன்மை - பழமை; பன்மை - ஒருமைக்கு மறுதலை; சூட்சி ஆட்சி - நல்லாட்சி; அயசுராரி - வானவன். புன்மை இன்மை - புன்மை என்பது இல்லாதவன்; பூரி - குறைவற நிறைந்தவன்; மூரி - வலிமை, பெருமை.

'ஓம்'- 19 முறை பயிலப்பட்டது.

பொருள் — தெளிவு.

செய்யுள் 10

வேதநாயகன் சொல்வே தாந்தன் ஓம் நமா
மேசியாக் கிறிஸ்து விண் வேந்தன் ஓம் நமா
தாதை ஓம் தற்சுவா பத்தச்சு ஓம் நமா
சருவ சீவாற்றும தயாலு ஓம் நமா
காதல் ஓம் கன்மலைக் கழுகுஅது ஓம் நமா
காரிய துரந்தர காரி ஓம் நமா
நாதன் ஓம் இருக்கிறேம் ஓகோம் நமோ நமோ
நாயஞ ஓசஞ நமஸ்தஞதியே.

பொருள்:

வேதநாயகன் சொல் வேதாந்தன் - வேதநாயகன் சொல்லிப் பாடிய வேதாந்தன்.

ஒப்புநோக்கு:

செபமாலை 2:11—'வேதநாயகனின் பாட்டனைக் கும்பிடுகிறேன்.' அவன் யார்? மேசியா, கிறிஸ்து, விண் வேந்தன்: இம் மூன்று சொற்களும் ஒரு பொருள் பன்மொழி, தற்சுவாபத்தின் அச்சு: எபிரேயர் 1:3. பப்ரீசியூசின் மொழிபெயர்ப்பு. இதன் விளக்கத்தைப் பின்னர்க் காண்க.

எல்லா உயிர்களுக்கும் படியளக்கும் தருமகர்த்தா அவரே. 'காதல் ஓம் கன்மலைக் கழுகது' உபாகமம் 32:11,12. Like an eagle teaching its young to fly, catching them safely on its wings, The Lord kept Israel from falling.'

காரிய துரந்தரகாரி - தாம் எடுத்த காரியத்தை விரைந்து செய்கிறவர்.

'ஓம் பிரணவம்' என்றதற்கு 'இருக்கிறேம்' என்ற தமிழ்ச் சொல்லைப் பொருளாகக் கொண்டார் கவிஞர். 'இரு' என்பது பகுதி.

தற்சுவாபத்தின் அச்சு

நயவுரை:

தந்தையின் சுடரொளியாகவும் நேரான அச்சுப் பதிவாகவும் மைந்தன் விளங்கினர். இவை குறியீடுகள் (Symbols). தந்தைக்கும் மைந்தனுக்குமுள்ள தொடர்பை இக்குறியீடுகள் காட்டுகின்றன. இருவர் தன்மையும் ஒன்றே. தந்தை கடவுள் ஒளிமயமானவர். மைந்தன் அவ் ஒளியின் பிரதி பிம்பம். அவரது அச்சுப் பதிவு.

திரைக்குப் பின்னிருந்தவர் இப்பொழுது திரையைக் கிழித்து மக்கள் முன்வந்தார் ஒளியின் மகன். தேவலட்சணத்தின் அச்சுப் பதிவு - தந்தை மூல முதல்வர். மைந்தன் அவரது பிரதி பிம்பம்.

'அந்த மைந்தன் கடவுட்டந்தையின் மாட்சிமை வீசும் சுடரொளியாகவும் அவரது தந்தையாரின் அச்சுப் பதிவாகவும் விளங்கி, எல்லாவற்றையும் தமது வல்லமையான சொல்லால் தாங்கி நடத்துகிறார்.' (திருத்திய மொழிபெயர்ப்பு.) இது எபிரேய நிருபாசிரியரின் மகா வாக்கியமாகும்.

The Son 'reflects the brightness of God's glory and is the exact likeness of God's own likeness of God's own being, sustaining the universe with his powerful word.' (Today's English Version.)

மைந்தன் கிறிஸ்து தந்தைக் கடவுளின் படிவம் அல்லர். அச்சுக்கான எழுத்துப்படி அல்லர். தேவ இலக்கணத்தின், தற் சுவாபத்தின் அச்சே அவர். நாடோடிப் பேச்சு வழக்கில், 'அப் பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறக்கும், இருக்கும் பார், அவன் மூக்கும் விழியும் அப்படி உரிச்சுக்கொண்டு இருக்கு' (இருக் கின்றன) என்பர். 'The exact likeness of God's own being.'

இனி, எபி. 1:1,2ஐக் காண்போம்.

ஓம் பிரணவத்தின் சொல்லைப் பாடத் தொடங்கிய இறை இயல் வல்லுநர், இப்பதிகத்தின் ஈற்றுச் செய்யுளில் இப்பொருள் பற்றிய தமது வேதாந்தத்தை, அதாவது, வேதத்தின் முடிந்த முடிபையே தமது முடிபாகக் காட்டுகிறார்.

பிரண்வ மந்திரத்தைக் காரியப்படுத்த வரு நாதா

திருப்புகழ் பெருந்திரட்டு—மூன்றாவது. எண் 71

1. சுருதி முடி மோனஞ்சொல் சிற்பரம ஞானசிவ
சமய வடிவாய் வந்த அத்துவித மானபர
சுடரொளிய தாய்நின்ற நிட்களசொ ரூபமுதல்
ஒரு வாழ்வே.

3. ஒரு நியம மேவிண்ட சட்சமய வேதஅடி
முடி நடுவுமாய் அண்ட முட்டைவெளி யாகி உயிர்
உடல் உணர்வதாய் எங்கும் உற்பனமதாக
அமருளவோனே.

உததரிச மாமின்ப புத்தமிர்த போகசுகம்
உதவும் அம லானந்த சத்திகர மேஉணர
உரு பிரண வாமந்த்ர கர்த்தவிய மாகவரு குருநாதா!

அருஞ்சொற்பொருள்:

வட சொற்கள் விஞ்சி வருவதால் பதவுரை தேவைப்படுகிறது. சுருதிமுடி - வேதத்தின் முடிபு; மோனம் - மௌனம்; நிட்களம் - களங்கமற்ற; நியமம் - வரையறை; விண்ட - வெளிப்படுத்தின; சட்சமய - ஆறுசமய; அண்டம் என்பதும், முட்டை என்பதும் ஒரு பொருளன; உற்பனம் - தோன்றி, பிறந்து; உததரிசமாம் - நீர்த் தோற்றம், கானல் நீர்; கர்த்தவியம் - செய்யத்தக்கது, What ought to be done, Divine imperative. வேதத்தின் முடிவு - வேதாந்தம்.

பொருள்:

வேதத்தின் முடிந்த முடிவு மௌனம். (மோனம் என்பது ஞான வரம்பு.) அந்த மோனம் இப்போது சொல் வடிவு எடுத்தது; சித்துப் பொருளாகிய பரம ஞான சிவம் ('சிவன்' எனப்படவில்லை ஈண்டு). சமய வடிவு எடுத்து வந்த அத்துவிதமான பரம சுடர் ஒளியதாய் நின்ற, களங்கமற்ற சொரூபமுதல் என்றதோர் தனி வாழ்வு; அத்தகு வாழ்வாகிய நீ பழனி மலைமேல் நின்ற சுப்ர மணியன்; மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற பெருமானே.

ஒரு நியமமே விண்ட - தெய்வ தீர்மானத்தை வெளிப் படுத்தின; சட்சமய. . . அண்ட முட்டை வெளியாகி - ஆறு சமயங் களின் வேதத்தின் அடிமுடி நடுவுமாய் முட்டைக்குள் ஒளிந் திருக்கும் குஞ்சு வெளியாவதுபோல வெளிப்பட்டு, உயிர் உடல் உணர்வதாய் எங்கும் தோன்றி அமர்ந்துள்ளாயே.

. . . அமலானந்த சத்திகரமே உணர
உரு பிரணவா மந்த்ர கர்த்தவ்யமாக வரும் குருநாதா!—

குற்றமற்ற ஆனந்த சக்தியை நாங்கள் உணருமாறு, பிரணவ மந்திரத்தை காரியப்படுத்த, செயலாற்ற (மனித) உருவெடுத்து வரும் குருநாதனே!

இத்தகுக் கருத்துக்கள் திருப்புகழ்ப் பாக்களில் விரவி வந்துள்ளன. இவை வேதநாயகரை ஈர்த்தனபோலும்.

4. கிறிஸ்துவின் துதி

1. திரு வான் ஒளிவே தெருளே பொருளே
தேவா கா வாவே
திரமே உரமே வரமே பரமே
சீவா யே யோவா
ஒருவா இருவா நடுவா முடிவா
ஒரே கோ னரே
ஒழியா நிலையே வழியே விழியே
ஓம்ஓம் மூவாரே!
தருவே குருவே பரிபூரணமே
நாதாவே நீயே
சருவேசுரனே தயவாயிரு நீ
தானனே தானே
ஆலேஆ லேலோ
அமலா சரணே மனுவேலரசே!

அருஞ்சொற்பொருள்:

வான் ஒளிவே - பெரிய ஒளியே, பேரொளியே; தேவே கா வாவே - தேவனே, என்னைக் காக்க வாயேன்; சீவா யே யோவா - ஜீவனே, ஏகோவாவே; ஒருவா இருவா - தேவனும் மனிதனுமான நீ ஒருவனே; ஒரே கோ னரே - கோனர் - ஆடு மேய்ப்பவர். (கோன் - Konung (German) = King (English) : Indo-European language root).

ஒப்புநோக்கு:

யோவான் 10:16 – 'எல்லாம் ஒரே மந்தையாய் இருக்கும்; அதற்கு மேய்ப்பனும் (ஆயனும்) நானே.' ஓம் ஓம் மூவாரே - ஓம் என்னப்பட்டவர் மூப்பு அடையமாட்டார், என்றும் இளமையாக இருப்பார். மூவாக முதலவன்! சுரார் - சுரர் என்பது நீண்டது. சுரர் பூபதியே - தேவகணங்களுக்கும் பூவுலகினர்க்கும் அரசனே.

ஆலே ஆ லேலோ
அமலா சரண மனுவேலரசே
ஆலே ஆ லேலோ.

இந்த மூன்று வரிகளும், வருகைப் பதிக உரையில் யாம் கூறியது போல, இப்பதிகத்தின் கட்டுக்கோப்பில் உள்ள பத்துச்

செய்யுட்களின் ஈற்றடிகளில் பல்லவியாக, பாடலின் கடை மடக்கு வரியாக (Refrain) வந்துள்ளன.

இவற்றை onomatopoeia என்பர் ஆங்கில இலக்கணிகள். 'சொற்பொருள் இசைவு (ஒலி) அணி' என்றூர் English-Tamil Dictionary. பொருளுக்கும் பெயருக்கும் ஏற்ற ஒலி.

இந்த ஒலிக் குறிப்பே அல்லேலூயா, Halleyah என்றும் சொல்லப்படும்.

2. கனிமாது உண் பாதகம் அறவே
காடு ஊடா வீடே
கவிவானவர் பாடி யும் ஆடவுமே
காலாய் மாலாய்நீ
தன்னேயே பலியே தரவே வருவாய்
தாதாவே தாவே
சயமே நயமே தவிதாதிபனே
சாலேம் வாழ் கோவே
உனேயே தொழுகா தவர் வாழ்குவரோ
ஊழார் பாழாரே
ஒழியா நரகா னதில் வீழ்குவரே
ஓயாது ஓயாதே
அனே மரியாள் ஒரு பாலகனே
ஆலே ஆ லேலோ
அமலா சரணே மனுவேலரசே
ஆலே ஆ லேலோ.

அருஞ்சொற்பொருள்:

கனி மாதுண் பாதகம் அறவே - ஏவாள் என்ற மாது உண்ட பாதகம் அறுந்து போகவே; காடு ஊடா வீடே - காட்டுக்குள் ஊடிய வீட்டுக்குப் (பெத்தலேயில்) வந்தாய்; வானவர் கவி பாடி யும் ஆடவும் வந்தாய்; காலாய் மாலாய் நீ - நீ காற்றாய் ஆச்சரிய மாய் வந்தாய்; தனேயே - தன்னேயே; நீ பிறந்த பிறப்பு (எங்கள் பாதகம் அறவே) உன்னேயே பலியாய்த் தரவே வந்தாய்;

தாதாவே தாவே: தாதா - (தந்தை, பாட்டன், பெரியோன்) இவண், கொடையாளன் - liberal donor, benefactor; தாவே - தருவாயாக. தவிது அதிபனே - தாவீதரசனே; எருசலேமில் வாழும் அரசனே; 'உனேயே தொழுகாதவ...ஓயாது ஓயாது' - உன்னே மட்டுமே தொழாதவர் வாழ்வார்களோ; ஊழார் - பழ வினேயர், ஒழியா நரகில் ஓயாது வீழ்ந்தழிவர்.

ஆலே...ஆலே ஆலேலோ=ஆலோலம் - பறவைகளே ஒட்டும் ஒலிக் குறிப்பு. இதன் பொருள் முன்னர்க் கூறப்பட்டது. தாராட்டுப் பாடலும் இத்தகையது.

3. பொருளே புகழே பொறையே நிறையே
பூமானே தேனே
புவி பாதலம் வான் நிறைவே மறைவே
போதம்மா வேதா
இருள் ஓடவுமே எழும் மாதவமே
யேகா ஓ மேகா
இணையே துணையே இதமே சிதமே
ஈசா ரா சாவே
மருளே கெடவா மடிதீர் மிடிதீர்
வாஞ்சி காரா
மதியே அணியே மதியே கதியே
வானோர் கோமானே
அருளே தெருளே அழகே அமுதே
ஆலே ஆ லேலோ
அமலா சரணே மனுவேலரசே
ஆலே ஆ லேலோ.

The last three lines sounded in liquid sounds in a high pitch are a response of joyful acclamation of Christ's coming as a king in the midst of his people.

அருஞ்சொற்பொருள்:

புவி பாதலம் வான் நிறைவே மறைவே - பூலோகம், பாதாளம், வானலோகம் என்ற மூவுலகத்திலும் நிறைந்தவரே எனினும், இவற்றில் மறைந்து ஒளிந்து இருப்பவரே! போத மாவேதா - மாவேதா போத - பெரிய வேத போதகர். யேகா ஓமேகா - தனியொருவனே, எழுத்துக்களில் இறுதி எழுத்தான வனே; மருளே கெடவா - மயக்கம் கெடவா; மடி - சோம்பல்; மிடி - வறுமை.

4. துதியே கிருபா நதியே நிதியே
சூர்சேரா தானே
சுபமே நவமே தவமே சிவமே
தோமாவோ டே நூல்
விதியே சொலியே வெளியானவனே
வேதா வே நாதா
விடிவே வடிவே விரிவே தெரிவே
மேலா ஓ லாலா

கதியே கருணை கரதேசிகனே
காளன் நாடு ஆள்வோய்
கலியே அலியே கனமே தனமே
காவாயோ? கோவே
அதி தூதர் தாள் தொழும் ஏசையனே
ஆலே ஆ லேலோ
அமலா சரணே மனுவேலரசே
ஆலே ஆ லேலோ.

அருஞ்சொற்பொருள்:

சூர் சேராதானே - துன்பம் சேராதவனே;

'சிவம்' என்ற சொல்லைக் கிறிஸ்துவின் அடியான் பயன்படுத்தியது ஏனையர்க்குப் புதுமையாயிருக்கும். சிவன் என்றதில் 'அன்' விகுதி சேர்த்தால் - சிவன் எனச் சைவர்கள் கும்பிடுகிற வனைக் குறிக்கும். 'சிவம்' நன்மை என்ற பண்பைக் குறிக்கும். ஆதலின் 'சிவமே' என்றுரைவர்.

'தோமாவோடு நூல் விதி சொல்லி வெளியானவன்' - உபாகமம் 18:18. 'தூதர் தாள் தொழும் ஏசையனே - உன் திருவடிகளைத் தூதர் தொழும் ஏசையனே என மாறுக.

5. தொண்டர் பவத்தைக் கொண்டு பொறுத்துச்
சூதோர் வாதாலே
துன்பம் மிகுத்துச் செம்புனல் விட்டுச்
சோர்வாய் யேவாளே
பண்டு பறித்துத் தின்ற கனிக்குப்
பாடாய் ஈடாய் ஓர்
பங்க மரத்தில் தொங்கி மரித்துப்
பாதாள மே தாழ்
வண்டரவத்தைத் தண்டி மிதித்து அப்
பாலே வா னே போய்
வந்துலகத்தைச் சிந்த அழித்துச்
சீறுய் மா ரூதே
அண்டர் துதிக்கக் கண்ட கருத்தர்க்கு
ஆலே ஆ லேலோ
அன்பின் மகத்துவத் தெங்கள் கிறிஸ்துக்கு
ஆலே ஆ லேலோ.

பொருள்:

உன் அடியவர் பாவத்தைப் பொறுத்துக்கொண்டு, சூதினர் செய்யும் வாக்குவாதத்தாலே துன்பம் மிகுந்துச் செந்நீர் சிந்திச்

சோர்ந்து போனாய்; பண்டைக் காலத்தில் ஏவாள் பறித்துத் தின்ற கனியால் விளைந்த தீவினைக்கு ஈடாய் பாடுபட்டாய்; ஓர் சிலுவை மரத்தில் தொங்கி மரித்தாய்; பாதாளத்தில் இறங்கி, வண்டு அரவம்=பாம்பு போன்ற பசாசைத் தண்டி மிதித்து, அப்புறம் வானத்துக்கேறி, திரும்ப வந்து உலகத்தை அழித்து, வானவர் சீராக மாறுமல் துதிக்கக் கண்ட கர்த்தருக்கு.

ஆலேஆ லேலோ. . .

6. தந்தை அனுதியர் தந்த சுதாகர
தாதா நீயாமே
சம்பிரம் நீடிய உம்பர் பராபர
சாலேம் ரா சாவே
சுந்தர மேவிய சந்த குணாகர
தூயாவே நேயா
துங்க விணேர்நவ சங்கம் உலாவிய
சூரா மா வீரா
மைந்தர்களால் வரு நிந்தை யடாமலே
வாராய், பா ராயோ?
வந்துனையே பலி தந்த தயாபர
வாகாதெய் வீகா
அந்தர வானுல குந்தரு வேதர்க்கு
ஆலே ஆ லேலோ
அம்பர தேவ சிதம்பர நாதர்க்கு
ஆலே ஆ லேலோ.

அருஞ்சொற்பொருள்:

சிதம்பர நாதர் - ஞானமுள்ள பராபரன். செ. 4-இல் சிவமே என்றவர், ஈண்டுச் 'சிதம்பரநாதர்'=சித் + அம்பல + நாதர்: ஞான கோயில் நாதர் என்ற பொருளில் கூறினர் கவிஞர். சந்த குணாகர - சாந்தகுணமுடைய; வாகா - அழகனே.

பொருள் — தெளிவு.

7. நெறி நிறைவாகர சருவ தயாவொடு
நின்றாய் சீமானே
நிமல நிராதர அமல மயேசுர
நின்பால்வாழ் வோமே
பொறி வழியாய்வரும் வெறியுட தீவினை
பொங்காதுஓர் நேராய்ப்
பொறையொடு மா கிருபையிணைடு பாவிகள்
பொன்றாதே காவே

மறியினி லேறியும் எருசலே மாநகர்
வந்தாய் சீயோனே
மகிழவும் நீடவும் மணமது சூடவும்
மந்திராநீ தானே
அறிவில் உலாவிய திரிமுதலே உயர்
அன்பேஆ லேலோ
அருளு மனேகர பரம சுதாகர
இன்பேஆ லேலோ.

அருஞ்சொற்பொருள்:

நன்னெறி நிறைந்த பண்டிதா நிமல, அமல: ஒருபொருள் இரு சொல்: மலமில்லாதவனே; மயேசுர - மகா ஈஸ்வரன்; பொறி வழியாய் - ஐம்பொறிகளாலும் வருகின்ற, வெறி - பிசாசாலும் வரும் தீவினை; பொன்றுதே காவே - சாகாமல் காப்பாற்றும்; மறி - கழுதை.

பொருள் — தெளிவு.

8. பரம சுயாதிப தரும குணாதிப
பண்டார் பாவாரே
பகர அரிதாம்உயர் சகல குணாகர
பண்பார் சீராரே
ஒருவருமே அளவிட முடியா முதல்
ஒன்றும் யோவாவே
உலகதிலேவரு திரு வடிவே கதி
உன்தாள்சேர் வோமே
எருசலே நீடிய இஸ்ரேலர் நாடிய
எம்கோமா னுரே
இடியதுபோல் விழு கவலையினுல் மனம்
எஞ்சாதே காவே
அருமறையே, கன தவிதுஇறையே அக
ளங்கா ஆ லேலோ
அதிசய மேதவ சிவசொரூ பாஅதி
துங்காஆ லேலோ.

அருஞ்சொற்பொருள்:

சுயாதிப - சுய அதிபனே, குணாதிப - குண + அதிபனே. பண்டார்பாவாரே = பழம் புலவரால் பாடப் பெற்றவரே; பண்பார் சீராரே - பண்பும் சீரும் உடையவரே. மனம் எஞ்சாதே காவே - மனம் தளராமல் காத்தருள்க. அகளங்கா = அ + களங்க - களங்க மற்றவனே — கடவுளே, மாசில்லாதவனே.

சிவ சொரூபாஅதி - நன்மைச் சொரூபமுடையவனே;

துங்கா - தூயவனே; பண்டார் பாவாரே - பழவடியவர்களால் பாடப்பட்டவரே. சிவ சொரூபா - நன்மைச் சொரூபியே; அதி துங்கா - அதிகத் தூய்மையுடையவனே.

9. வல்லமை மிகுத்த மகத்துவ பொற்புச்
சொல்லேமா முனே
மனுடர்க ளுக்கொரு மித்த கருத்துக்கு
இவ்வாறே நீயே
தலைமகள் உத்தமி கற்பில் உதித்துத்
தள்ளாதே தீயோர்
தமைஅருள் உற்று நயத்தில் நடத்திச்
சல்லாப நூலார்
கலைக ளனைத்தும் வருத்தி இதத்தில்
கல்லாதோர் தாமே
கனஅறி வுற்றுஉல கத்தை விளக்கக்
கைதூவா மையால்
அலைகடல் பட்ட மரத்தரு சத்தத்து
ஐயாஆ லேலோ
அனைய உயிர்களின் நித்திய தத்தத்
அல்லாஆ லேலோ.

அருஞ்சொற்பொருள்:

தள்ளாதே...நடத்தி - தீயவரைத் தள்ளாமல் அவர்களிடம் அருள் சுரந்து, நயத்தில் அவர்களை நடத்தி; சல்லா நூலார்...கை தூவாமையால் – கல்லாதவர்களுக்குக் கலைகள் அனைத்தையும் இதமாக வருவித்து ஒழியாவொழுக்கத்தில் நல் அறிவு படைத்து உலகத்தை விளக்கச் செய்யும்; அலைகடல்பட்ட மரத்தரு சத்தத்து- உமது குரலொலி பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போலிருந்ததே, ஐயா!

ஆலே லேலோ...

அலைகடல்பட்ட மரத்து அரு சத்தத்து - ஒ.நோ. திருவெளிப் பாடு 1:15.

10. சாதி யாவும் ஈடேற மனுகர
தாதாவே நேயா
தாழ்விலாத மகா பர மேசுர
சாகாவோர் ஏகா
மாது மரி யாளிடம் மேவிய
மாதேவா சீவா

மாசிலா அவ தார மன்னுகன
வாகாநீ வா,கா,
வேத நாயகன் ஓதிய பாடலின்
மேலா,மே லாவே,
மேசியா கரு ணைநதியே, ததி
மீள்வாய்ஆள் வாயே
ஆதியேதிரி யேக பரா, சரண்,
ஆலேஆ லேலோ
ஆமனும்மனு வே லரசே, சரண்,
ஆலேஆ லேலோ.

அருஞ்சொற்பொருள்:

சாகாவோர் ஏகா - சாவாமையுள்ள ஓர் தனியனே; வாகா நீ வாகா: (1) வாகா நீ வாகா - நீ வந்து [என்னைப்] பாதுகா; 2. வாகா - அழகாக; அழகாக நீ வந்து என்னைக் காப்பாற்று. வேத நாயகன்...மேலா, மேலாவே - வேதநாயகன் பாடலைக் காட்டிலும் மேலுக்கு மேலானவனே. ததிமீள்வாய் - தக்க சமயத்தில் மீட்பாய்.

ஆலே...லேலோ...

5. தேவ மகத்துவம்

திருப்புகழ் சந்தம்

செய்யுள் 1

ஆகமங்கள் புகழ் வேதா நமோ நமோ
வாகு தங்கு குருநாதா நமோ நமோ
ஆயர் வந்தணைசெய் பாதா நமோ நமோ—அருரூபா
மாகமண்டல விலாசா நமோ நமோ
மேக பந்தியின் உலாசா நமோ நமோ
வான சங்கம விசுவாசா நமோ நமோ—மனுவேலா
நாக விம்பம் உயர் கோலா நமோ நமோ
காகமும் பணிசெய் சீலா நமோ நமோ
நாடும் அன்பர் அனுகூலா நமோ நமோ—நரதேவா
ஏகமந்திரமுறு பூமா நமோ நமோ
யூகதந்திரவதி சீமா நமோ நமோ
யேசு என்றதிரு நாமா நமோ நமோ—இறையோனே.

அருஞ்சொற்பொருள்:

நமோ - தோத்திரம்; வாகு - அழகு; மாகமண்டலம் - ஆகாயம்; மேகபந்தி - மேக வரிசை; நாக விம்பம் – மலை வட்டம்; கோலா - அழகனே; நரதேவா - மனுட தேவனே, God who has become man; ஏக மந்திரம் - ஒரே மந்திரம், ஏகச் சக்கராதிபதி; யூக தந்திர வதி - தர்க்க உபாயங்களில் மதியூகி; சீமா – சீமான், ஸ்ரீமான், செல்வன்; யேசு - இயேசு - 'யேசு என்ற திருநாமா.'

யோசுவா என்று பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்ட பெயரைக் கிரேக்க மொழிபெயர்ப்பாளர் இயேசு - Jesus என்றனர். இரட்சகர், காப்பாற்றுகிறவர் எனப் பொருள்படும். மரியம்மை பெற்ற குழந்தைக்குத் தேவன் இட்ட பெயராகும். 'அவருக்கு இயேசு என்று பெயரிடுவாய்; ஏனெனில், அவரே தம்முடைய மக்கள் தம் பாவங்களினின்று மீட்பார்' என்றார் தேவதூதன். எனவே இதுவோர் காரண இடுகுறிப் பெயராயிற்று (மத்தேயு 1:22).

காத்தல் தொழிற் காரணமாக இரட்சகர் எனும் பெயர் பெற்றார் அவர். வரி 6 - மனுவேலா - இம்மானுவேல் என்பதின் குறுக்கம். ஏல் - El - கடவுள்; கடவுள் நம்மோடு இருக்கிறார். God is with us (ஏசாயா 7:14.)

அகல உரை:

(செ. 1) 'ஆகமங்கள் புகழ் வேதா, நமோ நமோ'

ஆகமங்கள்: கவிஞர் சைவராயிருந்த காலத்தில், 'வேத சாத்திரம், ஸ்மிருதி, புராணம், கலை, ஞானம்' என்றவற்றை நன்கு கற்றிருந்தார் (சிவஞான சித்தியார் - பக்கம் 9. சூத். செ. 2). இங்கே அவர் கூறிய 'ஆகமங்கள்' விவிலியத்திலுள்ள 66 ஆகமங்களே. பழைய ஏற்பாட்டு நூல்களைத் தான் (39) ஆகமங்கள் என மொழிபெயர்த்தனர். புதிய ஏற்பாட்டு நூல்களை அவ்வாறு கூறு விட்டாலும் வேதநாயகர் 66ஐயும் ஆகமங்கள் என்றே கூறினர்.

'வேதா'—வேதனே என்றுரைவர். வேதத்தால் புகழப்பட்டவனே, வேதத்தைத் தோற்றி வைத்தவனே, வேதத்தின் பொருளே, வேதநாயகனே எனப் பல பொருள் ஒரு சொல் என்க.

'வாகுதங்கு குருநாதா ந.ந.' – அழகு தங்கிய குருநாதனே.

'ஆயர் வந்தனை செய் பாதா' – உன் பிறப்பின்போது இடையர் உன் பாதம் பணிந்து வந்தனை செய்தார்களே - பாதாம் புயனே.

'அருரூபா' - அரூபாரூபனே. 'மேக பந்தியின் உலாசா? - ஆகாய மண்டலத்தில் வாசமாயிருப்பவனே. 'வான சங்கம விசுவாசா - வானவர் கூட்டத்தாரால் விசுவாசிக்கப்பட்டவனே; மனுவேலா - இம்மானுவேல் - கடவுள் என்னுமிருக்கிறார்.

நமோ என்ற சொல்லின் பொருள்: புகழ், வந்தனை என்பது என்று முதலாம் மூன்றும் வரிகளில் காட்டியுள்ளார் கவிஞர்.

பொருள்: வேத சாஸ்திரங்கள் புகழ்ந்து துதிக்கும் வேதனே, வேதத்தின் உட்பொருளே, வேதநாயகனே, அழகு தங்கிய குருநாதனே, பிறந்த உன்னைக் கண்ட ஆயர் வந்தனை செய்த பாதனே; ரூபம், அரூபம், ரூபாரூபனே, ஆகாய மண்டல விலாசனே, மேக வரிசையினுல்லாசனே, வானவர் குழுவினரின் விசுவாசனே, மனுவேலா, நாகமலையில் உயர்ந்த அழகனே, எலியா தீர்க்க தரிசிக்குக் காகத்தைக்கொண்டு பசி தீர்த்தவனே, உன்னை நாடிய அன்பர்க்கு அனுகூலனே, ஒரே மந்திரங்கொண்ட மணவாளனே, தர்க்க உபாயங்களில் மதியூகியே, செல்வனே, யேசுவென்ற திருநாமங்கொண்டவனே, உன்னை வணங்குகின்றேன். இறையோனே—அங்கிங்கினுதபடி எங்கும் நீக்கமற நிறைந்தவனே - வணக்கம்.

செய்யுள் 2

அறிவின் உருவாகிய மூலா நமோ நமோ
மறையவர்கள் தேடிய நூலா நமோ நமோ

அதிசய பராபர சீலா நமோ நமோ—அருளாளா
பொறிவினையுருத சரீரா நமோ நமோ
குறை அணுவிலாத குமாரா நமோ நமோ
புவன முழுதாள் அதி காரா நமோ நமோ—புதுவேதா
நிறை வழியின் மேவிய கோனே நமோ நமோ
முறைகள் தவறுத விண்ணோனே நமோ நமோ
நிதிபெருகு மாரச தேனே நமோ நமோ - நெறிநீதா
இறை தவீது பாடிய கீதா நமோ நமோ
எருசலேயில் நீடிய தூதா நமோ நமோ—இறையோனே.

அருஞ்சொற்பொருள்:

'அறிவினுருவாகிய மூலா'; செ. 1-இல்: 'ஆகமங்கள் புகழ் வேதா' என்றார். செ. 2-இல், 'மறையவர்கள் தேடிய நூலா' என்றார். யோவான் 5:39-இல்: 'நீங்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிறீர்கள்; அவற்றின்மூலம் என்றுமுள்ள மெய் வாழ்வு கிடைப்பதாக நினைக்கிறீர்கள். அந்த வாக்கியங்களே என்னைக் குறித்துச் சாட்சி பகருகின்றன. என்றாலும், மெய் வாழ்வைப் பெறும்படி என்னிடம் வர உங்களுக்கு மனமில்லை' என்று சொன்னார் இயேசு.

அறிவுக்கு ஆதி மூலமாகிய இவர் மறையவர்கள் தேடிய நூலாகவும் நூற்பொருளுமானவர். இவரே அதிசய பராபர சீலன் என்றார் வேதநாயகர்.

2. தாயுமானவர், சச்சிதானந்த சிவம் செ. 10இல்: சிவனை 'வேதா' என்றழைத்தார். இதன் உரையாளர்: 'நான்முகன் மறையோதிப் பிறர்க்கு ஒதுவிக்கும் தொழிலுடையன்; அதனால் மறையோன் எனவும், வேதா எனவும் வழங்கப்படுவன்' என்றார் (பக். 218—கழகப் பதிப்பு).

உ. வே. சாமிநாதையர்: தமிழ்ப்பா மஞ்சரி, முருகன் துதி, செ. 37 (10).

'வேதா, வெண்பாலார் நெடுமால் பணிந்திடும் . . .
வித்தகச் சொற்சண்முகனே.'

வெண்பாலார் - நீறணிந்து வெண்மையாகத் தோன்றும் நெற்றியையுடைய சிவபெருமான்' என்று விளக்கினார் கி. வா. ஜகந்நாதன்.

கவி வேதநாயகர், வேதா என்ற சொல்லை விவிலிய ஆகமங்கள் துணைகொண்டு, யேசுவென்ற திருநாமங் கொண்டவரைப் பத்துச் செய்யுட்களில் வாழ்த்தி வணங்குகின்றார் என்க. 'நாக

விம்பம் உயர் கோலா: - மலை வட்டத்திலுயர் அழகனே; 'காகமும் பணி செய் சீலா - காகத்தைக் கொண்டு எலியா தீர்க்கனின் பசி நீக்கியவரே; 'நாடும் அன்பர் அனுகூலா' - உன்னை நாடி வந்த அன்பர்க்கு அனுகூலனே; 'நரதேவா' – மனிதனும் தேவனு மானவரே. Jesus Christ is Man-God and God-Man. இவ் இரு நிலைகளும் பிரிக்கப்படாததோர் பேருண்மையைப் பின் வந்துள்ள மூன்று அடிகளில் சிறப்பித்துக் கூறியுள்ளார் பக்தர் பெரு மான் வேதநாயகர்.

'யேசு' என்ற திருநாமங் கொண்ட இறைவன், இவ் இரு நிலை களையும் ஒன்றித்து, 'ஏக மந்திரமுறு பூமா' என்றதோடமையாது, அதற்கு விளக்கமும் கொடுத்துள்ளார் கவிஞர்:' 'மனுட-தேவனே, ஒரே மந்திரமுடைய ஏகச் சக்கராதிபதியே.'

'யூக தந்திரவதி சீமா'—

'தர்க்க உபாயங்களின் (சீமானே) அதிக செல்வத்தானே' என்பதும் கவிஞரது விளக்கம்.

செய்யுள் 2

அறிவின் உருவாகிய மூலா, நமோ நமோ:

'அறிவின் வடிவாகிய ஆதி மூலமே' என்பது கவிஞருரை. அறிவு - குணம்; உரு, வடிவு—குணி. அறிவு, ஞானம் என்ற குணம் இயேசு என்னப்பட்டவரால் உருவாயிற்று. எல்லா அறிவுக்கும் ஊற்றுங்காரணருமாகிய கடவுள் அறிவின் உருவாக இவ்வுலகில் வந்தார். 'மறையவர்கள் தேடிய நூலர்' - வேத சாத்திரிகள் நூல்களை ஆராய்ந்தனர். நூல்களைத் தேடி எழுதி வைத்தனர். 'திரைகடலோடியும் திரவியம் தேடு' - தேடிச் சேமித்து வைத்தனர். அதிசய பராபர சீலா - அதிசய பராபர னுடைய சீலங்களை உடையவர்.

அருளாளா - கருணைகரனே, பொறிவினையுறுத சரீரா - ஐம் பொறிகளின் தீவினை அடராத உடற்கூறுகள் உடையவனே, தூயனே என்க. குறை அணுவிலாத குமாரா - அணுவேனும் குற்றமற்ற சுபுத்திரா. புவன முழுதாள் அதிகாரா - புவனம் - உலகம். எல்லா உலகங்களின் மேலும் ஆதிபத்தியம் உடைய வனே; புது வேதா - புதிய ஏற்பாட்டு ஆகமங்களால் புகழப்பட்ட வனே; நிறை வழியின் மேவிய கோனே - நானே வழி என்றும் சொல்லி நல்வழியில் நடந்த அரசனே. நிதி பெருகு மா ரச தேனே - செல்வம் பெருகும் அதி ரச தேனே. இறை தவீது பாடிய கீதா - தாவீதரசன் உம்மைப் புகழ்ந்து இசையோடு பாடிய கீதா புருஷனே. பறைகள் பல கூடிய போதா - 'பல வாத்தியங்

களோடிசைந்த ஞானபோதனே' என்பது கவிஞர் உரை. பல வாத்தியங்கள் யாவை என்பதைச் சிலப்பதிகாரத்தில் கூறியுள்ளதைக் காண்க: புகார் — அரங்கேற்ற. 139–142.

'குழல் வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்றிசைத்த தாமந்திரிகை . . .'

'பல வாத்தியங்களோடு இசைந்த ஞான போதனே' என்பது 'முழவொடு கூடி நின்றிசைத்த' — முழவொடு கூடி நின்ற வாத்தியக் கூறுகளை அமைத்தது ஆமந்திரிகையென்னும் கருவி' என்றூர் அடியார்க்கு நல்லார்.

இசைவாணர் இயேசு தம் ஞான போதனையை இசையோடு கலந்து போதித்தார் என்றூர் வேதநாயகர். 'எருசலேயில் நீடிய தூதர்' — எருசலேமில் நீடித்த பரம தூதனே என்றூர் கவிஞர். பரம் அனுப்பிய தூதன் என்றது சரி. நீடித்த காலம் அவரை எருசலேயில் இருக்க அதிகாரிகள் விட்டாரில்லை.

யேசுவின் பிறப்பும் ஆயர் புகழ்ந்து போற்றியதும்.

செய்யுள் 3

பாட்டு விந்தைய துயர்ந்தாய் நமோ நமோ
நீட்டு சந்தமது இசைந்தாய் நமோ நமோ
பார்க்க அந்தமோடு எழுந்தாய் நமோ நமோ - பரதேவா
மாட்டு மந்தையிடை வந்தாய் நமோ நமோ
காட்டு நிந்தனை யடைந்தாய் நமோ நமோ
வாழ்த்து நந்தரை மகிழ்ந்தாய் நமோ நமோ - மனுரூபா
சூட்டு கந்தையது அணிந்தாய் நமோ நமோ
நாட்டு வந்தனை நிறைந்தாய் நமோ நமோ
சூட்ச தந்திரம் அறிந்தாய் நமோ நமோ — சுவிசேடா
ஓட்டு மந்திரம் மிகுந்தாய் நமோ நமோ
மீட்டு மைந்தரை உவந்தாய் நமோ நமோ
ஏற்ற தந்தைமுன் இருந்தாய் நமோ நமோ - இறையோனே

இச் செய்யுட் பொருளுக்கு ஆதாரம்: லூக்கா 2:8–20.

பொருள்:

மீட்பர் பிறந்தார் என்ற நற்செய்தியைக் கேட்டு அவரைக் கண்டு மகிழ்ந்த ஆயர்கள் பாடிய விந்தையால் உயர்ந்தாய், அவர்களது நீண்ட சந்தப் பாக்களுக்கு இசைந்தாய், ஆயரைப்

பார்க்க அழகோடு எழுந்து காட்சி கொடுத்தாய், அரூபியானவ
ரின் திருவுருவக் காட்சி இது.

மாட்டு மந்தை இடையில் வந்து காட்டு நிந்தனையடைந்து
உன்னை இடையர் வாழ்த்தியதைக் கேட்டு மகிழ்ந்தாய் உன்னுட
மானுட ரூபத்தில்.

உனக்குச் சூட்டிய கந்தைத் துணியை அணிந்திருந்தாலும்
நாட்டு மக்கள் வந்தனை நிறைந்து அவர்தம் சூட்சி மந்தரம்
தந்திரம் அறிந்து வைத்தாய். உன் நற்செய்திக்குப் பொருளான
வனே, சுவிசேடா.

ஆகமங்களில் எழுதப்பட்ட மந்திரங்களின் அறிவில் மிகுந்
தாய், உலக மக்களை மீட்டு மகிழ்ந்தாய், உனக்கேற்ற தந்தையார்
முன் இருந்தாய், ந. ந. இறையோனே.

செய்யுள் 4

கருணை பெருகிய தயாளா நமோ நமோ
உரிமையுள நன் மணவாளா நமோ நமோ
கதிர்கள் படர் சுடரின் வாளா நமோ நமோ – கலையாளா
பெருமை மகிமையுள நாதா நமோ நமோ
மரிய மதலை தொழு பாதா நமோ நமோ
பிரியமுள வெனதுதாதா நமோ நமோ – பெரியோனே
அருமை அடியவர்கள் நேசா நமோ நமோ
பரம எருசலை விலாசா நமோ நமோ
அறிவினுடைய சருவேசா நமோ நமோ - அதிகாரா
இருமை வினை பொடிசெய் சூரா நமோ நமோ
தரும நெடுயினுப சாரா நமோ நமோ
இருடியர்கள் எழுது தீரா நமோ நமோ – இறையோனே.

அருஞ்சொற்பொருள்:

கதிர்கள் படர் சுடர் வாளா – கதிர்கள் சுடர்விட்டொளிரும்
வாளையுடையவனே; மரிய மதலை – மரியம்மையின் குழந்தை;
இருமைவினை பொடி செய்சூரா – இம்மை மறுமைத் துன்பங்களைப்
பொடியாக்கிய சூரனே; இருடியர் - ரிஷிகள்; எழுது தீரா - உன்
வீர தீரச் செயல்களைப் புகழ்ந்து எழுதப்பட்டவனே.

செய்யுள் 5

அதிசயம் மிகும் ஒரு சொல்லாய் நமோ நமோ
கதிர்உடுவுடன் வரும் வல்லா நமோ நமோ
அசடரை நரகிடும் அல்லா நமோ நமோ – அசரீரி

விதி முனிவர்கள் தொழும் நல்லாய் நமோ நமோ
பதிதர்கள் தமதிடை செல்லாய் நமோ நமோ
வெறிகொளும் புலையர் முன் நில்லாய் நமோ நமோ – மிகு நீதி
சதுர் நடுவினில் எழு மெய்யா நமோ நமோ
மதிகெட எனைவினை செய்யாய் நமோ நமோ
தடி மடையர்களிடை வையாய் நமோ நமோ - தவரூபா
இதிமுடி நடமிடு துய்யா நமோ நமோ
நிதி அமுதருளிய கையா நமோ நமோ
இருடியர் எழுதும் ஏசய்யா நமோ நமோ – இறையோனே.

அருஞ்சொற்பொருள்:

கதிர் உடுவுடன் – கதிரவனுடனும் நட்சத்திரத்தோடும்; சதுர் நடுவினில் எழும் – எனது சதுர்ப் பிரசங்கங்களில் எழுந்தருளும்; இதிமுடி நடமிடும் – பிசாசினை முறியடித்து அவன் தலையில் நடன மாடும். நிதி அமுது அருளிய கையா – செல்வத்தையும் அமுதத் தையும் அருளிய கையை உடையவனே.

செய்யுள் 6

ஆதி அந்தமற்றதிரி யேகா நமோ நமோ
சோதி தங்கு பொற்பின் மிகு தேகா நமோ நமோ
ஆகமங்களுக்குஅதி விவேகா நமோ நமோ – அருள் நீதா
மாதர் வஞ்சனைக்குள் மனம் நாடாய் நமோ நமோ
தாதை பந்து மக்கள் என நீடாய் நமோ நமோ
மாசுறும் துர் இச்சை வழி கூடாய் நமோ நமோ – வரதேவா
தீது மிஞ்சு சர்ப்ப வினை தீராய் நமோ நமோ
கோது துன்பம் முற்றும் அற வாராய் நமோ நமோ
தேவன் உன் திருத் தயவு கூராய் நமோ நமோ – திரியேகா
ஏதம் ஒன்றும் அற்ற அதிதூயா நமோ நமோ
வேத மந்திரத்து மணி வாயா நமோ நமோ
ஏசுவென்ற கத்தவிய நேயா நமோ நமோ — இறையோனே.

பொருள் — தெளிவு.

செய்யுள் 7

திருவசனத்து மது ரத்தாய் நமோ நமோ
உரிய செபத்துட ரசத்தாய் நமோ நமோ
திடமிகும் உத்தம வரத்தாய் நமோ நமோ – திருரூபா
அருள்மிகு சித்தர் உறை வெற்பே நமோ நமோ
பொருள் உணர் பத்தர் தொழு கற்பே நமோ நமோ
அதிபரிசுத்தமுள்ள பொற்பே நமோ நமோ – அருள்தேவா

ஒருகுறையற்ற தவ வித்தே நமோ நமோ
இரு க(ல்) லிலுற்ற நெறிபத்தே நமோ நமோ
ஒளிர்விடு ரத்தின மணிமுத்தே நமோ நமோ – உயர்தேவா
எருசலே மக்களின் மகத்துவா நமோ நமோ
பரவெளிக்குள் உயர் தத்துவா நமோ நமோ
இனிமையின் முக்கிய திரித்துவா நமோ நமோ - இறையோனே.

செய்யுள் 8

கட்டான வேத நிதாஞ நமோ நமோ
கிட்டோர்கள் அதிப கோஞ நமோ நமோ
கற்றோர்கள் போதக ஞாஞ நமோ நமோ. —கனயூகா
மெட்டான வானவர் கோவே நமோ நமோ
அட்டாவதானிகள் பாவே நமோ நமோ
மிக்கான ஞானிகள் தேவே நமோ நமோ. —விஞநாசா
தட்டானபோது சகாயா நமோ நமோ
கெட்டோர்கள்மீது நன்னேயா நமோ நமோ
தப்பாதவாதில் உபாயா நமோ நமோ. —சருவேசா
எட்டாத சோதியின் வாசா நமோ நமோ
நெட்டான வீதி விலாசா நமோ நமோ
எக்கோடி சாதியின் நேசா நமோ நமோ. —இறையோனே

செய்யுள் 9

சருவாதிகாரண பராபரா நமோ நமோ
நெறியோது தாரண தராதரா நமோ நமோ
தயைஞான பூரண சராசரா நமோ நமோ. —தனிவேதா
குறையாத சீர்மிகு குணாகரா நமோ நமோ
திரியேகரான கிருபாகரா நமோ நமோ
குருரூபமாய்வரு மனோகரா நமோ நமோ. —குலதேவா
அறிவானதேவ திருவாசஞ நமோ நமோ
வெறிதீது யாவையும் விமோசஞ நமோ நமோ
அழியாத சீவனுறு போசஞ நமோ நமோ. —அதிநேயா
இறையாக மேவிய தபோதஞ நமோ நமோ
சிறியேஞ ஆளதுகொள் சாதஞ நமோ நமோ
இசரேல் இராசர்கள் சிமாசஞ நமோ நமோ.—இறையோனே

அருஞ்சொற்பொருள்:

நெறியோது தாரண - நன்னெறி ஒதுகின்ற உறுதிப்பாடு; தரா தரா-தரம்+அதரம்=அவரவர் தகுதிக்கேற்றவாறு நடத்துகிறவர்; சராசரா - சரம்+அசரம்=இயங்கு இயங்கா நிலை. அழியாத

சீவனுறு போசனை - அழியாத வாழ்வுதரும் உ வு - திருராப் போசனத்தின் பயன் இது.

செய்யுள் 10

தேவாதி தேவசங்க நாட்டனே நமோ நமோ
மூவரணிமீது தங்கு பாட்டனே நமோ நமோ
சீயோனின் மாதுகண்கள் தேட்டனே நமோ நமோ.
—திறலோனே

காவாதிசேயர் தங்கள் பாத்திரா நமோ நமோ
தாவீதுராச தந்தை கோத்திரா நமோ நமோ
கானுனுதேசமென்ற கேத்திரா நமோ நமோ. —கலிலேயா
மாவேத மந்திர சூத்திரா நமோ நமோ
பாவாணரோதும் அனந்த சாத்திரா நமோ நமோ
வானோர்கள்பாடி வந்த காத்திரா நமோ நமோ. —மறுரூபா
ஏவாள் செய்பாதகங்கள் தாத்திரா நமோ நமோ
பாவேதநாயகன் சொல் தோத்திரா நமோ நமோ
ஏகாதிபாலர் எங்கள் நேத்திரா நமோ நமோ.
—இறையோனே

அருஞ்சொற்பொருள்:

மூவரணிமீது தங்கு பாட்டனே - திரித்துவத்தில் மூவர்மீது பாடிய பாடல்களுக்குரியவனே. தேட்டனே - தேடப்பட்டவனே. காவாதி சேயர் - பூங்காவில் ஆதிமக்கள். கேத்திரா - க்ஷேத்திரா.

கவி வேதநாயகர் கிறித்தவ சாத்திரத்தைத் தோத்திரமாகப் பாடியவர் என்பதை மேலே கண்டோம். அக்கூற்றை வலியுறுத்துவது இச்செய்யுளின் பிற்பகுதி.

பாவாணர் ஓதும் அனந்த சாத்திரம்,
வானோர்கள் பாடிவந்த காத்திரம்,
பாவேதநாயகன் சொல் தோத்திரம்.

காத்திரம் - உறுப்பு.

ஏவாள் செய்பாதகங்கள் தாத்திரம் - ஏவாள் செய்த பாதகங்களை வெட்டி வீழ்த்துங்கோடரி.

இவ்வாறு 'பாவேதநாயகன் சொல் தோத்திர'த்தை அவனடியொற்றி லுத்தரன் சபைகுரு ஒருவர் பாடிய பாடலைக் காண்போம்.

ஒப்புநோக்கு:

ஞா. சாமுவேல் ஐயர் - லுத்தரன் சபைகுரு - தரங்கம்பாடி.
C.L.S. Christian Lyrics, எண் 4. சீர்திரியேக வஸ்தே நமோ.

பூரிகல்யாணி ஆதிதாளம்

பல்லவி

சீர்திரியேக வஸ்தே நமோ நமோ, நின்
திருவடிக்கு நமஸ்தே நமோ நமோ!

அனுபல்லவி

பார் படைத்தாளும் நாதா
பரம சற்பிரசாதா,
நாருறுந் தூயவேதா, நமோ நமோ நமோ! —சீர்

சரணங்கள்

1. தந்தைப் பராபரனே நமோ நமோ, எமைத்
தாங்கி ஆதரிப்போனே—நமோ நமோ!
சொந்தக் குமாரன் தந்தாய்,
சொல்லரும் நலமீந்தாய்,
எந்தவிர் போக்கு மெந்தாய், நமோ நமோ நமோ. —சீர்

2. எங்கள் பவத்திஞ்சா நமோ நமோ, புது
எருசலேம் நகர்ராசா நமோ நமோ!
எங்கும் அரசேற
எவரும் நின்புகழ் கூற
துங்க மந்தையிற் சேர, நமோ, நமோ, நமோ! —சீர்

3. பரிசுத்த ஆவி தேவா நமோ நமோ, திட
பலமளித்தெமைக் காவா, நமோ நமோ!
கரிசித்துத் தா நற்புத்தி,
கபடற்ற மன சுத்தி,
திருமொழிபற்றும் பக்தி, நமோ நமோ நமோ. —சீர்

6. தேவலட்சணம்

ஆசிரிய விருத்தம்

செய்யுள் 1

ஆதியே ஆதிமுன் அனுதியில் அனுதியே
அரூபியே சுயசொரூபியே
ஆசையே அருள்ஞான பூசையே ஓசையே
அருமையே மனதொருமையே
ஓதிய நிதானமறை உத்தியே புத்தியே
உண்மையே கன வண்மையே
உச்சிதப் பதவியே நிச்சயத்துதவியே
உயர் கேண்மையே ஆண்மையே
சோதி நீதியேவான சூட்சியே காட்சியே
சுவிசேட சபை சாட்சியே
தூய்மையே வாய்மையே தொன்மையே நன்மையே
சுகசீவியச் செல்வியே
சாதிகள் சுயாதிபதி யேகனதியே—தேவ
சத்தியத் துறுதி தருவாய்,
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமி யேசுக் கிறிஸ்துவே.

மகுடம்:

ஈற்றடிகள் இரண்டும் இப்பகுதியின் 13 செய்யுட்களிலும் இறுதி அடிகளாக வந்துள்ளன. அத்தோடு, 'தேவ சத்தியத்துறுதி தருவாய்' என்ற விண்ணப்பமும் இணைந்துள்ளது. ஏனைய முதற் பகுதியில் பதி இலக்கணக் கூறுகள் பல அடுக்கிவைக்கப்பட்டன.

தாதையாகிய வஸ்து, வேதமாளிகை ரஸ்து

வஸ்து 'ரஸ்து' என்ற சொற்கள் நம்மை மலைக்கச் செய்கின்றன.

1. வஸ்து: பொருள்; பராபர வஸ்து, அத்துவித வஸ்து = மெய்ப்பொருள் வஸ்து லட்சணம், தேவ லட்சணம் = பதி இலக்கணம் - இவை ஐந்து என்பர் சைவர் = சத்து, சித்து, ஆனந்தம், நித்தியம், பரிபூரணம்.

2. ரஸ்து: திசைச் சொல், இந்தி மொழி. சரக்கு, சாமான்- Goods. வேதமாளிகை ரஸ்து: களஞ்சியம், godown, store-house. வேதம் என்ற மாளிகையில் பொதிந்து வைக்கப்பட்ட செம் பொருள், மெய்ப்பொருள்.

செய்யுள் 2

ஞானமே கருணை ஆனந்தமே சொந்தமே
நந்தர்கள் கணுபந்தமே
நாதாந்த மேய்ந்தமே தொந்தமே தந்த
னந்தமே தரு சந்தமே
மோனமே பிரதானமே திவிய பானமே
முக்கியமே மிகு சக்கியமே
மூலமே ஓலமே சீலமே கோலமே
மோக்கிஷ பக்கிஷ பொக்கிஷமே
மானமே அபிமான மேய தினமே
மார்க்கமே கன தீர்க்கமே
மாணிக்கமே முத்த மேபத்தமே சீவ
மா மகுடமே கனகமே
தானமே பேரின்பமே தம்பமே தேவ
சத்தியத் துறுதி தருவாய்,
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

அருஞ்சொற்பொருள்:

நந்தர்கள் கணுபந்தம் - இடையர் கூட்டத்தினுறவு; ஏய்ந்த - பொருந்திய; தொந்தம் - துவந்தம், சோடி; சக்கியம் - அன்பு; பத்தம் - உண்மை; கனகம் - பொன்; தானம் - கொடை; தம்பம் - ஸ்தம்பம், தூண்; மோக்கிஷ பக்கிஷ - மோட்ச பட்ச.

செய்யுள் 3

தேவாதிதேவே அனுதிவாழ்வே நித்திய
சீவகாவே உவாவே
செய்யபூவே ஞான பாவே நமாவே
திவிய பிதாவே நமாவே
ஏவாள் சுதாவே குதாவே யீசாவே யிஸ்ப்
பிரீத்துவே மேசையாவே
ஏக தாதாவே புருவே சொரூபே
என் நாவின் நாவே மன்னுவே

ஆஆ ஐயாவே அல்லாவே உலாவே
அவாவேஅல் லேலூயாவே
அல்பா ஒமெகாவே ரட்சியும் ஓச
னுவே அடர்ந்து வாவே
தாவீது கோவே சகாவே சமாவே
தயாலுவே யேயோவாவே
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

அருஞ்சொற்பொருள்:

உவா - நிறைவு; செய்ய - சிவந்த; சுதா - சுதன்; குதா - அல்ல; யிஸ்பிரீத்து - spirit, ஆவி; சகா - தோழன்; சமா - சமாஜம், கூட்டம்.

செய்யுள் 4

ஆதிமுடியா மறையின் ஆமன்அடியா அரூபியா
உருபியா சொரூபியா
ஆ, சரணயாஅடிமை ஆதரிஜயா கருணையா
கிருபையா பொறுமையா
வேதமறையா திறமையா முறைமையா மரண
வேளைவரு வாய்முன்னமேயா
மேசையா ஏசையா ஆசாரியா வலமை
மேவுகலிலேயா நசரையா
ஓதுமுரையா தருமநீதி நெறியா உரிமை
யாவரும் ஐயா பெருமையா
ஓ சகாயா நியாயா உபாயா செயா
ஒல்லியா அல்லேலூயா
சாதி நேயாபுய சுயாவலமையா தயா
தலைமையா பரமராயா
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

பொருள் — தெளிவு.

செய்யுள் 5

அனையும்நீ மனையும்நீ அருளும்நீ பொருளும்நீ
அணிகலப் பொக்கிடமும்நீ
அறமும்நீ திறமும்நீ சூட்சாதி சூட்சன்நீ
ஆனந்த ஆச்சரியநீ
மனமும் விற்பனமும்நீ நினைவும் உற்பனமும்நீ
வாணிபமும் ஆணுவமும்நீ

மந்திரநீ தந்திரநீ சிந்தையின் கருமநீ
மரபுநீ ஆதரவும்நீ
கனமுநீ தனமுநீ நயமும் நிச்சயமுநீ
காரணமும் ஆரணமும்நீ
கதியுநீ மதியுநீ தெரிவுநீ பரிவுநீ
கருணைகுரு குலதெய்வநீ
சனமுநீ இனமுநீ சகல சாம்பிராச்சியநீ
சத்தியத்துறுதி தருவாய்
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

செய்யுள் 6

அப்பன்நீ ஐயன்நீ அண்ணன்நீ தம்பிநீ
அண்ணுவியும் குருவும்நீ
அன்பன்நீ நண்பன்நீ என்பிராண நாயகனும்
ஆண்டவனும் மீண்டவனும்நீ
ஒப்புரவன்நீ திறவன்நீ குரவன்நீ உயிர்க்கு
உதவிய வயித்தியனும்நீ
உரிய பிணையாளிநீ அரிய மத்தியஸ்தன்நீ
உத்தம ஆச்சாரியனும்நீ
செப்புமுன் தூதன்நீ ஆயன்நீ நாயன்நீ
சேனுபதித் தலைவன்நீ
செங்கோலி ராசன்நீ என்பாவ நாசன்நீ
தேவதேவப் பிரபுநீ
தப்பிலா மெய்ப்பரம ரட்சகனும்நீ தேவ
சத்தியத்துறுதி தருவாய்
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

அருஞ்சொற்பொருள்:

திறவன் - திறமைசாலி, குரவன் - குரு.

பொருள் — தெளிவு.

கவிராசர் வேதநாயகர் பாடிய ஏழாம் எட்டாம் பதின்மூன்றும் செய்யுட்கள் பப்ரீசியுசு ஞானப் பாடல்களின் சொல்லும் பொருளும் கொண்டவை. இதனை ஆராய்வோம்.

செய்யுள் 7

பொரும் படைக்காயுதம், வானத்தின் அப்பம்,
புராதன மன்னு தங்கி வாழ்
பொன் அரண்மனை எனைச் சோடிக்கும் உடை, சிவ

புட்கரம் கருணாகரம்

கருங்கடலில் வழி தோற்றிய சமுக்கா, மரக்
கலம் எழ நடத்தும் சுக்கான்,
கடல் கொந்தளிப்பில் நங்கூரம், சலப்பிரவா
கத்தில் அக்கரைசெல் வங்கம்,

அரும்பிணிக்கு அமிழ்தம், இராவில் நட்சத்திரம்,
அரியசீவனின் விருட்சம்,
அன்பான போசனம், செல்வப் பூங்காவனம்,
ஆனந்த தீவிதாட்சி

தரும் சுகந்தம்படர் குளிர்ந்த பூஞ்செடியும்நீ
சத்தியத்துறுதி தருவாய்
தாதையாகிய வஸ்து, வேத மாளிகை ரஸ்து
சாமி யேசுக் கிறிஸ்துவே.

அருஞ்சொற்பொருள்:

பொரும் படைக் காயுதம் - போரிடும் படைக்கு ஆயுதம்; புராதன மன்னு - பண்டைய மன்னர்; சீவ புட்கரம் - சீவ தண்ணீர் கொடுக்கும் குளம்; சமுக்கா - வழிகாட்டுங் கருவி, Compass; சுக்கான் - rudder, the helm of the ship; வங்கம் - மரக்கலம், கப்பல்; தீவிதாட்சி - முந்திரிகை, grapes; தரும் சுகந்தம் படர் - நறுமணம் படர்ந்து குளிர்ந்த பூஞ்செடி.

பப்ரீசியுசு ஐயரும் மற்றும் பலரும் ஜெர்மன் மொழியிலிருந்து தமிழாக்கம் செய்த பன்னூறு ஞானப் பாடல்களை வேதநாயகர் அவற்றைப் பாடிப் பயின்று அநுபவித்தார். அவற்றில் ஒன்று J. Ch. Lange (+1756) என்ற ஜெர்மன் லுத்தரன் பக்தர் இயற்றிய ஞானப் பாடல். தமிழ்ச் சுவிசேஷ லுத்தரன் திருச்சபையார் இன்றளவும் ஆலய வழிபாட்டில் வழங்கி வருவதில் 138ஆம் எண் கொண்டது. அதில் 18 கவிகள் உள்ளன. குரலெடுத்துப் பாடி மனப்பாடம் செய்தமையால் வேதநாயகர் அதனோடு ஒன்றித்து அதன் சொல்லையும் போருளையும் நாம் ஆராயும் பகுதியில் லளித மாகப் பெய்துவைத்துள்ளதை ஒப்புநோக்குவோம்.

வேதநாயகர்	பப்ரீசியுசு பாடல் எண் 138
செ. 7. பொரும் படைக் காயுதம்	கவி. 14. படையில் நீர் சேனுபதி
வானத்தின் அப்பம்	நீர் வானத்தப்பம் (7)
புராதன மன்னு தங்கி வாழ் பொன் அரண்மனை	நீர் நான் புசித்துத் தங்குகிற அரண்மனையும் வீடும் (10)

என்னைச் சோடிக்கும் உடை	நீர் என்னை ஜோடிக்கும் உடை (9)
சீவ புட்கரம்	நீர் ஜீவ ஊற்று (8)
கருங்கடலில் வழிதோற்றிய	கருங்கடலில் நீர் வழி காண்பிக்கும்
சமுக்கா, மரக்கலமெழ நடத்தும் சுக்கான், கடற் கொந்தளிப்பில் நங்கூரம், சலப்பிரவாகத்தில் அக்கரை செல் வங்கம்	சமுக்கா, எழும்புங் கொந்தளிப்பில் நீர் என் நங்கூரம் (14)
அரும்பிணிக் கவிழ்தம்	ஆரோக்கியம் நற்சீரும் (8)
இராவில் நட்சத்திரம்	நீர் ராவில் என் நட்சத்திரம் (15)
3. இருளதில் பகவத்தி (தீவட்டி)	இருளில் என் தீவர்த்தி (15)
7. அரிய சீவனின் விருட்சம் (மரம்)	நீர் ஜீவனின் விருட்சம் (16)
செல்வ பூங்காவனம்	நீர் செல்வம் பொழியும் பூங்காவனம் சுகந்தருங் கனியும் (16)
குளிர்ந்த பூஞ்செடி	குளிர்ந்த பூஞ்செடியும் (16)
8. துக்கத்தில் ஆறுதல், என் வாழ்வில் களிப்பு நீ, துன்பத்திலென் இன்பம் நீ தொறுவும் வேலையில் அலுவல் பகலில் என் சிந்திப்பு, தூக்கத்திலென் சொப்பனம் ராவில் என் பக்கத்தில் அடைக்கலம்	நீர் துக்கத்தில் என் ஆறுதல், நீர் வாழ்வில் என் களிப்பு, நீர் வேலையில் என் அலுவல், பகலில் என் சிந்திப்பு, நீர் ராவில் என் அடைக்கலம் நீர் தூக்கத்தில் என் சொப்பனம்

ஏழாம் எட்டாம் செய்யுட்களில் பப்ரீசியுசின் ஞானப் பாடல் எண் 138: 'பிரியமான இயேசுவே' என்றதின் சொல்லையும் பொருளையும் உணர்ந்தவராய்த் தம் பாணியில் பாடுகின்றார் கவிஞர்.

செய்யுள் 8

துக்கத்தில் ஆறுதல் என்வாழ்வில் களிப்புநீ
துன்பத்தில் எனது இன்பம்நீ
தொறுவும் வேலையில் அலுவல் பகலில்என்சிந்திப்பு
தூக்கத்தில் என் சொர்ப்பனம்

பக்கத்து இராவினில் அடைக்கலம் இருளதில்
பகவத்தி எனது சத்தி
படுகுறையில் ஐசுவரியம் கசப்பினில் அமுது
பல தாழ்வில் என்து வாழ்வு
மிக்க பெலயீனத்தில் என் பெலன் தொய்வுற
மெலிவதனில் எனது வலிமை
விழிப்பிற் குறிப்பு உறவின் ஞான பானம் (நீ) நீ
விமோசனம் பவ நாசனம்
தக்க யோக்கியம் மனேக்கியம் சலாக்கியமும் நீ
சகலபாக் கியமும் நீயே
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

அருஞ்சொற்பொருள்:

தொறுவு, வேலை, அலுவல் - பல சொல் ஒரு பொருள். பல அலுவல்களில் நீ என் வேலை; பக்கத்து இரா - அடுத்த இரவு; பகவத்தி - தீவட்டி.

6:8. நயவுரை: இச் செய்யுளின் அணிநலம்:

இதுவோர் முரண்டொடைச் செய்யுள் என்பதை மேலே சுட்டினேம். முரண்தொடை என்பது Oxymoron என்று ஆங்கிலத்தில் கூறப்படும். "Figure of speech with pointed conjunction of seeming contradictories (e.g. faith unfaithful kept falsely true." Oxford Dictionary).

துக்கத்தில் என் ஆறுதல்; துன்பத்தில் எனதின்பம் நீ; படுகுறையில் ஐசுவரியம்; கசப்பினில் அமுது; தாழ்வில் வாழ்வு; பெலயீனத்தில் என் பெலன்; மெலிவில் வலிவு.

இவை போன்ற பாடல்களில் வேதநாயகர் தம் சுய சரிதையை இலேமறை காயாகவும் ஜெபமாலை 17-லும், 26:11-லும் உள்ளங்கை நெல்லிக்கனியாகவும் வெளிப்படுத்தியுள்ளதைக் காண்க.

செ. 9. இச் செய்யுளில், 'வேத மாளிகை ரஸ்து' என்றபடி, வேதம் என்ற பெரு மாளிகையில் (Super-Market) உள்ள சரக்குகளைக் குறிப்பாக எடுத்தோதுகின்றார். பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்களை வரலாற்றுக்கிரமமாகச் சுட்டி, மீட்பின் வரலாற்றை வரைகின்றார் சரித்திர ஆசிரியர் போன்று. இது History of Salvation என்று ஆங்கிலத்திலும்—Hoilsgeschicte என்று ஜெர்மன் மொழியிலும் சொல்லப்படும்.

பவுல் அப்போஸ்தலன், 1 கொரி. 6:3-10-இல் தமது அப்போஸ்தலப் பணியின் மேன்மையையும் தமது நற்செய்திப்

பிரசங்கப் பணியினால் வரும் இன்ப துன்பங்களையும் செய்யுள் முறையில் வரைந்துள்ளார். இதனையோர் சாமான்னிய மனித னுகச் சொல்லாமல் கடவுளால் அழைக்கப் பெற்றுத் தெய்வ சக்தி யோடு செய்யும் கடவுள் திருப்பணி என்ற பெருமிதத்தோடு வரையலுற்றார். 1 கொரி. 6:3–10-இல் தங்கள் திருப்பணியின் தன்மையை விளக்குகிறார்: ஒரு பக்கத்தில் துன்பத்தையும் மறு பக்கத்தில் இன்பத்தையும் முரண்படு தொடர்களாக அமைத்துப் பாடுகின்றார் பவுலடிகள்.

''துன்பங்களையும் இடுக்கண்களையும் மிகுந்த பொறுமையோடு தாங்கிக்கொள்கிறோம்.''

நாங்கள் அடிக்கப்பட்டோம்;
பன்முறை காவலில் வைக்கப்பட்டோம்;
கலகங்களில் சிக்குண்டு தவித்தோம்;

ஓய்வு, உறக்கம், உணவு இன்றி இடையறாது உழைத்தோம்.

மறுபக்கத்தில் தமது இன்பப் பணிகளைக் கூறுகிறார்.

6:6–7 ''எங்கள் தூய்மை, அறிவு, பொறுமை, பரிவு ஆகிய வற்றின் மூலமும், தூய ஆவி, களங்கமற்ற அன்பு, சத்தியத்தை அறிவித்தல், கடவுளின் ஆகியவற்றின் மூலமும்,

எங்களைக் கடவுளின் ஊழியர்களெனக் காட்டி வருகிறோம்.
தாக்கவும் காக்கவும் கடவுளின் நீதியே எங்கள் ஆயுதம்.

6:8 நாங்கள் புகழப்படுகிறோம்; இகழப்படுகிறோம்;
போற்றப்படுகிறோம்; தூற்றப்படுகிறோம்;
எங்களை வஞ்சகர் என்கிறார்கள்; நாங்களோ நேர்மை வழுவாதவர்கள்.

6:9 நாங்கள் யாரும் அறியாத ஆள்கள் என்கிறார்கள்;
ஆனால் அனைவரும் எங்களை அறிவர்;
செத்துக்கொண்டேயிருக்கிறோம்; ஆயினும், இதோ,
உயிரோடிருக்கிறோம்;
தண்டித்துத் திருத்தப்படுகிறோம்; ஆனால்
கொல்லப்படவில்லை;

6:10 துயரத்தில் ஆழ்த்தப்படுகிறோம்; என்றாலும், மகிழ்ச்சி யோடிருக்கிறோம். நாங்கள் ஏழைகளாயினும் பலரை வளமுள்ள வர்களாக்குகிறோம். நாங்கள் ஒன்றும் இல்லாதவர்களே என்றா லும், அனைத்துமே எங்களுக்குச் சொந்தம்.

ஒப்புநோக்கு:

சங்கீதம் 118:17–18.

''நான் சாகமாட்டேன், உயிரோடிருப்பேன்;
கடவுள் திருச்செயல்களை(ப் பாடல்களாக) எடுத்துரைப்பேன்,

ஆண்டவர் என்னைக் கடுமையாகத் தண்டித்தார்;
ஆனால் சாவினிடம் என்னை அவர் ஒப்புக்கொடுக்கவில்லை.''
''I will not die; instead, I will live
and proclaim what the Lord has done.''
Good News Bible J.E.V.

இத்தகு மகா வாக்கியங்களை நன்கறிந்து உணர்ந்தவர் J. Christian Lange (+ 1756) என்பார் பாடிய 'பிரியமான இயேசுவே' என்ற பப்ரீசியுசு ஞானப் பாடல் எண் 138-ஐப் பாடி மகிழ்ந்து மனப்பாடம் செய்து இந்த 7-ஆம், 8-ஆம் செய்யுட்களைப் பாடி வைத்தார் நம் கவிப் பக்தர் வேதநாயகர். பவுலாரும் Langeயும் சொல்லியவற்றை, 'துன்பத்தில் எனது இன்பம் நீ' என்று 'சாமியேசுக் கிறிஸ்து'வை நேர்முகமாக விளித்துக் கூறினர்.

இவற்றிற்கு அடியேன் உரையாசிரியனும் பணிந்து குனிந்து 'ஆமேன்' என்கிறேன்.

செய்யுள் 9

ஞானதம் ஆரகம் சிந்தும் ஆபேல், பேழை
நல்கி உயிர் காத்த நோவா,
நற் கோத்திர ஆபிரகாம், பொறுதி உறுதி கொள் யோபு,
ராசகுரு மெல்கிசேதேக்,
காணு ஆதி அந்தம் சுதந்தர ஈசாக்கு
யூதா சிங்கம், மந்திரி யோசேப்பு,
அடுஞ் சிறைவிடுத்த மோசே, முன் பிரதான
ஆசாரியான ஆரோன்
சேனுதிபன் யோசுவா, பெலிஸ்தரையெலாஞ்
சிதறடிக்கும் சிம்சோன்,
செய பராக்கிரம தாவீது, உன்னத சாலமோன்
தீர்க்கன் எலியா உக்கிரன்,
தானுக மீன் ஆணையான யோனு, ஞான
தானியேல், இம்மானுவேல்;
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

அருஞ்சொற்பொருள்:

ஆரகம் - இரத்தம்; காணுதியந்தம் சுதந்தர - காணு தொடங்கி முடிவு மட்டுமுள்ள நிலத்துக்கு உரிமையுள்ள ஈசாக்கு; தீர்க்கன் எலியா உக்கிரன் – மகா கோபியாகிய தீர்க்கதரிசி எலியா.

(சிம்சோன் – இவ்வுரையாசிரியரின் தந்தையார் பெயர்) மீன் ஆணையான யோனு - மீன் அடையாளம் கொண்ட யோனு.

தேவ லட்சணத்தின் கூறுபாடுகள்

செய்யுள் 10

ஒருதெய்வம் நீஉன் சுவாபமோ தாஞுய்
அஞுதியாய் உடலில்லாமை
ஓங்கும் பிதாச் சுதன் பரிசுத்தரூபி என்று
உனது திரியேக மகிமை
அரியஉன் திருலட்சணத் தாதி அந்தமில்
லாதவன் மாறுதவன்
அணைய சருவத்துக்கும் வல்லவனெல்லாம்
அறிந்த அளவற்ற ஞானன்
பரவி எங்கும் நிறைந்தோன் மிக்க சத்தியன்
பரிசுத்த நீதியுடையோன்
பக்கிஷமுங் கிருபையு முள்ளவன் தொழிலோ
படைத்தளித்து உவனிப்பவன்
தருமாதி வினைதீர உருவாகி யிரதான
சகலபா டேற்ற ததீகன்
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

அருஞ்சொற்பொருள்:

பக்கிஷம் - பட்சம்; உவனிப்பவன் - தூய்தாக்குபவன்.

தேவலட்சணத்தின் கூறுபாடுகள்:

1. ஒப்பாருமிக்காருமற்ற ஒருவன் 2. தான் தோன்றி 3. அஞுதி 4. அரூபி 5. திரியேகன் 6. ஆதியந்தமில் லாதவன் 7. மாறுதவன் 8. சருவ வல்லவன் 9. அள வற்ற ஞானமுள்ளவன் 10. எங்கும் நிறைந்தவ 11. சத்தியன் 12. பரிசுத்தன் 13. நீதியன் 14. அன்பன் 15. கிருபை 16. முத்தொழிலோன் 17. வினை தீர உருவாகி 18. அரிய பலபாடுபட்ட அதீதன்.

செய்யுள் 11

அந்தர நிரந்தர துரந்தர தந்தர
அனந்தர சுதாரிதாரி
ஆரி அவதாரி அசரீரி உபகாரி அதி
காரி ஆசாரி அகாரி
மந்தர பயங்கர பரம்பர கருணம்பர
வசந்த சாந்திர நரேந்திர

மாதர தயாபர பராபர கிருபாகர
மஞ்ஞைகர பதார திர
சுந்தர சவுந்தர குணேந்திர தெய்வேந்திர
சக மங்கள கல்யாணி பாணி
சுயாதிப சயாதிப தயாதிப நியாதிப
சுகாதிப சொரூபி ரூபி
தந்திர வியந்தர மடங்களது அடங்குறு
தடாரி சங்காரி கோரி
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

மிச்சமான சொற்கள் வட சொல்லாயிருத்தலின் வேதநாயகர் தாமே கொடுத்துள்ள பொருளை வரிசைக்கிரமமாகக் காட்டுகிறோம்:

1. அந்தர - ஆகாயம்; நிரந்தர-நெருக்கம்; துரந்தர-வல்லபம்; சுதந்தர - உரிமை; அனந்தர சுதாரி - அளவற்ற அரசரினுதாரி.

2. ஆரி - மேன்மை; அவதாரி - மனுடவதாரி; அசரீரி - அரூபி; உபகாரி - ஈகையாளன்; அதிகாரி - அதிபதி; ஆசரி - ஆசாரி; அகாரி - கடவுள்.

3. மந்திர - ஆலோசனை; பயங்கர - அச்சம்; பரம்பர - வமிச பாரம்பரை; கருணும்பர-கிருபா சமுத்திரம்.

5. சுந்தர - சவுந்தர - அழகு; குணேந்திர - குணமுள்ள ராசா; தெய்வேந்திர - தேவேந்திரன்; சுகமங்கள - நல் வாழ்த்து; கலியாணி—; பாணி - கீதம்.

6. சுயாதிப – சக்கரவர்த்தி; சயாதிப - வெற்றியுடைய; தயாதிப - கிருபையுடைய; நியாதிப - நீதியுடைய; சுகாதிப – வாழ்வுடைய; சொரூபி - சுரூபி; ரூபி – உருபி.

7. தந்திர - உபாயம்; வியாந்தர - பிசாசம்; மடங்கள் - மூடர்; அடங்குறு - அடங்கப்பண்ணும்; தடாரி - பேரிகை; சங்காரி - சங்கரிக்கிறவர்; கோரி – விரும்புதல்.

செய்யுள் 12

துங்கா அனங்கா பிரசங்கா தரங்கா
துரந்தர புரந்தரீகா
தூதா அதீதா விஞ்ஞைதா என்நாதா
சுமுத்திர சமுத்திர முத்திரா
அங்கா நிசங்கா திகந்தா சுகந்தா
அகண்டபர மண்டலாதிபா

ஆசா உலாசா சருவேசா நரேசா
அனந்த யோசனே விலாசா
புங்கா நலங்கா வணங்கா மணங்கா
புகழ்த்து சொற் பிரவடுகா
புராணு கல்யாணு பிரதாணு நிதாணு
புராதனு கிருபாசனு
தங்காதி சங்காதிரித்துவ காத்திர வேத
சாத்திரி வழுத்து தோத்திரா
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

இவ்விரு செய்யுட்களைப் பாடியவர் வடமொழியறிந்தவர் என்பது தேற்றம். மேலே கண்ட செய்யுட்களில் வந்த சொற்களில் பல இங்கும் வந்துள்ளன.

பொருள் — தெளிவு.

அருஞ்சொற்பொருள்:

1. துங்கா - உயர்ந்தவனே; அனங்கா - அ + அங்கா = அங்கம், உடல் இல்லாதவனே; பிரசங்கா - வியாக்கினியே; தரங்கா - கடலே; துரந்தர - வல்லவனே; புரந்தரீகா - காக்கிறவனே;

2. தூதா - சமாதானம் பேசுவோனே; அதீதா - உயர்வற உயர்ந்தவனே; விஞ்ஞதா - அதிசயமானவனே; எஞ்ஞதா - என் நாதனே; சுமுத்திர - நிதானி; மித்திர - சிநேகா; சமுத்திர - கடலே;

3. அங்கா - வேதாங்கமே; நிசங்கா - இணக்கமே; திகந்தா - திக்கு + அந்த - திக்கின் முடிவே; சுகந்தா - நறுமணமே; அகண்டா - அ + கண்டா - துண்டிக்கப்படாத - எல்லா-in-divisible; பரமண்டல அதிபனே;

4. ஆ, சாவு உலாசா - ஆகாத மரணத்தை உல்லாசமாக்கினவனே; சருவேசா - சர்வ ஐச்வரியனே; நரேசா - நர + ஈசா = மக்களின் ஈசனே; அனந்த - அ + அந்த = முடிவில்லாதவனே; யோசனே - ஆலோசனே; விலாசா - விசாலமானவனே.

5. புங்கா - உயர்ந்தோனே; நலங்கா - நல் + அங்கா; வணங்கா - யாரையும் வணங்காதவனே; மணங்கா - ஆட்டுக் குட்டியே; புகழ்ந்து சொற்பிரவடுகா - புகழ்ச் சொற்களின் பேரழகே;

6. புராணு - பழையோனே; கல்யாணு - மங்களமானவனே; பிரதாணு - விசேடமானவா; நிதாணு-நிச்சயமானவா; புராதனு - பழையோனே; கிருபாசனு - கிருபை ஆசனத்தில் வீற்றிருப்போனே;

7. தங்காதிசங்கா - தங்கிய ஆதி சங்கத்தோனே; திரித்துவ காத்திர - வலிமையுள்ள திரித்துவனே; வேதசாஸ்திரி வழுத்து தோத்திரா - வேதசாஸ்திரி வாழ்த்துக்கும் தோத்திரத்துக்கும் பாத்திரனே.

தாதையாகிய வஸ்து. . .

ஒப்புநோக்கு:

வேதநாயகர் செ. 8	பர்ரியுசு கவி 15
படுகுறைவில் ஐசுவரியம், கசப் பினில் அமுது, பல தாழ்வில் எனது வாழ்வு பலவீனத்தில் என் பெலன், தொய்வுற்று மெலிவதனில் எனது வலிமை	குறைவில் என் ஐச்வரியம் என் தாழ்வில் என் உயர்த்தி கசப் பிலே என் மதுரம் நான் தொய்ந்தால் மீண்டும் என் பலக்க நீர் என் சத்தி.

6 தேவலட்சணம்: 13. இறுதிச் செய்யுள்

செய்யுள் 13

காலமே வா, மிகத் தாமதஞ் செய்யாது
கடுசீக்கிரம் விரைவாக வா,
கவனமாய்ச் செய்திகளெ லாத்தையும் கேள், உனது
காது சாய்த் துறுதியாய்க் கேள்;
வேலையில் என் அலுவலாய் நில்லு, பத்திரமாய் என்
வீட்டை முழுதுங் காத்திரு,
வெளியில் நான் போகையில் கூடவா, மீள்கின்ற
வேளையும் என்னைப் பின்தொடர்,
சோலிவைக்கா்து எனக்கு ஆகவேண்டியதெல்லாம்
சுறுசுறுப்புடனே செய்,
தூங்காது இராப்பகல் கண்விழிப்பாய் நின்று
சொன்னபடி யெல்லாம் நட,
சாலவே வேதநாயகனே உன்கவி யென்று
சகல பேர்க்கும் சொல்லிவை,
தாதையாகிய வஸ்து வேதமாளிகை ரஸ்து
சாமியேசுக் கிறிஸ்துவே.

தாதையாகிய வஸ்து - தந்தையாகிய செம்பொருள்; வேத மாளிகை ரஸ்து - வேதம் என்ற பெருமாளிகையில் வைக்கப்பட் டிருக்கும் சரக்கு எது? அது 'சாமியேசுக் கிறிஸ்துவே.' சாமி - சுவாமி. நீ எனக்குத் தேவ சத்தியத்தில் உறுதி தருவாயாக என்று வேண்டுகிறார்.

இனி, முதல் மூன்று பகுதிகளில் தேவ இலட்சணத்தின் 27 கூறுகளை எண்ணிடுகின்றார்:

1. ஆதி, ஆதிக்குமுன் அனுதியில் அனுதியே: இதற்கு வேத நாயகர் கொடுத்த விளக்கம்: 'துவக்கமில்லாமையிற் பராபரன் தமது பெயரின்படி அனுதியாயிருக்கிறார்.'

செபமாலை முதற் செய்யுளில்: 'அதுமுன் அதுமுன் அதுமுன் சரணம்' என்றார்.

2. அரூபியே சுய சொரூபியே - உருவமற்றவர், எனினும் அவர்க்கோர் சுயரூபம் உண்டு.

3. ஆசை, 4. அருள், 5. ஞானபூசை, 6. ஓசை, 7. அருமை, 8. மன ஒருமை, 9. நிதானம், 10. யுத்தி, 11. புத்தி, 12. உண்மை, 13. வண்மை, 14. உச்சிதப்பதவி, 15. நிச்சயத்துதவி, 16. கேண்மை, 17. ஆண்மை, 18. சோதிநிதி, 19. சூட்சிகாட்சி, 20. சாட்சி, 21. தூய்மை, 22. வாய்மை, 23. தொன்மை, 24. நன்மை, 25. செவ்வி, 26. சுயாதிபதி, 27. கனதி.

இத்தனை லட்சணங்கள் பொருந்திய சாமியேசு கிறிஸ்துவே, தேவ சத்தியத்துறுதியை எனக்குத் தருக.

இவ்வாறு ஏனைய செய்யுட்களிலும் இத்தகு லட்சணங்களை எண்ணிட்டு ஏட்டில் எழுதி மனத்தில் வைத்துத் தினந்தோறும் 'சாமியேசுக் கிறிஸ்துவே' என்று செபிப்போமாக.

பொருள்:

ஒரு பச்சத்தில் தெளிவு. எனினும் கூர்ந்து நோக்குமிடத்து, ஆழமுடைத்து வேதநாயகர் சொல் வழக்கு என்பதைக் காண்போம். இப்பதிகத்தின் முதல் பன்னிரண்டு செய்யுட்களில் கவிஞர் தம்மை ஆண்டவன் யேசு சுவாமிக்கு அடியாளைப் பணிந்து குனிந்து தெண்டனிட்டவர், இச் செய்யுளில் தலைகீழ்ப்பாடமாக மாற்றி விட்டார். ஆண்டவனை அடியாளைவும் தன்னை ஆண்டவனைவுங் கொண்டு, 'சாமியேசுக் கிறிஸ்துவே' என விளித்து, இன்று அவன் தமக்குச் செய்யவேண்டிய பணிகள் யாவை எனப் பட்டியல் போடுகிறார் Orders for the Day.

காலமே வா; விரைவாக வா, தாமதஞ் செய்யாது கடு சீக்கிரம் வா; நான் சொல்லுகிற சேதிகளைக் கவனமாய்க் கேள்; காது சாய்த்துக் கேள்; வேலையில் என் அலுவலாய் நில்லு; என் வீட்டை முழுதுங் காத்திரு—காவல்காரன் வேலையைச் சரியாய்ச் செய்; வெளியே நான் போகையிற்கூட வா; திரும்பிவரும் வேளையில் என்னைப் பின்தொடர்; சோலிவைக்காதே—வேறு வேலை செய்யப்

போய் எனக்குத் தொந்தரவு செய்யாதே; என் வேலைகளைச் சுறு சுறுப்பாக உடனுக்குடன் செய்; ராப்பகல் கண்விழிப்பாக, தூங்கு மூஞ்சியாயில்லாமல் நின்று (படுக்காமல், உட்காராமல்) நான் சொன்ன பேச்சுக் கேட்டு நட. கவி வேதநாயகனே உன் கவிஞன் என்று நல்லா சகலபேர்க்கும் சொல்லிவை, தெரியுமா? சாக்கிரதை.

இதில் நாட்டுப் பேச்சு, கொச்சை மொழி, அதிகார தோரணை வெளிப்பட்டுள்ளவற்றைக் காண்க.

ஒப்புநோக்கு:

கவிபாரதியார், கண்ணன் பாட்டு

கண்ணன் - என் சேவகன்:
'கண்ணனேநான் ஆட்கொண்டேன்; கண்கொண்டேன்
கண்கொண்டேன்
கண்ணனெனை ஆட்கொள்ளக் காரணமுமுள்ளனவே'
கண்ணன் - என் சீடன் என்ற பாட்டில்:
'.....யானுமங்கவனை
உயர்நிலைப் படுத்தலில் ஊக்கமிக் கவனுய்,
'இன்னது செய்திடேல், இவரொடு பழகேல்,
இவ்வகை மொழிந்திடேல், இனையன விரும்பேல்,
இன்னது கற்றிடேல், இன்னநூல் கற்பாய்,
இன்னவர் உறவுகொள், இன்னவை விரும்புவாய்'
எனப்பல தருமம் எடுத்தோதி
ஒய்விலா தவனெடு உயிர்விட லானேன்.'

பாரதியார் சீடனுக்கு நல்லுரை பகர்ந்தது உயர்ந்த நடையி லிருக்கிறது. வேதநாயகர் சாமியேசுக் கிறிஸ்துவுக் குரைத்தது கொச்சை மொழியில், அதிகார தோரணையில் இருக்கிறது என்பதை மேலே கண்டோம்.

வேதநாயகர்க்குப் பின்வந்த ச. ப. ஞானமணி ஐயர் தம் நெஞ்சுக்குத்தாமே நல்லுரை நல்கிய தோரணையைப் பார்ப்போம். C.L.S. கீர்த்தனை எண் 329.

வேதநாயகர் 'காலமே வா' என்ற வியங்கோள் வினைச் சொல்லுக்கு மாறுக ஞானமணி ஐயர்,

'காலமே தேவனைத் தேடு', 'பாதம் பணிந்து மன்றாடு', 'பதம் பாடிக் கொண்டாடு', 'பண்ணு', 'வெல்லு', 'நில்லு', 'சிந்தனை செய்', 'மனுவேலனைப் பணியக் காலமே தேவனைத்தேடு' என்று தமக்குத்தாமே (பிறர்க்கும்) விதியமைத்துக்கொண்டார்.

இஃது இவ்வாறிருக்க, நம் கவி வேதநாயகர், ஆண்டானைத் தன் அடிமையாக்கித் தனக்குப் பணி செய்யக் கூவியதற்குக் காரணமென்ன என்பதை ஆராய்வோம். வேத நாயகர், வேத நூல் ஆதாரமின்றி ஒன்றையும் துணிச்சலாகப் பாடமாட்டாரே. இச் செய்யுளில் இவ்வாறு பாடியதேன்?

இவ்வினாவிற்கு விடையாக என் மகள் திலகவதியார் ஏசாயா 45:11ஐச் சுட்டிக் காட்டிச் சமாதானம் சொன்னார்: 'இஸ்ரவேலின் பரிசுத்தரும் அவனை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: 'வருங்காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள்; என் பிள்ளைகளைக் குறித்தும், என் கரங்களின் கிரியைகளைக் குறித்தும் எனக்குக் கட்டளையிடுங்கள்' . . . என்றார்.

இதைக் கேட்டது எனக்குப் புதுமையாகவும் மலைப்பாகவு மிருந்தது. 'எனக்குக் கட்டளையிடுங்கள்' என்று ஆண்டவர் அடியானுக்கு இடங்கொடுப்பாரா என்பது என் விசாரணையாயிற்று.

பவரையர் மொழிபெயர்ப்பில் (1870) மேற்கூறியவாறு 'எனக்குக் கட்டளையிடுங்கள்' எனப்பட்டது. ஆனால் 1–3–1970, அதாவது நூறு ஆண்டுகளுக்குப்பின் வந்த கத்தோலிக்கர் திருத்திய மொழிபெயர்ப்பில்: 'நம் பிள்ளைகளைப்பற்றி நம்மைக் கேட்பதும், நம் கைவேலையைக் குறித்து நமக்குக் கட்டளையிடுவதும் உங்கள் வேலையா?' என நல்ல முறையில், உடன்பாட்டில் சொன்னதை எதிர்மறை வினாவாகக் கூறப்பட்டது.

ஆனால், வேதநாயகர் 1870-இல் இல்லையே என்றால், பவரையருக்கு முன்னோடியாகவிருந்த பப்ரீசியுசையர் மொழிபெயர்ப்பைத் தங்க மொழிபெயர்ப்பென்றே வேதநாயகர், அந்த வாசகத்தையே தமக்கு ஆதாரமாகப் பாடியிருத்தல் வேண்டுமென்க.

7. தேவ சுபாவ மகிமை

உபயார்த்தம்

உபயார்த்தம் - உபய + அர்த்தம் = இரு பொருள் கொண்ட ஒரு சொல். One word with two meanings. Double entendre.

எட்டுச் சோடி அடிகள்கொண்ட இப் பாடல்களில் சோடி களில் உள்ள இரண்டு அடிகளும் ஒரே சொல்லைக் கொண்டனவா யினும், முதலடிச் சொல்லின் பொருள் அடுத்த அடியின் சொற் பொருள் வேறுபட்டு இருக்கும். புணரியல் இலக்கண விதிப்படிச் சொற்களைப் பிரித்துப் பொருள் காணல்வேண்டும். இவ்வாறு காண்பது கடினம் என்றறிந்த ஆசிரியரே பொருள் காட்டி யுள்ளார். இதைக்கொண்டு ஒல்லும் வகையால் யாம் உரை காட்டியுள்ளோம்.

செய்யுள் 1

பொன்னுட்டவர்கள் வணங்கானே
பொன்னுட்டவர்கள் வணங்கானே
பூமிக்கான வாதவனே
பூமிக்கான வாதவனே
தன்னுட்டியத்தா வீதருளே
தன்னுட்டியத்தா வீதருளே
தாவானவர்க்குச் சாந்தானே
தாவானவர்க்குச் சாந்தானே
உன்னுட்டளவைக் கரியானே
உன்னுட்டளவைக் கரியானே
ஊழிக்கால முதியானே
ஊழிக்கால முதியானே
என்னுட்டியக்கந் தாராளே
என்னுட்டியக்கந் தாராளே
ஏயோவாவே காகாவே
ஏயோவாவே காகாவே

இவ் எட்டுச் சோடிகளின் பொருள்:

பொன்னுட்டவர்கள் வணங்கானே - வான நாட்டவர்களால் வணங்கப்பட்டவனே.

பொன்நாட்டவர்கள் வணங்கானே - பொன்னில் நாட்டம் உடையவர்களால் வணங்கப்படாதவனே.

பூமிக்கான வாதவனே - பூமிக்கான ஆதவனே, சூரியனே;

பூமிக்கான வாதவனே - அழகு மிகுந்தவா, தவத்தோனே.

தன்னுட்டியத்தா வீதருளே - தன் என்னும் நாட்டியம் ஆடும் தாவீதின் கிருபையே.

தன்னுட்டியத்தா வீதருளே - தன் மனையாட்டியாகிய திருச் சபைக்குப் பிதாவே, தாவீதுக்கு அளித்த கிருபையை எனக் கருளும்.

தாவானவர்க்குச் சாந்தானே - தாவு - புகலிடம்; சாந்து - வாசனைச் சாந்து; உன்னைப் புகலிடமாகக் கொண்டவர்க்கு வாசனை யானவன்.

தாவானவர்க்குச் சாந்தானே - தாவு—கெட்டுப்போனவர்க்கு; சாந்தானே - சாந்தமானவனே.

உன்னுட்டளவைக் கரியானே - (1) கரியான்—அரியவன், (2) கரி - சாட்சி. உன்னிய செயலளவுக்கு அரிதானவன்;

உன் ஆடுகளின் நான் கரியானே - உன் ஆடுகளுக்கு, நாட் சாட்சி, அன்றுடகச் சாட்சி ஆனவன்.

ஊழிக்கால முதியானே - முடிவுக் காலத்தில் முதியவனே.

ஊழிக்காலம் உதியானே - பகையை இக்காலத்தில் உதிக்கச் செய்யாதவன்.

என்னுட்டு இயக்கம் தாரானே - என் நாட்டியக் கூத்து இயக்க மாகிய சதுர்ப் பிரசங்கத்தில் வீசும் மாலையே.

என்னுட்டியக்கந் தாரானே - எந்நாளும் தியக்கம் தராத வனே.

ஈற்றடிகள் இரண்டும் ஒவ்வோர் செய்யுளின் பல்லவிகளாகும்.

ஏயோவாவே காகாவே - ஏ, ஓ, விடுதலையே, காகாவே - பூங்காவனச் சோலையே.

ஏ யோவாவே, ஏ கோவாவே, காரும், காரும்.

ஒப்புநோக்கு:

சைவத் திருமுறைத் திருக்களிற்றுப் படியார் பாடல் 78-க்குப் பேராசிரியர் க. வெள்ளைவாரணர் அருளிய உரைப் பகுதியைக் காண்க: பக். 123.

செய்யுள் 78.

நங்கையினல் நாமனைத்துஞ் செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினற் செய்தளிக்கும் நாயகனும்—நங்கையினும்
நம்பியாய்த் தானடுவே நாட்டப் பெறுமிது காண்
எம்பெரு மானுர்தம் இயல்பு.

அருஞ்சொற்பொருள்:

'நங்கையினல்' என்ற தொடர், முதலடியில் நம் கையினல் என இரு சொற்களாய்ப் பிரிந்தும், இரண்டாமடியில் 'நங்கையினல்' என ஒரு சொல்லாய் நின்றும் இரு பொருள் தந்தது.

பொருள்:

'நாம் நம் கையினல் அனைத்தும் செய்தாற்போல, நாயகனும் நங்கையினல் நாடு அனைத்தும் செய்தளிக்கும்' என இயையும்.

செய்யுள் 2

1. வல்லத் தடமா மாதங்கமே
வல்லத் தடமா மாதங்கமே

2. மலையாவலையா மாதங்கமே
மலையாவலையா மாதங்கமே

3. செல்லத் தருவா திருக்கானே
செல்லத் தருவா திருக்கானே

4. செப்பத் துரையே தானனே
செப்பத் துரையே தானனே

5. சொல்லத் தந்தா தந்தையரே
சொல்லத் தந்தா தந்தையரே

6. தொந்தத் தந்தா நந்தலிவா
தொந்தத் தந்தா நந்தலிவா

7. இல்லத் தனத்தா ரார்வலனே
இல்லத் தனத்தா ரார்வலனே

8. ஏயோவாவே காகாவே
ஏயோவாவே காகாவே.

பொருள்:

1. வலிமையும் பெருமையுமுடைய மகாமாதென்ற சீயோன் குமாரத்தியின் வேதாங்கமே, வலிய பொல்லாங்காம் ஏவாளின் பாவமே.

2. மலையாத அலையாத மகா தங்கமே, மலைபோல் ஆசையான ஐயா, பெருமை தங்கிய அழகே.

3. செல்வ மரமே கண்ணனவனே, கிட்டிச் செல்லத் தராது இருக்கானே.

4. செவ்வையான துரையே தானனவனே, செப்பிய பத்து கட்டளைகளுக்குக் காரணமானவனே.

5. சொற் பொருளின் அழகனே, தகப்பனே, புகழ் வாக்குத் தத்தம் கொடுத்துள்ள ஐயரே.

6. தொந்தத்து அந்தா நந்தலிவா - (தொந்தம்—துவந்துவம் = இரண்டு) இரு நூல்கள்... பழைய, புதிய ஏற்பாடுகளின் முடிந்த முடிவே, வாரும்.

7. இல்லத்தனம் - மரண வேளையில் நல் மரணம் தாரும், நம் நாயகனே.

இல்லாத்தனம் - வறியவர்க்கு அன்பனே.

8. ஏயோவாவே . . .

செய்யுள் 3

1. அனைத்தும் வணங்கும் அசரீரி
அனையவுயிர்க்கும் அதிகாரி

2. ஆர்க்குமிரங்கும் உபகாரி
அன்பாய்ப் படைத்த ஆசாரி

3. நினைத்து முடியா தயைவாரி
நிதமுங் கிருபை மொழிமாரி

4. நெஞ்ச மகிழத் தரும்பூரி
நிருவிசார நிரா தாரி

5. முனைத்த பகைஞர் வீபகாரி
முழுதும் அடியார்க் கனுசாரி

6. முன்னுதனமா கியமூரி
முந்திரிகைப் பானத்திருவேரி

7. எனைத்தற்காரி சருவுதாரி
ஏகதாரி அகாரி கரி

8. எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே.

பொருள்:

1. எல்லாரும் வணங்கும் சரீரமில்லாதவனே, எல்லா உயிர்களுக்கும் அதிகாரியே.

2. யார்க்கும் இரங்கும் உபகாரியே, உலகத்தை அன்பாய்ப் படைத்த சிற்பாசிரியே.

3. நினைவுக்கப்பாலுள்ள தயவின் வாரியே (கடலே), தினமும் அருள்மொழி பெய்யும் மழையே.

4. நெஞ்சு மகிழத் தரும் பூரிப்பே (பொன்னே பூரி), கவலையில்லா ஆதாரமற்ற கடவுளே.

5. எதிர்த்த பகைவரோடு வழக்காடுவோரே, முழுவதும் பக்தருக்கு அனுசாரியே.

6. அவதார நிலைக்கு முன்னுள்ள மகிமையே, முந்திரிப்பழ ரசத்தின் நறுமணமே.

7. என்னைக் காத்தவா சகல உதாரியே, ஒரே வழியே தன்னய மற்ற சாட்சியே.

8. தந்தைப் பராபரனே, வாரும் வாரும், எகோவாவே, காரும் காரும்.

செய்யுள் 4

1. அருமைக் கருணை மனுவேலா
அனுதி பிதாவின் திருப்பாலா

2. அறிவானந்தக் குரு மூலா
ஐயா அடியார்க் கனுகூலா

3. ஒருமைக் குறிமைக் கதிர்க்காலா
உண்மை ஞானத் தொரு நூலா

4. ஒன்றுகிய காரண மாலா
உனதத்துனதத் துயர் மேலா

5. தருமப் பரமப் புரிசாலா
தாவீதரசன் செங்கோலா

6. சமஸ்த புண்ணிய தேவ குணலா
சருவ சீவ செய சீலா

7. இருமைப் பெருமைக் கோலோலா
இயேசுக் கிறிஸ்து இசரேலா

8. எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே.

பொருள்:

3. ஒருமைக்கு உரிமைக் காலா - ஒற்றுமையோர்க்கு உரிமையான ஒளியின் காலனே.

4. ஒன்றுன காரணமான ஆசையே, உயர்வற உயர்ந்த மேலவனே.

5. தருமபுரி பரமபுரிக்கு அழைக்கிறவனே.

செய்யுள் 5

1. ஆக மனத்துக் கடங்கானே
அவத்தத் தவத்தைத் தொடங்கானே

2. அனைத்தும் படைத்த தாதாவே
அறத்தை உடைத்த வேதாவே

3. தேக சொரூபம் அல்லானே
சென்ன மரணம் இல்லானே

4. திரிதத்துவத்தில் ஒன்றுனே
தேவாலயத்தில் நின்றுனே

5. மாகம் முழங்க வழங்கோனே
வானோர் புழங்க எழுங்கோனே

6. மகிமையுளனே வாகுளனே
மதுரமுளனே வாகுளனே

7. ஏக முதலே நிராதரனே
என் கண்ணுதலே பராபரனே

8. எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே.

அருஞ்சொற்பொருள்:

1. ஆகம் - தேகம், உடல்; அவத்த - அபத்த, வீண்;

2. அறத்தை உடைத்த - தருமத்தை உடைய;

3. சென்ன மரணம் இல்லானே - பிறப்பு இறப்பு இல்லாதவனே;

4. திரிதத்துவத்தில் ஒன்றுனே - திரியேகரில் ஒன்றுனவனே;

முதல் 4 அடிகளில் இயேசுவின் பரத்துவ நிலையைச் சொன்னவர் ஏனைய அடிகளில் அவரது அவதார நிலையைப் பாடினர்.

5. மாகம் - ஆகாயம்;

6. வாகுளனே - அழகனே;

7. என் கண்ணுதலே - என் நெற்றிக் கண்ணே.

செய்யுள் 6

1. உனதமான ஒரு தேவே
ஊழிஊழிக் குயர் கோவே

2. ஓத அரிய பெரும் பொருளே
உண்மைக் குருவே திருவருளே

3. தனது வளமை மிகுந்தோனே
சகல உலகும் வகுத்தோனே

4. தானேயிருந்த தொனிச் சயம்பே
தயவாயெழுந்த தனிச் சுயம்பே

5. கனமுள்ளவனே வல்லவனே
கனிவுள்ளவனே நல்லவனே

6. காதற்குரிய பத்தாவே
காட்சிக்கரிய கத்தாவே

7. எனது வரவே போதரவே
இகலொப்புரவே ஆதரவே

8. எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே.

அருஞ்சொற்பொருள்:

1. உனதமான - உன்னதமான;

4. தாளுக நின்ற ஓசைக் கடவுளே;

6. என் வருமானமே, செலவே;

7. இகல் ஒப்புரவே - பகையை ஒப்புரவாக்குகிறவரே.

செய்யுள் 7

1. ஞானப் பரமா சனத்தானே
நன்மைக் கிருபா சனத்தானே

2. நாதாந்தத்தா நம் தாதா
நந்தானந்த நந் தாதா

3. மோனக் கருணை சமுத்திரமே
முனையும் இருள்நா சமுத்திரமே

4. முன்னவனே தானவனே
முன்னவனே தானவனே

5. வானத்திரமே அந்தரமே
மனதுத்தரமே அந்தரமே

6. மன்னு மன்னு மன்னுவே
மன்னு மன்னு மன்னுவே

7. ஈனக் கரவா கனன்றுதா
என்னக் கரவா கனன்றுதா

8. எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே.

அருஞ்சொற்பொருள்:

2. நந்தானந்த நந் தாதா; நந்தன் - மேய்ப்பன்; நந்த - அழகன்; தாதா - கெடாதவன்; நாதாந்தத்தா நந்தாதா - ஞான நெறியாளனே, நம் பிதாவே;

3. மோனக் கருணை சமுத்திரமே - மவுன கிருபைக் கடலே, முனையுமிருணை சமுத்திரமே - முனையும் இருளை நாசப்படுத்திய மூன்று நிலையே;

5. வானந்தரமே அந்தரமே-வானத்தின் தலையே தனிமையே; மனதுத்தரமே அந்தரமே - மனதான மறுமொழியே, அழகான மலையே.

6. (1) மன்னு - மன்னனே; (2) வானத்தினின்று இறங்கின மன்னு; (3) ஆமென் என்ற மன்னு; (4) நிலையான ஆமென் என்ற (5) நாமத்தைக் கொண்டவனது; (6) நாவே.

7. ஈனக்கர வாகனன் - நீச வாகனத்தான் தந்தையே.

என்னக்கர வாகனன் - என் எழுத்தானவன்; அட்சரம் - அக்கரம்.

கனன்றுதா - சினங்கொள்ளாதவன்; கனல் - நெருப்பு, கினம்.

செய்யுள் 8

1. தங்கு ஞான பத்திரமே
சால மிகுத்த பத்திரமே

2. சலத்தான் முனமே பாரதமே
சலத்தாலுனமே பாரதமே

3. பங்கு தருபா ரம்பரமே
படுமென் றுயர்பா ரம்பரமே

4. பத்தாவெனக்கார் தாபரமே
பரிவா யெணைப்பார் தாபரமே

5. பொங்கு பெருக்கத் தண்டலையே
புலமைப் பெருக்கத் தண்டலையே

6. பொன்னுடுறவோர் முன்னிலையே
புகழாடுறவோர் முன்னிலையே

7. எங்கணிறைவா சக நாதா
ஏகநிறைவா சக நாதா

8. எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே.

செய்யுட்கள் 7–10: முழுவதும், ஈற்றடிச் சொற்கள் உபையார்த்தங்கொண்டவை. அற்புதமான சொற்கள்.

1. தங்கிய ஞான நிருபமே, மிகவும் மிகுதியாயிற்று உபத்திரவமே.

2. சலம் - நீர், சஞ்சலம்; பார் + அதம் = பாரதம்; சலத்தால் முன்னமே பார் அதமாயிற்று, வெள்ளத்தால் சஞ்சலத்தால் நினைவு (உன்மே - உன்னுதல்) நூறு கோடாகோடியே.

3. பங்கு தருகின்ற பாரம் பரமனதே - பாரம்பரம் படுகின்ற என் துயரத்தைப்பார், அழகான பராபரமே.

4. தாபரம்: (1) துணை (2) மோட்சம்; நாயகனே, எனக்கார் துணையே.

5. தண்டலை: தண் தலை - பூங்காவனம், பொங்கிய செல்வப் பூங்காவனமே; பெருக்கத் தண்டலையே - பெருக்கத்து அண்டலையே, புலமைப் பெருக்கத்தில் அண்டியாடலே.

6. முன்னிலையே - முன்னை நிலையே; முகதாவில் இல்லையே, விண்ணவரின் முந்திய நிலையே! புகழ் செய்கின்ற உறவினர் என் முகதாவில் இல்லையே.

7. எங்கணும் நிறைவாக உலகநாதனுக (இருப்பவனே) ஏக நிறை வாசகநாதா - ஒரே நிறைவான வாசகத்தின் நாவைக் கொடும். நா + தா.

செய்யுள் 9

1. மெய்மா மறைக்குப் பகையானே
வீண்நா மறைக்குப் பகையானே

2. மேசியாவைத் தருவாயே
மேவும் மரணத் தருவாயே

3. பொய்மாக்களின் கோட் கண்டாயே
பொற்றூள்பெறக் கோட் கண்டாயே

4. புகழ் பாக்கியசம் பத்தானே
புகல் வாக்கியமும் பத்தானே

5. செய் மாண்புடையா காவலனே
செயல் மாண்புடையா காவலனே

6. சீஞபதியே சீர் பதியே
சேஞபதியே சீர் பதியே

7. எய்மாலிகையே தந்தாளே
இருமாலிகையே தந்தாளே

8. எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே.

பொருள்:

1. மெய்யான மகா வேதத்துக்குப் பகையாதவனே; வீணை வார்த்தைக்குப் பகையானவனே.

2. மேசியாவைத் தந்தவரே; எழுந்தருளும், மரணம் வரும் சமயத்திலே.

3. பொய்மனுடரின் கோலைக் கண்டாயே; அழகிய பாதம் பெறக் குணமான கண்ணேத்தாவேன்.

4. (பாக்கிய சம்பத்து - கட்டளை பத்து) புகழும் பாக்கிய சம்பத்தானவனே; சொல்லிய கட்டளையும் பத்தானவனே.

5. செய்யும் மாட்சிமைத் திரட்சியானே, இராசாவே, செயலில் அழகுடையவனே, காத்தருளும் வல்லவனே.

6. சீஞய்மலையின் அதிபதியே, படைத் தலைவனே, உன் நற் சீரை என்னில் பதியும்.

7. சேருஞ்சூரிய ஒழுக்கமே தந்தாளனே, பெருமையான மண மாலையைக் கொடுத்தாளுமே.

செய்யுள் 10

1. ஆர்க்குமிரக்கத் திருக்குருவே
அலையாரிரக்கத் திருக்குருவே

2. அகலா நிலையே அகநிலையே
அலையே கலையே அகநிலையே

3. பார்க்குமனேத்தும் அடங்காயே
பகைக்குமனத்தும் அடங்காயே

4. பாட்டைப் பிரியப் பட்டாயே
பாட்டைப் பிரியப் பட்டாயே

5. சேர்க்கும் தனமே தெரிசனமே
செய்வந் தனமே தெரிசனமே

6. திருநெல்வேலி அன்பாவே
திருநெல்வேலி யன்பாவே

7. ஏர்க்குமணியே திரவியமே
இருகண்மணியே திரவியமே

8. எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே.

பொருள்:

1. யாவர்க்கும் இரக்கமாயிருக்கிற தெய்வகுருவே, அலையாதவர்கள் இரக்கத்தில் கண்வடிவே.

2. அகலாத நிலைமையே கடவுளே, கடலே கல்வியே மனத்தின் நிலையே.

3. பார்க்கின்ற அனேத்திலே அடங்காமல் சேய்மையில் உள்ளவரே, பகைக்கும் மனத்தின் மூடத்தனத்தை அடக்குவாயே.

4. பாடலைப் பிரியப்பட்டாயே, துன்பத்தைப் பிரிந்திருக்கின்றாயே.

5. சேர்கின்ற பொன்னே காட்சியே, செய்யும் வந்தனத்தைத் தெரிந்த இனமே.

6. திருநெல்வேலி அன்பாவே = தெய்வநற்காவலே அன்பானவனே, திருநெல்வேலியானுடைய பாடலே, வேதநாயகனுடைய பாடலே.

7. அழகுக்கழகே ஐசுவரியமே, இரு கண்மணியே, நிலைத்த பெருமையே.

8. பிதாவாகிய பராபரனே.

செய்யுள் 11

1. வேதநாயகன் பாட்டா
மிகப்பாடுறுமோ ரன்பாட்டா

2. மெஞ்ஞானத்துக் காரணமே
மேலானத்துக் காரணமே

3. பாது காவே பரிசனேயே
பரம காவே பரிசனேயே

4. பட்டாரகர் முன் படையாரே
பட்டார் நிகர்முன் படையாரே

5. நீதமுறையே கம் மறையே
நிரையமறையே கம் மறையே

6. நிதானப் பரமே திரித்துவமே
நேயப் பரமே திரித்துவமே

7. ஏததான சொன்னரே
யேசுநாதர் சொன்னரே

8. எந்தை பிதாவே வாவாவே
ஏயோவாவே காகாவே.

பொருள்:

1. வேதநாயகன் பாட்டானே, மிகப் பாடுபட்ட ஓரன்புடைய ஆட்டையுடையவனே.

2. மெய்ஞானக் காரணரே - (The source of true knowledge) மேலானதற்கு வேதமே, (ஆரணம்—வேதம்)

3. பாதுகாத்தருளும் பழக்கமே, பரம பூங்காவனமே, பண்புடைய தாயே.

4. தூதர்களின்முன் படையானவனே, செத்தாருக் கொப்பானவர் முன்பில் அடையாதவனே.

5. நீதியின் இரகசியமே தலையான சொல்லே, நரகத்தை மறைக்கும் ஒரே வேதமே.

6. நிச்சயமான பராபரமே முத்தத்துவமே, அன்பரின் அழகே வலத்துவமே.

7. காரணமான புகழ்ச்சியின் அன்பே, யேசுநாதர் சொன்னவரே.

பிதாவாகிய பராபரனே.

8. கிறிஸ்துவின் சுபாவ மகிமை

(THE GLORY OF THE NATURE OF CHRIST)

செய்யுள் 1

சீர் உலவு திரித்துவ தேவனே,
பார் உலாவும் இயாவும் படைத்தவா,
நேர் உலாவும் தவீது இறை நீடிய
ஏர் உலாவும் இறைக் கிறிஸ்தேசுவே.

'சீர்' என்ற சீரிய சொல்லோடு இப்பதிகத்தைத் தமிழ் இலக்கிய மரபுக்கேற்பத் தொடங்கினர் கவிஞர். பதிகம் 1. சீர் இலங்கும், 12:1—சீர்தந்து, 25:1—சீர்மிகும் எனத் தொடங்கியுள்ளமை காண்க.

முதற் செய்யுளின் ஒவ்வோர் அடியிலும், 'உலாவு' என்ற சொல்லமைப்பின் நயம்; ஒவ்வோர் செய்யுள் ஈற்றடியிலும், 'இறைக் கிறிஸ்தேசுவே' என்ற பல்லவி காண்க.

அருஞ்சொற்பொருள்:

பார் உலாவும் யாவையும் - உலகத்தில் இயங்கு பொருள், இயங்காப் பொருள் யாவையும் படைத்தவா; நேர் உலாவும் - நேர்மைக் குணம் உள்ள; ஏர் - அழகு.

பொருள் — தெளிவு.

செய்யுள் 2

அந்தம் ஆதி இலாத பராபரன்
மைந்தனே நரர் மாங்கிஷ மாகியே
விந்தையா யெனை மீண்டு இரட்சித்தவா,
எந்தயாபர னேகிறிஸ் தேசுவே.

அருஞ்சொற்பொருள்:

பராபரம் - பரம் + அபரம் = மேல் உலகம், கீழ் உலகம் இரண்டிலும் இருப்பவனே. Both transcendent and immanent God. மாங்கிஷம் - மாமிசம்; மனித உரு, ஊன் உடல். மீண்டு - மீண்டு = இரட்சித்து.

பொருள்:

ஆதியந்தம் இல்லாத பராபரக் கடவுளின் மைந்தனே, ஊனுடலெடுத்து ஆச்சரியமாக என்னை மீட்டு இரட்சித்தவா, என் தயாபரனே, கிறிஸ்தேசுவே.

நயவுரை:

கிறிஸ்தேசுவின் பரமார்த்த நிலையை 'அந்தம் ஆதியிலாத பராபரன் மைந்தன்' என்றும், அவதார நிலையை, 'நரர் மாங்கிஷமாகியே' என்றும், மீட்புச் செயலை, வியவகார நிலையை 'மீண்டு இரட்சித்தவா' என்றும் கிறிஸ்தேசுவின் மூன்று நிலைகளையும் சூத்திரபாணியிற் செறித்து வைத்தார் கவிஞர்.

'என்னை மீட்டவர்' என்று ஒருமைத் தன்மையிற் கூறியவர், ஈற்றடியில், 'எம் தயாபரனே', என்று பன்மையிற் கூறினர்.

Here Vedanayagar indicates his synoptic vision of Jesus Christ.

செய்யுள் 3

அண்ணலார்க்கு மகிமை யுண்டாகவும்
மண்ணிலே சமா தானம் வளரவும்
நண்ணு நற்பரியம் நரர்க்கெய்தவும்
எண்ணமான இறைக் கிறிஸ்தேசுவே.

ஒப்பு நோக்கு:

In exelcis gloria என்ற தூதர் புகழ்ப் பாடலை வேதநாயகர் தமிழ்ப் புகழ்ப் பாடலாக்கினர். லூக். 2:14.

'உன்னதத்தில் கடவுளுக்கு மகிமை,
உலகில் மனிதரிடையே சமாதானம்,
மனிதர்மேல் அவருக்குப் பிரியம்.'
பப்ரீயசு ஞானப் பாடல்கள், எண்கள் 1, 2.

அருஞ்சொற்பொருள்:

அண்ணல்=அண்ணன், மூத்தோன்; 2. அரசன்; 3. கடவுள் God. Deity.

செய்யுள் 4

கனி அருந்து கடும்பகையால் வரும்
வினையொழிந்து விண் வீடது உறும்படி
மனுடர் சங்கம் மகிழ்ந்து எழ வந்தவா
எனை உவந்த இறைக் கிறிஸ்தேசுவே.

பொருள்:

உலகன்னையாகிய ஏவாள், விலக்கப்பட்ட கனியைத் தின்ற தால் படைப்புக் கடவுளுக்கும் மனுகுலத்துக்கும் ஏற்பட்ட கடும் பகையும் தீவினையும் ஒழிந்து, மேல் வீடு நாங்கள் வந்து சேரு மாறும், மனுகுலம் (திருச்சபை) மகிழுமாறும் இவ்வுலகத்துக்கு வந்தவரே, என்னை விரும்பிய கிறிஸ்து ஏசு ராசாவே.

விண் வீடு - மேல் உலக வீடு. அறம், பொருள், இன்பம், வீடு என்ற பதவிகளில் உச்சமான வீடு சேரும் பதவி. தமிழ்ச் சமய மரபுச் சொல்லைப் பயன்படுத்திய திறம் பெரிது.

செய்யுள் 5

வார்த்தை மாங்கிஷமாய் மனுடர் கெல்லாம்
கோர்த்த பாவக் கொடூரம் அனைத்தையும்
தீர்த்து இரட்சை புரிந்த திறத்தினால்
ஏற்க மீட்பன் இறைக் கிறிஸ்தேசுவே.

அருஞ்சொற்பொருள்:

மாங்கிஷம் - மாமிசம், ஊன் உடல்; கோர்த்த - கோக்க: கோர்த்த என்றதில் ரகர ஒற்று 'ர்' எதுகை காரணமாக வந்தது. ரட்சை - ரட்சகன் = மீட்பன். வார்த்தை மாங்கிஷமானார்; 'அந்த வார்த்தை மாம்சமாகி' பப்ரீசியுசு திருப்புதல். (யோவான் 1-14) புதிய மொழிபெயர்ப்பு 1978: 'திருவாக்கு மானிடனாகிவிட்டார்.'

பொருள் — தெளிவு.

ரட்சை புரிந்த திறம் என்ன என்பதை இச்செய்யுளில் விளக்கு கின்றார்.

செய்யுள் 6

ஆடுபட்ட அருங் கொலையாகவே
பாடுபட்டுப் பருங் குருசான தில்
கேடுகெட்ட வருங் கிருபை பெற
ஈடுபட்டு இறந்த கிறிஸ்தேசுவே.

அருஞ்சொற்பொருள்:

குருசு - Cross, சிலுவை.

பொருள்:

ஆடுபட்ட அருங்கொலை; பாவ நிவாரண பலிக்கு ஓர் ஆட்டுக் குட்டி, ஒரு வயது, பழுதற்றதுமான ஆண் குட்டியைக் கொன்று பலி கொடுப்பர் யூதர். இது அத்தகை அருங்கொலை. இதைப்

போன்று இயேசு பாடுபட்டு, கேடுகெட்டவரும் கிருபை பெற நாடு பட்டு அரிய குருசில் இறந்த கிறிஸ்து ஏசுவே.

ஒப்புநோக்கு:

யோவான் தம்மிடம் இயேசு வருகிறதைக் கண்டு, 'இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து நீக்கிடும் தெய்வ ஆட்டுக்குட்டி.' யோவான் 1:29. Fabricius Hymns—T.E.L.C.

எண் 44

ஓர் ஆட்டுக்குட்டி மீட்டுதல்
உண்டாக்க இங்கே வந்து
பூலோகத்தாரின் பாவங்கள்
அனைத்தையுஞ் சுமந்து
இளைப்பையும் தவிப்பையும்
அடைந்து எந்த நோவுக்கும்
உபாதிக்கும் அடிக்கும்
கீழாகி, தூஷணத்தையும்
தீட்பான சாவைக் கூடவும்
சாதாய் அனுபவிக்கும்.

எண் 47

பாவத்தைச் சுமந்த தேவ ஆட்டுக்குட்டி
அடியார் மேல் இரங்கும்
நீர் சமாதானந் தாரும்.

எண் 48

மாசற்ற ஆட்டுக்குட்டி
நீர் சிலுவையில் தொங்கி
கடன் யாவும் செலுத்தி
இரக்கத்தாலே பொங்கி
பொல்லாப்பைச் சாதால் வென்றீர்
பொல்லாருக்காகச் சென்றீர்
அடியார்மேல் இரங்கும்.

செய்யுள் 7

அத்தனுக்கு அடியார் பிணையாளியாய்
மத்தியஸ்தன் என வார்த்தை தரும்படி
மெத்த வாதைய தாய் உயிர்விட்டபின்
இத்தலத்தில் எழுங் கிறிஸ்தேசுவே.

பொருள்:

அத்தனுகிய திருத் தந்தையார்க்கு, குற்றவாளிகளாய அடியார்களுக்குப் பிணையாளியாகவும் மத்தியஸ்தனுகவும் வார்த்தை தருமாறு மிகப் பாடுபட்டு, உயிர்விட்டபின் இவ்வுலகில் உயிரோடெழுந்த கிறிஸ்தேசுவே.

அருஞ்சொற்பொருள்:

அத்தனுர் - கடவுட்டந்தை; பிணையாளி - சாமீன், Security; மத்தியஸ்தன் - நடுவில் நிற்பவர், Mediator - Mid-man.

செய்யுள் 8

உற்ற பாதையும் உண்மையும் சீவனும்
நற்றவக் குருவும் நல் மேய்ப்பனும்
மற்ற ஞான வயித்தியனுகவும்
இற்றை நின்றை, இறைக் கிறிஸ்தேசுவே.

பொருள்:

எனக்குற்ற வழியும் சத்தியமும் ஜீவனும் நல்ல தவக் குருவும் நல்ல மேய்ப்பனும் ஞான வைத்தியனுமாகவும் இன்று நின்ற ராசன் கிறிஸ்தேசுவே.

ஒப்புநோக்கு:

யோவான் 14:6—'வழியும் சத்தியமும் மெய்வாழ்வும் நானே.' பரீசியுசு ஞானப்பாடல் 138: செ. 4—வழி; 5. உண்மை, 6. சீவன், 11. மேய்ப்பன், 12. நாயகன், 13. வயித்தியன்.

செய்யுள் 9

ஞான நாயகன் நன்மணவாளன் மெய்
யான மைந்தன் அருமை யிரட்சகன்
மான தேவ மகத்துவ தத்துவன்
ஈன மற்ற இறைக் கிறிஸ்தேசுவே.
பொருள் — தெளிவு.

ஒப்புநோக்கு:

மேற் செய்யுளுரையிற் காண்க.

செய்யுள் 10

மேசையா மிசையா இசறுவேலின்
ஆசையா நசையா அசையா அருள்
ஓசையா உசியா சுசியா நச
ரேசையா இசையா கிறிஸ்தேசுவே.

அருஞ்சொற்பொருள்:

மேசையா - அபிஷேகம் செய்யப்பட்டவர், மேசியா; ஆசை = நசை = விருப்பம்; உசி - விருப்பம், கூர்மை. சுசி - சுத்தம்.

பொருள்:

மேசியாமீது இசரவேலின் ஆசையாக அன்பாக சுத்தமாக இருக்க. நசரேத்தூர் இயேசய்யா, கிறிஸ்தேசுவே இசைவாயாக.

பத்து முறை 'ஐயா' என்ற சொல்லோசையை நாம் கேட்கு மாறு இசை பாடினர் இசை வல்லுநர்.

செய்யுள் 11

சாதி யாவையுந் தான்புரந் தாளவே
மாது மரியாளிடம் வந்தவா
வேத நாயகன் பாடலை மேவிய
ஏதமற்ற இறைக் கிறிஸ்தேசுவே.

அருஞ்சொற்பொருள்:

புரந்து - காத்து, இரட்சித்து.

பொருள்:

உலக மக்கள் யாவரையும் தானே இரட்சித்து ஆட்கொள் வதற்கென்றே மரியம்மையிடம் பிறந்து வந்தவரே, வேதநாயகன் பாடலை விரும்பிய குற்றமற்ற ராஜன் கிறிஸ்து ஏசுவே.

9. பரிசுத்தாவியின் சுபாவ மகிமை

(THE GLORY OF THE NATURE OF THE HOLY SPIRIT)

செய்யுள் 1

பொற்புறு பரமானந்த பூர்த்தி ஆனந்த வெள்ள
விற்பன, ஞான சத்துவ, விமரிசைக்கு அளவில்லாத
தற்பரா, இஸ்பிரீத்துச் சாந்து தற்சொய சொரூபா,
அற்புதா, பரிசுத்தாவி அர்ச்சய தேவ தேவே.

அருஞ்சொற்பொருள்:

பொற்புறு - அழகுற்ற; விற்பன்னன் - கல்விமான்; இஸ்பிரீத்துச் சாந்து - Spiritus Sanctus, பரிசுத்தாவி; தற்பரா, தற்சொய சொரூபா - சுய சொரூபன்; அர்ச்சய - அர்ச்சனை - வந்தனை, வழிபாடு. தேவ தேவே - தேவர்களுக்குத் தேவனே. விமரிசை - ஆராய்வு.

பொருள்:

அழகுறும் பரமானந்த நிறைவே, ஆனந்த வெள்ளமே, கல்விமானே, ஞான சக்தியே, ஆராயமுடியாத, சுய சொரூபமுள்ள தற்பரனே, பரிசுத்தாவியே, உமக்கு வாழ்த்தும் வந்தனையும்.

•

செய்யுள் 2

காரணக் கருணை காட்சிக் கதிர்கொள் அக்கினிப் பிரகாசப்
பூரண கடாட்ச தீட்ச பூச்சிய அட்சய சற்சீலத்
தாரணத் திரித்து தத்துவ சற்பிரசாத நீத
ஆரணப் பரிசுத்தாவி அர்ச்சய தேவ தேவே.

அருஞ்சொற்பொருள்:

தாரண - உறுதியான; கடாட்சம் - கடைக்கண்; பூச்சிய, அர்ச்சய - அருச்சனைக்குரிய; சற்பிரசாதம் - நல்லருள்; ஆரணம் - வேதம்.

பொருள் — தெளிவு.

செய்யுள் 3

பெரிய மெய்த் தெய்வமான பிதாச் சுதனிடம் நின்றெய்தி
உரிய பாதகரை நீதியுற்ற பவித்திரமே செய்து
தெரிய நூன்முறையைக் காட்டித் திடவசப்படுத்தித் தேற்றும்
அரியவா, பரிசுத்தாவி அர்ச்சய தேவ தேவே.

அருஞ்சொற்பொருள்:

பவித்திரம் - சுத்தம், தூய்மை.

பொருள்:

பெரிய மெய்யான மெய்த் தெய்வமான பிதா, சுதன் என்ற இருவர்களினின்று தோன்றி, பாதகரை நீதியாகச் சுத்தம் செய்து, வேத நூல் முறையைத் தெரியக்காட்டி, அன்னரை வசப்படுத்தித் தேற்றும் தேற்றரவாளனே, அரியவனே, வணக்கம்.

நயவுரை:

பரிசுத்தாவியானவர் திரித்துவத்தில் ஒருவர், பிதாவினின்றும் சுதனினின்றும் புறப்படுகிறவர். கிறிஸ்துவின் செயலே, வேத நூல்களில் உள்ளபடித் தெரியக்காட்டிப் பாதகரைத் தேற்றுபவரது திருச்செயல்.

செய்யுள் 4

மூவரில் ஒன்றதான மூர்த்தியே முடிவில்லாத
சீவனே, மனதுக்கான திவ்விய சஞ்சீவியே, நற்
காவலே, களிப்பே, துப்பே, கதித்த மெய்ப் பலனே கற்றோர்க்கு
ஆவலே, பரிசுத்தாவி, அர்ச்சய தேவ தேவே.

பொருள் — தெளிவு.

செய்யுள் 5

திருந்திய பரம நூலே சேண் நகர்த் திறவு கோலே
வருந்திய அடியார் மாலே மகிழ்ச்சியின் எண்ணைக் காலே
பொருந்திய ஞானப்பாலே பொழிந்து தாபரி அன்பாலே
அருந்தவப் பரிசுத்தாவி அர்ச்சய தேவ தேவே.

அருஞ்சொற்பொருள்:

சேண் நகர்த் - தூரத்திலுள்ள நகர வாயிலின் திறவுகோல்; மால் - ஆசை; எண்ணைக் காலே - எண்ணெய் வழியும் வாய்க் காலே; தாபரி - ஆதரி.

பொருள் — தெளிவு.

செய்யுள் 6

சோதியே சுடரே மிக்க துய்ய துப்பரவே, சுத்த
நீதியே நெறியே அன்பர் நெஞ்சகத் துறைந்த வாழ்வே
ஓதியே உயர்வே உண்மைக்குண்மையே ஊழிஊழிக்கு
ஆதியே பரிசுத்தாவி அர்ச்சய தேவ தேவே.

அருஞ்சொற்பொருள்:

ஓதி - அறிவு.

ஒப்புநோக்கு:

மாணிக்கவாசகர், திருவாசகம், 27. அருட்பத்து, செ. 1.

''சோதியே சுடரே சூழொளி விளக்கே
கரி குழல் பணைமுய மடந்தை
பாதியே, பரனே, பால் வெண்ணீற்றுய்
பங்கயத் தவனும் மால் அறியா
நீதியே, செல்வத் திருப்பெருந்துறையில்
நிறை மலர்க் குருந்த மேவியசீர்
ஆதியே, அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே.''

'சோதியே', 'நீதியே', 'ஆதியே' என்ற சொற்கள் மூன்றடிகளின் தொடக்கத்தில் இரு செய்யுட்களிலும் வந்துள்ளமை இவற்றின் ஒப்பு என்பதையும், 'பணை முலை மடந்தை பாதியே' என்பது வேறுபாடு என்பதையும் காண்க.

மேலும், செ. 1. வேதநாயகர் 'விமரிசைக் களவில்லாத தற்பரா' என்றார். மாணிக்கவாசகர், செ. 1-இல் 'பங்கயத் தவனும் மாலும் அறியா நீதியே' என்றும், 4-இல் 'நான்முகனும் கண்ணனும் நண்ணுதற்கரிய விமலனே' என்றும் கூறியவை ஒப்புமை என்க.

வேதநாயகர் திருவாசகத்தை நன்கு பயின்றவர். அதன் சொற்களையும் சொற்றொடர்களையும் தம் கருத்துக்கேற்ற வகையில் எடுத்தாள்வர், ஏற்காதனவற்றை விட்டு விடுவர். செய்யுள் 4-இல் திருவாசகப் பாணியில் பாடியவர் 7-11-இல் விவிலிய நூற் கருத்துக்களையே அமைத்துள்ளார். இவ்வாறு இவர் கொள்ளுவதும் தள்ளுவதும் ஆய்வுக்குரியது.

வேதநாயகர்	மாணிக்க–29 அருட்பத்து
செ. 6. சோதியே சுடரே மிக்க துய்ய துப்பரவே சுத்த	சோதியே சுடரே சூழொளி விளக்கே

நீதியே நெறியே அன்பர்
நெஞ்சகத்துறைந்த வாழ்வே
ஓதியே உயர்வே உண்மைக்கு
உண்மையே, ஊழிஊழிக்கு
ஆதியே பரிசுத்தாவி
அர்ச்சய தேவனே

பாதியே.../கயிலை புகுநெறி
இது காண் போதராய்
நீதியே

ஆதியே

10. பத்தியே தெளிவே
மோட்ச பாதையின் துணையே

ஓங்கும் சத்தியே

8. பத்தியாய் நினைந்து
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே

6. கரிகுழல் பணைமுலை
மடந்தை பாதியே
5. துடிகொள் நேரிடையாள்...

1. விமரிசைக் களவில்லாத
தற்பரா

1. பங்கயத்தயனும் மாலும்
அறியா நீதியே
4. நான்முகனும் கண்ணனும்
நண்ணுதற்கரிய

செய்யுள் 7

சூட்சியே வேதாசாரத் தொன்மையே சுகிர்த நன்மைக்
காட்சியே சீடர் சென்னிக் கண்ணின் அக்கினியின் நாக்கே
மாட்சியே மனுதுக்கெட்டா வாய்மையே மகத்துவத்து
ஆட்சியே பரிசுத்தாவி அர்ச்சய தேவ தேவே.

இச்செய்யுள் பரிசுத்தாவி பெந்தெகொஸ்தே நாளில் மூவாயிரவர்மேல் ஊற்றப்பட்ட வரலாற்றை மனத்தில் கொண்டு பாடப்பட்டதொன்று. அக்கினியின் நாக்கு சீடர் சிரசில் இறங்கிய சுகிர்த நன்மைக் காட்சி, திருத்தூதுவர் அதி. 2-இல் காண்க. வேதாசாரத் தொன்மை சூட்சி. பேதுரு ப.ஏ.-ன் தீர்க்கதரிசன வாக்கை மேற்கோள் காட்டிப் பயன்படுத்தியதாகும்.

திருத்தூதுவர் செயல்கள்: 2:17-21; யோவேல் 2:28-32.

செய்யுள் 8

மதுரமே இன்பமே வானிதியமே நற்
புதிய நூதனமே மாளாப் பொக்கிஷப் பக்கிஷமே ஞானத்
துதி அபிஷேகமே நற்சுபப் பரிமளமே சொல்லுக்
கதிகமே, பரிசுத்தாவி அர்ச்சய தேவ தேவே.

8–11 செய்யுட்களும் Fabricius ஞானப் பாடல்கள் 81–87-இல் உள்ள சொல்லும் பொருளும் தழுவியவையாகும்.

பொருள்:

தித்திப்பே, இன்பமே, வான நிதியே, புதிய நூதனமே,...

ஒப்புநோக்கு:

'மதுரமே'; ஞா.பா. 81,7; பரத்தின் மதுரப்பணி; 87:5; 'நல்மழை'. செ. 1. பரமானந்த பூர்த்தி: F.H.87,1. 'ஆனந்த மகிழ்ச்சிக்கான...' தாயுமானவர், செ. 1–'அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது.'

செய்யுள் 9

மனுப்பயிர் தழைக்கத் தாவும் வானகப் பனியே, காற்றே,
தினத்தினம் மெஞ்ஞான ஊற்றே, சீவ தண்ணீரே, நேரே
கனத்ததேற் றரவே, காதற் கருணை மாநதியே, பாவிக்கு
அனுக்கிரகப் பரிசுத்தாவி அர்ச்சய தேவ தேவே.

பொருள்:

மருத நிலத்தில் பயிர்கள் தழைப்பதற்கு காற்று, மழை நீர், ஆற்று நீர், ஊற்று நீர் முதலியன வேண்டுவதுபோன்று மக்கள் தழைத்துச் செழித்து வளர்வதற்கு பரிசுத்தாவியானவர், வானில் இருந்து இறங்கி வரும் மழை, பனி, காற்று, நீர், நதிக்கு ஒப்பிட்டு உருவகித்துப் பாடினர் கவிஞர். அவர் வாழ்ந்த தஞ்சை மாவட்டம் பொன்னி நதி பாயும் வளநாடு ஆனதால் நம் கவிஞருக்கு இம் மருத நில உவமை நல்லதோர் வாய்ப்பாயிற்று.

''வானின்று உலகம் வழங்கி வருதலான்
தான் அமிழ்தம் என்று உணரற் பாற்று''

என்றார் திருவள்ளுவர். உலகுக்கு அமுதம் மழை. மக்கட்குப் பரிசுத்தாவியானவர் அனுக்கிரகம் (அருள் மழை).

வானகப் பனி - மழை: ஆகுபெயர்.

செய்யுள் 10

பத்தியே, தெளிவே, மோட்சப் பாதையின் துணையே, பண்பே,
முத்தி முத்திரையே, வேத முதல் நடு முடிவே, ஓங்குஞ்
சத்தியே, மனதை முற்றுந்தான் குணப்படுத்தித் தேற்றும்
அத்தியா பரிசுத்தாவி அர்ச்சய தேவ தேவே.

அருஞ்சொற்பொருள்:

பத்தி - பக்தி; முத்தி - முக்தி; சத்தி - சக்தி; அத்தி - கடல்.

செய்யுள் 11

போதமே இதமே மேலாம் புத்தி யோசனை பொற்பே
நாதமே சிதமே ஞான நன்மையே நலமே நட்பே
வேதநா யகனுக் கென்றும் வெளிப்படும் மெய்ப்புருவே
ஆதமா பரிசுத்தாவி அர்ச்சய தேவ தேவே.

அருஞ்சொற்பொருள்:

இதம் - ஹிதம் - இனிமை, மேலாம் புத்தியோசனை - பொற்பே - அழகே; ஆலோசகர். சிதம் - வெண்மை; ஆதமா - ஆத்துமா, பிராணு. எதுகை காரணமாய் ஆதமா எனப்பட்டது.

பொருள்:

போதம் - அறிவு; இனிமையே, நல் ஆலோசனை கொடுக்கிற வரே, அழகே, ஓசையே, வெண்மையே, நன்மையே, நலமே, நட்பே, வேதநாயகனுக்கென்றும் வெளிப்படும் மெய்ப் புருவே, உயிரே, பரிசுத்தாவி வந்தனைக்குரிய தேவாதி தேவா.

மெய்ப்புரு; இயேசு திரு முழுக்குப் பெற்றபோது 'ஆவியான வர் புருவைப்போலத் தம்மேல் இறங்குவதைக் கண்டார்' மார்க்கு 1:10.

இப்பதிகத்தில் கூறப்பட்ட பல கூறுகள் தமக்குப் பரிசுத்தாவி யானவரால் வெளிப்படுத்தப்பட்டன என்பதை - 'வேதநாயகனுக் கென்றும் வெளிப்படும் மெய்ப் புருவே' என்று ஆணித்தரமாகக் கூறியுள்ளார் என்க.

இத்தகைய உறுதிப்பாடு நம்முள்ளங்களில் நிறைந்திருக்க வேண்டுமென்று நாமும் பரிசுத்தாவியானவரை வேண்டிக் கொள்வோமாக.

10. அகப்பற்று

'குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே'

செய்யுள் 1

அறிவே மெஞ்ஞான ஒளிவே விண்ணுடார் அரசே அனுதி முதலே
குறி ஆறுநாலு நெறியாறு நாலு குண தேவ தேவ சொரூபி
வெறியாடு பேயின் முறிகாரனை வினையேனை ஆள மனுவாய்
மறியேறி மேவு குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே.

அருஞ்சொற்பொருள்:

மெய்ஞானம் - மெய் அறிவு; விண்ணுடர் - விண் + நாடார் = விண்ணுலக நாட்டாரே; அனுதி = அ ந + ஆதி; ஆதி என்பது இல்லாதவரே; ஆதி முதலே = ஆதிபகவன் - தனக்கோராதியின்றி எல்லாவற்றிற்கும் தானே ஆதியாய் நிற்பவன். குறியாறு நாலு - 6 + 4 = 10, பத்து இலட்சணத்தோன்; நெறி ஆறு நாலு - பத்துக் கட்டளை இட்டவன். வெறியாடு வினையேனை = பேயின் வினையாட்டத்தில் அகப்பட்ட பாவியை; என்றன் அகமே - எந்தன் நெஞ்சில்; மறியேறி மேவும் - கழுதைமீது ஏறி பவனி வரும்.

பொருள் — தெளிவு.

ஒப்புநோக்கு:

ஆதிமுதலே:

'அகரமுதல எழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.' (குறள் 1)

திருப்புகழ்:

'பரவ வருமதில் அருணையில் ஒருவிசை வரவேணும்.'

செய்யுள் 2

ஆதாம் விழுந்த வினையால் உலர்ந்த அகிலம் புரந்தருளவே
தீதே யகன்ற மனுவாய் எழுந்து திருவாசகங்கள் சொலியே
வேதாளம் அஞ்ச நரகங் கலங்க வெகுபாடடைந்த இகல்
எலாம்
வாதாடி வென்ற குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே.

அருஞ்சொற்பொருள்:

அகில - எல்லா உலகங்கள்; புரக்க - இரட்சிக்க; வேதாளம் - பிசாசு; இகல் - பகை, போர், வலிமை; வாதாடி - தர்க்கித்து, வாய்ச்சண்டை போட்டு.

பொருள் — தெளிவு.

ஒப்புநோக்கு:

'வரவேணும், எனதரசே' என்ற வே. சா-வின் கீர்த்தனை, C.L.S. எண் 71.

செய்யுள் 3

இதமென்று மாதர் மயல் கொண்டுவாடி எழும் அந்தகார
நினைவால்
சதமென்று வீணுடலை நம்பி நின்று தவமொன் றெனுந்
தொறுபியே
பதமொன்றி வாழ்க அறிவின்றிமீறு படு பஞ்ச பாதகர்களின்
மதமின்றி நீடு குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே.

அருஞ்சொற்பொருள்:

இதம் - இன்பம்; மயல் - ஆசை; அந்தகாரம் - இருள்; சதம் - நூறு; தொறுவி - பயின்று; பதமொன்றி வாழ்க - நின்சீர் பாதத்தோடு ஒன்றித்து வாழ.

பொருள் — தெளிவு.

செய்யுள் 4

ஈராறு சீடர் அடிகண்டு தெண்டனிட நின்று காஞவிலே
ஓராறு சாடி உதகம் பிரசம் செய்து ஒரு மூப்பதாண்டளவிலே
பேராறு சென்று திவிய தீட்சை பெற்றுப் பிதா மைந்தன்
எருசலே
மாராறு கொண்ட குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே.

அருஞ்சொற்பொருள்:

உதகம் - நீர்; பிரசம் - முந்திரிப்பழ ரசம்; பேராறு-யோர்தான் நதி; திவிய தீட்சை - திவ்விய திருமுழுக்கு, ஞானஸ்நானம்; எருசலே மாராறு கொண்ட - எருசலேம் மக்களை ஆட்கொண்ட.

பொருள் — தெளிவு.

ஒப்புநோக்கு:

(1) யோவான் 2:1–11; (2) மத். 2;13-17.

செய்யுள் 5

உலகம் பசாசு உடலின் கொடூரம் உடனின்றெந் நேரமும் எனைக்
கலகம் செய்தாலும் மனம் அஞ்சிடாது கழல் உண்டெனக் கருதவே
பல சங்கசேனை தரு சங்கையோடு பரமண்டலங்களதிலே
வலதின் கண்மேவு குருவேசுநாதர் வரணும் என்றன் அகமே.

அருஞ்சொற்பொருள்:

3-அடி: பரமண்டலத்தில் உள்ள பல வான சேனை தருகின்ற புகழ்ச்சியோடு.

பொருள்:

பேய் பிசாசு லோகம் என்ற முச்சத்துருக்களின் கொடூரம் என்னுடன் எதிர்த்து எந்நேரமும் என்னைக் கலகம் செய்தாலும், ஏசுவின் வீரக்கழல் எனக்குண்டு என்று கருதி மனம் அஞ்சிடாது வான சேனையர் தரும் புகழோடு வலக்கண் மேவிய குரு... என்றன் அகத்தில் வரவேண்டும்.

செய்யுள் 6

ஊழித்துவாந்தத் துரோகப் பசாசுக்குடன்பட்டு அழல் கெந்தகத்து
ஆழிப் பிரவாகத் தழுந்தாமல், மக்கள் அனைவோரும் வானடையவே
ஏழைச் சொரூபத்தோடே பெத்தலேமுக்குள்ளே உற்ற கன்னிமரியின்
மாழைக் குமார குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே.

அருஞ்சொற்பொருள்:

துவாந்தம் - இருள்; அழல் கெந்தகத்து ஆழிப்பிரவாகம் - நெருப்புக் கெந்தகக் கடல் வெள்ளம்; மாழை - அழகு.

பொருள்:

ஊழி இருளின் துரோகப் பிசாசுக்குடன்பட்டு நெருப்புக் கெந்தகக் கடல் வெள்ளத்தில் அமிழ்ந்து போகாமல் மக்கள் அனைவரும் வானுலகத்தை அடைவான் வேண்டி, ஏழைக் கோலங்கொண்டு, பெத்லகேமில் கன்னிமரியம்மையின் அழகு மகன் குருவேசுநாதர் என் அகத்தில் வரவேண்டும்.

செய்யுள் 7

எட்டாத வானில் உறைகின்ற சோதி
எளியோரெலாங் கதி பெற
ஒட்டார லூசி குலம் நாசமாக
உறவாயளித்த சுதனுர்
கெட்டோர் யாவர் பிணையாளியான
கிருபை யாவற்றினுடைய
மட்டேது மற்ற குருவேசுநாதர்
வரவேணும் என்றன் அகமே.

அருஞ்சொற்பொருள்:

லூசி - இலத்தீன் வார்த்தை - பிசாசு; Lucifer - Devil, Satan, Luci is shortened form. ஒட்டார லூசி - முரட்டுப் பிசாசு. மட்டேதுமற்ற - அளவற்ற, எல்லையற்ற.

பொருள் — தெளிவு.

செய்யுள் 8

எழாமல் ஆவி தடுமாறி நெஞ்சில் எழ மேல் சுவாச மீதுற
லோகாசை யாவும் நினைவூடு தாவி லோடாயமாய்
மனதெலாம்
வேகாமல் வெந்து புலனே ஒடுங்கி விழும் அந்திய காலமதிலே
வாகான தேவ குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே.

பொருள்:

எனது அந்திய காலத்தில் என் ஆவி தடுமாறி நெஞ்சில் எழ மேல்மூச்சு (சிலேட்டுமம்) வாங்கி, உலக ஆசை எல்லாம் நினைவில் வந்து மனதெல்லாம் வேகாமல் வெந்து, புலன்கள் ஒடுங்கி விழும் போது, அழகான தேவ குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகத்தில்.

செய்யுள் 9

ஐயாறு வெள்ளி விலை கூறி விற்க அநியாய நிந்தைகளுறக்
கையே பிணைக்க வாரால் அடிக்கக் கடுவின் கிரீடம் இடவே
மெய்யே நடுங்கக் குருசூடிறந்து விலாவோ துளைக்க உலகின்
மையே தவிர்த்த குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே.

பொருள்:

முப்பது வெள்ளிக் காசுக்கு யூதாசு, ஏசு பெருமானைக் காட்டிக் கொடுத்ததின் பயனாக ஏசு நிந்தைகளுற்று, கைகள்

கட்டப்பட்டு, வாரால் அடிக்கப்பட்டு, முட்கிரீடம் சூட்டப்பெற்று, உடல் நடுங்கி, சிலுவையில் இறந்து, விலாவில் ஈட்டியால் குத்தப் பட்டு—உலகின் இருளான பாவத்தைத் தவிர்த்த குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகத்தே.

ஒப்புநோக்கு:

மத்தேயு, மார்க்குவின் நற்செய்தி நூல்கள் இறுதி அதிகாரங் கள். மை - இருள்=பாவம்.

செய்யுட்கள் 10-தும் 11-றும் 'பிழை நினைத்திரங்கல்' என்ற பொருள் கொண்டுள்ளன.

செய்யுள் 10

ஒரு காசதேனும் அடியார்களை நாடி உதவா உலுத்தன், உனது
திருவாசகங்கள் படியாத பாவி, ஜெபம் ஓதவுந் தெரிகிலேன்,
பரிவாய் உன் அன்பை உணராது கெட்ட படுபாதகன்
வினையற
மரிபால் உதித்த குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே.

பொருள்:

உன் அடியவர்களுக்கு ஒரு காசுகூட உதவாத லோபி; உனது திருவாசகங்களைப் படியாத பாவி; செபிக்கவும் தெரியவில்லை; பரிவோடு உன் அன்பை உணராது கெட்ட படுபாதகன்; என் வினை நீக்கத்திற்காக மரியம்மையிடம் பிறந்த குருவேசுநாதர் வர வேணும் என்றன் அகமே.

•

செய்யுள் 11

ஓசைக் கடற்குள் அலைமோதும்வாறு ஒழியா விசாரமதனால்
வேசைக்குலாமார் களை நாடி வாடி மிகவே மெலிந்துருகி மூ
ஆசைக்குள் வீழ்ந்த கொடிதான பாவி, அடியேன் அகந்தை
அறவே
மாசற்ற தேவ குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே.

பொருள் — தெளிவு.

'ஓசை கடற்குள் அலைமோதும் வாறு ஒழியா விசாரம்' - 'கடலின் திரையது போல் வரு கலக்கம் மலம் அறுத்து.'

கடற்குள் அலை=கடலின் திரை - நல்லதோர் உவமை.
வேசைக் குலாமார்கள் - வேசைக் குலமகளிர்கள்=விலை மகளிர்.

செய்யுள் 12

ஔவைத் தயாபரத்து ஒரே ஒரே யோவா,
அஞ்தியில் இருந்த வார்த்தை,
செல்வத் திரியேகத் திரண்டாவதாளன்,
திருப் பிதாவின் குமாரன்,
எவ்வைப் பெண் அன்று கனிதின்ற பாவத்
திஸ்திரி வித்தான முதல்வர்,
வெளவப்படாத குருவேசுநாதர்
வரவேணும் என்றன் அகமே.

அருஞ்சொற்பொருள்:

ஔவை - அவ்வை = தாயார்; ஏவாள் தயாபரத்து - தயா பரத்து - தயவு மிகுந்த; ஒரே யொரே யோவா - ஒரே ஒரு எகோவா - ஒப்பாருமிக்காருமில்லாத ஒரு தனி எகோவா; செல்வத் திரியேகத்து இரண்டாவதாளன் - பிதா, குமாரன், பரிசுத்தாவி என்ற மூவரில் இரண்டாவதானவன்; திருப் பிதாவின் செல்வக் குமாரன் - திவ்விய தீட்சை பெற்றபோது, 'நீ என் செல்வக் குமாரன்' என்று (அசரீரி) திருவாக்குப் பெற்றவர்; எவ்வைப் பெண் - ஏவாள்; இஸ்திரி வித்து - கன்னி மரியம்மையின் புதல்வன். ஏவாள் கனி தின்றதால் விளைந்த வினையைத் தீர்க்க வந்த கன்னி பெற்ற முதல்வன் என்ற பேருண்மையை இவ்விரு பெண்கள் மூலம் இலைமறை காயாகக் குறிப்பிடுகிறார் கவிஞர். இத்தகு முதல்வரை ஏவாளால் உண்டான வினை கொள்ளையிட முடியாது. வெளவல் = கொள்ளை.

செய்யுள் 13

இக்காலம் ஆளவரும் ஆமனை அல்பா ஓமேகா எனும்
சொக்காதி மூல வஸ்து, ஏக தேவ சுயம்பாயிருந்த ஒளிவு
மிக்காயுரைத்த கவி வேதநாயகன் பாடு மேலாம் பொருள்
மைக்காடறுத்த குருவேசுநாதர் வரவேணும் என்றன் அகமே.

அருஞ்சொற்பொருள்:

ஆமனை - ஆமேன் = அப்படியே ஆகுக; அல்பா ஓமேகா. கிரேக்க அகர வரிசையில் அல்பா என்பது முதலெழுத்து, ஓமேகா கடைசி எழுத்து. AW. தமிழில் 'அ' கரமும் 'ன' கரமும் ஆகும் சொக்கு - அழகு - 'அழகிய சொக்கன்' என்று சிவனைக் குறிப்பிடுவர். ஆதி மூல வஸ்து — ஆதி பகவன்.

ஒப்புநோக்கு:

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்
முதற்றே உலகு'

என்ற முதற் குறட்பாவை மனத்திலிருத்தியே வேதநாயகர் இச் செய்யுளை இயற்றினர் என எண்ண இடமுண்டு. 'கவி வேத நாயகன் மிக்காயுரைத்த பாடல் மைக்காடறுத்த மேலான பொருள் குருவேசுநாதர். (அவர்) வரவேணும் என்றன் அகமே' என இயைக்க.

மைக்காடு அறுத்த - இருண்ட காடு ஆகிய பாவக் கட்டை அறுத்த.

11. மன்றாட்டு

'மெய் வாழ்வே மகத்துவ பரனே' என்ற மகுடம் அணிந்த பதிகம்

செய்யுள் 1

ஞாலு விண்நாடர் அதி காரா பராபரனின் நாவே பிராண
நதியே
காலுவதான கலி லேயாவின் ஆதிபதி காணுத ஆடது
அடியேன்
மீன் நாவிலே விழுகும் யோனுவின் மேலருள்செய் வேதாஎன்
ஊழ்வினைதீர்
வானுதி தேவ குரு வே யோசனு மனுடர் வாழ்வே, மகத்துவ
பரனே:

பொருள்:

'என் ஊழ்வினை தீர்' என மன்றாடுகிறவர், நீதிமன்றத் தலை வரைப் புகழ்ந்து தன் வழக்கைத் தனக்குச் சார்பாகத் தீர்ப்பிட வேண்டுகிறார். பழங்காலத்தில் ரோமருடைய நீதிமன்றத்தில் வழக்கறிஞர் நீதிபதியை இவ்வாறு புகழ்ந்துரைப்பர். இதற்கு 'Capitatio benevolentia' என்று இலத்தினில் பெயரிட்டனர். நாம் இதனை 'முகமன்' என்போம். ஆங்கிலத்தில் flattery என்பர்.

In Acts 24:2–4, the Advocate 'begins in the conventional manner with some careful flattery, designed to make a favourable impression upon the Governor.' I, Howard Marshall, Commentary on Acts, p. 374.

ஆனால், இங்கு வேதநாயகர் தன் வழக்குக்குத் தானே வழக் குரைஞராகத் தோன்றுகின்றார் இறை நீதிமன்றத்தில். He makes a self-defence, pleading guilty, praying for amnesty.

இனிச் செய்யுளின் பொருள் காண்போம்.

அறிவே, விண் நாட்டவர் அதிகாரியே, கடவுளின் நாக்கே, உயிர் கொடுக்கும் சீவநதியே, கலிலேயாவிலுள்ள காலு ஊரில் தண்ணீரைத் திராட்ச ரசமாக்கினவரே, நான் காணுமற்போன ஆடு, அதைத் தேடிக் கண்டுபிடிப்பது உன் அருள். பெருமீனால் விழுங்கப்பட்ட யோனுவுக் கருள்பாலித்த வேதாவே, என் ஊழ் வினையைத் தீர்.

வானத்திலுள்ள ஆதி தேவகுருவே, ஆலோசகரே, மக்களுக்குப் பெருவாழ்வு அளிப்பவரே, பெருமை வாய்ந்த பரம்பொருளான வரே.

அருஞ்சொற்பொருள்:

ஊழ்வினை தீர்: ஊழ்வினை - தொல்வினை, சென்மப் பாவம். ஊழ்வினையால் எனக்கு வரவேண்டிய மரணத் தீர்ப்பை நீக்கி, நல் வாழ்வு, மரணமிலாப் பெரு வாழ்வு என்ற அருட்பேற்றை அருள்க. தீர் - தீர்ப்பு, உயர்நீதிமன்றத் தீர்ப்பு, முடிந்த முடிபு, the final Judgement - No further appeal.

ஒப்புநோக்கு:

தீயன் ஆயினேன்; எளியேன்உற்ற
தீவினை அனைத்தும் தீரும் . . .
மாய வலை வீசு வலு பேயின் வினைதீர
நேயமுடனே உறுசகாயனுய் எமக்கென்றிங்கு
நிச்சயித் தெழுந்த எங்கள் அச்சயா, திருக்குமாரா!

(C. L. S. கீர்த்தனை எண் 158)

செய்யுள் 2

வீடுஏது, எழில்கொள்பல வாழ்வேது, இனச் சலுகை
வீறு ஏது, எனக்கு உன்னை யலால்
ஈடு ஏது, எனக் கிருபையாலே வளர்த்தி விடில்
ஏகா, உனைப் பணியனே?
காடே நடக்கும் இசருவேலருக்கு வளர்
காளை அளித்த கரனே,
மாடே கிடக்கும் வையின் மேலே படுக்கும் மனு
வாழ்வே, மகத்துவ பரனே.

பொருள்:

உன்னை அல்லாமல் எனக்கு வீடு ஏது, நல்வாழ்வு ஏது, இனத் தவர் சலுகையால் வரும் வீறு ஏது, என்னை உன் கிருபையால் வளர்க்காவிட்டால் எனக்கு ஈடு ஏது? ஏகனே, நான் உன்னைப் பணியமாட்டேனே? பாலையில் நடந்த இஸ்ரவேலர்க்குச் சோலை வளர், பாலுந் தேனும் வழிந்தோடும் காளைன் நாட்டைச் சொந்த மாக, இனமாக அளித்த கருணைகரனே; ஆடுமாடு அடையும் வைக் கோற் புல்லின்மேல் படுக்கும் மனுவாழ்வே, மகத்துவ பரனே.

செய்யுள் 3

நீதான் எனின் சலுகை நீதான் என் இன்ப நலம்
நீதான் எனின் சகலமே
பேய் தான் எழுந்தும் மிகவே சீறியும் கறுவும்
பேர் தானும் இங்கென் செய்வார்?
தீ தான் வனைந்த பொழுதே மூவர் பங்கில் உறை
தேவே, அடர்ந்து என்னிடம் வா
வாய் தான் மலர்ந்து மறை நேரே விளம்பிய மெய்
வாழ்வே மகத்துவ பரனே.

அருஞ்சொற்பொருள்:

கறுவும் = பகைக்கும்.

ஒப்புநோக்கு:

'நீதான் . . . உறை தேவே'—இந்த மூவர் யார்? சாதராக்கு, மேசாக்கு, ஆபேத்நெகோ என்பவர்களை நேபுகாத்நேச்சார் என்ற பாபிலோனிய அரசன் தீயிலிட்டுக் கொல்லப் பார்த்தபோது கடவுள் அவர்களைக் காப்பாற்றினார். தானியேல் தீர்க்கதரிசனம் 3:19–25.

2. 'பேய் தான் . . . சீறியும் சினந்தும் என் செய்வர்?'

ஒப்புநோக்கு:

Fabricius ஞா. பா. எண் 145:3. 'தெய்வகை என் சலுகை, இனிச் சாத்தான் கூட்டத்தார் மௌனம் அடைவார்கள்.'

செய்யுள் 4

ஒப்பேதும் அற்ற பர மப் போசனத்தையுண
ஒத்தாசையுற்ற உறவே
தப்பாத சத்தியமறை முப்போதும் வர்த்தனே செய்
தற்சோதியுற்ற மயமே
இப்போது நற்சமயம், இப்போதெனக் கருள்செய்
இப்போதெனுக் குதவுவாய்
மப்பால் வெறித்த என்னை மிக்காய் வணக்கமிகும்
வஸ்தே மகத்துவ பரனே.

அருஞ்சொற்பொருள்:

பரம போசனம் - இராப்போசனம் - போஷணம், உணவு - Lord's Supper. மப்பு - மயக்கம்.

பொருள்:

ஒப்பற்ற திரு இராப்போசனத்தை நான் உண்டு குடிக்க ஒத்தாசை செய்யும் உறவினரே, சொன்ன சொல் தப்பாத திருமறையை யான் படிக்கச் செய்த தற்சோதியானவரே, மயக்கத் தால் வெறித்த என்னை இப்போது அருள்செய்து எனக் குதவுவாய்; நான் மிக்க வணக்கம் செய்யும் வஸ்துவே, மகத்துவ பரனே.

முப்போதும்=இப்போது என்று மும்முறை கூறினர். அந்தி சந்தி மத்தியானம். இல்லை - இப்பொழுதே.

செய்யுள் 5

ஓட்டாது இடும்பர் அகம் விட்டோய் வதுங் கடினம்
ஒத்தே நடந்து கதியே
கட்டாக நின்றுபெற ஒப்பார்கள் வம்பர், அவர்
கற்றாலும் நன்று கருதார்,
கெட்டோன் எனுஞ் சுதனை முச்சூடும் அன்பு புரி
கெட்டோர்களின் கிருபையே,
மட்டாய் நெருங்கு என் வினை பட்டோட வந்தருள்செய்
வஸ்தே மகத்துவ பரனே.

அருஞ்சொற்பொருள்:

இடும்பர் அகம் - குறும்புக்காரர் வீடு; முச்சூடும் - முழுவதும், நாடோடி மொழி. கெட்டோர்களின் கிருபையே - 'கெட்டோர்க்கு நட்டாரில்லை' என்பது பழமொழி. ஆனால், நீதான் கெட்டோர்க்கு நண்பன்.

பொருள்:

குறும்புக்காரர்களோடு ஒட்டாமல், அவர்கள் வீட்டுக்குப் போய் வருவதை நிறுத்துவதுங் கடினம்; அவர்களோடு ஒத்து நடந்து கட்டுக்கோப்பாக நிற்கவும் ஒப்பார்; வம்பர்கள் கற்றாலும் நன்மையைக் கருதார்.

கெட்ட குமாரன் திரும்பி வந்தபோது அவனுக்கு முழுவதும் அன்பு செய்த நீ, கெட்டோர்களின் கிருபையாவாய்.

மட்டு - தேன், இனிப்பு. என் வினை அறுபட்டோட இனிப் பாக வந்தருள் செய்க. வஸ்தே . . .

செய்யுள் 6

எந்தாய் தகப்பன் உயிர் தந்து ஆதரித்த அரு
ளின் தேவ சத்திய குருவே,

பந்தான் மனக்கவலை மிஞ்சாது இரக்கமொடு
பண்பாய் நடத்தி யெனையே
உந்தாமரைச் சரணம் அங்கே இருத்தி மிக
வுங் காதலித்து நிலையாய்
வந்தாள், உனக்கபயம், அந்தாதிகுத்தன் அருள்
மைந்தா, மகத்துவ பரனே.

அருஞ்சொற்பொருள்:

பந்தான் - பந்துக்களால்; அந்தாதி கத்தன் - அந்தமும் ஆதியு மாய கருத்தர்.

பொருள்:

என் பெற்றோர்க்கு உயிர்தந்து ஆதரித்த அருளின் தேவனே, சத்திய குருவே, என் பந்துக்களால் எனக்கு வரும் மனக்கவலை மிஞ்சிப்போகாமல் இரக்கத்தோடு என்னைப் பண்பாய் நடத்தி உன் தாமரைப் பாதத்திலேயே இருக்க வைத்து, மிக்க அன்புடன் நிலையாக வந்து என்னை ஆண்டருள்; ஆதியும் அந்தமுமான கர்த்த ரின் புதல்வனே, மகத்துவ பரனே!

செய்யுள் 7

ஒன்றோ அடர்ந்த வினை, ஒன்றோ நெருங்கு துயர்,
ஒன்றோ எனின் கவலைதான்
என்றோ துலைந்து விழும், என்றோ உனின் கழல்கள்
என்றோ பணிந்து மகிழ்வேன்,
அன்று ஆயர் நன்தயிர்களும் பால்கொணர்ந்து பதம்
அன்பாய் வணங்கும் அரசே,
மன்றுட அம்பரன்முன் நின்றுள் அனந்தன் அருள்
மைந்தா, மகத்துவ பரனே.

பொருள்:

நீ பிறந்த அன்று ஆயர்கள் நல்ல தயிரும் பாலும் கொணர்ந்து நின் திருவடியை அன்பாய் வணங்கப்பட்ட அரசே, என்னை அடர்ந்த வினை ஒன்றோ? என்னை நெருக்கிய துயர் ஒன்றோ? இவை பலப்பலவாயின; இவை தொலைந்து வீழ்வது என்றோ? நான் உன் வீரக் கழல்களில் விழுந்து பணிவது என்றோ? நான் பரம தந்தை முன் நின்று மன்றுட, முடிவில்லாதவன் அருளிய மைந்தா, மகத்துவ பரனே (துலைந்து - தொலைந்து).

செய்யுள் 8

ஐயா உனக்கு மகவு, ஐயா உனக்கடிமை,
ஐயா உனைப் பரவலே
செய்யாதிருக்கில் உலகமெல்லாம் எதிர்க்கும் அருள்
செல்லாது இடுக்கண் இடுமே
கையே குவித்தனன், எனை மெய்யாயுருக்கமிடு,
கல்லோ உனக்கு மனது
மையார் குழற்கொள் மரி நல்லாய் வளர்க்க வளர்
வல்லாய் மகத்துவ பரனே.

அருஞ்சொற்பொருள்:

இடுக்கண் - துன்பம்; மையார் குழல் கொள் - கரிய தலைமயிர் கொண்ட; நல்லாய் - நல்லாள்; பரவல் - போற்றுதல்.

பொருள் — தெளிவு.

செய்யுள் 9

எல்லாம் வனைந்து உலகம் எல்லாம் நிறைந்து இதயம்
எல்லாம் உணர்ந்த இறைவா,
பொல்லாத சிந்தனைகள் பொல்லாத நிந்தை உள்ள
பொல்லாத வஞ்சகன் எளியேன்
அல்லால் மயங்கும் பொழுதல்லா உனின் சரணம்
அல்லாது இயங்க வசமோ?
வல்லாய் புரந்தருள வல்லாய் மிகுங்கிருபை
வல்லாய், மகத்துவ பரனே.

பொருள்:

உலகம் யாவையும் படைத்து, உலகம் எல்லாம் நிறைந்து, எல்லார் இருதயங்களையும் உணர்ந்த இறைவா! பொல்லாத சிந்தனைகளையும் நிந்தனைகளையும் உடைய பொல்லாத வஞ்சகன், எளியவன். நான் துன்பத்தால் மயங்கும்பொழுது அன்றே உன்னைச் சரணடைகின்றேன். உன் அடைக்கலமல்லாது நான் இயங்குதல் கூடுமோ? காத்தருள வல்லவனே, மிகுங்கிருபை வல்லவனே, வல்லமையும் மகத்துவமும் நிறைந்த பரனே.

செய்யுள் 10

உன்னுல் எனக்கு வளம் உன்னுல் எனக்கு நலம்
உன்னுல் எனக்கு உறுதியாம்;
என்னுல் உனக்கு உறுவது என்னே? பொன்னுக்குதவி
என்னும் அதைப் புனைவரால்?

முன்னோர் உரைத்தபடி நன் நாவலர்க்குள் வரு
முன்னோன் அளித்த பரனே
மன்னு, பரத்தின் வளர் மன்னு, கிறிஸ்தெமது
மன்னு, மகத்துவ பரனே.

பொருள்:

உன்னுல் எனக்கு வளம், நலம், உறுதி எல்லாம் கிடைத்தன; ஆனுல், என்னுல் உனக்குறுவது என்ன? பொன் அணிகலன்களை அணிந்துகொள்வோரால் அப்பொன்னுக்கு என்ன பயன்? ஒன்று மில்லையே.

நல்ல நாவல்லவர்க்குள் முன்னோர் உரைத்தபடியே வருகின்ற முன்னோனுகிய இறைவன் அளித்த பரனே, மன்னனே, வானத்தில் வளர்ந்த மன்னு, இஸ்ரவேலரைப் பசியாற்றியது; கிறிஸ்து இப் பொழுது எமது திருஇராப்போசனத்தில் நாங்கள் உண்ணும் மன்னு வானுர் மகத்துவ பரனே.

ஒப்புநோக்கு:

பொன்னுற் பிரயோசனம் பொன்னுக்கங்கே தூண்டு. 'மன்னு' என்ற சொல் மூவிடங்களில் வந்துள்ளது.

1. மன்னு - மன்னனே.

2. பரத்தின் வளர் மன்னு - பாலை நிலத்தில் பசிப் பிணியால் வருந்திய இஸ்ரவேலர்க்கு வயிற்றுப் பசி நீக்கிய மன்னு.

3. கிறிஸ்து அருளிய, ஆன்மப் பசி நீக்கியருளிய மன்னு; இது திருஇராப்போசனம் எனப்படும். இதன் கருத்தை யோவான் 6-ஆம் அதிகாரத்தில் காண்க.

செய்யுள் 11

நிலையாத மாகொடிய அநியாய வாழ்வதனை
நிசமாக நாடி நிதமே
துலையாத பாவவழி தனில் ஓடி வாடியுடல்
சுடு தீயில் வீழ்வது இயல்போ?
கலையாது நேர்அடிகள் தவருது பாடிவரு
கவி வேத நாயகனையே
மலையாது சீவனதுபெற நீடு வாய் கருணை
மலையே, மகத்துவ பரனே.

பொருள்:

நமது வாழ்வு நிலையாதது, கொடியது, அநியாயமாயது; அதனை நிச்சயமாக நித்தமும் நாடி, தொலையாத பாவ வழியில் ஓடி வாடி, இறுதியில் சுடு தீ நரகில் வீழ்வது சரியோ? இல்லை என்க.

கவி வேதநாயகன் பாடிய பாடல்களில் நேரடிகள் தவறுது கலையாது வந்துள்ளன. அவனை மலைக்க வைக்காது, அவனுக்கு நீடிய வாழ்வை அருள்வாய், மலைபோன்ற கருணையாளனே, மகத்துவ பரனே.

வேதநாயகர் மன்றாட்டு கேட்கப்பட்டது. 90 ஆண்டுகள் உயிரோடிருந்தார்.

12. சத்துரு நாசம்

பிசாசு, லோகம், மாமிசம் என்ற பகைவரோடு போராட எனக்கு உதவி செய்யும். உமது சொல்லாலும் செயலாலும் எத்தனையோ பேருக்கு அவர்கள் அல்லல்பட்டபோது ஆறுதல் அளித்தீரே, எனக்கும் அவ்வாறு ஆறுதல் அளியும். நான் படும் பாடும் பலகேடும் தவிர். உம்மைப் பாடுந் தமிழ் நாவுங் கொடு என்று உருகிப் பாடியதோர் இன்னிசைப் பாடல் இது.

சருவேசுரா, சருவேசுரா என்று இப்பதிகத்தின் பத்துப் பாடல்களின் ஈற்றடிகளில் கூவி அழைத்துக் கெஞ்சுகிறார் கவிப் பக்தர்.

செ. 1–இல் 'தந்து' என்ற சொல்லை ஏழுமுறை பயின்றுள்ளார். 2–9 செய்யுட்களில் இச்சருவேசுரன் துன்புற்றோரை இன்புற்றோராக்கிய நற்செய்தி நூல் வரலாறுகளைக் குறிப்பிட்டு 'வாடும் தமியேனின் கனபாடும், பலகேடும் தவிர்' என விண்ணப்பித்தார். கவிஞர் செ. 9.

செய்யுள் 1

சீர்தந்துவிண் கதிதந்து நன்செயல் தந்து பொன்முடி
தந்துனின்
பேர்தந்து எனின் கலிவஞ்சகம் பிணியும் பல குறையுந்தவிர்;
ஏர்தந்து இசரேலின் தவிது இறை அன்போடு நிறைசங்கிதச்
சார்
சார்ந்தது இறைஞ்சிய பாதனே, சருவேசுரா சருவேசுரா!

பொருள்:

அழகு தந்து, இஸ்ரவேலின் அரசன் தாவீது அன்பு நிறைந்த சங்கீதரசம் தந்து மன்றுடிய பாதனே; எனக்கு நற்சீரும் கதியும் நற்செயல்களும் பொற்கிரீடமும் தந்து, உன் பெயர் தந்து, எனது கலிவஞ்சகம் பிணியும் பல குறைகளையும் தவிர்ப்பாயாக, சருவேசுவரா, சருவேசுவரா!

அருஞ்சொற்பொருள்:

சருவேசுரா - சருவ ஐச்வர்யம் உள்ளவரே.

செய்யுள் 2

எனையுன்றனின் மகவென்று தான் இகமும் பரமதுவும்
சொல்லும்;
பினையும்கடி எதிர் நின்றுமுன் பெருகுஞ்சமரிட நன்றதோ?
அனைவந்து முந்திரியின் ரசம் அளியென்ற போதருள்
விண்டவா,
தனையன் தனைத்தயை கொண்டுபார், சருவேசுரா, சருவேசுரா!

பொருள்:

இகமும் பரமும் என்னை உன்றனின் மகன் என்றே சொல்லும். இவ்வாறு சொல்லியும் பிசாசு என் எதிர் நின்று பெரும் போரிடுவதும் நல்லதோ? கானூ ஊர் திருமணத்தில் திராட்சரசம் விருந்தினர்க்குக் குறைவுபட்டபோது, அவர் சொல்லுக்கிணங்கிப் பெரிய அற்புதம் செய்தவரே, உன் தனையனுகிய என்னைத் தயவோடு பார், சருவேசுவரா, சருவேசுவரா.

ஒப்புநோக்கு:

யோவான் 2:1–11, கானுவில் நடந்த திருமணம்.

செய்யுள் 3

நீயேகதி நீயேமதி நீயேவழி நீயேவிழி
பேயோடு உலகோர் கூடியும் பெலனுக இங்கெனை என்
செய்வார்?
காயினையே கொலை செய்வன் மேற்கனமாம் எழுபழி என்றவா
தாயாங்கன்னி மரியாள் தொழுஞ் சருவேசுரா, சருவேசுரா.

பொருள்:

காயினுக்காக ஏழுபழி சுமருமானுல் லாமேக்குக்காக எழுபத்தேழு பழி சுமரும் என்றவரே, நீயே கதி, மதி, வழி, விழியாக இருக்கும்போது, பேயோடு உலகோர் கூடினுலும் இங்கு எனக்கு விரோதமாக நிற்பவன் யார்? அன்னை கன்னிமரி தொழும் சருவேசுவரா!

ஒப்புநோக்கு:

ஆதியாகமம் 4:23,24.

செய்யுள் 4

கடிபட்டபேய் கறுவித்தினம் கவடத்திடும் வலைக்குள்நான்
பிடிபட்டு எனின்உயிர் கெட்டிடில் பேசார்களோ ஏசார்
களோ?
முடிபட்ட முள்முடி வைத்துமே முகமக்கவே திகிரிக்கணுத்
தடிபட்டிட அடிபட்டவா, சருவேசுரா, சருவேசுரா!

அருஞ்சொற்பொருள்:

தகிரிக்கணுத்தடி - கணுக்கள் கொண்ட மூங்கில்தடி.

பொருள்:

கடிபட்ட (நாய் போன்ற) பேய் சினந்து, கபடமாகத் தினந் தோறும் இடுகின்ற வலைக்குள் நான் பிடிபட்டு என் உயிர் கெட்டுப் போனால் ஊர் மக்கள் உன்னை வசைபேசி ஏசார்களோ? உன் தலையில் முள்முடி வைத்து முகம் வாடவே கணுக்கள் கொண்ட மூங்கில் தடியால் அடிபட்டவரே, சருவேசா.

ஒப்புநோக்கு:

அவன் காவாவிட்டால் அவனுக்கே பழிசாரும் என்ற கருத்தில் மாணிக்கவாசகர், கோயின் மூத்த திருப்பதிகம் 6-ம் செய்யுளில்:

'ஏசாநிற்பர் என்னையுனக்கடி யான் என்று பிறரெல்லாம்
பேசாநிற்பர், யான்தானும் பேணு நிற்பேன் நின்னருளே'
என்றார்.

'திகிரிக்கணுத்தடி பட்டிட அடிபட்டவா, சருவேசுரா.'

திருவிளையாடற் புராணம் - நம்பி இயற்றியது (30). மண் சுமந்த பாடல்.

செ. 31–44: பிட்டுக்கு மண் சுமந்தவனை 'உடைப்பு அடை யான் எனப் பிடித்து நடுமுதுகிற் கறுத்தடித்தார் சிவக்க நாடி.'

'என்னைஏன் அடிக்கின்றீர் என்றியைந்த கொற்றாளர் நாப்பண்
தன்னுரு ஒளித்தான் புக்குத் தன்னைத்தான் பிடித்தடித்
தான்.' (38)

'அடித்த புளிமாறு சொல்வதென்னை? அரசன் முதுகோ ...
மாறனுந்தன் முதுகுகாட்டி அருட்சொக்கன் அறிகுவன்
என்றிருப்ப ஆங்கண்,
திருந்த எழுந்தது விசும்பில் எவருங்கேட்கத் திருவாத
வூரர்க்காக;
... வேண்டுவன வரியுமிட்டேம் விடுவித்தற்கு
உன்வேலையின் மண்சுமந்தடியும் பிட்டும் உண்டேம்,

ஈண்டு 'விடுவிடு' நினக்கே நன்மைசால
இவனைத்தன் வழிதிரிதற் கிரங்கலன்றே.' செ. 44
அடிபட்ட வேலையாள் சொக்கனேயாவர்

அடிபட்ட வேலையாள் வேடம்போட்ட இயேசு சருவேசுரனே யாவர்.

செய்யுள் 5

பகரந்திகழ் மடமங்கையர் பருவந்தனை நினைவுண்டவர்
மகரந்தனை நிசமென்றுயான் மருளாமல் அருள்கூரையா,
சிகரந்தனில் எழநின்றுசெங் கதிரின் திருஉரு கொண்டவா
தகரஞ்செறி சரணங்கொடு சருவேசுரா, சருவேசுரா.

அருஞ்சொற்பொருள்:

பகரம் - அலங்காரம்; மகரம் - சாயம்; சிகரம் - மலையுச்சி; தகரம் - வாசனைப் பொருள்.

பொருள்:

தங்களை அலங்கரித்துத் திகழும் பருவ மங்கையர்களை மனத்தில் வைத்து, அவர்கள் பூசிக்கொண்ட சாயம் (powder) வெளுத்துப் போகும் என்பதை அறியாது, அது நிசம் என்று நான் மயக்கம் கொள்ளாமல் இருக்க உன் அருள் கூரையா;

மலையுச்சியில் ஏறிநின்று செங்கதிர் வீசும் சூரியனைப்போன்ற திருவுருக்கோலங் கொண்டு காட்சி அளித்தவரே, நறுமணம் வீசும் உன் சீர்பாதம் கொடு சருவேசுவரனே.

ஒப்புநோக்கு:

மத்தேயு 17:1–8; மாற்கு 9:2–13; லூக். 9:28–36.

செய்யுள் 6

சிலம்தரும் மறையின்படி செல்லாமல் யான் பொல்லான் எனக்
கோலங்கொளில் எவர்என் புறம் குணமென்றுறவுஞ்
செய்வார்?
ஆலம் செறிமருள் தந்திரம் அழியும்படி மனுவாகியே
தாலம் தனிலே வந்தவா, சருவேசுரா, சருவேசுரா.

பொருள்:

நல்வழிகாட்டும் திருமறையின்படி செல்லாமல், மனம்போன போக்கிற் சென்று பொல்லான் எனக் கோலம் கொண்டால், என் பக்கம் நற்குணம் உண்டு என்று என்னோடு உறவாடுபவர் யார்?

விடம் செறிந்த மருளும் தந்திரமும் அழியும்படி மனுக்கோலம் எடுத்து இவ்வுலகத்தில் வந்தவரே, சருவேசுவரரே.

அருஞ்சொற்பொருள்:

தாலம் - இவ்வுலகம்; தாலம் தனில் வந்தவா - இவ்வுலகத்தில் வந்தவரே.

செய்யுள் 7

விரணங்கொடு பலதுன்பமாய் வினைமிஞ்சியே விழலன்கெட
மரணந்தொடு பொழுதென்றனின் மனம்அஞ்சிடாது அபையம் தராய்
இரணம் செய்யவரும் சங்கரீப் இதயம் பொடிபட வென்றவா
தருணந்தனில் உதவும் பரா சருவேசுரா, சருவேசுரா.

பதவுரை:

விரணம் - புண்; விழலன் - கூரைக்குப்போடும் விழல் போன்றவன்; சங்கரீப் - சனகரீப், அசீரியா நாட்டரசன்.

பொருள்:

புண்படுத்தும் பல துன்பங்கள் புல்லனுகிய நான் மரணம் அடையவிருக்கும் காலத்தில் என் மனம் அஞ்சிடாதிருக்க அபயம் தாராய்; போர் செய்யவரும் அசீரியா நாட்டரசன் சனகரீப்பின் இதயம் பொடிபட வந்தவா; என் மரணவேளையில் எனக்குதவும் பராபரனே, சருவேசுரனே.

ஒப்புநோக்கு:

2 இராசா 18,19 அதி.

செய்யுள் 8

என்தாதைநீ என்தாய்நீ என்சீவன்நீ என்தேவன்நீ
பெந்தான்மனம் நொந்தேதுயர் பெருகாமல் உன் அருள்கூர் ஐயா;
சிந்துடெழு நன்சீடர்முன் தென்பாக வந்த அன்பானவா
சந்தோட சம்பன்ன ராசனே, சருவேசுரா, சருவேசுரா.

பொருள்:

முதலடி தெளிவு. பந்துக்களால் நான்படும் துயர் பெருகாமல் உன் அருள்கூர்; ஐயனே, கடல்கொந்தளித்துப் படகு மூழ்கவிருக்

கும் நேரத்தில் உன் சீடர் அலறியபோது தெம்பளித்த அன்பான வரே. இறுதி அடியும் தெளிவு.

சிந்து - கடல், பெந்தான் - பந்துக்களால்.

ஒப்புநோக்கு:

மத்தேயு 8:23–27; மாற்கு 4:35–41; லூக். 8:22–24.

செய்யுள் 9

பாபம்படு சாபம்பரன் கோபம் கொடுபார் அங்கியான்
கோபம்படுகாது அன்பொடு துணைநின்று எனக்கறிவும்
சொல்லாய்;
கூபம்படு நீர்தந்திடக் குலமங்கைமுன் மொழிகின்றவா
தாபம்படு தோடந்தவிர், சருவேசுரா சருவேசுரா.

பொருள்:

பாபம் சாபம் பரனது கோபம் கொடிய நெருப்பு என்றவற்றுல் நான் பலவீனப்படாமல் நின் அன்போடு துணைநின்று எனக்கு அறிவுரையும் சொல்லாய்; நான் குடிக்க எனக்குத் தண்ணீர் தா என்று சமாரியக் குலப்பெண்ணிடம் கேட்டவரே, மனஸ்தாபப்படு கிற என் தோடத்தைத் தவிர், சருவேசுரா.

அருஞ்சொற்பொருள்:

அங்கி - அக்கினி, நெருப்பு; கோபம்படுகாது - கோபப்படாது; கூபம் - கிணறு; தாபம் - மனத்தாபம்; தோடம் - தோஷம்.

ஒப்புநோக்கு:

யோவான் 4.

செய்யுள் 10

மாடும்படி பீடுங்கொடு வாடும் தமியேனின்கன
பாடும் பலகேடும் தவிர் பாடுந்தமிழ் நாவுங்கொடு
சேடும் பொன்னின் தோடும் புனைதேடும் பரிவாள் அன்பொடு
சாடும் புகழ்நாடும் பரா, சருவேசுரா, சருவேசுரா.

அருஞ்சொற்பொருள்:

மாடு - செல்வம்; படி - நிலம்; பீடு - பெருமை, புகழ்; சேடு - அழகான பொன்னுற் செய்யப்பட்ட தோடு; காதணி.

பொருள்:

செல்வம், நிலம், புகழ்கொடு; தனியேனுகிய நான் படும் பல பாடுகளினுல் வாடுகிறேன், என் கேட்டைத் தவிர்; நான் உன் புகழ்பாடும் தமிழ் நாவுங்கொடு; தேடும் அன்பால் சாதுரிய சமர்த்தான புகழைநாடும் பராபரனே, சருவேசுரனே.

சாடு - சாதுரியம்.

வேதநாயகர் செபித்தவாறு அவருக்குத் தமிழ்பாடும் நாவும் அதனுல் வந்த புகழும் கொடுத்தார் சருவேசுரன்.

செய்யுள் 11

தினமாய சொற்பன வாழ்வையே திடமாம் என மடமாகிய
கனமான பாதகன்மீதிலே கடியால் வரும் இடிநீர், ஐயா;
அன்னம்மாள் தரும் மரிமைந்தனு அடிவேத நாயகன் வந்தனு,
சனமானவா இனமானவா, சருவேசுரா சருவேசுரா.

பொருள்:

ஒவ்வொருநாளும் தோன்றி மறையும் கனவைப்போன்ற வாழ்வையே உறுதியானதென்று மடையன் நான் நினைக்கின்றேன். இவை பெரும் பாதகனுகிய என்மீதில் பிசாசினுல் வரும் இடியும் மழையுமானவை ஐயனே.

அன்னம்மாள் தந்த மரியம்மையின் மைந்தனே. உன் அடியான் வேதநாயகனுல் வந்திக்கப்பட்டவனே, எனக்குச் சாதி சனமானவர் நீரே சருவேசுரா.

13. கிறிஸ்துவின் தாழ்மை

பதிகத்தின் அமைப்பு

செ. 1: தொகுப்பு

2–5: பெத்லகேமில் பிறப்பு–3. குழந்தையின் அழுகை; 4,5 தாராட்டு

6–7: பெரிய வியாழன், பெரிய வெள்ளிக்கிழமைகளில் இயேசு பட்ட பாடுகள்.

8–10: சிலுவைப் பாடுகளால் ஏற்பட்ட நற்பயன்கள்.

11: கவி வேதநாயகர், 'நாயகா' என்ற சொல்லைப் பதினான்கு முறை, பல பொருள் ஒரு மொழியாகப் பயன்படுத்தி, இயேசு நாயகரைப் புகழ்ந்து மகிழ்ந்து பதிகத்தை இனிது முடித்தார்.

இப் பதிகத்தின் 11 செய்யுட்கள் ஒவ்வொன்றின் ஈற்றடிகளில் ''வேதநாயகா! வேதநாயகா!'' என விளித்து, 22 + 14 = 36 முறை இப்பெயரைச் சொல்லிப் பாடினார் மகாகவி வேதநாயகர்.

செ. 2–5-இல் இயேசுவின் பிறப்புக் கால நிகழ்ச்சிகளில் அவரது தாழ்மைக் கோலத்தை வரைந்தவர், வெகு விரைவாக இயேசுவின் இறுதிக் கால வாரத்தின் பாடுகளையும் அவலச் சுவையில் பாடினார். இடைக் காலத்தில், அவரது செளலப்பிய குணாதிசயங்களை ஏனைய ஜெபமாலைப் பகுதிகளில் விவரித்துள்ளார்.

இயேசு கிறிஸ்து கடவுளும் மனிதனுமானவர். He is God and man at the same time. So we call Him a God-Man. அவரது பரமார்த்த நிலையில் அவர் பெருமையையும், அவதார நிலையில் அவர் சிறுமையையும் கண்ட வேதநாயகர் இப் பதிகச் செய்யுட்கள் ஒவ்வொன்றிலும் இவ்விரு இயல்புகளையும் நயம்படக் கூறிப் போற்றுகின்றார். ஒவ்வொரு வரியிலும் இவ்வேறுபாடுகள் ஒவ்வொரு சொல்லால் சுட்டப்பட்டுள்ளன.

செய்யுள் 1

தேவனை நீ மனுடனாகினை
திறமையான நீ சிறுமையாகினை
ஆவியான நீ சீவியாகினை
அருவமான நீ உருவமாகினை

பாவியாகினே தாழ்விலாத நீ
பாடதாகினே ஆடதாகவே
வீவிலாதி நீ சாவுமாகினே
வேதநாயகா, வேதநாயகா.

அருஞ்சொற்பொருள்:

வீவு - சாவு.

பொருள்:

கடவுளாயிருந்த நீ மனுடனுயினே, அவதார காரணத்தால், தாழ்விலாத நீ எமக்காகக் காவியாகினே; கொல்லப்படும் ஆட்டைப்போல் பாடுகள் பட்டுக் கொல்லப்பட்டாய்; சாவில்லாத நீ சாவுமாகினே என்க.

13:1. இச் செய்யுள், பப்ரீசியுசு ஞானப்பாட்டு மாலை எண் 46-ஐத் தழுவித் தமிழாக்கம் பெற்றது.

செ. 1. என்னுடைய சாவின் சாவே, என் உயிரின் சீவனே, என்னை மீட்க நீர் கர்த்தாவே, தேவ கோபத்தியிலே பாய்ந்து, மா அவஸ்தையாக பட்ட கன வாதைக்காக உமக்காயிரந்திரம், இயேசுவே, சங்கீர்த்தனம்.

மூல மொழி ஜெர்மனில்: ''இயேசுவே, என் வாழ்வின் வாழ்வே, இயேசுவே, என் சாவின் சாவே'' எனத் தொடங்கப் பட்டது.

இதுவோர் முரண்தொடை அணி; Paradox.

செய்யுள் 2

உடுகணுற்ற சாஸ்திரிகள் தேடவும்
உசம் வளைந்த நீ அழுதது, உண்ணவும்
இடையர் வந்து கண்டு அடி துதிக்கவும்
இரவிலே குளிர் பனி மிகுக்கவும்
படிசிரிக்கநீ அழுதுகொண்டதும்
பரம சேனைகள் பாடி நின்றதும்
விடையின் முன்பு வந்த துவும் என் சொலாய்
வேதநாயகா, வேதநாயகா.

அருஞ்சொற்பொருள்:

உடு - நட்சத்திரம்; **உகம்** - பூமி; **படி** - உலகம்; **விடை** - கோவேறு கழுதை.

பொருள்:

நட்சத்திரத்தைக் கண்ட மூன்று சாஸ்திரிகளும் உன்னைத் தேடவும், உலகத்தைப் படைத்த நீ தாய்ப்பால் உண்ணவும், இடையர் வந்து பெத்லகேமில் உன்னைக் காட்சி கண்டு உன் அடி துதிக்கவும், இரவில் குளிரும் பனியும் மிகுக்கவும், நீ அழுவதைக் கேட்ட உலகம் சிரிக்கவும், வான தூதர் சேனைகள் பாடி நின்றதும், கழுதையின் மேலேறி பவனி வந்ததும் என்ன காரணம் சொல்லுக. *(மத்தேயு 2:1–12).*

செய்யுள் 3

மக்கள் மக்களும் எக்குலத்தவரும்
மண்ணுளோர்களும் விண்ணுளோர்களும்
தக்க பாதலத் தோரும் யாவரும்
சருவ லோகமும் சகல பேர்களும்
ஒக்க நின்று கொண்ட திசயிக்கவே
உலகம் யாவையும் உண்டு செய்த நீ
மிக்க வெட்கமற்று அழுவதென்? சொல்லாய்
வேதநாயகா, வேதநாயகா.

பொருள் — தெளிவு.

செய்யுள் 4

கல் அகத்தினர் கொல்ல எண்ணினுல்
காட்டகத்திடை மாட்டகத்தில் உன்
வல்லபத்தினுல் என்ன செய்யலாம்
மனம் விடாமல் எகிப்பத்தில் ஏகுவாய்
புல்லகத்து அரியாவது போர்த்தவே
போல் இம்மாதிடம் சீலை ஏது தான்
வெல்லையூர்நமக் கெல்லையற்றதே
வேதநாயகா, வேதநாயகா.

அருஞ்சொற்பொருள்:

கல்லகத்தினர் - கன்னெஞ்சர்; எகிப்தில் - எகிப்பத்து, Egypt; புல் வேய்ந்த வீட்டில் வைக்கோல் கொண்டு போர்த்தினர் தாயார்; அவரிடம் சீலையால் போர்த்த வக்கில்லாமையும்; வெல்லையூர்—பெத்தலேகம்.

செய்யுள் 5

நித்திரைக்கெனத் தாயராட்டியும்
நீ அழுங்குரலே மிகுப்பதென்ன?

எத்தக்கு நீ கூவிவாடினும்
ஏழை மாதிடம் ஏதது உண்டுதான்
பெத்தலேமினில் உற்ற பேரவர்
பெருமைகண்டு உனக்கருமை செய்யவே
மெத்தவுந் துயில் விழி கொள்ளப்பனே
வேதநாயகா, வேதநாயகா.

அருஞ்சொற்பொருள்:

எத்தக்கு - எதற்கு; ஏதது - ஏது அது.

பொருள்:

தொட்டிலில் தூங்காது அழுங் குழந்தைக்குத் தாயார் கூறியது.

நீ தூங்கப்பா என்று உன் தாயாகிய நான் தாராட்டியும் உன் அழுகைக் குரலே ஓங்கி வளர்வதற்குக் காரணமென்ன? உனக்கு என்ன வேண்டுமென்று நீ கூவி வாடினாலும், நான் ஓர் ஏழைப் பெண்; நீ கேட்டது என்னிடம் ஏது அது? அது இல்லையே. இந்தப் பெத்லகேமில் உள்ளோர் உன் அருமை பெருமையை அறிந்து உனக்கு உதவி செய்வார்களோ? என் அப்பனே, நீ தூங்கு.

அல்லல்பட்டு ஆற்றாது, கண்ணீர்விட்டுச் சொல்லிய சொற்கள் நம்மை நைந்துருகச் செய்கின்றன. உன் பெருமை கண்டு உனக்கு அருமை செய்ய உற்றார் உறவினர் ஒருவரும் இவ்வூரில் இல்லையே. சத்திரத்தில் உங்களுக்கு இடம் இல்லை என்றவர்கள் தானே இவ்வூரில் உண்டு!

பரிசுத்த வாரத்தில் இயேசுவைப் படுத்தின பாடுகள்

செய்யுள் 6

மனதிலே கொடும் பகையதாயுனை
வஞ்சகர் வியாழத்தும் வெள்ளியும்
கன உபத்திர முற வதைத்ததுவும்
கடின நிந்தைகள் படிறு சொன்னதும்
முனிவதாகமுக் காடிட்டதும்
முழுதும்வேண கோரணி கொண்டதும்
வினையமோ? நரர் செய்த பாவமோ?
வேதநாயகா வேதநாயகா.

அருஞ்சொற்பொருள்:

வியாழம் வெள்ளி - பெரிய வியாழன், வெள்ளிக்கிழமைகள்; படிறு - வஞ்சனை, கொடுமை; வேண கோரணி...வேண்டுமட்டும்

பரிகாசம், நிந்தனை செய்ததும்; நரர் செய்த வினையமோ, அல்லது நான் செய்த பாவமோ அல்லது நாம் (நரர்) செய்த பாவமோ?

செய்யுள் 7

தள்ளிவீக்கி உன்தனை வளைந்துமே
தறுகணர்க் குழாம்மிக அடித்தபின்
முள்ளுவன்கடு மூடியழுத்தியே
முகமதில் கறைபட உமிழ்ந்திடக்
கள்ளன் ஒக்கலே தூடணிக்கினும்
கருணையாளன் நீ சினமிலாமலே
வெள்ளையப்பனுய் மனமெடுத்தையோ
வேதநாயகா, வேதநாயகா.

அருஞ்சொற்பொருள்:

தறுகணர் - கொடியர்; கடுமுடி - முள்முடி.

அவர்கள் இப்படியெல்லாம் செய்யினும், நீ சினமில்லாமல், கருணையாளனுக இருந்த காரணத்தால் வெள்ளையப்பனுக மனம் எடுத்தாயே.

கொடியவர் கூட்டம் உன்னை வளைந்து, தள்ளி, வீக்கி, மிகவும் அடித்தபின் உன் தலையில் கொடிய முள்முடி வைத்து அழுத்தி, உன் முகத்தில் கறைபட உமிழ்ந்தனர்; கள்ளன் ஒருவன் உன்னைத் தூஷணித்தபோதினும், கருணையாளனுகிய நீ சினங் கொள்ளாமல் பொறுமையாயிருந்தாயோ! வெள்ளையப்பனுய் - சினத்தால் முகமும் மனமும் கறுப்பாகாமல் தூய சிந்தையனு யிருந்தாயோ?

செய்யுள் 8

தந்தை மைந்தன்நீ, இந்த வேடமாய்ச்
சார்ந்ததே வினைகள் தீர்ந்ததே
உந்தன் ராச்சியம் எந்தன் ராச்சியம்
உனது செல்வம் அது எனது செல்வமே
சொந்தம்நீ எனக்கு உன்றனுக்கு நான்
சொல்ல வேறெனக்கில்லை யையனே
விந்தையீ தெல்லாம் உன்றனுண்மையே
வேதநாயகா, வேதநாயகா.

பொருள்:

கிறிஸ்துவின் தாழ்மையைப் பாட வந்தவர் அவரது மேன்மையை நன்குணந்தவர். கிறிஸ்துவின் தந்தை ஓர் அரசன்,

பேரரசன், மகாராஜன், ராஜாதிராஜன். அவருடைய ராச்சியத் திற்கோர் அளவில்லை. அத்தகைய ராஜவீட்டுக் குழந்தை புதிய தோர் வேடங்கொண்டார். மனு உருவெடுத்தார். அதனால் வந்த திரு அருட் பயன்கள் யாவை? இந்த வேடமாய்ச் சார்ந்ததே, வினைகள் தீர்ந்ததே! வினை நீக்கத்தின் பயனால் அருட்பேறு கிட்டிற்று:

1. இராச்சியம் 2. செல்வம் 3. சொந்தம்.

1. இராச்சியம்: உன்தன் ராச்சியம் வருக என்று செபிக்கக் கற்றுக்கொடுத்தவர் அந்த ராச்சியத்தையே எனக்கருளினர். இந்தக் கல்வியைக் குருவேசுநாதரிடம் கசடறக் கற்றவர் அதற்குத் தக நிற்கிறார் வேதநாயகர்.

'உந்தன் ராச்சியம் எந்தன் ராச்சியம்' என்று மார்தட்டிச் செப்புகின்றார்.

2. 'உனது செல்வம், அது எனது செல்வமே'—

'செல்வமே' என்பதில் உள்ள ஏகாரம் பிரிநிலைப்பொருளில் 'உன் செல்வம் என் செல்வமே' என்றார். தேற்றமாகப் பொருள் கொள்ளினும் அமையும்.

3. 'சொந்தம் நீ எனக்கு, உந்தனுக்கு நான்'—

நீ எனக்குச் சொந்தம், நான் உந்தனுக்குச் சொந்தம். சொந்தம் என்ற சொல் சிங்க நோக்காக ஈரிடத்திலும்.

'சொல்ல வேறு எனக்கில்லை, ஐயனே'—

நான் மேலே சொன்னதைக் காட்டிலும் வேறுவிதமாகச் சொல்ல எனக்கில்லை ஐயனே என்றார். இவ்வாறு சொல்லியும் இன்னொன்றையும் சொல்லிவைத்தார்:

'விந்தை ஈதெல்லாம் உன்றன் உண்மையே'—

இவை யாவும் விந்தையே. எனினும் இவை உந்தன் உண்மையே. ஏகாரம் தேற்றம்.

இது பண்டமாற்றால் உண்டான விந்தை—wonder.

செய்யுள் 9

அருமையாளன் நீ உரிமைநாதன் நீ
அருளுசெல்வம் நீ அதிகவாழ்வு நீ
பெருமைஞானி நீ கருணைநண்பன் நீ
பெற்றதாயும் நீ உற்றதந்தை(யும்) நீ

தருமமந்திர குருவுமாகி நீ
தருணமானபோ துதவுதோழன் நீ
விரிவுசத்திய வேதம் யாவும் நீ
வேதநாயகா, வேதநாயகா.

ஒப்புநோக்கு:

'பெற்ற தாயும் நீ, உற்ற தந்தையும் நீ' என்று குறிப்பிட்ட தால் நாம் தாயுமானவர் பாடலுக்கு வருவோம்.

தாயுமானவர் பாடல், சச்சிதானந்த சிவம், செ. 10.

'ஆதார ஆதேயம் முழுதுநீ யாதலால்
அகிலமீதெனை ஆட்டி
ஆடல் கண்டவனு நீ ஆடுகின்றவனு நீ
அருளு நீ மௌனஞான

தாதாவும் நீபெற்ற தாய் தந்தைதாமு நீ
தமரு நீ யாவு நீ காண் ...'

வேதநாயகர் தாம் பாடியதைத் தாயுமானவரிடம் கடன் வாங்கினர், திருடினர் என்போமா? அவ்வாறுஞல், தாயுமான வரும் அவ்வாறே செய்தார். 'முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோல் போற்றுபவர் தமிழ்ப் பெருமக்கள்'. இத்தகு பண்புடையோர் இவர் இருவரும்.

'அப்பனீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒருரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என்னெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன்னீ இம்மணி நீ இம்முத்து நீ
இறைவனீ ஏறூர்ந்த செல்வன் நீ.'

என்பது தேவாரப்பாடல்—6.65.1.

[இம்முத்து நீ - இச் சவரிமுத்து நீ!]

செய்யுள் 10

எண்ணுமாகினை இறையுமாகினை
ஏகமாகினை ஆகமாகினை
கண்ணுமாகினை வழியுமாகினை
கதியுமாகினை பதியுமாகினை

பண்ணுமாகினை பாவுமாகினை
பரமுமாகினை வரமுமாகினை
விண்ணுமாகினை வெளியுமாகினை
வேதநாயகா, வேதநாயகா.

அருஞ்சொற்பொருள்:

எண் - நினைப்பு; ஏகம் - ஒன்று; ஆகம் - உடல்.

பொருள்:

நினைப்புமாய், நினைத்தது முடிக்கின்ற சர்வ சாமர்த்தியமுள்ள இறைவனுமாய்.

ஒப்புநோக்கு:

எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை: 'எண்ணரிய மகிமைத் திரியேகத் துவத்தை'—நினைப்பதற்கரிய.

ஏகமாகினை ... ஒரு தனிக் கடவுளாயிருந்த நீ ஊன் உடலெடுத்த மனிதனுமானாய்.

கண்ணுமாகினை ... எனக்குக் கண்ணும் வழியுமாகினை.
கதியும் ... பரகதியும் பரபதியுமாகினை.
பண்ணுமாகினை ... இராகமும், இசையும், பாடலும் ...
பரமு ... பராபரமும் வரப்பிரசாதியும் ...
விண்ணு ... விண்ணும் வெளியும் ...'

என்றார் வேதநாயகர்.

செய்யுள் 11

ஆதிநாயகா நீதிநாயகா
அளவில்லாத மெய்ஞானநாயகா
சோதிநாயகா இயேசுநாயகா
சொரூபநாயகா அரூபநாயகா
சாதிநாயகா தேவநாயகா
வேதநாயகா என்றெனக்கருள்
வேதநாயகா, வேதநாயகா.

II. கிறிஸ்துவின் மேன்மையும் தாழ்மையும் விளக்க உரை

நமதாண்டவர் கிறிஸ்துவின் பிறப்பின் அதிசயம், ஆச்சரியம். ஒன்றுக்கொன்று முரண்படும் இருபொருள் அடங்கியுள்ளன என்பதை இப்பாடல்கள் கூறுகின்றன. Paradoxical Statements.

இதனை நம் இலக்கணிகள் முரண்தொடை என்பர். முரணுரை போலத் தோன்றும் மெய்யுரை; புரியாப் புதிர்.

அருஞ்சொற்பொருள்:

(1) வீவிலாதவன் - அழிவில்லாதவன்; சீவியாகினை - சீவன், உயிர் உள்ளவனாகினை. (5) எத்தற்கு - எதற்கு. எதுகை காரணத்தால் 'த்' இரட்டிற்று. துயில் - தூக்கம். ஏததது உண்டுதான்— ஏதேனும் உண்டோ, இல்லையே.

பொருள்:

செ. 1-இல் ஏழு முரண்படு தொடர்கள் உண்டு:

1. தேவன் × மனிதன். 2. திறமை × சிறுமை. 3. ஆவி × சீவி. 4. அருவம் × உருவம். 5. மாசில்லாதவன் × பாவி. 6. ஆடு × பாடு. 7. வீவிலாதவன் × சாவு.

இயேசுவின் உயர்நிலையைப் பரத்துவம் என்றும், தாழ்(மை) நிலையை இகத்துவம் என்றும் அவதார நிலை என்றுங்கூறுவர். வேறுபட்ட இவ் இரு நிலைகளையும் இணைத்துப் பிணைத்த செயல் கிறிஸ்து பிறப்பில், christmas-இல் அற்புதச் செயலாயிற்று. ஆண்டவரின் அவதார இரகசியம் இன்று வெளிப்படையாயிற்று.

செ. 5-இல் இயேசுவின் தாழ்மைக் கோலத்தின் ஓர் கோணத்தைக் கவிஞர் வியந்து புகழ்ந்து பாடுகின்றார். கந்தைத்துணி பொதிந்த காட்சி. (மேல் பாட்டு செ. 3) தூங்கப்பா எனச் சொல்லி மரியம்மை தாராட்டியும் உன் அழுகைக்குரல் உயர்கிறதே யன்றி அடங்கவில்லையே, ஏன்? நீ எதைக் கேட்டாலும் கொடுக்க மாட்டாத ஏழைப் பெண்ணிடம் ஒன்றுமில்லையே. இப் பெத்தலேகம் ஊரில் உள்ள உறவினர் உன் பெருமை கண்டு அருமை செய்ய உளரோ, இல்லையே—அப்படியிருந்தும், நீ தூங்கு, என் அப்பனே.

இது அவதார நிலையில் தொடங்கிய அவல நிலையின் தொடக்கம்; சிலுவையில் முடிகின்றது. உயிர்த்தெழுதலில் அவரது பரத்துவ நிலை—மேன்மை நிலை தொடங்குகின்றது.

—பப்ரீசியுசு ஞானப்பாட்டு - எண் 24:5

'இந்நீசருக்கு மோட்ச வாழ்வு உண்டாவதற்கு
புவியில் தேவ புத்திரர் மா பரதேசியானவர்.'

—மார்த்தீன் லுத்தர்

அவர் உண்டாக்கின உலகில் சுதேசியாய் வாழவேண்டிய யேசு விதேசியாக்கப்பட்டார்.

—சி. வி. சவரிமுத்து.

14. பாவ சங்கீர்த்தனம்

14-ஆம் 15-ஆம் பதிகங்கள் பாவ சங்கீர்த்தனம் எனப் பட்டன. 14-வதில் உள்ளது வேதநாயகர் சுயமாகப் பாடியது. 15-வது 'பாவ சங்கீர்த்தன கலம், அஃது பாவமன்னிப்புக்காகச் செய்யும் விவரமான செபம்' என்று தொடக்கத்தில் குறிப்பிட்டார். 21 செய்யுட்களுக்குப்பின் அடிக்குறிப்பில்: இஃது தரங்கன்பாடித் தென்மார்க்கு மிசியோனரிமார் 'ஞானோபதேசக் குறிப்பிடத் தின்படி பாடினது' என்று வரைந்துள்ளார். அதை அடுத்துக் காண்போம்.

பாவ சங்கீர்த்தனம்

பெயர்க் காரணம்:

சங்கீர்த்தனம்—சம்+கீர்த்தனம்=சொல்லுதல்.

போற்றிப் புகழ்தல்:

Confession is described as

1 : an act of Confession (as in the sacrament of penance)
2 : an acknowledgement of guilt (in a court of law)
3 : a formal statement of religious beliefs (as the Augsburg Confession)
4 : a religious body having a Common Creed (Oxford Dictionary)

சங்கீர்த்தனம் செய்ய - துதிக்க, போற்ற, பரவ, புகழ. இத் தோடு 'பாவ' என்ற அடைமொழி சேர்த்துப் பாவ சங்கீர்த்தனம் என்றவிடத்து, பாவ அறிக்கை எனப்படும்.

இப்பதிகத்தின் முதலிரண்டு செய்யுட்களின் முற்பகுதிகளி லும் 11-ஆம் செய்யுளிலும் இறைவனைப் போற்றிப் புகழ்கின்றார். ஒவ்வொரு செய்யுளின் ஈற்றடியிலும் யேசு நாதர் திருப் பிதாவுக் கும் தமக்கும் இடையில் நின்று குற்றவாளியாகிய தமக்குப் பரிந் துரை வழங்க வேண்டுமென்று மன்றாடுகிறார்.

He prays that Jesus should plead his cause before the judicial tribunal—that is, before God the Father.

இத்தரையிலே தயவுவைத்து இரங்க வேணுமென்று
ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாத சுவாமியே.

செய்யுள் 1

சீர் இலங்கும் ஆதியானின் சேயனே, என் ஆயனே,
தீய பாவம் மாறவந்த தேவ தேவ தேவனே,
நேர் இலங்கு ஞான மங்கை நேயனே, சகாயனே,
நேர்மையான தீர்வை கூறும் நீதனே, அதீதனே,
பேர் இலங்கு சத்தியத்தின் ராசனே, பிரகாசனே,
பேதையான பாவியென்றன் பாடல் கேட்டிரங்கியே
ஏர் இலங்கு வானநாடர் பேறு தந்தருள என்று
ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாத சுவாமியே.

யேசுநாதரை ஒன்பது பெயரிட்டு வாழ்த்தித் தனக்காகத் திருந்தந்தையரிடம் பரிந்துரை வழங்க வேண்டுமென்கிறார் கவிப் பக்தர்.

அருஞ்சொற்பொருள்:

இலங்கும் - ஒளிரும்; சேயன் - சுதன்; மாற வந்த - மாற்ற வந்த; தீர்வை - தீர்ப்பு; அதீதன் - மேலானவன்; ஏகன் - ஒரு தனிக் கடவுள்.

இயேசுவின் திருநாமங்கள் ஒன்பது:

1. தேவ சுதன் 2. நானே நல்லாயன் என்றவனே 3. பாவத்தை மாற்ற வந்த தேவன் 4. ஞான மங்கை மரிநேயன் 5. சகாயன் 6. நீதன் 7. அதீதன் 8. ராசன் 9. பிரகாசன்.

பொருள் — தெளிவு.

செய்யுள் 2

அத்தனே, அனுதியே, சுத்த ஞான ரூபியே,
அண்ட பிண்டம் யாவையும் விண்ட மெய்ப்பிரதாபியே,
கத்தனே, கிருபாசனு, சத்தியவேத வாசனு,
கண்கொள்ளாத காட்சியே, விண்கொள்ளாத சூட்சியே,
நித்தனே, மகத்துவனே, முத்தொழில் திரித்துவனே,
நீசனன பாவி என்றன் மாசறுத் தகற்றியே
இத்தரையிலே தயவு வைத்திரங்க வேணும் என்று
ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாத சுவாமியே.

இச்செய்யுளில் யேசுவுக்கு 12 திருநாமங்கள் சூட்டித் தமக்காக ஏகனிடம் பரிந்துரை பகர வேண்டுகிறார்.

பொருள் — தெளிவு.

செய்யுள் 3

மண்ணிலே பவத்தினுல் உதித்து வந்த பாவி யான்
மதலையான நாள்துவக்கி வன்பிலே நடந்த நான்
கண்ணினுலே செய்த பாவம் எண்ணினுலு முடியுமோ?
காதொடைம் பொறிவினை கணக்கினைக் கடந்ததே
புண்ணியம் அணுத்துணையேனு மற்ற வஞ்சகப்
புலையனுன பாவியான் புரிந்த ரண்டகங்களாம்
எண்ணிறந்த கோடிபாவ மும்பொறுத்து ஈடேற்றவென்று
ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாத சுவாமியே.

அருஞ்சொற்பொருள்:

காதொடைம் பொறிவினை - தொகைக் குறிப்புச் சொல். அவை: மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள்.

பொருள் — தெளிவு.

செய்யுள் 4

அங்கமுங்கி மங்கியே அலைக்கழிந்த பாவியான்
ஆசை இச்சை லட்சையின் அகந்தை மிஞ்சு கன்மியான்
பெண்கள் சங்க வாஞ்சையில் திரிந்து எனின் பெருமையால்
பெத்தரிக்கம் பேசியே பெரியவர் தமக்கு முன்
சங்கைசெய்து கீழ்ப்படிந்து அடக்கமாயிராத நான்
சாண்குழி பிழைக்க வெகு தப்பறைகள் சொல்லியே
எங்கணும் வினைபுரிந்த கேடனுக் கிரங்கவென்று
ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாத சுவாமியே.

அருஞ்சொற்பொருள்:

அங்கமுங்கி - உடல் நீரில் மூழ்கி; லட்சை இல் - வெட்கம் இல்லாத; பெத்தரிக்கம் - பெருமை.

நாடோடிப் பேச்சு மொழிகள் விரவி வந்துள்ளன இச் செய்யுளில்: முங்கி மங்கி, அலைக்கழிந்த பாவி, லட்சை, பெத்தரிக்கம், சாண்குழி பிழைக்க, வேணும். தான் இழைத்த பிழைகளைப் பேசும்போது இப்படி உருகிப் பேசினரோ?

'பிழை நினைந்திரங்கல்' என்று இராமலிங்க அடிகள் தனித் தமிழில் அழகுபடக் கூறியுள்ளதைக் காண்க.

செய்யுள் 5

பொன்னை நாடும் ஆசையும் பொருளை நாடும் ஆசையும்
பூமிதேடும் ஆசையும் சீமை தேடும் ஆசையும்
கன்னிமாதர் ஆசையும் காமலீலை ஆசையும்
கட்புலன்கள் ஐந்தின் கணக்கில்லாத ஆசையும்

மின்னும் ஆடுமாடு வீடு வாசல் ஆசையும்
மிக்க தந்தை தாயர் ஆசை மக்கள் பெந்தின் ஆசையும்
என்னை எண்ணும் ஆசையும் இகழ்ந்துயான் பிழைக்கவென்று
ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாத சுவாமியே.

பொருள்:

'ஆசை' என்ற சொல்லை 11 முறை பயன்படுத்தியிருந்தாலும் ஆசைகளின் தொகை அளவிறந்தது. ஆசை - அவா.

செய்யுள் 6

வஞ்சம் மிஞ்சு பஞ்ச பாவி நெஞ்சில் அன்பிலாதவன்
வானவன் உரைத்த பத்துமறை தனை மறுத்தவன்
தஞ்சம் என்று அடைந்த பேரைத் தள்ளிவிட்ட பாதகன்
தன்மம் நீதி ஞாயமுந் தவத்தையும் மறந்தவன்
அஞ்சல் என்று உனைப் பணிந்திடாத துர்க்குணன்றனை
அக்கினிக் கடற் படுத்தி ஆக்கினை யிடாமலே
எஞ்சலன்றி முற்றிலும் இரங்க வேணுமென்பதாய்
ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாத சுவாமியே.

அருஞ்சொற்பொருள்:

பத்து மறை தனை - பத்துக் கட்டளைகளை; சொல்லாட்சி: மேற் செய்யுள் போலல்லாது சற்று உயர் நடை.

பொருள் — தெளிவு.

செய்யுள் 7

மண்டலத்தில் மகதலா மரிபவம் அகற்றினீர்
வலது கள்ளனுக்கிரக்கம் வைத்து வழுத்தினீர்
கண்டு திமிர்வாத ரோகி கன்ம பாவம் மாற்றினீர்
கண்ணுறச் சீமோனையும் கடாட்சம் வைத்து நோக்கினீர்
தொண்டர் துன்பம் யாவையும் துயர்க்குருசில் ஏற்றினீர்
சொல்லுதற்கதீத அதீத துய்யதுய்ய துய்யனே,
எண்திசைக்குள் என் பவத்தையும் பொறுத்திரங்கவென்று
ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாத சுவாமியே.

பொருள்:

சொல்லுதற்கு மிக மிக அரிய தூய தூய தூயனே, நீர் மண் உலகத்தில் வாழ்ந்த காலத்தில், மகதலேனா மரியாள், வலப் பக்கத்துக் கள்ளன், திமிர்வாதக்காரன், சீமோன் பேதுரு போன்ற எண்ணற்ற தொண்டர்களது துன்பம் யாவையும் உமது துயர

மான சிலுவையில் ஏற்றித் தீர்த்தீர். எட்டுத் திசைகளிலும் நான் செய்த என் பாவத்தையும் பொறுத்திரங்க வேண்டுமென்று உமது பிதாவிடம் எனக்காகப் பரிந்து பேசியருளும், யேசுநாத சுவாமியே.

சொல்லுதற்கு அதீத அதீத = சொல் கடந்த கடந்த
துய்ய துய்ய துய்யனே - சுத்த சுத்த சுத்தனே

செய்யுள் 8

தந்தை தாய் இறந்தனர் பெந்துளோர் இறந்தனர்,
தரணி மன்னர் மாண்டனர் சகல பேரும் மாண்டனர்;
இந்தலோக சங்கடத்தில் ஆரிருந்து வாழ்ந்தனர்?
ஏழை யானும் வீயு நாளது இன்று நாளை என்றிலே
விந்தையான மாய வாழ்வை அந்தமாக நாடியே
வீணிலே அலைந்துழன்று தீயிலே விழாமலே
எந்த நாளும் என்றனுக்கு இரங்கி யாதரிக்கவென்று
ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாத சுவாமியே.

பொருள் — தெளிவு.

ஒப்புநோக்கு:

'நில்லாது காயமிது புல்லாகும் என்று நான் நினையாது போன போக்கில் . . .
பக்த ஜனபரிபால நித்தமவரனுகூலப் பரமார்த்தப் பரம நிதியே.'
(எ. ஆ. கிருஷ்ணபிள்ளை)

'நெருநலுளன் ஒருவன் . . .' (குறள்)

'இன்றைக்கிருந்தாரை நாளைக் கிருப்பரோ என்றெண்ணவே திடமில்லை . . .' (தாயுமானவர்)

செய்யுள் 9

ஆரிருந்து மாவதென் தாயிருந்து மாவதென்
ஆனசேனையோடு கூடும் வாழ்விருந்து மாவதென்
பாரிருந்து மாவதென் ஊரிருந்து மாவதென்
பாவியாவி போகுநேரம் ஈது வந்துதவுமோ?
வேரிருந்த மூலநாடி ஊடழிந்து வீழ்ந்துமே
மேனியெங்கும் ரோகமுண்டு வேதனிட்ட தீர்வையால்
ஏரிருந்த ஜீவனுவி கூடுவிட்டு நீங்குமுன்
ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாத சுவாமியே.

ஒப்புநோக்கு:

தாயுமானவர் பாடல், கழகப் பதிப்பு, பக்கம் 546.

ஆரிருந்தென்? ஆர்போய் என?—ஆரமு தாம் நின்னருளின்
சீரிருந்தால் உய்வேன் சிவமே, பராபரமே.

(பராபரக் கண்ணி 120)

ஏழு மன்றாட்டுகள் அடங்கிய செய்யுள்

செய்யுள் 10

மறுதலித்து லோக வாழ்வு முழுவதையும் வெறுக்கவும்,
வானகத்தின் ஆசையால் மூவாசையை ஒறுக்கவும்,
உறுதியுற்று ஏகசத்தியத்திலே இருக்கவும்,
உண்மையோடு சீவன் மட்டும் நன்மையாய் நடக்கவும்,
பொறுதிவைத்து வந்த துன்பங்களையறச் சகிக்கவும்,
புண்ணிய வழியில் ஊன்றி விண்ணிலேறி வாழ்கவும்,
இருதயத்திலே செபத்தின் ஆவியை அளிக்க, என்று
ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாத சுவாமியே.

அருஞ்சொற்பொருள்:

வானகம் - மேல்வீடு; மூவாசை - மண், பெண், பொன் ஆசைகள்; சீவன் மட்டும் - சீவன் போகுமட்டும்; பொறுதி - பொறுமை.

பொருள்:

1. உலக வாழ்வு முழுவதையும் மறுதலித்து வெறுக்கவும்
2. மேல் வீட்டு ஆசையால் மூவாசையை ஒறுக்கவும்
3. ஒரே சத்தியத்தில் உறுதியோடு நிலைத்திருக்கவும்
4. உயிர் போகுமட்டும் உண்மையோடு நன்மையாய் நடக்கவும்
5. வந்த துன்பங்களைப் பொறுமையோடு சகிக்கவும்
6. நல்ல வழியில் ஊன்றி விண்ணில் ஏறி வாழவும்
7. செபத்தின் ஆவியை நெஞ்சிலே அளிக்கவும்

வேண்டுமென்று இறைவனுக்குரைக்க வேண்டும், யேசுநாத சுவாமியே.

செய்யுள் 11

ஆதியேவை செய்த பாவம் அகலவந்த தந்தையே
அவனிமீது மனுடனாக அவதரித்த விந்தையே
தூதர் சேனை பாடியாடு தோத்திரக் கருணாகரா
சோதியே அனாதியே தூயதற் பராபரா

வேதநாயகன் சொல்பாவின்மேல் உலாவும் ஈசனே
மிக்க பாவநாசனு பக்கிஷ கிருபாசனு
ஏதமின்றி வாழ்க உன்றன் நீதிகொண்டெனைப் புரந்து
ஏகனுக்குரைக்க வேணும் யேசுநாத சுவாமியே.

பொருள்:

ஒரு நாமம், ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமஞ் சொல்லி வாழ்த்தி வணங்கி இறைஞ்சுவது பக்தர் இயல்பு. இச் செய்யுளில் ஒன்பது திருநாமங்கள் கூறி அவரை மகிழ்வித்தபின் யேசுநாதரைக் கெஞ்சித் தனக்காக ஏகனிடம் பரிந்துரைக்க இறைஞ்சுகிறார் வேதநாயகர்.

1. ஆதியில் ஏவாள் செய்த பாவத்தை அகற்ற வந்த தந்தையே.
2. உலகத்தில் மனுடாவதாரம் செய்த விந்தையே, இது வோர் விந்தை - Wonder.
3. தூதர் குழாம் பாடியாடித் தோத்திரிக்கும் கருணைகரா.
4. சோதியே.
5. அனுதியே.
6. தூயதற்பரா.
7. வேதநாயகன் சொல்லிய பாடலில் உலாவும் ஈசனே.
8. பாவ நாசனு.
9. பட்சமுள்ள கிருபாசனு

என்ற 9 திருப்பெயர்கள்.

நான் குற்றங் குறையின்றி உன் நீதியைக்கொண்டு என்னை இரட்சித்துத் திருத்தந்தையாருக் குரைத்தருள்க.

15. பாவ சங்கீர்த்தன கலம்

அஃது பாவமன்னிப்புக்காகச் செய்யும் விவரமான செபம். இதன் இறுதியில் கீழ்க்கண்ட அடிக்குறிப்பு வருமாறு:

'இஃது தரங்கன்பாடித் தென்மார்க்கு மிசியோனரிமார் ஞானோபதேசக் குறிப்பிடத்தின்படி பாடினது.'

வேதநாயக சாஸ்திரியார் காலத்திலிருந்து இந்நாள் மட்டும் தமிழ்ச் சுவிசேட லுத்தரன் திருச்சபையார்—

பாவ மன்னிப்புக்காகச் சொல்லிவரும் ஜெபம்.

'இரக்கமுள்ள பராபரனே, ஏழைப் பாவியாகிய நான் உமக்கு முன்பாக விழுந்து, உம்முடைய கிருபையையும் பொறுமையையும் தேட வருகிறேன். நான் மனத்தினாலும், வாக்கினாலும், நடக்கையினாலும் வெகு விதமான பாவக் குற்றங்களைப் பண்ணினேன் என்று மனஸ்தாபப்பட்டு அறிக்கையிடுகிறேன். ஆ! தயவுள்ள சுவாமி, நான் நரகத்தில் அழிவது நியாயமாயினும், என்னை உமது சமூகத்தை விட்டுத் தள்ளாதிரும். தேவரீர், என் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் பார்த்து, நான் செய்த பாவங்களை எல்லாம் மன்னித்து என்னை இரட்சியும். நான் திரும்பப் பாவம் செய்யச் சோதிக்கப்படும்போது அதற்குச் சம்மதியாமல், அதை அருவருக்கவும், உமக்குப் பிரியமான பிள்ளையாக நடக்கவும், உமது பரிசுத்தாவியைக் கொண்டு எனக்குப் புத்தியையும் பலத்தையும் தந்தருளும், இனி நான் சாகும் வேளையில் உம்முடைய மோட்ச ராஜ்யத்தில் சேருவதற்கு என்னை ஆயத்தப்படுத்தியருளும்.

சுவாமி, ஆமேன்.

16. கிறிஸ்து பட்ட பாடுகளின் பேரில் தேவாரம்

'இரங்குவாய் யேசுநாதா' என்ற 17 செய்யுட்களைத் தேவாரமாகப் பாடியுள்ளார் மகாகவி வேதநாயகர்.

செய்யுள் 1

திருமனு டவதாரத்தை
விருத்த சேதனத்தை உன்றன்
அரியஞா னஸ்நானத்தை
அடைந்தசோ தனையைத் துன்பை
வருடமுப் பத்துமூன்றின்
வறுமையை உபவாசத்தை
இருதயத் தன்பை நோக்கி
இரங்குவா யேசுநாதா!

இயேசு நாதரின் இகலோக வாழ்க்கையின் எட்டு அமிசங்களை இம் முதற் செய்யுளில் சுட்டினர் கவிஞர். 1. தேவனைகப் பரலோகத்திலிருந்தவர் அவதார புருஷனை உலகத்திற்குக் கீழிறங்கி வந்தமையே அவரது பாடுகளின் தொடக்கம் என்று இப் பதிகத்தின் தொடக்கத்தில் காட்டுகிறார். 2. விருத்தசேதனம், 3. ஞானஸ்நானம், 4. சோதனை, 5. துன்பம், 6. 33 ஆண்டுகளின் வறுமை, 7. உபவாசம், 8. அன்பு — இவற்றையெல்லாம் நோக்கி 'இரங்குவாய் யேசுநாதா' என்றார்.

ஒலிவமலைக் காவில்பட்ட ஆன்மப் பாடுகள்

செய்யுள் 2

சுந்தர ஒலிவக்காவில்
தூயவர் சூழ்கச் சென்றே
தந்தை அம்பரனை நோக்கித்
தரையில் வீழ்ந்து இறைஞ்சு நேரம்
சிந்திட உதிர வேர்வை
திகிலடைந்து ஆற்றுமம் நோக
எந்தை, நீர்படும் துன்பம் கண்டு
இரங்குவாய் யேசுநாதா!

அருஞ்சொற்பொருள்:

சுந்தர - அழகிய; தூயவர் - சீடர்; சூழ்க - சூழ; உதிர வேர்வை சிந்திட; ஆற்றும - ஆத்தும, ஆன்ம.

பொருள் — தெளிவு.

செய்யுள் 3

முப்பது வெள்ளிக்காசு
முத்தியால் யூதா சென்போன்
ஒப்புவித்திட ஒன்னர்கள்
ஒருங்குடன் கரங்கள் பற்றிச்
சற்பனையாகக் கட்டித்
தயங்கிட நடத்திச் சென்ற
இப்பெருந் துயரங் கண்டே
இரங்குவாய் யேசுநாதா!

அருஞ்சொற்பொருள்:

ஒன்னர்கள் - ஒன்றுபடாதவர்கள், ஒன்றுதவர், பகைவர்.

பொருள் — தெளிவு.

செய்யுள் 4

வஞ்சகன் அன்னு முன்னும்
வன் குருக் காய்பா முன்னும்
தஞ்சமற்ற வராய் நின்றூர்
தறுகணன் கன்னம் மீது
வெஞ்சினத் தறைய நொந்து
மிகும் பொய்ச் சாட்சிகளாலே
எஞ்சலற் றும் துன்பங் கண்டு
இரங்குவாய், இயேசுநாதா!

அருஞ்சொற்பொருள்:

தஞ்சமற்றவராய் - அடைக்கலம் அற்றவராய்; தறுகணன் - கொடியன் ஒருவன்; எஞ்சலற்று - குறைவற.

பொருள் — தெளிவு.

செய்யுள் 5

'வல்லவன் சுதன் நான்' என்ற
வார்த்தையால் மரணத் தீர்ப்பிட்டு
அல்லினில் இகழ்ச்சிகூறி
அசங்கதம் அடித்துக் குத்தித்

துல்லிப முகத்தில் துப்பித்
துயர்உற முக்காடிட்டே
எல்லையற்று இடும் துன்பங்கண்டு
இரங்குவாய், இயேசுநாதா! (மாற்கு 14:60–66)

அருஞ்சொற்பொருள்:

அல்லினில் - இருட்டில்; அசங்கதம் - அசிங்கமாக; துல்லிபம் - தூய்மை; எல்லையற்று - கணக்கில்லாத.

பேதுருவின் மறுதலிப்பு

செய்யுள் 6

விம்மியே சேவல் இரண்டு
தரம் விளிப் பதற்கு முன்னம்
மும்முறை மறுத்த சீமோன்
தனே முகம் நோக்கிஞல் போல்
செம்மையற் றெழுகும் பொல்லாத்
தீயபா தகரேயான
எம்மையுந் திருக் கண்ணேக்கி
இரங்குவாய், இயேசுநாதா! (மாற்கு 14:66–72)

பொருள் — தெளிவு.

பொந்தியு பிலாத்துவின் முன்னிலையில் பட்ட பாடுகள்

செய்யுள் 7

நிந்தனே யாகக் கட்டி
நடத்தி நிஷ்டூரமாகப்
பொந்தியுப் பிலாத்துவின்பால்
பூரியவர் அளித்தபோது
வந்த ஈங் கிஷை, அகோர
வாதை, வன்முறைப் பாட்டாலும்
எந்தை, நீர் துன்பங் கண்டு
இரங்குவாய், இயேசுநாதா! (மாற்கு 15:1–5)

அருஞ்சொற்பொருள்:

பூரியர் - கடை மக்கள்; முறைப்பாட்டாலும் - முறைப்பாடுகளாலும்.

பொருள் — தெளிவு.

ஏரோது மன்னன் இயேசுவைப் பரிகசித்தது

செய்யுள் 8

பத்தியற்று ஏரோதே மன்னன்
ஆகடி யங்கள் பண்ணிப்
பித்தனென் றுரைத்துத் தன் ரா
ணுவத்துடன் இகழ்ந்து பேசிச்
சுத்தவெண் கவசமிட்டுத்
தூஷணித் தனுப்பச்செய்த
இத் துரிதங் கண்ணுக்கி
இரங்குவாய், யேசுநாதா!

அருஞ்சொற்பொருள்:

ஆகடியம் - பரிகாசம்; கவசம் - அங்கி; துரிதம் - துன்பம்.

பொருள் — தெளிவு.

செய்யுள் 9

மன்னும் வெண் உடையை மாற்றி
வாரிஞல் அடித்துத் தீயோர்
மின்னிய சகலாத்தங்கி
வேந்தனென் றிகழ்ந்து போர்த்துப்
பின்னும் முள் முடியதிட்டுப்
பெலத்தொரு தடியால் தாக்க
இன்னமும் படுந் துன்பங்கண்டு
இரங்குவாய், யேசுநாதா!

அருஞ்சொற்பொருள்:

சகலாத்து - (பெர்சிய மொழி) அங்கி.

பொருள் — தெளிவு.

பரபாசையா? இயேசுவையா?

செய்யுள் 10

பாதகன் பரபாசோடு
பணிவுற நிறுத்திஞலும்
வேதியர் கனன்று கூவிக்
கும்பையும் எடுத்துவிட்டு
வாதையின் மரணத்தாலே
வன் 'குருசேற்றும்' என்று
ஏதமே பொறுத்த வண்ணம்
இரங்குவாய், யேசுநாதா! (மத். 27:15–26)

பொருள் — தெளிவு.

செய்யுள் 11

சேவகர் சேர்ந்து சொந்த
வஸ்திரம் சிறக்கச் சுட்டி
ஓவிய சிலுவை தோள்மேல்
சுமத்தி உக் கிரத்தினோடு
சாவுறக் கொண்டுபோகும்
தடத்தினில் படுந்துன்பங்கண்டு
இரங்குவாய், யேசுநாதா!

செய்யுள் 12

சிலுவையைச் சுமந்து சீமோன்
சிரேனியன் ஒருபால் தாங்க
மெலிவினுல் நடந்து செல்ல
மெல்லியர் அழுது நிற்கப்
பலநெறி யவர்கட்கோதிப்
பரதபித் ததுபோல் எம்மேல்
இலகும்நின் கருணைகூர்ந்தே
இரங்குவாய், யேசுநாதா!

சிரேனெ ஊர்ச் சீமோன்

இந்தச் சீமோனைப்பற்றி கவி வேதநாயகர், ஜெபமாலை 16:12-லும், 24:17-லும் குறிப்பிட்டுள்ளார். சீமோன் வரலாறு சுவையானதொன்று. (மத். 27:32–44; லூக். 23:26–43; யோவான் 19:27; மாற்கு 15:21).

''அப்பொழுது சீரேனெ ஊர்ச் சீமோன் நாட்டுப்புறத்திலிருந்து இயேசு சிலுவை சுமந்து சென்றுகொண்டிருந்த வழியில் வந்து கொண்டிருந்தான்; அவன் அலெக்சாந்தர், ரூப்பு என்பவர்களின் தகப்பன். இயேசுவின் சிலுவையைச் சுமந்து செல்லும்படி சேவகர் அவனைக் கட்டாயப்படுத்தினர்கள்.''

சிரேனெ ஊர் இப்பொழுது Tripoli எனப்படுகிறது.

சிலுவை சுமந்து சென்ற வழி –Via dolorosa.

''கட்டாயப்படுத்தினர்கள்'' — பலஸ்தீனு ரோம ராயனுக்கு அடிமைப்படுத்தப்பட்ட நாடு. எவரையும் கட்டாயப்படுத்தி சேவை சொல்லக் கட்டளையிடலாம். நாட்டுப்புறத்துச் சீமோன் பஸ்காப் பண்டிகை ஆசரிக்க எருசலேம் வந்தவன். சிலுவை தூக்க முடியாமல் தள்ளாடி விழுந்த இயேசுவின் சிலுவையைத் தூக்கிச் செல்லுமாறு சேவகர் சீமோனைக் கட்டாயப்படுத்தினர்.

அப்பொழுது அவன் ரோமரையும் இயேசுவையும் பகைத்திருப் பான்.

சீமோன், ''ரூப்பு, அலெக்சாந்தர் என்பவர்களின் தகப்பன்'' என்று மாற்கு 15:21-இல் காண்கிறோம். பவுலடிகள் ரோமர் 16:13-இல் ''ஆண்டவரின் சிறந்த அடியான் ரூப்புக்கும் அவன் அன்னைக்கும் என் வாழ்த்தைக் கூறுங்கள்'' என்றெழுதினார். இந்த ரூப்புவின் தந்தையே சிரேனெ ஊர்ச் சீமோனாக இருக்கலாம் என அறிஞர் கூறுகின்றனர்.

செய்யுள் 13

மள்ளர்கள் கொல்கதாவில் வாழ்ந்தபின் சிலுவைமீதில்
ஒள்ளிய கரங்கால்பற்றி ஆணியால் உருவத்தைத்துக்
கள்ளர்கள் இருவர் தங்கள் நடுவினிற் கடுரத்தேற்றி
எள்ளிய நிந்தைகண்டே இரங்குவா யேசுநாதா!

அருஞ்சொற்பொருள்:

மள்ளர் - பகைவர்.

செய்யுள் 14

அவ்வழி யிற்செல்வோரும் ஆரியர் தலைவ மாரும்
சவ்வியக் கள்ளன் தானும் தறுகட் சேவகருமொய்த்துத்
திவ்விய அருளைச் சற்றும் சிந்தியா திகழ்ந்துசொன்ன
எவ்விதப் பழிச்சொல்லுங் கண்டிரங்குவா யேசுநாதா!

அருஞ்சொற்பொருள்:

சவ்வியம் - இடப்பக்கம்; தறுகண் - வன்கண்.

பொருள் — தெளிவு.

செய்யுள் 15

வாடியே ஆறுந்தாசு துடங்கி ஒன்பது மட்டாக
நீடிய துயராற்றுமல் நெடுங்குருசு தனில் தொங்கிப்
பாடுபட் டேழுவார்த்தை பகர்ந்து காடியுங் கொண்டாதிக்
கீடுசெய்து இறத்தல்கண்டே இரங்குவா யேசுநாதா!

அருஞ்சொற்பொருள்:

ஆறுந்தாசு - ஆறுவது மணி; ஆதிக்கீடு செய்திறத்தல் - ஆதி பகவனுக்கு ஈடுசெய்து இறத்தல்.

பொருள் — தெளிவு.

செய்யுள் 16

மரித்தபின் திருவிலாவை வஞ்சகன் ஈட்டியாலே
திருத்தமாய்க் குத்தி ஈர்த்துத் திறந்திடச் செந்நீர் நீரும்
பெருத்தெழ அடக்கப்பட்டுப் பேறுதந்தெமை வானத்தில்
இருத்திட நினைத்த அன்பால் இரங்குவா யேசுநாதா!

பொருள் — தெளிவு.

செய்யுள் 17

ஆதிமானி டர்கள்செய்த அகந்தையான் மனுடனுகிப்
பாதகம் அனைத்துந் தீர்க்கப் பாடுபட்டுயிரைத் தந்து
வேதநா யகனும்வாழ்க, மிக்கநன்று இயற்றினுப்போல்
ஏதுமற்ற வர்எம்மேலும் இரங்குவா யேசுநாதா!

பொருள்:

ஆதாம் ஏவாள் செய்த அகந்தையான பாதகம் அனைத்தையும் தீர்க்கப் பாடுபட்டு உயிரைத் தந்து, வேதநாயகனும் வாழ்க, ஏது மற்ற எம்மேலும் மிக்க நன்று இயற்றினுற்போல் இரங்குவாய் யேசுநாதா!

17. உபவாச நாட்களின் தேவாரம்

முன்னுரை

11 செய்யுட்கள் கொண்ட இப்பாடலை பாடி முடித்து அடிக் குறிப்பு ஒன்றையும் எழுதி வைத்தார் வேதநாயகர்.

அடிக்குறிப்பு:

'புதுக் குருமார் தமிழ்ச் சனங்களுக்குச் செய்த கொடுமையைப் பற்றி பராபரனை நோக்கிக் கூப்பிட்ட முறைப்பாடு. 1834-ஆம் ஆண்டு.

இப்பதிகம் எழுதப்பட்ட சூழ்நிலையை கவிஞரது குறிப்பு வெளிப்படுத்துகிறது. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவச் சபைகளினூடே சாதிப் பிரச்சினை தாண்டவமாடிற்று. மேல்சாதி, கீழ்ச்சாதி என்ற பிரிவினைப் போராட்டத்தில் சுவார்ச்சையருக்குப் பின்வந்த கோலேப்பையர் முதலானவர்கள் கீழ்ச்சாதியினரைச் சார்ந்து ஏனைய சாதியினரை ஒடுக்கினர். அவ்வாறு ஒடுக்கப்பட்டவர்களின் அவலக் குரல்களை இப்பதிகத்திலும், 25:15-லும் காணலாம். குருக்கள் செய்த கொடுமையால் சாதியின் நலமும் சங்கையும் இழந்து, கல்லறைக்கிடமற்றுச் சுடுகாட்டுக்கற்றப்பட்டோம். தஞ்சைச் சுவார்ச்சையர் சபைகள் நாங்கள். எங்களை ஆதரிப்பாரில்லை. எங்கள் 'ஆபத்தை நீக்கி மேலுஞ் சாதியின் இடறலின்றி ஆதரவருளும்' என்று அபயக் குரல் எழுப்பியதை இனிக் காண்போம்.

செய்யுள் 1

திருக் கருணைப் பிரானே, திவ்ய பிதாவின் மைந்தா,
உருக்கமோடுலகை மீட்க உன்னதத் திருந்து வந்தோய்,
குருக்களும் பகைவரானார் கோவிலும் வேறதாயிற்று,
இரக்கமே, எங்கே நின்றாய், எம்மையாள் ஏசுநாதா.

செய்யுள் 2

அடுக்கடுக் காக வானத் தண்டகோ ளங்கள் முட்ட
உடுக்களை நிரப்பி வைத்த ஒப்பிலாக் கருணைத் தேவே,
கொடுக்கவும் வகையற்றாயோ குருசினில் எழுந்த கோவே,
இடுக்கணுற்று உடைந்தோமையா எம்மையாள் ஏசுநாதா.

செய்யுள் 3

அத்தனே அனுதி வாழ்வே அருமைரட் சகனே, ஐயா
மெத்தவும் துயரப்பட்டோம் வியாகுலம் அடைந்தோம்
உன்றன்
சித்தமே இரங்கொணுதோ திருமுகம் நோக்கொண்ணுதோ
எத்தனைதரங் கூப்பிட்டோம் எம்மையாள் ஏசுநாதா.

செய்யுள் 4

ஒப்பிலாக் கிருபையோனே யுன்றனுக் கபையம் நாங்கள்
அப்பனே கைவிடாதே ஆபத்துப் பெருகிற்றையா
கப்பலில் தூங்கினையோ கனக்க நித்திரை கொண்டாயோ
எப்பொழுது எழுந்திருப்பாய் எம்மையாள் ஏசுநாதா.

செய்யுள் 5

கங்குலும் பகலுமாகக் கவலை கொண்டடியார் எல்லாம்
பங்கமா யுலகந் தூற்றப் பாடுகள் மிகப்பட்டெங்கள்
சங்கையை இழந்தோம் பின்னும் சாதியினல முமற்றோம்
எங்கே போயிருந்தாய்ஐயா, எம்மையாள் ஏசுநாதா.

செய்யுள் 6

வல்லமையிலையோ எங்கள் வறுமைகண் டறிந்திலையோ
அல்லது மனதில்லாயோ அடியர்மேல் அன்பில்லாயோ
கல்லறைக் கிடமுமற்றுக் காட்டினுக் ககற்றப்பட்டோம்
இல்லையோ இரக்கமையா, எம்மையாள் ஏசுநாதா.

செய்யுள் 7

தன்னையே பெலியிட்டிந்தத் தரணியைப் புரக்கவந்த
உன்னதப் பிதாவின் மைந்தா, உன்னைவிட் டெங்கே
போவோம்?
பின்னெரு மீட்பனுண்டோ பெற்றவன் நீயோ வேறோ?
என்னையா கவலையற்றாய் எம்மையாள் ஏசுநாதா.

செய்யுள் 8

அண்ணலே கிருபை கூறும் அன்னியராஞ்சும் நாங்கள்
கண்ணிலே கரிப்பாரில்லைக் கடூரமாய்த் துரத்தப்பட்டோம்
பண்ணிய கொடூரம் மெத்தப் பட்டபாடு அநேகமுண்டு,
எண்ணியும் முடியாதையா, எம்மையாள் ஏசுநாதா.

செய்யுள் 9

காட்டிலே சிதறிப்போனேம் கடூரமாய் அடிக்கப்பட்டோம்
கேட்டுருகினவரில்லைக் கேள்வி கேட்பாருமில்லைப்
பாட்டினுக்குயர்ந்த தேவே பாவிகள் பட்டபாடு
ஏட்டினும் அடங்காதையா, எம்மையாள் ஏசுநாதா.

செய்யுள் 10

சங்கை போர்ந்து திலங்கு தஞ்சைச் சுவார்ச்சையர் சபைகள் நாங்கள்
மங்கியே துயரத்தாலே வாடினேம், இரக்கங் காணேம்,
தங்களைத் தங்கள் வீட்டைத் தங்கள் பிள்ளைகளையன்றி
எங்களை நினைப்பாரில்லை, எம்மையாள் ஏசுநாதா.

செய்யுள் 11

ஆதரவருளி யெங்கள் ஆபத்தை நீக்கி மேலும்
சாதியின் இடறலின்றிச் சபையெலாந் தழைக்கச் செய்து
வேதநாய கன்பாட்டெங்கள் விண்ணப்பங்களைக்
கேட்டன்பாய்
ஏதமே பொறுத் தெந்நாளும் எம்மையாள் ஏசுநாதா.

சுவார்ச்சையர் இறந்து 36 ஆண்டுகளுக்குப் பின்னரும் வேத நாயகருக்குத் தன் குருநாதன் மேலுள்ள பற்றும் பாசமும் நம்பிக் கையும் நிறைந்திருந்தன என்பது 10-ஆம் செய்யுளில் தெளிவா கிறது.

தாவீதின் சங்கீதங்களை முறை வகுத்த வல்லுநர் இத்தகு பாடல்களை 'ஒப்பாரி' - Lamentations என்பர்.

செய்யுள் 8

அண்ணலே, கிருபை கூரும்:
அன்னியரானேம் நாங்கள்
கண்ணிலே கரிப்பாரில்லைக்
கடூரமாய்த் துரத்தப்பட்டோம்
பண்ணிய கொடூரே மெத்தப்
பட்ட பாடனேக முண்டு
எண்ணியும் முடியாதையா,
எம்மையாள் ஏசுநாதா.

செய்யுள் 9

காட்டிலே சிதறிப் போனேம்
கடூரமாய் அடிக்கப்பட்டோம்;
கேட்டு உருகினவர் இல்லைக்
கேள்வி கேட்பாரும் இல்லைப்

பாட்டினுக் குயர்ந்த தேவே;
பாவிகள் பட்ட பாடு
ஏட்டினும் அடங்காதையா,
எம்மையாள் ஏசுநாதா.

இவ்விரு செய்யுட்களில், வேதநாயகர் தாம் பட்ட பாடுகள் எண்ணியும் முடியாது, ஏட்டிலும் அடங்காது என்று குமுறுகின்றார். குருக்களும் பகைவரானார், கோவிலும் வேறதாயிற்று (செ. 1), கடூரமாய்த் துரத்தப்பட்டோம் என்ற காரணத்தால் 'நாங்கள் அன்னியராளேம்' என்றார். சபையாரோடும் சமூகத்தோடும் அநந்நியமாயிருந்த நாங்கள் அந்நியராளேம்; சுதேசிகளாக இருந்த நாங்கள் விதேசிகளாக, பரதேசிகளாளேம்.

கடூரமாய்த் துரத்தப்பட்டோம், அடிக்கப்பட்டோம்; நாட்டை விட்டுக் காட்டிலே சிதறிப்பட்டோம். குருமார் கொடுமை இத்தகையன போதாவென்று சபையார்களுள்ளும் கண்ணிலே கரிப்பாரில்லை, கேட்டு உருகினவர் இல்லை, கேள்வி கேட்பாருமில்லை. பாவிகளாகிய நாங்கள் பட்டபாடு ஏட்டினும் அடங்காதையா என்று பாட்டினுக்குயர்ந்த தேவனிடம் புலம்புகிறார். (''படமுடியாதினித் துயரம் படமுடியாதரசே, பட்ட தெல்லாம் போதும், இந்தப் பயம் தீர்த்துவை'' என்பது நினைவுக்கு வருகிறது—திருவருட்பா.)

செய்யுள் 10

ஏசுவுக்குகந்த நேசன் சுவார்ச்சையரைச் சாட்சிக்கு அழைக்கிறார் வேதநாயகர், இச்செய்யுளில்.

'ஆரணதிந்தம்' என்ற நூலில் தமது சுய சரிதத்தை வரைந்துள்ளார் கவிஞர். (வேதநாயகன் விக்கினபனம், பக்கம் 45, 46) 'மாதவன் சுவாரிச்சாதிபன் வாயல் வாணன்.' சுவார்ச்சையர் வாசலில் வாழ்ந்தவன்.

'திருநெல்வேலியினிற் பிறந்து . . . குரு சுவார்ச்சையர் சமூகமே இலங்கக் கூடி நற்றஞ்சையில் வளர்ந்து' நெல்லைமாநகரிற் பிறந்து, தஞ்சையினில் நீடிய சுவார்ச்சு மாமுனிவன் சொல்லை ஆய்ந்து . . . மெய்ச் சபையினை அடைந்து முத்தமிழ் வேதநாயகன் நான்' என்று ஒருமையில் தன் சுயசரிதம் பாடினவர், இங்கு 'சுவார்ச்சையர் சபைகள் நாங்கள்' என்று பன்மையில் கூறியுள்ளார். இதன் விளக்கத்தை அடுத்த செய்யுளில் காண்க.

செய்யுள் 11

ஆதரவருளி எங்கள் ஆபத்தை நீக்கி மேலும்
சாதியின் இடறலன்றிச் சபையெலாந் தழைக்கச் செய்து
வேதநாயகன்பாட் டெங்கள் விண்ணப்பங்களைக்கேட் டன்பாய்
ஏதமே பொறுத்தெந்நாளும் எம்மையா ளேசுநாதா.

யாம் மேலே 'ஆரணந்தந்தத்தில்' கண்ட 'யான் எனது' என்ற செருக்கறுத்து, இங்கே 'எங்கள்', 'சபையெலாம்', 'எங்கள்', 'எம்மை' என்றதன் நயங்காண்க. எனவே, இவ்விண்ணப்பம் தனக்காக மட்டுமன்று; 'சபையாரெல்லாரும் தழைக்கச் செய்தல்' வேண்டுமென்றூர். He was a man for others. எங்கள் எல்லாருடைய ஏதம் (குற்றம்) பொறுத்து எம்மை யாளும் ஏசுநாதா என்று கரைந்து கரைந்து இறைவனிடம் கெஞ்சிக் கேட்கிறூர் நம் கவியரசர்.

மேற்கண்ட 17-ஆம் செய்யுள் கவிஞரது அவலநிலையை வெளிப்படுத்திற்று. 25-ஆம் செய்யுள் அவரது ஆனந்த நிலையைக் காட்டுகின்றது. அவருடைய சூழ்நிலையில் ஐந்து பேர்கள் வேத நாயகர்க்கு இடையூறு இழைத்தனர். இவற்றிற்கெல்லாம் காரணர் இறைவனே, யேசுநாயகனே என்றூர். எனினும், ''ஈதெலாம் படுத்திக் கோபமாறினபின், எழுப்பி ஆபத்தெலாம் முடித்தாய்'' என்று (தொடக்கத்தில் நிந்தித்தவர்) இறுதியில் துதிக்கிறூர்.

''எழில்பெறு சீயோன் மகள் மணவாளனே
இறைவனே, யேசு நாயகனே.''

1. வேதநாயகன் மேல் வாமனே எடுத்து
விட்டு வேடிக்கைகள் பார்த்தாய்;
2. மிக்கேலுமுத்து, அவன்பெண் டூரையே கொண்டு
வியாகுலப் படுத்தி வாதித்தாய்;
3. சாதிகள் தன்னையும் உசுப்பிவிட்டு அனேகச்
சங்கடங்களே யெலாம் விளைவித்தாய்;
4. சற்குணத்திருந்த பாக்கியநாதன்
சதிசெய்வதற்கு இடங்கொடுத்தாய்;
5. போதவே பகைத்த அடைக்கலத்தையர்
போர் அதிகரிக்கவே வைத்தாய்;
புண்ணியவானே, எத்தனே வேடம்
போடுவாய், ஆடுவாய், ஐயா!
ஈதெலாம் படுத்திக் கோபமாறின பின்
எழுப்பி ஆபத்தெலாம் முடித்தாய்;
எழில்பெறு சீயோன் மகள் மணவாளா!
இறைவனே, யேசு நாயகனே.

இச்செய்யுள் 'நிந்தாஸ்துதி' என்ற பாடற்பகுதியின் ஈற்றுச் செய்யுள்; நிந்தித்தல்போல் துதித்தல் என்பது பொருள். Ironic praise என்பர் ஆங்கிலத்தில். ஒருவரைத் தூற்றியும் அதே சமயத்தில் போற்றியும் பேசுவது. இதுவோர் தமிழ் இலக்கிய மரபு என்பதை மேலே கண்டோம்.

1. வாமன் – குள்ளன். பெயர் சொல்லாமல் அவன் உரு வத்தை மட்டும் மறைமுகமாகக் காட்டியதைக் கவிஞர் காலத் தவர் கண்டு கொள்வர். 'எடுத்துவிட்டு வேடிக்கை பார்த்தாய்' என்பது நாடோடி வழக்கு. 'உசுப்பி விட்டு' என்பதும் அஃதே. நாயைக் கடிக்க உசுப்பி விட்டான் என்பதுபோல, ஏவுதல். வாமனைக் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்த்தவன் இறைவனே என்றார் கவிஞர்.

2. மிக்கேலுமுத்து என்பவன் கத்தோலிக்கனாயிருக்கலாம். அவன் மட்டுமன்று, அவன் வீட்டுப் பெண்களையே ஏவி விட்டு என்னைத் துன்பப்படுத்தி வாதித்தாய். 'படுத்தி' என்பதும் நாடோடிச் சொல்.' இந்தப் பையன் படுத்துகிறதைப் பாரேன்.'

3. இங்குள்ள சாதிகள் தம்மையும் உசுப்பி விட்டுத் தொந்தரவு செய்தது கொஞ்ச நஞ்சமல்ல, அநேகச் சங்கடங்களை யெல்லாம் விளைவித்தாய். ஒரு விதை முப்பது, அறுபது, நூறாக விளைந்தது.

4. சற்குணத்திருந்த பாக்கியநாதன் – நல்லவனாக இருந் தவன் சதி செய்வதைக் கண்டும் காணாதுபோல அவனுக்கிடங் கொடுத்தாய்.

5. அடைக்கலத்தையர் என்னை மிக்கப் பகைத்தவர், அவரோடு ஏற்பட்ட போரை அதிகரிக்க வைத்தாய்.

எழில்பெறு சீயோன் மகள் மணவாளா,
இறைவனே, ஏசுநாதா

என்ற இவ்விரு அடிகளில், ஏசுவுக்கு மூன்று நாமம் சூட்டிப் புகழ் கின்றார் கவியரசர்.

தாம் ஏசித்துதிக்கும் பெருமான் ஓர் மணவாளன்; அவர் மண வாட்டி சீயோன் மகள். எழில் அல்லது அழகுள்ளவர் யார்? மண வாட்டியா, மணவாளனா? இருவருமே எழில் பெற்றவர்கள் என்போம். 2. அவன் எல்லாப் பொருட்களிலும் நிறைந்து நிற்கும் இறைவன். 3. அவன் பெயர் 'யேசு நாயகன்' என்றார் வேத நாயகர்.

2–14 செய்யுட்கள் இவ் இறைவன் யேசுநாயகனை நிந்தித்தும் போற்றிப் புகழ்ந்தும் பாடப் பெற்றவை. அவற்றிலொன்றைக் காண்போம்.

செ. 4. அப்பனே தச்சன்; தாயாரோ எளிய கன்னிகை; மீன் பிடிக்கும் வலையர் உன் சீடர்; சுங்கச் சாவடியிலுள்ள மத்தேயு உனக்கடுத்தோன்; உன்முன் தூதன் யார்? அவன் உணவு: வெட்டுக்கிளியும் தேனும்; உடை: ஒட்டகத் தோல்; உறைவிடம்:

ஆரணியம்; பாவிகள் உன் சிநேகிதர்; திருடன் யூதாசு உன் சீடன்; சின்னப்பன் (பவுல்) கண்ணையுங் கெடுத்தாய்.

இப்படிக்கொத்த கொள்ளையில் என்னை நீ
எப்படித் தாங்குவாய் ஐயா?
எழில்பெறு சீயோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசுநாயகனே!
'புண்ணியவானே, எத்தனையோ வேடம்
போடுவாய், ஆடுவாய், ஐயா.'

இந்தச் சூழ்நிலையில், 'ஐயா, புண்ணியவானே' என்ற சொற்கள் அர்த்த புஷ்டியுள்ளவை. இச் சூழ்நிலையைக் காண்போம்: 'நிந்தாஸ்துதி' என்ற தலைப்பில் 14 செய்யுட்களைப் பாடியபின் இறுதிச் செய்யுள் 15-ஐப் பிறைக்கோடுகளுக்கிடையில் வைத்து இச் செய்யுளைப் பாடியதற்குக் காரணம் இதுவுமோர் நிந்தாஸ்துதி யின்பாற்பட்டதென்பதே. மீண்டும்,

'ஐயா, புண்ணியவானே' என்ற சொற்றொடர் ஈரர்த்தம் கொண்டது: 'புண்ணியவானே' என்ற சொல்லின் நேர் பொருள்: புண்ணியம் செய்தவனே, அதனால் புண்ணியம் பெற்றவனே என்பன வாகும். ஐயா என்பது, பெருமைக்குரியவரே எனப்படும். இத்தனை பெரியவராயிருந்தும் 'எத்தனை வேடம் போடுவாய், ஆடுவாய்' என்ற இடத்தில், 'நாடகத்தில் வேடம் போட்டு, வேடம் மாறி நடித்தாய். வாமனைக்கிளறிவிட்டு வேடிக்கைகள் பார்த்தாய்; சாதிகளை உசுப்பிவிட்டுச் சங்கடங்களை விளைவித்தாய் (பிற வினை); அடைக்கலத்தையர் போர் அதிகரிக்கச் செய்தாய்; இத்தனை வேடம் போட்டு நாடகத்தில் ஆடுவாய், என்னை ஆட்டிவைத்து வேடிக்கைகள் பார்த்து மகிழ்ந்தாய். ஈதெல்லாம் உன் கோபத்தில் செய்த விளையாடல்கள். ஆறுவது சினம் என்ற நிலையில், அதாவது கோபம் ஆறி, மாறின நிலையில் என்னை (எழுப்பாமல்) எழுப்பி, எனக்கு வந்த ஆபத்தெல்லாவற்றையும் நீக்கித் தீர்த்து முடித்தாய். இந்நிலையில் நான் உன்னை ஏசாமல், ஏத்திப் புகழ்வேன். நிந்தனை செய்யாமல் உன்னைத் துதிப்பேன்' என்றார்.

18. மனவாஞ்சை

திருப்புகழ்ச் சந்தம்

முன்னுரை:

வேதநாயகரின் பாடல்கள் பல அருணகிரியாரது திருப்புகழ்ச் சந்தங்களோடு அவரது சொல், பொருள், கருத்துக்களையும் கொண்டமைந்துள்ளன. அவற்றில் இதுவுமொன்று.

'ஒருவரும் மன நினைவினு மறிவினும்
உணர்விட வரிதென மகிமையிலுயர்
உரை மறைதரு பரமகுமரனடி' —உரமான

என்றார் வேதநாயகர்.

'பகரொ ணாதது சேர வொணாதது
நினையொ ணாதது வான தயாபர
பதியதான சமாதி மலையம்' —வந்துதாராய்

என்றார் அருணகிரியார். (திருப்புகழ்ப் பெருந்திரட்டு 198.)

காணெ ணாதது உருவோ டருவது
பேசொ ணாதது உரையே தருவது
காணு நான்மறை முடிவாய் நிறைவது —பஞ்சபூதக்
(பெருந்திரட்டு 332)

அருணகிரியார், 'பெருமானே', 'தம்பிரானே' எனச் செய்யுளை முடித்தார்.

வேதநாயகர்:

வளமான
பெருகருணைகள் இடுஉன் அருமைகள்
பெருகள்இடு செயமிடு நயம்இடு —பரதேவே

என முடித்தார்.

செய்யுள் 1

திருவருள்பெரு கிய விண்ணின் விபுதர்கள்
தெரிசிரியர் இரு டியர்மறை அறிஞர்கள்
திடவரம் உள அரியவர் பெரியவர் —சிறியோரும்

ஒருவரும்மன நினைவினும் அறிவினும்
உணர்விடஅரி தென மகிமையிலுயர்
உரை மறைதரு பரமகுமரன் அடி —உரமான

மருவி என்முழு இருதயம் உருகிட
மதிதரு ஜெப மணியினை அநுதினம்
மகிழ்வொடு பல துதிகளின்முறை சொல் —வளமான

பெருகருணைகள் இடு வரமிடு வளர்
பிரபையின் மலர் அடியிடு உன்அருமைகள்
பெருமைகளிடு செயமிடு நயமிடு —பரதேவே

அருஞ்சொற்பொருள்:

வாஞ்சை - விருப்பம், ஆசை, ஆவல்; விபுதர் - தேவதூதர்; தெரிசிரியர் - தீர்க்கதரிசிகள், திரிகால ஞானிகள்; இருடியர் - ரிஷிகள்; மறை அறிஞர் - வேதபாரகர்.

பொருள்:

இனிவரும் செய்யுட்கள் ஒவ்வொன்றின் இறுதியில் பரதேவே, குருதேவே, என்று இறைவரை விளித்து மன்முடுகின்றூர் கவிப் பக்தர்.

விண்மண்டலத்திலுள்ள தேவதூதரும், இறைவாக்கினரும், இருடியரும், வேதநூல் வல்லுநரும், வரம்பெற்ற அரிய பெரியரும் சிறியரும்—யாரும்—தங்கள் நினைவு, அறிவு முதலியவற்றுல் உணர வொண்ணுத மகிமையில் உயர்ந்த உரையும் திருமறையும் தருகின்ற பரமகுமரன் இயேசுவின் சீர்பாதத்தைக் கெட்டியாகப் பிடித்து அணைந்து, என் இருதயம் உருகிடச் செய்யும்; புத்திதரும் ஜெப மணியினை ஒவ்வொருநாளும் மகிழ்வோடும் முறையோடும் பல துதிகளைச் சொல்ல, வளமான பெரிய கருணைகள் இடு; தூய ஆவியின் நல்வரம் இடு; வளர்ந்த, வளர்கின்ற, வளரப்போகின்ற (வளர் பிரபை—வினைத்தொகை) பரம குமரனின் சுயம் பிரகாசம் - Rediance, Brilliance ஆன திருமலரடியில் என்னை இடு; உன் அருமைகள் பெருமைகள் இடு; செயம் இடு; நயம் இடு; பராபரக் கடவுளே.

இடு என்ற சொல்லை இச்செய்யுளில் ஆறுமுறை பயின்ற கவி நயம் காண்க.

செய்யுள் 2

ஆரணமறை ஓதியநேர்புவி
யாவையும்அறு நாளதிலாடிய
ஆதிபன்நர ரூபமதாகிய —அவதார

காரணமதனுல் உயர்வானவர்
காயவிண்டம் ஆடினர் பாடினர்
கானகமுறும் ஆயர்கள் தேடினர் —கனிவாக

பூரணன்உனை யானும்அந் நேரொடு
பூசனைசெய்யும் ஆவலினுல்மிகு
போதகஜெப மாலைகள் ஓதிய —புகழாலே

தாரணம் அருள் பாடிடு நாவருள்
தாபரம் அருள் மாரணமாகிய
சார்பருள் உளின் ஆவியை அருள்ஒரு —பரதேவே

அருஞ்சொற்பொருள்:

ஆரணம், மறை - இருசொல் ஒருபொருள், வேதம்; ஆதிபன் - வானம் பூமியைப் படைக்கும் சர்வாதிகாரம் உள்ளவன்; காயம் ஆகாயம் என்ற சொல்லின் முதல் எழுத்து - 'ஆ', (காரணம், காயம், கானகம் என்ற சொற்களின் முதல் எழுத்துக்களுக்காக) செய்யுள் முறையில் விடுபட்டது. கானகம் - காடு; தாரணம் - தெப்பம், புணை; தாபரம் - ஆதாரம்; மாரணமாகிய சார்பருள் - என் மரண வேளையில் உன் சார்பு எனக்கருள்.

பொருள்:

ஆதியாகமம் 1:1-இல் கூறியுள்ளபடி, வானம், பூமி யாவையும் ஆறு நாட்களில் சொல்லொன்றுல் எளிதாக விளையாடிச் சிருட்டித்த எல்லாம் வல்ல, சருவாதிபனுகிய இயேசு நரரூபம் கொண்ட வர ராசனுகிய அவதார புருஷன் என்ற காரணத்தால், உயர்ந்த பரவெளியில் உள்ள வானவர் ஆகாயத்தை விட்டுப் பூலோகம் வந்து ஆடினர், பாடினர்; காட்டையே தங்கள் இருப்பிடமாகக் கொண்ட இடையர் அவரைக் கனிவாகத் தேடிக் கண்டு தொழு தனர்; அவ்வாறே பூரணனுகிய உம்மை யானும் நேர்மையோடு பூசனை செய்ய வேண்டுமென்ற ஆவலினுல் (மனவாஞ்சையால்), இப்பொழுது செய்துவரும் மிகுந்த போதகம், ஜெபமாலைகள் ஓதிய புகழை அங்கீகரித்து எனக்கு ஓர் தெப்பம் அருள் (1); உன் திருப் புகழ்பாடிடும் நாவை அருள் (2); எனக்கு உன் அடைக்கலம் அருள் (3); நான் சாகும் நேரத்தில் உன் சார்பு அருள் (4); நின்னுவியை அருள்; ஒப்பாரும் மிக்காருமில்லாத ஒரு பராபர தேவே, என்று மன்றுடுகின்றுர் கவி வேதநாயகர்.

நயவுரை:

'யாவையும் அறுநாளதிலாடிய ஆதிபன்
நரரூபமதாகிய அவதார காரணம்'—

நம் விசுவாசப்பிரமாணத்தின்படி, 'வானத்தையும் பூமியை யும் படைத்த சருவ வல்லமையுள்ள பிதாவாகிய பராபரனை

விசுவாசிக்கிறேன்' என்றதன் சொல்லையும் பொருளையும், வசன நடையில் உள்ளதைச் செய்யுள் நடையில் கவிஞர் பாடி வைத்தார்.

'அறுநாளதில் ஆடிய ஆதிபன்'

'ஆடிய' என்ற சொல், 'விளையாடிய' என்ற பொருளில், 'படைத்த' என்றதன் கருத்தை வெளிப்படுத்திற்று. படைப்புத் தொழில் இறைவர்க்கோர் திருவிளையாடல். சிரமமின்றி எளிதாக இயற்றப்பட்டதோர் விளையாடல். இறைவன் படைத்த உலகம், பாவத்தில் வீழ்ந்த காரணத்தால் அதை மீட்க, இரட்சிக்க, உலகத்தைப் படைத்தவரே தமக்குரிய பரலோகத்தை விட்டுப் பூலோகத்திற்கு இறங்கி வந்து, நரரூபம் எடுத்து, ஊன் உடல் கொண்டு மனிதனுனார். பிறவா யாக்கைப் பெரியோன் ஊன் உடல் எடுத்து மக்களை மீட்கும் திருப்பணியில் தமது உயிரையும் இழந்து, மூன்றும் நாளில் உயிர் பெற்று எழுந்தார் என்பது இயேசு வின் அடியார் கூட்டத்தாருடைய விசுவாசப்பிரமாணம். இத்தகு விசுவாசம் உள்ளவர் கவிஞர் வேதநாயகர். இயேசுபெருமானது அவதார இரகசியத்தை நன்குணர்ந்து வானகர், கானகமுறு ஆயர் கூட்டத்தோரோடு தாமும் இணைந்து தானும் பூசனை செய்யும் ஆவலினால், ஐந்துமுறை ஐந்துவித ஆசிகள் அருளவேண்டும் என்று பராபர தேவனை விளித்து இப்பாடல் மூலம் வேண்டுகிறார் வேத நாயகர்.

முதற் படைப்பு எளிது; இரண்டாவது படைப்பு அரிது.

செய்யுள் 2

பரம நவஎரு சலம் அதிபதிசுரர்
பணிய நிறைதவி திறைகுலமதில் ஒரு
பருவ கனிமரி•உதரமது உறும் அதி —சயஞான

உரமது உரைசதுர் வரம் அருள் கிருபைமுகில்
உலக முழுவதையும் நிலைபெற உயிர்விடும்
உதயமிடு பொறை பெருகிய கணன்என —உயர்தேவ

தரும தவசுப சமுகமது ஒளிர்இரு
சரண மலரடி பிரிய மறஒழுகிய
சகல முரடனை அவலனை வினைமிகு —தமியேனை

அருமையுடன் உன தடிமைகொள், மரணம
தளவுமுனை நினைவு அறிவொடு பணிகுவன்
அதிக சவுரிய சருவவல்லப பர —குருதேவே

'சகல முகடனை' என்பதைச் 'சகல முரடனை' எனத் திருத்தினும்.

பொருள்:

மிகுந்த பலமும் சருவ வல்லமையுமுள்ள பரம குருதேவே, பரம எருசலேம் புது எருசலேம் என்ற பட்டணத்தின் அதிபதியே, தேவ கணங்கள் பணிய, தாவீதரசனின் குலப்பெண்ணாகிய கன்னி மரியம்மையின் வயிற்றில் உதித்த அதிசயமானவரே, ஞான போதகம் நால்வரங்கள், அருளும் கிருபை முகிலே, முழு உலகத்தையும் நிலைபெறச் செய்வான் வேண்டி நீர் சிலுவையில் உயிர் விடும் நேரத்தில், 'தந்தையே, இவர்களை மன்னியும், தாம் செய்வது இன்னதென்று அறியார்கள்' என்று பொறுமை பெருகியவர் என உயர்ந்த தேவனே, நின் திருவடி, தருமம், தவம், சுபசமூகம் ஒளிரும் பெரிய சரணமலரடி அத்தகுத் திருமலரடிகளை அன்பற்ற முறையில் ஒழுகிய சகல முரடனை, அவலனை, பாவ வினை மிகுந்த தனியனாகிய என்னை அருமையுடன் உனது அடிமையாகக் கொள்ளுக. என்னை உமதடிமையாகக் கொண்டால் நான் நினைவோடும் அறிவோடும் உம்மைப் பணிவேன் என்றூர் கவிப் பக்தர்.

வேதநாயகர் ஜெபம் செய்யும் முறையை இங்குக் காண்கிறோம்:

1. தம் குருநாதரை உயர்த்துகிறூர்.

2. தம்மைத் தாழ்த்துகிறூர்.

3. தம்மைப் பொறுத்து ஆட்கொண்டால் தான் செய்யப் போவது என்ன என்பதைப் பொருத்தனையாகக்கூறி முடித்தார்.

1. தமது குருதேவன் யாவர்க்கும் மேலானவர்: அவர், பரம நவ எருசலேமுக்கு அதிபதி; தாவீதரசனின் குலத்துதித்தவர்; கிருபை முகில்; உலக மீட்பின் பொருட்டு உயிர்விடுந் தருணத்திலும் பொறுத்து மன்னிக்கும் கிருபைமுகில்; தரும தவசுப சமூகம் ஒளிரும் பெரிய திருவடி உடையவர்.

2. நான் யார்? இத்தகு திருமலரடியினைப் பிரியமற ஒழுகிய சகல முரடன், அவலன், வினைமிகு தமியேன். யாவர்க்கும் கீழாம் தனியன் இவ்வளவு கேடுகெட்ட என்னைக் கருணை முகலாகிய நீவிர் உமது கருணை வெள்ளத்தில் குளிப்பாட்டிப் புது மனிதனுக்கி அருமையுடன் உனதடிமையாகக் கொள்க.

3. இத்தகுப் பெருங்கருணைக்கு நான் செய்யும் கைம்மாறு யாது? என் உயிர் போகுமளவும் உன்னை நினைவு அறிவுடன் பணிகுவன் என்பதே என் உறுதிப்பாடு, இதுவே என் பொருத்தனை.

ஒப்புநோக்கு:

திருவாசகம், திருவெண்பா 8:
'யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்

யாவர்க்குங் கீழாம் அடியேனை—யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும்வகை.'

செய்யுள் 4

அனந்தஞானந் தங்கிய கிருபையும்
அகண்ட நேயம் பொங்கிய பெருமையும்
அடைந்தபேர்தன் வங்கிடு சரணமும் —அதிரூபும்

சினந்தநீதங்கொண் டெழுமகிமைகள்
திறங்களோடுஞ் சிந்தையினடியவர்
ஜெபங்களோதும் பண்புகளுணர்வுறு —செயலாலும்

புனைந்தபாவம் பொங்கியவினைபல
புரிந்ததோடன் கண்டகன் அயலிடை
புகுந்துநாளும் தஞ்சமதருளுதல் —புகழாகும்

கனிந்தநாவும் செஞ்சொலும் உரைமரி
கனங்களோடுங் கொஞ்சிட வரும்வரை
கடந்தவேதந் தந்தருளியபர —குருதேவே

அருஞ்சொற்பொருள்:

கண்டகன் - துட்டன்.

பொருள்:

எல்லாவற்றையும் கடந்த வேதத்தைத் தந்த உயர்ந்த குருதேவனே,

ஞானம் கிருபை நேயம் வழியும் பெருமையும் அடைந்தவர் தமக்குச் செய்யும் வணக்கமும், அதிக ரூபலாவணியமும், சினம், நீதி கொண்டு எழுகின்ற மகிமைகள் திறமைகளோடும் சிந்தை உடையவர்கள் ஓதும் ஜெபங்கள் பண்புகள் செயல்களாலும், நான் செய்த பலவித பாவ வினைகள் இயற்றிய பாவி, துட்டன், என்னுள் புகுந்து எனக்குத் தஞ்சம் அருளுதல் நினக்குப் புகழாகும்; எனக்குக் கனிந்த நாவும் செவ்விய சொல்லும் உரைப்பாயாக; மரியம்மை தன் மகிமையோடுங் கொஞ்சிட வரும் மட்டும் காலங் கடந்த திருமறையருளிய உயர்ந்த பரம குருவே.

செய்யுள் 5

துதிபெருகு கடவுள்பர நின்று லோகத்திலே
'சுடர்' எனவும் இருள்கல வந்து தாபித்துமே
சொரூபமொடு வளர்வய திரண்டுமோர் பத்திலே துடியோடு

சதுசெயர்கள் பரிசேயர் கள்முன்பு மாதர்க்கமே
தர அவர்களதிசய மிகுந்து பூரிக்கவே
தருமமறைவிதிமிக அறைந்து போதித்தவா —சருவேசா

அதிக கனமகிமைநெறி மிஞ்சும் ஞானத்திஞல்
அலகை, மதமதனிலுறை வஞ்சன்மேன்மெத்தமே
அருள்பெருகி உனதுமறை தந்து பாவித்ததே —அருளாமே

இதுவரையும் உலகினில் நடந்தமோசத்திலே
எனவிலக மிக அருள் புரிந்தநேசத்துளே
இனமும் எனையடிமைகொள் உயர்ந்த வானத்துலா
—வியதேவே.

அருஞ்சொற்பொருள்:

தாபித்துமே - ஸ்தாபித்துமே, நிருவிய; அலகை - பசாசு; இனமும் - இன்னமும், இனியும். பரநின்று லோகத்திலே - பர லோகத்திலே நின்று என மாறுக.

பொருள்:

1. துதி மிகுந்த கடவுள் மேலே நின்று, 'வெளிச்சம் உண்டாகுக' என்று சொல்லவும் இருள் அகன்றது; இவ்வாறு சொல்லொன்றுல் உலகத்தைத் தோற்றுவித்த கடவுள்,

2. தமது பன்னிரண்டாவது வயதில் சதுசேயர், பரிசேயர், வேதபாரகர் முன்னிலையில் சாமர்த்தியமாக பெரியதோர் தர்க்க வாதம் செய்ய, அதைக் கண்டு கேட்டவர்கள் மிகுந்த மகிழ்ச்சி யடையவே விதி வேத போதனை செய்த சருவேசனே; உமது மகிமையுள்ள ஞானத்தால்,

3. பசாசு உம்மைச் சோதித்த காலத்தில், அருள் பெருகி, திருமறை வாக்கால் அவனைவென்று விரட்டியதும் அருளாகுமே.

இதுவீரை உலக மோசங்களிலிருந்து என்னைக் காத்தது போல் இனியும் என்னை உன் அடிமையாகக்கொள் வானுலாவிய தேவே.

யேசுவின் சிலுவைப்பாடுகள்

அடிமையெனவேடம் நிந்தையுந்த
அவனிமிசைதாழ்மை யின்கண்முந்த
அசடர்சிறைமீள வென்றுவந்த —அருளாலே

கடுமைபலவாதை துன்பம்மிஞ்சு
கசிவுபிரலாப சஞ்சலங்கள்
கடுமுடிகள் காயம் ஐந்தடைந்து —கனமான

கொடுமை மரம்மீது நின்றுஇறந்து
குருதிவெள்ளம்ஓட வுந்தொடர்ந்து
கொடியன் எனையாள அன்புகொண்ட —குருநாதா

நெடுமைநிழல்மேவும் நண்பன்உம்பர்
நினைவினுடனுளும் அஞ்சலும்செய
நிகர் உவமையாவும் இன்றிநின்ற —பரதேவே.

அருஞ்சொற்பொருள்:

கொடுமை மரம் - கொடிய சிலுவை மரம்; நெடுமை நிழல் - கிருபை நிழல்; அஞ்சல் - வணக்கம்.

பொருள்:

அசடராம் மக்களை மீட்கவென்று அவனியில் தாழ்மை யோடு அடிமைக் கோலம் கொண்டு வந்த நிந்தை உந்த கடுமை யான பல பாடுகள் பட்டு சிலுவையேறி குருதி வெள்ளம் பெருகி யோட இறந்து, கொடியனுகிய என்னை ஆட்கொள்ள பேரன்பு கொண்டு நீடிய அருள் நிழலை விரும்பும் உன் நண்பன் ஒவ்வோர் நாளும் உயர்ந்த நினைவுடன் வணக்கம் செய்ய எனக்கருளும், ஒப்பு உவமை இல்லாத பரதேவே.

ஒப்புநோக்கு:

'தனக்குவமையிலாதான் தாழ்...' (குறள்)

செய்யுள் 7

மலைமுடிசெறி கொண்டை முடித்திரு
வரியிட விழி கொண்டு மிரட்டியும்
மயலிட வரு மங்கையருக் கெனின் —மன்மவாடி

உலைமெழுகென நின்று தவிப்பதுன்
உயர்திருவிழி கண்டது தப்பிலை
உலகதிலுறு நிந்தையிலிப்படி —உலைவேனே?

அலைகடலது பொங்கி உரத்தெழ
அதிரொலிபட விண்டு மடித்திட
அடிகளுட சங்க மரக்கலம் —அதின்மீது

நிலைதவறிந டுங்கி அரற்றிட
நிசமெனவுமு றங்கி விழித்தெதிர்
நிழலியினெடு சிந்தை அதட்டிய —பரதேவே.

பொருள்:

பெண்களின் கொண்டை மலையுச்சியில் செறிந்துள்ளது போன்றது; மைதீட்டிய கண்களைக் கொண்டு இளைஞரை மிரட்டுகிறார்கள்; அத்தகு மயல் இட என்னிடம் வரும் மங்கையருக்கென் மனம் வாடி, உலை வாய்ப்பட்ட மெழுகைப்போல் என் மனம் தவிப்பதை உனது திருவிழி கண்டதில் தப்பொன்றுமில்லை; இதனுலேற்படும் உலக நிந்தையில் இப்படி உலைவேனே? இப்பகுதி அருணகிரியார் திருப்புகழ்ச் சொல்லும் பொருளும் உவமையும் போன்றது.

மறு பாதியில், காற்றையும் கடலையும் அடக்கிய இயேசுவின் பேராற்றலை, மத்தேயு, மாற்கு, லூக்கா வசனநடையில் எழுதியதை வேதநாயகர் திருப்புகழ்ச் சந்தத்தில் அமைத்துள்ளார்.

மாபெருங் கொந்தளிப்பு உண்டானதால் படகின்மேல் அலைகள் கவிந்தன. இயேசுவோ தூங்காமல் தூங்கி, சீடர்கள்: 'ஆண்டவரே, காப்பாற்றும், மடிந்துபோகிறோம்' என்று கூக்குரலிட்டதால் - நிலை தவறி நடுங்கி அரற்றிட - 'நிசமெனவும் உறங்கி விழித்து' எதிர்க் காற்றை அதட்டி அமைதி உண்டாக்கினர். கடலிலும், சீடர் சிந்தையிலும் உண்டாயிற்று.

மங்கையர் விழியால் மருட்டியதால் அருணகிரியார் மருண்டார், மிரண்டார்.

மங்கையர் விழிகொண்டு மிரட்டியதால், வேதநாயகர் மனம் வாடி உலைமெழுகெனத் தவித்தார். இவ்வாறு உலைந்து கொண்டே இருப்பேனே என்று—யேசுவின் சீடர் அலறி அரற்றிப் படகில் தூங்கிய குருநாதரை எழுப்பியதுபோல் இப்பக்தர் இறைவனை எழுப்புகிறார்கள்.

அருஞ்சொற்பொருள்:

நிழலி - காற்று; அடிகளினுட சங்கம் – முனிவர் கூட்டம்; சிந்து - கடல்.

மத். 8:23–27; மாற்கு 4:35–41; லூக்கா 8:22–25.

செய்யுள் 8

நறுமலர்க்கமழ் குழலிகள் கலவியை
நணுகிமுற்றினும் உடல்கெட இளமையின்
நலமதற்று பிணிகொடு நரகதின்—அடி வீழ்கும்

உறுகெட்டவர் களின்முடிவினை மனது
உணரவைத்து அருள்புரி; முன்னம் இசரல
ரொடுபொரப்படை யுடன்வரும் அசடரை—உரமாக

இறுதிபட்டழி வுகள்படமுறிவு செய்து
எழுதிவைத்தவர் வழிமரபுகளையும்
எழின்முகச்சவுல் அரசனிலெடு சொல்லி —ரிவாக

அறுதியிட்டு அதமிட அருளியபடி
அபிமெலக்கர சனைவதை புரியினும்
அவகடச்சவுலை யும்ஒருவியபர —குருதேவே,

அருஞ்சொற்பொருள்:

அவகடம் - ஏமாற்றுதல்; ஒருவிய - விலக்கிய.

பொருள்:

நறுமணம் கமழும் குழல்கள் கொண்ட பெண்கள் கலவியை அணுகி, உடல் முற்றினும் கெட்டுப்போகுமாறு இளமை நலம் கெட்டுப் பிணியுண்டாக்கும் நரக பாதாளத்தில் வீழும் உறுதி கெட்டவர்களின் முடிவினை நான் உணரும்படிச் செய்துவை; முன் காலத்தில் இஸ்ரவேலருடன் போரிடப் படையுடன் வந்த அசடரை அழித்து அவ்வரலாறுகளை எழுதி (யாத்திராகமம் 17:8–16; 1 சாமுவேல் 16) வைத்து அவற்றைச் சவுலரசனுக்குச் சொல்லி, அவர்களை அழிக்கக் கட்டளையிட்டு, அபிமெலக்கு அரசனை வதைத்து, ஏமாற்றும் சவுலையும் அரச பதவியிலிருந்து நீக்கிய பெருமை வாய்ந்த பராபரக் கடவுளே எனக்கருள்க.

7-ஆம் செய்யுளில் காமக் கடல் என்று உருவகித்தவர் 8-இல் காமத்தை, பெண்ணுசையைப் போர் புரிதலுக்கொப்பிட்டார். பன்னூறு ஆண்டுகளுக்குமுன் பெண்கள் எவ்வாறு தங்களை அலங்கரித்து, இளைஞரை இழுத்துக் கெடுத்தனர் என்பதை 20-ஆம் நூற்றாண்டிலும் செய்கின்றனர் என்பதை அறிந்து தவிர்க.

செய்யுள் 9

தேசமெங்கெங்கும் அலைவுற்று
நீசன்என்று அங்கு பலமக்கள்
சீறவும் சிந்தை மதிவைத்து —திடமேகி

மோசமுங்கொண்டு வழிபட்டு
ரோசமும் பங்கமதும் உற்ற
மூடன்என்று எந்தனையும்வைக்க —முறையாமோ

லாசரின் தங்கை மரிபற்று
நேச சொம்பங்கை இதயத்துள்
நாடவும் புந்தி தருவித்து நலமான

தாசன் என்றும்செய்; மனமொத்து
லூசியும் பண்டு புகழிட்ட
சாமிஎன்றென்றும் முடிவற்ற—பரதேவே.

அருஞ்சொற்பொருள்:

சிந்தை - மதி; பற்று - நேசம்—ஒருபொருள் இரு சொல். புத்தி - புத்தி.

பொருள்:

(பெண்ணுசையினால்) நாடெங்கும் அலைந்து, நீசம் என்று பலர் என்னைப் பழித்து, ரோசமில்லாத மூடன் என்னை (இவ்வுலகில்) வைத்திருப்பது உனக்கு முறையாகுமோ?

லாசருவின் தங்கை மரியாள் ஆண்டவர் இயேசுவின் பற்று, நேசம் காரணமாக சுயமான நல்ல பங்கைத் தேர்ந்து எடுத்தது போல நானும் என் நெஞ்சத்துள் நாட எனக்குப் புத்தி தருவித்து, நான் உனது நல்ல தாசன் எனச் செய்தருள்க;

கெட்டுப்போன பிசாசன் பழங்காலத்தில் உன்னைப் புகழ்ந் தானே சுவாமியே, முடிவில்லாத நித்திய பரதேவே. லூசி - Lousian - a Devil.

செய்யுள் 10

பவமதில் உழைத்து அதிப்
படிறுகள் நடத்தித் துட்டப்
பயல் என நடத்தப்பட்டு இப் —படி மீதே
அவரவர் நகைக்கத் துப்புஅற்று
அவமதி படைத்துக் கெட்டிட்டு
அறிவு அழி பகைக்குள் சிக்கிட்டு —அலைவேனை
கவை நகை யெடுத்துக் குட்டிப்
பசு வுரு படுத்திப் பற்றிக்
கன வறை முழக்கித் தட்டிக் —கட மீதே
சவை மிகுத்துக் கொட்டத்
திட நடம் அடித்துக் கத்தச்
சமையம தழிக்கப் பற்றுப் —பரதேவே.

அருஞ்சொற்பொருள்:

பவம் – பாவம்; படிறு – பொய், வஞ்சனை, திருட்டு; துட்ட – துஷ்ட; படி – உலகம்; துப்பு – சாமர்த்தியம்; கடம்– குடம்; சவை– அவை, சபை.

பொருள்:

யாத்திராகமம் 32:1–6ஐப் படித்தபின் இச்செய்யுட் பொருள் தெளிவுறும்.

இச் செய்யுளின் கடைசி ஆறு அடிகளின் பொருள் காண, யாத்திராகமம் 32:6ஐக் காண்க: 32:2,3: காதணிகளைக் கழற்றி. . . 32:6–' 'பின்பு மக்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, கூத்தாட எழுந்தனர்.'

செய்யுள் 11

மாதரார் தரும் இச்சையின் பெரு
மாயையான் மனம் மெத்த நொந்த அதி
வாதையாய் மதம் உற்று அழிந்திட —மருளாலே

தீதிலே நிலே உற்று அருங்கடி
சேயனுயத மத்து உறைந்து அழல்
சேரவே முடிவு அற்று அழுந்திய —சிறைதீராய்;

பாதமானது பற்றி அன்பொடு
பாவையாள் திரு சத்தியங் கொடு
பாசமாய் மணம் இட்டெழும்பிய —சுருளாலே

காதலோடு துவட்ட அங்கு அவள்
காமியாய் முன் இழைத்த நிந்தைகள்
காடதோட உரைத்த சம்பன —பரதேவே

பொருள்:

இச் செய்யுளின் முதல் ஆறு அடிகள்: 'மாதரார். . . சிறை தீராய்' என்பது மட்டும் பெண்ணுசையால் உண்டான துன்பங் களைக் கூறினர்.

அருஞ்சொற்பொருள்:

சேயனுயத மத்துறைந்து அழல்–சேயனுய் அதமத்து உறைந்து அழல் (நெருப்பு); சேரவே - நான் முடிவற்று அழுந்திய சிறை தீராய் என்றூர்.

பிற்பகுதியின் ஆறு அடிகளும் லூக்கா 7:37,38இல் கண்ட, 'பாவியான பெண்ணுக்கு இயேசு மன்னிப்பளித்ததைக் கூறு கின்றன.' அப்பெண் அவருக்குப் பின்னல் அவர் பாதத்தருகில் நின்று அழுது, அவர் திருவடிகளைத் தன் கண்ணீரால் நனைத்து, தன் கூந்தலினுல் துடைத்து, முத்தி செய்து, நறுமணத் தைலத் தைப் பூசினுள். . . ''இவள் செய்த பல பாவங்கள் இவளுக்கு மன்னிக்கப்பட்டன'' என்றூர் இயேசு.

தமக்கு வரும் ஒன்பது வினைகளைக் கூறுவது

செய்யுள் 12

கணப்பகையுட வலித்திறம் ஒரு வினை
கதித்து உலகு இடும் உபத்திரம் ஒரு வினை
கடத்துடல் செய்யும் இடக்குகள் ஒரு வினை —கனமான
பணப்பகையிடு திருக்குகள் ஒரு வினை
படிப்புகள் தரும் மகத்துவம் ஒரு வினை —பழியாக
மணப்பகையெழ முடிப்பவர் ஒரு வினை
வனத்து இருதயம் உழற்றுவதொருவினை
மனக்கவலைகள் கணக்கிலது ஒரு வினை —மருள் தீராய்
நிணப்பகை நினிவயர்க்கொரு முனியுடன்
நிசத்து அழிவுகள் வருத்துவம் என மறை
நிகழ்த்தினும் அருள் நினைத்தருளியபர —குருதேவே.

பொருள்:

யோனு 3-ஆம் 4-ஆம் அதிகாரங்களை உன்னிப் படித்தவர்கள் இச்செய்யுட் பொருளை அறிவார்கள்.

12 வரிகளில் ஒரு வரி குறைந்துள்ளது. அதில் இன்னொரு வினையைச் சொல்லிருப்பார். ஆகக் கூடுதல் வினை: 9.

பிசாசு லோகம் மாமிசம் என்பனவற்றுல் வரும் வினைகள்.

பணம் படிப்பு மணம் என்பனவற்றுல் வரும் வினைகள்.

நினிவே நகர மக்களை நிச்சயமாக அழிப்போம் என்று யோனு முனிவரைக்கொண்டு செய்தி அனுப்பினலும் அருள் காரணமாக அவர்களை அழிக்காது காப்பாற்றிய பரகுருதேவே என் மருள் தீர்த்தருள்க என்று வருந்தி வருந்தி இறைஞ்சுகின்றுர் கவிபக்தர்.

இத்தகு மனவாஞ்சை நமக்கும் வருதல் வேண்டும்.

இச்செய்யுளின் இறுதி அடிகள் மூன்றும், யோனு தீர்க்கதரிசியின் ஆகமம் 4:10, 11-இல் கூறப்பட்டவற்றை நமக்கும் பயன்படப் பாடியுள்ளார்.

'நிசமாகவே அழிவுகளை வருத்துவம் எனத் திருமறை நிகழ்த்தினும்', அழிவு வாராமல் அருள் நினைத்தருளிய குருதேவரை வழுத்துகிறுர் அவர்.

''எல்லாரும் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.'' (மத்தேயு 11:28–30)

செய்யுள் 13

பொல்லாத பேய்களை யேதொழுத பாதகர்,
கல்லாத மூடர்க ளாய்வளர்க போதிகள்,
புல்லோர்கள் தீவினை யாளர்கள் நீதர்கள்— —புலையர்களர்

எல்லாரும் வாரும், இதோ, எனது நீதியை
அல்லாதுசிவன் உருது கெடுவீர், நலம்
இல்லாத ஏழைகளே என உசாவிய —இணையாளா

உல்லாசமாய் உல காசைகளிலே கன
சல்லாபமாய் வினை யாடி அட மாய் மனம்
ஒல்காமலே திரி பாவியெனையாள்வதுன் —அருளாமே

சொல் வேதநாயகன் ஓதிய மனேகர
நல்லாயன் இயேசு சுவாமி கிருபாகர
தொல்லாதி பாவ விமோசன சருவேசுர —பரதேவே

பொருள்:

'எல்லாரும் வாரும்' என்றழைத்தாரே இயேசு, அவர்கள் யார் யார் என்று பட்டியல் போட்டுக் காட்டுகிறார் கவிஞர். பாதகர், மூடர், குருடர், புல்லோர், தீவினையாளர், நீதிமான்கள், நலம் இல்லாத ஏழைகளே எனப்பட்டவர்கள். இக்குழுவில் கவிஞர் தம்மையும் சேர்த்துக் கொண்டார்.

மனம் ஒல்காமலே திரி பாவியெனை யாள்வதும்—அருளாமே பரதேவர்க்கு, அவர் நற்குணத்திற் கேற்றதோர் நற்பெயர் சூட்டி பதிகத்தை முடித்தார்:

''தொல்லாதி பாவ விமோசன சருவேசுரன்'' என்றார்.

'தொல்லாதி மூலப் பரம் பொருளே' என்றார் ஓர் தமிழர். 'தொல்லாதி பாவ விமோசன சருவேசுர—பரதேவே' என்றார் நம் கிறித்தவத் தமிழர்.

19. திரு. பவுலடிகளுக்கும் வேதநாயகர்க்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்

(ஓர் ஆராய்ச்சி உரை)

ஜெபமாலை 18. செ. 3-க்கு உரை எழுதியபோது பவுலடிகள் தீமோத்தேயுவுக்கு எழுதிய முதல் கடிதம் 1:11–17 எம் நினைவுக்கு வந்தது. வேதநாயகர்க்கு இப்பகுதி மனப்பாடமாயிருந்திருத்தல் கூடும். பவுலாரின் சொல்லும் பொருளும் தமது அநுபவ அறிவால் உணர்ந்திருப்பர்; இவ்வுணர்வின் அடிப்படையில் இச்செய்யுளை யாத்திருக்கின்றார் என்பது எம் துணிவு.

இச்செய்யுளில் (வரி 4): 1. 'சதுர் வரம் அருள் கிருபைமுகில்', 2. 'உலக முழுவதையும் நிலைபெற உயிர்விடும் உதயமிடு பொறை பெருகிய கண்ணன்', 3. 'முரடனை அவலனை வினைமிகு தமியேனை அருமையுடன் உனதடிமைகொள்', 4. 'மரணமதளவும் உனை நினைவு அறிவொடு பணிகுவன்' என்ற சொற்றொடர்கள், பவுலடிகளின் சொற்றொடர்கள் எம்மனத்தில் தொனிப் பொருளாயின– அவற்றை விளக்குவோம்.

பவுலடிகளின் ஆவணச் சான்றை (Documentary evidence) அடிப்படையாகக்கொண்டு ஆராயப் புகுவோம். 1 தீமோத்தேயு 1:12–17.

கடவுள் எனக்குக் காட்டின கழிபேரிரக்கத்துக்காக என் நன்றியும் புகழ்ப் பாடலும்

12. நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசு என்னை நம்பிக்கைக் குரியவன் எனக்கொண்டு என்னை இப்பணியில் அமர்த்தினதற் காகவும், அதைச் செய்ய எனக்கு ஆற்றலளித்ததற்காகவும் நன்றி செலுத்துகிறேன்.

13. முன்பு நான் வசை மொழி கூறுபவனையும் துன்புறுத்து கிறவனையும் வன்செயல் புரிபவனையும் இருந்தேன். ஆயினும், நான் ஆண்டவரிடம் நம்பிக்கை கொள்ளாத நிலையில் அறியாமை காரணமாக அப்படிச் செய்தமையால் அவர் எனக்கு இரங்கினர்.

14. நம் ஆண்டவர் தமது மட்டில்லா அருளே என்மீது பொழிந்தருளினர். அதுவே கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருப்பதில் நமக்கிருக்கும் நம்பிக்கையையும் அன்பையும் எனக்குள் விளைவித்தது.

15. பாவிகளை மீட்கக் கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார். நம்பத்தக்கதும் மனமார ஒப்புக்கொள்ளக்கூடியதுமான மகா வாக்கியமாயிற்று.

16. பாவிகளுள் பெரும் பாவி நானே. ஆனால் கடவுள் எனக்கு இரங்கினர். ஏனெனில், இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்டு என்றுமுள்ள பெருவாழ்வைப் பெறுவோர்க்கு நான் ஒரு முன்மாதிரியாயிருக்கும்படி, முதன் முதல் என்னிடம் மிகுந்த பொறுமையோடிருக்கத் திருவுளங்கொண்டார்.

17. என்றென்றும் அரசராயிருப்பவர்க்கே,
அழிவில்லாதவரும் கண்ணுக்குப் புலப்படாதவரும்,
ஒரே கடவுளாயிருக்கும் அவருக்கே என்றென்றும்
மாண்பு! மாட்சிமை! ஆமேன்.''

கிரேக்க மொழியில் எழுதப்பட்ட இந்த அறிக்கையைத் தமிழாக்கம் செய்தவர்கள்: 'பாவிகளுள் பெரும் பாவி நானே' என்று எழுதினர்கள். 'பெரும் பாவி' என்றால் சின்ன பாவிகளோடு ஒப்பிட்டால் பவுலார் பெரும் பாவி எனப்படுவர். ஆனால் கிரேக்க மூல மொழியில் சொல்லப்பட்டதென்ன? 'of whom (i.e. Among the sinners') 'I am the topmost.' 'பாவிகள் என்ற வரிசையில் நான் முதலிடம் பெற்றவன்' எனப் பொருள் கொள்ளும். எனவே, 'பாவிகளுள் பெரும் பாவி நானே' என்றனர் புதுத் திருத்தம் செய்தவர்கள். 'நானே' என்றதில் பிரிநிலை ஏகாரம் வந்துள்ளமையால், பாவிகளுள் நான் வேறுபட்டவன், அவர்களிலிருந்து நான் பிரிந்துள்ளவன் என்றார். 'என்னனைய பாவியர் இந்நிலவுலகில் யாண்டுமிலர்' என்றார் மகாவித்துவான் எ. ஆ. கிருஷ்ண பிள்ளை.

கிரேக்க மொழியில் 'Protos' என்பது 'first' எனப்படும். முதல், முதல்வன் எனத் தமிழில் கூறப்படும்.

பாவிகளில் நான் முதல்வன் என்பது தமிழ் மரபன்று. எனவே, மாணிக்கவாசகரைப்போன்று கிருஷ்ண பிள்ளையும் 'கள்ளமுறுங் கடையேனும் கடைத்தேறப் பெருங்கருணை வெள்ள முகந் தருள் பொழியும் விமலலோசன நிதியை, உள்ளமுவப்புறு தேனை, உயிர்க்குயிரை, உலவாத தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவை மிசைக் கண்டேனே' என்று பாடினர்.

மேலும் ஓர் குறிப்பு: 'பாவிகளை மீட்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்' என்னும் இது ஆதி அடியாரது அறிக்கை. இதைப் பவுலார், நம்பத்தக்கதும் மனமார ஒப்புக்கொள்ளக்கூடியதுமான மகா வாக்கியம்' என்னும். ஆனால் இவ்வறிக்கைக்கு அடிப்படையில் நின்றது இயேசுவின் பொன் மொழி; இது சகேயுவின் இல்லத்தில் இயேசுவின் திருவாய் மொழி:

'காணுமற் போயிருப்பதைத் தேடுவதற்கும் அதை மீட்பதற்குமே மனுமைந்தர் வந்திருக்கிறார்' (லூக்கா 19:10).

பவுலார் இத்தகு பாவ அறிக்கை செய்ததில் பிறிதோர் நயங் காண்க. கிரேக்க மொழியில், 'பாவிகளுள் நான் பெரும்பாவியாக இருக்கிறேன்' என்று நிகழ் கால வினைமுற்று பயிலப்பட்டுள்ளது. 'I am the worst of them' என TεVஇல் எழுதப்பட்டிருக்கிறது. 'I am' என்பது நிகழ் கால வினைமுற்று. இது காரணமாக, Dr. J. Jeremia NTDஇல் சொல்வதைக் காண்க: 'I stand at the top.' The guilt is cancelled; however it remains a permanent cause for humility. And now the last and the greatest point; is the description of God's name with this mercy! the verb is passive—'But God was merciful to me.'

As Paul was the first among the sinners, he was made first among the blessed when Jesut Christ has shown him his long-suffering completely and fully; Paul would be shown as the example to all those who would later believe and receive the eternal life. The worst of sinners is made the best of an example. He is shown as an extra-ordinary border-case to all the world. Thus Paul is a living, irrefutable witness for that no man who was lost is beyond the reach of divine mercy—Jesus came to make the sinner a blessed man.'

V. 15—'முதன் முதல் என்னிடம் மிகுந்த பொறுமையோடிருக்கத் திருவுளங்கொண்டார்.' தமிழில் 'முதன் முதல்' என்ற சொல், கிரேக்க மொழியில், εγεμοl πρωτO எனப்பட்டது. பாவிகளில் பிரதானமான பவுல் இயேசுவின் நீண்ட காலப் பொறுமைக்கு, பொறைக்கு முதல் இலக்கானர். இதனால் ஏனைய அடியவர்க்கு முன்மாதிரி மட்டுமன்று; நன்றி உணர்ச்சியோடு கடவுளுக்குத் துதி சொல்லவும் வழி காட்டியானர். அத்தகு தேவ துதியை வ. 17-இல் காண்க.

'என்றென்றும் அரசராயிருப்பவர்க்கே,
அழிவில்லாதவரும், கண்ணுக்குப் புலப்படாதவரும்,

ஒரே கடவுளாயிருப்பவர்க்கே
என்றென்றும் மாண்பு! மாட்சிமை! ஆமென்.'

இனி, வேதநாயகர் பாடலுக்கு வருவோம்.

பவுலடிகளுக்கும் வேதநாயகர்க்கும் உள்ள ஒற்றுமை.

1. இருவரும், ஆண்டான்—அடிமைத் தொடர்பில், இயேசுவை ஆண்டானாகவும், தங்களை அவரது அடிமைகளாகவும் ஏற்றுக்கொண்டனர்.

2. தகுதியில்லாத தங்களை, இயேசு தக்கவர்களாக்கினார் என்று விசுவாசித்தனர்.

3. இருவரும் தங்களைப் பாவிகள் என்று ஒப்புக்கொண்டு அறிக்கையிட்டனர். பவுலார் அறிக்கையை மேலே கண்டோம். வேதநாயகர் அறிக்கை பவுலார் அறிக்கைக்கு வேறுபட்டது. இவர் இயேசுவின் நாமத்தை நிந்திக்கவில்லை. வசை பேசவில்லை, அவரடியார்களைத் துன்புறுத்தவில்லை, வன்செயல் புரியவில்லை.

வேதநாயகர்—

1. சரண மலரடியைப் பிரியமற ஒழுகினார்.

2. தம்மை முரடன், அவலன், வினைமிகு தமியேன் என்றார். இத்தகைய என்னை அடிமைகொள் என்று வேண்டினார். தம் நன்றி உணர்ச்சியை இப்பாடலில் காட்டவில்லை.

3. இருவரும் இயேசுவின் கழிபேரிரக்கத்தைப் பாராட்டி இயேசுவை இரக்கமுள்ளவர் என்று பெயரிட்டனர். 'கருணை முகில்' என்றார் வேதநாயகர்.

4. 'பாவிகளுள் பெரும் பாவி நானே' என்று பவுலார் சொன்னதுபோல் வேதநாயகர் சொல்லாவிட்டாலும், 'முரடன், அவலன், வினைமிகு தமியன்' என்று அறிக்கையிட்டார்.

5. 'உலகம் முழுவதும் நிலைபெற' என்ற சொற்றொடரை: 'பாவிகளை மீட்கக் கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்' என்ற கூற்றில் அமைக்கலாம்.

6. இயேசு சிலுவையில் தொங்கி உயிர்விடும்போது, 'பிதாவே, இவர்களை மன்னியும்' (அறியாமை காரணமாக) என்ற கருத்தில், இயேசு ''உயிர்விடும் உதயம் (நேரம்) பொறை பெருகிய கண்ணன்'' என்ற சொற்களே எமது கட்டுரைக்குத் தோற்றுவாயாயிற்று. இக்கருத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் காட்டிய Dr. J. Jeremia உடைய விரிவுரை அரண் செய்தது.

7. தம்மேல் அருள் மழை பெய்த இயேசுவுக்குப் பவுலார் நன்றி செலுத்தினார். வேதநாயகர் அவ்வாறு சொல்லாமல், 'தமியேனை அடிமைகொள்' என்று இறைஞ்சி, ஓர் பொருத்தனை

செய்தார்: 'மரணமதளவும் உன்னை நினைவோடும் அறிவோடும் (உம்மைப்) பணிகுவேன்' என்றார். அவர் இயற்றிய இச் செபமாலையாலும் வேறு நூறு பாடல்களாலும் தமது பொருத்தனையை நிறைவேற்றினார்.

8. 1 தீமோ. 1:17-இல் பவுல் இறைவரை புகழ்ந்து பாடியதுபோன்று, வேதநாயகரும் இயேசு ஆண்டவரை புகழ்ந்து போற்றினர். அவர்களது அடியவர் கூட்டம் 'ஆமேன்' என்றதைப் போன்று நாமும் ஆண்டவரின் புகழ் பாடி 'ஆமேன்' என்போமாக.

இப்பகுதியின் உறுப்பிலக்கணத்தின் கூறுபாடுகளைக் காண்போம்.

1. பவுலடிகள் நன்றி செலுத்துவதற்குக் காரணங்கள்:

ஆண்டவர் கிறிஸ்து இயேசு என்னைத் தமது திருப்பணியில் ஓர் அடிமையாக அமர்த்தினர்; அப்பணி செய்ய எனக்கு ஆற்றலும் அளித்தார். அவருக்கு நன்றி—1:12.

2. தகுதியில்லாத என்னைத் தக்கவன் எனக் கொண்டார். 1:13. முன்பு நான் (1) இயேசுவின் நாமத்தைத் தூஷித்தேன், வசைமொழி பேசி நிந்தித்தேன். (2) அவர் அடியவர்களைத் துன்புறுத்தினேன். (3) அவர்களைத் துரத்தி, மிரட்டிச் சிலரைக் கொன்றேன். பலரைக் கொல்வதற்குத் திட்டமிட்டேன். அதற்கு வேண்டிய அதிகார பத்திரங்களையும் பெற்றிருந்தேன். நான் இத்துணைத் துர்ச்செயல்களை என் அறியாமையில் செய்தேன்.

3. ஆயினும், அவர் எனக்கு இரங்கினர். நம் ஆண்டவர் தமது மட்டிலா அருளை என்மேல் பொழிந்தருளினர். இதுவே அவர் எனக்குக் காட்டிய கழிபேரிரக்கம், அவரது தனிப்பெருங் கருணை. சதுர் வரம் அருள் கிருபை முகில் இயேசு; எனவே அவர் சொட்டுச் சொட்டாகவன்று, கருணைவாரியாக, என்மேல் அருள் மழை பெய்தார். அதனால் நான் பாவ நீக்கம் பெற்றுத் தூயனானேன். இவ்வாறு அவர் என்னில் ஓர் அற்புதச் செயலை நிகழ்த்தினர். அவர் அழித்துச் சாம்பலாக்காமல் என் பழைய வாழ்வற, புது வாழ்வளித்து அருட்பேற்றை வழங்கினர். என்றும் முள்ள, அழியாத மெய்வாழ்வை அருளினர். இதுவே அவர் எனக்குக் காட்டிய இரக்கம், கழிபேரிரக்கம்.

4. ''பாவிகளுள் பெரும் பாவி நானே.'' —வ. 16.

இவ் அறிக்கை செய்வதற்குமுன், வ. 15-இல், தமக்கு முன் இயேசுவை அறிந்து விசுவாசித்து அவரை ஆண்டவராக ஏற்றுக்

கொண்ட அடியார் கூட்டம் செய்துள்ளதோர் விசுவாச அறிக்கையை இங்கு மேற்கோள் காட்டுகிறார் பவுலடிகள்: ''பாவிகளை மீட்கக் கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்'' என்பது அவ் அறிக்கை. இது யாவரும் ''நம்பத்தக்கதும் மனமார ஒப்புக்கொள்ளக்கூடியதுமான மகா வாக்கியமாகும்.'' ''பாவிகளை. . .'' என்று வ. 15-இல் தொடங்கியவர், வ. 16-இல் 'பாவிகளில் பெரும் பாவி நானே' என்று அரியதோர் பாவ அறிக்கையைச் செய்தார் பவுலார்.

20. வீண்பத்தி நாசம்

புகுமுகம்

இச் செபமாலையின் சில பதிகங்களில், தம் சொந்த ஆன்மீகப் பயண அனுபவ வெளியீடாகச் சில பல குறிப்புக்களை எழுதியுள்ளார். 26. திருச் செயல், செ. 11 முழுவதும் கவிஞரது அனுபவ வெளியீடு.

''திருநெல்லைச் சிவபத்தன் யேசுவின் சீடனுய்ச் செபமாலை பாட விலையோ'' என்றூர்.

இப்பதிகத்தில்,

''நீச அச்சிலைகளைப் பணியேன்.

3. நின்னையே பணிவேன், என்னை ஆண்டருள்வாய்,
நித்தனே யேசு நாயகனே, —என்றும்

4. இதெலாம் வீண் இழவெனவே தோணினேன், —என்றும்

5. இத்தனை இழவுமல்லாமல்...
கடவுள் என்றிருந்த மடையன் நான், ஐயா, —என்றும்

6. தெருவினுஞ் சிலையடித்திருத்தித்
தேவனென்றிருந்த பாவியான் —என்றும்

கழிபேரிரக்கத்தோடு யேசுநாயகனிடம் வேண்டுகிறூர் அவர்.

இக்கூற்றுக்களுக்கு ஆதாரமாயிருந்தது 1 கொரிந்தியர் 12:1-3. ''நீங்கள் மெய்க் கடவுளை அறியாதவர்களாய் இருந்த காலத்தில், பற்பல ஆவிகளால் ஏவப்பட்டு, ஊமையான தெய்வச் சிலைகளை வணங்கும்படி எவ்வளவு ஆவலாய் ஓடினீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகையால் நான் உங்களுக்குச் சொல்வது இதுவே:

கடவுளின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு பேசுகிற எவனும் ''இயேசு ஒழிக'' என்று சொல்லமாட்டான். அவ்வாறே, தூய ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்டாலன்றி ''இயேசு ஆண்டவராயிருக்கிறூர்'' என்று யாராலும் சொல்ல இயலாது.

வேதநாயகர் தம் பழங்கால வாழ்க்கை நினைந்து உருகினர். தம் மடை மாற்றத்திற்குப் பின்னர், இப்பதிகத்தின் 1–10 பதிகங்களிலும் 'யேசு நாயகனே' விளித்து, 11-ஆம் ஈற்றுச் செய்யுளில் 23 தடவை 'யேசு நாயகனே' என விளித்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளார்.

Christian could indicate the Earthly Jesus as a ''curse'' in the sense of Galatians 3:13. But this could not be the last word. Therefore Paul fuses herein the Acclamation to the Exalted Lord. ''Lord'' is English word for the Tamil ''Nayahan.'' (W.C. VAN UNNIK, in *Christ and Spirit in the N.T.C.F.D Moule Festschrift*, 1973. Quoted by Hans Conzelmann, Commentary ad loc.)

கழிநெடில்

செய்யுள் 1

மாசிலா மனத்தாய் ராச விற்பனத்தாய்
மகிமையின் கிருபாசனத்தாய்
வலிய மாசனத்தாய் பெலிசெய் போசனத்தாய்
மட்டிலா வலமைசேர் சனத்தாய்
தேசுறுந்திரத்தாய் பேசரும் பரத்தாய்
திரித்துவ ஏகதத்துவத்தாய்
செய்ய சுந்தரத்தாய் துய்ய மந்திரத்தாய்
திடவரத்தாய் திருஉரத்தாய்
பாசமே உதித்தாய் நேசமே கதித்தாய்
பரம சத்துவம் மகத்துவத்தாய்
பாததோத்திரத்தாய் வேதசாத்திரத்தாய்
பாத்தியன் கோத்திர நேத்திரத்தாய்
ஏசறப் படைத்தாய் ஆசறத் துடைத்தாய்
எரிநரகக் கதவடைத்தாய்
என்உரு எடுத்தாய் பொன்னகர் கொடுத்தாய்
எந்தையே யேசுநாயகனே.

அருஞ்சொற்பொருள்:

விற்பனன் - விவேகி; பெலிசெய் போசனத்தாய் - தன்னைப் பலியாகக் கொடுத்த திருராப்போசனத்தாய்; வலமை - வல்லமை; தேசுறும் - தேஜஸ், ஒளி உற்ற; செய்ய - செவ்விய; பாத்தியன் கோத்திரத்தாய் - பார்த்திபன் - அரசன், தாவீதரசன் கோத்திரத்தாய்; ஏசற - குற்றமற; ஆசு - குற்றம்; என் உரு எடுத்தாய் - என்னைப் போன்ற மனித உருவை எடுத்தாய்.

வேற்று நோக்கு:

''அறுகு நுனிபனி'' என்ற திருப்புகழ்ப் பாடல், ''ஏகநாயகா லோக நாயகா இமையவர் பெருமாளே'' என முடிவுற்றது. வேத நாயகர் பாடல் ஒவ்வோர் அடிதோறும்: ''எந்தையே யேசு

நாயகனே'' என முடிவுற்றது. அவர் ''ஏசு நாயகா லோக நாயகா'' என்று பாடுதலும் அமையும்.

சிலை வணக்கத்தை மறுத்துப் பாடிய பாடல்கள் (செ. 2,3)

செய்யுள் 2

கல்லைச் செம்பை வெள்ளியைப் பொன்னைக்
கடவுள் என்று அடிதொழமாட்டேன்;
களிமண்ணால் மிதியிட்டு உருவெனக் குயவன்
காட்டிய கோலமுங் கருதேன்;
வல்இரும்பு உருக்கால் வெண்கலத் தகட்டால்
மற்றுள பஞ்சலோகத்தால்
வார்த்தும் அடித்து வைத்ததுமான
வன்சிலை கலைஎல்லாம் மதியேன்;
செல்லரிக்காத மரத்தினைத் தெரிந்து
சித்திர வேலைகள் தீர்ந்த
சிறந்த பொம்மைகள் பற்பல படங்களையும்
சிந்தையிற் கனவிலும் நினையேன்
எல்லையில்லா வெவ்விதங்களாயினமுன்
இருத்திய சுரூபங்களனைத்தும்
எனக்கினியாகாது உனக்குயான் அடிமை,
எந்தையே யேசுநாயகனே.

அருஞ்சொற்பொருள்:

வெவ்விதங்களாயின - வேறு வேறு விதங்களாயின.

பொருள்:

கல், செம்பு, வெள்ளி, பொன், களிமண், இரும்பு, உருக்கு, பஞ்சலோகம், வைரம் பாய்ந்த மரம் முதலிய வெவ்வேறு வகைகளிற் செய்யப்பட்ட சிலை, சொரூபம், படம் முதலியவற்றைச் சிந்தையிலும் கனவிலும் நினையேன், இனி யான் உன் அடிமை (சிலைகளுக்கடிமை அல்லன்).

செய்யுள் 3

வாயிருந்தாலும் பேசிடாத ஊமை,
வலியகண் இருந்தும் நோக்காத
வன் குருடு, அதற்குச் செவியிருந்தாலும்
வார்த்தைகேட்டு அறிந்து கொள்ளாது,

காயமோடு இருகை உண்டெனுந் தொடாது
கால் இருக்கினும் நடவாது
கடிய மூக்கிருந்தும் முகர்ந்திடாது அதனின்
கண்டமும் ஓசை காட்டாது
தீயினிற் போட்டால் எரிந்துபோம், வைது
திட்டினலும் பொறுமையாயிருக்கும்,
செத்ததோர் பிணம்போல் வைத்திடங்கிடக்கும்,
திருடன் வந்தெடுக்கினும் எடுப்பான்,
நீஎனை விடுவி என்று அறிவிழந்து
நீச அச் சிலைகளைப் பணியேன்,
நின்னையே பணிவேன், என்னை ஆண்டருள்வாய்,
நித்தனே, யேசுநாயகனே!

பொருள்:

''உடல், கை, கால், மூக்கு, தொண்டை முதலிய உறுப்புக்களிருப்பினும் சிலைகள் செத்த பிணம் போன்றவை - ''நீ என்னை விடுவி' என்று நான் அந்நீசச் சிலைகளைப் பணியேன், உன்னையே பணிவேன், யேசுநாயகனே'' என்றார்.

தசாவதாரத்தைப் பழித்துரைத்தல்

செய்யுள் 4

குஞ்சினைத் திருடும் பருந்து அதோ கருடன்,
குலைக்கும் நாய் வயிரவன் ஊர்தி,
குரங்கதோ அனுமார், பன்றியும் மீனும்
கூர்மமும் விஷ்ணு வடிவம்,
துஞ்சிடக் கடிக்கும் பாம்பதோ நாக
சுவாமி, விக்கிரேசுரன் யானை
தோகையும் அனமும் காகமுங் கிளியும்
தூக்கிய தேவர் வாகனங்கள்,
அஞ்சியே வளையிற் புகும் பெருச்சாளி
யானையைத் தூக்குமோ, ஐயோ!
ஆல்இலை பதினாருயிரம் பெண்கள்
அணைந்தவன் தனை எடுப்பதுவோ!
வெஞ்சினமாடு நந்திகேசுரனை
விபூதியும் அதினுடசாணி,
வீண் இழவு எனவே தோணினேன் இதெல்லாம்
வேதனே, யேசுநாயகனே.

பொருள்:

பழங்காலத்தில் பயின்ற குருட்டு ஆச்சாரங்களையெல்லாம், யேசுவினால் தடுத்தாட்கொள்ளப்பட்ட பின்னர், ''வீண் இழவு'' எனக்கொண்டு இச் செய்யுளில் வெகு வைராக்கியத்தோடு அவற்றை வெறுத்துரைக்கிறார் கவிஞர். இம்மடை மாற்றத்தின் பயனே இப்பதிகமாகும்.

அருஞ்சொற்பொருள்:

கருடன், கருட வாகனம்; **வயிரவன் ஊர்தி** - சிவனது வாகனம்: பன்றி, மீன், கூர்மன் (ஆமை) - விஷ்ணுவின் அவதாரங்கள்; நாகப்பாம்பை நாகசுவாமி என வணங்குவர்; தோகை - மயில்; மயில், அன்னம், காகம், கிளி முதலானவை தேவர்களைத் தூக்கிச் செல்லும் வாகனங்கள்; பெருச்சாளியும் அஃதே. நந்தி கேசரன் - இடப விக்கிரகம், மாடு; விபூதி - பசு மாட்டுச் சாணி.

கவிஞர் கருத்துக்கு மறுப்பு அளிக்கும் தற்கால இந்துக்கள் கொடுக்கும் விளக்கத்தை வாசகர்கள் புரிந்துகொள்வதோர் நற் பணியாகும்.

5. தான் இந்துவாயிருந்த காலங்களில் கொண்டிருந்த கொள்கைகளை, பழக்க வழக்கங்களை இப்போது ''இத்தனை இழவு' என்றும், இவை 'கடவுள் என்றிருந்த மடையன் நான், ஐயா' என்றும் கழி பேரிரக்கங்கொண்டு வருந்துகிறார் கவிஞர். இவ்வாறு சொல்வதற்கு, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் உரைகளும், தமிழ்நாட்டுச் சித்தர்கணங்களும் காரணராவார்.

செய்யுள் 5

சூரியன் வடிவோ சந்திரன் உடுவோ
தொகையிலா வான்பறவைகளோ
துன்னிய காற்றே வன்னிய முகிலோ
தோன்றிய பூமியோ மண்ணே
பாரினில் ஊறிய சீவனே செந்தோ
பற்பல நாலு கால் விலங்கோ
பசும் புல்லோ செடியோ அனந்த தாபரமோ
பயோததி நீந்து சங்கினமோ
ஏரியோ குளமோ ஆறதோ நதியோ
எண்ணிலா மலைகளோ சுனையோ
இடங்களோ விசேஷ தலங்களோ கோடி
இத்தனை இழவுமல்லாமற்

காரியமெனவே நரகலீ நீரைக்
கலந்த பெண்குறி யோடு ஆண்குறியைக்
கடவுளென்றிருந்த மடையன் நான் ஐயா,
கருணை செய் யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

உடு - நட்சத்திரம்; வன்னி - தீ; முகில் - மேகம்; செந்து - ஜந்து, உயிர்ப்பிராணி; பயோ ததி - கடல் நீர்.

பொருள் – தெளிவு.

செய்யுள் 6

புல்லது தெய்வமானுல் மாடு
புசிப்பதற் கியலுமோ, அல்லது
போற்றிய மாடு தெய்வமேயானுல்
புலையன் எப்படி அதைப் புசிப்பான்?
அல்லது மாட்டின் சாணியும் தெய்வம்
ஆகினுல் அடுப்பினில் எரிப்ப
தகுமலோ, அதைச் சாம்பலாக்க
அக்கினிக்குப் பெலனுள்ளதோ?
வல்ல அக்கினியும் பகவனேயானுல்
மழையினுல் அழிந்து போவாரோ!
வருணமும் பகவ னுகினுல் அதிலே
வாய் கை கால் கழுவவும் படுமோ?
கல்வி கற்றறிந்த நல்லவர் இதனைக்
கண்டறியார்களோ, கண்டால்
கதி தரும் உனை விட்டு அநீத வீண் பொருளைக்
கை தொடார், யேசு நாயகனே.

பொருள் – தெளிவு.

செய்யுள் 7

ஊரினிற் பெயர் கொண்டிருந்து, செத்தவர்க்கும்
உளவு போய் மடிந்த காமுகர்க்கும்
உயிர்விட வலிய நான்று கொண்டவர்க்கும்
உகந்து தீப்பாய்ந்த நீலிகட்கும்
பாரினில் கணவன் தனக் கடங்காமல்
பதைத்திட நஞ்சினைத் தின்றும்
படுங்கயத்திலும் ஆற்றிலும் வீழப்
பிசாசுருவான பாவிகட்கும்

போரினில் படையிற் பட்ட வீரர்க்கும்
புராதனத்திருந்த மன்னவர்க்கும்
புலையர் சக்கிலியர் குறவர்கள் ஈனப்
புதரையர் கழுவில் ஏறி கட்கும்
தேரினுங் கோயிற் புறத்தினும், நடக்குந்
தெருவினும் சிலையடித்திருத்தித்
தேவன் என்றிருந்த பாவி யான்; இனி உன்
திருவுளம், யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

இனி உன் திருவுளம்–அன்று அவ்வாறு இருந்த பாவி யான்; இன்றும் இனியும் உன் திருவுளம் என் திருப்பணியாகும்.

செய்யுள் 8

அரி சிவன் பரமன் ஐங்கரன் ஆறு
முகன் சதாசிவன் மயேசுரன் ஞெடு
ஐயனர்வீர பத்திரன் இருளன்
அனுமந்தன் கால சங்காரன்
பொரு தடிமாடன் கருப்பணன் இடும்பன்
புத்தனர் காத்தவ ராயன்
பொம்மன் தொட்டியச் சின்னனுடன் சக்கதேவி
பொன்னி அங்காளி கங்காளி
பெரிய மாகாளி ரண பத்திரகாளி
பேச்சி சாமுண்டி உத்தண்டி
பில்லிவாய்க் குறளி ஏகரி வீரி
பிடாரி காட்டேரி தூத்தேரி
எரிதழல் மாரி வராகி வீரி
எமகண்டி சாமளை துற்கை
இன்னமும் அனந்த பேய்களைப் பணிந்த
ஏழைநான், யேசு நாயகனே.

பற்பலப் பேய்த் தெய்வங்களைப் பணிந்த ஏழை நான் என்று யேசு நாயகனிடம் பாவ அறிக்கை செய்கிறார் கவிஞர்.

செய்யுள் 9

கள்ளுடன் சாராயங்களைப் படைத்துக்
கடாக்களை ரண பெலி கொடுத்துக்
கனக்க மாடு ஆடுகள் சேவல்கள் அடித்துக்
கடலின் மீன் வகைகளைப் பொரித்துப்
பிள்ளையார்க்கேற்ற தோசைகள் வடைகள்
பிட்டுகள் வட்டு அதிரசங்கள்

பெலத்த மோதகங்கள் அவல் பொரி உருண்டை
பெரும் பணியங்கள் இட்டு எலிகள்
எள்ளுடன் பயறு கிழங்குகள் பழங்கள்
இனிய பச்சரிசி தேங்காய்கள்
எண்ணெய்யோ நெய்யோ பால்களோ தயிரோ
எத்தனை விதங்களோ செய்தும்
தள்ளி நீ போடா குறைகளுண்டெனவே
சடுத்தமிட் டலறி நொந்திருக்கும்
சத்துரு பேயை முற்றிலும் விட்டேன்
தயவு செய், யேசு நாயகனே!

அருஞ்சொற்பொருள்:

மோதகம் – கொழுக்கட்டை.

செய்யுள் 10

காவடி சுமந்து தோளெலாந் தடித்துக்
கடும் பயணங்களே நடந்து
கழுத்தினில் அரி கண்டங்களேப் போட்டுக்
கயிறுகள் செடில் குத்தி ஆடிக்
கூவியே தீயிற் குதித்துக் கொக்கரித்துக்
கொடிய பந்தங்களாற் சுட்டுக்
கொண்டு கூத்தாடி உடம்பெலாங் கீறிக்
கோணியே வலித்து மாரடித்து
யாவருமறியத் தலையையுஞ் சிரைத்து
நடை விளக்கேற்றியே தோளின்
நடுவினில் சுட்டுச் செருப்பதிட்டு அடிக்க
ராமா ராமா எனக்கத்தி
மேவி அங்கப்பிரதட்சண முருண்டு
விரதங்கள் நோன்புகள் பிடத்தும்
மேய்ப்பலன் காணது, அப்பனே, அடைந்தேன்,
வினைதவிர் யேசு நாயகா!

பழங்காலத்தில் நான் செய்த பழக்க வழக்கங்களால் பயனில்லை எனக் கண்டு, உன்னை அடைந்தேன், என் வினைதீர், யேசு நாயகா என்று வேண்டுகிறார்.

செய்யுள் 11

வஞ்சகப் பாப்பான் தொட்டியன் ஆண்டி
வள்ளுவன் மற்றுள பேயர்
வழத்திய குறி கோடங்கிகள் கேட்டு
வாரமும் யோகமும் தெரிந்து

சஞ்சலாமுறுதென் றெண்ணி மைந்தருக்குச்
சாதகம் எழுதி நாள்கணித்துத்
தக்கதோர் இராசிப் பலன்களும் பிரித்துச்
சடங்குகள் விதம் விதம் செய்து
நெஞ்சினிற் பல்லி கத்தினும் அஞ்சி
நிமித்தமும் பொருத்தமும் கண்டு
நெடுகிலும் வீண் சாத்திரங்களைப் பார்த்து
நிலையிலாப் பொய்களை நம்பிப்
பஞ்சமா பாவிகளைக் குருவென்று
பாழிலே பொருள் எல்லாம் தோற்றுப்
பரதவித்துன்றன் சரணம் வந்தடைந்தேன்
பட்சம் வை, யேசு நாயகா!

இதுவும் முன்போல.

செய்யுள் 12

பிறந்தநாள் முதலாய்ச் சாகும் அளவும்
பிராமணர் பிதற்றிய பொய்யைப்
பிரியமாய்க் கேட்டுச் சுவாமி என்று அவரைப்
பிசகற நம்பிவீழ்ந் திறைஞ்சிச்
சிறந்ததோர் கலியா ணங்களில் ருதுசாந்
தியங்களிற் சிறுவர்கள் பிறந்த
தினங்களில் திருநாட் களில் பிதிர் இறந்த
திதிகளில் நன்மை தின்மைகளில்
அறைந்து அவர் சொன்ன படிக்கெல்லாம் கொடுத்து
ஆலயங்கள் சத்திரங்கள் சாவடிகள்
அனைத்தினும் அவரே முதன்மையாய் மறுமைக்கு
அவர் கையில் உண்டிகைபெற்றுல்
இறந்தபின் பற்றிக் கொள்ளலாம் எனவே
ஏய்த்ததால் பேய்த் தனமாக
எண்ணிலாத் தானம் பண்ணியும் பலனென்று
எய்தலை, யேசு நாயகனே!

அருஞ்சொற்பொருள்:

பலனென்று எய்தலை - பலன் ஒன்றும் எய்தவில்லை.

செய்யுள் 13

தாடிகள் சடைகள் வளர்த்து உருத்திராட்சத்
தாவடம் பல பல தரித்துத்
தண்டுடன் கமண் டலங்களுங் கொண்டு
சாம்பலும் வீம்பதாய்ப் பூசி

ஆடிய மயிர்த் தோகையுடன் காவி
ஆடையும் அயிணமுங் குறடும்
அங்கமாய்க் கொண்டு கவசக்குண்டல மிட்டு
'அரகரா' என்று கூப்பிட்டு
காடுகள் மலைகள் கெபிகளிற் புகுந்து
கந்த மூலங்களைப் பொசித்துக்
காயசித்தியதற்கு உடலையும் ஒறுத்துக்
கடுந்தவங் களையெல்லாம் புரிந்து
வாடியே யோகத்திருந்து மூச்சடக்கி
மவுன சாதனைகளுஞ் செய்தும்
வஸ்துவின் நிலை காண்பதற் கரிதெனவே
வந்தனன், யேசு நாயகனே!

பொருள்:

செபதப விரத சீலங்கள் யாவற்றையும் முறைப்படி சாதித்தும் 'வஸ்துவின் நிலை காண்பதற்கு அரிது' எனக் கண்டு, உன் சீர் பாதம் கண்டு வந்தனன், யேசு நாயகனே என்றுரவர்.

குறிப்பு: தேவாரம், திருவாசகம், தாயுமானவர், சித்தர் பாடல்களை ஊன்றிப் படித்தவர்கள் கவிஞர் கூறியவற்றை ஒப்புக் கொள்வர். வேதநாயகர் சிவபக்தனாக இருந்தவர். விவிலியத்தில் இறைவாக்கினரும் சங்கீத ஆசிரியர்களும் சிலவணக்கத்தைத் தாக்கியதை அறிந்தவர். தேவாரம் 5:100-3ஐக் காண்க.

'நூறுகோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறுகோடி நாராயணர்—அங்கனே;
ஏறுகங்கை மணல் எண்ணில் இந்திரர்
ஈறிலாதவன் ஈசன் ஒருவனே'

என்றார். ஈற்றடி ஒரு தெய்வ வணக்கத்தை கூறிற்று. Monotheistic Concept.

செய்யுள் 14

வானமும் புவியும் அனைத்தையும் படைத்த
மட்டிலாச் சருவ வல்லபத்தின்
மகத்துவ தேவன் செகத்தினில் ஈனர்
வகுத்தமே னியில் இருப்பானே
தானது வாயிருந்தோன் ஒருவனே இரண்டோ
சாற்றுவீர், சாத்திரி மாரே!
சத்தியந் தப்பி அவரவர்க் கேற்ற
சாமிகள் செய்யும் தகுமோ?

ஞானமுள்ளவர்கள் இல்லையோ? நீதி
நடுவிலாத் தேசமோ? ஓகோ கோ
நம்முட கையாற் சமைத்த விக்கிரகம்
நமக்கு நற்கதியைத் தருமோ?
ஏன்இதைச் செய்தீர் பாதக மல்லவோ?
இடர்வரும் பதனம் என்று உரைக்க
என்றனே இகழ்ந்தார், உன்றனே அடைந்தேன்,
இரட்சியும், யேசு நாதா!

சிலைவணக்கம் முதலானவற்றைப் பழித்துரைத்த
காரணத்தால்,
என்றனே இகழ்ந்தார், உன்றனே அடைந்தேன்
இரட்சியும் யேசு நாயகனே,
என்று இறைஞ்சி,

ஞானமுள்ளவர்கள் இல்லையோ? நீதி
நடுவிலாத் தேசமோ? ஓகோ கோ!
என்று வஞ்சினங் கூறினர் வேதநாயகர்.

செய்யுள் 15

இவ் இறுதிச் செய்யுளில் 24 முறை 'நாயகனே' எனப் பெயரிட்டு அழைத்து யேசு நாயகனைப் புகழ்ந்து பதிகத்தைப் பதிவு செய்தார்.

ஆதி நாயகனே சோதி நாயகனே
அனந்தபே ரின்ப நாயகனே
அரிய நாயகனே பெரிய நாயகனே
அர்ச்சய தேவ நாயகனே
ஓதி நாயகனே நீதி நாயகனே
ஒப்பிலாப் பரம நாயகனே
உரிமை நாயகனே அருமை நாயகனே
உன்னத ஞான நாயகனே
போத நாயகனே நாத நாயகனே
புண்ணிய சொரூப நாயகனே
பொறுமை நாயகனே சருவ நாயகனே
போற்றரும் கிருபை நாயகனே
வேத நாயகனே வேத நாயகன்பா
விளம்புசங் கீத நாயகனே
மேசியா யேசு நாயகனே.

சொல் நயம், பொருள் நயம், பக்திப் பெருக்கு, திருப்புகழ் முதலான கூறுகளைக் கூர்ந்து காண்க இச்செய்யுளில்.

21. சமுதாய விண்ணப்பம்

சமுதாய விண்ணப்பம் என்பது ஆங்கிலத்தில் Litany எனப் படும். லித்தானி, இலிற்ருனி எனத் தமிழில் சொல்லப்பட்டது. இலத்தீனில் Litania என்றதைத் தமிழில் 'லித்தானியா என்னும் விண்ணப்பம்' என்று பப்ரீசியுசு ஞானப் பாட்டுப் புத்தகத்தில் 100-ஆவது எண்ணுக வந்துள்ளது. இது உலகிலுள்ள எல்லாத் திருச்சபைகளுக்கும் பொதுவானது.

இதன் சிறப்புத் தன்மையைக் கவிஞர் வேதநாயகர் தம் பாடலின் இறுதியில் 'கவனிப்பு' என்று கீழ்க்கண்டவாறு எழுதி யுள்ளார்.

கவனிப்பு

'இலிற்ருனியாகிய சமுதாய விண்ணப்பம் பன்மையில் (எங்கள்) சொல்லப்பட்டாலும் ஜெபமாலை ஒழுங்கின்படி ஒருமையாக்கிற்று.'

இதன் இறுதிச் செய்யுள் (17) ஒன்றுண்டு. அதைப்பற்றிய விளக்கத்தை வேதநாயகர் கூறியதாவது:

'இலிற்ருனி திருத்துவத்தின் முன்னிலைக்கு இருக்குமாறு பாடலின் முடிவாகிய மகுடத்தைப்பற்றி இயேசுவின் முன்னிலைக்குப் பாடப்பட்டது.'

இதன் சிறப்புப் பிறிதொன்றும் உளது. தம் பாடல்களில் கவிஞர் தம் சுய சரிதக் குறிப்புக்களைக் கொடுப்பது வழக்கம். செ. 17-உம் அத்தன்மையது என்பதையும் கவிஞர் குறிப்பிட்டுள்ள தைக் காண்க.

[1817-ஆம் ஆண்டு ஆடி மாதம் தரங்கன்பாடியில் சீட்டுக் கவித் தருக்கத்தாலுண்டான கலாதியில் இராயப்ப நாட்டையர் குமாரன் தானியேல் பிள்ளை எல்லாரிலும் விசேஷித்த பத்தி வைராக்கியத் தைக் கொண்டிருந்த தருமசிந்தனையைப்பற்றி அவருக்கு மத். 26:13-வசனப் பிரகாரம் எழுதின உடன்படிக்கைப்படி. இதின் அந்தம் 17-பாட்டில் அவர் பெயரை நாட்டிற்று] என்று எழுதியுள்ளார்.

இனி இந்த 17-ஆம் செய்யுளின் பின் பகுதியைக் காட்டுதும்.

'தரங்கையில் எனக்குப் பரிந்துகொண்டிருந்த
தானியேல் சந்ததிக்கு இரங்கும்' என்ருர்.

'சீட்டுக் கவி தருக்கத்தாலுண்டான கலாதி' என்னவென்று எழுதிவைக்கவில்லை.

பிறிதோர் நயம். இலிற்ருனியா என்ற விண்ணப்பத்தை இவர் நேருக்கு நேர் மொழிபெயர்க்கவில்லை. தமிழ்ப்பத்தி இலக்கிய மரபுவழி வழுவாமல் மூல விண்ணப்பத்தின் பொருள் பிழைபடாமல், படிப்பவர் எளிதில் புரிந்துகொள்ளுமாறு பாடியுள்ளார். முதல் நான்கு செய்யுட்கள் முன்னுரையாகும். 2-17 செய்யுட்கள் மேற்படி விண்ணப்பத்தின் பலவிதத்தில் தமிழ்க் கிறிஸ்தவ மக்கள் புரிந்து உணர்ந்து பாடுவதற்கேற்பப் பாடியுள்ளார்.

லுத்தானிய செபத்தையும் வேதநாயகர் பாடிய விண்ணப்பத்தையும் மாறி மாறி ஒப்புநோக்கிப் படித்துப் பாடுபவர்கள் பெரும் பயனடைவர் என்பது திண்ணம்.

இதேபோன்று 28. ஜெபமாலையில் 'கவனிப்பு' என்று வேதநாயகர் கூறியுள்ள பல வாழ்க்கைக் குறிப்புக்களைக் காணலாம்.

'இதற்கு முந்தின ஜெபமாலையாகிய ஞான ஊஞ்சல் தேவஸ்துதியாகயிருக்க, மனுஷன் கலியாணத்திலே பாடி மாப்பிள்ளையையும் பெண்ணையும் வைத்து ஊஞ்சலாட்டினதினிமித்தியம் நேபுகாத்நேச்சாருக்கொப்பாய் வேதநாயக சாஸ்திரியின் புத்தி சிதறிப் போகத்தக்கனையாக வந்த கொடிய ஆபத்து இந்த 28-ஆவது ஜெபமாலையாகிய சிலுவைத் தியானத்தினால் நிவாரணமாயிற்று.'

அவன். சொற்பனங்களினாலும் திகிலினாலும் நிறையப்பட்டு, தன் வீட்டைவிட்டுக் கல்லறைத் தோட்டத்திற்குச் சமீபமாய் சங். தகப்பனார் சுவார்ச்சையர் வீட்டிலே குடியிருந்தபோது, தரங்கன் பாடித் தின்மார்க்கு மந்திரி பிரகாசம்பிள்ளை தற்செயலாய் மூன்று தரம் வந்து, இந்தச் சிலுவைத் தியானத்தைப் பாடச்சொல்லி வருந்திக்கொண்டு உரை கொடுத்தபடிப் பாடி முடிந்தது.

'அவர், இதற்கு முன்னாலே, கிறிஸ்துவின் பிறப்பின் பேரிலும் பாடுகளின் பேரிலும் சில தியானங்களைக் கொடுத்துப் பாடச் சொன்னதுண்டு. என்றாலும், ஒருபோதும் அல்லாத வழக்கமாய் இந்தச் சிலுவைத் தியானத்தை இக்காலத்தில் பாடச் சொன்னது வேதநாயக சாஸ்திரி கண்ட சொற்பனங்களுக்கும் அடையாளங்களுக்கும் இத்தேசத்தில் சம்பவிக்கப்போகிற காரியங்களுக்கும் இது விசேஷித்த எத்தனமாயிருக்குதென்று எண்ணவேண்டியிருக்குதொழிய மற்றப்படி அல்ல' என்று எழுதினர் வேதநாயகர்.

இந்த 'கவனிப்பி'னால் நாம் அறியக்கூடியவை:

1. 27-ஆம், 28-ஆம் செய்யுட்கள் பாடப்பட்ட சூழ்நிலை.

2. ஞான ஊஞ்சல் பாடினதால் அவர் கண்ட சொப்பனங்களும் அவர் அடைந்த திகிலும்.

3. ஞான விளையாட்டு என்ற நரஸ்துதி பாடலாகாது, தேவஸ்துதி அல்லது தேவபாணி பாடுவதே அவர் திருப்பணி என்று அவர் அறிந்துகொண்டது.

4. அவர் அடைந்த திகிலைத் தீர்க்கும் மருந்து சிலுவைத் தியானம். இத்தியானமே அவரது ஞானக் கண்ணை, விசுவாசக் கண்ணைத் திறந்து அவரது மனநோயைத் தீர்த்தது.

ஜெபமாலை, 2. காண்டம் (பக்கம் 197–204)

பிரார்த்தனைச் சமுதாய விண்ணப்பம் என்ற தலைப்பில் மேலே கூறப்பட்ட இலித்தானியா என்பதையே இரண்டாவது முறை பாடியுள்ளார். இதில் அவர் 'உரை' என்பது லுத்தரன் சபையார், பப்ரீசியுசின் ஞானப் பாட்டுப் புத்தகத்தில் 100-ஆம் எண் கொண்டதே மூலமும் அதன் செய்யுளாக்கமே இந்த இரண்டாவது 'சமுதாய விண்ணப்பம்' என்று அறிதற்பாலது.

இதை எந்தக் காலத்தில், ஏன் பாடினார் என்று அறிதற்கில்லை. இச்செய்யுளாக்கம், அவர்தம் வழக்கத்தின்படியே, விருத்தம் ஒன்றோடு தொடங்கிற்று. இப்பாடலைப் பாட வரந்தரவேண்டுகிறார் வேதநாயகர்.

கனந்தரும் அனந்தன் மகன்றனை விடுந்தயை
கனிந்து இருதயங் குளிரவே
தினந்தினம் நினைந்து அடிபணிந்து அறிவுடன் பல
செபஞ்செய வரந்தருவையே

என்று சொல்லி இவ்விண்ணப்பத்தைத் தொடங்கினரவர்.

இறுதிச் செய்யுள் 36-இல், இலத்தீன் மூலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதைத் தமிழாகவே பாடியதைக் காண்க.
பழைய மொழிபெயர்ப்பு:

ஆ, கிறிஸ்துவே, . . . எங்களைக் கேட்டருளும்
ஸ்வாமி, . . . கிருபையாயிரும்
கிறிஸ்துவே, . . . கிருபையாயிரும்
ஸ்வாமி, . . . கிருபையாயிரும்.

இதில் 'ஸ்வாமி என்ற வடமொழிச் சொல் ஐஸ்வரியம், செல்வம், riches, wealth, felicity, ஐசுவரியன், ஈசுரன், ஈசன் எனப் பொருள்படும். நம் கவிஞர் 'ஸ்வாமி' என்ற சொல்லைச் சொல்லாது விட்டார்.

தமக்கே உரிய பாணியில் கீழ்க்கண்டவாறு பாடியதைக் காண்க.

36. ஆ, கிறிஸ்துவே, எங்களைக் கேட்டருளும்
அன்பாய்த் திருமுகத்தை ஏறெடுத்து ஒளிரும்
ஓ, கிறிஸ்து, உமக்கு அபையம் சதா நித்திய
ஊழியோடூழி உமக்கு ஓலோலமே
கிருபையாயிருஞ் சுவாமியே கிறிஸ்துவே
கிருபையாயிருஞ் சுவாமி கிருபையாயிரும்

எனச் சொல்லி முடித்தார்.

திருமுகத்தை ஏறெடுத்து ஒளிரும் - பராமுகமாயன்று, அழகுறு சிறு நகையன்று, கடைக்கண் பார்வையுமன்று நாங்கள் கேட்பது. உமது முகத்தையும் எம்பால் திருப்பி ஒளி வீசியருளும். அபையம் = ஓலோலம், ஓலம் + ஓலம் = ஓலோலம்; ஓலம் - ஒலி எழுப்புதல்; சதா - நித்திய; நீர் உமது முகத்தைக் காட்டாமல் மறைத்தால் நாங்கள் சதாகாலமும் ஓலம் எடுத்துக்கொண்டிருப்போம் என்க.

22. பரமானுபூதி

காப்பு வெண்பா

பெருமான் கருணைப் பிரானேசு நாதன்
பரமானுபூதி படிக்கக் - கருமாயை
நீக்கி மறுஜெனன நீடிப்புது மனுடன்
ஆக்கும் பரிசுத் தரூபி.

அருஞ்சொற்பொருள்:

1. பெருமையிற் சிறந்தவன், 2. அரசன், 3. கடவுள். பரமானுபூதி - பரம+அனுபூதி=மேல் உலக அனுபவ ஞானம்; பிரான் - பெருமான்=பெரியவன்; கருணை-அருள் கருமாயை-கருப்பத்திலேயே தோன்றிய பாவம்=சென்மப் பாவம்; மறு சனனம்=மறு பிறப்பு; நீடி - தந்து; பரிசுத்தரூபி - பரிசுத்த அரூபி-ரூபமற்ற பரிசுத்தரே.

பொருள்:

ரூபமற்ற தூய ஆவியானவரே, எம்பெருமான் ஏசுநாதன், கருணைப் பிரானுடைய 'பரமானுபூதி'யைப் படிக்கும் பயனாக, தாயார் கருவில் உருவாகிய சென்மப் பாவத்தை நீக்கி, என்னைப் புது மனுடனுக்கும் பரிசுத்தாவியானவரே!

•

உரையாசிரியர் முன்னுரை

பதிகம் எழுதப்பட்ட காலம்: பதிக இறுதிச் செய்யுள் 54-இல்: 'கிறி. 1803-ஞ் ஆனி-மீ 72 திருநெல்வேலியான் இந்த ஐம்பத்து நான்கு செய்யுளையும் ஒரே நாளையிற் பாடினனென்க' என்றார் வேதநாயகர்.

பெயர்க் காரணம்: செ. 52–54-இல் 'பரமானுபூதி'யின் 12 அமிசங்களை அடுக்கிவைத்து, இதுவோர் உலக அனுபவமன்று, இஃது பரமன்மேல் பாடிய 'பரமானுபூதி' என்றார்.

இப் பதிகத்திற்கு முன்னோடியாக இருந்தவர் தாயுமானவர். 'உணர்வரிய பேரின்ப அநுபூதி - யோகானுபூதி.'

செய்யுள் 1

நீடுங்கிரு பாசன நீதியனே
நாடும்புகழ் பாடிடு நாவருள்வாய்
கூடும் சவை யின் குருவாக வுனைத்
தேடும்புல வோர்கள் சினேகி தனே.

அருஞ்சொற்பொருள்:

சவை-சபா - சபை என்றதன் மருவு, அவை.

பொருள்:

உன்னடியாருடைய சபைக் குருவாக உன்னைத் தேடும் புலவர் களின் நண்பனே, நீடிய கிருபாசனத்தில் வீற்றிருக்கும் நீதிபதி ஏசு நாதனை நாட்டிலுள்ளோரும் புகழ் பாடக்கூடிய நா வன்மையை எனக்கருள்வாய்.

நீடுங்கிருபாசன நீதியன்: இதுவோர் முரண்தொடை. ஒன்றுக் கொன்று மாறுபடுவன பொன்ற சொல்லடுக்கு - Oxymoron. கிருபை × நீதி - ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரு குணங்களை இணைத்தவன்.

ஆசனன் - நீதிமன்றத்தில் வீற்றிருக்கும் நீதிபதி.

ஒப்புநோக்கு:

'நீதி - இரக்க - சமரசம்' என்னூர் எச். ஏ. கிருஷ்ணபிள்ளை.

எபிரேயர் 4:16 - 'நாம் இரக்கத்தைப் பெறவும், தக்க வேளை யில் அவரருளால் உதவிபெறவும் அவரது அருளின் அரியணையருகில் துணிவுடன் செல்வோமாக.' பப்ரீசியுசின் மொழிபெயர்ப்பில், 'கிருபாசனம்' என்றது 'அரியணை' என்று திருத்தப்பட்டது.

நீதியைக் கடவுளின் கிருபை விஞ்சியது. 'பாவம் பெருகப் பெருக, அருளும் அதைவிடப் பன்மடங்காய்ப் பெருகிற்று' (ரோமர் 5:20).

செய்யுள் 2

உனையேயொரு நாளும் உளத்துருகி
நினையேன் நினை யும்பெலன் நீ அருள்வாய்
அனையே பணி யும்பரிசுத் தரூபி
மனையே, மனு வே,கர வாகனனே.

அருஞ்சொற்பொருள்:

கர - மறைத்தல் செய்கிறவன் = 'கரவானவனே' என்ற பாடங் கொள்க. மனையே - வீடே.

பொருள்:

ஒவ்வொரு நாளும் உள்ளமுருகி உன்னையே நினையேன்; உன்னை நினைக்கும் பெலனை நீ எனக்கருள்க, அன்னையே பணிகிறேர்; பரிசுத்தாவி வசிக்கும் மனையே (வீடே); மறைந்து செயல்புரிகின்றவனே!

செய்யுள் 3

வல்லாண்மையி னுலுல காள்பவனே
எல்லாம்இத மாக இசைத்தவன் நீ
பொல்லான்என வே புறமென்னைவிடல்
நல்லாய், உரை யாய் நசராபதியே.

வேறு பாடம்: 'உலகாள்பவனே' என்றது 'உலகாண்மனனே' எனப்பட்டது.

பொருள்:

நாசரேத்தூர் அதிபதியே, நல்லவரே, வலிய ஆண்மையால் உலகத்தை ஆளுகிறவரே, உலகச் சிருட்டிப்பை எல்லாம் (நல்லதென்று கண்டு) இதமாக இசைத்தவன் நீ; என்னைப் பொல்லாதவன் என்று புறம்போக்கிவிடாதேயும்.

ஒப்புநோக்கு:

'எல்லாம் இதமாக இசைத்தவன் நீ—' ஆதியாகமம் 1:31.

சிருட்டி கர்த்தா, 6 நாட்களில் தாம் படைத்தவற்றை எல்லாம் கண்டு அவற்றை 'நல்லது' என மகிழ்ந்தார். இந்த முதலதிகாரத்திற்கு இச் சுலோகத்தை முத்தாய்ப்பாய் இருப்பதை நம் கவிஞர் கண்டுகளித்து, 'எல்லாம் இதமாக இசைத்தவன் நீ' என்று இசைபாடி இவ்வடியைப் பாடினர். அதுமட்டுமன்று, 'பொல்லான் எனவே, என்னைப் புறம்விடல் அழகோ, சொல்' என்று அங்கலாய்க்கிறேர் கவிஞர்.

ஒப்புநோக்கு:

'பொல்லான் எனவே புறம் என்னைவிடல்'

மாணிக்கவாசகர் பாடியருளிய நீத்தல் விண்ணப்பத்தில் 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து' ஜெபமாலை, பரமானுபூதியில் சொல்லுவார் வேதநாயகர். நீத்தல் விண்ணப்பத்தில் 50 செய்யுட்களும், பரமானுபூதியில் 54 செய்யுட்களும் உள்ளன. இவ்விருவர் பாடல்களையும் தனித்தாயும் மாறி மாறியும் மீண்டும் மீண்டும் படித்தால் இவர்களின் சொல்லும் பொருளும் உணர்ச்சி

யும் அவற்றின் ஒற்றுமை வேற்றுமையும் எத்தகையன என்பதை அறிந்துகொள்ளலாம்.

நீத்தல் விண்ணப்பத்தின் செய்யுள் ஒவ்வொன்றிலும் 'விட்டிடுதி கண்டாய்', 'விடுதி கண்டாய்' என்ற சொற்றொடர் வந்துள்ளது.

பரமானுபூதியில், மூன்று நான்கு செய்யுட்களில் மட்டும் இத் தொடர் வந்துள்ளதைக் காண்க.

செ. 3: பொல்லானெனவே புறம் என்னைவிடல்
செ. 15: மெய்யா யவனே யாது விடாமல்
செ. 23: . . . சரண்புக வந்த எனை

அல்லென்றிடில் அப்புறமென்று யார்
சொல்லென்று அருள்வார்கள் . . .

பிறிதோர் செய்யுளைக் காண்க.

நீத்தல் விண்ணப்பம் செ. 25.

எறும்பிடை நாங்கூழ் எனப் புலனில்
அரிப்புண்டு அலந்த
வெறும் தமியேனை விடுதி கண்டாய்
வெய்ய கூற்று ஒடுங்க
உறும் கடிப்போது அவையே உணர்வு
உற்றவர் உம்பர் உம்பர்
பெறும் பதமே அடியார் பெயராத
பெருமையனே.

அருஞ்சொற்பொருள்:

சித்பவானந்த சுவாமிகள் அருளியது.

நாங்கூழ் - நாகப்பூச்சி. அலந்த - வருந்தின. வெய்ய கூற்று ஒடுங்க - கொடிய யமன், கூற்றுவன் ஒடுங்கும்படி. உறும் - அவன் மேல் பாய்ந்த. கடிப்போது - மணமலர் போன்ற திருவடிகள். உணர்வு உற்றவர் - எண்ணி எண்ணி அனுபூதியில் அறிந்தவர். உம்பர் உம்பர் பெறும்பதமே - தேவர்கள் பெறும் பேறுகளுக்கெல்லாம்————

தான் 'பொல்லான்', மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசைகளில் உழன்றவன் என்றதை இனிவரும் பாடல் பலவற்றில் காண்க:

செய்யுள் 4

மீனே மதியோ மின்ன லோ வெளியோ
பானே பரமோ படியோ பலதோ
ஊனே உட லோ உயிரோ கல்வி
மானே நிலை யானது, வானவனே.

பொருள் — தெளிவு.

செய்யுள் 5

அடரும்பர மாதரின் ஆசையதுட்
படரும்பழி பட்டழியப் படுமோ?
தொடரும்பல சத்துருவின் தலையை
இடரும்படி விட்ட இரட்சகனே.

பொருள்:

பெண்ணாசையாலுண்டான பழி தானாக அழிந்துபோகாது. அதனால் என்னைத் தொடரும் பிசாசு லோகம் மாமிசம் என்ற வற்றின் தலைகள் இடரும்படி செய்த இரட்சகனே.

செய்யுள் 6

கருமாயை களைந்து உலகத்திலுறும்
பெருமாயை அடாது, பிசாசுகளால்
வருமாயை அறுத்து மயற்கன்னிமார்
தரு மாயையும் நீக்கு, தயாபரனே.

பொருள்:

என் தாயின் கருப்பத்திலிருந்தே என் சென்மப் பாவத்தைக் களைந்து, உலக வாழ்க்கையில் என்னைப் பிணிக்கும் பெரும் பாவம் என்னை அணுகாது காத்து, பிசாசுகளால் வரும் பாவத்தை அறுத்து, என்னை மயக்கும் கன்னிப் பெண்களால் வரும் பாவத்தையும் நீக்கி யருளும், தயாபரனே.

செய்யுள் 7

சதியாமன மே,உலகைச் சதமாய்
மதியாதுஇம் மானுவேலின் கழலைக்
கதியாய்நினை, காயம் விழாதபடி
துதியாய்த்துதி யாய் சுபசோபனமே.

பொருள்:

மனமே, சதியாக உலகைச் சதமாக மதியாமல், இம்மானு வேலின் காலைக் கதியாக, உடல் விழாதபடி கதியாக நினை. அவரைச் சுபசோபனம் என்று துதியாய், துதியாய்.

செய்யுள் 8

மணி ஆடை உலாச சியோன் மகளின்
பணி ஆடல் புரிந்தவளும் பணிய
அணி ஆசை அளித்து விவாகமிடும்
தணியாஅதி நீததயா பரனே.

பொருள்:

சீயோன் மகளின் மணி, ஆடை, உல்லாசம், பணி, ஆடல் புரிந்தவளும் பணியுமாறு அவளுக்கு அணிகளும் ஆசையும் அளித்து அவளைத் திருமணம் செய்துகொள்ளும், அதிக நீதியும் தயவுந் தணியாத தயாபரனே (சங். 45).

செய்யுள் 9

ஒட்டாரம டந்தையரோடு உறவாய்
எட்டாமல் நடந்து இவரின்ப மெலாம்
விட்டாலும் விடாத விருப்பமென்னே
கட்டாயுரை யாய் கருணாகரனே.

பொருள்:

ஒட்டாரம் செய்கிற மடந்தையரோடு உறவாய் எட்டாமல் நடந்து இவர்கள் தரும் இன்பமெல்லாம் விட்டாலும், அவ்வாசை என்னை விடாததேனே? என் மனந்தெளிய உரைப்பாயாக, கருணாகரனே.

செய்யுள் 10

அமையுஞ் சதுர் ஆயிரமாயின நற்
சமையம்புவி தோன்றினபின் தரையுற்று
அமையும்சக லோர்கள் பவந்தவிரச்
சிமையம்பெலி செய்த சிரோமணியே.

அருஞ்சொற்பொருள்:

சதுர் ஆயிரம் - நாலாயிரம் ஆண்டுகள்; சகலோர்கள் - சகல மக்களுடைய; சிமையம் பெலி செய்த - கொல்கொதா மலை உச்சியில் உயிர்ப்பலி செய்த.

உலகம் தோன்றியபின் வந்த நாலாயிரம் ஆண்டுகளில் இத் தரையில் வாழ்ந்த சகல மக்களின் பாவத்தைப் போக்க கொல்கதா மலையுச்சியில் உம் உயிரைப் பலியாகக் கொடுத்த சிரோமணியே. 4000 ஆண்டு என்ற பழங்கணக்கை நாம் இன்று ஒப்பவியலாது.

செய்யுள் 11

தாமாய்மனு வாகிய தற்பரனே,
சீமான்மனே லாசரு செய்கையெனக்
காமா வலவா, அதுசெய்தி சுமா
போமா புகலாய், சுரர் பூபதியே.

அருஞ்சொற்பொருள்:

தான்தோன்றியாகிய நீ, தாமே தற்பரனுனுய்; எனக்காமா - எனக்கு ஆகுமா? அது செய்தி சுமாபோமா - அந்தச் செய்தி சும்மா போகுமா?

பொருள்:

தாமாக மனுக்கோலங் கொண்ட தற்பரனே, சீமோன் வீட்டிலும் லாசருவை உயிரோடு எழுப்பிய அற்புதச் செயல்களும் எனக்கும் நடக்குமா அல்லது அவை சும்மா போய்விடுமா? எனக்குச் சொல்லுக, சுரர் பூபதியே.

செய்யுள் 12

ஆ, ஆ, உனே அண்டியும் என் கலிகள்
போகாவிதம் ஏது? புகன் றருள்வாய்,
ஏகா, இனி யாயினும் அன்புசெய், என்
மேகாசனனே, வினே மோசனனே.

அருஞ்சொற்பொருள்:

கலிகள் - துன்பங்கள்; ஏகா - ஒப்புயர்வற்ற.

பொருள்:

தனியனே; ஆ, ஆ, உன்னே அண்டியும் என் துன்பங்கள் என்னைவிட்டுப் போகாதது என்ன காரணமென்று சொல்லியருள்வாய்; இனியேனும் செய்க, என் மேகாசனனே, என் பாவம் போக்குபவனே!

மேகாசனன் - மேக + ஆசனன். செ. 1இல், கிருபாசனன் என்றார். வினே மோசனன் - பாவ விமோசனன் = பாவத்தைப் போக்குகிறவன்.

செய்யுள் 13

ஒருவன் தனியாய் உயர் அம்பரன்
திருஅன்பு உணரார் செயலின் பயன் நன்று
தருவன், அயலன்று, அகம்அன்று, அடியன்று
உருவன்று, உடலன்று, உறையன்றினனே.

பொருள்:

ஒருவனுக, தனியாக உயர்ந்த அம்பரன்; அவனது திரு அன்பை உணராதார் செயலின் பயனே நன்று தருவான்; அவனுக்கு அயலார் இல்லை, வீடு இல்லை, அடிவைக்க இடமில்லை; அவனுக்கு உருவும் உடலும் உறையுளும் இல்லை.

செய்யுள் 14

எம்மானிலமுந் தொழும் இரட்சகன் எம்
இம்மானுவேல் இங்கும் இருக்கையிலே
சும்மாஇருக் காதுதுடித்து மனம்
அம்மா,பதறிக் கொளல் அற்புதமே!

அருஞ்சொற்பொருள்:

அம்மா - வியப்பிடைச் சொல்.

பொருள்:

முழு உலகமும் தொழுகின்ற இரட்சகன் யேசு 'இம்மானு வேல்' என்ற தம் பெயருக்கேற்றவாறு இங்கும் இருக்கையிலே, அவர் செயலற்று சும்மா இராமல் மனந்துடித்துப் பதறி என்மேல் அன்புகொள்வது, அம்மா; அற்புதமே!

செய்யுள் 15

மையார் குழல் மங்கையரின் பணியால்
மெய்யாய் அவளே யாதும் விடாமல் உனை
ஐயா,பணி யக்கிருபையாய் உதவி
செய்யாய்திரி லோக சிகாமணியே!

அருஞ்சொற்பொருள்:

மையார் - மை + ஆர் = அழகிய மஞ்சனமிட்டு மைதீட்டிய தலைமுடியுள்ள பெண்; பணியால் - தைலமும் முத்தமும் இட்ட நற்பணியால்.

பொருள்:

இச்செய்யுளின் பொருளை விளக்க வேதநாயகர் லூக்கா 7:36–50-இல் வந்துள்ள பாவியான பெண்ணுக்கு இயேசுநாதர் பாவமன்னிப்பளித்த நற்செய்தியை அடிக்குறிப்பாகக் காட்டி யுள்ளார்.

கருங்குழல் மங்கையின் அன்புப் பணியால், மெய்யாகவே அவளே விட்டுவிடாமல், அவள் உன்னைப் பணிந்து உனக்குத் திருப் பணி செய்யக் கிருபையாய் உதவி செய்தாய், ஐயா, திரிலோக

சிகாமணியே. அதுபோல, எனக்கும் உதவி செய்வாயாக என்று வேண்டுகிறார்.

பாட பேதம்: மெய்யாயவனே - மெய்யாயவளே என்றிருத்தல் வேண்டும். பொருளுக்கேற்ப, மெய்யாய் - அவளே.

பாவியாயிருந்த பெண்ணின் அன்புப் பணிகளே ஆண்டவர் பாராட்டினர். இவளோ தன் கண்ணீரினால் என் பாதங்களே நனைத்துக் கூந்தலினால் துடைத்தாள், என் பாதங்களே ஓயாமல் முத்தமிட்டுக்கொண்டிருந்தாள். என் பாதங்களில் நறுமணத் தைலம் பூசினாள். எனவே, இவள் செய்த பல பாவங்கள் இவளுக்கு மன்னிக்கப்பட்டுள்ளன. இவளது அன்புப் பணி இதற்குச் சான்றாயின என்று சொல்லி, இயேசு அவளைப் பார்த்து: 'உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன' என்றார்.

சீமோன் எனப்பட்ட பரிசேயன் வீட்டில் நடந்ததையும் லாசருவின் செய்கையையும் மேலே 11-ஆம் செய்யுளில் குறிப் பிட்டுள்ளார் கவிஞர்.

செ. 26-இல், 'என் வினை தீராய் . . .' என்றும்,

செ. 27-இல், 'துணையற்ற என்னைத் துயரம் செய்யாய்' என்றும், வாதாடியவர்,

செ. 28-இல், ஏதாயினும் ஈவையெனக்கருதி
வாதாடி வழுத்தியும் நீ மறுசொல்
லாதாம லிருப்பது உனக்கழகோ

என்றும் ஏசி, ஏத்தி, வாதாடி மன்றாடுகின்றார் பக்தர் பெருமான்.

செய்யுள் 16

தாமேதமை யன்றி அறிதிலரென்
றேமேன்மொழி இட்டவுன்னைக்கருதி
யேமே மனம் மிஞ்சும் அவா அதனால்
பூமேல் முகில் மேல்வரு பூரணனே.

அருஞ்சொற்பொருள்:

அவா - தமிழ்ச்சொல்; ஆசை, இச்சை, வடசொற்கள்; பூமேல் - பூக்கள்மேல், பூமியின்மேல்; முகில்மேல் - மேகத்தில்.

பொருள்:

'என்னையன்றி வேறு ஒரு தெய்வம் இல்லை' என்று அதிகார பூர்வமாய் ஆணையிட்ட உன்னைக் கருதியே மனத்தை மிஞ்சும் அவாவினால் பூமேல், முகில்மேல் வரும் பூரணனே.

செய்யுள் 17

அதி தூதர்கள்தான் அறிவால் அறியா
மதிமேவிய வானவனின் புதல்வா,
துதி தேவழகா, சுமுகா நரகா
பதியாள்கண பூதபயங்கரனே.

அருஞ்சொற்பொருள்:

நரகாபதி - நரகராச்சியத்தை ஆளும்.

பொருள்:

அதிக தேவ தூதர்கள் தாமும் தம் அறிவால் அறியக்கூடாத அறிவுள்ள வானவனின் புதல்வனே, உமக்குத்துதி, நல்லழகனே, நல்ல முகமுள்ளவனே, நரகராச்சியத்திலுள்ள பேய்க் கூட்டம் நடுங்கும் ஆண்டவனே.

செய்யுள் 18

இதியால் இடர் தாவுமுன்னே தன் வனத்
ததிலாகிய நால்வரம் என்றருள்வாய்
மதிபாத மடந்தை அல்லதுபின்
மதியாவிரதா மனுடாதிபனே.

அருஞ்சொற்பொருள்:

இதி - பசாசு; நால்வரம் = ஞானம், பரிசுத்தம், பாக்கியம், சாவாமை; தன் வனத்ததிலாய - தன் வனமதில் ஆகிய - பரம பரதீசு வனத்தில்.

பொருள்:

பரம பரதீசாகிய ஏதேன் தோட்டத்தில் பிசாசினால் பாவத்தில் வீழ்த்தப்படுமுன் வாக்கருளிய நான்கு வரங்களை எப்போது தருவாய்? உன் சீர்பாதத்தை மதித்த மரியாளைத் தவிர வேறு யாரையும் மதிக்காத விரதம் கொண்ட மனித அதிபதியே. (மனுடாதிபனே) நால் வரம்: ஞானம், பரிசுத்தம், பாக்கியம், சாவாமை.

செய்யுள் 19

பார் ஆசைபடப் படஎன் சடலம்
போராக முடிந்தது போதுமையா
சீரா பல சிமசனே இரண
சூராபர லோக துரந்தரனே.

அருஞ்சொற்பொருள்:

பல சிமசனே - பலவானுகிய சிம்சோனே; இரணசூரா - யுத்தத் தில் பராக்கிரமன்; பார் ஆசை - உலக ஆசை.

பொருள்:

உலக ஆசை மிகமிக என் உடல் போராக முடிந்ததுபோதும், ஐயா; பலவானுகிய சிம்சோனே, போர்க்களத்தில் வீரனே, பரலோக வேந்தனே.

செய்யுள் 20

மறைசூடிய மாதவரின் கழலே
முறைசூடு முயற்சி எனக்கருள்வாய்
நிறைசூடிய பத்தர்கள் நெஞ்சமதில்
சிறைசூடிய தேவசிமாசனனே.

பொருள்:

திருமறையைச் சூட்டிய பெருந்தவத்தோர்களின் காலடிகளே முறையோடு சூடுகின்ற முயற்சியை எனக்கருள்வாய்; பக்தர்களது நிறைந்த நெஞ்சத்தில் அகப்பட்டுக்கொண்ட தேவ சிம்மாசனத்தில் (அரியணையில்) வீற்றிருப்பவனே.

செய்யுள் 21

பொருதாடு பசாசுகள் போல்எரிய
இருதாரம் எடுப்பவருக் கிணையான்
குருதாதை குணு சிலுவைத்துவச
விருதாசுவி சேட விசித்திரனே.

பொருள்:

போராடும் பிசாசுகள்போல் எரியும் இருதாரம் எடுப்பவர் களுக்கிணையாத குரு, தந்தைக்குணம் படைத்த, சிலுவைக் கொடி யேற்றிய சுவிசேட விசித்திரனுகிய (எம்பெருமானே).

செய்யுள் 22

வேதா,பர லோக விலாசசபை
நாதா,உனே மெய்யென நம்பினநான்
சூதா, கவடா, சொன்னதத்தனேயும்
கோதா, நிசமா, சொல்குணுகரனே.

பொருள்:

அகப்பொருளிலக்கணத்தில் – ஊடலுவகை என்றதோர் கட்டத்தில், காதலி - காதலனுக்குள் நடைபெறும் உரையாடல் போல் இருக்கின்றது இப்பாடல்.

வேதா, மேலுலக விலாச சபைக்கு நாதனே, நீ நற்குணம் படைத்தவன் எனினும் எனக்கோர் சந்தேகம் எழுகின்றது. உன் சொல்லே மெய் என்று நம்பின நான், நீ சொன்னது அத்தனையும் பொய்யா நிசமா என்று சொல்லி என் ஐயத்தைப் போக்கு.

செய்யுள் 23

பெரிதாகிய பாதகமும் பிணியும்
எரிதாழ்நர குங்கெட ஏற்றினவா,
மரிதான்மணம் வைத்த பதத்தைநித
சரிஅளி யாய், சருவீசுரனே.

அருஞ்சொற்பொருள்:

மரிதான் ... நிதசரி, மகதலேனு மரியம்மை நின் திருவடிக்கு நறுமணத்தைலம் பூசினளே, அதேபோன்று நானும் தினந்தோறும் பூசித்துப் பணிய அருள்க. ஏனெனில், எனது பெரிய பாதகமும் பிணியும் எரி நரகும் கெட்டுப்போக, என்னை உயர்ந்த மேடையில் ஏற்றினவன் நீ அன்றே!

செய்யுள் 24

கலிகெட்டிட வுங்கதறிக் கலியால்
நிலிகெட்டிட வும்நெறியோ, நெறியோ?
கொலிகொட்டல கைக்குடி கெட்டதின்வன்
தலிகெட்டிட வந்த தயாநதியே.

அருஞ்சொற்பொருள்:

அலகை - பசாசு; வன் தலிகெட்டிட - வீரிய அலகையின் தலியை நசுக்க வந்தவனே; கலியால் - கலிபுருஷன்—பிசாசு.

பொருள்:

கலிபுருஷனுல் என் கலிகள் கெட்டிடவும், என் (நல்ல) நிலி கெட்டிடவும் செய்வது நன்னெறியோ, நெறியோ? கொலிகாரப் பிசாசின் குடியைக் கெடுத்து, அதன் வரிய தலியை நசுக்கவந்த தயாநதியே, என்றூர்.

தயாநிதி என்னுமல் தயாநதியே என்றூர். நிதி ஒரிடத்திலே நிற்கும். நதியின்நீர் நிற்காமல் வெள்ளமாகத் திரண்டு ஓடும். அத்தகைய கருணை வள்ளல் நீ என்ற நயம் காண்க.

செய்யுள் 25

நாளேக்கென நல்கிய ஈகை இடர்
வேளேக்குஉத வாதுஅது மெய் அதுபோல்
சூளேக்குலம் இன்கள், சுகங்கள் இதுஎன்று
ஏழைக்குரையாய், இசரேல் அரசே.

அருஞ்சொற்பொருள்:

சூளேக்குலம் - வேசி, தாசிகளின் குலம்.

பொருள்:

நாளேக்கென்று நல்கிய ஈகை, இடர்ப்பட்ட வேளேக்கு உதவாது என்ற சொல் மெய் என்பதுபோல, வேசிகளின் குலமும் அவர்கள் ஊட்டும் இனிப்பான கள்ளும் சுகங்களும் இவை என்று ஏழையாகிய எமக்குப் போதித்தருள்க, இசரவேலின் அரசனே.

செய்யுள் 26

ஆராய்தல் இலாத அருட்கடலே,
பார்ஆயர் பணிந்து தொழும்பதனே,
வாராய்அடி யேனிடை, வந்தென்வினே
தீராய்,மனு வாகிய தேசிகனே.

ருஞ்சொற்பொருள்:

பாராயர் - பார்+ஆயர்=உலகத்தின் மேய்ப்பர்; பதனே - பாதனே; நேசிகன் - குரு.

பொருள் — தெளிவு.

செய்யுள் 27

பொய்யான புனல் குமிளிப் பவுசை
மெய்யாக விரும்பி விழப்படுமோ?
துய்யா,துணை யற்றவெனைத் துயரஞ்
செய்யாய்திரி யேக பராபரனே.

அருஞ்சொற்பொருள்:

புனற்குமிளி - நீர்க்குமிளி; பவுசு - செல்வச் செருக்கு.

பொருள்:

நீர்க்குமிளி பொய்யானதுபோல், செல்வத்தால் வரும் பவுசும் மெய்யாக விரும்பினலும் விழுந்துவிடுமே. தூயனே, திரியேக பராபரனே, துணையற்ற என்னைத் துயரப்படுத்தாதிரும்.

செய்யுள் 28

ஏதாயினும் ஈவையெனக் கருதி
வாதாடி வழுத்தியும் நீ மறுசொல்
ஓதாமல் இருப்பது உனக்கழகோ?
சாதாரண சத்திய தற்பரனே.

பொருள்:

கேட்டால் ஏதாயினும் கொடுப்பாய் என்று நினைத்து உன்னோடு வாதாடி, வழக்கிட்டு, வாழ்த்தினாலும் நீ மறுசொல் ஒன்றும் சொல்லாமல் இருப்பது உனக்கழகோ? நீ சத்திய தற்பரனுயிற்றே!

செய்யுள் 29

மண்ணேதரு கும்வலியோ பொருளோ
பெண்ணேதரும் ஆவலதோ, பிணையோ,
கண்ணேமணி யே,கதியே, நதியே,
விண்ணேசொலும் மெய்ப்பொருளானதையே.

பொருள்:

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்பனவற்றை உலகவர் கூறிடுவர். இவற்றில் மெய்ப்பொருள் எது என்று கண்ணே ... விண்ணே, நீரே சொல்லும்.

செய்யுள் 30

மானார்கல விக்குள் மடிந்தென்னுயிர்
போனாலென்ன புண்ணியம் எய்தும்உனக்கு?
ஆனாலும் உன்நெஞ்சை அறிந்தேனையா!
ஞானாகரனே, நசரைப் பதியே.

அருஞ்சொற்பொருள்:

மானார் கலவி - மான்போன்ற பெண்களோடு கலவுதல்.

பொருள்:

மான்போன்ற கண்களுடைய கலவிக்குள் நான் மடிந்து என்னுயிர்போனால் உனக்கென்ன புண்ணியம் வரும்? ஆனாலும் உன் நெஞ்சை அறிந்தேன், ஐயா, ஞானவானே, நாசரேத்தூர் அரசே!

அவர் நெஞ்சை எவ்வாறு அறிந்தார் என்பதைக் கூறவில்லை.

செய்யுள் 31

பொல்லாஉல கம்புகு மாக்களிலே
நல்லாரில்லை என்றது ஞாயமலோ?
எல்லாரும் இதின்படி நோக்கில் எனை
அல்லாது இனி நல்லவர் ஆர், பரனே!

அருஞ்சொற்பொருள்:

மாக்கள் - மக்கள்.

பொருள்:

இந்தப் பொல்லாத உலகத்தில் வந்து தோன்றிய மக்களிலே நல்லவர் ஒருவரும் இல்லை என்றது நியாயம் அல்லவோ? எல்லாரும் இக்கூற்றின்படி நோக்கினால், என்னை அல்லாது இனி நல்லவர் யார், பராபரனே.

செய்யுள் 32

நாயானது நற்றின வாழ்வினை யொத்
தேயானும் இருந்தது போதும், உனின்
மாயாதமெய் வாழ்வல்ல வெனில்
நீயாயினும் வாழிதி நித்தியமே!

அருஞ்சொற்பொருள்:

நற்றின - நச்சின = விரும்பின.

பொருள்:

நாய் நச்சின வாழ்வையொத்தே நான் இதுகாறும் இருந்தது போதும்; எனக்கு உனது அழியா மெய்வாழ்வு இல்லையெனில், நீயாவது வாழுதி—நித்தியமே.

நான் வாழாமற்போனால் போகட்டும், நீயாவது நல்லாயிரு என்று நக்கலாக, கொச்சை மொழியில் சாடுகிறார் கவிஞர்.

செய்யுள் 33

'கொல்' என்று எழு கூளிகளால் வெருவி
வல்லென்ற சரண்புக வந்தவெனை
அல்லென்றிடில் அப்புறம் என்று யாரார்
சொல்சொல்லென்றருள் வார்கள், சுதாகரனே!

அருஞ்சொற்பொருள்:

கூளி - பசாசு; வெருவி - பயந்து.

பொருள்:

இவனைக் கொல் என்று கூவி எழுகின்ற பசாசுகளால் பயந்து, நீ வல்லவன் என்று உன் காலடியில் அடைக்கலம் புகவந்த என்னை, நீ இல்லை என்று சொல்லிவிட்டால், அதற்குப் பிற்கு யார் யார், உன் குறையைச் சொல் என்று அருள்புரிவார்கள் சுதாகரனே!

செய்யுள் 34

கருவாய்எனை அன்னைக் கருக்குழியில்
உருவாய்உரமே செய்து வந்தவனே,
அருவாஉருவா அமலாவிமலா
பெருவாழ்வருளாய், பெரியோன் மகனே.

பொருள்:

என்னை அன்னையின் கருப்பத்தில் உருவாக்கிப் பலப்படுத்தி வந்தவனே, அருவனே, உருவனே, அமலனே, விமலனே, எனக்குப் பெருவாழ்வருளாய் பெரிய கடவுளின் மகனே.

செய்யுள் 35

வாதாடிய மங்கையர் மனச்
சூதானதை என்று தொலைத்தருள்வாய்
பாதாளம் அதிர்ந்து பயந்தலறி
வேதாளம் வணங்கிய வித்தகனே.

பொருள்:

சூதான மங்கையர் மனம் என்னோடு வாதாடினதை எப்போது தொலைத்தருள்வாய்? பாதாளம் ... வித்தகனே.

பொருள் — தெளிவு.

செய்யுள் 36

நிலையும் பொறையும் நிறையும் திறமும்
துறையும் சுகமும் குலமுந் துணிவும்
பறையும் பலதும் பறிவாம், பரனே,
குறையென்ற துரோகி குறுக்கிடிலே.

அருஞ்சொற்பொருள்:

பறிவாம் - பறிக்கப்படும் பொருளாகும்; குறை - வறுமை.

பொருள்:

குறை என்ற துரோகி குறுக்கே வந்து நுழையும்போது மேலே சொல்லப்பட்டவை எல்லாம் நம்மிடமிருந்து பறிக்கப்படும் பொருளாகும்,

செய்யுள் 37

காவேறியடர்ந்து கெடுத்த கடி
மூவேதனை செய்து முடித்த தயா
பாவேபகர் வேன்எனையாள் பரனே,
கோவேசெப மந்திர குணநிதியே.

அருஞ்சொற்பொருள்:

காவேறி - (ஏதேன்) தோட்டத்திற் புகுந்து கடி - பசாசு.

பொருள்:

ஏதேன் தோட்டத்திற் புகுந்து; பசாசு அடர்ந்து வேதனை செய்து முடித்தது ஐயா, செபமாலைப் பாட்டுப்பாடுகிற என்னை யாட்கொள் பராபரனே, அரசனே, செபமந்திர குணநிதியே.

செய்யுள் 38

ஆடுங்கலியால் அடிபட்டுலைய
வாடுந்தமியேனை மறந்தனையோ?
ஈடும்திறமற்ற எனக்கெனவும்
பாடும் படலான பராபரனே.

பொருள்:

என்னை ஆட்டுவிக்கும் பிசாசால் அடிபட்டு உலைய, வாடும் தனியனை மறந்துவிட்டாயோ? உனக்கு ஈடுசெய்யும் திறமற்ற எனக்காகவும் பாடுபட்ட பராபரனே.

செய்யுள் 39

அந்தாதி அளித்த உரைப்படிவே
எந்தாதை எவர்க்கும் இரட்சகன்நீ
வந்தால்எனை மாத்திரம் மீட்கும்முதல்
தந்தாயிலையோ சருவேசுரனே.

பொருள் — தெளிவு.

அருஞ்சொற்பொருள்:

அந்தாதி - அந்த ஆதி — இறைவன்.

செய்யுள் 40

சிங்கார வனம் தனிலே செறியும்
மங்கா வரம் நாலும் வகுத்தனையாள்
புங்காபரி பூரணனே, பூர்த்தியனே,
துங்காநவ சங்க துரந்தரனே.

பொருள்:

ஏதேன் சிங்கார வனத்தில் நாலு வரம் வகுத்து என்னை ஆண்ட பரிசுத்த பரிபூரண பூர்த்தியனே, வெற்றிபெற்ற புதுச் சபைப் பரிபாலகனே. வரம் நாலு - செ. 18, உரை காண்க.

செய்யுள் 41

ஏகா, 'விசு வாசமுள்ளோன் எவனும்
சாகன்' என வேசொன்ன சற்குருவே,
யூகா, பரிசேய ரோடு ஒதியவா
நாகாதிப ஞான கிருபாகரனே.

அருஞ்சொற்பொருள்:

ஏகா - தனியொருவனே; யூகா - மதியூகா; நாகாதிப - விண்ணுதிப.

பொருள்:

'விசுவாசமுள்ளவன் எவனும் சாகான்' என்று சொன்ன ஒரு தனிச் சற்குருவே, மதியூகியே, பரிசேயரோடு தருக்கித்தவா, விண்ணுலகாதிப, ஞான கிருபாகரனே.

செய்யுள் 42

இருளோட எழுந்த இரட்சகனே,
மருளோடுற விட்டு மயங்குவேனே?
தெருளோடு உலகத்திரளோடு உமைப்
பொருளோடு அருளோடு புரிந்தவனே.

அருஞ்சொற்பொருள்:

இருளோட - (1) இரவின் இருள் ஓட, காலை வந்தபோது - (2) பாவ இருளோட எழுந்த . . . மருள்=மயக்கம்; மருளுக்கு மறுதலை தெருள். தெருள் - தெளிவு.

பொருள்:

ஞாயிறு காலையில் இருளோட உயிர்பெற்று எழுந்த இரட்சகனே, மருளோடு உறவுகொண்டு மயங்குவேனே?

செய்யுள் 43

கன்னம்படு கள்ளன் எனப் பலரால்
சின்னம்படு காதுதிடத் தயைசெய்
உன்னம்படு முன்னையுணர்ந்து துயர்
இன்னம்பட லென் செயலேசையனே.

அருஞ்சொற்பொருள்:

சின்னம் படுகாது = சின்னப்படாது; உன்னம் படும் உன்னை யுணர்ந்து - மனத்தில் வாசமாயிருக்கிற - உன்னை உணர்ந்து.

பொருள்:

கன்னமிடும் படு கள்ளன் என்று பலரால் சின்னப்படாது, திடமான தயை செய்; மனத்தில் வாசமாயிருக்கிற உன்னை உணர்ந்து, நான் இன்னமும் துயரப்படுவது என்ன செயல், ஏசையனே!

செய்யுள் 44

இறைவன் சுதன்என் குரு, என்பரன் என்று
அறைவன், தவசின் குணம் இங்கருள்வாய்
துறைவஞ்சகரும் சகேயும் தொடரும்
குறைவன்றிய ஞானகுணாகரனே.

அருஞ்சொற்பொருள்:

துறை வஞ்சகர் - ஆயத்துறையில் வஞ்சக லாபம்கொண்ட மத்தேயு.

பொருள்:

இறைவன் மகன் என், என் பரன் என்று பறைசாற்றுவன்; அத்தகைய தவசின் குணத்தை எனக்கருள்க. மத்தேயுவும் சகேயுவும் உம்மைக் குறைவின்றித் தொடரும் ஞான குணாகரனே!

செய்யுள் 45

வலையே படுவித்த மடத்தவரைக்
கலையேபெறு வித்த கருணாலயனே
நிலையேதவ றிக்கெடு நீதியெனக்(கு)
கிலையே உனை ரட்சகனென்றிடிலே.

அருஞ்சொற்பொருள்:

மடத்தவர் - மூடாத்துமாக்கள். வலையே படுவித்த . . . = மீன் வலை வீசிய பேதுருவும் அந்திரேயாவும்.

பொருள்:

மீன் வலை வீசிய எழுத்தறிவில்லாத பேதுருவையும் அந்திரேயாவையும் கலைமலிந்தவர்களாகச் செய்த கருணைக்கிடமாயவனே!

செய்யுள் 46

காசாசைக்கொள் காமிகளைக் கருதி
வேசாரல் அடைந்தது மெத்த, ஐயா!
நேசா, கிருபை வாரிதியே, நிதியே,
ஈசா, அனுபூதி அடைந்தவனே.

அருஞ்சொற்பொருள்:

காமி = ஆசை கொண்டவன்; வேசாரல் - விசாரம்; வாரிதி - கடல்; அனுபூதி - நூலறிவைக் கொண்டறிந்த அறிவு. இங்கே பாடப்பெறுவது - இறையருள் பெற்றவர் அறிந்த அறிவு. எனவே, பரமானுபூதி பாடினர் கவிஞர்.

பொருள்:

இஸ்காரியோத்தூர் யூதாசைப் போன்றவர்களால் ஆண்டவன் அடைந்த விசாரம் மிகுதி. ஈற்றடிகள் இரண்டின் பொருள் தெளிவு.

செய்யுள் 47

பொறியைப்பொரு நன்புகலும் திறலும்
நெறியைப் பொருத்து நிலையும் தருவாய்
குறியைத் தொழு குப்பைகள் அர்ச்சனைசெய்
வெறியைப் பொருது ஆடிய வீரியனே.

அருஞ்சொற்பொருள்:

பொரு = ஒத்த; குப்பை - கூட்டம்; பொருது - போராடி; குறி - லிங்கம். ஆண் குறியைக் கும்பிடும் வெறி.

செய்யுள் 48

சதிகைப்படு சத்துரு சற்பனையால்
வதிகைப்படு காது மயங்குவனே
நிதிகைப்பட நீடு நிராணியனே
துதிகைப்படு நித்திய சோபனனே.

அருஞ்சொற்பொருள்:

வதிகைப்படுகாது - வழி தெரியாமல்; நிராணியன் - பெருமையில்லாதவன்; சதி - வஞ்சனை.

பொருள்:

வஞ்சனைக்காரப் பிசாசின் சற்பனையால் வழிதெரியாமல் மயங்குவனே? நிதி கைப்பட்டாலும் நீடிய பெருமையில்லாதவனே, துதிக்கப்படும் நித்திய சோபனனே!

செய்யுள் 49

ஐயாறுறழ் நான்மறை அர்ச்சயர்கட்கு
ஐயாறு அறிவித்தருள் அற்புதனே
ஐயாறுடன் ஆறுதலைப் பரனே
ஐயாறு ஒரு மூன்று வயது ஆதிபனே.

அருஞ்சொற்பொருள்:

இச் செய்யுளில் நம் கவிஞர் சொல்விளையாடல் மூலம் யேசுவைப் புகழ்கின்றார். அவரே உரையும் வரைந்துள்ளார்.

பொருள்:

ஐயாறுறழ் நான்மறை அர்ச்சயர் = நான்கை முப்பதிற் பெருக்கிய (4 × 30 = 120) நூற்றிருபது அப்போஸ்தலர்க்கு; ஐயாறு அறிவித்தருள் அற்புதனே - பராபரனுடைய வழியை அறிவித்த அதிசயமானவனே. ஐயாறுடன் ஆறுதலைப் பரனே - பராபரனுடைய வசனத்தோடேகூட ஆறுதலாயிருக்கிற பரா பரனே, ஐயாறு ஒரு மூவயது ஆதிபனே - முப்பத்து மூன்று வயதுள்ள இராசாவே.

செய்யுள் 50

மாறுத பராபரன் மைந்தனல்லால்
வேறு ஆரை விரும்பி வினைப்படுவேன்?
தூறுகிய பாவி துயர்த் தவிராய்
ஆறீர்குலம் ஆள் இசரேலரசே.

அருஞ்சொற்பொருள்:

தூறுகிய பாவி- இகழப்பட்ட பாவி; ஆறீர் குலம் - பன்னி ரெண்டு கோத்திரம்; ஆளிசரேலரசே - ஆள் இஸ்ரவேல் அரசே.

பொருள் — தெளிவு.

செய்யுள் 51

சயமும் தயவும் தருகும் பானீஉன்
பயமுங் கவரும் பகைஞன் பழியும்
துயரும் தவிரும்; துணை நன்பதமும்
கயமும் கொடுவந் தருளுங் கதியே.

அருஞ்சொற்பொருள்:

சயமும் - செயமும்; தருகும் பரன் - தரும் பரன்; கவர் - வஞ்சகம்; கயம் - மேன்மை; கொடுவந்து - கொண்டுவந்து.

பொருள்:

வெற்றியும் தயவும் தருகின்ற பரனே, உன் பயமும், வஞ்சகமும், பகைஞன் சாட்டும் பழியும் துயரும் தவிரும்; துணையும் நல்ல பதமும் மேன்மையும்கொண்டு வந்தருளும் நற்கதியை.

செய்யுள் 52

[1] வதியாய் [2] நதியாய் [3] வரமாய் [4] உரமாய்
[5] விதியாய் [6] நிதியாய் [7] வெளியாய் [8] ஒளியாய்
[9] உதியாய் [10] பதியாய் [11] உளமாய் [12] உரமாய்
அதியாய் விதிஞான அனுபூதியுமே.

அருஞ்சொற்பொருள்:

வதி = வழி.

ஒப்புநோக்கு: செ. 48.

குறிப்புகள்:

1. செ. 52 முதல் 54 ஆகிய இவ்விறுதிச் செய்யுட்கள் 'ஞான அனுபூதி' என்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளன. செ. 52: ஞான அனுபூதி, செ. 53: ஞான உபதேசிகன், செ. 54: அனுபூதி உலக அனுபவ அறிவன்று. இறையருள் பெற்றதனால் உண்டாகிய ஞான அனுபவம்; ஞான உபதேசம் பெற்று அறிந்த அறிவு.

2. எனக்கு ஞான அனுபூதியை அதிகமாய் விதித்தருள்க. இதை 12 வகைகளில் இச் செய்யுளிற் கூறுபடுத்தினர் என்க.

செய்யுள் 53

நன் தாதையும் நம்பிய நாதனுஞ்
உன்னருளணையுங் குலதெய்வமும் நீ
என் தாபம் அகற்றி இரங்கியருள்
ஒன்றும் பொருள் ஞானுபதேசிகனே.

அருஞ்சொற்பொருள்:

உன்னருளணையும் - உனது தாளை அணைபவனின்; என் தாபம் - எனது ஆன்ம தாகத்தை; ஞான வுபதேசிகன் - ஞானத்தை உபதேசிக்கிறவனே.

பொருள்:

ஒன்றுன மெய்ப் பொருளான ஞான உபதேசிகனே, எனக்கு நல்ல தந்தையும் நான் நம்பிய நாதனும் . . . உன்னை அணையும்

என் குலதெய்வமும் நீ; என் ஆன்ம தாகத்தை அகற்றி எனக்கு இரங்கி அருள்க.

செய்யுள் 54 பதிகத்தின் இறுதிச் செய்யுள்:

சதமேபதி னெட்டொடு முச்சமையத்
திதமேவிய ஆனியின் ஏழ்தினமே
பதமேவு நெல்லைப்பதி யான்மேற்
சிதமேஅனு பூதிதெரித்தனனே.

அருஞ்சொற்பொருள்:

சிதமே - முடிவாக; அனுபூதி தெரித்தனனே - பரமானுபூதிப் பாடலைப் பாடி முடித்தேனே.

பொருள்:

கவிஞர் தாமே முடிவில் இப்பாடற் பொருளை எழுதிவைத்தார்: 'கிறி. 1803-ஐ ஆனி-மீ 72 திருநெல்வேலியான் இந்த ஐம்பத்து நான்கு செய்யுளையும் ஒரே நாளையிற் பாடினனென்க.'

இதுவோர் வரலாற்றுக் குறிப்பு.

23. கிறிஸ்து பிறப்பின் பேரிலே சந்த விருத்தம்

கிறிஸ்து பிறப்பின் முகாந்தரம்

செய்யுள் 1

சீர் சிறந்த கடலே வளைந்த செகம்
மீது இலங்கு பொருள் யாவையும் பரம
சேனையும் தினமது ஆறில் அங்கு அருளியே
தீமையன்றி இரு பேர்கள் தங்களையும்
அலங்கிருத மாய் வளைந்து வளர்
சீவனின் தருவிலே அருந்தும் எனவே

நேர் சிறந்த பரனர் மொழிந்த உரை
மீறி அங்கொரு பசாசை நம்பி மறை
நேர்மையொன்றும் உண ராதுதங்கள் மனதாய்
நீடு நந்தவனமே செறிந்த ஒரு
தீயபுன் கனியிலே அருந்தி அவ
நீதிகொண்டு மதம் ஏறிமிஞ்சி வலுவாய்

ஏர்சிறந்த தவமே இழந்தவர்கள்
நால் வரங்களும் எலா மழிந்து இழிவதே
மிகுந்து பவமே நிறைந்த படியால்
ஏகன் அங்கு வனமீதெழுந்து நடுவே
விளம்பினஅந் நேரம் அங்கு அவர்கள்
ஏதஸ் அங்குபிணை யாளி என்று சொல்லியே
பார்சிறந்த உல கூடு உயர்ந்தகலி
லேயமென்ற பெரு நாடது அங்கண் ஒரு
பாவை அங்கண் மரிமாது பண்டி தனிலே
பாடித்தான் திரள் வானத்து ஆஞ்சுகள்
ஆயர்க்காம் புகல் ஓதிப் போம்படி
பாசத்து ஊர்ந்துஎமை நேசித்த ஆண்டவனே.

அருஞ்சொற்பொருள்:

அலங்கிருதமாய் - அலங்காரமாக; வளைந்து - குயவன் குடம் செய்தல்போலச் செய்து; நேர்மை சிறந்த பரனர் - நீதி நேர்மை

நிறைந்த பராபரன். இதற்கு மாறுக, ஆதாம் ஏவாள் அவநீதி கொண்டு; மதம் - திமிர் ஏறி, மிஞ்சி, வல்லமைகொண்டு; அங்கண் மரி - அழகிய கண்கொண்ட மரியம்மை; பண்டி - வயிறு; பாடித்தான் திரள் - ஆயர் கூட்டம்; வானத்தாஞ்சுகள் - வான தூதர் — Heavenly Angels; ஆஞ்சுகள் புகல் - அடைக்கலம்.

பொருள்:

கடல் சூழ்ந்த இவ்வுலகத்தையும் அதில் உள்ள பொருள் யாவையும் ஆறு நாட்களில் படைத்து, ஆதாம் ஏவாள் என்ற இரு பேர்களையும் அலங்காரமாய் உருவாக்கி, சீவ மரத்தின் நற்கனியை அருந்துங்கள் என்று பராபரன் உரைத்தார். ஆனால் அவர்கள் கடவுள் கட்டளையை மீறி, பிசாசின் சொல்லை நம்பி, திருவாக்கின் நேர்மையை உணராமல், தம் மனம்போன போக்கில், நந்தவனத்தில் விலக்கப்பட்ட தீய கனியை அருந்தி, அநீதி கொண்டு மதம் மிஞ்சி ஏறித் தங்கள் தவம் இழந்து, ஞானம், பரிசுத்தம், பாக்கியம் என்ற நால்வரங்களையும் அழித்து, இழிவு மிகுந்து, பாவம் நிறைந்தபடியால், ஒரு தனிக் கடவுள் அந்த நந்தவனத்தின் நடுவில் எழுந்து வந்து அவர்களை அவ் வனத்தைவிட்டு விரட்டின அந்நேரமே அவர்கள் செய்த குற்றத் திற்குத் தாமே பிணையாளி என்று சொல்லியே;

கலிலேயா நாட்டில் உள்ளதோர் அழகிய கண்ணுள்ள பெண் வயிற்றிலே பிறந்தார்; இடையர் கூட்டமும் வான தூதர்களும் ஆயர்க்கேற்ற நல்வார்த்தைகளைச் சொல்லும்படி அன்பினால் இவ் வுலகத்துக்கு ஊர்ந்து வந்த எங்களை நேசித்த ஆண்டவனே—என்க.

கிறிஸ்துவின் அவதாரத்தின் முகாந்தரம்

தமிழ் இலக்கிய மரபுக்கேற்ப, பாடலின் தொடக்கத்தில் மங்கலச் சொற்களோடு இச்செய்யுளைத் தொடங்கினர் கவிஞர்.

சீர் சிறந்த, நேர் சிறந்த, ஏர் சிறந்த, பார் சிறந்த என்பன அவை.

இச்செய்யுளுக்கு வேத ஆதாரம்: ஆதியாகமம் 1,2 அதிகாரங்களும், மத்தேயு, லூக்காவின் முதலிரண்டு அதிகாரங் களும்.

பொழிப்புரை:

உலகம் யாவையும் ஆறு நாட்களில் படைத்து, ஆதாம் ஏவாளை உருவாக்கி, சீவ மரக்கனியை அருந்துங்கள், தீய மரக் கனியைப் புசியாதீர்கள் என்று கடவுள் இட்ட கட்டளையை மீறின

மக்களே வனத்தைவிட்டு விரட்டினார். எனினும், அதே நேரத்தில், குற்றவாளிகளுக்குப் பிணையாளியாவேன் என்ற தம் வாக்கை இயேசுவின் பிறப்பிலே நிறைவேற்றினார்.

அருஞ்சொற்பொருள்:

வனைகல் - குயவன் பானை சட்டி வனைகிறான்; நால்வரம்: ஞானம், பரிசுத்தம், பாக்கியம், சாவாமை; அங்கண் - அம் + கண் = அழகிய கண்; பண்டி - வயிறு.

கிறிஸ்து மனுட அவதார உற்பத்தி

செய்யுள் 2

வாசமிட்டநச ராபுரிக்குள் வள
மேமிகுத்ததவி ராசபுத்திர சுப
மாதவப்புனித சூசையப்பருடனே
வாகுறத்திரு விவாகஒப்பில்உறு
நேமுகப்பெண்மரி மாதிடத்து அதிக
வானகச் சுரரிலே ஒருத்தன் வரலாய்:

'நேசமிட்ட கன்னி மார்களுக்குள் உயர்
ஆசி பெற்றமக ராசி,மிக்க அதி
நேர்மையுற்று ஒரு குமாரனைப் பெறுவை நீ,
நீடி ரட்சக யேசு கர்த்தரென
நாமமிட்டு அருளுவாய், பரப்பிரம
நேயதற்சொரூப சேய் எனப்படுவரே.

தேசமிட்டஇச ரேலருக்கு அரசன்
ஆக எப்பொழுதுமே திறத்தினோடு
தீமையற்ற தாவீது ஆசனத்தில் எழுவிர்,
தேவமுக்கியம தாய்நடத்தியீ
இராச்சியமுகி யாதிருக்கு நல
சீர்'எனக் காபிரியேல் வழுத்த, மரியோ,

'பாசமிட்டஉரி யோன் எனக்கில்லை, இது
ஆம் விதத்தை அறி யேன்'எனக்'கன
பராபரத்தின் அருளால் நடக்கும்' எனவே
பரிவுற்ற மாது முன்பு
விஸ்தரித்துத் தான் சொன்னதாம்படி
பரிசுத்த ரூபி யென்ற
இஸ்பிரீத்துச் சாந்துவில் ஓங்கிய
பழுதற்ற மேனிகொண்ட
மெய்க்கிறிஸ்துச் சாந்த குணேந்திரனே!

அருஞ்சொற்பொருள்:

விவாக ஒப்பில் நேமுகப்பெண் - திருமணத்துக்கு நியமிக்கப் பட்ட பெண்; சாந்த குணேந்திரன் - சாந்த குண அரசன்.

செ. 2. காபிரியேல் மரியம்மைக்கு அறிவித்தல். லூக்கா நற்செய்தி நூல் 1:26-38

பொருள்:

தாவீது ராசகுலத்தவரான யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட மரியம்மையிடத்துக் காபிரியேல் தேவதூதன் தோன்றி 'இயேசுவின் பிறப்பு, அவர் தேவ குமாரன், இசரவேலர்க்கு அரசன், அவர் அரசு அழியாதிருக்கும். இது உனக்கோர் நல்ல சீர்' எனச் சொல்லி வாழ்த்தினன். அதைக்கேட்ட மரியம்மை: 'கணவனை அறியேனே - நீர் சொன்னவை எப்படி ஆகும்' என்றார். 'கடவுள் அருளால் ஆகும்' என்றான் தூதன்.

அருஞ்சொற்பொருள்:

பரப்பிரம நேய தற் சொரூப சேய் = கடவுள் குமாரன். இராச்சிய முகியாதிருக்கும் - முடிவற்றதாயிருக்கும். நல சீர் - நல்ல சீர், நற்சீர். பரிசுத்த ரூபி = இஸ்பிரீத்துச் சாந்து - Spiritus Sanctus, Holy Spirit, Holy Ghost.

கிறிஸ்துவின் மனுடாவதார உற்பத்தி

பொருள்:

தாவீதின் அரசகுலத்தில் தோன்றிய சூசையப்பர்க்கு மனைவியாக நியமிக்கப்பட்ட மரியம்மைக்குத் தேவதூதர்களில் ஒருவன் வந்து: 'கன்னியர்க்குள் ஆசிபெற்ற மகராசியே, நீ ஓர் குமாரனைப் பெறுவாய்; நீ அவர்க்கு 'இயேசு' என்று திருநாம் இடுவாய்; அவர் பரப்பிரமனுடைய நேய தற்சொரூபம் உள்ள மகன் எனப்படுவார்; அவர் இசரவேலர்க்கு ஒளிமிகுந்த அரசனாக, தீமையற்ற தாவீதின் திருஒலக்கத்தில் வீற்றிருந்து நல்லரசு நடாத்துவார்; அவ் அரசு அழியாதிருக்கும்; இது உனக்கு நல்ல சீராயிருக்கும்' என்று காபிரியேல் தூதன் வாழ்த்தினர். இதைக் கேட்ட மரியம்மையோ: 'எனக்குரிய அன்புக் கணவன் இல்லையே, இது எப்படியாகும்' என்றாள். 'மேன்மைதங்கிய பராபரனின் அருளால் நடக்கும்' என்றான் காபிரியேல்.

கடவுள் முன்பு உரைத்த வாக்கின்படியே பரிசுத்தாவியானவரால் கன்னிவயிற்றில் உற்பவித்த பழுதற்ற திருமேனிகொண்ட மெய்யான கிறிஸ்துவே, சாந்தகுணமுள்ள அரசனே.

காபிரியேலும் மரியம்மையும் கலந்துரையாடல்

செய்யுள் 3

அழகதிட்ட கபிரேயல் சிறப்பிலெடு
நசரையிற்பெரிய தவமிகுத்த சுப
அறிவின்மிக்க கன்னி மரியிடத்தணுகியே
'அதிகஉத்தம கிருபைகள் பெற்றவருள்
இடம் அதற்குள்ஒரு செயல் நடக்குநல்ல
அரிவையர்க்குள் உயர்வளம் உடைத்தை' எனவே

மொழிய, அப்பொழுது கன்னிபயத்திலெடு
சுரன்உரைத்த சொல்லை நினைவில் ஒத்துஉணர
முகனைவைத்த கபிரியேல் அதற்கு உரைசொல்வான்
'முதல்வி, இப்பொழுது பயம் அகற்றிவிடு
பரனிடத்து அதிக கிருபைபெற்றை, இனி
முழுதும்அற்புத அதிசய கெற்பம் உறலாய்

எழில் உதித்தஒரு குமாரனைப்பெறுவாய்;
இவர்பரப்பிரம சுதன் எனப்படுவர்;
இணைநிகர்த்த தாவீ தரசிடத்தின் நெறியோடு
இசரேலுக்கரசன் என மகத்துவமொடு
முடிவதற்று அனுதினமும் இருப்பர், திடம்'
எனமரிப்பெண் மறுமொழிகொடுத்து அவள்முன்னே

'கொழுநனைச் சிறிதும் அறிவுற்றதில்லை
இதுநடப்பதுஎவ் விதம், எனக்குரை செய்'
குலவுதற்பரம னுட பெலத்தில் எனவே
குணமிஞ்சு மாமரிக்கு உரைத்த விந்தையால்ஒரு
மகவுஎன்று பூதலத்து உதித்த எம்தயாபர
குருமந்திர சேகரக்கிறிஸ்து மண்டலாதிபனே.

பொருள்:

அழகுள்ள காபிரியேல், தவமும் நல்லறிவும் மிக்க கன்னிமரியிடத்தணுகி: நல்ல அரிவையர்க்குள் உயர்வளம் உடைய பெண்ணே, உத்தம கிருபைகள் அதிகமாகப் பெற்றவர்களிடம் ஒரு நல்ல செயல் நடக்கும்' என மொழிய,

கன்னி அதைக் கேட்டுப் பயந்து, முன் ஒரு தூதன் சொன்ன சொல்லை நினைவுக்குக் கொணர்ந்தாள். இதனையறிந்த காபிரியேல் வருமாறு பதில் உரைத்தான்:

'முதல்வி, உன் பயத்தை அகற்றிவிடு; பராபரனிடத்தில் அதிக கிருபை பெற்றுய்; இனியோர் அற்புத அதிசய கற்பம் உறுவாய்; அழகியதோர் மகனைப் பெறுவாய்; இவர் பரப்பிரம சுதன் எனப்படுவார்; தாவீதரசனுக்கு நிகரான நெறியோடு, 'இசரேலுக் கரசன்' என மகத்துவத்தோடு முடிவற்று எந்நாளும் இருப்பார், இது திண்ணம்' என்றார். இதற்கு மறுமொழியாக: 'கணவனை அறியேனே, இது நடப்பது எவ்விதம், எனக்குரை செய்க' என்றுள், ''தற்பரமனுட பெலத்தால்'' எனவே, மாமரிக்குரைத்த விந்தையால் ஒப்பாரும் மிக்காருமில்லாததோர் மகன் என்ற பூவுலகத்தில் தோன்றிய எம் தயாபரனே, குருமந்திர சேகரக் கிறிஸ்து மண்டலாதிபனே.

யோசேப்பின் சந்தேக நிவர்த்தி

செய்யுள் 4

'மரிமங்கையுட பண்டி சினைகொண்ட நெறிகண்டு
மலைவொன்றி அவள் அன்பனே,
வலுநிந்தை செயநன்றது இலையென்று அவளையங்கு
மறு பங்கில்விட நெஞ்சிலே.

கருதும் சரிதையொன்று நினைவும் செய்திட
ககனந்தனில் இருந்துமே
கதிர்தங்கு பிரவை மிஞ்சு சுரன்அண்டி மொழிவிண்டு
கழறும்: தவிதுமைந்தனே,

ஒருவஞ் செய்வது நன்றது அல்ல, நெஞ்சினிடை சங்கை
ஒழி,உன்றன் நெறிமங்கையே
ஒரு சந்ததிபெறும், பின் அவளின் பெயரே சென்றுஇவ்
உலகம் தொழ விளம்புவாய்,

பரவுங் கிருபைபொங்கி நரர்பங்கமதனின்று
பரமண்டலம் விளங்கவே
பலன்தந்து காப்பர் என்று யோசேப்புக்கோதிய
படிவந்த மீட்பர் உம்பர் வாழ்ட்டுக்காதிப,
பனிரண்டு தீர்க்கர் தங்கள் மாபாக்கியச் சீர்பதியே.
(மத்தேயு 1:18–21)

அருஞ்சொற்பொருள்:

பண்டி - வயிறு; சினை - கரு; பிரவை - பிரபை = பிரகாசம்; ஒருவஞ் செய்வது - நீக்குதல்; சங்கை - சந்தேகம் ஐயம்.

பொருள்:

'யோசேப்பே, தாவீதின் மைந்தனே, கன்னிமரி கருவுற்றதைக் கண்டு மலைக்காதே, உன் நெஞ்சில் உண்டான சந்தேகத்தை ஒழித்துவிடு; இம்மங்கையின் வழியே ஒரு சந்ததி வரும்; பின்னே அவர் பெயரைச் சொல்லி உலகம் அவரைத் தொழவேண்டும் என்று விளம்பரஞ் செய்வாய்; அவர் கிருபை பொங்கி மக்கள் பாவம் நீக்கி, பரமண்டலம் விளங்கப் பயன் தந்து காப்பார்' என்று யோசேப்புக்குச் சொன்னவாறு வானுட்டுக்கு மீட்பரும் அதிபரும், பன்னிரண்டு தீர்க்கருடைய பாக்கியமும் நற்சீருமுடைய அரசனே.

கிறிஸ்துவின் பிறப்பு

செய்யுள் 5

துங்கநீள் புவிக்குள் எங்குமே குடிக்கு
இசைந்துதான் மதிப்பு அறைந்து கீறமிக்க
துங்கனும் அகுஸ்து தந்தவாறு திட்டமே
சொந்தமாக மக்கள் தங்கள் நாடுஎனப்
பிறந்தவூர் அதற்கு அடைந்து போகமுக்கிய
சுந்தரசூசையப்பரும் தன் நேமுகப்பெண்ணும்

மங்கையொடுபற்றி மூந்து நாசரத்தில்
நின்றுகூடியொக்க வென்றிசேர்த்து பெத்தல்
வந்தபோது பொற்பு இலங்குவேல் கொள்மைக்கண்ணுள்
மஞ்சுஉலாவு கெற்பம் மிஞ்ச மீறிஅச்சம்
அன்றியே பிறப்பது ஒன்றவே அடுத்த
மந்தைமேய் வனத்தில் அண்டியோர் குடிலுக்குளே

அங்குதானிருக்கும் அந்தவேளை யொப்ப
அந்தம் ஆதியற்ற எந்தைசேயனைத் தன்
அன்பினோடு பெற்று கந்துசீலை சுற்றியே
அந்தமாய்முன் எட்டிதங்கவே கிடத்தி
அஞ்சலே கொடுத்து இறைஞ்சியே வழுத்த
அண்டர் சேனை திட்டம் என்று வானமுட்டியே

புங்கமே கனத்த சங்கையாக நித்திய
மந்திர சோபனத் திறங்கள் கூறமெச்ச
புந்திகூர் மகத்துவ மங்களாகரத்தனே,
புடைமண்டியே குதித்திட்ட அக்கிரமத்துற்
பேய்க்கணத்தைச் சாங்கமும்

இகல்கொண்டு மாவுயித்தக் காத்திரவுக் கிரத்
தால்தகர்த்திட் டோங்கிய
புகழ் மண்டலாதிபப் பராக்கிரமத்துக்
கோப் பரத்துக்கு ஆண்டவனே.

(மத்தேயு 1:28–25; லூக்கா 2:1–7)

கிற – எழுத; அகுஸ்து - ரோமராயன்; நேமுக - நியமிக்கப் பட்ட; பெத்தல் - பெத்லகேம்; பொற்பு இங்கு ... கண்ணுள்- அழகுள்ள வேல்போன்ற கருங்கண்ணுடைய மரியாள்; இகல் - பகை.

பொருள்:

குடிக்கணக்கு எழுத மக்கள் அனைவரும் தம்தம் பிறந்த நாட்டுக்குச் செல்லவேண்டுமென்று அகுஸ்துராயன் இட்ட கட்டளைக்கிணங்க யோசேப்பைக் கூட்டிக்கொண்டு பெத்தலேமுக்கு வந்தபோது மரியம்மை ஓர் மகனைப் பெற்றார். ஆதியந்தம் இல்லாத எம் தந்தையின் சேயனைக் கந்தைத் துணியிற் சுற்றி முன்னணையில் படுக்கவைத்தாள். எனினும் வானவர் கூட்டம் சோபனங்கள் பாடினர்; பேய்க்கூட்டங்கள் பகைகொண்டு எதிர்த்துக் குதித்தன. அவர்களையும் எதிர்த்துப் போரிட்டு வென்ற புகழ் மண்டலாதிபனே பராக்கிரமசாலியே, பரத்துக்கு ஆண்டவனே.

கிறிஸ்து மனுட அவதாரக் காட்சி

செய்யுள் 6

ஆதி ஆதம்ஏவைபரி பாதகமெலாம் அகில
ஆரிருளிலே கிருபையாய்
ஆரணியமீது பலமாடு அடை கூடமதில்
ஆயர்தொழ வானவருமே.

நீதியொடு ஆகாயமதில் ஊடுஅதிக வீணையொலி
நேர்புகழ்கள் பாடிவரவே
நேச அறிவாகரர்கள் மூவர்ஒருபால் அணுகி
நீடு திறையானது இடவே

பேதக எரோதைக படான நினைவால் மொழிகள்
பேசிய கொடூரம் அறவே
பீடுலகில் மானிடர் எலாம்அதிக சேமமொடு
பேருலகின் வாழ்வுபெறவே.

மாதவ தாவீது வளர் யூதர்குல ராச கன்னி
மாதுமரியாள் மகிழவே
மகவெனுங்கன பிரதாப முக்கியமாய் உயர்
கருணையின் கடல்திரி யேசுவஸ்து அனுதிதன்
மனுமகன் திருமனுவேல் கிறிஸ்துநாயகனே.

மூன்று ஞானிகள் எருசலேமுக்கு வருதல் (மத்தேயு 2:1–16).

அருஞ்சொற்பொருள்:

நீடு திறை - பாத காணிக்கை; அறிவாகரர் - ஞானிகள்.

பொருள்:

மனுடலுக அவதாரம் செய்தவருடைய முந்திய நிலை எது வென்பதை ஈற்றடிகளில் விரித்துக் கூறியுள்ளார்:

பரமார்த்த நிலையில், அதாவது, In the state of his Preexistence, i. e. his stature before his Descent into this world. மரியாளின் மகனுகப் பிறந்ததற்குமுன் கடவுள் மகனுக இருந்தார். திரியேக வஸ்து, அனுதியாக இருந்தவர், இருக்கிறவர், மகிமைப் பிரதாப முக்கியமாக, உயர்வாக, கருணைக் கடலாக, ஆதி அந்த மில்லாத, நித்தியக் கடவுளின் மனுமகன், திருமனுவேல் எனப் பட்ட கிறிஸ்து நாயகன் ஆதியில், அதாவது உலகத் தோற்றத்தில் ஆதாம் ஏவாள் செய்த பாதகம் எல்லாம் நீங்கவேண்டுமென்ற திருவுள்ளங்கொண்டு நிறைந்த இருளில் பல மாடுகள் அடையும் குடிசையில் கிருபையாக வந்து புகுந்தார். மாட்டிடையர் தொழும் போது வானதூதர்கள் ஆகாயத்தில் நீதியோடு வீணைகளை ஒலித்து நேர்புகழ்கள் பாடிவந்தனர். விண்ணுலகும் மண்ணுலகும் இணைந் தன. அடுத்து, மூன்று ராசாக்கள் வெவ்வேறு நாடுகளில் இருந்த வர்கள் ஒன்றுகூடிப் பெத்தலையில் பிறந்தவரைக் கண்டு விலை உயர்ந்த காணிக்கைகளைப் பிறந்த பாலகன் பாதத்தில் வைத்துத் தொழுதனர். இவர்களுக்கு மாருக, பேதகம் செய்து அரசு நடத்தும் ஏரோதே அரசன், கபடன், யேசு குழந்தையைக் கொல்லவேண்டுமென்று திட்டமிட்டான்.

பெருமை பொருந்திய இவ்வுலகில் மக்கள் யாவரும் சேமத் தோடு பெருவாழ்வு பெற்று வாழ்வான் வேண்டி, தாவீதின் ராசகுலத்தில் பிறந்த யூதப்பெண் கன்னிமரியிடத்தில் பிறந்து அவரை மகிழ்வித்தவர்தான் இந்தத் திருமனுவேல் கிறிஸ்து நாயகன்.

கிறிஸ்துவின் மனுட அவதாரப் பிரஸ்தாபம்

செய்யுள் 7

சுந்தரப்பரமன் மைந்தன் அற்புதமி
குந்த நிச்சய சுதந்தரக் கருணை
சொந்தம் வைத்தருள வந்துபெத் தலேயிலே
துங்க மைக்கண்மரி மங்கை கற்பது
துலங்கு கெற்பமதி லங்கி உற்பவம்
தொன்றிடச் சுடர் எழுந்து முக்கியமதாய்
அந்தரத்தின் மிசை சிந்து நற் கவிகள்
தந்து விற்பனமுடன் சொல்லிப் பணிய
அண்டர் அக்கணம் மகிழ்ந்து பற்றிவரவே
அன்புறக் கலை உணர்ந்த நற்றவர்
உவந்து தெட்சிணை சிறந்தளித்தடிகள்
அஞ்சலித்து மிக வந்துதித்து எழுகவே
தந்திரக் கடிகள் நிந்தையுற்ற வலு
வஞ்சகக் கொடிய சிந்தைக்குள் மிகு
சஞ்சலத்துயர் நிறைந்து தட்டழியவே
சங்கை பெற்றதாவீ தின்குலத்தரசர்
தங்களுக்கும் அவரின்புறத்தில் வரு
சந்ததிக்கும் அர சென்று திட்டமுடனே
மந்திரத்திர விதங்களுற்ற பர
மண்டலச் செபம் முழங்க மெய்ப்புகழ்
வழங்க, அர்ச்செயர் வணங்க உச்சிதமதாய்
வரமிகும் ஞானச் சாத்திரம் ஒன்றைத்
திறத்திலிட்ட குமார குணகர
குருமனுவேல் சற்பாத்திர துங்கத்
திரித்துவத்தினில் ஏகமதாய், வளர்
வளமையின்யூதக் கோத்திர சிங்கக்
கிறிஸ்துரட்சகரான பராபரனே.

அருஞ்சொற்பொருள்:

அண்டர் - இடையர்.

பொருள்:

மனுடாவதாரம் என்றதோர் உயர்பொருளை அழகுபடப் படவேண்டுமென்ற கருத்தில்,

'சுந்தரப் பரமன் மைந்தன் அற்புதம்...'

என்று தம் பாடலைத் தொடங்கினர்.

சுந்தரம் - அழகு, சுந்தரனுகிய இவர் பரமனது மைந்தன். இவர் திருஅவதாரஞ் செய்ததற்குக் காரணம் கருணை - அருள் அருளே காரணம். இது அற்புதம் மிகுந்தது, நிச்சயமானது, சுதந்தரமானது, கருணையானது - இத்தனைப் பேறுகளுக்கும் நம்மை உரிமையாளர்களாக்கவேண்டுமென்ற திருக்குறிப்போடு பெத்ல கேமில் வந்து பிறந்தார்.

ஒப்புநோக்கு:

முதல் ஆறு செய்யுட்களில் கவிஞர் மத்தேயு, லூக்காவின் வரலாறுகளைப் பயன்படுத்தினர்.

யேசு பாலகன் எகிப்து நாட்டுக்குப் போய் மீண்டது

செய்யுள் 8

மனத்திலே மதங்கள் மிகுத்த பாதகன் தன்
அகத்தினுல் நினைந்த துடுக்கெலாம் அறிந்து
மகத்துவமாய் எழுந்த திரித்துவ ஏக தந்தையார்
வரத்திலே நிறைந்த சுரர்க்குளே சிறந்த
ஒருத்தனெடு அறைந்து விடுத்த காலை, அந்த
வனத்திலே அடர்ந்த குடிற்குளே இருந்ததோர்
கனத்த ஞானசிந்தை தரித்த சூசை முன்பு
வழுத்தவே அவன்றன் மரிப்பெண்ணெடு வந்து
கடுக்கவே குழந்தை எடுத்துமே நடந்து,சீர்
கதித்த நாடு என்ற எகிப்தினூடு சென்று
தரித்தபோது முன்பு பரத்திலேறி வந்த
கருத்தர் தூதன் இன்று மறுத்து மேவி அங்ஙனே
சினத்த ஏரோதே என்ற பெருத்த பாவிகொண்ட
கவட்டினுல் மடிந்த விதத்தையே மொழிந்து
திடத்தில் நீர் இருந்த இடத்தையே யகன்றுமே
சிறப்பிலே உயர்ந்த பெலத்த யூதர் தங்கி
நடத்தியாளும் உங்கள் தலத்தில் ஏகுமென்று
தெரித்த வாய்மை கண்டு சணத்திலே விரைந்து தான்
இனத்துளோர் பெந்து சனத்து ளோரைஅண்டி
இருக்க நாடியங்கு வரச்செய்து, ஆகமங்கள்
இசைத்தவாறு உகந்த தேவமைந்தனே,
ஏவைமக்கள் பாதகமுற்றினும் ஏது அவிழ்த்த தயாப மனெகர
தேவசற்பிரசாத சமுத்திர, நேசஉத்தம ஞானகுணகர
ஏகச் சக்கராதிப முக்கிய யேசுரட்சகரான பராபரனே.

பொருள்:

இச்செய்யுட் பொருளை அறிய, மத்தேயு 2:19–23ஐப் படிக்கவும்.

ஏரோது அரசன், 'யூதரின் ராசா இயேசு' என்று ஞானிகள் கூறியதைக் கேட்டுப் பயந்து அக்குழந்தையைக் கொல்ல வழி தேடிக்கொண்டிருந்தான். ஏரோதேயின் மனத்தை அறிந்த கடவுள் தம் குழந்தையை எவ்வாறு காப்பாற்றினார் என்பதைச் சொல்வதே இப்பாடலின் பொருள்.

மதங்கள் மிகுந்த பாதகன் தன் மனத்தில் நினைத்த துடுக்குகள் எல்லாவற்றையும் அறிந்து—

'மகத்துவமாய் எழுந்த திரித்துவ ஏசு தந்தையார்' என்றார் கவிஞர். The glorious Triune One Father—

ஒரு தெய்வ தூதனை யோசேப்பிடம் அனுப்பிக் குழந்தையை எகிப்துக்குக் கொண்டுபோகக் கட்டளையிட்டார். இதையறிந்து யோசேப்பு (கடுக்கவே) உடனடியாக குழந்தையை எடுத்து நடந்து எகிப்துக்குச் சென்று மகனை ஒளித்துவைத்துக் காப்பாற்றினார்.

'அஞ்சுவது அஞ்சாமை பேதமை' என்பது ஒருவகைச் சமாதானம். இயேசு கொல்லப்படுவதற்கு இது ஏற்ற தருணமன்று என்க.

அடுத்தபடியாக ஆண்டவர் இயேசுவைக் காப்பாற்றிய அற்புதம் சொல்லப்படுகிறது. இவை யாவும் ஆகமங்கள் உரைத்தபடி நிகழ்ந்தன.

செ. 6-இல்: 'ஆதி அதம் ஏவை புரிபாதகமெலா மகல' என்றவர்.

செ. 8-இல்: 'ஏவை மக்கள் பாதகம் முற்றினு மேதவிர்த்த ஏசு' என்று நினைவுபடுத்துகிறார்.

'முற்றினு மேதவிழ்த்த தயாப' என்பது.

'முற்றினுமே தவிர்த்த தயாபர' என்றிருத்தல் வேண்டும். ஈற்றடிகள் ஐந்திலும் யேசுவுக்குப் பல புகழ்ப் பெயர்கள் சொல்லி வாழ்த்துகிறார்:

தயாபர, மனுகர, தேவ, சற்பிரசாத சமுத்திர (கருணைக் கடல்), நேச, உத்தம, ஞான, குணகர, ஏகச் சக்கராதிப, முக்கிய, யேசு ரட்சகரான பராபரனே.

இந்த 23-ஆம் செபமாலையில் கிறிஸ்து பிறப்பின் பேரிலே சந்த விருத்தம் பாடியவர் முதற் பாடலில், கிறிஸ்து பிறப்பின் காரணத்தைக்கூறி, 2-வதில், அவரது மனுடாவதார உற்பத்தி

யையும், 3-வதில், காபிரியேல்—மரியம்மை உரையாடலையும், 4-வதில், யோசேப்பின் சந்தேக நிவர்த்தியையும், 5-வதில், கிறிஸ்துவின் செனனத்தையும், 6-வதில், கிறிஸ்துவின் மனுடாவ தாரக் காட்சியையும், 7-வதில், கிறிஸ்துவின் மனுடாவதாரப் பிரஸ்தாபத்தையும், 8-வதில், யேசு பாலகன் எகிப்துக்கு ஓடி, மீண்டதையும் கூறின பின்னர், வரலாற்றுப் பகுதியை ஓரளவு முடித்து புகழ்ச்சிப் பாக்கள் ஐந்தைப்பாடிய செய்யுள் அமைப்பைக் காண்க.

செ. 9: புகழ்ச்சி.

'புகழ்ச்சி' என்ற இத்தலைப்பு செ. 9 முதல் 13 மட்டுமுள்ள ஐந்து செய்யுட்களுக்கும் பொருத்தமாகக் கவிஞர் வைத்துள்ளார். இனிவரும் பாடல்களில் வரலாற்று நிகழ்ச்சிகளோ, உரையாடல் களோ வாராது திருநாமங்களே ஒன்றன்பின் ஒன்றுக வந்துள்ள நயங்காண்க. அவற்றை எண்ணுக, ஓர்க, ஓதுக. எமக்குத் தெரிந்த மட்டும் அவை 27.

புகழ்ச்சி

செய்யுள் 9

சீருயரா, தா னேதரனே, நர தேவகுணாகரனே,
தேசிகனே, நிச வாசகனே, திரி யேகபராபரனே,
ஆரியனே, யறி வாகரனே, கிருபாகரனே, திறனே,
ஆரணனே, பரி பூரணனே, பழுதானதிலாதவனே,
வீரியனே, செக சூரியனே, திருவேத உதாரணனே,
மேலவனே, நல னே, வலனே, கனமேன்மையதானவனே
பாரினிலேமனு வானவனே, பரி வானவனே, தவனே,
பரமண்டலாதி பதி, வஸ்தார தளசேகர,
நிறைகொண்டு லாவிய விஸ்தார சருவேசுர,
பழுதொன்றிலாத கிறிஸ்தேசு நசராதிபனே.

இச் செய்யுளில், 26 திருநாமங்களே (நலனே, வலனே) என்ற 'ஏ' காரங்களில் கூறியவற்றை விரல்விட்டு எண்ணுக.

அருஞ்சொற்பொருள்:

சீருயரா - உயர்ந்த சீர் உடையவனே; தரனே – ஒளி;
பழுதிலாதவன் - இருமுறை பயிலப்பட்டது.

செய்யுள் 10

நிராதர நிராமய வரோதய பரீதய
நிதான ஒரு ஞானபரனே

நிசாதக வலுபாதக சமூலவினையாவது
நிவாரண குணகர தரா
தராதர தராதல தராபதி சராசர
தயாபர சரோருக பதா
சதாநிதம் உன் ஆதரவதேபுரி பராமரி
சரீர அசரீரி வடிவே
பராபர பரேசுர பயோதர சிமாசன
பலோர் பணி விலாச சமுகா
படாரிடு கடாமடம் அடாதுறு பசாசுட
படாமுடி எடாத நடனு
இராச இசலேர்கள் புராதன தவீது குமாரா
குருபரா என்னரசே
ஏகமுதலே சருவ காரணவஸ்து ஆஞ்சுகளே
பரவிய நடனம் ஆடிய திஷ்டாந்தர
யேசு நசராதிபதி ஞான கிறிஸ்து இந்திரனே.

இச்செய்யுளில் 30 திருநாமங்களால் புகழ்ந்து விளிக்கின்றார். பல வடசொற்களுக்கு அவரே பதவுரை கொடுத்துள்ளார்.

பொருள்:

பத்தாம் பதினேராம் செய்யுட்களில் இத்தகு திருநாமங்கள் வடசொற்களாயிருப்பதால் அவற்றிற்குக் கவிஞர் தாமே பதவுரை கொடுத்துள்ளார்.

அருஞ்சொற்பொருள்:

நிராதர - ஆதாரமற்ற, நிராமய - நோயின்மை; வரோதய - வரமுடைய; பரீதய - பரிவுடைய தயவு; நிதான - நேர்மையுடைய ஒரு ஞானபரனே - ஒப்பாருமிக்காருமில்லாத குருபரனே; நிகாத வலுபாதக - வஞ்சக, வலிய பாதகம்; சமூல வினையாவதும் - வேரோடு பற்றிய தீவினையாவதும்; நிவாரண - நீக்கிய;

(வஞ்சகமும் வரியதுமானதும், வேரோடு பற்றிக்கொண்ட தீவினை யாவற்றையும் நீக்கியவனே.)

குணகரதரா - குணம் வசிக்கும் மலையே; தராதர - மலையே, தராதல - பூமி; தரா=தரை (terra ல); தராபதி - land-lord; இராசா; சராசர-சரம்+அசரம்; சராசர தயாபர=நடையுற்றவை கட்கும் நடையற்றவைகட்கும் தயாபரராகிய கர்த்தாவே - சர்வ ஜீவ தயாபரர்; சரோருகபத - தாமரைப் பாதனே; சதாநித முன்=எப்போதும் உன்; ஆதரவதே புரி - அடைக்கலங்கொடு; பராமரி - காப்பாற்று; சரீரி அசரீரி - சரீரமுற்ற, சரீரமற்ற வடிவே;

பராபர - வானம் பூமியையுடைய; பரேசுர - பரத்துக்கு எசமான்னிய; பயோதர - மேகம்; சிம்மாசன - மேக சிம்மாசனத்தில் வீற்றிருப்பவரே; பலோர் பணி - பல்லோராலும் பணியப்பட்ட விலாச சமுகா - அகண்ட விலாச கூட்டத்தானே; படார் இடு - துன்பம் செய்யப்பட்ட; கடா மடம் - மிருகத்துவமான மூடத்தனம்; அடாது - நெருங்காது; உறு பசாசுட பெரும் பிசாசுட; படாமுடி - படமெடுக்கும் தலை (நல்லபாம்பின் தலை); எடாத நடனு - எடாதபடி நடனஞ் செய்கிறவரே;

இராச இசரேலர்கள் - இஸ்ரவேலர்களின் அரச பரம்பரையில்; புராதன தவீது குமரா - பழங்காலத்துத் தாவீதரச குமாரா; குருபரா - ராஜ குருவே, தெய்வ குருவே; என் அரசே; ஏகமுதலே - ஒரு தனிமுதலே; சருவகாரண வஸ்து - எல்லாவற்றிற்கும் முதற் காரணமான வஸ்துவே; ஆஞ்சுகளே பரவி நடனம் ஆடிய - வான தூதர்கள் போற்றி ஆடிய; திருஷ்டாந்தர - யேசு நசரை அதிபதி ஞான கிறிஸ்தேந்திரனே.

செய்யுள் 11

சொல்லால் உரையினுல் அறிவினுல் உணரொணு வலு
சுதா சித சதாசிவ பிதா
சுவாபித குணுதீத சினேகித மனஆயுத
சொரூபித விஞ்ஞத உன்னதா
நிலாவிய பராவெளி வியோம விரிவானது
நெடாசல உடு ஆதிக வெய்யோன்
நிசாகரன் உலாவிய கிரகம் எண்ணிலாதது
நிகேதன சராசரம் எல்லாம்
பலாவித பலாமுக பலாநெறிகளே செய்து
பலஊழி பலனே தருதயா
பரா குருபரா திருநரா ஒருதரரு என
பூராமுகம் அனுதி குமரா
வலா உருவலா பிசகிலா இசரலா மகதலா
மரி சலாமிடு அசலா.

வகுத்து அருள்தங்கும் வேதமார்க்கத்து ஏற்பாட்டுப் பெட்டியே
நவத்திருச்சங்க நீடு தீர்க்கந்தேட்டு ஈட்டுக்கட்டி
மகத்துவச் சிங்கமான வாத்தைப்பாட்டு ஆட்டுக்குட்டி.

பொருள்:

முதல் பத்துப் பாடல்களில், ஒரு நாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாதார்க்கு ஆயிரம் திருநாமம் பாடுவோம் என்ற மூதுரையை நினைத்துப் பாடிய நம் கவிஞர்க்குப் பிறிதோர் உரையும் மனத்திற்

பட்டதோ என்னவோ, 'ஆயிரம் நாமம் உள்ள ஆதிசேடனாலும் ஆண்டவனைத் துதிக்க ஒண்ணாது' என்றதும் மனத்தில்கொண்டோ என்னவோ,

'சொல்லால் உரையினால் அறிவினால் உணர ஒண்ணா' என்று இச் செய்யுளைத் தொடங்கிப் பலப்பலத் திருநாமங்களைக் கூறித் தம் ஆண்டவனைப் புகழ்ந்து தாமும் மகிழ்கின்றார் பக்தர் பெருமான். இத் திருநாமங்களின் நுட்பதிட்பம் அறிய இயலாதவர்களை அன்போடு நினைந்து அவற்றிற்குப் பதவுரையும் தாமே அருளியுள்ளார்.

சொலால் உரையினால் அறிவால் உணரொணா வலு - வார்த்தையால் வியாக்கியானத்தினால் அறிவினால்: அறியக்கூடாத வலிய; சுதாசித - சுயம்பான ஞானம், சதாசிவ பிதா - என்றுமுள்ள நன்மைப் பிதா, சுவாபிதா - சுபாவ உரிமையுள்ள, குணாதீத - அதீத குண முடைய, சினேகித - சினேகமாகிய, மனாயுத - மன ஆயுத - மனத்தின் கருவியான, சொரூபித - பரம வடிவான, விஞ்ஞான உனதா - மகத்துவமாய் உயர்ந்தோனே, நிலாவிய - ஒளி செய்யப்பட்ட, பராவெளி - பரமண்டல வெளிப் பிரகாரம், வியோம - விரிவானதும்=ஆகாச விரிவும், நெடாசல - நெடியமலை, உடாதிகள் - உடு=நட்சத்திரம் முதலியவைகள், வெயோன் - வெய்யோன்=சூரியன், நிராகரனுலாவிய - சந்திரன் உலாவிய, கிரேக மெணிலாததும் - எண்ணிமுடியாத கிரகங்களும், நிகேதன - வீடுகளும், சராசரமெலாம் - நடையுற்ற நடையற்ற யாவும்.—இத்தோடு கவிஞர் உரை முடிகின்றது.

பலவித, பலமுக, பலவழிகள் செய்து, பல ஊழிகள் பலன் தருகின்ற தயா பரா, குருபரா, திருநரா, ஒருத்தரா, பராபர முகம், உடைய அஞ்சுதி குமரா, வல்லவா, உருவில்லா, பிசகில்லா, இசரேலா, மகதலாமரி 'சலாம்' இட, சலாம்!

சலாம் - திசைச் சொல்.

இவற்றிற்குப்பின் வரும் ஈற்றடிகளின் ஒவ்வோர் ஈற்றுச்சீரும் 'பெட்டி', 'கட்டி', 'குட்டி' என முடிகின்றன.

வகுத்து அருள்தங்கும் வேத மார்க்கத்தேற்
பாட்டுப் பெட்டி;
திருமறையின் தேறலாய பாட்டுப் பெட்டி;
நவத்திருச் சங்கம் நீடு தீர்க்கம் தேட்டு
ஈட்டுக் கட்டி;
நவத்திருச் சபைகளின் நீண்ட தீர்க்கமான இனிய
சர்க்கரைக் கட்டி;

மகத்துவச் சிங்கமான வார்த்தைப் பாட்டு
ஆட்டுக்குட்டி;
பெரிய சிங்கமானவரின் வாக்குறுதிப்படி வந்த
ஆட்டுக்குட்டியே

என்று சொல்லி யேசுவைப் புகழ்ந்தாரவர்.

இச் செய்யுள் உரையாசிரியர்க்கும் வாசகர்க்கும் திகைப்பையும் வாய்ப்பையும் கொடுக்கிறது.

1. திகைப்பு

இச் செய்யுளின் ஈற்றடிகள் மூன்றும் வருவன காண்க:

வகுத்தருள் தங்கும் வேத மார்க்கத்தேற் பாட்டுப் பெட்டியே,
நவத்திருச் சங்கநீடு தீர்க்கந் தேட்டுக் கட்டி,
மகத்துவச் சிங்கமான வார்த்தைப் பாட்டு ஆட்டுக்குட்டி.

இம் மூன்றடிகளின் சந்தம், எதுகை, மோனைகள் முதல் ஆறு அடிகளோடு ஒன்றுபடவில்லை. இவ் அடிகள் இப் பாடலின் ஏனைய 12 பாடல்களோடும் இணையவில்லை.

எனவே, இவற்றை இடைச்செருகல் எனக் குறிப்பிடுவது மிகையாகாது.

2. வாய்ப்பு

இச் செய்யுளின் முதல் அடி, தாயுமானவடிகள் பாடிய 'ஆசையெனும்' பாடல் பகுதி, செய்யுள் 24-இன் முதலடியைத் தழுவி நிற்கின்றது.

வேதநாயகர் செய்யுள்:
'சொல்லால் உரையினுல் அறிவினுல் உணர
வொண்ணுவலு
சதாசித சதாசிவ பிதா . . .'
தாயுமானவர் செய்யுள்:
'சொல்லாலும் பொருளாலும் அளவையாலும்
தொடரவொண்ணு அருள் நெறியைத் தொடர்ந்து
நாடி . . .'

என வந்துள்ளன. இவற்றின் முதற் பகுதிகள் ஒப்ப ஓடுவதைக் காண்க.

சுதா
சித
சதா சிவபிதா
சுவாபித
குணுதித

நெடாசல
உடு ஆதிக
வெய்யோன்

சினேகித
மனுயுத
சொரூபித
வினுத
உனதா
நிலாவிய பராவெளி வியோம
விரிவானது
நிகேதன சராசரமெலாம்
பலா வித
பலா முக
பலா நெறிகளே செய்து
பலா ஊழி பலனே தரு
நிசாகரன் உலாவிய கிரேகம்
எணிலாதது
தயா பரா
குரு பரா
திரு நரா
ஒரு தராவென
பர முகம் அனுதி குமரா

வலா
உரு வலா
பிச கிலா
இச றலா
மக தலா
மரி சலா
மிட சலா . . .

'மகதலாமரி(யம்மை) சலாம் இட சலா'

என்ற சொற்களோடு கவி வேதநாயகர் பாடிய இச்செய்யுள் (11) முடிகின்றது அச்சிட்ட நூலில்.

அடுத்துள்ள மூன்று வரிகளும் வேதநாயகரே பாடியிருந்தாலும், அவற்றின் இடம் இச்செய்யுளின் இறுதியடிகளாயிருக்க மாட்டா.

அவர் எழுதிய பதவுரை 'நிகேதன சரா சரமெலாம்' என்பன வற்றோடு C.L.S. அச்சிட்ட நூலில் முடிகிறது. கவிஞர் எழுதிய மூலமும் உரையும் அன்னர்க்குக் கிட்டவில்லை என்பது காரணமாயிருக்கலாம்.

இத்தகைய திகைப்பு, மலைப்பு, தவிப்புகளுக்கிடையே ஒரு வியப்புத் தோன்றியது. இத்தோற்றத்திற்குக் காரணம், டாக்டர் உ. வே. சாமிநாதையர். அவர் சொல்லிய விளக்கமே எமக்கு வியப்பாயிற்று. அவர் சொல்லியதென்ன?

'பழைய நூலாசிரியர்கள் ஐந்திணைக்குமுரிய பண்களின் முறை தவறுமல் தம்முடைய நூல்களில் அமைத்துக்கொண்டே செல்வார் கள்; கூர்ந்து பார்ப்பின் விளங்கும்.

'இப்பண்களாலாகிய பாட்டுக்கள் (கீர்த்தனங்கள்), உருக்கள், வரிகள் முதலிய பெயர்களால் வழங்கும்; அவை தாள அளவிற்

கேற்ற குறிலும் நெடிலும், இசையின் வலிவு முதலிய ஓசைக்கேற்ற ஓசையுள்ள எழுத்துக்களும் அமைந்த தமிழ்ச் சொற்களால் இயற்றப்பட்டிருத்தலோடு, வேறு பாஷைக்குரிய சொற்களும் இடத்திற்கேற்றவாறு அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும்; இங்ஙனமே விதிகளும் இலக்கியங்களுமுள்ளன (சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்—பக். 42).

இந்த அமைப்பு முறையை வைத்து கவி வேதநாயகர் பாடிய இச்செய்யுளை அலசிப் பார்ப்போம்:

Let us analyse the structure of this stanza of poet Vedanayager with the help of this definition.

1. 'தாள அளவிற்கேற்ற குறிலும் நெடிலும்.'

சுதா என்ற நெடிலும், சித என்ற குறிலும் 'குணிதித' என்ற நெடிலைக் 'குணித்த' என்ற குறிலாக்கினர். 'வெய்யோன்' என்ற குறிலை 'வேயோன்' என்ற நெடிலாக்கினர்.

2. இசையின் வலிவு முதலிய ஓசைக்கேற்ற ஓசையுள்ள எழுத்துக்கள்:

'பலா வித, பலா முக, பலா நெறிகள்'

3. 'வேறு பாஷைக்குரிய சொற்கள்':

'. . . இசறலா மகத
லா மரி சலாமிட சலா'

இசறலா - மகதலா மரி — எபிரேய மொழி; சலாமிட-சலாம், shalom — எபிரெய மொழி = சாந்தி, சமாதானம்.

இவை தவிர வேறு கூறுகளும் இவ்வமைப்புக்குட்பட்டுள்ளன.

1. முதலிரண்டடிகளில், 'த', 'தா' என்ற எழுத்துக்கள் கொண்ட சீர்கள் பத்தை மேலே காட்டியுள்ளோம். இவையெலாம் எழுத்து விளையாடல் மட்டுமன்று; இறையியல் கருத்துக்களைத் திட்பத்தோடு செறித்துவைத்துள்ளார். They are not merely a word-play but cover much theological thought in a skillfully structured lyrical form.

'பாடுபடும் யேசு நாயகனை'ப் பாடலுற்றார். அவர் பட்ட பாடுகள் எல்லாம் அவர் நமக்காகச் செய்த 'தவம்' (Penance, penitential Acts) ஆகும். 'படும்' என்றதை வினைத் தொகையாகக் கொண்டு, பட்ட, படுகின்ற, படப்போகின்ற பாடுகளையும் நினைவிற்கொண்டு பாடினர் எனலுமாம்.

2. எட்டாம் நாள், விருத்தசேதனமும் 'இயேசு' என்ற திருப்பெயரும் பெற்று, 12,30-ஆண்டுகளின் நிகழ்ச்சிகளையும் கூறி,

ஆதி மானிடரின் - ஆதாம் ஏவாளால் உண்டாகிய விளைப்பயன் தீர, சகல தீவினையும் மாறிடப் பாடுபடும் யேசு இரட்சகரின் சரித்திராதிந்தத்தை சரித்திர வரிசையிற் பாடலுற்றார். இதுதான் மீட்பின் வரலாறு (History of Salvation).

3. இது 'கதை'யா, 'காதை'யா, 'காவிய'மா?

'கதை' என்பது பொய்ப் பொருள் புணர்த்துக் கூறுவது; கதையை உடையது 'காதை', 'கதை' எனக்கருதல் செய்யான், மெய் எனத் தானுங்கொண்டான் (சீவக சிந்தாமணி 2144), இது வோர் நாடகக் காப்பியம் என்க (அடியார்க்கு நல்லார் — உரைப் பாயிரம்).

This is not fiction; it is an historical fact. It is not a Myth; but a Myth becomes a fact.

எனவே, இச்செய்யுள் இப்பதிகத்துக்கோர் முகப்பு என்க.

செய்யுள் 12

விடாதுலகு அடாத பிரகாரம் ஒழியாது எனை
விரோதம் இடுதே, அலகையோ
விகாத மிகவே செய்யுது, ஐயோ, உடல் பொல்லாதது
விசார நினைவோ கவலையோ
படாமிடிமையோ துரிதமோ கொடுமையோ வரு
பவ ஆசை ஒரு கோடி திரளோ
பயோததி கொள்ளா வினைகளோ—என் செய்வேன் இரு
பதா சமையம் ஆதரி ஐயா
கெடாது அடிமை மீது உன் விழிபார் கருணைகூர் அடு
கிலேசம் அறவே அருகில் வா
கிரிடாதிப சுயாதிப நியாயாதிபதி அதிப
கிருபாநதி சதாபதி சுதா
நடாதிப, தாவீது சல மோனடி பராவிய
நமோ பிரமமே அபையமே ஞானதீபத் துங்க சொரூபத்து
ஆதி பிதா மகிமைப் பிரகாச
ரான வேதத் தங்கம் உலாசத்து
ஒது பகாகிருபைக் கதிநேச
ஞாய நீதத் தெங்கள் சுவாபப்
பாலகனுய் வரு மெய்ச் சருவேசுரனே.

இச்செய்யுளில் வருகின்ற வடசொற்கள் நம்மை மலைக்கச் செய்கின்றன. பொறுமையோடு இதன் பொருளைக் காண்போம்.

பொருள்:

முதலிரண்டு அடிகளில், உலகம், பிசாசு (அலகை), உடல் என்ற முச்சத்துருக்கள் குறிப்பிடப்பட்டன.

விடாது உலகு அடாத பிரகாரம் ஒழியாது எனை விரோதம் இடுதே - உலகம் — ஆகு பெயராக உலக மக்கள். உலகம் என்னை விடாமல் தகாதமுறையில் ஓயாமல் ஒழியாமல் பகைக்கிறதே: அலகையோ - பிசாசோ மிகவும் சோதிக்கிறது; உடல் பொல்லாதது; படா மிடிமை - மிகுந்த வறுமை; துரிதம் - விரைவு; பாவ ஆசை ஒரு கோடித் திரள். பயோததி - கடல்; கடல்கொள்ளாத வினைகள்; இருபதா - இரு கால்களை உடையவனே, இச்சமயம் என்னைக் காப்பாற்று; உன் அடிமை கெட்டுப் போகாமல் உன் விழியால் அருள்கூர்; கிலேசம் - துக்கம். துக்கம் நீங்க என்னருகில் வா; ஆதிப - அதிபதியே. கீர்டம், சுயம், நியாயம், தயை, கிருபை, சதாபதி - நித்திய ராஜா; சுதா – சுதனே, மகனே. நடாதிப – நடனம் செய்பவனே. தாவீது சாலொமோன் உன்னடி போற்றிய பிரமமே, உனக்கு அபயமிடுகிறேன். எங்கள் ரூபமும் சுவாபமும் எடுத்துப் பாலகனுய்ப் பிறந்துவரும் மெய்ச் சருவேசுரனே.

பெத்தலேயிற் பிறந்தவர் யார்? மெய்யான சருவ ஐச்வரிய முள்ளவரே அவர். இன்னஞ் சொல்லுகிறேன் கேளுங்கள். அவர் ஞானச் சுடர் விளக்கு; ஆதி பிதா, தூய சொரூபமுடையவர்; மகிமைப் பிரகாசர்; வேதமாகிய தங்கம் ஒதும் மகா கிருபை, அதிக நேசம், நீதி நியாயம் உடையவர். இப்போது எங்கள் சுவாபம் உள்ள பாலகனாக வருகிற மெய்யான சருவேசுரனேயல்லாது வேறு யாருமில்லை என்றார்.

பரமார்த்த மேன்மையுள்ளவர் எங்கள் ரூபங்கொண்ட அவதார புருடன் என்றறிக.

'கிறிஸ்து பிறப்பின் பேரிலே' என்ற இப்பாடலின் முதல் எட்டுச் செய்யுட்கள் கிறிஸ்துவின் மனுடாவதாரத்தைச் சந்த விருத்தப் பாவில் பாடிய புலவர்க்கு மகிழ்ச்சி பொங்கிய காரணத்தால், 9,10,11,12,13 ஆகிய இவ்விறுதிப் பாக்களைப் 'புகழ்ச்சி' எனப் பெயரிட்டுப் பாடி மகிழ்கின்றார் கவிஞர் பெருமான்.

செய்யுள் 13

கரிசித்த கிருபைக்கு முடிவு அற்ற அளவற்ற
கருணைக்கண் உள கர்த்தனே
கதிவைத்த அதிசித்திர மகமைத் தரும் நித்திய
கனமிக்க வளர் வஸ்துவே,

தெரிசித்த கவடற்ற இடையர்க் கருள் கொடுத்த
திறனப்பிர பலசித்தனே,
செகமெச்ச ஒரு சிற்றுருவெடுத்து அடவியில்
சிறிய கொட்டில் வரும் அத்தனே,

வரிசித்த பர தத்துவ சுயதற்பர மகத்துவ
வர சத்துவ ஒரு சத்தியனே,
வழிகெட்ட அடிமைக்குன் அருள் சற்றெனும் வகுத்து
வளமைப்பட நடத்துவாய்;

பரிசுத்த சொரூபத்து நிலை முக்கிய வடிவொத்த
பழுதற் றுயர் திரித்துவனே;
பந்தச் சந்த விருத்தம் பாடிய
வேதநாயக வாணனின் மேலுயர்

அன்புச் சிந்தை மிகுத்துஞ் சீர்தரும்
யேசுநாதகிரு பா நதியாகிய
பண்பிட்டு உம்பர் வழுத்துந் தேவ
சுதாகரா மனுவேலரசாதிபனே.

(சுதாகரா - சுதனே)

பொருள்:

கரிசனையுள்ள கிருபைக்கு முடிவு அளவு அற்ற கருணைக்கண் உள்ள கர்த்தனே, என்னைப் பரகதியில் வைத்த அதிக சித்திர மகிமையும் தருமமும் நித்திய கனமும் மிக்க வளர் வஸ்துவே,

கபடமற்ற இடையர்க்குத் தரிசிக்க அருள் கொடுத்த திறமை யுள்ள பிரபலச் சித்தம் உள்ளவனே,

உலகம் மெச்ச ஒப்பற்ற ஒரு சிறிய உருவைக் குழந்தையாக எடுத்து, காட்டில் சிறிய குடிசையில் பிறந்த அத்தனே,

வரிசித்த, பரதத்துவ, சுயுதற்பர மகத்துவ, ஞான வரத்தினால் பலப்பட்ட தன்னிகரில்லாத ஒரு சத்தியனே,

வழிகெட்டுப்போன அடிமையாகிய எனக்கு உன் அருளைச் சற்றேனும் வகுத்து நான் வளமைப்பட என்னை நடத்துக;

பரிசுத்த சொரூப நிலையில் பிதாவின் வடிவொத்த, பழுதில் லாது உயர்ந்த திரித்துவனே,

பந்தச் சந்தம் பாடிய வேதநாயக வாணனின்மேல் உயர்ந்த அன்புச் சிந்தை மிகுந்த சீர்தரும் யேசுநாதா, கிருபாநதியாகிய பண்பு காரணமாக வானவர் வழுத்தும் தேவ சுதனே, மனுவேல் அரசு ஆதிபனே.

செ மெச்ச - 'செகமெச்ச' என விருத்தல் வேண்டும்.
பந்தச் சந்தம் - தொடர்பான சந்த விருத்தம்.
தேவ சுதாகரா - தேவ சுதனே.

24. கிறிஸ்துவின் சரித்திராதிந்தம்

கழிநெடில்

ஜெபமாலையில் மிக நீண்ட இப்பதிகம் 28 செய்யுட்கள் கொண்டுள்ளது. சரித்திர ஆதியும் அந்தமும் என்ற பெயர்க்கு ஏற்ப, இதன் முதற் செய்யுளும் கடைசிச் செய்யுளும் - 28 - ஒன்றை யொன்று சொல்லிலும் பொருளிலும் இணைந்து பூமாலையின் இரு முனைகளும் முடிச்சுப் போட்டாற்போல் முடிகின்றன.

'ஆதி மானிடர்', 'ஆதிமொழி' எனத் தொடங்கி, 'எல்லை யில்லாத ம்கத்துவ நவப் புது எருசலேம் பட்டணத்து எழுந்து' என்றும், 'ஊழியும் வேதநாயகன் பாட இன்புறும் யேசு நாயகனே' என்று முடிகிறது.

முதற் செய்யுளின் ஈற்றடி 'சகல தீவினையும் மாறிடப் பாடு படும் தவ யேசு நாயகனே' என்று முடிகிறது.

'பாடுபடும் யேசுநாயகன்'—அவலச்சுவையில் தொடங்கி, இன்புறும் யேசு நாயகனை நவப் புது எருசலேமில் என்றென்றும் வாழ்ந்து வருகின்றார் எனச் சொல்லிப் பதிகத்தை இன்பச் சுவை யில் (பேரின்பம் - ஆனந்தாதீதம் = இன்பத்தின் உச்சஸ்தாயியில்) முடித்தார் கவிப்பக்தர்.

செய்யுள் 1

1. திருமறை மீறும் ஆதிமானிடரின் தீவினைதீர அன்று ஆதி
செப்பிய மொழியால் இஸ்திரியிடத்தில்
பரிசுத்த அரூபியால் செனித்துப்,

2. பெருமைசேர் வானோர் நரர் எலாம் வணங்கப்
பெத்தலேம் நகரிடைப் பிறந்து,
பின்பு எட்டாம்நாள் விருத்த சேதனமும்
இரட்சகர் நாமமும் பெற்று,

3. வரு பனிரெண்டாம் வயதினில் யூத
மார்களே வார்த்தை யால் மடக்கி,
வளரும் மூப்பதனில் தீட்சையும் வாங்கி,
வலிய சோதனை எலாம் செயித்துத்,

4. தரும சத்தியத்தை நடந்து போதித்துச்,
சகல தீவினையும் மாறிடப் பாடு
படும்தவ யேசுநாயகனே.

பொருள்:

1. 'திருமறை' என்ற மங்கலச் சொல்லோடு இப்பதிகத்தைத் தொடங்கியவர், திருமறையாம் விவிலியத்தைத் தமக்கு முதனூலாகவும், இப்பதிகமும், ஆம், இச் செபமாலையும் வழி நூலாகவும் பாடியருளினார் வேதநாயகர்.

2. முதலடியில், ஆதியாகமத்தின் முதல் மூன்று அதிகாரங்களையும் நற்செய்தி நூலார் யோவான் முதலதிகாரத்தையும் மனத்திற்கொண்டு, 'ஆதி செப்பிய மொழியால்' என்றார் (ஆதி. 3:15).

3. இத்தகுத் தொடக்கத்திலிருந்து, அதாவது பரத்துவ நிலையிலிருந்து நேரே அவதாரநிலைக்குப் பாய்ந்து சென்று, இடைப் பட்ட நிகழ்ச்சிகளைச் சொல்லாது விடுத்து, பெத்லகேமில் கன்னி மரியாளிடத்தில் பிறந்ததிலிருந்து, பாடுபடும் தவயேசு நாயகனைப் பாடி முடிகிறது.

4. ஆதிந்தம் - ஆதி + அந்தம் - தொடக்க முதல் முடிவு மட்டும் உள்ள கிறிஸ்துவின் வாழ்க்கைச் சரிதம்.

முதற்பாட்டில் 'ஆதி' என்ற சொல்லை இருமுறை பயன் படுத்தி இறுதிப்பாட்டில் - எண் 28 - 'நவப்புது எருசலேம்' எனக் கூறி இப்பதிகத்தை முடித்துள்ளார்.

கிறிஸ்துவின் சரிதை அவர் பெத்லகேமில் பிறந்ததோடு தொடங்காமல் 'ஆதியில் . . . தொடங்குகிறது என்றும், அவர் வாழ்க்கை அவர் உயிர்விட்டதோடு முடியாமல், அன்றும் இன்றும் என்றும் உள்ளவர்' என்பதை வலியுறுத்துவதே வேதநாயகரது இறையியல் கொள்கை என்க.

ஆயத்தம்

செய்யுள் 2

நீடு உறும் தவத்தின் உருவதாயெழுந்த
நித்தியன், மனுடர் பாதகத்தால்
நெடுங் கொலைப்படுதற்கு ஆயத்தப்படுத்தி
நிச்சய முழுமனதுடனே

தேடு பெத்தானி யாவினிற் குஷ்ட
ரோகச் சீமோன் அகத்திருக்கச்
சேயிழை ஒருத்தி விலையுயர் பரணித்
தயிலத்தைச் சிரத்தின்மேல் வார்த்துப்

பீடுடன் அபிஷே கித்தபின் சீடர்
பெரும்பதம் விளக்கி நின் கலீயால்
பின்னையுந் துடைத்துஉன் மனதினிலிருந்த
பிரியமும் தாழ்மையும் உணர்த்தி

வீடுறும் எருச லேமினில் சத்திர
விடுதியில் பஸ்குவா ஆட்டை
விநயமுடன் அப்போஸ்தலருடன் புசித்த
விமலனே, யேசு நாயகனே.

பொருள்:

மேற்பாட்டில், 'பாடுபடும் தவயேசு' என்றதை விளக்குமாறு 'நீடுறும் தவத்தின் உருவதாய் எழுந்த நித்தியன்' எனச்சொல்லி இப்பாடலைத் தொடங்கினர். 'மன்னுருவான இயேசு, நீண்ட தவத்தின் உருவெடுத்த நித்தியன்' எனப்பட்டார். ஆதி மானிடரின் தீவினை தீரவேண்டுமென்றே திட்டமிட்ட காலந்தொடங்கி அவர் உயிர்விட்ட காலம் மட்டும் செய்த தவம் என்றார். எனவே 'நித்தியன்' என்றார்.

இப்பாடலின் பொருளை அறிவதற்கு முதலாலின் வசனத்தை அறிதல் வேண்டும் (மத்தேயு 26:6-13).

ஒப்புநோக்கு:

'கொலைப்படுதற்கு ஆயத்தப்படுத்தி ''—'' இவள் இத்தைலத்தை என் உடலின்மேல் ஊற்றின செய்கை என்னை அடக்கம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தும் செய்கையாகும்' என்று நிச்சயமுழுமனதுடனே யேசு சொல்லிய சொற்களாகும். பெத்தானியாவில் தொழுநோயாளியான சீமோன் வீட்டில் யேசு இருக்கிறார் என்பதைத் தேடிக் கண்டுபிடித்து, ஒரு பெண் விலையுயர்ந்த நறுமணத் தைலமுள்ள சலவைக்கல் குப்பி ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து அவர் தலைமீது ஊற்றிப் பெருமையுடன் அபிஷேகம் செய்தாள்.

அதற்குப் பின்னர், யேசு தம் சீடர்களைக் கழுவித் தாம் இடையிற்கட்டி துண்டினால் துடைத்தார் (யோவான் 13:1-10). எப்போதுமே அன்புகொண்டிருந்தவர் சீஷரிடம் தாம் கொண்டிருந்த அன்பின் பூரணத்தன்மையையும் தாழ்மையையும் அவர்களுக்கு விளக்கிக் காட்டினர் (யோவான் 13:1).

மீட்பைத் தரும் எருசலேமில் சத்திர விடுதியில், பஷா ஆடு என்னும் பஸ்குவா ஆட்டுக்குட்டியை யூதர் முறைப்படி அப்போஸ்தலருடன் அருந்திய விமலனே, யேசு நாயகனே என்றார்.

விமலனே என்ற அடைமொழி ஈண்டு மிகப் பொருள் பொதிந்த ஒன்று. மேலே 'நீடுறுந்தவத்தின் உருவத்தின் உருவ தாய் எழுந்த நித்தியன்' என்றும், 'பீடுடன்' என்றும், 'பெரும் பதம்' என்றும், 'வீடுறும்' என்றும் முதனூலில் இல்லாத சொற் களைப் பயன்படுத்தியவர், இறுதியில் 'விமலனே' என்றார். வி+மலன்—மலமற்றவனே, மாசு மறுவு அற்றவனே—பஷா ஆட்டுக்குட்டி பழுதற்றதாயிருத்தல் வேண்டும்.

மாசற்றவரே மக்களின் மாசைப் போக்குதல் கூடும்.

நற்கருணை: திருவிருந்தை நிறுவியது

செய்யுள் 3

நம்முட நாதர் யேசு தாம் காட்டிக்கொடுபட்ட அன்றிராத்திரியில்
நயத்துடன் அப்பத் தினைஎடுத்தாசீர்வதித்து நற்கரத்தினால் பிட்டுத்
தம்முட சீஷாக்களுக்கதைக் கொடுத்துத்தருமிதை வாங்கியிங் கருந்தும்
தானிது உங்களுக்காய்க் கொடுபடுமெனது சரீரம் என்றனை நினைப்பதற்காய்ச்
செம்மையாய்ச் செயுமென் றறைந்து அவ்வாறு டனே
திரும்பவும் பாத்திர மெடுத்துத்
தேவனைத்துதித்து அங்கவர்கள் கைக்கொடுத்துச்
சேர்ந்து இதை அனைவரும் குடியும்
உண்மையாய் உமது பாவமது அகல
உமக்கெனச் சிந்தின எனது
உதிரம் என்றனைநீர் நினைந்திடச் செயும் என்று
உரைத்தவா, யேசு நாயகனே.

பொருள் — தெளிவு.

திருஅப்போசனக் கட்டளையை இத்தோடு ஒப்பிட்டு, இவற்றிலுள்ள பதப்பிரயோக வேறுபாடுகளைக் கண்டுகொள்க. 2-ம் நம்முட - நம்முடைய; தம்முட - நம்முடைய; தானிது - இது தான்; சேர்ந்திதை - அனைவரும் சேர்ந்து இதைக்குடியும்; உதிரம் - இரத்தம்.

ஆத்துமப்பாடு (மத்தேயு 27:69-75)

செய்யுள் 4

காவினிற் புரிந்த அருங்கொடு பவத்தாற்
காவினில் வியாழமன்றிரவில்
கருத்தனும் பன்னோர் சீடரும் எழுந்து
கற்பனை அவர்களுக் கருளித்

தான் அங்கிருந்து செபஞ்செயும் எனவே
சாற்றிய பின்னர் வெற்பனேயும்
தரும யாக்கோபு யோவானேயுங் கூட்டித்
தமது சஞ்சலத்தினுல் தயங்கி
மேவிய துயரால் வியாகுலம் அடைந்து
மிகத்திகைப் பாக மெய் தளர்ந்து
மீண்டு அவர்க்கப்பால் கல்லெறி தூரத்
தினில் முழங் காலினில் வீழ்ந்து
தேவனே மூன்று முறை இறைஞ்சிடவும்
திரு உடல் உதிரவேர்வையதாய்த்
திகழும் ஆற்றுமப்பாட் டவஸ்தை பட்டு ஒடுங்கச்
சித்தமாம் யேசு நாயகனே.

பொருள்:

ஆதியில் சிங்கார வனத்தில் ஆதாம் ஏவாள் செய்த அரிய கொடிய பாவத்தால், இன்று வியாழனன்று மற்றோர் வனத்தில், இரவில், ஆண்டவரும் பதினெரு சீடரும் எழுந்து, அவர்களுக்குக் கட்டளை கொடுத்து, தனியே அங்கிருந்து செபம் செய்யும் என்று சொல்லிய பின்னர் பேதுருவையும் யாக்கோபு, யோவானேயும் தமது துயரத்தால் கூட்டி, துயரம், வியாகுலம், திகைப்பு அடைந்து, உடல் தளர்ந்து, மீண்டும் ஓர் கல்லெறி தூரம் அவர்க் கப்பால் போய், முழங்காலில் வீழ்ந்து, கடவுளை மும்முறை இறைஞ்சி, திருவுடல் இரத்த வியர்வை சிந்தி, ஆத்துமப்பாடு, அவஸ்தைபட்டு ஒடுங்கச் சித்தங்கொண்ட யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

தானியங்கிருந்து - சீர் காரணமாக, தனி என்பது தான் எனப் பட்டது; வெற்பன் - மலையன்; ஆற்றுமப்பாடு - ஆத்துமப்பாடு.

பிடிபட்டது (மத்தேயு 26:47-56)

செய்யுள் 5

பன்னிருவரில் ஒருவனும் யூதாப்
பாவியும் சேர்வையின் திரளும்
பரிசேயர்வேத பாரகர் மூப்பர்
பகையின் ஆசாரியர் சனமும்
மின்னிய தீபம் கத்தி ஆயுதங்கள்
தடியுடன் திரண்டெழுந்து அடர்ந்து
விமலனே முத்தி இடுங்குறிப்படியே
மேல்விழுந்து அவர்தனைப் பிடித்து

மன்னிய கயிற்றால் இருகரம் பற்றி
வரிந்து இறுகப் பிணித்துடனே
வஞ்சகன் அன்னு இடத்தினிற் கொடுபோய்
மறுபடி யூதர் சங்கத்தில்
உன்னிய காய்பா முன்புறப்படுத்தி
ஆடியம் உரைத்து உனை அடித்து அங்கு
ஓர் இரா முழுதும் நிந்தனைப் படுத்த
உவந்தவா, யேசு நாயகனே.

பொருள்:

முத்தி செய்து காட்டிக் கொடுத்த யூதாசு - திரள் கூட்டம் யேசுவைப் பிடித்து, அன்னு, காய்பா, யூதர் சங்கம் முன் நிறுத்தி ஓரிரவு முழுவதும் நிந்தனைப்படுத்தியதை உவந்தவரே, யேசு நாயகனே. ஆடியம் - நிந்தனை.

பேதுருவின் மறுதலிப்பு (மத்தேயு 27:69-75)

செய்யுள் 6

இப்பொழுது எனைநீ பின்செலாய் எனவே
இயம்பிய பராபரன் மகனே
எதிரதாய் மரணம் அணுகினும் உம்மோடு
எய்துவன் என்ற பேதுருவும்

ஒப்புடன் குளிர்காய்ந்து இருக்கையில் ஒருத்தி
ஊன்றி பங் கவன்றனை நோக்கி
ஓய் நசரேத்தூர் யேசுவோடி ருந்தது
உண்டு அவன் சீடன் என்றுரைக்க

அப்பொழுதவன், நான்அல உனின்மொழியும்
அம்மனுஷனையும் ஒன்றறியேன்
ஆணை சத்தியம் என்று இருமுறை சேவல்
கூவுமுன் அடர்ந்து மும்முறையாய்த்

தப்புடன் மறுத்த சீடனைத் திரும்பத்
தயவுடன் நோக்க, அங்கு அவனும்
சாற்றிய மொழியை நினைத்து அழுததற்குத்
தயை செய்த யேசு நாயகனே.

மேற்கூறிய நற்செய்தி நூல் பகுதியைப் படித்தவர் எளிதிற் பொருள் புரிந்துகொள்வர்.

பிரதான ஆச்சாரியன் இல்லத்தில் பட்ட பாடுகள் 7–8
(மத்தேயு 27:56-68)

செய்யுள் 7

மாநிலாதவன் காய் பாவின் முன் மொழிந்த
மாற்றத்தினுல் வெகுண்டு ஒருவன்
மனு மகன்றன்னைக் கன்னத்தில் அறைந்தான்;
மனுச் சுபாவத்தினுல் தளர்ந்தான்

தூறதாய் இருபொய்ச் சாட்சிகள் எழும்பிச்
சுத்தன் மேல் படர் பல பிதற்றிச்
சொல்லவும் கிறிஸ்து மவுனமுற்றிருக்கச்
சோதியின் குமாரனே என்று

சீறியே குருக்கள் கேட்டதற்கு அமலன்
செப்பினபடியும் 'நான் அவர்தான்
திரும்பவும் மேக சிம்மாசனத்தில் எழுந்து
திருநடு இட வரக் காண்பீர்;'

வீறெனப்பகர வஸ்திரங் கிழித்து
வெஞ்சினத்துடன் 'இவன் சாக
விதி, அவன் தேவ தூஷணன்' என்றூர்
மேசியா, யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

தூறதாய் - பழியாக; படர் - குற்றச்சாட்டு.

செய்யுள் 8

அங்கவர் இறையை அசங்கமடித்து
ஆகடியங் கூறப் பண்ணி
அருள்முகத்து உமிழ்ந்து, சிலதியர் முக்காடு
இட்டு மென் முகத்தினில் அறைந்து

பங்கமே படுத்திக் 'கிறிஸ்துவே, உன்னை
அடித்தவனைப் பகர்' என்றே
பகடிகள் பரிகா சங்கள் செய்து ஏசிப்
பல தூஷணங்களும் சொல்லிக்

கங்குல் போய்விடிய ஆரியர் கூடிக்
களரியில் அவர்தனை நிறுத்திக்
'கனம் மிகுங்கிறிஸ்து வோம்'என, 'நீவிர்
கழறியபடி அவர்' என்க

'எங்களுக்கு இனிமேற் சாட்சி வேண்டுவதேன்
இவன் சொல்லக் கேட்டோம்' என்று எழும்பி
இசை வுறக்கட்டிப் பிலாத்து வுக்களித்தார்
எம்பரா யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

அசங்கமடித்து - வெறுத்து அடித்து; ஆகடியம் - பரிகாசம், பகடி; சிலதியர் - சிலர்; களரி - நீதிமன்றம்.

பொருள் — தெளிவு.

யூதாசு நான்றுகொண்டது (மத்தேயு 27:3–10)

செய்யுள் 9

முத்தியாற் காட்டிக் குருவினைக் கொடுத்த
மூடனுங் கொடிய யூதாசு
முதல்வனைக் கட்டிப் பிலாத்தினுக்களித்த
முழு மரணத்தின் தீர்ப்பறிந்து

மெத்தவுந் துயராய் முப்பது வெள்ளிக்
காசினை மீளவுங் கொணர்ந்து
வேதியரிடத்தில் குற்றமிலானை
விட்டதால் பாவஞ்செய்தேன் என்றுன்;

மத்தர்கள் 'அதற்கு எங்களுக்கென நீயே
பார்'என வலிய ஆலயத்தில்
வாங்கின காசை எறிந்துபோய் நான்று
கொண்டபின், மறுத்து அதை எடுத்துச்

செத்த அன்னியரை அடக்கஞ் செய்வதற்காய்த்
தெரிசியாம் எரேமியா எழுதுந்
திட்டமாய்க் குயவன் நிலத்தினைக் கொண்டார்
திவ்விய யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

மத்தர்கள் - யூத மதத்தினர்.

பொருள்:

யேசுவைக் கட்டிப் பிலாத்துவிடம் கொண்டுபோய் அவன் அவருக்கு மரணத்தீர்ப்பளித்தான் என்பதை அறிந்து, முத்தத்தால் குருவினைக் காட்டிக்கொடுத்த மூடனும் கொடியனுமாய யூதாசு . . . என மாற்றியறிக.

'முத்தத்தால் காட்டிக்கொடுத்த யூதாசு' என்பதை 'முத்தியால் காட்டிக் குருவினைக் கொடுத்த யூதாசு' என்றூர் கவி வேத நாயகர். 'நான் யாரை முத்தமிடுகின்றேனே அவர்தான் யேசு' என்பது ஒப்பந்தம். எனவே கவிஞர் இவ்வாறு சொற்களை மாற்றி அமைத்தார் என்பதும் அமையும்.

தற்கால விவிலிய விற்பன்னர் ஆராய்ச்சிகள்

(தீர்க்கதரிசி எரேமியா எழுதிய குயவன் நிலம்.)

இவ்வரலாற்றை அறிந்த ஆதி அடியார்கள் சகரியா 11:12†; எரேமியா 18:2†; 19:1–15ஐ நினைவுக்குக் கொணர்ந்து ஓர் இறையியல் நுட்பத்தை ஓர்ந்தனர்.

நற்செய்தி நூலாசிரியர் மத்தேயு, ப.ஏ. ஆகமங்களைக் குறிப்பிடும்போது, 'வேத வாக்கியம் நிறைவேறுதலுக்காக' இவ்வாறு நடந்ததென்பார்.

தம்மை நல்லறிக்கை செய்யாத சீடருக்கு வரவிருக்கும் தண்டனையையும், தன் பிழை நினைந்திரங்கிய சீடருக்கு வரும் நற்பயனையும் குருவேசுநாதர் முன்னுரைத்திருந்தார். யூதாசு தன் பிழை நினைந்து அழுதான். எனினும் தற்கொலை செய்துகொண்டு அழிந்தான். பேதுருவும் அழுதான். ஆனால் தன் குருவின் திருவாய்மொழியை நம்பினன். குருநாதரின் திருநயன தீட்சை பெற்று மன்னிப்பு பெற்றுப் பாவ நீக்கமும் அருட்பேறும் பெற்று, திருச்சபைக்குத் தூணாகத் திகழ்ந்தான். இது நமக்குக் கலங்கரை விளக்கமாகட்டும்.

பிலாத்துவின் அரண்மனையில் யேசு பட்ட பாடுகளும் சான்ற சத்திய சாட்சியும் (மத்தேயு 27:11–14)

செய்யுள் 10

அந்த ஆரியர்பஸ்க் காவினைத் தீட்டாக்
காப்படி புசிக்க ஆஸ்தானத்து
அணுகிடாதிருக்க எம்முறைப் பாட்டை
அறையும் மனுடனுக் கென்றே

பொந்தியுப் பிலாத்தங்கு அடர்ந்து கேட்டதற்குப்
பூரியர், 'தீங்கு செய்யாவிட்டால்
போர்ந்து உனக்களியேம்' என்றிட 'உங்கள்
போதகப்படி நடுவிடும்' என்று

உந்திடக் 'கொல்வது எமக்கடாது என்றே
ஒருவன்மேல் முறைபடத் தொடங்கி
ஒருங்குடன் சனத்தை இரண்டகம் பண்ண
உசுப்பி ராயருக்கிது அடுத்தான்

விந்தை' என்றுரைக்கப் பிலாத்து உன்னை அழைத்து
'வேந்தனே யூதருக்கு' என்க
விரைந்து இதுஉன் சொல்லோ, மற்றவர் சொல்லோ எனவே
வினவிய யேசு நாயகனே.

(யோவான் 18:28–38)

செய்யுள் 11

'யூதனேநான், உன்சனம் எனக்களித்தார்,
ஒதுநீ செய்தது ஏது' என்க
உலகின் ராச்சியம்என் னுடையதானால் நான்
யூதர் கைப்படாது என் சேவகர்கள்

'மோதுவார் போரிடுவார், ஆனதால் உலகின்
ராச்சியம் அல்ல' என மொழிய
முனிந்து, 'நீ ராசாவோ' எனக் கேட்க
முதல்வனும்: 'நான் அரசன்தான்

ஈதினுற் பிறந்தேன், சத்திய சாட்சி
இட உலகத்தினில் வந்தேன்
இசைந்த சத்தியத்தி லானவன் எவனும்
என் மொழிகேட்பன்' என்று இசைக்க

ஓது சத்தியம் ஏது என்று யூதர்கள் முன்
'ஓர்வீனை யையும் இவன் இடங் காணேம்'
என, அவர்கள் முறையிட மவுனம்
உற்றவா, யேசு நாயகனே.

ஏரோதேயின் நிந்தனைகள்

செய்யுள் 12

கலிலேயாத் துவக்கி இதுவரை யூதே
யாவெல்லாம் சனங்களைக் கலைத்துக்
காறுபார் ஏரோதேக் கடுத்தவன் எனவே
கழறிட அவனிடம் விடுப்ப

வலியேரோதேயும் வெகுதினங் காண்க
வாஞ்சை யோடிருந்து ஓர் அற்புதத்தை
வசனங்கள் பலதால் செய்யெனக் கேட்டு
மறுமொழி வசனியா திருக்கத்

தொலிவிலா முறைப்பாடு ஆரியர் பகரத்
தூஷணப் படுத்தி வெண் கலையைச்
சுத்தனுக்கு உடுத்திப் பிலாத்திடத் தனுப்பத்
துவியரும் அங்கணமானர்;

தலிவர் கும்புடன்: 'ஓர் குற்றமும் இவன்மேற்
சாரலை, ஏரோதேயுங் காணுன்,
சவுக்கினுல் அடித்துவிடுவன்' என்று அதிபன்
சாற்றினுன், யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

காறுபார் - கார்பார் (இந்தி), கார்வாரி - ரோமருக்குக் கீழ்ப் பட்ட ஏரோதே சிற்றரசன்; வசனங்கள் பலதால் - பலப்பல வசனங்களால்; தொலிவிலாத முறைப்பாடு - ஓயாத . . .; துவியரும் - 'சுத்தரும்' என மாறுக.

பொருள் — தெளிவு.

யாரை விடுதலை செய்யட்டும்: பரபாசையா, இயேசுவையா?
(மத்தேயு 27:17–27; யோவான் 18:38–40)

செய்யுள் 13

பண்டிகை தோறும் காவலிற்பட்ட
பகைஞரில் ஒருத்தனை விடுதல்
பழக்கமானதால் கலாதியிற் கொலைசெய்
பழிமிகுங் கொடிய பேர்ப் பரபா

வண்டனை விடவோ கிறிஸ்துவை விடவோ
வழுத்தும் என்று அவைகளைக் கேட்க
மன்னவன் மனைவி, 'இன்று சொற்பனத்தில்
வருத்த முற்றேன், அவன் வழியே

அண்டொணாது' என ஆளிடம் சொல்லியனுப்ப,
ஆரியர் மொழிப்படி சனங்கள்
ஆண்தகை சாகக் கொலைஞனை விடுப்ப
அடவு என விரைந்து கேட்டு அலட்டக்

கொண்டது ஓர் யூதர் அரசனைக் குருசில்
கொலைசெய்யக் கொடுத்து அவர் கேட்ட
கொலைப் பரபாவை விடுதலை செய்தான்
கோதிலா யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

கலாதி - கலகம்; வண்டன் - துஷ்டன், பரபா என்ற பெயர் கொண்ட துஷ்டன்; வழுத்தும் - சொல்லுக; அடவு - அடைவு, முறை; கொலைப் பரபா - கொலைகாரப் பரபாசு; பார்அப்பாசு: Jesus Bar - Abbas. கோதிலா யேசு - குற்றமற்ற யேசு என்ற உரிச்சொல் ஈண்டு மிக மிகப் பொருத்தமானது.

யேசு பட்ட பாடுகளின் அகோரம் (யோவான் 9:1-16)

செய்யுட்கள் 13-ம் 14-ம் நெருங்கிய தொடர்புடையன. பரபாசை விடுதலை செய்து யேசுவுக்கு மரணத்தீர்ப்பிட்டபின் பிலாத்துவினால் யேசுவுக்கேற்பட்ட பாடுகளை யோவான் உரை நடையில் வரைந்ததை வேதநாயகர் செய்யுள் நடையிற் காட்டி யதைக் காண்போம்.

செய்யுள் 14

பொந்தியுப் பிலாத்துத் தன் வசமாக்கிப்
புனிதனை வாரினால் அடித்தான்;
பொரிந்த சேவகர்ஆஸ் தானத்திற் கொடுபோய்ப்
போரின் சேர்வையை யெலாங் கூட்டிச்

சொந்த வஸ்திரத்தைக் களைந்து மேற் சட்டை
சூழுஞ் சகலாத்தினை அணிந்து
சூழும் முள் முடியைச் சிரத்தினில் தரித்துத்
துடித்தொரு கோல் கையில் கொடுத்து

நிந்தைகள் பேசி, 'யூதரின் அரசே
வாழ்க' என நிகழ்த்தி மற்றுப்பின்
நெடுந்தடி வாங்கிச் சிரத்தினில் அடித்து
நிலை முழங்காலில் இருந்து

விந்தையாய் வணங்கிக் கன்னத்தில் அறைந்து
வெளியிலிக் கோலமாய்க் கொணர
மீளவும் பிலாத்து, 'இதோ நரன்' எனவே
விளம்பினன் யேசுநாயகனே.

அருஞ்சொற்பொருள்:

வாரினால் அடித்தான்: பப்ரீசியு மொழிபெயர்ப்பு - 'பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்.' R.S.V. 'Then Pilate took Jesus and had him flogged.' 1978 Tamil Version— 'வாரினால் அடிக்கும்படி செய்தான்.' இனி வரும் நிகழ்ச்சிகளுக் கெல்லாம் பிலாத்துவே பொறுப்புதாரி. ஆஸ்தானம் - நீதி

மன்றம்; போரின் சேர்வை - போர்ச் சேவகர்; சகலாத்து - Persian Woollen Cloth of any colour, Here purple. யூதரின் அரசே - அரச கோலம்; இதோ நரன் - மனுக்கோலம், அலங் கோலம். நெடுந்தடி - போலிச் செங்கோல்; விந்தையாய் வணங்கி - விளையாட்டாக, வணங்காமல் வணங்கி,

'இதோ நரன்'

பப்ரீசியுசு: 'இதோ, இந்த மனுஷன்'
1978 மொழிபெயர்ப்பு: 'இதோ மனிதன்'
இலத்தீன் - ecce homo
கிரேக்கு - ho anthropas (LXX), aner, Sanskrit - Nara
அரமேயம் - bar nasha

The Tables are turned, and Pilate is judged by the one whom he judges

செய்யுள் 15

'சிலுவையிலேற்றும்' என்று கும்பனைத்தும்
செப்பிய கூக்குரல் கேட்டுத்
'தீவினையொன்றும் இவனிடங் காணேம்
திடம்' எனப் பிலாத்து எதிர் பகர,

வலிய எங்களுக்கோர் ஞாயம் உண்டு இறக்க,
'வானவன் மைந்தனே' என்றான்;
மன்னனும் பயந்து ஆஸ் தானத்தில் மீண்டும்
வந்து, 'நீயார்' எனக்கேட்கப்
பெலியதாம் புருவை மவுனம் உற்றிருக்கப்
'பேசிடாயோ, உன்னை விடவும்
பெரு மரத்திடவும் பெலன் எனக்கு இல்லையோ'
என்றபின், 'மேலிருந்தல்லாமல்

இலை என்மேல் உனக்கோர் ஆண்மை இங்கு, அதனால்
என்னைஉன் கை அளித்தவர்க்கே
இடுங் கொடும் பாவம் அதிகம் உண்டு' என்றே
இயம்பினை, யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

பெலியதாம் புரு - பெலி - பலி; புரு - ஆட்டுக்குட்டி; பலியிடப் படும் ஆட்டுக்குட்டி. ஆஸ்தானம் - நீதிமன்றம்.

பொருள்:

உலக வரலாற்றுக்கு அதிகாரி யார்? உன்னை விடுதலை செய்யவும் சிலுவையிலறையவும் எனக்கு அதிகாரம் இல்லையோ

என்று கடாவிய பிலாத்துவுக்கு மறுமொழியாக, 'மேலிருக்கும் பராபரனையல்லாமல், இல்லை என்மேல் உனக்கோர் ஆண்மை இங்கு; அதனால், என்னை உன்கைக்கு ஒப்படைத்தவர்க்கே அதிகக் கொடிய பாவம் ஏற்படும்' என்று சொன்னீரே, யேசு நாயகரே.

யோவான் (19:8-16)

செய்யுள் 16

ஆரியர், பிலாத்தோடு: 'இவன்றனை விடுத்தால்
ராயருக்கு அன்பன் நீ அல, இங்கு
யாரேனுந் தன்னை அரசனுக்கிடில்
ராயனுக்கு எதிராயினன்' என்க,

வீரமாய்க் கிறிஸ்தை வெளிப்புறப்படுத்தி
மேன் கபத்தா எனும் தலத்தில்
மேவிய சிம்மா சனத் தெழுந்திருந்தான்,
விடிந்து அறு தாசு போலிருக்கப்

'பாரும், உம்மரசன் இதோ' என, 'அகற்றும்,
பணியினில் ஏற்றும், ராயனுமே
பதி அல்லால் வேறோர் பதியிலை' என்கப்
பிலாத்து தன்னால் முடியாமல்

நீரினை எடுத்துச் சனங்கள்முன் கரத்தைக்
கழுவியே, 'நீதிமான் உதிரம்
நீங்களே பாரும்' என்று கையளித்தான்
நெறிமிகும் யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

ஆரியர் - ஆச்சாரியர்; அறு தாசு - ஆறு மணி.

பொருள் — தெளிவு.

ஒப்புநோக்கு:

எ. ஆ, கிருஷ்ணபிள்ளை, இரட். சரிதம் 323. கரத்தைக் கழுவியது:

உக்கிர திவினை உளுற்றி ஒண்பழிச்
சிக்கறக் கழுவி மதியின் தீக்ஷிணம்
செக்கினை விழுங்கிப்பின் சீரணித்திடச்
சுக்குநீர் அருந்தும் அச் சூழ்ச்சி யொக்குமால்.

இதன் விரிவுரையை எமது இரட்சணிய சரித நூலிற் காண்க.

யேசு கொல்கதாவில் பட்ட பாடுகள்: (மத்தேயு 27:27-31)

செய்யுள் 17

சேவகர் அவரைத் தன் வசமாக்கிச்
செழுஞ்சக லாத்துடை கழேந்து
திரும்பவும் அவரின் வஸ்திரம் உடுத்திச்
சிலுவையைத் தோளினிற் சுமத்திப்

பாவிகள் கொல்க தாவினிற் கொடுபோம்
பாதையிற் சிரேனே யூர்ச் சீமோன்
பற்றிடக் கண்டு அங்கு அவன்றனைப் பிடித்துப்
பணியினைச் சுமத்தி அங்கு ஏக

ஆவலாய்ப் பெண்கள் புலம்பி ஒப்பாரி
அழுதுஅவர் மேற்சொல அவரும்
ஆறுதல் பற்றிக் கொல்கதா மலையில்
அணுகிடப் போளமும் பித்தும்

தாவியே கலந்த காடியைக் கொடுத்துச்
சாற்றரும் பாதகர் நடுவே
தருமறைப்படியே சிலுவையில் அறைந்தார்
தயை மிகும் யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

தன் வசமாக்கி - பிடித்து; சகலாத்துடை - மேலாடை. ராஜ வஸ்திரம்; பணி - சிலுவை; போளமும் பித்தும் - பிச்சுக் கலந்த காடி.

பொருள் — தெளிவு.

செய்யுள் 18

யேசுவோ, 'பிதாவே பொறுத்தருள் அவர்கட்கு,
ஏனெனில் தாங்கள் செய்கிறது ஏது
என்றறியார்' என்றுரைத்தனர்; பிலாத்தோ
இவரின் முகாந்தரத்தை

நாசரேன் யேசு யூதரின் அரசு என்று
எபிரேயாக் கிரேக்க லத்தீனில்
நயத்துடன் வரைந்து சிலுவையின் நுனியில்
நாயகன் சிரத்தின் மேல் வைத்தான்.

அருஞ்சொற்பொருள்:

முகாந்தரம் - காரணம்; நாசரேன் யேசு - நாசரேயன் யேசு— Nazarene Jesus - நாசரேயன் யேசு எனினுமாம்.

சிலுவைப்பாடுகள் (மத்தேயு 27:45)

செய்யுள் 18

மாசிலான் கலீலையைச் சேவகர் பகிர்ந்து
மகிழ்ந்து நாற் பங்கு செய்து அவரின்
வலிய மேற் சட்டை தையல் இலாதால்
வரைந்தநேர் பீலிபோட்டு எடுத்தார்;

நேசனைப் பகைஞர் காத்திடச் சனங்கள்
நின்றனர் வேடிக்கை பார்த்து
நிறைந்த மூன்றரந் தாசானபின் குருசில்
நின்றவா, யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

பீலி - சீட்டு, lot; வேடிக்கை பார்த்து நின்றனர். இலாதால் - இல்லாததால்.

பொருள் — தெளிவு.

பரிகாசமும் நிந்தனைகளும் (மத்தேயு 27:33-45)

செய்யுள் 19

அவ்வழி நடக்கும் சனங்கள் தூஷணம் செய்து
அவர் தலை துலுக்கியும் 'ச்சீ,
தேவாலயம் தகர்த்து மூன்று நாளதனில்
அமைப்பவனே, உன்னைத் தானே

செவ்வையாய் இரட்சி, பரன் சுதனுனல்
சிலுவையிலிருந்து இறங்கு என்றார்
தேசிகர்வேத பாரகர் மூப்பர்
சிரித்தொருத் தரை விழித்தொருத்தர்

கவ்வையாய் மற்றோர்களை இவனே காத்தான்
கனிசு ரேலரின் அரசுங்
கடவுளால் தெரிந்த கிறிஸ்துவுமானல்
காணநாந் தன்னையே காத்தே

ஒவ்விய குருசினின்று இறங்கட்டும்
ஒருவனின் மைந்தன் என்றனே
ஓங்கி இவனை இரட்சித்து விடட்டும் என்று
உரைத்தனர் யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

ஒருவனின் மைந்தன் - ஒரே கடவுளின் மைந்தன்; காணநாந் - 'நாம் காண' என மாறுக.

வலப்பக்கத்துக் கள்ளன் பெற்ற பேறு (லூக்கா 23:39–43)

செய்யுள் 20

திட்டியே நகைத்துச் சேவகர் காடி
கொண்டுவந் தருகினிற் சேர்ந்து
தீ மொழி மதற்ற, இடது பாரிசத்துச்
சிலுவையின் கள்ளனும் சினக்கத்

தட்டியே மற்றோன் அவன்றனைக் கடிந்து
தக்கஇவ் ஆக்கினைக் குள்ளாய்ச்
சார்ந்தும் அச்சயனுக் கஞ்சிடாயோ, நாம்
சரிவரச் செய்ததற் கீடாய்ப்

பட்டிட ஞாயம், இவர் அவ குணமோ
பண்ணலே என்று, 'பரத்துனே உன்
பரமராச்சியத்தில் வந்த போது என்னைப்
பரிந்து அருள், ஐயனே, என்றான்;

மட்டில்லாத் திடமாய் 'என்னுடன் இன்றே
வானில் வந்திருப்பை' என்று அன்பாய்
வலது பாரிசத்தின் கள்ளனுக் குரைத்த
மாசிலா யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

தீ மொழி மதற்ற - திய மொழிகளைத் திமிராய்ப் பேச; பாரிசம் - பக்கம்; அச்சயன் - அர்ச்சனைக்குரியவன்; பண்ணலே - பண்ணவில்லே, நாடோடிப் பேச்சு.

பொருள் — தெளிவு.

குருவும் சீடனும், தாயும் சேயும் (யோவான் 19:25–27)

செய்யுள் 21

அண்டியே சிலுவை அடியில் மாதாவும்
அவள் தங்கை யாகிய கிலேயோப்பா
மனைவி மரியாள் மகதலே மரியாள்
அழுது நின்றிடவும் நீ அப்போ

கண்டு நேசித்த சீடனைக் காட்டிக்
காரிகை! உன் மகன் என்றும்
கருதி, மாதா என்று சீடனுக்கும்
கட்டளே யிட்டனை; ஆறு

கொண்டு தாசு ஒன்பது அளவு உலகெங்கும்
கொடும் இருள் சூழ்ந்து ஒளிமறையக்
கூறியே 'யேலி ஏலி லாமாசப்
தானியா' என்று கூப்பிட்டே

விண்டது, 'என்பரனே என்பரனே, கை
விட்டது ஏது எனையும் நீ' என்க
'விரைந்து எலியாவை அழைக்கிறான்' என்றூர்
விகடமாய், யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

என்றூர் விகடமாய் - நக்கலாக.

பொருள் — தெளிவு.

தாசு - மணி. His mother loses her son, but she gains a new son.

முடிந்தது எனச் சொல்லி மடிந்தது *(யோவான் 19:28-30)*.

செய்யுள் 22

அப்புறம் யாவும் முடிந்தது என்றறிந்தே
அருந்தகை உண்டென வெழுதி
அறைந்தது நிறைவே றிடப்புகன்றாய்; அந்
நேரம் ஓர் சேவகன் ஓடிச்

சிப்பிசேற் கடற்கா ளான்தனை எடுத்துச்
சென்றுமுன் காடியால் நிரப்பிச்
செடியெனும் ஈசோப்புடன் அதைச் சேர்த்துத்
திகிரியின் கோல் மிசை பூட்டித்

தப்பிலான் றனக்குக் குடித்திடக் கொடுக்கச்
சனங்களோ 'பொறு, எலியாத் தான்
தனித்து இவன்றன்னை இறக்கிரட்சிக்கச்
சார்வனே பார்ப்பம்' என்று அமர்த்தக்

கைப்புறுகாடி கொண்டபின் முடிந்தது
என்றுமா சத்தமே காட்டிக்
கம்தனைச் சாய்த்துஉன் ஆவிவிட்டு இறந்த
கடவுளே, யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

முகிந்தது - முடிந்தது, It is finished. இவ்வாறு சொல்லி வேத வாக்கு நிறைவேறிற்று எனப் புகன்றாய்; சார்வனே பார்ப்பம் -

சேருவானே பார்ப்போம், நாட்டுப் பேச்சு; கைப்புறு - கசக்கும்; கம்தனை = கம் - தலை = தலையை.

புதுமைகள் நிகழ்ந்தன (மத்தேயு 27:51–54)

செய்யுள் 23

திடீரெனத் தேவா லயத்திரை கிழிந்து
திடமுள்ள பூமியும் அதிர்ந்து
சிலைமலை பிளந்து கல்லறை திறந்து
செத்த அர்ச் செயர்களும் எழுந்து
வடிவுடன் கிறிஸ்தங்கு உயிர்த்தபின் எருச
லேமினில் வந்து காண்பிக்க
வயங்கினதனைத்தும் சேர்வைகாரனும் காத்
திருந்த மற்றவர்களுங் கண்டு

துடியதாய்ப் பயந்து கடவுளின் மகிமை
சொல்லி 'மெய் யாக இம் மனிதன்
சுத்தனும் பரம சுதனுமே' என்றூர்;
சூழ்ந்தவர் தங்கள் மார்புகளில்

படீரென அடித்துத் திரும்பினர், சகல
பழக்கமானவர்களும் கலிலேப்
பதியின் மாதர்களும் தூர நின்றுஅழுது
பார்த்தனர், யேசு நாயகனே.

பொருள் — தெளிவு.

இரத்தமும் தண்ணீரும் வழிந்தன (யோவான் 19:31–37).

செய்யுள் 24

பாதகயூதர் சிலுவையில் அறையப்
பட்டவர் உடல்களோ தொங்கப்
படாது சாப்பத்தில் என்று அதிபனுக் கறைந்து
பதறிடச் சேவகர் வந்து

தீதுசெய் கள்ளர் இருவரின் கணைக்கால்
எலும்பினைச் சிதைவுற முரித்தார்
தேவனே முதலே மரித்ததால் அவர்பால்
சேரலை யாகிலும் ஒருவன்

கோதுடன் ஈட்டி யால் விலாவதனைக்
குத்தினன், உதிரமுஞ் சலமும்
குபீரெனப் பொங்கக் கண்டவன் சாட்சி
கூறினன், அஸ்தமானத்தில்

நீதிசேர் அரிமத் தியாவின் யோசேப்பு
நேயன்நின் சடலமதை இறக்க
நிருபனும் பிலாத்தின் விடையது வாங்கி
நீங்கினான், யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

சாப்பத்து - Sabbath—ஓய்வு நாள்; அஸ்தமானம் - அஸ்தமனம், அந்திப்பொழுது; படீரென (23) குபீரென, ஒலிக்குறிப்புச் சொற்கள், சடம் - சடலம், செத்தவர்கள் உடல்.

பொருள் — தெளிவு.

அடக்கம் (மத்தேயு 27:57–61)

செய்யுள் 25

நீங்கி யோசேப்பு ஓர் பிடவையுங் கொண்டு
நேடியன்று இரவினில் வந்த
நீக்கோதேமும் தான்நூறு ராத்தல் போல்
நிறுத்தவெண் கரிய போளத்தை
வாங்கி வந்துடனே இருவருங் கூடி
மனுமகன் சடந்தனை இறக்கி
வள்ளிய பிடவை யால் அதைச்சுற்றி
வாசவர்க் கங்களைத் திமிர்ந்து
தீங்குசெய் கொல்கதா மலைஅதில் யோ
சேப்பு வெட்டிவைத்திருந்த
தெளிவுள்ள புதுக் கல்லறையில் வைத்துஅதின் வாய்
திரண்டதோர் பெரிய கல் புரட்டிப்
பாங்குடன் வைத்து ஏகினர், அதைப் பெண்கள்
பார்த்து நின்றுஎழ மறைப்படியே
பலது வேலைகளும் ஒழிந்திருந்தார்
. . .யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

பிடவை - புடவை; வள்ளிய - வெள்ளிய புடவை, ஈற்றடியில் ஒரு சொல் கிடைக்கவில்லை. பலது - பல.

கல்லறைக் காவல் (மத்தேயு 27:62–66)

செய்யுள் 26

துட்டராம் குருக்கள் பின்னும் பிலாத்திடம் போய்த்
துடியதாய் 'மூன்று நாள் அடவில்
துலங்கிட உயிர்ப்பேன் என்று அவ் எத்தனுமே
சொன்னதை நினைக்கிறோம்; அதனால்

கட்டியே வன்கல்லறையதைக் காக்கக்
கற்பியும், அல்லவென்றுலோ
கங்குலில் அவன் சீடர்கள் வந்து அவனைக்
களவு செய்து ஏகியே சனத்தைத்

தெட்டியே மரித்தோரிடத்திருந்து எழுந்தான்
திறம் எனச் செப்புவர், அப்போ
செய்யும் எத்துமுந் தினதிலும் கொடிதாய்த்
தீரும்' என்றிடவு பிலாத்து அவர்க்குப்

பொட்டெனப்போய் நீர் அறிந்த நேர் காவல்
புரியும் என்றிடவு உக்களமே
போட்டு இசைவாய்க் கல் லறையில் முத்திரையும்
போட்டனர், யேசு நாயகனே.

அருஞ்சொற்பொருள்:

துடியதாய் - துடித்துப் பதைத்து; மூன்று நாள் அடவில் - மூன்று நாள் அளவில்; கற்பியும் - கட்டளையிடும்; தெட்டியே - ஏமாற்றியே; எத்து - தந்திரம்; பொட்டென - உடனே, பட்டென உக்களம் - இராக்காவல்—Night Watchmen.

உயிர்த்தெழுதல், காட்சியருளல், பரிசுத்தாவி அருளல்...
(மத்தேயு 28:1-10)

செய்யுள் 27

வண்மை இவ்விதமாய் பாடுறக் குருசின்
மரித் தடக்குண்ட மூன்று நாள்
மகிமையா யெழுந்து நாற்பது நாளாய்
மண்டலத் திருந்து மாதவருக்கு

உண்மையைப் பத்து விசை பல இடத்தில்
உயர்தரி சனையது நல்கி
ஓங்கிய வேத நூல்களை உணர்த்தி
உச்சிதப் புதுமையுங் காட்டி

வெண் முகிலதனில் எழுந்து வானவன்பால்
மேவி வீற்றிருந்து பத்தா நாள்
வித்தகப் பரிசுத் தாவியைச் சீடர்
மேலுற அனுப்பி மீண்டு இனியும்

திண்மைசேர் பெலத்தால் கடையுகம் தனில்
திரும்பவந்து அவரவர் செய்த
செயற்படி தீர்வையிடச் செய்யும் பரம
திரித்துவ யேசு நாயகனே.

மேற்செய்யுளில் யேசுவின் பாடு மரணம் அடக்கம் என்பன வற்றைச் சொன்னவர், இச்செய்யுளில், அவரது உயிர்த்தெழுதல், சீடருக்குக் காட்சியளித்தல், வேத நூல் வியாக்கியானம், புதுமைகள், பரமேறுதல், திருத் தந்தையின் வலப்பக்கம் வீற்றிருத்தல், பரிசுத்தாவியைப் பொழிதல் - கடைசி நாளில் திரும்பவருதல், நடுத்தீர்வை செய்தல் முதலியவற்றைப் பட்டியல் போட்டுக் காட்டினார்.

நம்பின பேருக்கு யேசு ஜெயராஜா,
நம்பாத பேருக்கு அவர் எமராஜா.

இதன் உண்மையை அடுத்த செய்யுளில் விளக்குகிறார்.

செ. 27-இல், வள்ளலாகிய பரம திரித்துவ யேசு நாயகன் தமது இவ்வுலக வாழ்க்கையில் செய்த மீட்பின் செயல்களைக் கால வரிசைக் கிரமமாக எண்ணிடுகின்றார் பக்தர் பெருமான்.

(1) குருசில் மரித்து, (2) அடக்கம் பண்ணப்பட்டு, (3) மூன்றும் நாள் எழுந்து, (4) மண் தலத்தில் 40 நாட்கள் இருந்து, (5) சீடருக்குப் பத்து விசை காட்சி அருளி, (6) வேத நூல்களின் உட் பொருளை விளக்கி, (7) பல புதுமைகளையும் காட்டி, (8) பரத்துக் கேறி, (9) திருத் தந்தையாரின் வலப்பக்கத்தில் திரு ஓலக்க மண்டபத்தில் வெற்றிவீரராக வீற்றிருந்து, (10) பத்தாம் நாள் பெந்தெகொஸ்தேயன்று தமது பரிசுத்தாவியானவரைச் சீடர் மேலுறப் பொழித்து, (11) கடையுகத்தில் திரும்ப வந்து (இரண்டாம் வருகை-Parousia), (12) மக்களுக்குக் கடைசி நியாயத்தீர்வை அளிப்பதோடு இச்செய்யுளை முடித்து, 28-ஆம் செய்யுளில் நடுத்தீர்வையின் நிகழ்ச்சிகளை விளக்கியுள்ளார் என்பதைக் காண்போம்.

உலக முடிவில் கடவுளின் நியாயத்தீர்ப்பு
(மத்தேயு 24–அதிகாரம் முழுவதும்)

செய்யுள் 28

வல்லமையாய் மேக ஆசனத் தெழுந்து — 1
வானவர் படையெலாம் சூழ்க
வலிய எக்காளத்து அதிர்ஒலியதனால்
மரித்த யாவர்களையும் எழுப்பி, — 2

தொல் உலகதனில் சீவனேடிருக்கும்
தொகையிலாப் பெயரையுங் கூட்டி, — 3
தூதரை விடுத்து ஆகாயமண்டலத்தில்
தொகுத்து, இரு வகுப்பையும் சேர்த்து, — 4,5

நல்லவர்களைத் தம் வலது பாரிசத்தில்
நாட்டி, வானி ராச்சியம் அளித்து, 6,7
நலிவுறும் பாவிகளை இடத்து உய்த்து, 8
நரகபாதாளமே வீழ்த்தி, 9

எல்லையில்லாத மகத்துவ நவப் புது
எருசலேம் பட்டணத்தெழுந்து, என் 10
றூழியும் வேத நாயகன் பாட
இன்புறும் யேசுநாயகனே.

பொருள்:

சரித்திர ஆதியந்தம் என்ற தலைப்பில் ஆதியில் சிங்கார வனத்தில் நடந்த நிகழ்ச்சிகளோடு இந்தப் பதிகத்தைத் தொடங்கியவர் யேசு நாயகரின் அவதாரநிலையின் இறுதிப் பகுதியை முதனூல் காட்டிய வழியிற் சென்று 27 செய்யுட்களில் பாடின பின்னர், இவ் இறுதிப் பகுதியில் இனி வருங்காலத்தில் நிகழவிருக்கும் சம்பவங்களைப் பத்து என எண்ணிட்டுக் காட்டியுள்ளார்.

25. ஜெபமாலை

ஆத்துமப்பெண் நிந்தாஸ்துதி

செய்யுள் 1

கிறிஸ்து மேசியா என்னும் வேந்தனைப் பேதையோர் ஆத்துமப் பெண் பேசிய நிந்தாஸ்துதிகளிற் சிலவற்றைப் பிரபலப்படுத்த இசைந்தேன் என்று கவி வேதநாயக சாஸ்திரியார் பாடிய பாடல் இது.

நிந்தாஸ்துதி - நிந்தித்தல்போல் துதித்தல் என்னப்படும் எனக் கவிஞரே சொல்லியுள்ளார். செய்யுள் பதின்மூன்றில்;

'புகழ்ச்சியோ இகழ்ச்சியோ பேதை
போற்றிய நிந்தாஸ்துதி யெல்லாங் கேட்டுப்
பேசுவார் ஏசுவார் உன்னை
எத்தனை கோடி நிந்தையோ பட்டாய்
இது மகா அதிசயப் பொருட்டோ'

என்றார்.

கவிஞர் தம்மை ஆத்துமப் பெண்ணாகப் பாவித்து, இப் பதினைந்து செய்யுட்கள் ஒவ்வொன்றின் ஈற்றடியில், பல்லவியாக,

எழில்பெறு சீயோன் மகள் மணவாளா
இறைவனே யேசு நாயகனே

எனப் பாடி முடிக்கின்றார்.

மணவாளன் என்ற தமிழ்ச் சொல் வடமொழியில் நாயகன் எனப்படும். எனவே, இது நாயக—நாயகி, அல்லது தலைவன்—தலைவித் தொடராகும்.

தலைவனைப்பற்றியும் தலைவியைப்பற்றியும் முதற் செய்யுளில் கூறப்பட்டது. இத்தலைவன் பெயர் இயேசு கிறிஸ்து. இவர் பராபரனின் திருமகன், திரித்துவத்தில் இரண்டாம் ஆள். எனவே, தேவனும் மனுடனுமான கிறிஸ்து வேந்தன். இவரது காதலி, மணப்பெண், ஓர் பேதை, ஆத்துமப் பெண். இவள் தன் காதலனைப் புகழ்ந்தும் தன்னையோர் அரசியென்றும் பிரபலப் படுத்துகிறாள்.

தலைவனும் தலைவியும் உருவு, திரு, ஏர், எழில் இன்ன பிற வற்றில் ஒத்தவர் எனப் பொருள்காட்டுவர் தமிழ்நாட்டு அறிஞர். இவை கேட்போர் காண்போர் உறுவோர் நெஞ்சுகொள்ளும் வகையில் அமையுமேயன்றி வரையறைக்குட்படா என்ற உண்மை யைத் தொல்காப்பியர்,

ஒப்பும் உறுவும் வெறுப்பும் என்ரு
கற்பும் ஏரும் எழிலும் என்ரு
சாயலும் வேட்டையும் நுகர்வும் என்ருங்கு
ஆவயின் வரூஉம் கிளவி யெல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சு கொளினல்லது
காட்டலாகாப் பொருள வென்ப

என்பர். எனவே, இவற்றின் சிறப்பியல்புகள் அகவொழுக்க இன்பத்தை உள்ளத்துணர்வால் உற்று அறிவதுபோன்று அறிந்து கொள்ளத்தக்கன என்பது தேற்றம் என்ரூர் அ. மு. பரம சிவானந்தம். உலக இயல் இலக்கியப் பண்புகளோப் பக்தி இலக்கியப் பண்புகளாக மடைமாற்றம் செய்தனர் தேவாரத் திருவாசக நாயன்மார்.

'சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து'

எனச்சொல்லி முடித்தார் மணிவாசகர் தம் சிவபுராணத்தை.

இவற்றையெல்லாம் தம் நெஞ்சிற்கொண்டு தலைவன் தலைவி யின் இன்பத் தொடர்புகளை வேதநாயகர் தம் நிந்தாஸ்துதியில் பொதிந்துவைத்த ஞானப்புதையலை அகழ்ந்து காண்போம்.

கழிநெடில்

செய்யுள் 1

சீர்மிகும் பிதாவாம் ஒரு பராபரனின்
திருச்சுதன் எனத்திரித்து வத்தின்
திவ்விய இரண்டாம் ஆளதாய்ச் சிறந்து
தேவனும் மனுடனுமான

பேர்மிகுங் கிறிஸ்து மேசியா வேந்தைப்
பேதையோர் ஆற்றுமப் பெண்ணுள்
பேசிய நிந்தாஸ்துதிகளிற் சிலதைப்
பிரபலப் படுத்துதற் கிசைந்தேன்;

நாசரேத்தூர் இயேசுவைத் தமிழ்நாட்டானுக்கி அவர்தம் பெரும்புகழை இனிய தமிழில் தமிழ்ப்பக்தி இலக்கிய உத்திகளில் ஒன்றுகிய (one of the literary devices) நிந்தாஸ்துதி மூலம் பிரபலப்படுத்த இசைந்தேன் எனச் சொல்லி இப்பதிகத்தைத் தொடங்கலுற்றார் தமிழ்நாட்டு வேதநாயகர்.

இவர்தம் பாடலில் உள்ளதோர் நயங்காண்போம். தமிழ் இலக்கிய மரபின்படி, தலைவன் பெயர் குறிக்கப்பட்டிருந்தால் அது 'புறம்' எனவும், பெயர் குறிப்பிடப்பெறுதிருப்பின் அஃது 'அகம்' எனவும் பிரிப்பர். இப்பாடல்களில் நாயகனை 'கிறிஸ்து மேசியா வேந்தை ஆத்துமப் பெண்ணுள் சீயோன் மகள் என்ற இடங்களில் பெயர் குறிப்பிடாமலும், பல்லவியில் 'யேசு நாயகனே' என்றும் தலைவன் பெயர் குறிப்பிடப்பட்டுமுள்ளது.

இப்பதிகத்தில் வந்துள்ள தலைவன் பெயர் இயேசு கிறிஸ்து. இயேசு என்பது இயற்பெயர், இடுகுறிப்பெயர். கிறிஸ்து என்பது தொழிற்பெயர். அபிஷேகம் செய்யப்பட்டதோர் அரசன்; இறைவாக்கினன், ஆச்சாரியன் கிறிஸ்து எனப்படுவன், கிரேக்க மொழியில்; எபிரேய மொழியில் இது மாஷியாக்கு, மேசியா எனப்படும். செய்யுள் முதற்பகுதியில் 'கிறிஸ்து மேசியா வேந்தை' எனச் சொல்லிய கவிஞர், பல்லவியில் 'இறைவனே யேசு நாயகனே' எனச் சொல்லி முடித்தார்.

இஃது 'தேவனும் மனுடனுமான பேர்' என்றும் மேலே குறிப் பிட்டார். எனவே, அகம்–புறம் என்ற நம் பாகுபாட்டைக் கடந்த வர் என்றோ, இவ்விரண்டையும் தம்முள் அடக்கியவர் என்றோ அமைதி கூறலாம். ஏற்பவர் ஏற்க.

அகப்பொருளில் வரும் 'ஒத்த தலைவனும் தலைவியும்' என்ற தொடருக்கு உருவு, திரு, ஏர், எழில் இன்ன பிறவற்றில் ஒத்தவர் எனப் பொருள்காட்டுவர் அறிஞர். ஆயினும், இவை கேட்போர் அல்லது காண்போர் அல்லது உறுவோர் நெஞ்சுகொள்ளும்

வகையில் அமையுமேயன்றி வரையறைக்குட்படா என்ற உண்மையைத் தொல்காப்பியர்,

ஆவயின் வருஉம்கிளவி எல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சு கொளினல்லது
காட்டலாகாப் பொருள வென்ப (பொரு. 53)

என்பர். எனவே 'இவற்றின் சிறப்பியல்புகள் அகவொழுக்க இன்பத்தை உள்ளத்துணர்வார் உற்று அறிவதுபோன்று அறிந்து கொள்ளப்படுவன என்பது தேற்றம்' என்றூர் அ. மு. பரமசிளானந்தம் (வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள், பக். 16).

தலைவி கூற்று: 'நேர்மைமிகும் இஸ்ரவேலை ஆண்டருளும் நீதியின் அரசன் என் பிரியதேசன், ஆசைநாயகன், பிராணநாயகன் நீ; நீடி உன் வலப்பக்கத்தில் ஒப்பீரின் தங்க நகைகள் அணிந்து இலங்கிய அரசியாகிய நான் சொல்லக் கேள்:

'எழில்பெறு சீயோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே'

எனச் சொல்லித் துதித்த நாயகி இனிவரும் 14 பாடல்களில் நிந்தித்தல்போல் போற்றி, உபையார்த்தமாகப் பாடுகிறுள். (words with double meanings.)

செய்யுள் 2

உன்றனின் செய்தி யான் அறிந்தலனே
உடுப்பதற்கு அங்கி ஒன்று அதனை
உவந்து சேவகர்தான் பீலி போட்டெடுத்தார்,
ஒன்று மற்றம் மணத்திருந்தாய்

அந்த நாள் உனக்கோர் மடத்திலும் இடமற்று
அயலவனத்து இடை விடையடையும்
அகத்தினில் பிறந்தாய், மிடியினுல் உனைப்புல்
அணையில் கிடத்தினரன்றே

கந்தையால் உன்னைப் பொதிந்ததும், அழுது
கதறிநீ பால் குடித்திருந்த
கவடமும் அறிவேன், தலைமுடிசாய்க்கக்
கழுமரத்திடம் இருந்ததுவோ

எந்தையே, உனக்கோர் நீச வாகனந்தான்
இருந்து உன்னை ஆட்டுதோ, ஐயா,
எழில்பெறு சீயோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே.

பொருள்:

சீயோன் மகள் மணவாளனுக்கு இரு நிலைகள் உள்ளன. ஒன்று, அவர் தந்தைக் கடவுளின் திருமகன். இது அவரது உண்மை நிலை. உயர்ந்த நிலை. அந்நிலையைவிட்டு மனிதனுக ஊன் உடல் பூண்டு நிலவுலகில் இறங்கி வந்தது அவரது இரண்டாவது நிலை.

சீயோன் மகள் அவரது பரத்துவ நிலையைப் போற்றுகிறுள், அவதார நிலையைத் தூற்றுகிறுள். அவரது மேலான நிலையைத் துதித்து, கீழான நிலையை நிந்திக்கிறுள். இதுதான் இந்த நிந்தாஸ் துதியின் உள்ளுறை பொருள்.

உனக்கு உடுப்பதற்கு அங்கி ஒன்றிருந்தது. நீ சிலுவையில் தொங்கினபோது அதைக் களைந்தாய். நீ களைந்த அங்கியை ரோமச் சேவகர் சீட்டுப்போட்டு எடுத்துக்கொண்டனர். இதல்லாது உனக்கு மற்றதோர் ஆடை இருந்தது. அது உன் தோலாடை. அதாவது, நீ ஆடையின்றி நிருவாணமாகச் சிலுவையில் தொங்கினாய்.

நீ பிறந்த அந்த நாளில், உன் சொந்த ஊர் பெத்லகேமில் உனக்கோர் மடத்திலும் இடமில்லை. அயலான் உடைய மாட்டுக் கொட்டிலில் பிறந்தாய். வறுமை காரணமாக உன் பெற்றோர் உன்னைப் புல்லணையிற் கிடத்தினரன்றே? கந்தைத் துணியால் உன்னை மூடினர். நீ அழுது கதறிப் பால்குடித்த கபடத்தையும் நான் அறிவேன். இது உன் கபட நாடகமன்றே? கழுமரத்தில், சிலுவை மரத்தில் மட்டும் உன் தலைசாய்க்க இடமிருந்ததுவோ? எந்தையே. உனக்கோர் நீச வாகனந்தான், கழுதைமேலேறித் தானே எருசலேம் நகருக்குள் புகுந்தாய். ஐயா! எழில் பெறு சீயோன் மகள் மணவாளனுக்கோ இந்தக் கோலம்?

செய்யுள் 3

அரசன் ஏரோதே கொல்வன் என்று அஞ்சி
அகன்று எகிப்தினை அடைந்தாய்
அர்கெலாவுக் காய்க் கலிலேயாப் புறங்கள்
அணுகியே நசரையன் ஆனாய்

பரிவில் உன் மாதா பன்னிரு வயதில்
பண்ணிய முனிவினுல் பரிந்து
பாங்குடன் மூப்பதாண்டள வாகப்
பணிந்தவர்க்கு ஊழியம் இழைத்தாய்

ஒருவிசை தினம் நாற்பது கொடும் வனத்தில்
உண்பதற் கன்றியும் இருந்தாய்
ஓங்கிய அத்திமரம் படச் சபித்த
உபாயமும் அறிந்து தானிருப்பேன்

இரு தகையதற்குச் சமாரியப் பெண்பால்
எழும்புனல் கேட்டதும் இயல்போ?
எழில்பெறு சியோன் மகள் மணவாளா.
இறைவனே, யேசு நாயகனே.

பொருள்:

(1) அரசர்க்கு அஞ்சி ... நசரேயன் என்ற தவசிக் கோலம் கொண்டாய். (2) 12 வயதிலிருந்து 30 ஆண்டளவும் நீ பெற்றோர்க்குப் பணிந்து ஊழியம் செய்தாய். (3) 40 நாள் பாலை வனத்தில் உணவின்றிச் சோதனைக்காலத்திலிருந்தாய். (4) பசியாலன்றே அத்திமரத்தில் கனி இல்லையென்று அது பட்டுப்போகச் சபித்தாய். (5) திருமணமாகாத சமாரியப் பெண்ணிடம் கிணற்று நீர் கேட்டதும் இயல்போ?

எழில்பெறு ... யேசுநாதனே.

ஈரர்த்தம் கொண்டுள்ள நிந்தாஸ்துதிப் பாடலில் இதுகாறும் நிந்தனைச் சொற்களையே கண்டோம். இச்சொற்களே துதிச் சொற்களாயுள்ளன என்பதைக் காண்போம்.

(1) அரசர்க்கஞ்சி யோடுவது, 'அஞ்சுவது அஞ்சாமைப் பேதைமை' என்பது மட்டுமன்று, தந்தை வாக்கிய பரிபாலனன் என்ற முறையில், உலகத்தைக் காத்து இரட்சிக்கத் திருத்தந்தை யார் குறிப்பிடும் நாளுக்கும் வேளைக்கும் காத்திருக்க வேண்டியிருந்தது என்பது இதன் உட்பொருள்.

(2) 12–30 ஆண்டுகள் தாய் தந்தையர் சொற்கேட்டு 30-ஆம் ஆண்டில் திருமுழுக்குத் தீட்சை பெற்றபோது, 'இவர் நமது செல்வக்குழந்தை' என்று திருத்தந்தையார் பறையறையும் மட்டும் உலகப் பெற்றோர்களுக்கு அடங்கி நடந்தது ஞானத்தின் முதிர்ச்சியன்றே?

(3) பாலைவனத்தில் பிசாசினால் சோதிக்கப்பட்டபோது திருமறை வாக்கைக்கொண்டு அவனை செயித்து வெற்றி வேந்தராளர் என்பது அவரது திருப்பணிக்குத் தொடக்கமாயிற்றன்றே?

(4) அத்திமரத்தைச் சபித்ததும் அது பட்டுப்போயிற்றென்பதும்,

'குணமென்னும் குன்றேறி நின்றூர் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது'

என்பது மட்டுமன்று; திருமகனரின் நல்லுரை கேட்டும் அவர் சொற்படி நடவாதவர்களுக்கு வரும் தண்டனையைக் காட்டுவதற் கேற்றதோர் படிமம் அன்றே? (A symbolic Act of Jesus).

(5) சமாரியப்பெண் யூதரால் ஒதுக்கப்பட்டவள். ஐந்து கள்ளக் கணவர்களுக்கு ஆட்பட்டவள். அவள் வாழ்க்கையிலொரு மடைமாற்றம் (Conversion) செய்வதற்கு வாயிலாக இருந்ததன்றே? இவை யாவும் போற்றற்குரியவை என்க.

செய்யுள் 4

(1) அப்பனே தச்சன், தாயரோ எளிய கன்
னியாஸ்திரி, (2) சமுத்திரத்தணுகி
அடர்ந்து மீன்பிடிக்கும் வலையர் உன் சீடர்,
ஆய மத்தேயு உனக்கடுத்தோன்,

(3) ஒப்பியே வெட்டுக் கிளியோடு தேனே
உண்டொரு ஆரணியமே கிடந்தங்கு
ஒட்டகத் தோலே உடுத்தவோர் இருடி
உன்றன்முன் தூதனுய் வந்தோன்,

(4) செப்பு பாவிகளே உன் சிநேகிதர்கள்
தினச் செலவிடுபவன் திருடன்,
சேட்டனு யிருந்தவன் அசத்தியக்காரன்,
இப்படிக் கொத்த கொள்ளேயி லெனேநீ
எப்படித் தாங்குவாய் ஐயா,
ஏழில்பெறு சீயோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே.

பொருள்:

(1) அப்பனே தச்சன்; உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனே செய்வோம் என்பது மட்டுமன்று; தாயார் மரியம்மை எளிமை மட்டுமன்று; கன்னிப்பெண். இவர்கள் மூலமாக, கடவுளின் ஒரு தனிச் செல்வமகன் தம் பரத்துவ நிலையை நீத்து, 'உரிய காலம் வந்தபோது, கடவுள் மைந்தரை இவ்வுலகத்திற்கு அனுப்பினர். ''அப்பா'' என்று நாமும் எல்லாம் வல்ல பராபரனே அழைக்கும் ஆவியை, தம்முடைய மைந்தரின் ஆவியை, கடவுள் நம் உள்ளங் களில் தந்தருளினர்' (கலாத்தியர் 4:3).

(2) பேதுருவும் மற்றவரும் மீன்பிடிக்கும் வலையர் தாம்; மத்தேயு சுங்கச் சாவடியில் ஆயக்காரனுயிருந்தான். உண்மை தான். இவர்களைச் சீடர்களாக்கித் தம் அருள் அரசுக்கேற்ற திருப்பணியாளர்களாகப் பயன்படுத்தினர் யேசுநாதர்.

(3) யோவானது உடை ஒட்டகத்தோலாடை; உணவு வெட்டுக்கிளியும் காட்டுத்தேனுமே; உறைவிடம் சோலையில்லை, பாலையே. எனினும் அவன் அவதார புருடனுக்கு முன் தூதன். அவருக்கு ஞானதீட்சை கொடுத்து, இறைப்பணிக்குப் பக்குவப் படுத்தினன் என்பது அவன் பெற்ற பெரும்பேறு என்க.

(4) பாவிகளும், திருடர்களும், பொய்யர்களும், அடியவர்களை அடித்து உதைத்துக் கொன்று, இயேசுபெருமானை நிந்தித்த சின்னப்பன் என்ற திரு. பவுலடிகளும் இயேசுவின் அருள் அரசாட்சிக்குத் தூண்களாயினர் என்க.

இப்படிக் கொத்த கொள்ளையில் என்னை நீ
எப்படித் தாங்குவாய்?

என்பது கொச்சைப் பேச்சுத்தான்; எனினும் உண்மையான கேள்வி. ஆனால் இம்மணவாளனோடு சேர்ந்து நடத்தும்போது திருச்சபை அடியார்க்கு அம்மையாக இருந்து ஆதரித்தாள். She became the Mother of the believers.

இஸ்ரவேல், யூதா, ரோமி என்பவர்களோ உனக்கேற்றவர்கள்

செய்யுள் 5

(1) நிசமதாய் இசருவேல் உனின் மூத்த
நேரிழையாம், அவள் உன்னை
நிகழ்ந்து பாகாலோடு அகந்தையே புரிந்தும்
நீபின்னும் அவள்தன்னை நேர்ந்தாய்;

(2) வசை இதைஅறிந்தும் யூதா என்பவளும்
மறுமுகம் நோக்கினள், அவளின்
வஞ்சகந்தனைநீ நெஞ்சில் வையாது
மறுபடி அவளையே அழைத்தாய்;

(3) திசையெலாம் போய்போய் வேசையாய்த்திரிந்த
திருடியாம் எழுமலைக் கள்ளி
தீங்கெலாம் அறிந்தும் நீ அவளுக்கே
சேனைநாள் குணப்படக் கொடுத்தாய்

(4) இசரவேல் யூதா ரோமி என்பவரீகளோ
ஏற்றவர்கள் உனக்கு, ஐயா;
எழில்பெறு சியோன் மகள், மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே.

பொருள்:

இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்களில், பத்துக் கோத்திரங்கள் இஸ்ரவேல் ராச்சியமாகவும், இரண்டு கோத்திரங்கள் யூதா

ராச்சியமாகவும் பிரிந்துவிட்டன. இஸ்ரவேலர், காஞனிய தேவன் பாகாலுக்கு வழிபட்டு ஏகோவாவை இகழ்ந்தனர். அவள் அகந்தையே புரிந்தும், நீ பின்னும் அவளையே நேர்ந்தாய் என்றும் ஏசினுள் சியோன் மகள். புரிந்தும், பின்னும் அறிந்தும் என்ற சொற்களில் உம்மை விரி சியோன் மகளின் சீற்றத்தை காட்டு கின்றன. இஸ்ரவேல், யூதா, ரோமி என்ற மூன்று பெண்களும் சியோன் மகளுக்குச் சக்களத்திகளாயினர். அவர்கள் உனக்கு ஏற்றவர்களானுல் என்கதி என்னவாம் என்பது தொனிப்பொருள். இந்தச் சக்களத்திப் போராட்டத்தால் கணவன் - மனைவிக்கு இடையில் ஊடல் உண்டாகி, மனைவி தன் கணவனை நிந்திக்கிறுள் என்பது உலகறிந்த உண்மை, 'உலகறிந்த' என்றேரும். இது தமிழ்நாட்டுக்கு மட்டும் பொருத்தமன்று. பழைய ஏற்பாட்டு ஆகமங்களில், சிறப்பாக இறைவாக்கினர் தம் கடிந்துரைகளில் பலவிடங்களில் காண்கிறேரும்.

மூன்ருவதாக குறிப்பிட்ட 'ரோமி' என்பவள் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையாராவர். கவி வேதநாயகர் காலத்தில் ரோமிகளுக்கும் புரோத்தஸ்தான்தாருக்கும் இடையில் கடும் போராட்டமும் கசப்புணர்ச்சியும் தமிழ்நாட்டில் உச்ச நிலையி லிருந்ததென்பதற்கு வேதநாயகர் நூல்கள் சான்று பகரும்.

திசையெல்லாம் பேர்போய் வேசையாய்த்திரிந்த
திருடியாம் எழு மலைக்கள்ளி
திங்கெல்லாம் அறிந்தும் நீ அவளுக்கே
சேனைநாள் குணப்படக் கொடுத்தாய்

என்றுள் சியோன் மகள். இது கவிக்கூற்று. கவி, தன் கருத்தைச் சியோன் மகள் வாயிலாகத் தெரிவித்துள்ளார். எழுமலைக் கள்ளி ரோமாபுரி என்று வேதநாயகரே குறிப்பிட்டுள்ளார்.

சேனைநாள் — மிக அதிக காலம்.

'கெட்டோருக்கு நட்டோரில்லை' என்பது நம் நாட்டுப் பழ மொழி.

'கெட்டோரை இயேசு சேர்க்கிறுர்' என்பது கிறிஸ்துவின் அடியார் பாடிச் சொல்லும் நற்செய்தி.

பப்பீசியுசு ஞானப்பாட்டு மாலை, எண் 175.

மந்திரவித்தை காட்டி ஏய்ப்பவன் நீ

செய்யுள் 6

முன் யுகத்தினில் யாக்கோபினுடே போர்
மூட்ட உன்தன்னை மேற்கொண்டான்
முனை இதையறிந்து நொண்டியாய் அவனை
முடக்கினது என்ன செயல், ஐயா,

பின்னெரு காக்கை வண்டு மீன் கழுதை
பேசியுன் சித்தமே இயற்றப்
பெருமையாய் எகிப்தில் ஒரு பத்தற்புதத்தைப்
பேணின சேவகர் திறமும்

மன்னிய புகழென் றெண்ணுவோமாலுல்
மறையின் மோசேயுட கோலே
மனுடரைக் கெடுத்த சர்ப்பமாய் மாற்று
மந்திர விந்தையைப்போலே

இன்னமும் சிலதுண்டென்று நீ என்னை
ஏய்ப்பதுங் கண்டேன், ஐயா,
எழில்பெறு சியோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே.

பொருள் — தெளிவு.

செய்யுள் 7

வரையெனுஞ் சீனுய் வனமெலாம் அதிர
மறைதரும்போதொரு விலங்கும்
வரப்படாதெனவே வகுத்தநீ இங்கே
மாட்டின் முன்னிட்டியிற் படுத்தாய்

அரசன் என்றிருந்து உன் சனத்தினுக் கடர்ந்த
அவதியை நீக்குதற் கேலாது
ஆயிழை எஸ்தர் யூதரின்பெண் ஆ
காசுவேர்க்கு அளித்ததும் அடைவோ?

தரைதனிற் சவுலுக்கு அஞ்சின விதமோ
சாமுவேல் பலியிடச் செல்லுந்
தகைமையில் தாவீதை அரசபிஷேகம்
தாபி என்றது சரிதானே?

எருசலே யறியி வெண்கவச மதிட்டு
எரோதே ஏன் பயித்தியன் என்றுன்?

எழில்பெறு சியோன் மகள் மணவாளா,
இறைவனே யேசு நாயகனே.

பதவுரை:

முன்னிட்டி = மாட்டுத் தொட்டி; ஆகாசுவேர் - தாபி - ஸ்தாபி; அபிஷேகம் செய்து அரசனுக்கு. அடைவோ - தகுமோ. வரை - சீனுய் — சீனுய் மலே.

பொருள் — தெளிவு.

நீ மறைந்த மாயம்

செய்யுள் 8

அங்கொருநாள் நீ அலைகடலதன்மேல்
அர்த்தராத்திரியில் நடந்தாய், (1)
அடைத்ததோர் கதவும் அடைத்திருக்கையிலே (2)
அர்ச்செயர் நடுவினில் வந்தாய்,

மங்கிய துயரால் ஏகு சீடர்களின்
மனக்கவலைகளற வழுத்தி
மறு உருவாகக் காட்டி நீ மறைந்த
மாயம் ஆய்ந்து அறிந்தவ ருண்டோ? (3)
தங்கு மீன் வாயிற் கால் வராகனைத்தான்
தராசினில் நிறுத்து வைத்தனையோ? (4) மத். 17:27
தந்திரம் இதைப்போல் அனந்தம் நீ செய்த
சமர்த்தெலாம் அறிந்து கேட்டிருப்பேன்;
இங்கதைப் போலே என்னையும் மருட்ட
எண்ணமோ? இருக்கட்டும், ஐயா!
எழில்பெறு சியோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே.

செய்யுள் 9

மதிமிகும் லாசர் மரித்த சொற்கேட்டு
மனத்தினிற் கவலையற்றவன் போல்
மறுத்து நால்தினமே தாமதம் புரிந்த
வாய்மை, இதுஉன் மகத்துவமோ?
சதிருடன் சீடர் காலினைக் கழுவித்
தன் கலையாலே நீ துடைத்த
தாழ்மையோர் கன்னத் தடித்தவன் தனக்குந்
தயவதாய் மறுமொழி கொடுத்தாய்
கதிமிகும் உனைத்தான் பெற்ற மா மரியாள்
கன்னியாஸ்திரி எனச் சொன்னாள்
காரணமிது தான் தந்தையிலாத
காலெனக் கேட்டவர் நகைப்பார்;
இது வெலாமிருக்கக் குருசில் நீர் பட்ட
இகழ்ச்சிகள் என் சொல்வேன், ஐயா?
எழில்பெறு சியோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே.

பொருள் — தெளிவு.

தந்தையிலாத கால் - அப்பனில்லாத மகன்.

செய்யுள் 10

நேச, நீ எனைப்போல் பிறந்து உன்னை விருத்த
சேதனப்பட்டனை, நிலத்தில்
நெடுந்தவம் புரிந்த பாவி போல் ஞானத்
திட்சையும் பெற்றனை நினைந்தென்

மாசற உன தாற்றுமஞ் சரீரத்தால்
வரையிலாப் பாடு பட்டுயர்ந்த
மரத்தில் அறையுண் டிறந்தனை, யானும்
மண்ணினில் ஓர்விசை இறப்பேன்

காசினிதனில் நீ எழுந்தனை, யானும்
கடைசியில் எழுந்திருக்கேனை?
கடவுளுன் வலத்தில் வந்திருப்பேன்.

இயேசுவென்று உனக்கு மாத்திரம் பெயரோ?
யேசு சீராக்குக்கும் இருந்தது;
எழில்பெறு சியோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே.

இஃதோர் பல்பொருள் செறிந்த பாடல். வேதநாயகர் தம் திருவுள்ளக் கடலில் இரு பேரியாறுகள் சங்கமமாயின. ஓராறு இந்திய மலையில் தோன்றிப் பல உபநதிகளைத் தன்னகத்தே உட்கொண்டு சிற்றாறுகளாகவும் வாய்க்கால்களாகவும் பிரிந்து முல்லை நிலத்தை மருதநிலமாக்கித் தமிழ் நாட்டைப் பொன்னாடாக்கி வருகிறது. இந்த இரண்டாவது ஆறு, மேல்நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த யூத - கிறிஸ்தவக் கருத்தும் கல்ட்ச்சரும் (Culture) சேர்ந்து இம்மைக்கும் அம்மைக்கும் பயன்படுவதாயிற்று.

தமிழ் இலக்கிய உத்திகளில் ஒன்றுகிய நிந்தாஸ்துதி என்ற உத்தியையும் தலைவன் - தலைவி என்ற தொடர்பையும் இணைத்துப் பாடினர் கவிச்சக்கரவர்த்தி வேதநாயகர். இந்த நீரோட்டத்தின் போக்கை இனிக் காண்போம்.

பொருள்:

யேசு நாயகனே, நீ என் பிராண நாயகன், நான் உன் நாயகி, உயிர்த்தோழி. என் நேசா, நீ என்னைப்போல் பிறந்தாய்; விருத்தசேதனம் செய்யப்பட்டாய். இந்நிலவுலகில் நெடும் பவம் புரிந்த பாவிபோல் ஞானதிட்சையும் பெற்றாய்; என் பாவம் போக்க உனது ஆத்துமம் சரீரத்தால் மிகமிகப் பாடுபட்டு உயர்ந்த சிலுவை மரத்தில் அறையுண்டு இறந்தாய், யானும் மண்ணினில் ஓர் விசை இறப்பேன். நீ கல்லறையினின்று எழுந்தனை, யானுங் கடைசியில் எழுந்திருக்கேனை? நீ மண்ணுல

கத்தைவிட்டு விண்ணுலகத்திற்கேகி பிதாவின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றனை - நானும் கடவுளாகிய உன் வலத்தில் வந்திருப்பேன். யேசு என்று உனக்கு மாத்திரம் பெயரோ? இப்பெயர் யேசு - சீராக்குக்கும் இருந்தது (பரபாசு என்ற கள்ளன் உயிர் பிழைக்கச் செய்தாயே, உன் பெயரால் அவன் பெயரும் ஏசு - பார் - அப்பாசுதானே, Jesu - bar - Abbas].

எழில்பெறு . . . யேசு நாயகனே.

நயவுரை:

ஏசுவின் பிறப்பிலிருந்து - அவர் பாடுபட்டுச் சிலுவையிலறையுண்டு மரித்து - எழுந்து - விண்ணேறி பிதாவின் வலப்பக்கத்தில் அமர்ந்த பயணத்தைச் சொன்ன நாயகியும் இயேசுவைப் போலவே முதற்பிறப்பும், ஞானதீட்சையால் மறுபிறப்பும் பிறந்து இறந்து கடைசியில் உயிர்பெற்றெழுந்து அவரோடு என்றும் இருப்பேன் என்று உறுதியோடு உரைத்தாள் என்க.

செய்யுள் 11

தேவன் என்றிருந்து மனுடனுமானாய்
சிஷ்டிகன் சிஷ்டியாய்ப் போனாய்
சிங்கமோ மிருகம், நீயும் யூதாவின்
சிங்கம் என்று எடுத்தபேர் திறமோ?

மேவி நீ ஆட்டுக் குட்டியே யானால்
மேய்ப்பதற்கு ஆ எங்கே கிடைக்கும்?
மேய்ப்பன் நீ யானால் குட்டியுமாகும்
விதம் உலகெங்கணும் காணேம்.

காவில் நீ சீவ விருட்சமே யானால்
கனிஉண்ணும் பறவைகள் எவையோ?
கண்ட எம்மவு வழிப்போக்கன் நீ எனிலும்
கவையிலை என்று தானிருந்தேன்;

ஏவையின் மகள் நான், நீயும் இஸ்திரியின் வித்து,
எனக்கு நீ மேன்மையாய் வாய்த்தாய்;
எழில்பெறு ஓயோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே.

தேவன் மனுடன் ஆனார்; சிருட்டிகன் சிருட்டியானான். இம் மாற்றங்கள் ஒன்றற்கொன்று மாறுபட்டவை, எனினும் தொடர்புகொண்டவை - எனவே முரண்டொடை என்பர் இலக்கணிகள். Paradox என்பது ஆங்கிலம்.

ஆ - ஆடு.

செய்யுள் 12

கள்ளமற்று உன்னையே செபத்தினுல் பிடித்துக்
கருத்தினுல் சிலுவையில் அறைந்து
கால் கரத்தாணி கடாவி வைத்திருந்தால்
கடந்து போம் வழி உனக்கில்லை;

வள்ளலே, இதை உன் வல்லபத்தாலே
மாற்று வாயென்று தான் வைப்போ?
மறுபடியுனை என் மனத்தகத் தடைத்து
வைத்திருந்தால் எனை விட்டுத்
தள்ளிப் போகும் இடம் உனக்கேது?

சமுத்திரத்தினில் நீ தூங்கின கள்ளத்
தனம் இனி நடக்குமோ நடக்கா

எள்ளளவேனும் உன்றனை விடுத்திருக்கேன்

இது திடம், என்னை ஆள், ஐயா;
எழில்பெறு சியோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே.

ஒப்புநோக்கு:

'மறுபடியுனை என் மனத்தகத்தடைத்து . . . உன்றனை விடுத்திருக்கேன்'

(திருவாசகம், பிடித்த பத்து, செ. 2.)

'இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே.'

செய்யுள் 13

அத்தனே, உன் மகத்துவந்தனை யார்
அளவிடக் கூடும்? உன் பெயரும்
அதிசயமானேன், உன் மனுடாவதா
ரச்செயல் அண்டரான வரும்

புத்தியிற் கிரகித் துணர்வதற் கரிதே,
புகழ்ச்சியோ இகழ்ச்சியோ பேதை
போற்றிய நிந்தாஸ்துதி யெலாங் கேட்டுப்
பொறுத்து இரட்சியும், பராபரனே

பித்தரும் படியா மடையரும் கல்விப்
பெருமை கொண்டவரும் வெவ்விதமாய்ப்
பிதற்று வார் மனதுக் கெட்டின படியே
பேசுவார் ஏசுவார் உன்னை

எத்தனைகோடி நிந்தையோ பட்டாய்
இதுமகா அதிசயப் பொருட்டோ
எழில்பெறு சியோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே.

பொருள்:

'பித்தரும் மடையரும் கற்றவரும் பலவிதமாய்ப் பிதற்றுவார்; நானும் என் மனதுக்கெட்டினபடியே பேசினேன், இது மகா அதிசயமோ?'

செய்யுள் 14

மகதலாவூரின் மரிபவம் பொறுத்தாய் (1)
வஞ்சகர் இடரெலாம் ஒறுத்தாய்
வருதிர்வாதக் காரன் வல்வினை தீர்த்தாய் (2)
மாதர்கள் அழுதால் ஆற்றுவித்தாய் (3)

சகமதிற் கையுங் களவுமாய்க் கண்ட
தையலுக்கு ஆக்கினை தவிர்த்தாய் (4)
தவறு செய் கள்ளன் தனக்கு உரைகொடுத்தாய் (5)
சந்தெகத் தோமையைச் சயித்தாய் (6)

அகமதாய் மறுத்த பேதுருதனையும் (7)
அகற்றிடாது இரங்கி ரட்சித்தாய்
அஞ்சிய காளன் இஸ்திரிக்கிரங்கி (8)
அவள் மனுப்படி செய்து ஆதரித்தாய்
இகமெலாம் புரக்கச் சிலுவையின் மரித்தாய் (9)
என்னையும் காத்தருள் ஐயா,

எழில்பெறு சியோன் மகள் மணவாளா,
இறைவனே, இயேசு நாயகனே.

பொருள் — தெளிவு. மரிபவம் - மரியாளின் பாவம்.

நிந்தாஸ்துதிப் பதிகத்தின் இறுதிச் செய்யுளைப் பிறைக்கோடு களுக்கிடையில் அடைத்துப் படைத்தார் வேதநாயகர். இச் செய்யுள் இப்பதிகப் பொருளுக்கு ஏற்புடைத்ததா இல்லையா என்ற ஐயப்பாடு அவர் மனத்தில் தோன்றியிருக்கலாம். செய்யுளைக் காண்போம்.

செய்யுள் 15

(வேதநாயகன்மேல் வாமனையெடுத்து
விட்டு வேடிக்கைகள் பார்த்தாய்,
மிக்கேலுமுத்து அவன்பெண் டூரையே கொண்டு
வியாகுலப்படுத்தி வாதித்தாய்,

சாதிகள் தனையும் உசுப்பிவிட்டு அநேகச்
சங்கடங் களையெலாம் விளைத்தாய்,
சற்குணத் திருந்த பாக்கிய நாதன்
சதிசெய்வ தற்கிடங் கொடுத்தாய்,
போதவே பகைத்த அடைக்கலத்தையர்
போர் அதிகரிக்க வைத்தாய்,
புண்ணியவானே, எத்தனையோ வேடம்
போடுவாய் ஆடுவாய், ஐயா,
ஈதெலாம் படுத்திக் கோபம் ஆறினபின்
எழுப்பி ஆபத் தெலா முடித்தாய்,
எழில்பெறு சீயோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே.)

பதவுரை:

போதவே - போதிய அளவு; வாமன் - குள்ளன்.

பொருள்:

தனக்கு வந்த ஏழுவகைத் துன்பங்களுக்கெல்லாம் நீரே காரணர் என்று நிந்தித்துப் பல்லவியில் துதித்தார் மணவாட்டியாம் வேதநாயகர்.

பொருள்:

வேதநாயகன் எனத் தொடங்கி, யேசுநாயகன் என நாயக நாயகி பாவத்தில் செய்யுளையும், பதிகத்தையும் முடித்தார் கவிஞர்.

பொருள்:

1. வேதநாயகன்மேல் வாஞ்சனைத் தூண்டிவிட்டு வேடிக்கைகள் பார்த்தாய்;

2. மிக்கேலு முத்து என்பவனின் வீட்டுப் பெண்களைக் கொண்டு என்னைத் துன்புறுத்தி வாதித்தாய்;

3. சாதிச் சச்சரவைக் கிளப்பிவிட்டுப் பலவித சங்கடங்களை விளைவித்தாய்;

4. சற்குணராயிருந்த பாக்கியநாதன் சதி செய்வதற்கு உடனுளியாயிருந்தாய்;

5. போதுமான அளவு என்னைப் பகைத்த அடைக்கலத்தையரோடு ஏற்பட்ட போராட்டத்தை அதிகரிக்கச் செய்தாய்;

6. புண்ணியவானே, வேடதாரியே, எத்தனையோ வித வேடம் போடுவாய். ஆடுவாய். நாடோடி நக்கல் மொழிகள்.

7. இவ்வாறெல்லாம் என்னைப் பாடுபடுத்திக் கோபம் ஆறின பின் என்னை எழுப்பி, என் ஆபத்தெல்லாவற்றையும் தீர்த்து முடித்தாய்.

எழில்பெறு சீயோன் மகள் மணவாளா,
இறைவனே, யேசு நாயகனே.

26. ஜெபமாலை

திருச்செயல்—முன்னுரை

பாடலமைப்பு:

தாயுமானவர் பாடல்களின் அமைப்பை வேதநாயகர் ஏற்று அவற்றுள் தம் கிறித்தவ சித்தாந்தக் கருத்துக்களைப் பெய்துள்ளார் என்பதை இப்பாடலில் பெரிதுங் காணலாம். கிறித்தவத்தைத் தமிழாக்க முயன்ற சீரிய முயற்சியாகும் இது.

தாயுமானவர் தம் செய்யுட்களின் ஈற்றடிகளில் பல்லவி போன்ற கடைமடக்காகப் பாடியதுபோலவே வேதநாயகர் தம் செய்யுட்களை அமைத்தார் என்பது தேற்றம். எடுத்துக்காட்டு (எ.கா.).

தாயுமானவர்:

'ஆண்டபகி ரண்டமும் அடங்கவொரு
நிறைவாகி ஆனந்தபரமே'

என்பது ஈற்றடி.

இதற்கு முந்தின அடி:

'ஐயனே அப்பனே எனும் அறிஞர் அறிவைவிட்
டகலாத கருணை வடிவே.'

வேதநாயகர்:

'கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணையா னந்த வடிவே.'

தாயுமானவர் 'கருணை வடிவே' என்றதை வேதநாயகர் ஒரு சொல்லை இடையில் வைத்துக் 'கருணை ஆனந்த வடிவே' என நிரப்பினர். 'ஆனந்த' என்ற சொல்லும் தாயுமானவருடைய 'ஆனந்த பரமே' என்றதில் அமைந்துள்ளது.

இனி, 'கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே' என்ற சொற்றொடரை ஆராய்வோம்.

கருத்தா - கிரியை செய்பவனே; பரத்தாள் - பரத்தை ஆள்பவனே; திரித்துவ - மூன்றுகிய; ஏகத்துவமே - ஒருத்துவம். மூன்றுகிய ஒருவனே; மூன்று கவடுகளாகிய ஒருவனே. இவ்வாறு தாயுமானவரும் யூதரும், இஸ்லாமியரும் சொல்ல இயலாது, சொல்லவும் மாட்டார். இச்சொற்றொடர் கிறித்தவ இறை இயலின் தனித் தன்மை.

இந்த 26-வது ஜெபமாலைக்குக் கவிஞர் கொடுத்த தலைப்பே, அதிலுள்ள 11 செய்யுட்களின் பொருளுக்கு ஏற்புடைத்து. திருச் செயல் என்பது பதிகப் பொருளின் தொகுப்பு. பதினொரு செய்யுட்களும் அதன் விரிப்பு.

செயல் என்பது செய்யப்படுவது. யாரால் செய்யப்படுவது? 'திரு'வால் செய்யப்பட்டது. திரு என்ற சொல் ஈண்டு, கடவுள் என்றே பொருள்படும். இதனை ஆங்கிலத்தில் The great or mighty Acts of God என்பர். இலத்தீனில் magnalia Dei என்பர். இத் திருச் செயல்களை நினைவுகூர்ந்து பாடுவது புகழ்சேர்புகழ் என்றும், திருப்புகழ் என்றும் கூறப்பட்டது. இதனை இலத்தீனில் Jubilate Deo என்பர். வேதநாயகர் பாடியது இத்தகு திருப்புகழ். இதிலே புகழ்ச்சியும் பரவலும் விண்ணப்பமுமுண்டு.

இத்திருச்செயல்களைக் கூறப் புகுந்தவர், முதற் செய்யுள் முதலடியில்:

'ஒன்றுமில்லாமையில் நின்று உலகம் யாவையும்
உண்டு பண்ணின தில்லையோ'

என்று புகுமுகம் செய்தார் கவிஞர். இது விவிலியத்தின் முதலாகமத்தின் முதற் சுலோகங்களாகும்.

செ. 8: 'வித்திலாமையினின்று வினைவு செய்வாய்' என்று தொடங்கியவர், மேகமின்றி மழைபெய்ய விதிப்பாய், வெய்யவனில்லாமல் ஒளி வீசுவாய், செத்து உலர்ந்து அழிவான என்புகளையும் தீர்க்கதரிசனம் சொல்ல உயிர்ப்பிப்பாய் என்று விளக்கங் கொடுத்தார். இக்கொள்கையை, 'Creation out of nothing' என்று ஆங்கிலத்திலும் 'Creatio ex nihilo' என்று இலத்தீனிலும் கூறுவர்.

ஒப்புநோக்கு:

மாணிக்கவாசகர், திருச்சதகம் செ. 96:
விச்சதின்றியே வினைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய்...

என்றார்.

விச்சு - வித்து; வைச்சு வாங்குவாய்=வைத்து அழிப்பாய்.

மேலும்:

வஞ்சகப் பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலில்
பிச்சனுக்கினுய், பெரிய அன்பருக்
குரியனுக்கினுய்; தாம் வளர்த்ததோர்

நச்சு மாமர மாயினுங் கொல்லார்,
நானும் அங்ஙனே, உடைய நாதனே

என்றார் மணிவாசகர்.

புலையனாகிய அவர் பெரிய அன்பருக்குரியவனாக்கப்பட்டார். இப்பொழுது அவர் நச்சு மரமாயினும் அவரை வெட்டி வீழ்த்த வேண்டாம் என்று இறைவனே இறைஞ்சுகிறார். இறைவனும் அவரை வெட்டி வீழ்த்தவில்லை, வாழ்வித்தார்.

இக்கருத்தையும் சொல்லையும் உருவகத்தையும் ராமலிங்க அடிகள், இரண்டாம் திருமுறை - 151இல் கூறியதைக் காண்க:

'வித்தொன்று மின்றியே விளைவெலாந் தருகின்ற
விஞ்ஞான மழை செய்முகிலே'

26. திருச்செயல்

இறைவன் திருச்செயல்களை வியந்து புகழ்தல். பதினெரு செய்யுட்கள் கொண்டது. ஒவ்வோர் செய்யுளின் முடிவில்

''கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணையா னந்த வடிவே''

என்ற மகுடம்கொண்டு முடிகின்றது. இப்பாடல்களுக்கு ஊற்றுக்கண்ணாயிருந்தது தாயுமானவர் பாடிய கருணைகரக் கடவுள் என்ற பாடலாகும். இத்தகு சமய இலக்கியப் பொற் கிண்ணத்தில், தாம்கண்ட கருணையானந்த வடிவைப் பட மெடுத்து, கருணைகரக் கடவுளின் திருச்செயல்களைத் திருமறையில் கண்டு, தமது சொந்த அனுபவத்தில் உணர்ந்து உரைப்பதைக் கண்டு ரசிக்கலாகும்.

கவி வேதநாயகர் ஓர் வேத விற்பனர், வேத சாத்திரத்தைத் தோத்திரமாகப் பாடிய வித்தகர். தம்மைத் தடுத்தாண்டு கொண்ட இயேசு பெருமானது திருச்செயல்களைக் கூறி,

கலையாமல் என் மனம் நிலையாக நிற்க வழி
காட்டுவ துனக்கு அருமையோ

என்று விண்ணப்பம் செய்கின்ரூர்.

ஒவ்வோர் செய்யுளிலும் இறைவன் திருச்செயல்களில் ஆறு அல்லது ஆறுக்கு மேற்பட்டனவற்றைக் கூறி, இத்தனை அரும் பெரும் செயல்களைச் செய்த உனக்கு என் மனதை நிலையாக நிற்க வழிகாட்டுவது அருமையா, இல்லை என்ற பொருளில் இறைஞ்சுகிரூர் வேதநாயகர், தாயுமானவரைப்போல.

இப்பகுதியில் முதல் பத்து செய்யுட்கள் இறைவனது அருட் செயல், மறச்செயல்களைத் திருமறையில் கண்டவாறு கூறி, பதினேராவது செய்யுளில் இறையருள் தமக்கெவ்வாறு லபித்தது என்று தன் சுய சரிதமாகப் பாடிவைத்தார் வேதநாயகர்.

செய்யுள் 1

ஒன்றும் இல்லாமையில் நின்று உலகம் யாவையும்
உண்டு பண்ணின தில்லையோ
ஊழித் துவாந்தத்தில் நின்று ஒளி பிரகாசிக்க
உத்தரவு செய்ததில்லையோ

சென்று அந்தரங்களில் கிரகங்கள் வான் மீன்கள்
சேரும் வழி வைத்த திலேயோ
திவலேகள் அனந்தனங்களா யேறியே
சேணின்று பெய்ய விலேயோ
வென்றிபெற இஸ்ரவேற் கொருநாளில் ஆதித்தன்
மீண்டுநின்று ஏகவிலேயோ
விரிகடல் இரண்டாகப் பிளந்து யோர்தான் தானும்வழி
விட்டு அடங்கின திலேயோ
கன்றிடா தென்மனம் சீராக ஒருநவம்
காட்டுவ துனக் கருமையோ
கருத்தா பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே
கருணை ஆனந்த வடிவே.

வேதநாயகர் பாடிய இவ்வடிகளுக்குத் திருமறை ஆதியாகமம் 1:1–3 ஆகும். அவற்றைக் காட்டுதும்.

1:1 'ஆதியிலே கடவுள் விண்ணையும் மண்ணையும் படைத்தார். (2) பூமி உருவமற்றதும் வெறுமை உற்றதுமாயிருந்தது. பாதாளத்தின் முகத்தே இருள் பரவி இருந்தது. கடவுளின் ஆவியானவர் தண்ணீரின்மீது அசைவாடிக்கொண்டிருந்தார். (3) அப்பொழுது கடவுள்: ஒளி உண்டாகுக என்று உரைத்தார். உரைக்கவே, ஒளி உண்டாயிற்று.'

ஊழித்துவாந்தம் - ஊழி இருள்.

In Today's English Version it runs as follows:

'In the beginning, when God created the universe, the earth was formless and desolate- the raging ocean that covered everything was engulfed in total darkness and the power (the spirit) of God was moving over the water.'

2. Then God Commanded, ''Let there be light'' and light appeared.

பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிற்கும் மேற்கோள் காட்டிய, கவிஞர் காட்டாத, இக்கருத்துக்குப் பொருத்தமான இரு மேற்கோள்களைக் காணுதல் கூடும்.

1. சங்கீதம் 33-6:9:

(6) ஆண்டவரது வார்த்தையால் வானங்கள் உண்டாயின; அவர் சொன்ன சொல்லால் வானத்து அணிகளெல்லாம் உண்டாக்கப்பட்டன.

(9) ஏனெனில், அவர் ஒரு சொல் சொல்ல எல்லாம் உண்டாயின; அவர் கட்டளையிட எல்லாம் உருவாயின.

இந்த வாக்கியங்களின் நயம், ஒன்றுமில்லாமை என்ற வழக்காற்றைக் கூறுது, அவர் வார்த்தையால், சொல்லால் எல்லாம் உண்டாயின என்பதாகும். இங்கே 'வார்த்தை' என்ற சொற்கள் எபிரேய மொழியில் dabar எனப்படும்.

(3) அந்தரங்களில் கிரகங்கள் சென்று வான் மீன்கள் சேரும் வழி வைத்ததிலையோ என்றவற்றிற்கு ஆசிரியரே யோபு 26: 7; 38:31-35ஐ மேற்கோள் காட்டியுள்ளார்.

(4) 'திவலைகள் . . . சேணின்று பெய்யவிலையோ' - யோபு 36:27; 38:34.

(5) 'ஆதித்தன் நின்று மீண்டு நின்று ஏகவிலையோ' - யோசுவா 10:12-13.

(6) 'விரிகடல் இரண்டாய்ப் பிளந்து ...'—யாத். 14:14.

(7) 'யோர்தானும் வழிவிட்டடங்கினதிலையோ' - யோசுவா 3:13-16.•

அரிய செயல்கள்

செய்யுள் 2

பொறையை இடம்விட்டுப் பெயர்ந்து கடலில்
தாழ்ந்து போகஉத்தரவு செயலாம்;
பொங்குதிரையின்மேல் நடக்கலாம்; சிங்கத்தைப்
போர் செய்து கொன்றுவிடலாம்
மறுபாடை பேசலாம், பேயைத் துரத்தலாம்
வல்லரவு கீளநீக்கலாம்;
மரணத்துக்கினமான நஞ்சுண்டு தீவினை
வராது காத்துக்கொள்ளலாம்,
அறுதியாய்ச் சுகமிலாதவர்கள் கைவைத்து
ஆரோக்கியம் ஆக்கிவிடலாம்
அஞ்திரட்சகரைவிசு வாசித்த பேர்களின்
அடையாளம் இவைகளன்றே;

கறையான மனதில் இருள் இரிதல் அரிதுஅரிதே
கடாட்சித்துன் அடிமை கொள்வாய்
கருத்தா, பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே,
கருணை ஆனந்த வடிவே.

பதவுரை:

இரிதல் - அழிதல்; பொறை - மலை.

ஒப்புநோக்கு:

இச்செய்யுளின் அமைப்புத் தாயுமானரின் தேசோமயானந்தம் என்பதை ஒட்டியுள்ளது: 'கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம், கரடி வெம்புலி வாயையுங் கட்டலாம்...'

இதன் பொருள் முழுதும் சத்திய வேதத்தில் உள்ளன.

(1) பொறையை இடம்விட்டுத் தாழ்ந்து ... மத். 14:24-3.
(2) பொங்கு திரையின் மேல் நடக்கலாம்
(3) சிங்கத்தை வென்றுவிடலாம் 1 சாமு. 17:34-36
(4) மறுபாடை பேசலாம் - (பாடை - பாஷை)
மார்க்கு 18:17-18

(1) **ஒன்றுமில்லாமையில் நின்று**

(2) **உலகம் யாவையும் உண்டுபண்ணினதில்லையோ.**

இச்செய்யுளின் முதலடியில் உள்ள இவ்விரு பகுதிகளில் இரண்டாவது குறிப்பிட்டதை முதற்கண் ஆராய்வோம். கம்பர் 'உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்' என்று சொல்லித் தம் இராமகாவியத்தைத் தொடங்கினர். கம்பரை நன்கறிந்த மகாவித்துவான் எச். ஏ. கிருஷ்ணபிள்ளை 'சொல் ஒன்றுல் அனைத்துலகும் தோற்றுவித்தாய்' என்றதோடு 12 செய்யுட்களில் திருவருட் பெற்றியைப் புனைந்து வியந்து ஏத்திப் பாடியதைக் காண்க.

கம்பர், 'உலகம் யாவையும்' என்றதையே வேதநாயகரும், 'உலகம் யாவையும் உண்டுபண்ணினது' என்றார். 'அனைத்துலகும் தோற்றுவித்தாய்' என்றார் கிருஷ்ணபிள்ளை. இல்லாத ஒன்றை உளவாக்கலும் உண்டுபண்ணியதும் ஒன்றுதானே. கண்ணுக்குத் தோன்றுத ஒன்றைத் தோற்றுவித்தல் இறைவன் செயலாகும்.

(2) இனி, 'ஒன்றுமில்லாமையினின்று' என்பனவற்றைக் காண்போம்.

கம்பர், மாணிக்கவாசகர், வேதநாயகர், கிருஷ்ணபிள்ளை என்பவர்கள் கொண்ட கொள்கையை வலியுறுத்தும் மகாவாக்கியம் இது.

வழிகாட்டுவது உனக்கருமையோ?

செய்யுள் 3

மலடனுய் நூற்றுண்டு இருந்தவன் வித்தை
மண்தூளாகவும் தொகையிலா
வானத்து மீன்களுக்கு ஒப்பாகவும் பெருகி
வர்த்திக்கச் செய்ததிலேயோ? (ஆதி. 15:4–6)

அலேகடல் கொந்தளிப்பும் கொடுங் காற்றும்
அமரச் சொல் பகர்ந்த திலேயோ? (மாற்கு 4:35–41)
ஆதித்தனேப் பூமியும் பூமியைச் சுற்றி
அம்புலியும் ஓட விலேயோ?

வலிய கன்மலேயினின்று உதகமும், வானின்று
மன்னுவும் வரவில்லேயோ? (யாத். 17:1–20; 16:6–12)
மறையவன் கோல்துளிர்த்துப் புயர்கம்பமிம்
வந்து வழிகாட்ட விலேயோ? (எண். 17:8; யாத். 14:19†)

கலேயாமல் என்மனம் நிலேயாக நிற்க வழி
காட்டுவது உனக்கு அருமையே?
கருத்தா, பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே,
கருணே ஆனந்த வடிவே.

பதவுரை:

புயர் கம்பம் - உயர்ந்த தூண்.

பொருள்:

ஆபிரகாம் 120 ஆண்டு மலடனுய் பிள்ளே இல்லாதவனுக இருந்தபொழுது அவன் வித்தை எண்ணமுடியாத மண் தூளாகவும் விண்மீன்களாகவும் பெருக விருத்திசெய்வோம் என்று வாக்களித்து நிறைவேற்றினதிலேயோ? கடலேயும் காற்றையும் சொல்லொன்றுல் அடக்கினதில்லேயோ? கன்மலேயிலிருந்து குடிநீரும் வானத்திலிருந்து மன்னுவும் வருவித்ததில்லேயோ? ஆரோனுடைய கோல் தளிர்விடச்செய்து மேகத்தளவு உயர்ந்த தூணும் (கம்பமும்) இஸ்ரவேலர்க்கு வந்து வழிகாட்டவிலேயோ?

இத்தனே இயற்கை கடந்த அரிய பெரிய செயல்களேச் செய்த உனக்கு என் மனம் கலேயாமல் ஒரு நிலேயில் நிற்க வழிகாட்டச் செய்வது அருமையோ இல்லே என்றூர். This is a rhetoric question which demands a nagative answer.

கலேயாத ஒரு நிலேயில் நிற்கும் மனம் — ஏகாக்கிர (ஏக + அக்கர) சிந்தை (single-pointed-attention) என்பர் யோகியர்.

நின்சித்து வித்தையைக் கண்டறிந்தவர்கள் உளரோ?

செய்யுள் 4

ஆகாய விரிவின் முடிவு எங்ஙனம்? நீர்களுக்கு
அளவு பிரமாண மென்ன? (யோபு 27:25)
ஆயிர வருடம் ஒருநாளாகி, நாளும்
ஆயிர வருடமாகும் விதமென்ன? (2 பேதுரு 3:8)

வாகான காற்றுக்குத் தக்க நிறை என்ன?—அது
வரும் முதலும் முடிவும் எங்கே? (யோவான் 3:8)
மழைகளின் திட்டமென்ன? இடி முழக்கங்கள் மின்
னலுக்கு வழி வைத்த தெவ்விடம்? (யோபு 28:25–28)

சாகாத ஏனோக்கும் எலியாவும் வைகின்ற (ஆதி. 5:24)
தலமேது? விசுவாசிகள்
தாபரிக்கின்ற பரதீசு பாதாளமோ (2 இராஜா. 2:11)
தரையிலோ வானத்திலோ? (யோவான் 3:13)

கா, கா, உனக் கபையம், நின்சித்து வித்தையைக்
கண்டறிந்தவர்கள் உண்டோ?
கருத்தா, பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே,
கருணை ஆனந்த வடிவே.

வைகின்ற - தங்குகின்ற

உன் மகிமையைக் கண்டு தொழக் கருணைகூர்

செய்யுள் 5

சிற்றுடல் எறும்புக்குக் கண் வைத்ததில்லையோ?
சிங்கத்துக்குக் கெற்சிக்கவும்
தேசிக்கத்தின் கழுத்தில் கனைக்கு தலையும்
திறல் வீரமும் தந்ததார்?

சுற்றும் முகிலுக்கு ஆடையாய் இருள் மூடியே
தொனி கடலுக்கு ஆணையிட்டது யார்?
தோன்றும் விடியலுக்கு இடங்காண்பித்தது யார்?
தோற்றம் உண்டானது எவ்விடம்?

பற்றி அதிகாலை நட்சத்திரங்கள் ஏகமாய்ப்
பாடும் இங்கித ஓசையால்
பரம புத்திரர் களிக்கும்படி அதன்கோடிக்
கல்லைப் பதித்தவர் எவர்?

கற்றறிவில்லாத சிறியேன் உனது மகிமையைக்
சுண்டு தொழ நின் கருணைகூர்
கருத்தா, பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே,
கருணை ஆனந்த வடிவே.

பதவுரை:

தேசி - குதிரை; முகில் - மேகம்; தொனிகடல் - தொனிக்கும் அலைகடல்; விடியலுக்கு - விடியற்காலைக்கு; தோற்றம் உண்டானது - உலகத் தோற்றம் உண்டானது எவ்விடம். இடமில்லாமையால், ஒன்றுமில்லாமையில் நின்று உலகம் உண்டாயிற்று என்று செ. 1 முதலடியில் சொன்னதை இங்கு விளுவாகக் கேட்கிறார் கவிஞர். மகிமை = அற்புதத் திருச்செயல்.

வேதநாயகர்:

5. தொனி கடற்கு அணையிட்டதார்?
தாயுமானவர்–பக். 292—ஆகார புவனம் செ. 28.
உரையிறந்து பெருமை பெற்றுத் திரைக்கை நீட்டி
ஒலிக்கின்ற கடலே இவ்வுலகம் சூழக்
கரையுமின்றி உன்னை வைத்தார் யாரே என்பேன்
தாயுமானவர்–பக். 31.

அந்தகாரத்தையோர் அகமாக்கி மீன்போல் என்
அழிவைச் சுருக்கினவரார்?
சொந்தமாய் எழுதப் படித்ததார்?

உண்டுண்டு தூங்க வைத்தவரார்? பரிபூரணானந்தமே.
வேதநாயகர்: திருச்செயல் செ. 5.

தேசிக்கத்தின் கழுத்தில் கனக்குதலையும்
திறல் வீரமும் தந்ததார்?
தொனிக் கடற் கணையிட்டதார்?
தோன்றும் விடியற்கிடங் காண்பித்ததார்?

உன் கனிவுச் செயல்களை மகிமைப்படுத்தும்

செய்யுள் 6

மனுடரை நிர்த்தூளி யாக்கி மீண்டும் மனுப்
புத்திரரை வருக வென்று
மண் மீதிருத்தி நூற்றாண்டில் ஒருமுறை உலகை
வருத்திப் பின்னுல் பெருக்கி

அனைய உயிர் யாவையும் தாபர சங்கமங்கள்
யாவற்றையும் அழித்து நவமாய்
ஆக்கி வானத்திலும் பூமியிலும் அதிசயங்
களை நடப்பிக்க வில்லையோ?

இனிய பார்வையிலோர் ஆயிர வருடம் நேற்றைக்கு
இறந்த நாள், இரவு சாமம்
இவர் பதினாயிரவர், ஒருவர் ஆயிரவரை
எவ்வாறு ஓட்டவியலும்?

கனிவுனது செயல் மகிமை அறிகிலேன் எனையும்
கடாட்சிப்பது உனது கடனே.
கருத்தா, பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே,
கருணை ஆனந்த வடிவே.

இச்செய்யுளுக்குச் சங்கீதம் 90, ஆதாரமாகும்.

என்மனம் நிலையாக நிற்க வழிகாட்டுவதுனக் கருமையோ?

செய்யுள் 7

மலையை அணுவாக்குவாய், அணுவை மலையாக்கு
வாய், வான்வில்லை உண்டாக்கு வாய்,
மாறுது கிரகங்கள் ஆதித்தனைச் சுற்றி
வருவதற்கு ஆட்டி வைப்பாய்;

அலையையும் திவலைசெய் வாய், திவலையைப் புணரி
ஆக்கி அதன் மீது உலவுவாய்,
அல்லை எல்லாக்கு வாய், எல்லை இருளாக்கு வாய்,
அமரரைப் பேயாக்கு வாய்

நிலையாத நீடுழி காலத்தை நிமிஷமாய்
நிமிஷத்தை நீடுழியாய்,
நெடிய வேதத்தை ஒரு சொல்லாய் ஓர் சொல்லையே
நீண்ட மறையாக்கி வைப்பாய்;

கலையாமல் என்மனம் நிலையாக நிற்க வழி
காட்டுவது உனக்கருமையோ?
கருத்தா, பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே,
கருணை ஆனந்த வடிவே.

அலை - கடல்; திவலை - துளி; புணரி - கடல்; அல் - இருள்; எல் - ஒளி.

வித்தில்லாமல் விளைச்சல் செய்வாய்

செய்யுள் 8

வித்திலாமையில் நின்று விளைவு செய்வாய், மேகம்
இன்றி மழை பெய்ய வைப்பாய்;
வெய்யவன் இல்லாமல் ஒளி வீசுவாய், ஆகாய
விரிவின் மேலே நடப்பாய்;

செத்து உலர்ந்து அழிவான என்புகளையும் தீர்க்க
தெரிசனம் சொல்ல உயிர்ப்பாய்;
திரும்ப இஸ்ரேலை முடிசூட்டியே கானனு
தேசத்தில் வாழ்க வைப்பாய்;

பக்தியில்லாத பர சமையங்கள் யாவையும்
பாழ்த்து அழியப் பண்ணு வாய்;
பாவிக்கு நரக பாதாளத்தில் வீழ்த்தி, நின்
பத்தரைக் கதியில் வைப்பாய்;

கத்தபம் போலான புத்தியிலேன், உனது
காட்சியைக்காண அருள்கூர்,
கருத்தா, பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே,
கருணை ஆனந்த வடிவே.

வெய்யவன் - சூரியன்; பரசமயம் - புறச் சமயம்; பாழ்த்தல் - அழித்தல்; பத்தர் - பக்தர்; கத்தபம் - கழுதை.

•

ஒப்புநோக்கு:

வித்தில்லாமல் விளைவு, திருவாசகம், சதகம், 96 முன்னர் விளக்கப்பட்டது. •

சித்தா, என் கருத்தைத் திருத்த அரிதோ?

செய்யுள் 9

வஸ்திரம்போல் பழசாய்ச் சுருட்டப்பட்ட
சால்வையாம் மாறியுலகும் (2 பேதுரு 3:8–10)
வானங்களும் பூதியங்களும் வெந்துரு
மடமடப்போடு ஒய்ந்துபோம்

நித்தலும் நீயோ இருக்கிற பிரகாரமாய்
நீடுழியும் இருப்பாய்; (சங். 102:12)
நின்றன் வருடங்கட்கு முடிவில்லை, நினதிராச்
சிய பாரம் என்றும் நிற்கும் (எபி. 1:8)

சத்துருக்களை நொறுக்கிப் பாதப்படியிட்டுச்
சருவசங் காரமாக்கித் (சங். 110:1)
தாழ்ந்தவரை மேலாய் உயர்த்திப் பெருமைக்காரர்
தங்களைத் தாழ்த்த அறிவாய், (1 சாமு. 2:7,8 பப்ரீசியுஸ்)

கத்து கடலைப் படிய வைத்த சித்தா, என் (ஞா. பா. 263)
கருத்தைத் திருத்த அரிதோ?
கருத்தா, பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே,
கருணை ஆனந்த வடிவே.

செய்யுள் 10

எல்லா வானங்களின் கீழிருக்கின்ற
யாவற்றையுங் கண்ணோக்கியே (சங். 104:27–30)
எண்ணிலா உயிர்களுக்கும் படியளந்து
எளியவர்களையும் இனிது தாங்கிப்

பொல்லாத பேர்களைத் தாழ்த்தி ஆகாதவர்
புயங்களை முறித்தெரிந்து
பூமியின் கடையாந்திரங்களைக் கண்டொருவர்
பூட்டாமலே திறந்து (வெளி. 3:7)

வல்லாண்மையாரும் திறக்காது பூட்டும்
மகா மகத்துத் தெய்வமே;
வானத்திலும் பூமியிலும் உமக்கொப்பில்லை,
வலிய காரியமுமில்லை (1 இராஜா. 8:23)

கல்லாத மூடாத்துமம் எனினும் என்னை ஆட்கொண்டு
காப்பது அரிதோ பிரமமே.
கருத்தா, பரத்தாள் திரித்துவ ஏகத்துவமே,
கருணை ஆனந்த வடிவே.
காப்பது அரிதோ - வலிய காரியமில்லை, எளிதே.

செய்யுள் 11

இருளார்ந்த இந்தியாவில் கிறிஸ்தவர் குழாம்
எவ்வாறு அது உண்டாயின?
ஈரோப்புத் துரைகள் இத்தேயத்தை ஆள்வதற்கு
என்ன விதமாய் முளைத்தார்?
தெருளார்ந்த சுவார்ச்சையர் தஞ்சையில் சபைகளைச்
சேர்த்தது யாருடைய சித்தம்?
திருநெல்லைச் சிவபத்தன் யேசுவின் சீடனைச்
செபமாலை பாடவில்லையோ?

பொய்த் தேவர் வாழ்வு குறைபட்டது இவையாவும் உன்
புதுமை யல்லாது வேறோ?
கருளார்ந்த மனதுநின் அருள்கூர்ந்திருக்க வழி
காட்டுவது உனக்கு அருமையோ?
கருத்தா, பரத்தாள் திரித்துவ யேகத்துவமே
கருணை ஆனந்த வடிவே.

இந்திய கிறிஸ்தவ திருச்சபைக்குத் திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய இயேசு கிறிஸ்து செய்த ஆறு புதுமைகளைக் கவி வேதநாயகர் இச் செய்யுளில் சிறப்பாகக் கூறி மகிழ்கின்றார்.

(1) கிறிஸ்துவின் அடியார் கூட்டம் என்ற திருச்சபை இருள் நிறைந்த இந்தியாவில் எவ்வாறு உண்டாயிற்று?

இருளார்ந்த ஈந்தியா - கிழக்கிந்திய கும்பெனி, East India Company யார் காலத்தில். வேதநாயகர் தஞ்சையில் வாழ்ந்த காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் என்க.

அக்காலத்தில் ஆங்கிலேயர் நம் நாட்டை 'Benighted India' என்று இழித்துரைத்தனர். அதனால்தான் இந்தியாவை 'ஈந்தியா' என்றனர் நம் கவிஞர். அதே பாணியில், ஐரோப்பா, யூரப் என்னாது 'ஈரோப்பு' என்றார்.

(2) ஐரோப்பியத் துரைகள் இத்தேசத்தை ஆள்வதற்கு என்னவிதமாய் முளைத்தார்? என்று வினவிட, முதலடியில் கிறிஸ்தவர் குழுக்கள் எவ்வாறு உண்டாயின என்று நயம்பட உரைத்தவர், இரண்டாமடியின் ஈற்றுச் சொல்லாக 'என்னவிதமாய் முளைத்தார்' எனத் தம் இகழ்ச்சி உணர்வை வெளிப்படுத்தினார். கெட்டதோர் மகனைப் பார்த்து - 'நீ எப்படித்தான் எனக்கு வந்து முளச்செயோ' என்று கொச்சையாகச் சொல்வாள் தாயார்.

(3) 'தெருளார்ந்த சுவார்ச்சையர்'; தெருள் - தெளிந்துள்ள. ஆர்ந்து - ஆராய்ந்து. ஆன்றமைந்த கொள்கைச் சான்றோர் சுவார்ச்சையர் தஞ்சாவூருக்கு வந்து கிறிஸ்தவ சபைகளைச் சேர்த்தது எல்லாம் வல்ல இறைவன், கருணையானந்த வடிவினனது திருச்சித்தம் என்றார்.

(4) கம்பருக்குச் சடையப்ப வள்ளல் வாய்த்தாற்போன்று வேதநாயகருக்குச் சுவார்ச்சையர் வாய்த்ததோர் புதுமை என்றார். இதனால்தான், 'திருநெல்வேலியில் சிவ பக்தனாயிருந்தவர் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சார்ந்து, தேவசகாயம் பிள்ளைக்கு மகனாகப் பிறந்து, சுவார்ச்சையரால் (Christian Frederic Schwartz, a German Lutheran Missionary) தஞ்சாவூருக்குக்

கொண்டுவரப்பட்டு, 1803-ஆம் ஆண்டு ஆணித் திங்களில் ஜெப மாலை என்ற மாலை பாடித் தம்மைத் தடுத்தாண்ட யேசு பெருமானின் திருவடிகளுக்குப் பாதகாணிக்கையாகப் படைத் தேன் என்றார். 'சிவ பக்தன்' இயேசுவின் சீடனாக மாறியதோர் 'மனம் மாற்றம்' என்ன (Conversion).

(5) சுவார்ச்சையர் காலத்திலும் அவர்க்கு முன்னரும் பின்னரும் தெருளார்ந்த சுவார்ச்சையர் போன்ற பலரும் பொருள் சேர்ந்த பொருளார்ந்த சத்திய வேதாகமங்களை எச்சாதிக்கும் பொதுவாய் வழங்கவில்லையோ என்று பெருமிதங் கொண்டார். இதுகாறும் கீழ்ச் சாதிகளுக்கும் பெண்களுக்கும் மறைக்கப்பட்ட பொருளாயிருந்த வேதம் எல்லாச் சாதியார்க்கும் பொதுவாய் வழங்கப்பட்டது.

(6) பொய்த் தேவர் வாழ்வு குறைபட, இதே செபமாலையில் பதினைந்து செய்யுட்கள் அமைந்த 'வீண்பத்திநாசம்' என்றதோர் பதிகத்தையும் பாட அருள்கூர்ந்த.

'இவையாவும் உன் புதுமை யல்லாது வேறே'

என்று இறுமாந்து கூறுகின்றார் கவிச் சக்கரவர்த்தி வேதநாயகர்.

சுவார்ச்சையர் வேதநாயகர் வாழ்க்கை வரலாற்றை 'ஆரணி திந்தம் - உரை' என்று யாம் எழுதவிருக்கும் நூலில் கண்டு கொள்க.

27. ஜெபமாலை

திருவிளையாட்டுஞ்சல்

புகுமுகம்:

தம் வறையறையின்படி வேதநாயகர், இப்பதிகத்தைக் காப்புச் செய்யுளோடு தொடங்கினர். 'போற்றி' என்று முதற் செய்யுளில் தொடங்கித் தம் ஜெபம் என்ற பூமாலையைப் 11 கண்ணி களால் தொடுத்து, 11-ஆம் செய்யுளில், 'போற்ற' எனச் சொல்லி மாலையின் இரு முனைகளையும் சேர்த்து முடிச்சுப் போட்டார்.

மகுடம்:

ஒவ்வோர் செய்யுளின் ஈற்றடிகளிலும்,
'செங்கையருள் தவிது மைந்தா ஆடீரூஞ்சல்
தேவ திருச்சபை மகளோடு ஆடீரூஞ்சல்'

என்றே முடித்தார். இஃதிலோர் இறைஇயல் நுட்பம் உண்டு. இந்த நயத்தை முதற் செய்யுளின் உரையில் வெளிக்கொணர் வோம்.

காப்புச் செய்யுள்

செய்யுள் 1

துங்கமிகும் வானுடும் புவியும் தந்த
சோதி திரியேக பராபரனைப் போற்றி;
மங்களமாய்ச் சீயோனின் மாதை வந்து
மணம்புரியுங் கிறிஸ்தரசன் மகிமைக்காகச்
சங்கைமிகுந் திருவிளையாட்டுஞ்சல் பாடச்
சத்தியத்தின் அரூபியர் சகாயஞ் செய்வார்;
செங்கையருள் தவிதுமைந்தா, ஆடீரூஞ்சல்,
தேவ திருச்சபை மகளோடு ஆடீரூஞ்சல்!

பொருள்:

மிக உயர்ந்த வான நாட்டையும் பூவுலகையும் நமக்குத் தந்த சோதிமயமான தி ரி யே க பராபரனைப் போற்றுகிறேம்; சீயோனின் மகளாகிய திருச்சபையை மங்களமாக வந்து மணம் புரியுங் கிறிஸ்தரசன் மகிமைக்காகத் துதி மிகுந்த திருவிளையாட்டு ஊஞ்சல் பா பாடச் சத்தியத்தின் அரூபியர் எமக்குச் சகாயம் செய்வார்; கொடுத்துக் கொடுத்துச் சிவந்துபோனவரின் செங்கை

யுடைய அருளாளர் ஆகிய தாவீதின் மைந்தரே, ஊஞ்சல் ஆட வருக! சீயோனின் திருமகளோடு ஊஞ்சல் ஆட வருக!

முதலிரண்டடிகளில், வானம் பூமியைப் படைத்த திரியேகப் பராபரனைப் போற்றினர். படைப்புத் தொழில் பிதா சுதன் பரிசுத்தாவியானவர் என்ற மூவாட்களாலும் செய்யப்பட்டது. 3-5ஆம் அடிகளில், கிறிஸ்தரசனுகிய மணமகன் சீயோன் மகளைத் திருமணம் செய்ய இவ்வுலகிற்கு வந்த வரலாற்றைத் தாம் பாட விருக்கும் திருவிளையாட்டூஞ்சல் பாட்டைப் பாடச் சத்தியத்தின் ஆவியானவர் எனப்பட்டச் சகாயர் துணைபுரிவார் என்ற உறுதி யோடு, முதலில் மணமகனையும், அத்தோடு தேவ திருச்சபை என்ற சீயோன் மகளையும் ஊஞ்சல் ஆட அழைக்கின்றூர் கவிஞர்.

அவர் சக்கிரவர்த்தித் திருமகன் என்றபடியால், அவருக்கு ஓர் அரசாட்சியும் குடிமக்களும் உள்ளனர். இக் குடிமக்கள் குழுவே அவரது மனையாட்டி. அடியார் கூட்டத்தின் தொகுப்பு.

ஒப்புநோக்கு:

யோவான் 14,16.

'நானும் தந்தையாரை வேண்டிக்கொள்வேன்; அப்பொழுது இன்னெரு சகாயரை உங்களோடு என்றைக்கும் இருக்கும்படி அவர் உங்களுக்குத் தந்தருள்வார். அவரே சத்தியத்தின் ஆவியானவர்.'

'சகாயர்' என்ற சொல் கிரேக்க மொழியில் Parakletos எனப் படும். ஆங்கிலத்தில் 'Comforter', 'Advocate', 'Counselor' எனப்படும். தமிழில்: ஆலோசகர், தேற்றரவாளன், தேற்று கிறவர், பரிந்துரை செய்பவர் என்கிற பொருள்களும் உண்டு. எனவே வேதநாயகர் அவரைச் 'சகாயர்' என்றூர்.

இனி, 'தாவீதின் மைந்தர்' எற்ற பெயரை ஆய்வோம்.

(செ. 2.) முதற் செய்யுளில், 'தேவ திருச்சபை மகள்' என்றதை 2-11இல், 'சீயோன் திருமகளே' எனப்பட்டது.

படைப்பு, காப்பு, அவதாரம் செய்த தாவீதின் மைந்தன்

செய்யுள் 2

அறுதினத்தில் சகலவஸ்தும் அமைத்த நாதன்
அதம் ஏவை என்று இரு மானிடரைச் செய்து
மறுவற்ற சிங்கார வனத்தில் வாழ்ந்து
மாறுத சீவமரக் கனியைத் தின்று

உறுதிபெற வைத்த தயை அறியார்; பேயோடு
ஒழியாமற் காப்பதற்காய் உலகில் வந்த
திறமிகுந்த தவீது மைந்தா, ஆடீரூஞ்சல்!
சியோனின் திருமகளோடு ஆடீருஞ்சல்!

பொருள்:

தாவீதின் மைந்தரே, ஊஞ்சல் ஆட வாரும், உலகிலுள்ள எல்லாப் பொருட்களையும் ஆறு நாட்களில் அமைத்த நாதன், ஆதாம், ஏவாள் என்ற இரு மானிடரைச் செய்து மாசற்ற சிங்காரத் தோப்பில் வாழ்ந்து, மாறுத சீவமரக் கனியைத் தின்று உறுதிபெறவைத்த கடவுள் கிருபையை அறியாமல், அவர் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல்போன பாவிகள் பேய்வசப்பட்ட வர்கள் அழிந்துபோகாது காக்கப்படவேண்டும் என்பதற்காக உலகில் ஊன் உடல் எடுத்துவந்த தாவீதின் மைந்தரே, ஊஞ்சல் ஆட வாரும்.

நயவுரை:

'அமைத்து' - 'செய்து': சொல்லொன்றால் அனைத்துலகையும் அமைத்த நாதன், களிமண்ணால் உருவாக்கிச் செய்து, தன் சீவ மூச்சை ஊதி ஆதாமைப் படைத்து, அவன் விலா எலும்பை எடுத்து ஏவாளை உருவாக்கினார் என்ற சொல்வேறுபாட்டைக் காண்க.

கடவுளின் தயவான செயல்களை அறியாமல் பேய்க்கிட்ட சாபத்தைப்போல இந்த மானிடரும் அவர்பின் வழித்தோன்றல் களும் அழியாது காக்கும்பொருட்டு உலகில் வந்த அவதார புருட ராகிய தாவீதின் மைந்தரே வாரும் என்றார்.

மூன்று முதல் ஆறும் செய்யுட்களில் நோவா, ஆபிரகாம், மோசே, தாவீது என்ற பழைய ஏற்பாட்டு வீரர்களைக் காலக் கிரமத்தில் வரிசைப்படுத்திய திறம், இக்காலத்தில் 'மீட்பின் வரலாறு' எனப்படும். இதனை 'History of Salvation' என ஆங்கிலத்திலும், 'Heilsgeschicte' என செர்மன் மொழி யிலும் கூறுவர். 8-ஆம் செய்யுளிலிருந்து 11-ஆம் செய்யுள் மட்டும் இயேசுவின் பிறப்பு, கன்னி வயிற்றில் பிறப்பு, பொந்தியு பிலாத்துவினால் மரண தண்டனை பெற்று மரித்து, உயிர்பெற்று எழுதல், கெத்சமனேப் பாடுகள், உயிர்ப்பு, வானுலகம் ஏறுதல், கடைசிக் காலத்தில் வலப்பாகத்தில் வீற்றிருந்து ஆட்சிசெய்தல் முதலிய அருஞ்செயல்களை விதந்து ஓதினர்.

இவ்விரு பகுதிகளுக்கும் இடையில் நின்று, இப்பகுதிக்கு மைய மாக நிற்பது ஏழாம் செய்யுள். இதனை இடைநிலைத் தீபகம் என்பர்.

முதற் பகுதியில் பழைய ஏற்பாட்டில் இறைவன் ஆற்றிய திருச்செயல்களைக் கூறியவர், இரண்டாம் பகுதியில் புதிய ஏற்பாட்டில் இயேசு என்ற அவதார புருடன் ஆற்றிய திருச் செயல்களைச் சுட்டினர். இவ்விரு பகுதிகளுக்கும் இடையில் நின்று வேறுபடுத்துவது, இயேசுவின் சிலுவை மரணமும் அவர் உயிர் பெற்று எழுந்ததுமான திருச்செயல்கள் என்பர். முதற் பகுதியை இஸ்ரவேலரின் காலம் அல்லது யுகம் என்றும், இரண்டாவது பகுதியை இயேசுவின் காலம் என்றும் பகுத்து பெயரிடுவர் இக்காலத்து விவிலிய ஆராய்ச்சி நிபுணர்.

நம் கவி வேதநாயகர் 150 ஆண்டுகட்கு முன்பு இவ்விரு பகுதி களை அறிந்திருந்தாரேயன்றி அவற்றைப் பகுத்துப் பெயரிட் டழைத்தாரில்லை. இக்காலத்திலுள்ள நூலாராய்ச்சி வசதிகள் அவர் காலத்தில் இல்லாத காரணத்தால் என்க.

ஒப்புநோக்கு:

இவ் ஏழாம் செய்யுளோடு, 13. ஜெபமாலை, கிறிஸ்துவின் தாழ்மை என்ற பதிகத்தோடு ஒப்பிட்டுக் காண்க: 'தேவனை நீ மனுடனாகினை...'

நோவாவின் வரலாறு: அழித்தலும் காத்தலும்

செய்யுள் 3

அட்ட சுவாபத்தின் ஒரு தேவனை
அனுதிபிதா நோவையைக் கொண்டருளிச் செய்த
கட்டளை கேட்டு அறம்புரியாத் தீயோர் தம்மைக்
கடிதான சலப்பிரவாகத்தில் மாய்த்து
எட்டு நரர் தம்மைக் காத்துப் பெருக்கி மீண்டும்
ஈடேற்ற, மானிட அவதாரமான
கிட்டர்தொழும் தவிதுமைந்தா, 'ஆடரூஞ்சல்!
சியோனின் திருமகளோடு ஆடரூஞ்சல்!!

பொருள்:

ஆதியாகமம் ஆறும் அதிகாரத்தை முழுவதும் படித்தவர்க்கு இதன் பொருள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கமுறும்.

தாம் படைத்த உலக மக்களைக் கடவுள் தீயோர் - நல்லோர் எனக் கூறுபடுத்தி, தீயோரை அழித்தலும், தம் சொல்கேட்டு நடந்தவர்களைக் காத்து ஆசீர்வதித்தலுமாய் இருவேறு செயல் களைச் செய்தார். இச் செயல்கள்மூலம் நோவா இயேசு ரட்சக ருக்கு முன்னடியாக, படிமமாக (Pattern, Type) அமைந்தான்

என்பதை எபிரேயர் நிருபம் 11-அதிகாரத்தில் காண்க. (எபி. 11:7).

அருஞ்சொற்பொருள்:

அட்ட சுபாவத்தின் ஒரு தேவன் – தேவன் ஒருவரே; அவர் எட்டுக் குணங்களுடையவர். அவை: உடன்பாட்டில் (1) அளவில்லா ஞானம், (2) அளவில்லாக் காட்சி, (3) அளவில்லா வீரியம், (4) அளவில்லா இன்பம், (5) நாமமின்மை, (6) கோத்திரமின்மை, (7) ஆயுளின்மை, (8) தீவினையின்மை.

4,5,6-ஆம் செய்யுட்களில் ஆபிரகாம், மோசே, சவுல், தாவீது என்றவர்களைக் குறிப்பிட்டு அவர்கள்மூலம் கடவுள் செய்த திருச்செயல்களை நம்முள் வைத்தார் கவிஞர்.

செய்யுள் 4 .

கல்தேயர் தேயத்திலிருந்து ஆபிரகாமைக்
கருணையுடன் வரவழைத்துக் கானன் தேசத்து
எல்லையெல்லாம் உம்பிளிக்கையாக நல்கி
எகிப்பதிற் பார்வோனைக் கடலில் தாழ்த்தி
வல்லமையால் இசரவேல் சாதிபோற்ற
மகத்துவத்தின் ஆசனத்தில் இருந்து வாழும்
செல்வமிகும் தவிதுமைந்தா, ஆடீரூஞ்சல்!
சியோன் திருமகளோ டாடீரூஞ்சல்!!

அருஞ்சொற்பொருள்:

உம்பிளிக்கையாக நல்கி - அரசன் என்ற காரணத்தால் குடிமக்களுக்கு இலவமாக, மானியமாக கொடுத்து.

பொருள் — தெளிவு.

சினாய் மலையில் மோசே பத்துக் கட்டளை கொடுத்தது

செய்யுள் 5

அற்புதமாய்த் தூதர்கள் எக்காளம் ஊத
அக்கினியின் நடுவில் எழுந்தருளிச் சீனா
வெற்புஅதிர இடிமுழங்கச் சனங்கள் கேட்க
வேதமெல்லாம் மோசேசுக் கருளிச் செய்து
கற்பலகை தனில் எழுதித் தந்த பத்துக்
கற்பனையூடு ஒழுகாரைக் காக்க வந்த
நிற்பரம தவிதுமைந்தா, ஆடீரூஞ்சல்!
சியோனின் திருமகளோடு ஆடீரூஞ்சல்!!

அருஞ்சொற்பொருள்:

சீஞ வெற்பு - சீஞய் மலை; கற்பனை - கட்டளை; சிற்பரம - சித் - பரம = ஞானப் பரம.

பொருள் — தெளிவு.

செய்யுள் 6

ஆட்டிடையிற் கிடந்தவனைக் கழுதை தேடி
அலைந்தவனைக் கொண்டுபல துயரஞ் செய்து
கோட்டியெல்லாங் கொண்டதிற்பின் இஸ்ராவேலின்
கொற்றவன் என்று ஒங்க அவன் குலத்தின்மேவி
மாட்டிடையிற் பெத்தலேகம் நகரத் தூடு
வானவரும் பூதலரும் வணங்கவந்த
தேட்டமிகும் தவிதுமைந்தா, ஆமேஞ்சல்!
சீயோனின் திருமகளோடாமேர் ஊஞ்சல்!!

பொருள்:

பெய்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த சவுல், தாவீது என்பவர் களைக்கொண்டு பலவித அட்டகாசங்கள் செய்தபின் இஸ்ரவேலின் அரசர்களாக்கி, அவர்கள் குலத்தில் மாட்டுக்கொட்டிலில் பெத்த லேகமில் பிறந்து வானவரும் பூவுலகோரும் வணங்கவந்த தெளிவு மிகுந்த தாவீது மைந்தரே, ஆமேஞ்சல்! சீயோனின் திருமகளோடு ஆமேஞ்சல்!!

பொருள்:

சவுல், தாவீது என்பவர்களின் வழித்தோன்றல் கிறிஸ்து எனக் கூறிக் கடவுளின் மீட்புச் செயல் வரலாறு கூறுகின்றார் கவிஞர்.

ஊஞ்சல் செய்யப்பட்ட அமிசங்கள்

செய்யுள் 7

மன்னு தந்தவிட்டம் இட்டுத் துகிர்க்கால் நாட்டி
மாற்றுயர்ந்த பொன் தகட்டால் பலகை சேர்த்து
மின்னு முத்தின்வடம் பூட்டி உலவியாட
விரும்பாமல் தரித்திரன்போல வேடங்கொண்டு
முன்னணையிற் பிறந்து புல்லில் தவழ்ந்து கந்தை
மூடி எமை நாடிவந்த முறைமை பார்த்தால்
சின்னமென்ன தவிது மைந்தா, ஆமேஞ்சல்!
சீயோன் திருமகளோடு ஆமேஞ்சல்!!

அருஞ்சொற்பொருள்:

மன்னு தந்த விட்டம்—(1) மன்னன் தந்த விட்டம் (2) நிலைத்த தந்தத்தால் செய்யப்பட்ட விட்டம். துகிர்க்கால்= பவளத்தால் செய்யப்பட்ட கால் நாட்டி; வேடம்கொண்டு - தேவகுமாரன் என்ற தன்மையை மறைத்து, மானுட வேடம் போட்டு; சின்னமென்ன? இதனால் உனக்கென்ன குறைந்து போயிற்று? நீர் எந்த வேடத்திலும் அரசர்தானே. ராஜபார்ட் போட்டாலும் எளிமைக் கோலங்கொண்டாலும் உமக்குக் குறைவு ஒன்றுமில்லை.

அகல உரை:

நீர் சக்கரவர்த்தித் திருமகளையிருந்த காலத்தில் இத்தகு ஊஞ்சலில் உலவி திருவிளையாடல் செய்தவர். நீர் தன்மையை மாற்றுமல் கோலத்தை மட்டும் மாற்றிய உண்மையை உற்று நோக்கினால், உமது பிறப்பினாலேற்பட்ட சிறுமையே, நீர் உம்மை மூடி எம்மை நாடிவந்த மீட்பின் இரகசியத்தை எமக்கு வெளிப் படுத்துகிறது—இதுவே உமது மேன்மையும் மகிமையுமாம்.

ஒப்புநோக்கு:

ஊஞ்சலின் அலங்காரம்.

திருவிளையாட்டுஞ்சல் என்று பெயர்கொண்ட இப்பதிகத் துக்கு ஊற்றுக்கண்ணையிருந்தது மணிவாசகர்தம் திருவாசகம், திருப்பொன்னூசல் என்ற பாடற் பகுதியாகும். 16:1.

'சீரார் பவளம் கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகையேறி இனிதமர்ந்து . . .
. . . . . .
போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ'

என்று மணிவாசகர் பெண்களைப் பொன்னூசல் ஆடுவோம் வாருங் கள் என்று அழைக்கின்றார்.

தாவீதின் மைந்தனைச் சீயோன் திருமகளோடு சேர்ந்து ஊஞ்சல் ஆடவருகவென்று அழைக்கின்றார் நம் கவிஞர்.

(2) வேட மாறுதலுக்கு ஒப்புமைப் பகுதி ஒன்றை வேத நாயகர் திருப்பவுலடிகள், பிலிப்பியர் 2:6–11இல் கண்டு தம் பாடலை இயற்றினார் என்க.

'கடவுளுக்குச் சமமாயிருப்பதை இயேசு பற்றிக்கொண்டிருக்க விரும்பவில்லை. அதற்கு மாறாக, அவர் தம்மை வெறுமையாக்கிக் கொண்டு அடிமையின் தன்மையை ஏற்று, மனிதனைப்போலானார்.

மனித உருவத்தில் தோன்றித் தம்மைத் தாழ்த்தினார்;
கீழ்ப்படிதலாய் நடந்து மரணத்தை ஏற்றார்;
அதுவும் சிலுவை மரணத்தை ஏற்றார்.

ஆகையால், கடவுள் அவரை மேலாக உயர்த்தி, எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தை அவருக்குச் சூட்டினார்.

இந்த மேற்கோளில் நாம் கிறிஸ்துவின் இரு நிலைகளைக் காண்கிறோம். ஒன்று - அவரது பரத்துவம்: கடவுளோடு சமத்துவம் - உயர்ந்த நிலை. மற்றொன்று - அவரது அவதாரநிலை - தாழ்ந்த நிலை. இவ்விரு நிலைகளில் - வேதநாயகர் கிறிஸ்துவின் பரத்துவ நிலையைச் சொல்லாது, அவரது அவதார நிலையையே விரித்துரைக்கின்றார். The first is Theology of the Cross; The second is Theology of Glory.

செய்யுள் 8

மாசில்லாப் பாலகனாய் பிறந் தெட்டா நாள்
மகிமையுடன் சுன்னத்துப் பண்ணப்பட்டு
யேசுவெனப் பெயர் தரித்து முப்பதாண்டில்
இஸ்நான முற்றுப் பேயின் சோதனைவென்று
நேசர்களைத் தெரிந்து உலகம்சுற்றி வேத
நெறிஉரைத்து அற்புதம்புரிந்து நெடும்பாடுற்ற
தேசுலவும் தவிதுமைந்தா, ஆடரூஞ்சல்!
சியோனின் திருமகளோடு ஆடரூஞ்சல்!!

பொருள்:

பிறப்பு, சுன்னத்து, நாமகரணம், ஞானஸ்நானம், சோதனை, சீடர்களை அழைத்தல், ஞானப்பிரசங்கம், அற்புதச் செயல்கள், பாடுகள்பட்ட தாவீதின் மைந்தரே, ஆடரூஞ்சல்.

செய்யுள் 9

அந்தம்மிகும் பரிசுத் தரூபியாலே
அற்புதமாய்க் கெற்பமதாய் உற்பவித்துச்
சுந்தரஞ்சேர் கன்னிமரி இடத்தில் தோன்றித்
தோன்றல் பொந்திப் பிலாத்துவின்கீழ்ப் பாடுபட்டு
நிந்தையுடன் குருசிலறை யுண்டுமாண்டு
நிலத்தடக்கப் பட்டுயிர்த்து நித்திய காலம்
சிந்தைமகிழ் தவிதுமைந்தா, ஆடரூஞ்சல்!
சியோனின் திருமகளோடு ஆடரூஞ்சல்!!

பொருள்:

கன்னிமரி வயிற்றில் பரிசுத்தாவியால் தோன்றி, பொந்தி பிலாத்துவிடம் பாடுபட்டு, சிலுவையிலறையுண்டு மாண்டு அடக்கம் செய்யப்பட்டு உயிர்த்து என்றென்றும் மகிழ்ந்திருக்கும் தாவீதின் மைந்தரே, ஆடரூஞ்சல்!

செய்யுள் 10

ஆதி ஆதாம் வினைஅகல, ஒலிவக் காவில்
ஆத்துமத்தில் அகோர வாதைகளைப் பட்டுக்
காதகரால் கட்டுண்டு குருக்களின்கிர
கத்தில் அக்கியானத் துரைமுன், கபால வெற்பில்
வாதையுறப் பாடுபட்டுக் குருதிசிந்தி
மரித்தடக்கப்பட்டு உயிர்த்து வான்போய் ஆளும்
நீதநில்லா தாவீது மைந்தா, ஆடரூஞ்சல்!
ஏயோனின் திருமகளோடு ஆடரூஞ்சல்!!

செய்யுள் 11

பாருலகை நடுக்கேட்கக் கடைசிக் காலம்
பராபரனின் வலப்பாகத்திருந்து வந்து
நேருடனே அவரவர் தம் கிரியைக்கேற்க
நித்திய சம்பாவனைகள் அளித்துச் சாலேம்
மேருதனில் கன்னியாஸ்திரிமார் போற்ற
வேதநாயகன் பாட விருப்புற்று ஓங்கும்
சீர்உயரும் தாவீது மைந்தா, ஆடரூஞ்சல்!
ஏயோனின் திருமகளோடு ஆடரூஞ்சல்!!

அருஞ்சொற்பொருள்:

பார் = உலகு; நடுக்கேட்கை - நடுத்தீர்ப்பு; நேருடனே - நேர்மையுடன்; சம்பாவனை - பலாபலன்; சாலேம் மேரு - எருசலேம் மலை.

பொருள் — தெளிவு.

28. சிலுவைத் தியானம்

சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை மாருக் கண்ணேக்கமா யிருப்பதே ஒன்ருன அவசியமென்பது.

செய்யுள் 1

உன்னதக் கிருபைமேவும் உரிமைரட் சகனே, ஐயா,
நின்னேயென் விசுவாசக்கண் ணேக்கியே நித்தநித்தம்
மன்னுநின் சிலுவைச் சாவின் மாத்திரமென் ஈடேற்றத்தைத்
துன்னியான் இசைப்பதொன்றும் அவசரந் துணேசெய் தேவே.

பொருள்:

'தேவே' என இயேசுவை விளித்து 25 செய்யுட்களே இப் பதிகத்தில் பாடியருளினர் வேதநாயகர். அவற்றில் இந்த முதற் செய்யுள் காப்புச் செய்யுள் ஆகும்.

விசுவாசக் கண் - ஞானக் கண் × ஊனக் கண்; அகக் கண் × புறக் கண். Interior × Exterior. நின் சிலுவை மரணமே எனக்கு ஈடேற்றமாகும் என்பது இத் தியானத்தின் பெயர்க் காரணமாகும்.

செய்யுள் 2

இந்தஒன்று, அதனினின்று மற்றுயாவும் முற்றூறி இங்கண்
உந்துமன்ரே இதுஒன்றுஎன் ஏகமும் உளதுமாகத்
தந்தருள், இதற்கு நான் உன்றனேச் சிலுவையில் மாருமல்
சிந்தையின் விசுவாசக் கண் தெளிவுற நோக்கத் தேவே.

பொருள்:

இந்த ஒன்றிலிருந்து மற்றெல்லாம் ஊறிவருகிறது.

செய்யுள் 3

காலேயில் நான் எழுந்தபோது அக்கணத்தில் உன் சிலுவை ரூபம்
ஏலஎன் கண்ணின் முன்னும் இருதயத்திலும் தீட்டிக்
கோலமுற்றிருக்க மற்ரூர் கொள்கையும் இதனேயன்றிச்
சால அம்பரன்முன் செல்லாத் தகமையே அருமைத் தேவே.

அருஞ்சொற்பொருள்:

ஏல - இயல.

பொருள் — தெளிவு.

செய்யுள் 4

ஆனதால் இன்றுநாளின் அடியன்நான் எங்குற்றாலும்
ஈனம் என் பயத்தை நீர்தான் எப்படிக் குருசில் தாங்கி
வானவனெடு என்தன் தன்னை மறுபடி உறவும் செய்து
தானுறும் சகல கோபாக்கினைக்கும் என் தன்னைத், தேவே.

செய்யுள் 5

தப்புவித்து அனுக்கிரகித்த தயவை யான் நினைந்துன் தன்னை
எப்பொழுதினுங் கண்ணோக்கி இருப்பதற்கு இயற்றி மீண்டும்
அப்பனே யொன்றும் உந்தன் சிலுவையின் அரியரூபச்
செப்பம்என் கண்ணைவிட்டு மாற்றிடாத்திடம் செய், தேவே.

பொருள்:

இச் செய்யுள் இரண்டும், பல பாட்டு ஒருவினைகொள்ளும் குளகம் என்பர்.

நின் சிலுவைக் காட்சி என் கண்முன் எப்பொழுதும் நிற்கச் செய்க.

செய்யுள் 6

உன்னை என்பிசகாப்பார்வை யுடன் கண்ணோக்குவன்,
நானிங்கு உன்
தன்னையே தவிர நீ யோர்த்தனையும் உன் சிலுவைச் சாவின்
வன்மரணமுமேயன்றி மற்றொன்றும் அறியேனுக,
இந்நிலத்து இதே என்சீவன் என இருக்கச்செய், தேவே!

அருஞ்சொற்பொருள்:

நீ யோர்த்தனை - நீ ஒருத்தனையும்.

செய்யுள் 7

நித்தியம் எனக்குஇதே மா நோர்த்தியும் இனிதுமாக
வைத்தெனின் இதையமும் உம்மால் வளர்சம் பூரணமாம்
என் வாய்
முற்றினும் அதனல் தேங்கி வழிந்திட முனைந்து உன்அன்பே
பெறறுயான் தனிக்கும்போதுஎன் பேச்சிலும் துணைநில்,
தேவே!

பொருள்:

நான் தனித்திருக்கும்போதும் பேசும்போதும் துணைநில்.

செய்யுள் 8

நான் அயலுடன் செய்சம்பா வினையும் நின்நாம நோக்கித்
தானிருக்கச்செய், உன்னைத் தப்பியான் சிதறி வீழ்ந்தால்
ஈனம்என்று அதனை உன்பால் இக்கணம் முறையீட்டிவ்வாறு
ஆனதும் உன்னைநோக்கத் தடைசெய்வது அனைத்தும், தேவே!

அருஞ்சொற்பொருள்:

சம்பாவினை - சம்பாஷணை.

செய்யுள் 9

சருவசாக் கிருதை யூகத்தால் தவிர்த் திடுவேனுக
உறுதியாய் யெனைஎப்போதும் உத்தமத் தவத்தி லோங்கும்
நறுமைசேர் விசுவாசத்தின் பாதையில் நடத்தி யாள்வாய்
நிறைவுற எனது கண்கள் நிதம் துயரத்தில், தேவே!

செய்யுள் 10

என்று நிதம் கண்ணுற்று ஈதென் பிணையாளியான
உன்றனைச் சிலுவைச் சாலத் தெப்படி ஒடுக்கித்தன்
சென்றதன் மேலெத்தனை சினந்தனர், அவை எக்காத்திரத்
தென்று அருவருப்பென்று உள்ளத் தோற்றமாய்க் காணத்
தேவே.

அருஞ்சொற்பொருள்:

சாலம் - மரம்.
இம் மூன்று பாடல்களும் குளகம்.

செய்யுள் 11

இங்கு அதால் அச்சமற்ற நிருவிசாரத்துக் கென்னை
அங்கு கிருபையதாய் நீங்க லாக்கும் எத்தனை அகோரத்
துங்குண பத்திரன் பாவத்துக்குன்னைப் பழிதான் கொண்டார்
பங்கம்ஒவ் வொன்றும் என் செம்மறிப் பறழ் உன்னைத், தேவே.

அருஞ்சொற்பொருள்:

குணபத்திரன் - மாசில்லாக் குணமுடைய உன்னை; செம்மறிப் பறழ் - செம்மறியாட்டுக்குட்டி.

செய்யுள் 12

உருகக் குத்திற்றதன்றே, ஆதலால் ஒருங்கவற்றை
அருவருத்து அறவிரோதித்து அகற்றிவிட்டு ஓடிஅந்தப்
பொருது சத்துருக்கள் தம்மோடு எதிர்த்துப் போரிடச்செய்,
நானே
நிரந்தரம் விசுவாசத்தின் நிறைவொடு இங்கும்மைத் தேவே.

அருஞ்சொற்பொருள்:

பொருது - போரிட்டு. நிரந்தம் - எப்பொழுதும்.

செய்யுள் 13

கெஞ்சி நின்றிடவும் என்றன் கிளர்விசு வாசம்பற்றி
எஞ்சலற்று எரிந்து நானும் தம இன்னல் எய்தி கூத்திப்
பஞ்சரித்து அழவும் என்றன் செபம் விசுவாசம் பாதத்து
அஞ்சல் பெற்று உண்மையுற்ற தாயிருக்கவும் நான், தேவே.

அருஞ்சொற்பொருள்:

பஞ்சரித்து - கண்ணீர்விட்டு.

செய்யுள் 14

மாற்றிடாக் கண்ணுல் உன்னை மகிழ்ந்து பார்த்திருக்கப்
பண்ணும்,
போற்றி செபங்கள் செய்யப் போதிவிக்கின்ற ஆவி
ஏற்றதெங்களுக் கெவ்வாறுய்க் காயப்பட் டீரென்று உன்னை
வீற்றெழும் சிலுவையிற் கண் ணுேக்குவர் மீதில், தேவே.

செய்யுள் 15

ஊற்றப்பட்டு உதிர நீரும் உன்னின்றவர் மீதும்
தேற்றப்பட்டு உருகஓடும் தெளிவு கொண்டவர்கள் தம்மை
ஏற்றப்பட்டு எழும் விசுவாசத்தினில் நிற்றிடத் திறந்து
ஆரோக்கியத்து
ஆற்றப்பட்டு உய்யச் செய்வாய், அருள் இரட்சிப்பின் தேவே.

இவை இரண்டும் குளகமென்பர்.

பொருள்:

என் கண் மாறுமல் நான் உன்னையே பார்த்திருக்கப்பண்ணும் போற்றுதலையும் செபங்களையும் செய்யப் போதிக்கும் தூய ஆவி யானவரை ஏற்ற தமக்கு, எவ்வாறுக நீர் காயப்பட்டீரென்று உன்னைச் சிலுவையிற் காட்சி கண்டு நோக்குபவர் மீதில்—ஊற்றப்

படும் இரத்தமும் தண்ணீரும் உன்னிலிருந்து அவர்கள்மீது தேற்றப்பட்டுருகவோடும் தெளிவுகொண்டவர்களே விசுவாசத்தில் நிற்கும்பொருட்டுச் சுகம் தந்து, ஆறுதல் பெற்று உய்யச் செய்வாய், அருளோடு இரட்சிக்கும் தேவனே.

செய்யுள் 16

சாவதற் கினமாஞ் சற்பக் கடியை யான் உணர்கின்றேனுல்,
தேவனே, உனது காயங் களிற்குண மாகச் செய்து என்
ஆவிஉன் கிருபைப் பத்திரா சனத்தின்முன்பாக வந்து
தாவிநிற்கும் நாள்மட்டும் உன்னை, என் தருமத் தேவே.

அருஞ்சொற்பொருள்:

சாவதற்கினமாம் சற்பக்கடியை; நான் சாகும்படி பிசாசு கடித்த புண்ணை.

செய்யுள் 17

சிலுவையில் உயர்த்தப்பட்டோராக மாறுத் திருட்டி
வலிதுடன் நோக்கமாவேனுக, சாத்தான் வந்தென்றும்
பலனுறுங் குருசில் உன்னைப் பார்த்த வண்ணத்தில் கா
தலிலுறத் தடை செய்கின்றது அதைத் தடுத்தருள்,
மெய்த் தேவே.

பொருள்:

என் சாவுக்குக் காரணமான சர்ப்பத்தின் விஷக்கடியை நான் உணர்கின்றேன். அதனுல், தேவனே, உனது ஐந்து காயங்களில் இந்த விஷக்கடியைக் குணப்படுத்தும்; என் ஆவி உன் கிருபாசனத்தின் முன்பாக வந்து தாவி நிற்கும் நாள்மட்டாக உன்னை, என் தருமத் தேவனே.

சிலுவையில் உயர்த்தப்பட்டோராக மாறுத திருஷ்டியோடும் வலிய ஒரே நோக்கமாவேனுக; நற்பயனுறும் உன் சிலுவைக் காட்சியைப் பார்த்தவண்ணத்திலிருக்கும் என் காதலைச் சாத்தான் வந்து தடைசெய்கின்றது. அதைத் தடுத்தருள், மெய்த் தேவனே.

சாத்தானின் தடையைத் தடைசெய்தருள்க.

செய்யுள் 18

கருத்தனே, என்றன் வேண்டுதலைக் கனிவாகக் கேட்டு என்
திருட்டியை இருதயத்தைச் சிலுவையில் ஒட்டிவைத்துப்

பெருத்த தூஷணத்தின் ஆவி பிரளயத்து இருளுக்குள்ளாய்
வருத்தமுற்று அழுத்தாவண்ணம் காத்தருள, வல்லமை தா
தேவே.

பொருள்:

கர்த்தனே, வல்லமைத் தேவனே, என்றன் வேண்டுதலைக் கனிவாகக் கேட்டு, என் காட்சியையும் இருதயத்தையும் சிலுவையில் ஒட்டிவைத்துப் பிசாசின் இருளுக்குள்ளாக என்னை வருத்தி அழுத்தாதவண்ணம் காத்தருள்க.

அருஞ்சொற்பொருள்:

தூஷணத்தின் ஆவி பிரளயத்திருள்—தேவ தூஷணம் செய்யும் பிசாசு உண்டாக்கும் இருள் வெள்ளம்.

செய்யுள் 19

தாசன் நான் சிலுவைமீது உன்றன் சினேகத்தீ காண்கட்டும்,
ஆசுற அதிலேயான் அந்தகன் என இயல்காமல்
பாசமாய் எனது கண்கள் தமைத் திறந்தெப்போர்ப்பட்ட
நேசஏவுதல் உன்னெஞ்சம் நின்றதென்று உணரத் தேவே.

அருஞ்சொற்பொருள்:

ஆசு + உற இயல்காமல் - குற்றமுற்று இயலாமல்.

பொருள்:

உன் தாசனாகிய நான் சிலுவைமீதில் உனது சினேகத் தீயைக் காண்கட்டும்; அதிலே யான் குருடன் எனக் குற்றமுற இயங்காமல், என் கண்களை அன்போடு திறந்து, எப்போர்ப்பட்ட நேச ஏவுதல் உன் நெஞ்சத்தில் நின்றது என்று உணர அருள்செய்க, என் தேவனே.

• •

செய்யுள் 20

உத்தம தெளிவுண்டாக்கும் உன் சிலுவையின் நேசத்தை
நித்தம் என் வார்த்தை செய்யும் நெடுங்கிரியையினும்
சிந்தித்து
அத்தனே, விசுவாசத்தின் பெலத்தினால் அடியேன் அங்கே
முற்றினும் அமிழ்ந்திப் போகப்பண்ணுவை, முதன்மைத்
தேவே.

பொருள்:

அத்தனே, என் மனத்தில் உத்தம தெளிவை உண்டாக்கும் உன் சிலுவையின் நேசத்தைத் தினந்தோறும் என் வார்த்தை

யிலும் கிரியையிலும் சிந்தனை செய்து விசுவாசம் தரும் சக்தியால் அடியேன் அத் தியானத்தில் முழுவதும் அமிழப்பண்ணும், முதன்மைத் தேவே.

செய்யுள் 21

உன்றன் ஆவியைக் கொண்டென்னுள் ளத்தினிற்
சினேகமூற்றி
வந்தனைச் சுத்தநேசமதில் தொடர்பையும் உண்டாக்கும்
என்றன் பாவத்தினுக்கினை வாதைகளை ஏகன்
முந்துகோ பத்தைச் சாபத்தையும் முனைந்து எனக்காய்த்
தேவே.

பொருள்:

உமதாவியைக் கொண்டு என் உள்ளத்தில் அன்பை ஊற்றி, வந்தனையையும், சுத்த நேசத் தொடர்பையும் உண்டாக்கியருளும். என் பாவத்தின் தண்டனை, வாதைகளையும் கோபத்தையும் சாபத்தையும் நீக்குமாறு ஏகக் கடவுளே வேண்டிக்கொள்ளும், தேவனே.

செய்யுள் 22

குருசினிற் சுமந்ததைக் கண்கொண்டு அனுதினமும்
பார்ப்பேன்
அருள்மிகுந் திருச் சமாதா னத்தில் மாறுமல் அங்கே
பெருகி யான்நிலைத்து நின்றுபின்னும் அவ்வழியிற் செல்லத்
திருவுளக் கிருபையாலே பலப்படுவதற்கு என் தேவே.

பொருள்:

மேற் செய்யுளில் கூறப்பட்ட தண்டனை, வாதை, கோபம், சாபத்தை நீர் சிலுவையில் சுமந்ததை நான் தினந்தோறும் பார்ப்பேன்; உமது சமாதானத்தைவிட்டு விலகாமல் யான் நிலைத்துநின்று பெருகிப் பின்னும் அவ்வழியிற் செல்ல உமது கிருபையால் பலப்படுவதற்கென்று உமது சிலுவைக்காட்சி காண்பேன், தேவே.

செய்யுள் 23

எக்கடமையிலும் செய்யும் யாவிலும் இதயம் கண்ணும்
மிக்க உன் சிலுவையொன்றை மாத்திரம் விழித்து நிற்கத்
தக்க பாடுகளின் போராட்டத்திலும் சருவதாய் உன்
முக்கிய மாதிரியைக் கண்ணோக்கியும் முனைத்ததனில், தேவே.

செய்யுள் 24

பொறுமையாய் அமர்ந்து நின்று உன் பூரணத் துணையை நம்பி
உறுதியாயிருக்கச்செய்யும் ஒடுக்கமுன் சிலுவையொன்றை
இறுதி காலத்திலேயும் தெரிசித்து என் ஏழையான
அறமெலி வுற்ற ஆவியை முசிப் பாற்று, என் தேவே.

செ. 22,23,24: குளகம்.

பொருள்:

என் பாடுகள், போராட்டங்கள் எல்லாவற்றிலும் நான் பொறுமையாய் அமர்ந்துநின்று, உன் பூரணத் துணையை நம்பி, உறுதியாய் இருக்கச் செய்யும் ஒடுக்கம் (தவசு, தியானம்). உன் சிலுவையொன்றை மட்டும் என் இறுதிக் காலத்திலேயும் நான் தரிசித்து, முழுதும் மெலிந்துபோன ஏழையின் ஆவியை இளைப் பாற்றும், என் தேவனே.

பதிகத்தின் இறுதிப் பாடல்

செய்யுள் 25

சாவிலும் நான் நன்முகச் சத்துவங்கொண்டு அழல்
பாதாளத்து
ஓவிய பயத்துக்கும் தீங்கு உபாதைக்கும் நீங்கலாகித்
தேவ சமாதானத்தால் செறிந்து வாழ்ந்திருக்கச் செய்தாள்,
பாவலன் நெல்லே வேத நாயகன் பாடுந் தேவே!

பொருள்:

என் சாவிலும் நான் நன்முகச் சக்திகொண்டு நரக நெருப்பில் நீங்காத பயத்துக்கும் தீங்குக்கும் உபாதைக்கும் நீங்கலாகித் தெய்வ சமாதானத்தால் நிறைந்து வாழ்ந்திருக்கச் செய்து ஆட் கொண்டருள், பாவலன், திருநெல்வேலி வேதநாயகன் பாடும் தேவனே (1-3-84).

29. பாவ விமோசனம்

குரு விருத்தம்

செய்யுள் 1

அனந்த தயை நிறைந்தஇரு தயம்பெருக
மகிழ்ந்து வரும் அகண்ட வானும்
வனைந்தொரு மனுடன்றனுடன் மடந்தையொருத்
தியும் செய்தொரு வனம் கண்டு ஆக்கிக்
கனிந்து அரிய வரங்கள் பல வழங்கியொரு
மரம்படு கனியினுல் வந்து
மூனைந்து எழு துரிதங்கள் கெட நினைந்து குரு
சிறந்து அருளும் முதன்மை வாழ்வே.

பொருள்:

குருசில் இறந்து எங்களுக்கு அருளும் வாழ் முதலே, எண்ணற்ற தயை நிறைந்து நெஞ்சத்தில் பெருமகிழ்ச்சி கொண்டு விசாலமான வானத்தையும் வனைந்து, ஆதாமையும் ஏவாளையும் உண்டாக்கி, மனங்கனிந்து அரிய பல வரங்களை வழங்கி, விலக்கப் பட்டதோர் மரத்தின் கனியினுல் விளைந்த கேடுகளை நீக்க நினைந்து குருசிலே இறந்து அருள் செய்யும் எங்கள் வாழ்முதலே.

'வாழ்வே' என்ற சொல் ஒவ்வோர் செய்யுளின் ஈற்றுச் சொல்லாக வந்துள்ளதைக் காண்க.

செய்யுள் 2

கதத்தலகை கொதித்தலறி மிகுத்தபகை
தொடுத்தபடி கறுவிச் சீறி
அதத்தினெவை மனத்தினிடை பவத்தையுற
விளைத்த அவ கடத்தினுலே
மதத்து இருவர் பறித்து நுகர் பழத்தினுட
விடத் திருளை மறுத்து மேலாம்
பதத்திலுற இருத்த நெடு மரத்தில் உயிர்
விடுத்தஒருபரம வாழ்வே.

அருஞ்சொற்பொருள்:

கதத்தலகை - உக்கிரமான பிசாசு; அதத்தினெவை - ஆதாம் ஏவாள்; அவகடம் - அவமானம்; மதம், மதத்து - மயங்கி;

பறித்து நுகர் - பழத்தைப் பறித்து நுகர்ந்து, இன்புற்ற; விடம் - விஷத்தினலேற்பட்ட இருள்.

பொருள்:

பிசாசு கொதித்து, அலறி, பகை மிகத் தொடுத்து, கோபித்துச் சீறி, ஆதாம் ஏவாள் மனத்தில் பாவத்தை விளைவித்து அவர்களை மயக்கி அவர்கள் பறித்து நுகர்ந்த பழத்தின் விஷத்தினலேற்பட்ட இருளைப் போக்க, நம்மை உயர்ந்த பதத்திலிருக்கவைக்கவேண்டு மென்று நெடிய சிலுவை மரத்தில் உயிர்விட்ட, ஒப்பாருமிக்காரு மில்லாத ஒரு பரம வாழ்வே.

செய்யுள் 3

விழுந்தவரை இகழ்ந்து தழல் எழுந்து நரகு
அழுந்த உரை விளம்பா வண்ணம்
செழும் தயவு பொருந்த அருள் சொரிந்துநரர்
அடைந்த வினைதீர்த்து ஈடேற்றத்
தொழுந்திறமை மிகுந்த தவிது இனம் தெரிய
உவந்துமரி சுதன் என்று ஓங்கிப்
பழந்துணியில் அணிந்து குடில் பிறந்து குருசு
இறந்த ஒரு பரம வாழ்வே.

பொருள்:

பாவத்தில் விழுந்தவர்களை இகழ்ந்து, நீங்கள் நரகத்துக்குப் போய் வீழ்வீர்கள் என்று கடவுள் சொல்லாதபடி, செழித்த தயவு பொருந்திய அருள்மாரி பெய்து, மக்கள் அடைந்த வினையை நீக்கி எங்களை மீட்கத் திறமை மிகுந்தவரே, தாவீதின் கோத்திரத்தில் மகிழ்ந்து மரியம்மையின் சுதன் என்று புகழ்பெற்று, கந்தைத்துணி அணிந்து குடிசையில் பிறந்து குருசிலிறந்த ஒரு பரம வாழ்வே.

செய்யுள் 4

அடத்தில் நெடுவிடத்து அரவு கடித்த வினை
பிடித்துநரர் அனைத்துங் கெட்டுத்
திடத்தின்மறை படித்த நெறி நடத்தையற
மடத்தின் வழி சென்ற தாலே
சடத்து வடிவு எடுத்து அடவி அடுத்துமரி
யிடத்திலுறச் சனித்துக் கூளி
படைத் தலையை உடைத்து நரகடைத்து உயிரை
விடுத்த ஒரு பரம வாழ்வே.

பொருள்:

முதலிரண்டடிகளில், அவதார காரணத்தைக் கூறி, அடுத்த இரண்டு அடிகளில், அவதார காலத்தில் நடைபெற்ற செயல்களைக் கூறிப் பாவ விமோசன வரலாற்றை உரைத்தார்.

அடமும் விடமும் கொண்ட பாம்பு - பிசாசு - கடித்த வினையால் மக்கட்டொகுதியனைத்தும் கெட்டுப்போய், திருமறையில் படித்த நன்னெறி நடைகள் கெட்டு மடத்தனமான தீநெறி வழிகளில் சென்ற காரணத்தால்; ஊன் உடல் எடுத்து, காட்டிற் சென்று, கன்னி மரியிடம் பிறந்து, பிசாசின் படையினர் தலைகளை உடைத்து, நரக வாசலை அடைத்துத் தம் உயிரையே விடுத்த பரம வாழ்வே என்றார்.

நோவா காலத்துப் பெருவெள்ளம்

செய்யுள் 5

இடங்கொள் உலகு அடங்கமிகு மதங்கள் கொடு
பவங்கள் தரும் இடும்பைக் கண்டே
திடங்கள்கெட நடுங்கவலு பெலன்களொடு
சலங்கள்வரச் சிதைத்து நோவா
வுடன் குமரர் இனங்கள்பலு கவுங்கருணை
வழங்கிஉயிர் ஒருங்க வாழ்க
நெடுங்குருசில் அடங்கிஉயிர் ஒடுங்கி எமை
இரங்கியருள் நிலைமை வாழ்வே.

பொருள்:

மிகப் பெரிய உலகத்தில் அடங்கிய பல மதங்கள் கொடிய பாவங்களை விளைவிக்கும் துன்பங்களைக் கண்டதினால், திட்டங்கள் கெடவும், வலிய பயன்களோடு பெரு வெள்ளத்தை வரச்செய்து அவற்றைச் சிதைத்து, நோவாவும் அவரது எட்டு மக்களுடைய இனத்தார் பலுகிப் பெருகவும், அவர்கள் ஒன்றித்து வாழவும் கருணை வழங்கி, நீண்ட சிலுவை மரத்தில் தொங்கி உயிர்விடுத்த நிலையான வாழ்வாகிய இயேசுவே எமக்கு இரங்கியருள்க.

நோவாவுக்கருளிய கருணை

செய்யுள் 6

கலக்கம்உறு மனுக்கள்கன பெருக்கொடு அதி
கரிக்கவரு காலந்தன்னில்
சொலக்கொடிய பவக் கொடுமை மிகுக்குமவர்
நடக்கைகளைத் துயராற் கண்டே

அலைக்கழிய இடிக்கும் மின்னல் முழக்கம்உறு
மழைக்குள் உல கழிக்கச் செய்தே
பலக்கருணை நோவைக் கருளி மலைக்குருசில்
இறக்கும் ஒரு பரம வாழ்வே.

பொருள்:

கலக்கமுறுகின்ற மக்கள் மிகப் பெருகி வருகின்ற காலத்தில் சொல்லக்கூடாத கொடிய பாவக் கொடுமை மிகுக்கும் அவர் தீய நடத்தைகளை துயரத்தோடு கண்டு—அலைக்கழிக்கும் இடி, மின்னல் முழக்கம் கூடிய பெருமழை வெள்ளத்தால் உலகத்தை அழித்து, நோவாவுக்குப் பல கருணைகள் அருளி கொல்கொதா மலைக் குருசில் இறந்த ஒரு பரம வாழ்வே.

செய்யுள் 7

அலைந்துபிசா சுடன் துணிவாய் அகந்தையினுல்
மெலிந் தொழிய அனர்த்தமேவி
மலைந்து அறிவோ குலைந்து அடியே மறந்து அறமே
துறந்து உயிர் போய்மாய்ந்து வீணுய்
உலைந்து உடலோ டெழுந்து அழல்மேல் விழுந்து அலறுது
உவந்தருள்வாய் உனைக் கும்பிட்டேன்
கலைந்து அடியார் தொலைந்து அழியாது அகந்தனிலே
மடிந்த கருணை வாழ்வே.

அருஞ்சொற்பொருள்:

அனர்த்த மேவி - நாசமாய்ப் போய்; அகந்தனிலே - மரத்திலே.

பொருள்:

பிசாசுடன் துணிவாய் அலைந்து, அகந்தையினுல் மெலிந்து, ஒழியாத நாசமாய்ப் போய் மலைந்து, அறிவோ குலைந்து, நின் திருவடியை மறந்து, அறத்தைத் துறந்து, உயிர்போய் மாய்ந்து, வீணுய் உலைந்து, உடலோடு எழுந்து, அழல்மேல் விழுந்து நாங்கள் அலறுமல் இருக்கும் நிலை அருள்வாயாக; உன்னைக் கும்பிட்டேன், உன்னடியார் கலைந்து தொலைந்து அழியாதிருக்கும்படி சிலுவை மரத்திலே மடிந்த பராபரனே, கருணை வாழ்வே.

இயேசு எருசலேமுக்குள் அரசகோலத்துடன் செல்லுதல்

செய்யுள் 8

ஒருத்துவமே திரித்துவமே, உம்பரமே,
அம்பரமே, ஓம் நமாவே,
கருத்தொளிவே, அறத்துருவே, பெருத்த தயா
பரக் கடலே, கருணைக்கோவே,

குருத்திலையே பிடித்து உடையே விரித்து இஸரேல்
களித்து ஒருநாள் குதித்துப் போற்ற
வரும் உத்தமனே, மரத்தினிலே மரித்தடியார்க்கு
உயிர்த்த ஒரே மகத்துவ வாழ்வே.

பொருள்:

மத்தேயு 21:1-9இல் உள்ள வருணனையை மனத்தில் வைத்துப் பாடியது. இப்பகுதியைப் படித்தவர் இச் செய்யுட் பொருளை இனிதுணர்வர்.

இந்த அரசர் யார் என்பதை ஒன்பது பெயர் சொல்லி அழைக்கிறார் கவிப்பக்தர்.

ஒருவரே, மூவரே (திரியேகரே), உயர்பரமே, அழகிய பரமே, ஓம் நமாவே, கருத்தின் ஒளியே, தரும மூர்த்தியே, கருணைக் கடலே, அருளரசரே!

குருத்தோலை பிடித்து, மேலாடை விரித்து, இஸ்ரவேல் மக்கள், 'தாவீதின் மைந்தருக்கு ஓசன்னா' என்று ஆரவாரித்து அன்றொரு நாள் ஆடிப் பாடிக் குதித்துப் போற்றவரும் 'சாந்த குணமுள்ளவராய் வரும் உத்தமனே' எனப்பட்டவர், பின்பொரு நாள் சிலுவை மரத்திலே தொங்கி மரித்து அடியார் வாழ உயிர்த்த ஒரே மகத்துவ வாழ்வே! வாழ்கவே!

செய்யுள் 9

அருந்தவமே பரம்பொருளே, அறிந்தவர்ஆர்
தெரிந்தவர்ஆர், ஐயா, உன்னைத்
திருந்தவுமே புகழ்ந்து கொள்வேன், மகிழ்ந்து கொள்வேன்
செபஞ்சொலுவேன் செவ்வே நிற்பேன்
பொருந்தவுமே பதந்தொழுவேன் நிதம் கவியால்
நடம்புரிவேன் பொன்னுடு எய்த
வருந்தியுமே வரந்தருவாய், மரந்தனிலே
மடிந்தமகா மகத்துவ வாழ்வே.

பொருள்:

அருந்தவமே, பரம்பொருளே, உன்னை அறிந்தவர் யார்? தெரிந்தவர் யார்? ஐயா! உம்மை அறிந்து தெரிந்த உடனே புகழ்ந்து மகிழ்ந்துகொள்வேன்; செபம் சொல்வேன், செவ்வனே நடப்பேன்; உன் திருப்பாதத்துக்குப் பொருந்தத் தொழுவேன். தினந்தோறும் நின் பொருள்சேர் புகழ்பாடி நடனம் ஆடுவேன்; நாங்கள் பொன்னுடு எய்த சிலுவை மரத்திலே வருந்தி மடிந்த மகா மகத்து வாழ்வே, பாவ விமோசனம் என்ற வரம் தருவாய்.

இப்பதிகத்தின் பத்துச் செய்யுட்களும், பலபாட்டொரு பொருள் கொள்ளும் குளகம் என்ற வாய்பாடாகும். 9-ஆம் 10-ஆம் செய்யுட்கள், வாழ்வே எனவரும் வினைமுதலுக்கு முற்று வினையாயின.

செய்யுள் 10

உனைத் தொழுவேன் உனைப் புகழ்வேன் உனக்குரியேன்
உனைப்பிரியேன், உன்னைப் பார்க்க
இனத்தவர்கள் ஆர், கனத்தவர் ஆர், உரித்துடனே
நடத்துவர் ஆர்; எல்லாம் நீயே;
வினைத்துயரால் மனக்குறையால் வருத்தமுறுது
இருக்கவுமே வேதநாய
கனைத் தயவாய் நினைத் தருள்வாய், உனக்கடியான்
எனச் சொலுவாய், கருணை வாழ்வே!

பொருள்:

இவ்விரண்டு இறுதிச் செய்யுட்களில் வேதநாயகர், சிலுவை மரத்தில் தமக்காக உயிர்விடுத்த சருணைக்குக் கைம்மாருகச் செய்த பொருத்தனைகளை மனமுவந்து பாடியுள்ளார்.

9-இல்: புகழ்ந்து மகிழ்ந்து செபம் சொல்வேன், செவ்வே நிற்பேன், பாதம் தொழுவேன், பாடுவேன் ஆடுவேன் என்றார்.

10-இல்: உன்னைத் தொழுது புகழ்வேன்; எனக்கெல்லாம் நீயே: இனத்தவர், கனத்தவர், உரிமையுடன் நடத்துவர் எல்லாம் நீயே எனச் சொல்லித் தன்னை முழுவதும் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்துவைத்தார்.

இத்தகு ஆன்ம நிவேதனமும் அர்ப்பணமும் செய்ய இவ் உரையாசிரியரையும் இவ்வாசகரையும் இந்த ஜெபமாலை மூலம் பரிந்தழைக்கின்றார் வேதநாயகர்.

30. ஆரோக்கிய சந்த வெண்பா

தலைப்பு:

ஒண்பாவென்னும் வெண்பா இலக்கணத்தோடும் இராகத்தோடும் பாடக்கூடிய சந்தத்தோடும் கூடிய பதிகமாகும்.

பொருள்:

நோய்வாய்ப்பட்டு நொந்து வாடும் மக்களுக்கு உடல் நலமும் ஆன்ம ஆரோக்கியமும் அருளிய ஆற்றலை வியந்து, தனக்கும் தயை புரியவேண்டும் என்று மன்றாடல்.

அமைப்பு:

முதலிரண்டு வெண்பாக்களும் 'காப்பு' எனப்படும்:
செ. 1. 'கவியடர்ந்து தயை புரிந்து கா' எனவும்,
செ. 2. 'துயவிந்தம் நீ தரும் துணை' எனவும் வந்தன.

செ. 3-10: முதல் மூன்று நற்செய்தி நூல்களில் காணப்படுகிற யேசுவின் அற்புதச் செயல்களைச் சுட்டித் தனக்கும் அவ்வாறே அருள் புரியவேண்டும் என்று இறைஞ்சுகின்றார் பத்தர்.

செ. 11: பதிகத்தின் முடிவுரை வந்தனத்தோடு நிறைவுறுகின்றது. 'கிறிஸ்து வள்ளலே' என்ற தொடர் இப்பதினொரு செய்யுட்கள் ஒவ்வொன்றின் மத்தியிலும் நின்று பதிகத்தின் மையப்பொருள் இதுவே என்று வலியுறுத்துகின்றது.

காப்பு

செய்யுள் 1

துங்கம் மிகும் தேவ பரிசுத்த சீயோன் குமரி
மணி கிறிஸ்து வள்ளலே - இங்கு உன்
செவிஅடர்ந்து பகரும் எங்கள்
செப தவங்களுடன் நிறைந்த
கவி அடர்ந்து தயை புரிந்து கா.

அருஞ்சொற்பொருள்:

துங்கம் = பெருமை, உயர்வு; மங்கல மணி = மங்களமான மணவாளனே; அடர்ந்து=(1) நெருங்கி, (2) பூவிதழ்; வள்ளல்-வரையாது கொடுப்பவன்.

பொருள்:

பெருமை மிகுந்த தேவ பரிசுத்த சீயோன் குமாரியினது மங்கள மணவாளனாகிய கிறிஸ்து வள்ளலே, இங்கு இப்பொழுது உமது செவியில் படும்படி குரலெடுத்து நாங்கள், எங்கள் செப தபங்களுடன் நிறைந்த எங்கள் பாடல்களை, பூவிதழ்களால் நெருக்கிக் கோக்கப்பட்ட எங்கள் செபமாலையை அணிந்து தயை புரிந்து எங்களைக் காப்பாயாக.

செய்யுள் 2

முன்னோர் உரைத்தபடி மூவுலகும் ஏற்றவரும்
மன்னு, ஒரே கிறிஸ்து வள்ளலே, என் நேரம்
மா அலங்கையாய் நெருங்கி
வாதிடும் பிசாசை வென்ற
தூயவிந்தம் நீ தரும் துணை.

அருஞ்சொற்பொருள்:

மா அலங்கையாய் - மா அலங்காரமாய், ஒய்யாரமாய்; வாதிடும் - வாதம் செய்யும், வாதிக்கும்; தூய விந்தம் - பரிசுத்த தாமரை மலர்ப்பாதம்.

பொருள்:

முன்னோர் உரைத்தபடி, மூவுலகத்தோரும் புகழ்கின்ற மன்னு, ஒப்புயர்வில்லாத ஒரே கிறிஸ்து வள்ளலே, எந்நேரமும் ஒய்யார மாய் என்னை நெருங்கி வாதிக்கும் பிசாசை வென்ற வீரனே, உன் தூய மலர்ப்பாதமே எனக்கு நீர் தரும் துணையாகட்டும்.

செ. 3 - 10: இந்த எட்டுச் செய்யுட்கள் ஒவ்வொன்றிலும் மத்தேயு, மார்க்கு, லூக்கா என்ற நற்செய்தி நூலாசிரியர்கள் விரித்துரைத்த யேசு பெருமானின் அற்புதச் செயல்களைச் சுருக்கிச் சொன்னார் கவிஞர்.

செய்யுள் 3

சிந்தை நொந்து வாடும் திமிர்வாத ரோகிதனை
'மைந்தன்' என்று ஓதும் கிறிஸ்து வள்ளலே - எந்தனை நீ
மிக்க கடிகைக்கு விடு
வித்து, இருபதத்தின் வலப்
பக்கமதில் வைக்க அருள்பார்.

அருஞ்சொற்பொருள்:

கடிகைக்கு - பிசாசின் பிடியிலிருந்து, வேற்றுமை மயக்கம்.

ஒப்புநோக்கு:

'ஆதி பாம்பு . . . கடித்ததையோ' தேவ தோத்திரப் பாடல், 233; 'கூளிப்பாம்பே...குதிகாலைக் கொத்திக் கடித்து...' பதம் - பாதம்.

ஒப்புநோக்கு:

மத்தேயு 9:1 - 8.

பொருள்:

உயர் சாதியாரால் ஒதுக்கப்பட்டுச் சிந்தை நொந்து வாடும் திமிர்வாதக்காரனை, 'மகனே, இனித் தைரியமாயிரு, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன' என்று அதிகாரத்தோடும் அருளோடும் அழைத்த வள்ளலே, நீ என்னைக் கொடிய பிசாசின் கையிலிருந்து விடுவித்து, உன் திருவடிகள் இரண்டில், என்னை உன் வலப்பக்கத்துக் காலடியில் வைத்தருள்க.

சுங்கச் சாவடித் தலைவன் மத்தேயுவைச் சீடனாக்கிய செயல்
(மத்தேயு 9:1-8)

செய்யுள் 4

ஒத்து ஒதிச் சீடன் என
ஓங்கு சுங்கத்தின் தலைமை
மத்தேயு தொழுங் கிறிஸ்து வள்ளலே - சத்துருவாம்
வஞ்ச அலகை துன்பவலை வந்துவிழும் என்றன் வினை
கொஞ்சமல, நின் கிருபைகூர்.

அருஞ்சொற்பொருள்:

வஞ்ச அலகை - வஞ்சகப் பேய்.

பொருள்:

சுங்கச் சாவடித் தலைவன் மத்தேயுவோடு ஒத்து ஓதி, 'நீ என் சீடன்' என அவனை அழைத்து அவனால் தொழப்படும் கிறிஸ்து வள்ளலே, முச்சத்துருக்களில் ஒருவனாகிய வஞ்சகப் பேயின் வலையிற் சிக்கச் செய்யும் என் வினைகள் கொஞ்சமல்ல; நீ கிருபை கூர்ந்து என் பாவம் போக்குக.

செய்யுள் 5

கல்லான கொடிய வலக்
கள்ளனுக்கும் அன்பு செய்த
வல்லான் மகா கிறிஸ்து வள்ளலே – பொல்லாங்கன்

பஞ்ச வஞ்சகங்கள் சஞ்ச
லங்கள் துஞ்சவும் புரிந்த
செஞ்சலங்கள் கொண்டுஉன் அன்புசெய்.

அருஞ்சொற்பொருள்:

பஞ்ச வஞ்சகங்கள் - பஞ்சமா பாதகங்கள்; துஞ்சவும் - எப்போதும்; செஞ்சலங்கள் - சிலுவையில் வடித்த செந்நீர்.

பொருள்:

கல்லாதவனும் பொல்லாதவனுமாகிய வலப்பக்கத்துக் கள்ள னுக்கும் அன்புசெய்த, வல்லமைமிக்க கிறிஸ்து வள்ளலே, நான் பொல்லாதவன், பஞ்சமா பாதகங்களை எப்போதும் செய்து கொண்டிருப்பவன்; என் பாவங்களை உன் செந்நீரால் கழுவி எனக்கு அன்புகூர்க.

கள்ளனுக்கும் என்றதில் உம்மைப் பொருள் நயத்தைக் காண்க. அத்தகைய படு கள்ளனுக்கும் அன்புகாட்டிய நீ எனக்கும் அன்புகாட்டு என்க.

பொருள்:

கல்லாதவனும் பொல்லாதவனுமாகிய வலப்பக்கத்துக் கள்ள னுக்கும் அன்புசெய்த வல்லமைமிக்க கிறிஸ்து வள்ளலே, நான் பொல்லாதவன், பஞ்சமா பாதகங்களை எப்போதும் செய்து கொண்டிருப்பவன்; என் பாவங்களை உன் செந்நீரால் கழுவி எனக்கு அன்புகூர்க.

12 ஆண்டுப் பெரும்பாடுற்ற பெண்ணுக்கு ஆரோக்கியம் அளித்த அற்புதச் செயல் (மத்தேயு 9: 18-22)

செய்யுள் 6

'ஆரோக்கிய சந்த வெண்பா' என்ற தலைப்புக்கேற்றதோர் செயல்.

ஆறு இரண்டாட்டுப் பெரும்பாடு ஆட அவட்கு ஆரோக்கியம்
செய்யு
மாறு திரள் தோள் தாக்கிய கிறிஸ்து வள்ளலே - பேறு
கொண்டுன்
வித்தகத்திரித்துவத்தின் வெற்றி மிக்க பத்து இலட்ச
ணத்தை யொத்து அகத்து அழுத்திடாய்

அருஞ்சொற்பொருள்:

ஆறிரண்டாட்டு = பன்னிரெண்டு ஆண்டு; ஆரோக்கியம் செய்யுமாறிரண்டோ தாக்கி - ஆரோக்கியம் செய்யுமாறு திரள் தோள் தாக்கி.

பத்து இலட்சணம்: (1) ஆதி அந்தமில்லாதவர். (2) மாறு தவர் (3) சருவ வல்லவர். (4) எல்லாமறிந்தவர். (5) அள வில்லாத ஞானமுள்ளவர். (6) எங்கும் நிறைந்தவர். (7) சத்திய முள்ளவர். (8) பரிசுத்தமுள்ளவர். (9) நீதியுள்ளவர். (10) நன்மையும் கிருபையுமுள்ளவர்.

(இவ்விளக்கத்தை வேதநாயகரே கொடுத்துள்ளார். செபமாலை, பக். 196.)

பொருள்:

12 ஆண்டு பெரும்பாடுற்ற பெண்ணுக்குச் சுகம் கொடுக்கு மாறு திரண்ட தோள் தாக்கிய கிறிஸ்து வள்ளலே, பேறு கொண்டவன் வித்தகத் திரித்துவத்தின் வெற்றிமிக்க பத்து லட்சணங்களுக்குத் தக்கவாறு என் மனத்தில் பதித்துவை.

99 ஆடுகளை விட்டு ஒரு ஆட்டைச் சுமந்த வள்ளலே (லூக்கா 15;1-7)

செய்யுள் 7

நூருட்டை விட்டு ஒன்றை நோக்கிச் சுமந்து வந்த
மாருத் தயை கிறிஸ்து வள்ளலே - வீருக
வானும்பர வாஞ்சுகள் சேர்ந்தழிவு ஆகாம்படி நேர்ந்திடு பாங்கதை
யான் ஆய்ந்திட ஆண்டு யாங்கணுமே.

அருஞ்சொற்பொருள்:

வானும்பர ஆஞ்சுகள் = வான - அம்பர - ஆஞ்சுகள் = தேவ தூதர், Angels.

இயேசுவின் உவமையில் நூறு ஆடுகள் உள்ளதோர் இடையன் காணுமற்போனதோர் ஆட்டைத் தேட 99 ஆடுகளை விட்டான் எனவரும்.

பொருள்:

99 ஆடுகளைவிட்டு ஒன்றைத் தேடத் திரிந்து, கண்டுபிடித்து, அதைத் தோளில் சுமந்துவந்த அன்புமாருத தயவுள்ள கிறிஸ்து வள்ளலே, வானத்திலுள்ள தேவ தூதர்கள் சேர்ந்து மகிழும்படி நேர்ந்த பாங்கை, நான் ஆராய்ந்துபார்க்க எங்கணும் என்னை ஆளும்.

சிலுவையில் தொங்கிய யேசுவின் விலாவிலிருந்து செந்நீரும் தண்ணீரும் வழிந்தது (யோவான் 20:34)

செய்யுள் 8

சிந்தும் புலால் நீரால் தேயம் அனைத்தும் புரக்க
வந்த சுதா, கிறிஸ்து வள்ளலே - சந்ததம் உன்

பாதம் அகத்தில் பதித்துத் துற்
பாவம் அகற்றித் திருத்திச்சற்
பாத வழிக்குட் படுத்திச் சொற் பார்.

சிலுவையில் தொங்கிச் சிந்திய செந்நீரால் அனைத்து நாடுகளில் உள்ளோரையும் இரட்சிக்க வந்த தேவ சுதனே, கிறிஸ்து வள்ளலே, எந்நாளும் உன் திருவடிகளே என் நெஞ்சிற் பதித்து, கெட்ட பாவத்தை அகற்றி, அதைத் திருத்தி நன்னெறிக்குட் படுத்திச் சொல். பார் - அசை.

பேய் பிடித்த இருவரைச் சுகப்படுத்தியது (மத். 8:28-34)

செய்யுள் 9

பன்றிகளைக் கொல்லப்
பசாசை விட்டுப் பேயனுக்கு
மன்றில் வளம் செய் கிறிஸ்து வள்ளலே - நன்றியறியாக்
கஞ்சமிகும் பஞ்சகன் பங்கங்கள்
கண்டு அருள் ஐந் தங்கமுங் கொண்டு உன்
தஞ்சமுறும் செஞ் சரண் தந்துந் தான்.

அருஞ்சொற்பொருள்:

பஞ்சகன் - பஞ்சமா பாவி; பங்கம் - குறை; ஐந்தங்கம் - ஐந்து சுயம்.

உடல் நலம் பெற்றத் தொழுநோயர் பதின்மர்; நன்றியுள்ளவன் ஒரே ஒருவன்

ஒப்புநோக்கு:

லூக்கா 17:11-19.

செய்யுள் 10

ஒன்பது பேர் நன்றியற்றோர்,
ஒரோ ஒருத்தனே உவந்தோன்;
அன்பு அதுவோ என்று ஒதுங் கிறிஸ்து வள்ளலே - என்பால்
கருணை புரிந்து உன் கண்கொண்டு இங்கு என்
கவலை ஒழிந்து உன் துங்கம் தங்கும்
சரணம் இரண்டும் பஞ்சம் பங்கும் தா.

அருஞ்சொற்பொருள்:

பஞ்சம் பங்கும் தா = ஐந்து காயத்தின் பங்கையும் பாகத்தையும் எனக்குத் தா. செ. 8-லும் 10-லும் யேசுவின் சிலுவைப் பாடுகளை நம்முன் வைக்கிறார் கவிஞர்.

செய்யுள் 11

நெல்லைத் தமிழ் வேதநாயகன் பா நீடுபுகழ்
வல்லத் திவ்விய கிறிஸ்து வள்ளலே - அல்லலுறும்
துன்பம் அற வந்து உனது சொந்த அடிமை என்றருளி
அன்பு புரி, வந்தனம்

எனச் சொல்லி ஆரோக்கிய சந்த வெண்பாவுக்கு முத்தாய்ப்பு வைத்துள்ளார் நெல்லைத் தமிழ் வேதநாயகர். அவர் பாடல்கள் நீடுபுகழ் பெறுக!

31. கொண்டாட்டு

தந்தானத் தனத்தானு—தன
தந்தானத் தனத் தானு.

செய்யுள் 1

சுந்தர சீவக் காவே—திரு
மந்திர தேவக் கோவே
தூதர்கள் அதிபதியே—நெடு
மூதாக்கள் நிதி மதியே
ஞந்தை ஆதி பிதாவே—நரர்
சொந்தம் ஒது சுதாவே
சாகா நித்திய சீவா—அதி
வாகா சத்திய தேவா
விந்தையே மிக வேலே—குடில்
வந்தையே மக வாலே
வெண்கலச் சற்பம் நீ தானே—உயர்
நற்குலப்பனி நானே
நிந்தைப் பாட்டுக்கு ஆளே—பல
சந்தப் பாட்டுக் கேளே
நேயா வந்தனைக்கு ஈவே—சரண்
நீயே வந்து எனைக் காவே.

அருஞ்சொற்பொருள்:

காவே - தோட்டமே; மந்திரம் - ஆலோசனை; கோ - அரசன்; நெடு மூதாக்கள் - நீண்ட மூதாதையர்; சுதாவே - சுயம்பே; அதி வாகா - அதிக அழகா; மிகவேலே - மிகாயேல் தூதனே; நன்குலப் பற்பனி - நற்குலப் பெண்; வந்தனைக்கு ஈவே - என் வந்தனைக்கு ஈவாயே.

செய்யுள் நயம்:

'சீவக்காவே' எனத் தொடங்கி 'எனைக் காவே' என முடித்தார்.

செய்யுள் 2

ஆயன் ஆட்டுக்கு இடையா—நெறி
நாயன் ஆட்டுக்கு உடையா
ஆமென் ஆதன வாமா—கன

பூமன் ஆதன சீமா
தூயமே சுடர் வாளா— உச்
சாயமே அடர் தோளா
சுத்தாங்கப் பரத்துவமே—திவிய
சத்தாங்கத் திரித்துவமே
ஞாயமே தரு நடுவா—ஐங்
காயமே உருகொடுவா
நாதாந்தப் புரவிடுவே—ஒரு
வேதாந்தப்பா வடிவே
நேயனே குணவாளா—பரன்
சேயனே மணவாளா
நீண்ட மிக்க ஒளித்தாளே—அருள்
பூண்டு எனக்கு அளித்தாளே.

அருஞ்சொற்பொருள்:

ஆயன் ஆட்டுக்கு இடையா - ஆயன் ஆன கடவுளின் ஆட்டுக்கு இடையனே; நெறி நாயன் ஆட்டுக்கு உடையா - நீதி அரசன் நாட்டுச்கு உடையவனே; ஆமன் ஆதனவாமா - ஆமென் என்ற அற்புத அழகா; கன பூமன் ஆதன சீமா - மாபெரிய பூமியின் அரசே; உச்சாயமே அடர் தோளா - ஊக்கம் பொருந்திய தோளா; ஐங்காயமே உருகொடுவா - ஐந்து காயமே கொண்ட வடிவோடு வா; நாதாந்தப்புர விடிவே - ஓசையின் அந்தமான நகரத்தின் விடிவே; ஒரு வேதாந்தப்பா வடிவே - ஒரே வேதாந்தப் பரத்துருவே; பரன் சேயனே - தேவ குமாரனே; நீண்ட . . . அளித்தாளே - நீண்ட, மிக்க பிரகாசமுடைய பாதத்தை எனக்கு தயைகொண்டு அளித்தாட்கொள்ளே.

செய்யுள் 3

உச்சமாகிய தெருளே—கன
மிச்சமாகிய பொருளே
ஓசன்னமனு வேலா—கிரு
பாசனை அனு கூலா
அட்சபப்பர வெளியே—மிகு
நிச்சயத்திரு ஒளியே
ஆண்டவாபர தேவா—சிறை
மீண்டவா நர யோவா
பட்சமேசுப வாரி—வன
லட்சமேஉப காரி
பாட்டுக்கிட்ட மன்றுட்டா—நரர்
தேட்டுக்கிட்ட கொண்டாட்டா

மூட்செடிக்கிருக் கிறவா—கொடும்
அச்சடித்திருக் கறவா
மூசா வந்தனேச் சீரே—கும
ரேசா வந்தெனேச் சேரே.

அருஞ்சொற்பொருள்:

உச்சம் - உயர்ச்சி; சிறை மீண்டவா - சிறை மீட்டவா; தேட்டுக்கிட்ட - தேடிக்களித்த; கொடும் அச்சடித்திருக்கறவா - கொடிய அச்சடிப்புத்தகங்களின் மாறுபாடு அறும்படி வா; மூசா - மோசே, Mousa, Moses, மூட்செடிக்குள் இருக்கிறவா.

'கொண்டாட்டு' என்ற தலைப்பில் வந்த இப்பதிகத்தின் 3-வது செய்யுளில், 'கொண்டாட்டா' என்றார் கவிஞர்.

செய்யுள் 4

ஆதிகால வஸ்துவே—எரி
நீத மூலக் கிறிஸ்துவே
ஆரணத்திரு நேசமே—பரி
பூரணப் பிரகாசமே
சாதியாருட புகழ்ச்சியே—பரஞ்
சோதியாருட மகிழ்ச்சியே
சாத்திர ஞானத் தானமே—இரு
நேத்திர்வான்த் தானமே
காதலுற்ற கண்மணியே—நெறி
ஓதலுற்றவிண் ணணியே
காரணத்திருக் காட்சியே—உ
தாரணப்பர மாட்சியே
வேதநாயகன் பாட்டனே—அதி
தூதர்தாயக நாட்டனே
மேசையா உனக்கு அபயமே—கிறிஸ்
தேசையா எனக்கு உபயமே.

அருஞ்சொற்பொருள்:

எரிநீத மூலக்கிறிஸ்துவே - உக்கிர நீதியின் வேராகிய கிறிஸ்துவே; ஆரணம் - வேதம்; சாத்திர ஞானத்தானமே - வேத சாஸ்திர ஞானஸ்நானமே; இரு நேத்திர வானத்தானமே - இரு கண்ணுன வான சொர்க்கமே; வேதநாயகன் பாட்டனே - வேத நாயகன் பாடிய பாட்டனே; தாயக - தாய் வீடான; உனக்கு அபயமே - உனக்கு அடைக்கலமே; கிறிஸ்தேசையா உனக்குச் சோடியே.

செய்யுள் 5

ஆதி சர்ப்பத்தை மடக்கியே—பரஞ்
சோதி சொல் பத்தை அடக்கியே
ஐயிரு கற்பனை ஆக்கியே—மறு
கை இரு கற்பனை தாக்கியே
நீதி மறையைக் காட்டியே—தமிழ்ச்
சாதி முறையை மாட்டியே
நீற்றுப் பூச்சையும் கவிழ்த்துமே
வாதிரும்பர்கள் சலிக்கவே—அறிவு
ஓதிரும்பர்கள் கெலிக்கவே
வானத்தெழுந்தும் வெளிப்பட்டே—கரு
வானத்தெழுந்தும் ஒளிப்பிட்டே
பூதலத்தருட் பரத்தியே—படு
பாதலத்து இருள் துரத்தியே
புரக்கும் ஆதி திருக்குமாரன்
நரர்க்குள் மேவினர் இரக்கமே.

அருஞ்சொற்பொருள்:

பத்துச் சொற்களைச் சுருக்கி, ஐஇரு கற்பனை ஆக்கி - மறு கை இரு கற்பனை தாக்கியே — 10 சொற்கள் தசவிதி, Deca-logue, Ten commandments. கற்பனை: 1. புனைந்துரை 2. கட்டளை, விதி. இப்பத்தை இரண்டாக்கியது: லூக்கா 10:26–28.

'தமிழ்ச் சாதிமுறை . . . நீட்சையுங் கவிழ்த்துமே'—20 வீண் பத்திநாசம் பார்க்க.

'வாதிடும்பர்கள்', 'வோதிடும்பர்கள்'—மடக்கணி. வாது - இடும்பர்; அறிவு+ஓதிடும் - உம்பர்கள்; பெருமையோடு வாது செய்யும் அகந்தையர் சலித்துப் போக; அறிவோதும் வானோர்கள் வெற்றி சிறக்க; அருட்பரத்தி - அருளைப் பரப்பி; பாதலத் திருட்டுரத்தி - பாதாளத்தின் இருளை நீக்கி; புரக்குமாதி - புரக்கும் ஆதி.

செய்யுள் 6

சீனுக் கோட்டைக் கடந்துமே—வளர்
கானுக் காட்டைத் தொடர்ந்துமே
செருசலேப்பதி முறியவே—திரு
எருசலேப்பதி அறியவே
கோனுட்டுத் தவிதனைக் கண்டே—முழு
மாநாட்டுப் புவியினைப் பண்டே
கொடுத்து வந்தவன் தலத்திலே—சிறந்

தடுத்து வந்தவன் குலத்திலே
ஆனுட்டிடையர் கூடவே—அம்ம
னனுட்டுடையர் பாடவே
அடுத்த பெத்தலேக் கெட்டியே
தானுட்டித் தரை சிறக்கவே—உயிர்
மேனுட்டுத் துரை பிறக்கவே
தாராட்டுச் சொன்ன பெருக்கமே—நரர்
சிராட்டுத் தனது இரக்கமே.

•

அருஞ்சொற்பொருள்:

சீனுக் கோட்டை - கோடு=மலே; சீனு மலேயை; செருசலே=எருசலே; முறியவே—முரிதல் - அழிதல்; முறிய - அறிய என்ற எதுகை காரணமாக முரிதல் முறிதல் ஆயிற்று. கோனுட்டு - ஆட்டுக்கோன் - ஆடு மேய்ப்பவன்; தவிதன் - தாவீது; அடுத்து வந்தவன் - அவன் வமிசத்தில் பிறந்தவன்; ஆனுட்டிடையர் - மாடு ஆடு மேய்க்கும் இடையர்; அம்மனுட்டுடையர் - அம்மன்னவன் ஆளும் நாட்டுக்கு உடையவர்; சிற்றில் - சிறு இல்=குடிசை; தானுட்டித்தரை - தான் நாட்டின பூவுலகம்; தாராட்டு . . . இரக்கமே=பிறந்த பிள்ளேயின் இரக்கமே நரர் சீராட்டும் தாயார் சொன்ன தாராட்டுந்தான்.

செய்யுள் 7

கன்னிமரியின் இடத்திலே—ஒளி
மின்னி அரிய திடத்திலே
கரிசித்து உருவில் தொந்தமாய்—உயர்
பரிசுத்த அருபிக்கு அந்தமாய்
உன்னி உற்பவித்து ஓங்கியே—விற்
பன்னி கெற்பத்தை நீங்கியே
உயர்ந்த பெத்தலேக் காட்டிலே—பசுப்
பெயர்ந்த கொத்தலேக் கோட்டிலே
முன்னணையினைச் சிறந்துமே—மன்னர்
பொன்னணை தனைத் துறந்துமே
மூச்சாஸ்திரிகள் வருகவே—ஒரு
முக்காணிக்கைகள் தருகவே
துன்னி மானவர் குதிக்கவே—செய
வென்ன வானவர் துதிக்கவே
சொற்கத்திருந்து மிக்கப்பரமன்
மெய்க்குமரனு மேவினர்.

அருஞ்சொற்பொருள்:

உருவில் தொந்தமாய் - உருவிற்சேர்ந்து, உருவெடுத்து; உன்னி - நினைந்து; பன்னி - புத்திசாலியான; பசுப் பெயர்ந்த கொத்தலைச் கோட்டிலே - பசு மேயும் பூங்கொத்தலைக்கும் பக்கத்திலே; மனர் - மன்னர்; துன்னிமானவர் - மனுடர் நெருங்கி; செயவென்ன - செயசெயவென்று.

செய்யுள் 8

மெட்டாய் நீள் எருசலேயிலே—பிறந்து
எட்டாம் நாள் ஒரு நிலையிலே
விருத்த சேதனம் மேவியே—நரர்
கருத்த சேதனம் நீவியே
அட்டே யுறழ் ஐந்தினத்திலே—அருள்
இட்டே யுறவுந் தினத்திலே
அந்நாளும் தமிழ் தானுமே—புகழ்ந்து
அன்னாளும் சிமி யோனுமே
கட்டாய்ப் பன்னிரு சங்கமே—ஒரு
மட்டாய்ப் பின்னரு சங்கமே
கனத்த வேத பாரகர் நின்றே—தர்க்கித்து
தனத்த வேத சாரகர்வென்று
அட்டோர் முப்பது நிதியிலே—மிகக்
கெட்டோர்க்கு அற்புத நதியிலே
தாட்சி விண்டவன் தீட்சை கொண்டது
காட்சி கண்டவன் சாட்சியே.

அருஞ்சொற்பொருள்:

அட்டேயுறழ் ஐந்தினத்திலே—அட்டே - எட்டு; $8 \times 5 = 40$ தினத்திலே; தமிழ் தானுமே - தமிழ்=இனிமை தானுமே; மட்டாய்ப் பின்னிரு சங்கமே - ஓரளவாய்ப் பின்னிருந்த சங்கமே: தனத்த வேத சாரகர் - வேதத்தின் பொருளானவர்; தட்டோர் முப்பது நிதியிலே - நடுவானவர் முப்பது வயதிலே; அற்புத நதி - புதுமை ஆறு. தாட்சி . . . சாட்சியே = தமது தாழ்மையைச் சொன்ன யோவானிடம் தீட்சை கொண்டதும் (ஞானஸ்நானம்) அவன் கண்ட காட்சியே சாட்சியுமாகும்.

செய்யுள் 9

சாத்தான் சோதனைக் கடுத்துமே—கொடு
மாத்தான் தீதினைக் கெடுத்துமே
தண்டலை வனத்தடைந்து பேய்—மருள்
கொண்டு அலைவன் எத்து இடைந்து போய்ச்

சேர்த்தான் பன்னிரு வரையுமே—வினை
தீர்த்தான் பின்னெரு வரையுமே
தேசமே பிரசங்கித்தான்—விசு
வாசமே பெறச் சங்கித்தான்
பார்த்தான் பவத்தின் கடனையே—பிணை
ஏற்றான் அவத்தின் திடனையே
பாடுபட்டதி னலுமே—பரிந்து
ஈடு பட்டதின் மேலுமே
போர்த்தான் சாவினை முனைத்துமே—கடிந்து
ஈர்த்தான் தீவினை அனைத்துமே
பெலத்தினெடு நலத்தின் ஆதி
வலத்தில் ஏறினார் கெலித்துமே.

அருஞ்சொற்பொருள்:

மாத்தான் - மாற்றான், பகைவன்; பேய் மருள் கொண்டு அலைவன் எத்து இடைந்து - அலைந்து திரியும் பிசாசின் தந்திரத்தை வென்று; பின் ஒருவரையும் தேசமே பிரசங்கித்தான் - பின்னும் ஒருவராகிய கடவுளையே நாடெங்கும் பிரசங்கித்தான்; விசு வாசமே பெறச் சங்கித்தான் – விசுவாசமுண்டாகக் கனப்படுத் தினான். பரிந்து ஈடுபட்டதின் மேலுமே போர்த்தான் சாவினை முனைத்துமே=உத்திரவாதம் செய்தபிறகு சாவைச் சினந்து அகற்றினான்.

செய்யுள் 10

சங்க வானவர் சூழ்கவே—தவத்
தங்க மானவர் வாழ்கவே
தாராதரத்தின் மேவியே—பவத்
தாரா தீரத்தின் ஆவியே
பங்கமேபடத் தீர்த்துமே—அழல்
அங்கமே கெடச் சேர்த்துமே
பாதாளத்தினில் தாழ்த்தியே—சொடும்
வேதாளத்தையும் வீழ்த்தியே
துங்க ஆட்டுக் குட்டிக்கே—கிறிஸ்து
எங்கள் பாட்டுக் கெட்டிக்கே
சோபனங்களும் கூடியே—நித்திய
சீவனங்களும் நீடியே
மங்கலத் தந்தையர் அகத்திலே—ஒளிர்
பிங்கலச் சிந்தையர் சுகத்திலே
மகிழ்ந்து மகிழ்ந்து மகிழ்ந்து மகிழ்ந்து
மகிழ்ந்திருக்கவும் வாழியே.

அருஞ்சொற்பொருள்:

சங்கம் - கூட்டம்; தவத் தங்கமானவர் - தவத் திருமேனி கொண்டவர்; தாராதரம் - மேகம்; அழல் அங்கமே கெடச் சேர்த்து - உடல் நெருப்பில் எரிக்கப்படச் சேர்த்து; மங்கலத் தந்தையர் அகத்திலே - தந்தையரது திருமண வீட்டிலே; ஒளிர் பிங்கலச் சிந்தையர் சுகத்திலே - ஒளிர்விடும் பொன்மனக் கன்னியர் சுகத்திலே. ஈற்றடிக்குக் கவிஞர் கண்ட உரை:

மகிழ்ந்து களித்துப் பூரித்தெக் களித்து
வாழ்ந்திருக்க வாழியே.

காப்புப் பாடல் இரண்டாம் செய்யுளில் 'திருமண அழைப் பிதழ்' கொடுத்தவர், 27-வது செபமாலையில்,

சீருயருந் தவிது மைந்தா ஆடூரூஞ்சல்
சீயோனின் திரு மகளோடு ஆடூரூஞ்சல்

என்றவர் இவ் இறுதி மாலையின் இறுதிச் செய்யுளின் பிதாவின் கல்யாண வீட்டில், ஒளிர்

பிங்கலச் சிந்தையர் சுகத்திலே
மகிழ்ந்து வாழ்கவெனச் சொல்லித் தமது செபமாலையின் முதலையும் முடிவையும் முடிச்சுப்போட்டு முத்தாய்ப்பு வைத்தார் யேசு பக்தர் வேதநாயகர்.

செபமாலை, முதற் பகுதி உரை முற்றிற்று.

இரண்டாம் பகுதி

ஊஞ்சல் பா வகைகள்

முன்னுரை

தமிழ் இலக்கிய மரபில் மகளிர் பாடுவதாக ஊஞ்சல் பாக்கள் பல பாடப்பட்டுள்ளன. மாணிக்கவாசகரும் வேதநாயகரும் இவ்வாறு பாடியவற்றை ஓரளவு ஒப்புநோக்குவோம்.

இத்தகு பாடல்களில் இரு வகையுண்டு. சிறப்புடையார் ஒருவரை ஊசலில் இருக்கச்செய்து மற்றவர்கள் அதனை இலக்கிய வண்ணம் பாடுவதோர் வகை. மகளிர் சிலர் ஊசலில் ஆடிய வண்ணம் பாடும் வகை மற்றொன்று. மாணிக்கவாசகரும் வேத நாயகரும் தத்தம் பாடல்களைக் கவிதையாகவே பாடினர். மாணிக்கவாசகர் ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பாவிலும், வேத நாயகர் காப்புவிருத்தப்பாவிலும் பாடினர். மாணிக்கவாசகர் 8-ஆம் நூற்றாண்டிலும், வேதநாயகர் 18-ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர். முன்னவர் சைவ மரபிலும் பின்னவர் கிறித்தவ விவிலிய மரபிலும் ஊஞ்சற்பாவை அமைத்தனர். முன்னவர், 'இறைவனைத் தம் காதலனாகக் கொண்டு, அவனைப் பொன் னூசலில் இருக்கச்செய்து, அவனோடு தாமும் காதலியாக உட னிருந்து ஆடுவதாகக் கவிதை இயற்றினர்.'

டாக்டர் நாதா தியாகராஜன் அம்மையார், 'ஆன்மீகத் திருமணம், (Spiritual Marriage) என்ற வகையில் 'முருகு வரும் அன்பினில் இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு பாடல் செய்கிறார்.' அவை 'நாயக நாயகி உணர்வு நிலை யில் அடங்கும்' என்றார் (திருவாசகத்தில் அருளியல், பக். 254; vi).

இவ் 'உணர்வுநிலை' 'நாயக - நாயகி - பாவம்' எனப்படும். வடமொழியில் பாவா - (Bhava) என்பர்.

வேதநாயகரோ, தாம் ஒருவரே இறைவனின் தலைவி என்னாது, யேசுவின் அடியார் கூட்டமே, திருச்சபையே அவரது காதலி அல்லது நாயகி என உருவகித்தார். இதுவே கிறித்தவ விவிலியக் கொள்கை என்க.

10. திருச்சபையூஞ்சல்

காப்பு விருத்தம்

செய்யுள் 1

விருட்சமொன்று ஆகாது என்று
விலக்கின ஈசன் மைந்தன்
பரிட்சை பார்த்து ஏவைதின்ற
பழவினை தீர்த்தான் என்றே
குருச் சபையோரை வாழ்த்திக்
குல விவாகத்தோர் கேட்கத்
திருச்சபை ஊஞ்சல் பாடத்
திவ்விய ரூபி காப்பாம்.

அருஞ்சொற்பொருள்:

விருட்சம் - மரம்; ஆகாது - தின்னக்கூடாது; விமலன் - கடவுள்; ஈசன் - கடவுள்; மைந்தன் - இயேசு கிறிஸ்து; பழவினை - (1) பழம் தின்றதால் விளைந்த வினை, (2) பழைய வினை - Original sin; குல விவாகத்தோர் - மாசிலாக் குலத்தில் உதித்த திருமண விருந்தினராகியவர் (செ. 8: பண்டோர்; பழவடியீர். ஒ.நோ. திருவாசகம், திருவெம்பாவை, செ. 3): ஏவை - ஏவாள்.

'பத்துடையீர், ஈசன் பழவடியீர், பாங்குடையீர்
புத்தடியோம், புன்மைதீர்த்து ஆட்கொண்டால்
பொல்லாதோ!'

பொருள்:

ஏதேன் தோட்டத்தில் இரு மரங்கள் நின்றன; அவற்றில் ஒன்றின் பழத்தைத் தின்னலாகாது என்று விலக்கின ஈசன் பரீட்சை பார்த்தான்; அவன் மைந்தன் இயேசுகிறிஸ்து, ஏவாள் தின்ற பழத்தால் பழுத்த வினையைத் தீர்த்தான் என்று குரு சொல்லிச் சபையோரை வாழ்த்தி, மாசிலாக் குலத்து உதித்த மணமக்கள் கவி வேதநாயகன் பாடலைக் கேட்கப் பரிசுத்தாவியான வர் கர்த்தருள் புரிக.

வேதநாயகர்க்குத் திருவாசகத்திலோர் ஈடுபாடுண்டு. திருப் பொன்னூசல் பதிகம் அவரை ஈர்த்த காரணத்தால், 'திருச்

சபையூஞ்சல்' எனப் பெயரிட்டு ஓர் பதிகத்தையும் பாடிவைத்தாரவர். 'குலவிவாகத்தோர் கேட்கத் திருச்சபையூஞ்சல் பாடத் திவ்விய அரூபி காப்பு' என்று சொல்லியே பதிகத்தைத் தொடங்கினர். செ. 5-இல், 'நித்திய கல்யாண சோபனங்களுண்டு' என்றார்.

எனினும், ஒருவன் உழுத சாலிலேயே உழுவது தமிழன் இயல்பன்று. தனிச் சால் ஓட்டுவானவன். அவ்வாறே வேதநாயகரும் தனிச் சால் ஓட்டுவதை ஈண்டுக் காண்போம். இதற்கு ஊற்றுக் கண்ணுயிருந்தது விவிலியம் (Bible). சங். 45-க்குத் 'திருமணப் பாடல்' என்றே பெயரிட்டனர் தமிழாக்கம் செய்தவர்.

மாணிக்கவாசகர், பவளம், கால், முத்தம் கயிறு, மாட மாளிகை, சீலம் திகழும் திருவுத்தர கோசமங்கை எனப் புகழ் பாடினர்.

வேதநாயகர், செ. 6,7-இல், புது எருசலேமின் மாட்சியை விதந்துரைத்தார். வச்சிரக் கால்கள், மரகத விட்டம், இரத்தினப் பலகை, முத்துக் கொடுங்கை, கண்ணுடித் தங்கம், பளிங்கொத்த பனிரண்டு அஸ்திபாரம் நிறைந்த புது எருசலேம் நகரில், திருச்சபை என்ற மணமக்கள் கிறிஸ்து என்ற அழகிய மணவாளனோடு இனிதமர்ந்து,

பட்டணத்தின் மகிழ்ச்சிபெற ஆடீரூஞ்சல் என்று அழைக்கின்றார்.

ஆதாமின் குலம் பிள்ளை பாத்தியத்தை இழந்த ஏழை மக்கள். இவர்களை மீட்க, பராபரன் தம் ஒரு தனிச் செல்வ மகனை அனுப்புவித்த உண்மையாலே இந்நிலத்துக்கு ஒளி உதித்தது. ஏவை மக்கள் பராபரனின் சுவீகாரப் பிள்ளைகளானார்கள் என்று 'நீர் ஆடீரூஞ்சல்' என்று 20 முறை அழைக்கின்றாரவர்.

உன்னதனார் ஆதாமின் குலத்தை மீட்க
ஒரு சுதனை அனுப்புவித்த உண்மை.

செய்யுள் 1

பொன்னுலகும் பூவுலகும் படைத்து ஆனந்த
பூரணமாய் நின்ற பராபரனைப் போற்றி
உன்னதனார் ஆதாமின் குலத்தை மீட்க
ஒரு சுதனை அனுப்புவித்த உண்மையாலே
இந்நிலத்துக்கு ஒளி உதித்தது, ஏழை மாக்கள்
எல்லவரும் கிருபை பெற்றார் என்றே தேர்ந்து
பன்னுகலைக் கிறிஸ்தவர்நீர், ஆடீரூஞ்சல்!
பராபரனின் பிள்ளைகள் நீர், ஆடீரூஞ்சல்!

அருஞ்சொற்பொருள்:

ஒரு சுதன்=ஒரு தனிச் செல்வ மகன்; ஏழை மாக்கள் - எளிய மக்கள்; பன்னு - பாடல்; புகழ்ப் பாடுகின்ற கிறிஸ்தவர். நின்ற - வினைத் தொகை; நின்ற, நிற்கின்ற, நிற்கப்போகிற.

பொருள்:

அவ்வுலகத்தையும் இவ்வுலகத்தையும் படைத்து ஆனந்த பரிபூரணமாய் நிற்கின்ற பராபரனைப் போற்றி, மனுக் குலத்தை மீட்க உன்னத பராபரன் தமது ஒரு தனி மகனை இவ்வுலகத்துக்கு அனுப்பின காரணத்தாலே இவ்வுலகத்துக்கு ஒளி உதித்தது. அதனால் எளிய மக்கள் எல்லாரும் கிருபை பெற்றோர் என்றே தெளிந்து, புகழ் பாடற் கலை பயிலும் கிறிஸ்தவர் நீர்; பராபரனின் பிள்ளைகள் நீர்: ஊஞ்சல் ஆடி மகிழ்கொண்டாடுங்கள்.

ஈற்றடிகள் இரண்டும் பல்லவிகள்; பத்துச் செய்யுட்களிலும் பயிலப்பட்டுள்ளன.

பராபரனின் திருச்செயல்கள்

செய்யுள் 2

ஆதிசுதன் மானிடஅவ தாரமானார்
அம்புவியைத் தமக்கு உறவது ஆக்கிக்கொண்டார்
வாதையுறப் பாடுபட்டார் சிலுவைமீது
மரித்து அடக்கப்பட்டு உயிர்த்தார் வான்போய் நின்றார்
நீதியெல்லாம் நிறைவேற்றி முடித்தார், ஒன்றும்
நிலுவையில்லை வாழ்வு அனைத்தும் சம்பாதித்தார்
பாதகர்க்குப் பயம் இனி ஏன்? ஆடரூஞ்சல்!
பராபரனின் பிள்ளைகள் நீர் - ஆடரூஞ்சல்!

அருஞ்சொற்பொருள்:

வான்போய் நின்றார் - 'கடவுளின் வலப்பக்கத்தில் இயேசு நிற்கிறதையும் ஸ்தேவான் கண்டு, 'அதோ, வானம் திறந்திருக்கிறதையும் மனுமைந்தர் கடவுளின் வலப்பக்கத்தில் நிற்கிறதையும் பார்க்கிறேன்' என்றார். 'திருத்தூதுவர் செயல்கள் 7:55,55. கவிஞர் 'வான்போய் நின்றார்' என்றதற்கு இது வேத நூலாதாரம்.

ஒன்றும் நிலுவையில்லை. நிலுவை - எஞ்சியுள்ள தொகை, (arrears), பாக்கி சாக்கி ஒன்றுமில்லை.

பாதகர்க்குப் பயம் இனியேன்?—

ஒப்புநோக்கு:

ரோமர் 8:31,32. 'கிறிஸ்துவைத் தம் சொந்த மைந்தரென்றும் பாராமல், அவரைக் கடவுள் நம்மெல்லாருக்காகவும் ஒப்புக்கொடுத்தார். அவ்வாறு செய்தவர் நமக்குத் தேவையான யாவற்றையும் அருளாதிருப்பாரா?'

இல்லை, பாதகராய நமக்கு இனிப் பயமேன்?

பொருள் — தெளிவு.

அவதார ரகஸ்யம்

செய்யுள் 3

வானுலகைத் தூதருக்காய்ப் படைத்தநாதன்
மண்ணுலகை மானிடர்க்காய் வகுத்தாரேனும்
ஈனமுறும் பாவிகளின் அகந்தைக்காக
எரிநரகத்தையும் படைத்து அங்கழுத்தாது எம்மைத்
தான் அவரோடே இருத்திச் சரியதாக்கித்
தாரணியும் வானுலகும் சமனுய்ச் செய்யப்
பானு எனக் கிறிஸ்து உதித்தார் - ஆடூரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள் நீர் – ஆடூரூஞ்சல்

அருஞ்சொற்பொருள்:

தாரணி - மண்ணுலகம்; பானு - சூரியன்; உதித்தார் - சூரியன் உதித்தலால் இருள் நீங்கிற்று. கிறிஸ்து உதித்தலால் பாவ இருள் நீங்கிற்று. அகந்தை = பெருமை.

பொருள்:

வான உலகைத் தூதருக்கென்று படைத்த ஆண்டவன் மண்ணுலகத்தை மானிடர்க்காய் வகுத்தார். இம்மானிடரை இரு கூறாக வகுத்தார்: பாவ மக்கள் ஒரு புறம், விசுவாசிகள் மறுபுறம். கேடுகெட்ட மக்களின் பெருமைக்காக எரி நரகத்தையும் படைத்தார்; ஆனால் விசுவாசிகளாகிய நம்மை நரகத்தில் அழுத்தாமல், தம்மோடே இருத்தி, சரியில்லாத நம்மைச் சரியாக்கி, மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் சமன் செய்வதற்காக, இருள் சூழ்ந்த இந்நிலவுலகில் இருள்நீக்கும் சூரியனாக உதித்தார். இதன் பயனாக நீவிர் கடவுளின் மக்களாயினீர். எனவே மகிழ்ந்து ஊஞ்சலாடுங்கள் என்றார் கவிப் பக்தர்.

இனி இச்செய்யுளின் உள்ளுறை பொருள் காண்போம்.

'நாதன்' எனப் பெயர் படைத்தவர் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும், ஆம், எரி நரகத்தையும் படைத்தார்.

அவர் திரிலோகாதிபதி. பிரிந்த உலகங்களை நல்லுறவுக்குக் கொண்டுவர, 'பானுவெனக் கிறிஸ்து உதித்தார்' என்றார்.

சூத்திரபாணியில் கவிதையாக மகிழ்ந்து பாடிய வேத நாயகர்க்குக் கருவூலமாக இருந்தது பவுலடிகள் பாடிய கவிதை ஒன்று. கொலோசெயர் 1:15-20.

15. 'அவர் கண்ணுக்குத் தெரியாத கடவுளின் சாயலாயிருக் கிறார்; முதற்பேறானவரும் படைப்பு அனைத்திற்கும் மேலான வருமாயிருக்கிறார். 16. ஏனெனில், விண்ணிலுள்ளவை, மண்ணி லுள்ளவை - ஆவியுலகிலுள்ள மன்னர்கள், தலைவர்கள், ஆட்சி செலுத்துவோர், கண்ணுக்குத் தெரிகிறவை, தெரியாதவை எல்லாம் அவரில் படைக்கப்பட்டன. அனைத்தும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் படைக்கப்பட்டன...18. அவரே திருச்சபையாகிய உடலுக்குத் தலை; அவரே அதற்கு ஊற்றானவர்; அவரே இறந்தோரிடமிருந்து முதலில் உயிரோடெழுந்தவர், முதற்பேறானவர். அதனால் அவர் அனைத்திலும் முதன்மையான வராய் இருக்கிறார். 19. அவருக்குள் கடவுள் தமது முழு நிறை வோடும் குடிகொள்ளத் திருவுள்ளம் கொண்டார். 20. அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினால் கடவுள் சமாதானத்தை உண் டாக்கி, மண்ணுலகிலும் விண்ணுலகிலுமுள்ள அனைத்திற்கும் அவர் மூலமாகத் தம்மோடு உண்டாக்கத் திருவுளங்கொண்டார்.'

ஒப்புநோக்கு:

படைப்பு - 3 முறை; விண்ணுலகம் மண்ணுலகம் - 2 முறை; சமனுய்ச் செய்ய - நல்லுறவை உண்டாக்க; பவுலின் பாடலில் இல்லாதவை=எரி நரகத்தையும் படைத்து. எம்மை அழுத்தா மல்; பானுவென உதித்தார்.

Commenting upon this passage, (Colossians 1:15-20), Bishop Eduard Lohse writes:

> 'This is a quotation from a primitive Christian song which celebrates the exalted Lord... the first strophe states that all things were created in him, through him and for him, so that the second strophe deals with reconciliation which is extablished as cosmic peace by the bearer of the divine fullness. Thus creation and reconciliation, cosmology and soteriology are dealt with in order to praise Christ as the lord of the cosmos, who is the head of the body and whose reign encompasses all things.'

We may comment that our poet Vedanayahar who has had no access to Lohse's comments had the spiritual insight to grasp the meaning of Paul's poem but weaved the ideas in his own poem leaving what he did not want in this context and putting in something else and emphasising the concept of reconciliation in his own words and encouraging the bridal couple to sing with joy the results of the creative and saving acts of the crucified and risen Lord. 'Nathan' is his word for Paul's 'Lord'. Let us not only praise Vedanayahar but join him in the praise of the Lord. Christ is the Lord of heaven and earth and therefore became the Mediator between these two worlds.

These lines of high poetry show that our poet Vedanayahar had the ear of a musician to detect the song of Saint Paul in I Corinthians 3 : 21 ff.

All are yours—
Paul or Apollos or Cephas,
the world or life or death,
the present or the future—
all are yours.
But you are Christ's,
but Christ is God's.

In his book on Paul, p. 160, Gunther Bornkamm calls this 'the hymn of Christian liberty, *libertas Christiana*.' Boasting in the Lord means ceasing to boast of oneself. This renunciation of all other boasting opens up the way from freedom. Thus in the immediate context of the word of the cross come the strains of Paul's great hymn of *libertas Christiana*'.

Bornkamm quotes in the next page Paul's apocalyptic hope of Elijah :

'what no eye has seen, nor ear heard, nor the heart of man conceived, what God has prepared for those who love him.' (I Cor. 2 : 9)

அவர்க்குச் சுடுகாடு, எமக்கு வீடு

செய்யுள் 4

காடு அவர்க்கு, நாடு எமக்குத் தலமாயிற்று,
கனத்த மாளிகை நமக்கு, அவர்க்கோ கொட்டில்,
பூடணங்கள் புட்பமெத்தை பொன்னு மெத்தை (நமக்கு)
புண்ணியர்க்கோ கல்லுமெத்தை புல்லுமெத்தை

மாடு உயர்ந்த வலமையுண்டு தலைமையுண்டு (நமக்கு)
மன்னவர்க்கோ கந்தையுண்டு நிந்தையுண்டு
பாடும் உண்டு; பலன் நமக்குண்டு, ஆடீரூஞ்சல்!
பராபரனின் பிள்ளைகள் நீர், ஆடீரூஞ்சல்!!

அருஞ்சொற்பொருள்:

காடு (1) பெத்லேகேமின் காடு, (2) கொல்கொதாவின் சுடு காடு. தலம் - வாசஸ்தலம், இருப்பிடம்; கொட்டில் - மாட்டுக் கொட்டில்; பூடணங்கள் - அணிகலன்கள்; மாடு - செல்வம்; வலமை - வல்லமை.

பொருள்:

நீர் அவரது அவதாரச் செயல்களால் கடவுளின் மக்களானீர். அதன் பயனால் நமக்கு எய்திய பயன்கள் யாவை என்பதை எண்ணிடுகிறார் கவிப்பக்தர்:

(1) திருஅவதார புருடனுக்குக் காடு; நமக்கு நல்ல இருப்பிடம்.

(2) அவர்க்கு மாட்டுக்கொட்டில்; நமக்குக் கனத்த மாளிகை.

(3) புண்ணியர்க்கு கல்லு மெத்தை, புல்லு மெத்தை; நமக்கு அணிகலன், புட்ப மெத்தை, பொன்னு மெத்தை.

(4) மன்னவர்க்கு கந்தை உண்டு, நிந்தை உண்டு, பாடும் உண்டு; அவர் பாடுகளின் பயனாக நமக்குத் திருவருட் பயன் உண்டு. பராபரனின் பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்ள உரிமையும் இறுமாப்பும் உண்டு. எனவே: ஆடீரூஞ்சல்.

நயவுரை:

இச் செய்யுளில் அவரது தாழ்மையும் நமது உயர்வும், பிறப்பிலிருந்து சிலுவை மரண மட்டும் அவர் பட்ட பாடுகளும், நாம் அடைந்த பயன்களும் தொகுத்தும் வகுத்தும் கூறப்பட்டன.

N. Hermann என்பார் ஜெர்மன் மொழியில் பாடிய பாடலின் தமிழாக்கத்தைக் கீழே காண்க (பப்ரீசியுசுவின் மொழி பெயர்ப்பு: 23).

தாழ்ந்தோர் அவர், உயர்ந்தோன் நான்,
இஃதென்ன மாறுதல்?
இஃதென்ன? சிநேகந் தான்;
இஃது, அன்பின் ஆழங்கள்!

உத்தமரின் சிநேகமிது பாரீரோ?

செய்யுள் 5

சீரான வாழ்வதெல்லாம் எங்கட்குண்டு
சேனையுண்டு தானையுண்டு செங்கோலுண்டு
நேரான பந்துக்களின் கூட்டமுண்டு
நித்திய கல்யாணசோ பனங்களுண்டு
ஊராளுமாதி பத்தியந் தானுமுண்டு
உத்தமர்க்கோ என்னவுண்டிங் கொன்றுமில்லை
பாரீரோ சிநேகம் இதுஎன்று ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள் நீர்—ஆடீரூஞ்சல்.

அருஞ்சொற்பொருள்:

சேனை தானை - ஒரு பொருள்; தானை என்பதைப் போராயுத மாகக்கொண்டு, சேனையும் போராயுதமும் உண்டு என்பதும் அமையும். ஊராளு மாதிபத்தியம்—ஊராளுமதிகாரம்.

'உண்டு'—ஏழுமுறை பயிலப்பட்டுள்ளது.

பொருள்:

எங்களுக்கு வாழ்வு, சேனை, தானை, செங்கோல், பந்துக்களின் கூட்டுறவு, கல்யாண சோபனங்கள், ஊராளுமதிகாரம்—இவ் வளவும் எங்கட்குண்டு; உத்தமர்க்கோ என்னவுண்டு? இங்கொன்று மில்லை. தெய்வ சிநேகம் இது என்று பார்க்கமாட்டீர்களோ? இச் சிநேகத்தால் நீவிர் பராபரனின் பிள்ளைகளானீர்; எனவே, ஆடீரூஞ்சல்!

செ. 4-லும் 5-லும் காட்டப்பட்ட உயர்வு - தாழ்வுகளை கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்:

செய்யுள் 4

அவர்க்குக் காடு
அவர்க்கோ கொட்டில்
புண்ணியர்க்கோ
கல்லு மெத்தை, புல்லு மேத்தை
மன்னவர்க்கோ
கந்தையுண்டு நிந்தையுண்டு
பாடுமுண்டு

எமக்கு நாடு
பூஷணங்கள்
புட்ப மெத்தை
பொன்னு மெத்தை
நமக்கோ
மாடுயர்ந்த வல்லமையுண்டு
தலைமையுண்டு
பலன் நமக்குண்டு
பராபரனின் பிள்ளை - உரிமை
யுண்டு

செய்யுள் 5

உத்தமர்க்கோ
என்ன உண்டு?
இங்கு ஒன்றுமில்லை

எங்கட்கோ,
சீரான வாழ்வு எங்கட்குண்டு
சேனை - தானை யுண்டு
செங்கோலு முண்டு
நேரான பந்துக்களின் கூட்ட முண்டு
நித்திய கல்யாண சோபனங்க ளுண்டு
ஊராளு மாதிபத்தியந் தானு முண்டு
நிநேகம் இதுவென்று பாரீரோ?

இவ்வாறே செ. 8, 9, 10-இல் காண்க.

மார்த்தீன் லுத்தர் இயற்றிய கிறிஸ்துமஸ் கீதம்
Gelobet seirt du Jesus Christ

பப்ரீசியுசுவின் தமிழாக்கம் (சில திருத்தங்களோடு)

1. இரக்கமுள்ள இயேசுவே, கன்னிமரி கருவில் மனுஉரு எடுத் தீரே; இது உண்மைதான்; வானவரும் உமது திருப்புகழ் பாடு கிறார்கள், இரக்கமே.

2. நித்திய பிதாவின் ஒரு தனி மகன், இதோ! இப்பொழுது எங்களது எளிய உடல் உதிர ரூபமெடுத்து மாட்டுக் கொட்டிலில் படுத்திருக்கின்றார் இப்போ! இரக்கமே.

3. உலகத்தைத் தாங்கினவர், அளவில்லாத வல்லவர், மரியம்மை யின் மடியில் சிறு குழந்தையாகக் கிடக்கின்றார், இரக்கமே.

4. அஞ்தி ஜோதி இங்கே வந்து உலகுக்குப் புத்தொளி வீசுகிறது; அது நடுநிசியிலும் ஒளிவீசி எங்களை ஒளியின் மக்களாக்கிற்று, இரக்கமே.

5. தேவ சுதன், கடவுள் தன்மையானவர், இவ்வுலகில் இப்போ பரதேசியானவர்; எம்மை அழுகையின் பள்ளத்தாக்கிலிருந்து கரையேற்றி எம்மை வான வீட்டுக்கு உரியராக்கினர், இரக்கமே.

6. நமக்கிரங்கி, நம்மை விண்ணுலகில் செல்வந்தராக்கி, அவரது வானவ அன்பரைப்போல எளியவரான எம்மை நேசிக்க இவ் வுலகத்துக்கு அவர் இறங்கிவந்தது, அவர் இரக்கமே.

We give hereunder the German Hymn of Nicolas Herman (1561) *in English Translation of Samuel Janzow*, (*b.* 1913)

(A CHRISTMAS HYMN)

Let All Together Praise our God

1. Let all together praise our God
   Before his glorious throne ;
   Today he opens his heaven again
   To give us his own Son,
   To give us his own Son.

2. The Father sent him from his throne
   To be an infant small
   And lie here poorly mangered now
   In this cold, dismal stall

3. Within an earth-born form he hides
   His all-creating light ;
   To serve us all he humbly cloaks
   The splendour of his might
   The splendour of his might.

4. He undertakes a *great exchange* ;
   puts on our human frame,*
   And *in return* gives his realm ,
   His glory and his name,
   His glory and his name.

5. He is a servant, I a lord :
   How great a mystery '.
   How strong the tenderchild's love ! '
   No truer friend than he,
   No truer friend than he.

6. He is the key, and he the door
   To blessed Paradise ;
   The angel bars the way no more.
   To God our praise rise,
   To God our praise rise.

7. Your grace in lowliness revealed,
   Lord Jesu, we adore,
   And praise to God we yield
   And Spirit evermore ;
   We praise you evermore.

Lobt Gott, ihr Christian alle gleich

* V.4: 'a great exchange' : in German : Wechsel
in Tamil : பண்டமாற்று.

இவ் இசைப் பாட்டைத் தமிழ் வசனநடையில் காண்போம்:

(1) கிறிஸ்துவின் அடியார் கூட்டத்தாரே, உயர்வற உயர்ந்த அரியணையில் வீற்றிருக்கும் கடவுளைத் துதியுங்கள்; இன்று அவர் தம் வானுலகத்தைத் திறந்து தமது சுதனை நமக்கு வழங்கும் அவரைத் துதியுங்கள், அவரைத் துதியுங்கள்.

(2) தந்தையின் மார்பில் அணைந்திருந்தவர் சிறு குழந்தையாக நம்மிடம் வருகிறார்; உடுக்க ஆடையில்லாத எளியவராக ஓர் மாட்டுக்கொட்டிலில் கிடக்கிறார், கிடக்கிறார்.

(3) தன் வலிமை யாவையும் முற்றிலும் துறந்து, தாழ்மையும் வறுமையும் உடையவருமானார்; எல்லாவற்றையும் படைத்தவர் அடிமைக் கோலம் பூண்டார்.

(4) இவர் நம்மோடு ஓர் அற்புதப் பண்டமாற்றம் செய்கிறார்: நமது உடலையும் உதிரத்தையும் தாம் எடுத்துக்கொண்டு, தம் தந்தையாரின் அரசில் பங்குரிமை கொடுக்கிறார், பங்குரிமை கொடுக்கிறார்.

(5) இனி, அவர் ஓர் அடிமை, நானோ ஆண்டவன், இதுவோர் பண்டமாற்றுகுமா? இதென்ன மாறுதல்? இதென்ன சிநேகம்; வேறென்ன சிநேகம் இதைக் காட்டிலும். இதுதான் அன்பின் ஆழம்; இச்சிறு குழந்தையின் இதயத்தில்!

(6) இன்று அழகிய பரதீசுக்கு வழி திறக்கப்பட்டது; கேரூபின் வழி அடைப்பு உடைக்கப்பட்டது. கடவுளுக்கே துதி, கனம், புகழ்.

7. அவரது கழி பேரிரக்கத்தை நமக்குக் காட்டுவதற்கென்றே அவர் இதைச் செய்தார்;
அடியவர் குழுவினரே, எல்லாரும் அவரில்
களி கூருங்கள், நித்திய கிறிஸ்துவுக்கு நன்றி
கூறுங்கள், இரக்கமே.

(7) பன்மொழிப் புலவர் வேதநாயகர், ஜெர்மன் லூத்தரன் சபையினரின் பாடல்களையும், அவற்றைத் தமிழாக்கின பப்பீசியுசுவின் ஞானப்பாடல்களையும் பாராயணம் செய்தவர். அதன் தாக்கு ஜெபமாலையில் காணப்பட்டதை மேலே காட்டியுள்ளோம்.

செய்யுள் 6

வச்சிரத்தினுல் இழைத்த கால்கள் நாட்டி
மரகதத்தினுல் அரிய விட்டம் போட்டுத்
தற்சீசின் ரத்தினுத்தால் பலகை சேர்த்துத்
தங்கச் சங்கிலிகள் தக தக எனப் பூட்டி
உச்சித முத்தா பலத்தால் கொடுங்கை கூட்டி
உன்னத பத்திரா சனத்துக்கு ஒப்பதாக்கிப்
பட்சமுடன் கிறிஸ்துவைக் கொண்டு ஆடீரஞ்சல்
பராபரனின் பிள்ளைகள் நீர், ஆடீரஞ்சல்.

பொருள்:

அன்புடன் கிறிஸ்துவைக் கொண்டு ஆடூரூஞ்சல்,

பராபரனின் பிள்ளைகள் நீர், ஆடூரூஞ்சல்

என்ற பல்லவியைப் பத்துச் செய்யுட்களிலும் பயின்று 6-ஆம் 7-ஆம் செய்யுட்களைப் பாடினார். கிறிஸ்துவினுல் நீவிர் இப்போது கடவுள் மக்கள்; எனவே மகிழ்ச்சியோடு ஊஞ்சலில் ஆடுங்கள்— என்றார்.

அருஞ்சொற்பொருள்:

கொடுங்கை - வளைந்த கை மரம்; பத்திராசனம் - தாமரை யினுற் செய்யப்பட்ட இருப்பிடம்.

செய்யுள் 7

மட்டதீ இல்லா மகத்துவப் புது எருசலேமின்
வாழ்வு அனந்தம் வாழ்வு ஆனந்தம் வளமோ கோடி
கட்டுயர்ந்த சுத்த கண்ணுடித் தங்கம்
கனத்த பளிங்கு ஒளி வஸ்பிக்கல்போல் காந்தி
திட்டமதின் பனிரண்டு அஸ்திபாரம்
திவ்வியமாம் விலை உயர்ந்த ரத்தினங்கள்
பட்டணத்தின் மகிழ்ச்சிபெற —ஆடூரூஞ்சல்,
பராபரனின் பிள்ளைகள் நீர்—ஆடூரூஞ்சல்.

10. (8) இச்செபமாலையைப்பற்றி வே. சேம் வேதநாயகம் சாஸ்திரியார் எழுதிய முன்னுரையைக் காண்போம்:

'இதில் கவிராயருடைய மனப்பான்மை, வேத அறிவு, தேவ துதி இவை பொங்கி வழிவதைக் காணலாம். உட்கருத்தையும் அறிவது பயன்படும். கடைசி மூன்று கவிகளில் கிறிஸ்துவினுல் அனுபவிக்கும் சந்தோஷங்களையும் சிறப்புகளையும் பாடியுள்ளார்.'

8-ஆம் கவி:

'உண்டான நன்மையெல்லாம் நமக்குண்டாச்சு
உம்பரமும் அம்பரமும் நமக்கென்றுரைச்சு
யேசுவினுல் மேன்மை பெற்றோம் கிருபை பெற்றோம்
இன்பமுறப் பரிசுத்தாவியையும் பெற்றோம் . . .'

'கிறிஸ்துவினுல் மீட்கப்பட்டவர்கள் செபமாலையை இசை யோடும் ஆவியோடும் பாடி, பரவசமாகி, ஆவியில் வளர்ந்து, தேவனை மகிமைப்படுத்தவேண்டுமென்பதே எமது நம்பிக்கையும் விண்ணப்பமுமாகும்.'

இந்த நம்பிக்கையோடு இவ்விறுதிச் செய்யுட்களைக் காண் போம்.

செய்யுள் 8

உண்டான நன்மையெல்லாம் நமக்குண்டாச்சு
உம்பரமும் அம்பரமும் நமக்கென்றாச்சு
அண்ட சராசரங்களெல்லாம் நமக்கே சொந்தம்
அனுதி சுதன்றானும் நமக் கருளப்பட்டார்
கண்ட கண்ட சிஷ்டியெல்லாம் நமக்கல்லாமற்
கடவுளுக்குத் தேவையென்ன கவைகளென்ன?
பண்டோரே, நன்றியறிந்து ஆடீரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள் நீர், ஆடீரூஞ்சல்!

அருஞ்சொற்பொருள்:

நமக்குண்டாச்சு! - நமக்குண்டாயிற்று என்பதின பேச்சு மொழி; சராசரம் - சரம்+அசரம் = அசையும் பொருள், அசையாப் பொருள். பண்டோரே - பழவடியார்களே; சிஷ்டி - சிருஷ்டி.

பொருள்:

உலகத்தில் கடவுளால் உண்டான நன்மைகளெல்லாம் நமக்கென உண்டாயின (ஒன்றுமில்லாமையிலிருந்து; வானம் பூமி நமக்கே சொந்தம்; அனுதி சுதன்கூட நமக்கருளப்பட்டவர்; நாம் கண்ணால் கண்ட படைப்புப் பொருள் எல்லாம் நமக்கல்லாமல் வேறு யாருக்கு? கடவுளுக்கா? அவருக்குத் தேவை எவை, கவலைகள் எவை? பழவடியாரே, நன்றியறிந்து ஆடீரூஞ்சல்.

இதன் பொருளை 1 கொரி. 3:21-23ஐக் கொண்டு விளக்க வேண்டும்.

எல்லாம் உங்களுக்குரியவையே (21) . . .
'எல்லாம் உங்களுக்குரியவையே.
நீங்களோ கிறிஸ்துவுக்கு உரியவர்கள்;
கிறிஸ்து கடவுளுக்குரியவர்.'

1 கொரி. 1b: 'உலகத்திற்கே தீர்ப்பளிக்கப்போகும் ஆண்டவரின் அடியார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?' பண்டோரே, பழவடியார்களே!

இச்செய்யுளில், 'எல்லாம்' என்ற சொல் மும்முறை வந்துள்ளன. 'அம்பரமும் உம்பரமும்' இனம்பிற்றி எல்லாம் என்றது தொக்கிற்று. பண்டோரே, நீவிர் எல்லாரும் பராபரனின் பிள்ளைகள், நன்றியறிந்து ஆடீரூஞ்சல் என்றறிக. ஒ.நோ. ஆதியாகமம் 9:2,3; 'இவை யாவையும் உங்களுக்குத்தந்தேன்.' 'சகல, எல்லா' என்ற சொற்கள் 6 (7) முறை வந்துள்ளன. 'ஊராளுமாதி பத்தியம்' என்ற தொடர்க்கு (செ. 5)ச் செ. 8 விளக்கவுரையா

யிற்று. ஒ.நோ. ரோமர் 8:38 'அஞ்தி சுதன் தானும் நமக் கருளப்பட்டோர்' என்றதற்கு விளக்கமாகிறது.

ரோமர் 8:37 'நம்மிடம் அன்புகொண்டவரால் இவை எல்லா வற்றிலும் நமக்கு வெற்றிக்குமேல் வெற்றி கிடைக்கிறது.' பத்துப் பொருட்கள் 'அண்டசராசரங்கள் எல்லாம் நமக்கே சொந்தம்.'

யேசுவினுல் நாம் பெற்ற பேறுகள் ஏழு

யேசுவினுல் மேன்மை பெற்றேம், கிருபை பெற்றேம்
இன்பமுறப் பரிசுத்த ஆவியையும் பெற்றேம்
யேசுவினுல் புத்திர சுவி காரம் பெற்றேம்
எத்தனையோ பாக்கியங்கள் எல்லாம் பெற்றேம்
யேசுவினுல் நித்தியசீ வனையும் பெற்றேம்
எண்ணூழிகாலமும் வாழ்ந் திருக்கப் பெற்றேம்
பாசம் வைத்துக் கிறிஸ்தவர் நீர்—ஆடூரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள் நீர்—ஆடூரூஞ்சல்!

பொருள்:

மணமக்களை ஊஞ்சலில் வைத்து ஆட்டும்போது, 'நீவிர் பதினறும் பெற்றுப் பெருவாழ்வடைவீர்களாக' என வாழ்த்துவது நம் மரபு. காப்பு விருத்தத்தில் கூறியதை இச்செய்யுளில் மடித்துக் கூறினர் கவிஞர்.

செய்யுள் 10

சத்தியத்தின் மேலான பாதை கண்டோம்
சாதுகமாய் உலகத்தைத் தள்ளிப் போட்டோம்
பித்தர்களின் சாஸ்திரத்தைக் குலைக்கச் செய்தோம்
பிசாசின் ஆடம்பரங்கள் அனைத்தும் விட்டோம்
மெத்த மெத்தக் கிருபை பெற்றோம், தேறிப் போனோம்
வேதநாயகன் பாடல் விரும்பிச் சொன்டோம்
பத்தியுள்ளோர்க் கென்ன குறை? ஆடூரூஞ்சல்
பராபரனின் பிள்ளைகள் நீர்—ஆடூரூஞ்சல்!

பொருள்:

இதுகாறும் பழவடியாரும் தானும் வேதத்தின் வாயிலாக இயேசுவினிடம் கற்றதையும் இயேசுவினுல் பெற்றதையும் சொல்ல லுற்றார். இச்செய்யுளில், 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற வள்ளுவர் வாய்பாட்டின்படி, தாங்கள் செய்தவற்றை ஏழு என்று எண்ணிடுகின்றார் கவிஞர்.

(God's gracious gifts to us, 1-9; our reactions st. 10)
பக்தியுள்ளோர்க் கென்ன குறை? ஆடரூஞ்சல்!
பராபரனின் பிள்ளைகள் நீர்; ஆடரூஞ்சல்!
சங். 23:1—ஆண்டவர் என் ஆயர், எனக்கோர் குறைவு மில்லை.

It is a life story with a happy ending-Interpreter's Bible.
அமைப்பு—வைப்புமுறை (Structure—Arrangement).
V V. 1–4: நல்லாயன்—வழிகாட்டி, வழிக்குத் துணை.
5: திருப்பயணம்.
6: பயண முடிவு—வீடு (அறம் பொருள் இன்பம்).

இரு உருவகங்களும் இணைந்தோடுகின்றன.

ஆயன் விருந்துபசாரம்—புல் தடங்களில் மேய்த்து திரையற்ற நீர் நிலைகளில் என்னை நீர் அருந்தச் செய்கிறீர். நடுப்பகலில் மர நிழல் 'வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்—'

அருள் நலம்: பெருவிருந்து, நறுமணத்தைலம், நல் வரவேற்பு, கழிபேரிரக்கம், ஆயனின் அருட்டுணை என்னைவிட்டு நீங்காதிருக்கும்.

வழியில் ஆயனைத் தோன்றியவர், வீட்டில் விருந்துபசாரராக, உடை மாற்றி, உபசரிக்கிறீர். இனி உனக்கென்ன குறை சொல் மனமே.

வேதநாயகர், தம் செபமாலையின் இவ் இறுதிப் பாடலில் இவ் இரு அடிகளை வைத்து முடித்ததின் காரணமென்ன? உற்றுநோக்குவோம். தொண்ணூற்றிரண்டு ஆண்டுகள் அவர் இவ்வுலகில் பயணம் செய்தார். 1810 முதல் 1855 மட்டும் 'வேதநாயக சாஸ்திரி மிகுந்த கருத்தோடும் பிரயாசத்தோடும் . . . இந்த ஜெபமாலையை உண்டுபண்ணி இப்போது உங்களுக்குக் காணிக்கையாக அனுப்பினேன்' என்றார் தம் முகவுரையில்.

(1) 'சத்தியத்தின் மேலான பாதை கண்டோம்'
மேலான பாதை கண்டோம்—

'இப்பொழுது எல்லாவற்றையும்விடச் சிறந்த நெறி ஒன்றை நான் உங்களுக்குக் காட்டுகின்றேன்' என்றார் பவுலடிகள் (1 கொரி. 12:31).

ஒப்புநோக்கு:

'காட்டு வித்தால் யாரொருவர் காணுதாரே.'

அன்பை, கிறிஸ்துவின் அன்பை அவர் காட்ட யாம் கண்டோம் என்றார்.

(2) 'சாங்கமாய் உலகத்தைத் தள்ளிப்போட்டோம்'—
உலகத்தை அறவே தள்ளி விட்டோம்

(3) 'பித்தர்களின் சாஸ்திரத்தைக் குலைக்கச் செய்தோம்'—
கண்மூடி மந்திரங்களை மண்மூடிப் போட்டோம்.

(4) 'பிசாசின் ஆடம்பரங்கள் அனைத்தும் விட்டோம்'—
ஞானஸ்நானத்தின்போது, 'நீ பிசாசையும் அதன் ஆடம்பரங்களையும் விட்டுவிடுவாயா?' என்ற வினவுக்குச் சொல்லப்படும் விடை இது.

(5) 'மெத்த மெத்தக் கிருபை பெற்றோம், தேறிப் போனோம்'—கிருபைக்குமேல் கிருபை பெற்று ஞான வளர்ச்சியில் தேறிப்போனோம்.

(6) 'வேதநாயகன் பாடல் விரும்பிக்கொண்டோம்.'

இதுகாறும் கவி வேதநாயகன் பாடிய பாடல்களை விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வோம்.

(7) 'பத்தியுள்ளோர்க்கு என்ன குறை, ஆடரூஞ்சல்!'

நெல்லை—தஞ்சை சுவிசேடக் கவிராயர் பாடியருளிய

ஜெபமாலை—மூலமும்

தஞ்சைத் 'தமிழ் மா மணி'

மறைத்திருவாளர் சி. வி. சவரிமுத்துவின்

விரிவுரையும் திறனாய்வும்

இறையருளால் முற்றுப்பெற்றன.

பிழையும் பிழை திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
		First Printed in 1985	1987
viii		line 23: Serves	Verses
2	29	செபமாலையை,	செபமாலையை.
3	13	ஊஞ்சாலாட	ஊஞ்சலாட
7	16	ஒளிவே	ஒளியே
9	20	வருத்தாந்தம்	விருத்தாந்தம்
10	16	அர்சனை	அர்ச்சனை
15		last line: gread	Creed
16	6	பாவிகட்டும்	பாவிகட்கும்
16	29	சிவபுத்தகத்தில்	ஜீவபுத்தகத்தில்
19	15	காட்டி முறைப்படி	காட்டிய முறைப்படி
23	28	கொள்வார்!	கொள்வார்!'
24	21	logos logos	logos
30	21	அடைக்கா தெருவந்	அடைக்காதெவரும்
40	3	நாம்	தாம்
	22	ஞன் நான்	omit நான்
	34	பெற்றவனை	பெற்றவனை
42	7	பிதா மகனை	பிதாவின் மகனை
		Stylisties	Stylistics
47	25	laxical	lexical
49	14	will be able	will not be able
	38	hiddden form	hidden form
56	27	மூவாக முதல்வன்	மூவாத முதலவன்
69	30	ஒட்டு மந்திரம்	ஏட்டு மந்திரம்
73	1	உ வு	உணவு
	10	கானுனுதேச	கானனுதேச
81	34	Hoilsgeschicte	Heilsgeschicte
111	10	27. அருட்பத்து	29. அருட்பத்து
	14	பங்கயத் தானும்	பங்கயத் தயனும்.
	33	பாடியவர்	பாடியவர்,
120	31	ஆகும்	ஆகும்.
128	16	பொன்னுக்கங்கே தூண்டு	பொன்னுக்கங்கே துண்டு

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
129	9	90 ஆண்டுகள்	92 ஆண்டுகள்
130	17,18	சங்கிதச் சார் சார்தந்து	omit சார் தந்து
135	24	பரிவாள்	பரிவால்
138	25	நீ அமுதது,	omit comma
139	32	போலும்	வக்கில்லை போலும்!
163	29	கொடூரே	கொடூர
171	22	செய்யுள் 2	செய்யுள் 3
172	30	முகலாகிய	முகிலாகிய
173 செ.5			
	வரி 2	இருள் கல்	இருள் அகல
174	27		6 யேசுவின் சிலுவைப் பாடுகள்
184	12	TεV	TEV
	14	Dr. J. Jeremi,	Dr. J. Jeremias
	16	Pointt	Point
	19	As	'As
	20	Jesut	Jesus
	30	E V ε μ Ol π P W T O	E V E μ OL π P W T O
185	35	Dr. J. Jeremia	Dr. J. Jeremias
190செ.2,3			See crossan: finding p. 98
192 14-16 and para 5			See செந்துறை முத்து
202	7	வரி 7க்கும் 8க்கும் இடையில்:	பொருள்:
203	10	கருணை-அருள்	கருணை-அருள்;
211	4	வேண்டும்	வேண்டும்;
215	4	இன் கள்	இன்பங்கள்
	19	நேசிகன்	தேசிகன்
220	7	சகன்	சகான்
221	18	இறைவன் மகன் என் என்	இறைவன் மகன் என்குரு என்
222	17	பொருத்து	பொருது
223	27	பான்	பரன்
226 செ.1			
	வரி 1	வளைந்த	வணைந்த
	5	வளைந்து	வணைந்து

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
	27	பார்சிறந்த உலகூடு உயர்ந்த கலி லேயமென்ற பெரு . . .	
227	5	Heavenly Angels; ஆஞ்சுகள்	Heavenly Angels/of; ஆஞ்சுகள்;
226			
தலைப்பு			முகாந்தரம்=காரணம்
227	14,15	ஞானம், பரிசுத்தம் பாக்கியம் என்ற நால் வரங்களையும்	பாக்கியம் சாவாமை என்ற
	27	பார் சிறந்த	பார் சிறந்த
228	5	வனைகல்	வனைதல்
229	16	...Holy Ghost	...Holy Ghost, ஆவி
	22	திரு நாம் இடுவாய்	திரு நாமம் இடுவாய்
230 செ.3			
வரி	1	கபிரேயல்	கபிரியல்
	18	அவள் முன்னே	அவன் முன்னே:
232 செ.5			
வரி	9	கொள்மைக்கண்ணுள்	கொள் மைக்கண்ணுள்
233 செ.6			
வரி	4	பானவருமே	வானவருமே,
234 செ.6			
வரி	4	யேசு வஸ்து	யேக வஸ்து
235 செ.7			
வரி	2	பட	பாட
237	10	ஏசு தந்தையார்	ஏக தந்தையார்
239	28	26 திருநாம	27 திருநாம . . .
243	34	ஐந்தினை	ஐந்திணை
245	1	விளைப்பயன்	வினைப்பயன்
249	29	மூப்பதனில்	முப்பதனில்
245	11	This is not fiction;	This is not a fiction;
247	2	திறனப்பிர	திறமைப்பிர
...	17	சுதகரா-சுதனே	omit
	24	குழந்தையான	குழந்தையாக
	26	சுயுதற்பர	சுயதற்பர

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
249 செ.1		திருமறை மீறும்...ஆதி:	திருமறை மீறும் ஆதி மானிடரின் தீவினை தீர அன்று ஆதி
251	21	நிச்சயமுழு	நிச்சய
	29	யிற்கட்டி	யிற்கட்டிய
251	30	சீடர்களைக்	சீடர்களின் கால்களை
254	14	ஆடியம்	ஆகடியம்-நிந்தனை
255 செ.7 வரி	1	மாநிலாதவன்	மாறு இல்லாதவன்

ஜெபமாலை—விரிவுரை எழுத எமக்குத் துணைசெய்த நூல்கள்

பக்கம்

xiv டாக்டர் உ. வே. சாமிநாதையர்: திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம். Arno Lehmann: 'Es Begann in Tranquebar' Halle–Wittenberg, 1916.

xvii வேதநாயகர்—'ஆரணதிந்தம்' 1800 A.D. & p. xx/p. 9.

xviii மணிவாசகர், சிவ புராணம்,

Reinhard Deichgrabar: **A Study on Early Christian Hymns**; Peter O' Brien: **Thanks-giving within the Structure of Pauline Theology**–ch. 4.

xxii Dr. Dayanandan Francis: 'கிறிஸ்தவக் கவிஞர்களும் தமிழ்ப் பண்பாடும்' 1977.

xxiii } கல்வெட்டுச் சாசனங்கள்.
xxvii }

4 தா. அருளானந்தம்: யாழ்ப்பாணம், C. L. S. Lyrics, 101.

9 டாக்டர் சு. ப. அண்ணாமலை, மதுரை.

10 தாயுமானவர், பக். 17.

15 Nicene Creed.

21 அருணகிரியார், திருப்பானந்தவரியார்

22 திருவள்ளுவர்—பக். 26.

27 திருவாசகம் 7. திருவெம்பாவை.

38 C. L. S. Lyrics, எண் 105.

43 Martin Buber—**I and Thou.**

44 அருணகிரியார்—பிள்ளையார் வணக்கம்.

48 Reader's Dictionary.

.. W. I. Albright, Ungar's Commentary.

.. Dr. Amiya Chakravarthy—Madras University: **Great Religions of the World—National Geographical Society.**

.. Peake's One Volume Commentry on YHWH.

50 R. A. Berclay, Glasgow University, Oriental Soceity, xv (1955), 44–47.

55 **Today's English Version**, Hebrews II:1, 2. அருணகிரியார்—திருப்புகழ் பெருந்திரட்டு, எண் 71.

58 **English—Tamil Dictionary**—Madras University. தற் காலத் தமிழ்ச் சொல்லகராதி: ச. பவானந்தம். 1925.

67 தாயுமானவர். சச்சிதானந்த சிவம். உ. வே. சாமிநாதையர்—தமிழ்ப்பா மஞ்சரி.

73 ஞா. சாமுவேல் ஐயர், லுத்தரன் சபை குரு—C. L. S. Christian Lyrics, எண் 4.

79 J. Ch. Lange (1756), Germen Lutheran Poet.

81 Oxford Dictionary—Oxymoron.

83 J. Ch. Lange, ப்ரீசியு ஞானப்பாடல், எண், 138.

90 பவரைய்யர், ப்ரீசியுசு மொழிபெயர்ப்புகள்.

92 வெள்ளைவாரணர்: திருக்களிற்றுப்படியார்

111,113 மாணிக்கவாசகர்: 29, அருட்பத்து.

113 தாயுமானவர், திருவள்ளுவர்.

115 திருவள்ளுவர்—கு 1—121 பக்.

123 I Howard Marshall—Com. on Acts, p. 374.

128 பட்டினத்தார்.

132 திருவிளையாடற் புராணம்: என்னை ஏன் அடிக்கிறீர்?'

146 ஞானோபதேசக் குறிப்பிடம்: தரங்கன்பாடி, தென் மார்க்கு.

153 மிஷனரிமார். Oxford Dictionary.

150,151 எ. ஆ. கிருஷ்ண பிள்ளை, குறள், தாயுமானவர்.

167 டாக்டர் தா. வி. தேவநேசன்: தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் C.L.S. 1956, 'வேதநாயக சாஸ்திரியும் ஜாதி பேதமும்', பக். 110–120.

மேற்கண்ட உரை எழுதியபோது, இந்நூல் எமக்குக் கிடைக்கவில்லையே என வருந்துகிறேன்.

168 அருணகிரியார்—பெருந்திரட்டு, 332.

175 குறள்: 'தனக்குவமையிலாதாழ். . .'

182–187 H. A. கிருஷ்ணபிள்ளை, மாணிக்கவாசகர், Dr. J. Jeremias, Naue Testamente Deutshe, NTD.

189 Hans Courelmann quotes, W. C. Unnik—CFD Movle. வேற்று நோக்கு: திருப்புகழ்ப் பாடல்.

197 தேவாரம் 5:100. 3.

242 தாயுமானவர்: 'ஆசையெனும்', செ. 24.

243–244 உ. வே. சாமிநாதையர்: சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும், பக். 42.

272 பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்.

288 தாயுமானவர், ஆனந்த பரமே.

289 மாணிக்கவாசகர், திருச்சதகம், செ. 96.

290 ராமலிங்க அடிகள், 2-ம் திருமுறை, செ. 151.

291 தாயுமானவர், கருணைகரக் கடவுள்.

292 Today's English Version—Gen. 1:1.

341 மாணிக்கவாசகர்—வேதநாயகர், டாக்டர் ராதாகிருஷ்ணன், டாக்டர் ராதாகிருஷ்ணன், டாக்டர் ராதாகிருஷ்ணன